
அலெக்சேய் தல்ஸ்தோய்
காரின்
அழிவுக்கதிர்

АЛЕКСЕЙ ТОЛСТОЙ

ГИПЕРБОЛОИД ИНЖЕНЕРА ГАРИНА

ИЗДАТЕЛЬСТВО
„РАДУГА"
МОСКВА

அலெக்சேய் தல்ஸ்தோய்

காரின் அழிவுக்கதிர்

ராதுகா பதிப்பகம்
மாஸ்கோ

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
சென்னை

மொழிபெயர்ப்பாளர்: மீனவன்
திருந்திய வடிவமைப்பாளர்: நா.முகம்மது செரீபு,எம்.ஏ.
பதிப்பாசிரியர்: எவ்கேனி கோனவாலவ்
ஓவியர்: ஸெர்கேய் பாஸிலேவ்

Алексей Толстой
ГИПЕРБОЛОИД ИНЖЕНЕРА ГАРИНА
На тамильском языке

Alexei Tolstoy
GARIN DEATH RAY
In Tamil

$T \frac{4803010102-392}{031(01)-88} 344-88$

ISBN 5-05-002022-0

இருளின் கதிர்கள்

சோவியத் இலக்கியம் பெருமைப்படக் கூடிய எழுத்தாளர்கள் பலருண்டு. அத்தகைய ஓர் எழுத்தாளர் தான் அலெக்சேய் நிக்கலாயெவிச் தல்ஸ்தோய் (1883—1945). அவருடைய படைப்புகளில், ருஷ்யாவும் ருஷ்ய வரலாறும் முக்கிய நோக்கங்களாக இருந்தன.

1917ஆம் ஆண்டைய சோஷலிசப் புரட்சிக்குப் பிந்திய முதலாம் ஆண்டுகளில் ருஷ்யாவைப் பற்றி அலெக்சேய் தல்ஸ்தோய் எழுதிய காப்பிய நாவல் தான் 'அக்கினிப் பரீட்சை'. தனது 'மகா பீட்டர்' என்ற நாவலில் ருஷ்யாவின் மிகப் பண்டைய காலத்தைப் பற்றியும் அவர் எழுதினார். (தற்செயலாக, இந்த இரு நூல்களின் தமிழ், ஆங்கிலப் பதிப்புகளும் முன்னேற்றம் மற்றும் ராதுகா பதிப்பகங்களால் வெளியிடப்பட்டன.)*

எதார்த்த இலக்கியத்தின் விற்பன்னர் என்ற முறையில் அலெக்சேய் தல்ஸ்தோய் பரவலாக அறிமுகமாகியுள்ளார். அவரது நூல்கள் சோவியத் இலக்கியத்தின் அமர இலக்கியங்கள். ஆனால் அவர் தனது திறமைகளை மிகவும் மாறுபட்ட பாணியில் —ஓர் எதார்த்தவாத எழுத்தாளரிடமிருந்து ஒருவர் எதிர்பார்க்க முடியாத பாணியில்—வெளிப்படுத்தினார்.

1920களில் தனது அறிவியல் புனைகதையான 'அயேலித்தா' என்ற குறுநாவலை அவர் எழுதினார். செவ்வாய்க் கோளத்திலிருந்து வந்த ஒரு

---

* அக்கினிப் பரீட்சை, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1976. *Peter the Great*, Raduga Publishers, Moscow, 1985.

சிறுமி அயேலித்தாவின் உறுதிப்பாட்டின் உயர்வைப் போற்றும் ஒரு புனைகதைப் பாடல் அது; அவள் பூமிக் கோளத்து மனிதன் ஒருவனிடம் காதல் வயப் பட்டு அவனுடைய கனவுகளிலும் நம்பிக்கைகளிலும் பங்கு கொள்ளத் தயாராக இருக்கிறாள்.

தல்ஸ்தோயினுடைய அறிவியல் புனைகதை நாவலான 'காரின் அழிவுக்கதிர்' 'அயேலித்தா'வின் சமகாலத்தது (இது முதலாவதாக 1925—1927இல் வெளியிடப்பட்டது). தல்ஸ்தோயினுடைய குறு நாவல் மனிதனில் அவரது நம்பிக்கையையும், நன் மைக்கான அவருடைய உள்ளார்ந்த ஆற்றலையும் உறுதிப்படுத்துகிறது என்றால், பிறகு தனது நாவ லில் அவர் மனிதனுடைய சாதனைகளை நன்மைக் காக மட்டுமன்றி, தீமைக்காகவும், மனிதனுக்கும் எல்லா மனித இனத்திற்கு எதிராகவும் எப்படிப் பயன்படுத்த முடியும் என்ற வினா பற்றியும் கவன மாய்ப் பார்க்கிறார்.

ஒரு முறை இந்த நாவல் பற்றி அலெக்சேய் தல்ஸ்தோயுடன் நான் பேசினேன். அதிலுள்ள பல நிகழ்ச்சிகளும், விவரங்களும் எதார்த்தத்தின் உண் மையான பிரதிபலிப்பாக ஏற்றுக்கொள்ளப்பட்ட மைக்காக அவர் பெருமைப்பட்டதாக என்னிடம் கூறினார்; ஆனால் என்ஜினியர் காரினுடைய கண்டு பிடிப்பை ஒரு நாள் உண்மையாகவே பூமியில் பார்க்க முடியும் என்ற சிந்தனையில் அவர் அவ்வளவாக மகிழச்சியடையவில்லை. தஸ்ல்தோயினுடைய கல்வி பொறியியல் சம்பந்தப்பட்டது, தொழில் நுட்பத் தின் மீது அவர் மிகுந்த மரியாதை வைத்திருந்தார், எனவே அதுபற்றி வாழ்க்கைக்கு உண்மையான முறையில், தேவதைக்கதை பாணியையும், பிற வழக்கார்ந்த தந்திரங்களையும் தவிர்த்து எழுத முயன்றார்.

நாவலின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாக பாசி சத்தின் கெடுநோக்குடைய பங்குப் பணி பற்றி எச் சரிப்பதாக இருக்க வேண்டும் என தல்ஸ்தோய் கரு தினார். 1920களின் தொடக்கத்தில் தனது நூலை எழுதிய அவர், முசோலினி, ஹிட்லர், பிரான்கோ

போன்று 'ஃப்யூரெர்'களின் தோற்றத்தைத் துல்லியமாக முன்னறிவித்தார்.

தனது கைகளில் ஒரு புதிய, அழிவின் சக்திமிக்க கருவியை வைத்திருக்கும் ஒரு மனிதனைப் பற்றியது தான் நாவலின் குறிக்கோள் என்பதும் வருவதுணர்த்துவதாக இருக்கிறது; அவன் ஒரு சிறப்பான நபராகத் தன்னைத்தானே கருதிக்கொண்டு, தனது கருத்தை உலகின்மீது திணிக்க முயல்கிறான்.

எதிர்காலத்தின் போர்க் கருவிகளைப் பற்றியும் கூட எதார்த்தத்திற்குக் குறிப்பிடத்தக்கவாறு மிக நெருக்கமாக தல்ஸ்தோய் முன்னறிந்து கூறினார். காரினுடைய ஹைபர்பாலாயிட் வெப்பக்கதிர்கள் நவீன விஞ்ஞானத்தின் லேசர் கதிர்களைப் பெரிதும் நினைவுபடுத்துவதாக இருக்கின்றன. ஆனால் லேசர் கதிர்கள் இப்போது பத்து ஆண்டுகளுக்கு மேலாக இருந்து வருகின்றன; அவை சமாதானத்திற்காகவும், மனித இனத்திற்காகப் பல்வேறு துறைகளிலும், மருத்துவத்திலிருந்து உலோகத் தொழில் வரை, பயன்பட்டு வருகின்றன.

காரினுடைய விசித்திரமான கதிர்கள் சாலவித்தை செய்யப்பட்டு ஒரே பென்சில் கதிராகச் செலுத்தப்பட்டால் அது ஹைபர்பாலாயிட்டில் இருக்காது, ஆனால் பாரபாலாயிட்டில் இருக்கும் என்று சில தொழில்நுட்ப நிபுணர்கள் ஒருமுறை தல்ஸ்தோயிடம் கூறினார்கள். தனது நாவலின் விளக்கப்பட்ட பிரதிகூட எந்த அழிவுக்கதிர்களையும் தராது என்று பதிலளிக்கும் போது அலெக்சேய் நிக்கலாயெவிச் முறுவலித்தார். படைப்பின் கலைக்குரிய உயர்வு நவிர்ச்சியின் தனிச்சிறப்புப் பண்பின் அடையாளமாக ஹைபர்பாலாயிட் அவருக்குத் தேவைப்பட்டது.

உண்மையில், காரினுடைய நடவடிக்கைகள் தோல்வியில் முடிந்தன. எழுத்தாளருடைய திறமையும், முன்னுணர்ந்து கூறும் ஆற்றலும், லேசர் கதிர்களை 'இருண்ட கதிர்களாக'ப் பயன்படுத்த முயலும் எவருக்கும் இதே கதிதான் காத்திருக்கிறது என்ற உறுதிப்பாட்டு உணர்வுடன் நம்மை விட்டுச் செல்கின்றன.

அலெக்சாந்தர் கஸான்த்ஸெவ்

1

அந்தப் பருவத்தில் பாரிசின் வணிகப் பெருமக்கள் அனைவரும் மதிய உணவுக்காக 'மாஜெஸ்டிக்' ஓட்டலில் குழுமினர். பிரெஞ்சுக்காரர் நீங்கலாக எல்லா நாடுகளையும் சேர்ந்த மக்களையும் அங்கே சந்திக்கலாம். உண்டிவகைகள் பரிமாறப்படுதலுக்கிடையே வாணிபப் பேச்சுக்கள் நடத்தப்பட்டன. இசைக் கருவிகளின் முழக்கம், கார்க் மூடிகள் திறக்கப்படும் ஒலி, பெண்களின் வம்பளப்பு ஆகியவற்றுக்கு நடுவே ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன.

நரைத்த தலையுடைய, பிரான்சின் வீரஞ்செறிந்த கடந்த காலத்தைப் போன்ற, நன்கு மழித்த சுறுசுறுப்பான முகமுடைய ஓர் உயரமான மனிதன், பளபளக்கும் கண்ணாடித் தகடுகள் பொருத்தப்பட்ட சுழல் கதவுகளுடைய அந்த ஓட்டலின் அலங்காரமான கூடத்தில் விரிக்கப்பட்டிருந்த விலைமதிக்க முடியாத கம்பளங்களின் மீது கம்பீரமாக நடை போட்டான். அவன் கரிய அகன்ற கோட்டும் பட்டுக் காலுறைகளும் கொக்கிகளுடன் கூடிய அசலான தோல் காலணிகளும், தனது அலுவலின் அடையாளமான ஒரு வெள்ளிச் சங்கிலியை மார்மீதும் அணிந்திருந்தான். இவன் தான் தலைமை வாயிற்காவலன். 'மாஜெஸ்டிக்'கை நடத்திய கம்பெனியின் பண்புருவகமாகக் கருதப்பட்டவன்.

கீல்வாதநோய் கொண்ட கைகளைப் புறத்திற் கட்டியபடி கண்ணாடித் தடுப்புச் சுவருக்கு முன் நின்றான். அதன் மறுபக்கம் பச்சைத் தொட்டிகளில் இருந்த பூத்த மரங்களுக்கும் கூந்தற்பனைகளுக்கும் நடுவே விருந்தினர் உணவருந்தினார்கள். அக்குவேரியத்தின் கண்ணாடிச் சுவர்களினூடே

தாவரங்களையும், பூச்சிகளையும் ஆய்ந்து நோக்குகிற உயிரியலாளனை அப்போது அவன் ஒத்திருந்தான்.

பெண்கள் அழகாகத் தோற்றமளித்தனர், அதனை மறுத்தற்கில்லை. தமது இளமைக் கவர்ச்சியுடனும், ஆங்கிலோ சாக்ஸனிய மகளிரின் நீலமும், பிரெஞ்சு மகளிரின் ஊதா நிறமும், தென் அமெரிக்க மகளிரின் இரவு போன்ற கருமையும் கொண்ட கண்களுடன் அவர்கள் இருந்தனர். வயதான பெண்கள் தம் மங்கிவரும் அழகிற்கு வறுவலுக்கு மசாலை சேர்ப்பது போல ஆடை ஒப்பனைகள் செய்து கொண்டிருந்தனர்.

பெண்களைப் பொருத்தவரையில் எல்லாம் சரியாயிருந்தது. எனினும் உணவு விடுதியில் அமர்ந்திருந்த ஆண்களைப் பற்றி அவ்வாறே கூறத் தலைமை வாயிற்காவலனால் இயலவில்லை.

தடித்த, குட்டையான உருவமும், மயிர் நிறைந்த, மோதிரமணிந்த விரல்களும், மழிப்பதற்குக் கடினமான உப்பிய கன்னங்களும் கொண்ட, இந்த ஆசாமிகள் போர் முடிந்த பின்னைய ஆண்டுகளிலே எங்கிருந்து, எந்தப் புதர்களிலிருந்து வெளிப்பட்டார்கள்?

காலையிலிருந்து மறு காலை வரை முடிந்த அளவு எல்லாக் குடிவகைகளையும் பருகுவதில் இவர்கள் மும்முரமாக இருந்தார்கள். அவர்களது மயிர் நிறைந்த விரல்கள் காற்றைச் சுழற்றி உண்டாக்கியதெல்லாம்—பணம், பணம், பணம்... முழங்கால் அளவுப் பொன் குவியலில் மக்கள் நடந்து செல்லும் சாபக்கேடான நாட்டிலிருந்து, நல்ல பழைய உலகத்தைப் பேரம்பேசி விலைக்கு வாங்கப் போகிற அமெரிக்காவிலிருந்து வந்தவர்களே அவர்களில் பெரும்பான்மையினர்.

2

செம்மரச் சட்டத்தினால் செய்த உடலமைந்த நீண்ட ரோல்ஸ் ராய்ஸ் கார் ஒன்று ஒட்டலின் வாயிலில்

ஓசையின்றித் தவழ்ந்து வந்து நின்றது. தன்னுடைய சங்கிலி கலகலக்க வாயிற்காவலன் சுழலும் கதவுகளுக்கு விரைந்தான்.

மஞ்சள்பாரித்த வெளுத்த முகம், குட்டையாகக் கத்தரித்த கருப்புத் தாடி, தசைப்பிடிப்புள்ள, விரிந்த துவாரங்களுடைய மூக்கு கொண்ட நடுத்தர உயரமுள்ள மனிதனே முதலில் உள்ளே நுழைந்தான். சாக்குப் போன்ற நீண்ட மேல்கோட்டுடனும் கண்களுக்கு மேல் சிறிது சாய்ந்து வருமாறு 'பௌலர்' தொப்பியுடனும் காணப்பட்டான்.

தனது கூட்டாளிக்காக அலட்சியத்தோடு காத்திருந்த அவன் நின்றான்; ஓட்டலின் தலைவாயில் தூணுக்குப் பின்னிருந்து பாய்ந்தோடிவந்து தங்கள் காரை எதிர்கொண்ட இளைஞன் ஒருவனுடன் பேசுவதற்காக அவள் பின்தங்கினாள். தலையசைப்பால் அவனுக்குச் சைகை காட்டிவிட்டு, சுழல் கதவுகள் வழியே கடந்து சென்றாள். பாரிசிலிருந்த கூர்மதி வாய்ந்த பெண்களில் ஒருத்தியான அவள் தான் புகழ்பெற்ற ஸோயா மான்ரோஸ். மணிக்கட்டிலிருந்து முழங்கை வரையும் கருங்குரங்கு மயிர்கற்றை வைத்து அழகு செய்யப்பட்டிருந்த வெண்ணிறக் கம்பளி உடை அணிந்திருந்தாள். அவளுடைய சிறிய நமுதாத் தொப்பி பெருமைமிக்க கல்லோ என்பவரால் செய்யப்பட்டது. அவளது போக்கு தன்னம்பிக்கையும் அசட்டையும் கொண்டிருந்தது. சற்றே அகன்ற வாயும் சிறிது மேல்தூக்கிய மூக்கும், நீண்ட கழுத்தும் உடைய அழகிய உயரமான ஒற்றைநாடியான உருவமுடையவள். அவளது பழுப்பு நீலக் கண்கள் இரக்கமின்மை, காமம் ஆகிய இரண்டின் சாயலையும் காட்டின.

''ரோல்லிங், நாம் பகலுணவு சாப்பிடப் போறோமா?'' என 'பௌலர்' தொப்பி அணிந்தவனை நோக்கி வினவினாள்.

''இல்லை. உணவுக்கு முன்பே அவனுடன் நான் பேசுவேன்.''

கடுத்த குரலுடன் தனக்கு அவன் பதில் கூறியதைப் பெருந்தன்மையுடன் மன்னித்து ஸோயா மான்

ரோஸ் முறுவலித்தாள். காருக்கு அருகில் ஸோயா வுடன் உரையாடிய இளைஞன் அப்போது சுழல் கதவுகள் வழியாக நழுவிச் சென்றான். அவனது பழைய நைந்த மேல்கோட்டு பொத்தான்கள் போடாது இருந்தது. கையில் ஒரு மெல்லிய தொப்பி யும் தடியும் வைத்திருந்தான். உணர்ச்சி நிறைந்த அவனது முகத்தில் நிறையத் தேமல்கள் இருந்தன. அடர்த்தியற்ற விறைத்த மீசை பசையிட்டு ஒட்டி வைத்தது போலத் தோன்றியது. கைகுலுக்க அவன் எண்ணியது போல இருந்தது, ஆனால் ரோல்லிங், தன் கைகளை மேற்கோட்டின் பைகளிலிருந்து வெளி யிலெடுக்காமல், மேலும் கடுத்த குரலில் சொன் னான்:

''ஸெமியோனவ், நீங்க கால்மணி நேரங்கழிச்சு வந்திருக்கிறீங்க.''

''என்னை நிறுத்தி வச்சுட்டாங்க... நம்ம தொழிலுக்காகத் தான்... ரொம்ப வருத்தப்படு றேன்... எல்லாம் ஏற்பாடு செஞ்சாச்சு... அவுங்க ஒப்புக்கொண்டுட்டாங்க... நாளை அவுங்க வார் ஸாவுக்குப் புறப்படலாம்.''

''இந்த மாதிரி உரத்த குரல்லே நீங்க கூச்சல் போட்டா இந்த ஓட்டலை விட்டே வெளியே உங் களைத் தூக்கி எறிஞ்சுறுவாங்க,'' என்று ரோல்லிங் நன்மையைத் தோற்றுவிக்காத ஒளியற்ற கண்களால் அவனை உறுத்து நோக்கிச் சொன்னான்.

''மன்னிச்சுறுங்க, மெதுவாகவே பேசுறேன்... வார்ஸாவிலே எல்லாம் தயாரா இருக்கு: பாஸ் போர்ட்டுகள், உடைகள், படைக்கலங்கள் எல்லாம். ஏப்ரல் முன் தேதிகளிலேயே அவுங்க எல்லையைக் கடந்துறுவாங்க.''

''மான்ரோஸ் சிமாட்டியும் நானும் இப்ப பக லுணவு சாப்பிடப் போறோம்,'' என்றான் ரோல் லிங். ''நீங்க அந்தக் கனவான்களிடம் போய் இன் றைக்கு நாலு மணிக்குப் பின்னாலே அவுங்களை நான் பார்க்க விரும்புறதாச் சொல்லுங்க. என்னை ஏமாத்திறலாம்னு அவர்கள் நெனச்சா அவர்களைப் போலீசிடம் ஒப்படைப்பேன்னு சொல்லுங்க...''

192...ஆம் ஆண்டு மார்ச் மாதத் தொடக்கத்தில் இந்த உரையாடல் நிகழ்ந்தது.

3

வைகறைப் பொழுதில் லெனின்கிராடிலுள்ள* க்ரெஸ்தோவ்கா ஆற்றில் படகோட்டும் பள்ளியின் மிதவைத் துறைக்கருகில் இரட்டைத் துடுப்புப் படகு ஒன்று கரையடைந்தது.

இரு ஆண்கள் வெளியே இறங்கி வந்து, கரையோரத்தில் நின்று சில கணங்கள் பேசினர்—உண்மையில் அவர்களில் ஒருவன்தான் அதிகாரத் தொனியிலும் முரட்டுத்தனமாகவும் பேசினான். மற்றவன் நீர் நிறைந்த அமைதியான இருண்ட ஆற்றைக் கூர்ந்து நோக்கினான்.

க்ரெஸ்தோவ்ஸ்கி தீவின் அடர்ந்த சோலைகளுக்கு அப்பால் இரவின் நீலவண்ணத்தைக் கிழித்துக்கொண்டு இளவேனில் வைகறை புலர்ந்தது.

பிறகு இருவரும் படகின் மேல் குனிய, ஒரு தீக்குச்சியின் நெருப்புக் கொழுந்து அவர்களது முகங்களுக்கு ஒளியூட்டியது. அடியிலிருந்து சில மூட்டைகளை இருவரும் தூக்கினர். அவர்களில் பேசாதிருந்தவன் அவற்றை எடுத்துக்கொண்டு காட்டிற்குள் மறைந்தான். மேலும், பேசிய மற்றவன் படகினுள் குதித்துக் கரையினின்றும் தள்ளி ஓட்டிச்சென்றான். துடுப்புக்களின் சந்திவாய் விரைவுடன் கீச்சிட்டது. தண்டுவலிப்பவனின் உருவத்தோற்றம் வைகறை வெளிச்சம் படர்ந்த நீர்த்தடத்தைக் கடந்து எதிர்க் கரையின் நிழலில் மறைந்தது. மிதவைத் துறையில் ஒரு சிற்றலை ஒலியிட்டு மோதிற்று.

'ஸ்பார்ட்டாக்' போட்டிப் படகில் தண்டுவலிப்பவனாக இருந்த தராஷ்கின் அன்றிரவு கழகத்தின்

* லெனின்கிராடு—முன்னைய செயிண்ட் பீட்டர்ஸ்பர்க், பிறகு 1914இல் பெத்ரோகிராடு எனப் பெயரிடப்பட்டு, அதன் பின்னர் 1925இலிருந்து லெனின்கிராடு என இந்நகரம் அழைக்கப்படுகிறது. (ப-ர்.)

படகில்லத்தில் முறை அலுவலில் இருந்தான். தராஷ் கினோ இளைஞன், மேலும் அது இளவேனில் காலம். ஆகவே தனது வாழ்வின் விரைந்து பறக்கும் நேரங் களை சிந்தனையின்றி தூக்கத்தில் வீணாக்கவில்லை. ஆனால் முழங்கால்களைக் கட்டிக் கொண்டு மிதவைத் துறையில் கனவு நிலையில் இருந்த நீருக்கு மேலாக அமர்ந்திருந்தான்.

இரவின் அமைதியில் நினைத்துப் பார்ப்பதற்கு நிறைய இருந்தன. உண்மையான நீரின் மணத்தைக் கூட அறியாத பாழாய்ப்போகிற மாஸ்கோவாசிகள் லெனின்கிராடு படகோட்டும் பள்ளியினை ஒற்றையர், நால்வர், எண்மர் கலந்துகொண்ட போட்டி களில் தொடர்ந்து ஈராண்டுகளாக வென்றுவிட்ட னர். அது மனத்தாங்கலாக இருந்தது.

எனினும் தோல்வியே வெற்றிக்கழைத்துச் செல் லும் என்பதை விளையாட்டுக்காரன் அறிவான். அது ஒரு விஷயம். மேலும் புல்லிலும், ஈரமான மரத் திலும் படர்ந்த மணங்கமழும் இளவேனிற்காலச் சூரிய உதயத்தின் கவர்ச்சி தராஷ்கினுக்கு ஜூன் மாதத்தில் நடைபெறும் மாபெரும் படகுப் போட் டிக்குரிய தயாரிப்புக்காக, வெற்றிகரமான பயிற்சிக் குத் தேவையான நம்பிக்கையை அளித்தன.

இரட்டைத் துடுப்புப் படகு நெருங்கி வருவதை யும் பிறகு ஆற்றங்கரையினின்று நீங்கிச் செல்வ தையும் தராஷ்கின் மிதவைத் துறையில் அமர்ந்து கொண்டு பார்த்தான். பொதுவாக, தராஷ்கின் எளி தில் அமைதிகுலையாத மனம் கொண்டவன், ஆனால் இந்த முறை ஏதோ ஒன்று அவனுக்கு விந்தையாகத் தோன்றியது: படகில் வந்த இரு ஆண்களும் இரண்டு துடுப்புக்கள் போல ஒருவரையொருவர் ஒத் திருந்தனர். அதே உயரம், ஒரே மாதிரியான அகன்ற மேற்கோட்டு அணிந்திருந்தனர். மெல்லிய நமுதாத் தொப்பிகள் நெற்றியின் மீது தாழுமாறு அணிந்திருந் தனர். இருவரும் கூரிய தாடிகள் வைத்திருந்தனர்.

ஆனால் எப்படியாயினும், ஒரு மனிதன் தன் னைப்போன்ற இரட்டை உருவினனுடன் நிலத்தில் அல்லது நீரில் பகலிலோ, இரவிலோ சுற்றித்திரி

வதைத் தடைசெய்யும் சட்டங்கள் எதுவும் குடியரசில் இல்லை. படகோட்டும் பள்ளிக்கருகில் பிர்ச் மரச் சோலைக்கிடையில், மூடப்பட்டுக் கிடந்த பாதி பாழடைந்த நாட்டுப்புறக் குடிசையில் அதிகாலையில் நிகழ்ந்த விந்தையான சம்பவங்கள் இல்லாவிட்டால் கூரிய நாடிகளுடைய இந்த மனிதர்களைப் பற்றித் தராஷ்கின் ஒருவேளை மறந்திருப்பான்.

4

காடடர்ந்த தீவுகளுக்கு மேல் சிவந்த விடியலை விட்டு வெளியே சூரியன் நன்கு தோன்றிய போது தராஷ்கின் தன் தசைநார்களை வளைத்துப் பயிற்சி செய்து, படகோட்டும் கழகத்தின் முற்றத்தைத் துப்புரவு செய்யத் தொடங்கினான். அப்போதுதான் ஐந்து மணியாயிற்று. சிறு உட்கதவு திறக்கப்பட்டு வஸீலி வித்தாலியெவிச் ஷெல்கா ஈரமான பாதை வழியே தனது சைக்கிளைத் தள்ளிக்கொண்டு வந்தான்.

உறுதிவாய்ந்த கழுத்து, விரைவு, அமைதி, எச்சரிக்கை இவற்றுடன் முறுக்கேறிய தசைகள், கனக்குறைவு, நடுத்தர உயரம் ஆகியன கொண்ட, நன்கு பயிற்சிபெற்ற விளையாட்டுக்காரன் ஷெல்கா. அவன் குற்றப் புலனாய்வுத் துறையில் பணியாற்றினான். படகோட்டுவது அவனுக்குரிய பொதுப் பயிற்சியின் ஒரு பகுதி.

''வணக்கம், தோழர் தராஷ்கின். என்ன சமாச்சாரம்? எல்லாம் சரிதானே?'' என்று வினவியவாறு நடைவாசலில் தன் சைக்கிளை நிறுத்தினான். ''உனக்கு உதவி செய்யலாமென்று வந்தேன்... அடேயப்பா, இங்கே எவ்வளவு குப்பையும் கூளமும்.''

தனது சீருடையைக் கழற்றி வைத்துவிட்டு, தளர்வுறாத, தசைப்பிடிப்புள்ள கைகளின் மேற்பகுதியில் சட்டைக் கைகளைச் சுருட்டிவிட்டுக் கொண்டு, மிதவைத் துறையில் மராமத்துப் பார்த்தவர்கள் விட்டுச்சென்ற மரத்துண்டுகளையும் பிற குப்பைகளையும் பெருக்கத் தொடங்கினான்.

''இன்றைக்குத் தொழிற்சாலையிலிருந்து ஆட்கள் வராங்க. ஒரு நாள் சாயங்காலம் நாம ஒழுங்கு படுத்திருவோம்,'' என்றான் தராஷ்கின். ''ஆக, ஆறு பேர் குழுவிற்கு உங்க பெயரையும் தரப் போறீங்களா?''

''உண்மையில் எனக்குத் தெரியாது,'' என்று பதிலளித்த ஷெல்கா ஒரு தார்ப் பீப்பாயை அப்பால் உருட்டினான். ''ஒருபுறம் மாஸ்கோவாசிகளைத் தோற்கடிக்க உதவணும் என்ற விருப்பந்தான். ஆனா மறுபுறம் உரிய காலத் தவறாது வந்து பயிற்சி பெற முடியாதே என்ற அச்சமும் இருக்கு. விசித்திரமான ஒரு வேலை வந்து முளைச்சுருக்கு.''

''அது என்ன? மறுபடியும் கொள்ளைக்கூட்டமா?''

''இன்னும் உயரப் பார். சர்வதேச அளவிலான குற்றம்.''

''மோசமானதுதான். நீங்க எங்களோட துடுப்பு வலித்திருக்கலாம்.''

வெளியே மிதவைத் துறைக்கு ஷெல்கா சென்று தண்ணீரில் நடனமிடும் சூரியக் கதிர்களைச் சற்று நேரம் ஊன்றி நோக்கினான். தரையின் மீது விளக்கு மாற்றின் பிடியினால் தட்டித் தராஷ்கினை அழைத்து மெல்லிய குரலில் கேட்டான்:

''இங்கே சுற்றிலும் உள்ள கோடைக்கால பங்களாக்களில் வாழுகிற எல்லா ஆட்களையும் உனக்குத் தெரியுமா?''

''குளிர்காலம் முழுதும் இங்கு வாழ்கிற சிலரும் இருக்காங்க.''

''மார்ச் மாத மத்தியில் இங்கே ஏதேனும் ஒன்றுக்கு யாரேனும் வந்தானா?''

தராஷ்கின் சூரிய ஒளி மின்னும் ஆற்றைக் கண்ணை இடுக்கிக்கொண்டு நோக்கி, ஒரு கால் விரல்களால் மற்றொரு காலைச் சொறிந்துகொண்டான்.

''அதோ அங்கே உள்ள தோப்பில் பலகை வைத்தடைத்த குடிசை ஒன்று இருக்கு,'' என்றான். ''நான்கு வாரத்துக்கு முன்னே புகைப் போக்கி வழியாகப் புகை வந்ததைக் கண்டது எனக்கு நினை

லிருக்கு. யாரோ வீடில்லாத பிள்ளைகள் அல்லது கொள்ளைக்காரர்கள் அங்கு புகுந்திருக்க வேண்டும் என அந்நேரத்தில் நாங்க நினைத்தோம்,'' என்றான் தராஷ்கின்.

''அந்த வீட்டிலிருந்து யாரையாவது நீ பார்த்திருக்கிறாயா?''

''ஒரு நிமிஷம், வஸீலி வித்தாலியெவிச். ஏன், இன்றைக்குத் தான் அவர்களை நான் பார்த்திருக்க வேணும்.''

பிறகு அன்று புலர்காலையில் சேறு நிறைந்த ஆற்றங்கரைக்குப் படகில் வந்த இரு ஆண்களைப் பற்றி தராஷ்கின் கூறினான்.

ஷெல்கா தலையசைத்துக் கொண்டும், ''சரி, சரி,'' எனச் சொல்லிக் கொண்டுமிருந்தான். அவனுடைய கூரிய விழிகள் சிறு கீற்றுப்பிளவுகள் போலக் காணப்பட்டன.

''வந்து, அந்த வீட்டை எனக்குக் காட்டு,'' என்ற அவன் தனது இடையில் தொங்கிய கைத் துப்பாக்கி உறையைத் தடவினான்.

5

வாடிய பிர்ச் மரங்களுக்கிடையே இருந்த அந்த வீடு குடியிருக்காதது போலத் தோன்றியது. மரத்தாலான நடைவாசல் உளுத்துப் போயிருந்தது. சன்னல்கள் பலகைகளால் அடைக்கப்பட்டிருந்தன. அட்டாலிச் சன்னல்கள் உடைந்திருந்தன. வடிகுழாய் மிச்சங்களுக்குக் கீழேயுள்ள சுவர்களின் மேல் பாசி படர்ந்திருந்தது. சன்னலுக்குக் கீழே அகலிலைச் செடிகள் முளைத்திருந்தன.

''நீ சொன்னது சரிதான். அங்கு யாரோ வாழ்ந்து வர்றாங்க,'' என்றான் ஷெல்கா, மரங்களின் மறைவிலிருந்து வீட்டைக் கவனித்தவாறு. பிறகு வீட்டைச் சுற்றி எச்சரிக்கையோடு நடந்தான். ''இன்னைக்கு இங்கு யாரோ இருக்கிறான்... ஆனால் என்ன இழவுக்காக அவர்கள் சன்னல் வழியாக ஏறி உள்ளே போகணும்? தராஷ்கின், இங்கே வா. இங்கு ஏதோ சந்தேகமாத் தோணுது,'' என்றான்.

அவர்கள் நடைவாசலுக்கு விரைந்து வந்தார்கள். அங்கே காலடிச்சுவடுகள் இருந்தன. நடைவாசலின் இடப்புறம் ஒரு சன்னலின் மடிப்புக் கதவு கீழே தொங்கியது, அதன் கீல்களுள் ஒன்று புதிதாக உடைபட்டிருந்தது. சன்னல் உள்புறம் திறக்கப்பட்டிருந்தது. சன்னலுக்குக் கீழே ஈர மணலில் மேலும் சில காலடிச்சுவடுகள் இருந்தன. இதில் பெரியவை, ஒருவேளை கனமான ஒரு மனிதனால் பதிக்கப்பட்டிருக்க வேண்டும். மற்றவை சிறுத்துக் குறுகி நுனி உட்புறமாக இருந்தன.

''நடைவாசலில் உள்ள அடிச்சுவடுகள் வேறு காலணிகளால் பதிந்திருக்க வேண்டும்,'' என்றான் ஷெல்கா.

அவன் சன்னலுக்குள் உற்றுப்பார்த்து மெதுவாகச் சீட்டியடித்துக் கூப்பிட்டான்: ''ஏய்! யார் உள்ளே! உங்க சன்னல் திறந்திருக்கு, ஏதாவது திருட்டுப் போகப் போகுது.''

யாரும் பதில் தரவில்லை. பாதி இருட்டாக இருந்த அறையிலிருந்து விரும்பத்தகாத ஓர் இனிய மணம் மிதந்து வந்தது.

ஷெல்கா மறுபடியும் உரத்த குரலில் கூவினான். சன்னல் குறட்டின் மேல் ஏறி நின்று கைத்துப்பாக்கியை வெளியில் இழுத்தவாறு, மெதுவாக அறையினுள் குதித்தான். அவனைத் தொடர்ந்து தராஷ்கினும் உள்ளே குதித்தான்.

முதல் அறை காலியாக இருந்தது, உடைந்த செங்கற்களும் காரையும் செய்தித்தாள் துண்டுகளும் தரையில் சிதறிக்கிடந்தன. பாதி திறந்திருந்த கதவு ஒன்று சமையலறைக்கு இட்டுச் சென்றது. சூட்டடுப்பின் மீதும், துருப்பிடித்த தொட்டிக்குக் கீழும், மேசைகள் மீதும், இருக்கைகள் மீதும் நிறைய எண்ணெய்ச் சூட்டடுப்புகளும், பீங்கான் மூசைகளும், கண்ணாடி மற்றும் உலோகக் குழாய்கள் பொருத்திய பாத்திரங்களும், சாடிகளும், துத்தநாகப் பெட்டிகளும் இருந்தன. கடைசி மண்ணெண்ணெய்த் துளி எரிந்து தீர்ந்த நிலையில் சூட்டடுப்புகளில் ஒன்று 'இஸ்' என்று இன்னமும் ஒலித்துக் கொண்டிருந்தது.

ஷெல்கா மறுபடியும் கத்தினான்: ''ஏய், ஐயா!'' தன் தலையை ஆட்டிவிட்டு, ஓர் அறைக்குள் அழைத்துச் செல்லும் கதவை எச்சரிக்கையோடு திறந்தான். இந்த அறையின் அரை இருளை மடிப்புக் கதவுகளின் இடைவெளி வெடிப்புக்களினூடே வந்த தட்டையான சூரியக் கதிர்கள் வெட்டின.

''இதோ இருக்கிறான்!'' என்றான் ஷெல்கா.

அறையின் மறு கோடியிலிருந்த ஓர் இருப்புக் கட்டிலின் மீது முழு உடை அணிந்திருந்த ஒருவன் மல்லாந்து கிடந்தான். அவன் கைகள் தலைக்கு மேலாக இழுக்கப்பெற்று மணிக்கட்டுகள் கட்டில் கம்பிகளுடன் சேர்த்துக் கட்டப்பட்டிருந்தன. கயிற்றினால் அவன் கால்களும் கட்டப்பட்டிருந்தன. நெஞ்சுக்கு நேராக அவனது சட்டையும் கோட்டும் கிழிக்கப்பட்டிருந்தன. இயல்புக்கு ஒவ்வாத தோற்றத்தில் அவன் தலை சாய்ந்து கிடக்க, அவனது கூரிய தாடி மேல்நோக்கி இருந்தது.

''இவனுக்கு அவர்கள் செய்தது இதுதான் போலும்,'' அம்மனிதனின் முலைக்காம்பிற்குள் பிடிவரை ஊன்றிக் குத்தப்பெற்றிருந்த குத்துவாளை ஆய்ந்தவாறு ஷெல்கா கூறினான். ''இவனைச் சித்திரவதைச் செய்துள்ளனர்... இதைப் பார்...''

''வஸீலி வித்தாலியெவிச்! படகில் வந்தவன் அவன் தான். அவனை அவர்கள் கொன்று ஒன்றரை மணி நேரத்திற்கு மேல் இருக்காது.''

''தராஷ்கின், நீ இங்கே காவலிரு. எதனையும் தொடாதே, யாரையும் உள்ளே விடாதே. புரிகிறதா?''

சில நிமிடங்களுக்குப் பிறகு படகோட்டும் கழகத்திலுள்ள தொலைபேசியிலிருந்து ஷெல்கா பேசிக் கொண்டிருந்தான்:

''ஸ்டேஷன்களுக்கு ஆட்களை அனுப்புங்க... எல்லாப் பயணிகளையும் சோதனை போடுங்க... மற்றவர்களை எல்லா ஓட்டல்களுக்கும் அனுப்பி இன்னைக்கு காலை ஆறு மணிக்கும் எட்டு மணிக்கும் இடையில் திரும்பிவந்த ஒவ்வொருவரையும் சோதனை போடுங்க. நாயோட ஒருத்தனை எங்கிட்ட அனுப்புங்க.''

6

துப்பறியும் நாய் வருவதற்காகக் காத்திருந்த நேரத்தில் அந்தச் சிறு வீட்டை முகட்டறையிலிருந்து தொடங்கி கவனத்தோடு ஆராய்ந்தான் ஷெல்கா.

அந்த இடம் முழுதும் உடைந்த கண்ணாடி, சுவர்க்காகிதத் துண்டுகள், துருப்பிடித்த தகர டப்பாக்கள் போன்ற குப்பைகள் சிதறிக் கிடந்தன. சன்னல்களில் சிலந்தி வலைகள் பின்னியிருந்தன. மூலைகளில் பூசணமும் பூஞ்சக்காளான்களும் கிளம்பி இருந்தன. வெளிப்படையாகவே, 1918 இலிருந்து அந்தச் சிறு வீட்டில் யாரும் குடியிருக்கவில்லை. சமையலறையும், கட்டில் கிடந்த அறையும் தான் குடியிருந்த அடையாளங்களைக் காட்டின. ஓரிடத்திலேனும் நல்ல வசதி இருந்ததற்கான அடையாளமோ, கொல்லப்பட்டவனின் கோட்டுப்பையில் இருந்த காலையுணவுக்கான பிரெஞ்சு ரொட்டியையும் மசாலை இறைச்சித் துண்டையும் தவிர எஞ்சிய உணவுப் பொருள்களோ காணப்படவில்லை.

மக்கள் இங்கு தங்கி வாழவில்லை. இரகசியமாக வைக்கப்பட வேண்டிய ஏதோ வேலை ஒன்றைச் செய்வதற்காக இவ்வீட்டிற்கு வந்திருந்தனர். அக்கட்டடத்தின் சோதனைக்குப் பிறகு ஷெல்கா கொண்ட முதல் முடிவு இதுதான். சமையலறையின் நிலைமையானது வேதியல் பொருள்களுடன் யாரோ வேலை செய்திருக்கிறான் என்பதைக் காட்டியது. துருப்பிடித்த தொட்டியின் அடியில், கூட்டடுப்பின் மேல் படிந்திருந்த சாம்பலையும், மடித்திருந்த மூலைகளையுடைய சில சிறு பிரசுரங்களையும் ஆராய்ந்து பார்த்தபோது அவன் மேற்கொண்ட இரண்டாம் முடிவு இதுதான்: இறந்தவன், அதிகமாய்ப் போனால், சாதாரண வாணத்தொழில் நுணுக்கத்திலேயே ஈடுபட்டிருந்திருக்கிறான்.

இத்தகைய ஒரு முடிவு ஷெல்காவின் சிந்தனை ஓட்டத்தைத் தடைப்படுத்தியது. இறந்தவனின் உடையை மற்றொரு முறை சோதனை செய்தான். ஆனால் புதிதாக எதையும் காணவில்லை. பிறகு

இன்னொரு கோணத்திலிருந்து அப்பிரச்சினையை அணுகினான்.

சன்னலுக்கு அடியிலிருந்த காலடிச்சுவடுகள், கொலைகாரர்கள் இருவர் வந்திருந்தனர் என்பதையும், அவர்கள் நிச்சயமான எதிர்ப்பைச் சந்திக்க வேண்டிய அபாயம் இருப்பதை உணர்ந்துதான் சன்னல் வழியாக உட்புகுந்திருக்க வேண்டும் என்பதையும் காட்டின. ஏனெனில் மடிப்புக் கதவுகளை அவர்கள் உடைத்துத் திறந்தபோது ஏற்பட்ட ஓசையை உள்ளேயிருந்த மனிதன் செவிமடுக்காமல் இருந்திருக்க முடியாது.

எத்தகைய கஷ்டத்தையும் சமாளித்து முக்கியமான ஏதோ ஒன்றைப் பெற வேண்டும், அல்லது வீட்டிலிருக்கும் மனிதனைக் கொன்று விட வேண்டும் என்பதில் கொலைஞர்கள் உறுதியாக இருந்தார்கள் என்றே இது குறித்தது.

மேலும்: அவனை வெறுமனே கொல்ல மட்டும் அவர்கள் விரும்பியிருந்தால், முதலாவதாக, அதை மிக எளிதாகச் செய்திருக்கலாம்—உதாரணமாக, வீட்டுக்கு வரும் வழியில் அவனை இடைமறித்திருக்கலாம்; இரண்டாவதாக, படுக்கையில் உடம்பு இருந்த நிலை அவன் குத்திக்கொல்லப்படுவதற்கு முன்னர் சித்திரவதை செய்யப்பட்டான் என்பதைக் காட்டியது. இறந்தவன் அவர்களிடம் சொல்ல மறுத்த ஏதோ ஒன்றைக் கண்டுபிடிக்கக் கொலைஞர் முயன்றிருக்க வேண்டும்.

அவனைச் சித்திரவதை செய்து அவனிடமிருந்து அவர்கள் பெற முயன்றது என்ன? பணமா? வாணத் தொழில் நுணுக்கத்தில் பயிற்சிகளை மேற்கொள்ள இரவு நேரத்தில் புறக்கணிக்கப்பட்ட வீட்டிற்குச் சென்ற ஒருவன், தன்னுடன் பெருந்தொகையான பணத்தை எடுத்துப்போயிருப்பான் என்பது பெரும்பாலும் இருக்க முடியாது. இரவு சம்பந்தமான வேலையுடன் தொடர்புள்ள ஏதோ இரகசியத்தை அவன் வெளிப்படுத்த வேண்டும் எனக் கொலைஞர்கள் விரும்பினர் என்பதே மிகவும் பொருத்தமாக இருந்தது.

இந்த வழியில் ஷெல்காவுக்குத் தோன்றிய அனுமானங்களின் விளைவாக அவன் சமையலறையைப் புதிதாக ஒரு முறை சோதனை செய்தான். சில பெட்டிகளைச் சுவருக்கு அப்பால் நகர்த்திய போது புறநகர் கோடைக்கால பங்களாக்களில் அடிக்கடி கட்டப்படுவது போன்று சமையலறையின் கீழ் இருந்த நிலவறையின் கதவைக் கண்டுபிடித்தான். தராஷ்கின் மெழுகுவர்த்தி ஒன்றைக் கொளுத்தி குப்புறப் படுத்துக் கொண்டு, உளுக்கத் தொடங்கியிருந்த, வழுக்கும் ஏணியொன்றின் வழியாக ஈரமான நிலவறைக்குள் எச்சரிக்கையோடு இறங்கிய ஷெல்காவுக்கு வெளிச்சம் காட்டினான்.

''மெழுகுவர்த்தியுடன் இங்கே கீழே வா!'' என்று ஷெல்கா இருட்டுக்குள்ளிருந்து கூவினான். ''இங்குதான் அவன் தனது ஆய்வுக்கூடத்தை வைத்திருந்திருக்கிறான்.''

வீட்டின் அடியில் முழுப்பரப்பையும் நிலவறை பிடித்திருந்தது: செங்கற்சுவர்களைச் சுற்றி மேடையின் மீது அமைக்கப்பெற்ற கரடுமுரடான பலகை மேசைகள், புகையாவிக் குழல்கள், ஒரு சிறு எஞ்சினும் டைனமோவும், மின்பகுப்பின் போது பயன்படுத்துகின்ற கண்ணாடித் தொட்டிகள், எந்திரத் தொழிலாளியின் கருவிகள் இருந்தன. எங்கெனும், எல்லா மேசைகளின் மீதும்—சிறு சாம்பற் குவியல்கள்...

''இதைத்தான் அவன் இங்கே செய்து வந்திருக்கிறான்,'' என்று முணுமுணுத்த ஷெல்கா சுவரின் மீது சாய்ந்து நின்ற தடித்த மர உத்தரங்களையும் இருப்புத் தகடுகளையும் ஆய்ந்து பார்த்தான். உத்தரங்களும் உலோகத் தகடுகளும் பல இடங்களில் துளைக்கப்பெற்றிருந்தன, அவற்றில் சில இரண்டாக வெட்டப்பட்டிருந்தன. வெட்டப்பட்ட அல்லது துளையிடப்பட்ட இடங்கள், எரிந்தது போலவும் உருகியது போலவும் காணப்பட்டன.

மூலையில் நிறுத்தப்பெற்றிருந்த ஓக் பலகை ஒன்றில் குறுக்களவு ஒரு மில்லிமீட்டரின் பத்தில் ஒரு பங்கில் பல துளைகள் இருந்தன. அவை ஓர்

ஊசியினால் துளைக்கப்பெற்றன போன்றது. பலகையின் நடுவில் பெரிய எழுத்துக்களில் ''பி.பெ. காரின்'' என்ற பெயர் இருந்தது. பலகையை ஷெல்கா திருப்பினான். மறுபுறத்தில் அதே எழுத்துக்கள் எதிர்வாகில் தெரிந்தன; இதுவரை தெரியாத ஏதோ முறையால் மூன்று அங்குலத் தடிப்புள்ளஒக் பலகையினூடே அவ்வெழுத்துக்கள் எரித்துப் பொறிக்கப்பெற்றிருந்தன.

''அட எழவே!..'' ஷெல்கா கூவினான். ''அந்த பி.பெ.காரின் இங்கே வாணத்தொழில் நுணுக்கத்தில் ஈடுபடவில்லை,'' என்றான்.

''வஸீலி வித்தாலியெவிச், இதென்ன?'' என வினவிய தராஷ்கின், ஏதோ நன்கு அழுத்தப்பெற்ற பழுப்பு நிறப் பொருளால் செய்யப்பட்ட ஓரங்குல அடித்தளத்தின் மேல் ஒன்றரை அங்குல உயரமுள்ள கோபுரவத்தியை அவனுக்குக் காட்டினான்.

''அதனை எங்கே கண்டுபிடித்தாய்?''

''அதோ அங்கே ஒரு பெட்டி நிறைய இருக்கிறது.''

ஷெல்கா அந்தக் கோபுரவத்தியை இப்படியும் அப்படியும் திருப்பி, முகர்ந்து பார்த்தான், மேசையின் ஓரத்தில் அதனை வைத்தான், எரியும் தீக்குச்சி ஒன்றை அதன் பக்கத்தில் குத்திவைத்து விட்டு நிலவறையின் மூலைக்கு நகர்ந்து விட்டான். தீக்குச்சி எரிந்து போக, அக்கோபுரவத்தி வெடித்து எரிக்கொழுந்தாயிற்று. கண்ணைக் குருடாக்கும் வெளிர் நீலநிறமுள்ள ஒளியை உமிழ்ந்தது. எவ்விதப் புகையும் நெடியுமின்றி ஐந்து நிமிடம் சில விநாடிகளுக்கு எரிந்தது.

''அடுத்த தடவை இதுபோன்ற சோதனையைச் செய்யாதிருக்கக் கேட்டுக் கொள்கிறேன்,'' என்று கூறினான் ஷெல்கா. ''அந்தக் கோபுரம் புகையாவி வத்தியாக இருந்திருக்கலாம். அப்படியிருந்தா நாம இங்கிருந்து வெளியேறியிருக்க மாட்டோம். ஆனா நாம என்ன கண்டுபிடிச்சுட்டோம்? நாம் சான்றுகளைப் பரிசீலிப்போம். முதலாவது: பழி தீர்க்கவோ கொள்ளைக்கோ இக் கொலை செய்யப்படலே.

இரண்டாவது: கொலைசெய்யப்பட்டவன் பெயர் பி.பெ.காரின் என்றறிகிறோம். இதுவரையும் அவ்வளவுதான். படகில் சென்றது உண்மையில் காரின்தான் என்று நீ சொல்வாய். நான் அப்படி எண்ணலே. காரினேதான் தன் பெயரை அப்பலகையில் எழுதினான். இது ஒரு மனோதத்துவ விஷயம். உதாரணமா, நான் இத்தகைய அருமையான கருவி கண்டுபிடிச்சிருந்தால், மகிழ்ச்சிப் பெருக்காலே என் பெயரைத் தான் எழுதுவேனே தவிர வேறு யார் பெயரையும் எழுத மாட்டேன். இறந்தவன் இந்த ஆய்வுக்கூடத்தில் வேலை செய்தான் என்று அறிகிறோம்; எனவே, அவன்தான் கண்டுபிடிப்பாளன், அவன்தான் காரின்.''

ஷெல்காவும் தராஷ்கினும் நிலவறையினின்றும் ஏறிவெளிவந்து, புலனாய்வாளன் தன் நாயுடன் வருவதை எதிர்பார்த்தவாறு, சிகரெட் புகைத்துக் கொண்டு நடைவாசலில் அமர்ந்திருந்தனர்.

7

மத்திய அஞ்சல் நிலையத்தின் வெளிநாட்டுத் தந்திகளை ஏற்றுக்கொள்ளும் கவுண்டர் ஒன்றினூடே கொழுத்த, சிவந்த கையொன்று நுழைக்கப்பட்டது. நடுங்கும் விரல்களிலே ஒரு தந்தித்தாளைப் பிடித்திருந்தது.

தந்தி அலுவலன் அக்கையைச் சில விநாடிகள் பார்த்து கோளாறு என்ன என்பதை உணர்ந்தான்: ''சுண்டு விரல் காணப்படவில்லை.'' பிறகு அவன் அந்தத் தாளை எடுத்தான்.

ஸெமியோனவ், மார்ஷல்கோவ்ஸ்கா, வார்ஸா. வேலை பாதி முடிந்தது. என்ஜினியர் போய்விட்டான், ஆவணங்கள் கிடைக்கவில்லை. அறிவுரைகளுக்குக் காத்திருக்கிறேன். ஸ்டாஸ்.

வார்ஸா என்ற சொல்லின் அடியில் அலுவலன் சிவப்புப் பென்சிலால் கோடு கிழித்தான். எழுந்து நின்று பின்னல் தட்டிக்குமேலாகத் தந்தி கொடுப்பவனைப் பார்த்தான். அவன் பருத்தவனாகவும், நடு

வயதினனாகவும், பழுப்பு மஞ்சள் நிறமுடைய ஊதிப்போன ஆரோக்கியமற்ற முகமும், வாயை மறைத்துத்தொங்கும் மஞ்சள் நிற மீசையும் பெற்றிருந்தான். வீங்கிய இமைகளின் சிறு இடைவெளிகளுக்குப் பின்னே அவனது கண்கள் மறைந்திருந்தன. மழித்திருந்த தலை மீது பழுப்பு நிற வெல்வெட் குல்லாய் வைத்திருந்தான்.

''என்ன விஷயம்?'' என்று வெடுவெடுப்புடன் கேட்டான். ''தந்தியை எடுத்துக்கங்க.''

''தந்தி குழூஉக்குறியில் இருக்கிறதே,'' என்றான் அலுவலன்.

''குழூஉக்குறியில் என்று எதைச் சொல்றீங்க? முட்டாள்தனமாகப் பேசாதீங்க. இது வணிகமுறைத் தந்தி, அதை நீங்க கட்டாயம் வாங்கியாகணும். என்னுடைய அறிமுகச்சீட்டை உங்களுக்குக் காட்டுறேன். நான் போலந்து தூதர் அலுவலகத்தைச் சேர்ந்தவன். ஒரு நிமிடம் தாமதித்தாலும் உம்மைப் பொறுப்பாளியாக்குவேன்.''

நான்கு விரலன் சினம் கொண்டான். அவனது கன்னங்கள் ஆடின. பேசவில்லை, அவன் குரைத்தான். ஆனால் கவுண்டரில் இருந்த அவன் கை இன்னும் நடுங்கிக்கொண்டிருந்தது.

''இதோ பாருங்க,'' என்றான் அலுவலன், ''உங்க தந்தி வணிகத் தொடர்புடையது என்று நீங்க உறுதி கூறினாலும், அது அரசியல் தொடர்புடையது, குழூஉக்குறியிலுள்ளது என்று நான் உறுதியாச் சொல்றேன்.''

அலுவலன் முறுவலித்தான். மஞ்சள் முகக் கனவான் ஆத்திரமுற்று தன் குரலை உயர்த்தினானே தவிர, இதற்கிடையில் அவனுடைய தந்தியை ஒரு பெண் எடுத்து, அன்று அனுப்பப்படும் எல்லாத் தந்திகளையும் ஆய்ந்துகொண்டிருந்த வஸீலி வித்தாலியெவிச் ஷெல்கா இருந்த மேசைக்குக் கொண்டு போவதை அவன் பார்க்கவில்லை.

அந்தத் தந்தித்தாளை நோக்கினான் ஷெல்கா: மார்ஷல்கோவ்ஸ்கா, வார்ஸா. பிறகு அடைப்பின் வெளிப்புறம் போய் பொது அறையில் சினமூட்டப்

பட்ட தந்தி அனுப்பவந்தவனின் பின்னே நின்று கொண்டு அலுவலனுக்கு ஒரு சமிக்ஞை காட்டினான். அவனும் மூக்கை உறிஞ்சியபடி போலந்து ஆட்சியாளர்களின் கொள்கையைப் பற்றி அவமதிப்பாக ஏதோ முனகிக்கொண்டே ரசீது எழுத அமர்ந்தான். போலந்துக்காரன் கோபத்துடன் உறுமினான். மெருகு போட்ட காலணிகள் கீச்சிடும்படி தனது உடம்பின் சுமையை ஒரு காலிலிருந்து மறுகாலுக்கு மாற்றிக்கொண்டே இருந்தான். ஷெல்கா அவனது பெரிய கால்களைக் கூர்ந்து நோக்கினான். கதவுப் பக்கம் சென்று அங்குக் காத்திருந்த புலனாய்வாளனிடம் போலந்துக்காரனைச் சுட்டிக்காட்டினான்:

''அவனைப் பின்தொடர்.''

நேற்று துப்பறியும் நாய் அவர்களை பிர்ச் மரத் தோப்பிலுள்ள கோடைக்கால பங்களாவிலிருந்து க்ரெஸ்தோவ்கா ஆற்றிற்குக் கூட்டிச் சென்றது. அங்கே கொலைகாரர்கள் படகில் ஏறியிருக்கலாம் என்று தோன்றியது. அந்த நாளில் எந்தப் புதிய செய்தியும் கிடைக்கவில்லை. குற்றவாளிகள் லெனின்கிராடில் தலைமறைவாகி விட்டார்கள் என்பது போலக் காணப்பட்டது. தந்திகளை ஆராய்ந்ததிலும் பயனில்லை. வார்ஸாவிலிருந்த ஸெமியோனவுக்கு அனுப்பப்பெற்ற இந்தக் கடைசித் தந்தியில் ஒருவேளை அக்கறைக்குரிய ஏதாவது இருக்கலாம்.

அலுவலன் அந்த போலந்துக்காரனுக்கு ரசீது கொடுக்க, சில்லறைக்காகத் தன் அரைக் கோட்டில் அவன் துழாவினான். அக்கணத்தில் கூரிய தாடி வைத்திருந்த கரிய கண்கள் கொண்ட வாட்டசாட்டமான ஒருவன் தந்தித்தாளைக் கையில் வைத்துக் கொண்டு, தன் முறைக்காகக் காத்திருந்தவாறு கோபங் கொண்ட போலந்துக்காரனின் பெருத்த வயிற்றை அமைதியான வெறுப்புடன் பார்த்தான்.

பிறகு கூர்த்தாடிக்காரன் திடீரென்று நிமிர்ந்து நின்றதை ஷெல்கா பார்த்தான்: போலந்துக்காரனின் நான்குவிரற்கையைக் கண்டதுமே அவனுடைய முகத்தை நோட்டமிட்டான்.

அவர்களது கண்கள் சந்தித்தன. போலந்துக்காரன் மோவாய் தொங்கிப் போயிற்று. அவனது தடித்த இமைகள் அகல விரிந்தன. ஒளியற்ற கண்களில் அச்சம் நிறைந்தது. விகாரமான பச்சோந்தியின் தோலைப் போன்ற அவனது முகம் ஈய நிறத்திற்கு மாறியது.

அப்போதுதான் போலந்துக்காரனை எதிர்முகமாக நின்று பார்த்துக் கொண்டிருந்த தாடிக்காரனை ஷெல்கா இனந்தெரிந்து கொண்டான்: க்ரெஸ்தோவ்ஸ்கி தீவில் பிர்ச் மரத் தோப்பிலுள்ள வீட்டில் கொல்லப்பட்டவனின் இரட்டையனாக அவன் இருந்தான்...

போலந்துக்காரன் மூச்சுத்திணறியவாறு, நம்ப முடியாத வேகத்துடன் கதவை நோக்கி விரைந்தான். கதவருகே காத்திருந்த புலனாய்வாளன் அவனைப் பின்தொடர மட்டுமே உத்தரவிடப்பட்டிருந்ததால், கதவைத் தாண்டிச்செல்ல அவனை விட்டுவிட்டு, அவனைப் பின்தொடர்ந்தான்.

கொல்லப்பட்டவனின் இரட்டையன் கவுண்டரில் நின்று கொண்டிருந்தான். அவனது கருவளையங்களுடைய கொடூரமான கண்கள் வியப்பைத் தவிர வேறொன்றும் தெரிவிக்கவில்லை. அவன் தோள்களைக் குலுக்கிக்கொண்டான். போலந்துக்காரன் மறைந்த பிறகு அலுவலனிடம் ஒரு தந்தியைக் கொடுத்தான்:

அஞ்சல் பை, எண் 555, பாட்டினியோல் சாலை, பாரிஸ். பகுப்பாய்வை உடனே தொடங்கு. தரத்தை அரை மடங்கு உயர்த்து. மே மாத நடுவில் முதல் சரக்கை எதிர்பார்க்கிறேன். பி.பெ.

''எனது கூட்டாளி ஒருவன் பாரிஸ் நகரத்தில் விஞ்ஞான ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளான். கரிம மற்ற வேதியல் ஆராய்ச்சி நிலையம் அவனைப் பாரிசுக்கு அனுப்பியுள்ளது. அவ்வாராய்ச்சி பற்றியதாகும் இந்தத் தந்தி,'' என்று அலுவலனிடம் அவன் சொன்னான். தன் பையினின்றும் அவசரமின்றி ஒரு சிகரெட் பெட்டியை இழுத்து, ஒரு சிகரெட்டை எடுத்து, அதைப் பெட்டிமீது தட்டி

விட்டு மிகவும் எச்சரிக்கையுடன் பற்றவைத்தான்.

அவனிடம் ஷெல்கா மரியாதையாகப் பேசினான்:

''உங்களோட ஒரிரு வார்த்தைகள் பேசலாமா?''

தாடிக்காரன் அவனைப் பார்த்து, தனது இமைகளைத் தாழ்த்திக் கொண்டு முற்றிலும் கண்ணியமான முறையில் மறுமொழி கூறினான்:

''நிச்சயமா.''

''நான் குற்றப் புலனாய்வுத் துறையைச் சேர்ந்தவன்,'' தனது அடையாள அட்டையைக் காட்டியவாறு ஷெல்கா பேசினான். ''பேசுவதற்காக மிகவும் வசதியான இடத்தை நாம் பார்த்துச்செல்லலாம்.''

''என்னைக் கைதுசெய்ய விரும்புறீங்களா?''

''அந்த எண்ணம் துளியும் கிடையாது. இப்போது ஓடிப்போன அந்தப் போலந்துக்காரன் நேற்று க்ரெஸ்தோவ்ஸ்கி தீவில் என்ஜினியர் காரினைக் கொன்றது போல உங்களையும் கொல்ல விரும்புகிறான்னு உங்களுக்கு எச்சரிக்கை செய்ய விரும்புறேன்.''

தாடிக்காரன் ஒரு கணம் சிந்தித்தான். தனது நிதானத்தையோ கண்ணியத்தையோ அவன் இழக்கவில்லை.

''நல்லது. அப்படின்னா நாம போகலாம். கால் மணி நேரத்தை நான் ஒதுக்க முடியும்,'' என்றான்.

8

வெளியே தெருவில் அஞ்சல் நிலையத்தின் அருகே, புலனாய்வாளன் ஒருவன் ஷெல்காவை நோக்கி ஓடிவந்தான். அவன் முகம் சிவந்து மச்சங்களிட்டிருந்தது.

''தோழர் ஷெல்கா, அவன் ஓடிப்போயிட்டான்.''

''அவனை ஏன் போகவிட்டீங்க?''

''தோழர் ஷெல்கா, அவனுக்காகக் கார் ஒன்று காத்திருந்தது.''

''உங்களோட மோட்டார் சைக்கிள் எங்கே?''

அஞ்சல் நிலையத்திற்கு நூறு அடிக்கு அப்பால் இருந்த தனது மோட்டார் சைக்கிளைச் சுட்டிக் காட்டி, ''அதோ! சுத்தியினாலே டயரைக் கிழிச்சுட்டான். நான் விசிலை ஊதினேன். அவன் காருக்குள்ளே குதிச்சு ஓட்டிக்கிட்டுப் போயிட்டான்,'' என்றான் புலனாய்வாளன்.

''காரின் எண்ணைக் குறிச்சுக்கிட்டீங்களா?''

''இல்லை.''

''இதுக்காக உங்களைப் பத்தி புகார் செய்வேன்.''

''ஆனா என்னால பார்க்க முடியலே... சகதியினாலே எண்ணைப் பூசியிருந்தான்!''

''சரி. தலைமை நிலையத்துக்குத் திரும்பிப் போங்க, இருபது நிமிடத்திலே நான் அங்கிருப்பேன்.''

தாடிக்காரனை ஷெல்கா பின்தொடர்ந்து நெருங்கினான். சில நிமிடங்கள் பேச்சின்றி அருகருகே அவர்கள் நடந்து சென்றனர். தொழிற்சங்கச் சாலைக்குள்ளாகத் திரும்பினார்கள்.

''ஆச்சரியப்படுகிற மாதிரி செத்துப்போனவனைப் போலவே இருக்கீங்க,'' எனத் தொடங்கினான் ஷெல்கா.

''ஏற்கெனவே பலமுறை இதைக் கேட்டிருக்கிறேன்,'' என்று மற்றவன் உடனடியாகச் சொன்னான். ''என் பெயர் பியான்கோவ்-பெத்கேவிச். நேற்று மாலைப் பத்திரிகையில் அந்தக் கொலையை பத்திப் படிச்சேன். பயங்கரமான கொலை. காரினை எனக்கு நல்லாத் தெரியும், திறமைசாலி, அருமையான வேதியல் நிபுணன். க்ரெஸ்தோவ்ஸ்கி தீவிலுள்ள அவனது ஆய்வுக்கூடத்திற்குப் பலமுறை போயிருக்கேன். வேதியல் போர்முறை சம்பந்தமா ஒரு முக்கியமான கண்டுபிடிப்பை மேற்கொண்டிருந்தான். புகை வத்தியைப் பற்றி உங்களுக்கு எதுவும் தெரியுமா?''

ஷெல்கா பக்கவாட்டில் அவனைப் பார்த்தான்; விடை தருவதற்கு மாறாக மேலும் ஒரு கேள்வி கேட்டான்:

''காரினோட கொலை, போலந்து செல்வாக்குச் சம்பந்தப்பட்டதுன்னு நினைக்கிறீங்களா?''

''நான் அப்படி நினைக்கலே. அவனோட கொலைக்கு இன்னும் ஆழமான காரணம் இருக்கு. காரினின் ஆராய்ச்சியைப் பற்றிய தகவல் அமெரிக்கப் பத்திரிகைகளுக்கு எட்டியிருக்கு. போலந்து இடைத்தட்டுத் தொடர்பு என்பதற்கு மேலா வேறு ஒன்றும் இருக்க முடியாது.''

சாலையோர பெஞ்சில் அமரலாம் என்று ஷெல்கா சொன்னான். சுற்றிலும் ஒருவரும் இல்லை. சோவியத் மற்றும் பிறநாட்டுப் பத்திரிகைகளின் நறுக்குகள் சிலவற்றை கைப்பையிலிருந்து எடுத்துத் தனது முழந்தாளில் பரப்பினான் ஷெல்கா.

''காரின் ஏதோ வேதியல் கண்டுபிடிப்பில் ஈடுபட்டிருந்தான் என்றும், அதுபற்றிய செய்தி வெளி நாட்டுப் பத்திரிகைகளுக்குப் போய்ச்சேர்ந்துள்ளது என்றும் நீங்க சொல்றீங்க. இங்கே உள்ளவைகளில் சில உங்களோட கூற்றுக்கு ஆதரவா இருக்கு, ஆனா சில விஷயங்கள் எனக்குச் சுத்தமாவே தெளிவா இல்லே. இதைப் படிங்க.''

'...ஒரு ருஷ்யக் கண்டுபிடிப்பாளனின் ஆராய்ச்சி பற்றி லெனின்கிராடிலிருந்து வந்துள்ள தகவல் பற்றி அமெரிக்காவில் அக்கறை காட்டப்படுகிறது. அவனது கருவி இதுவரை அறிந்துள்ளவற்றைவிட மிகுதியான அழிக்கும் ஆற்றலைப் பெற்றிருப்பதாக நம்பப்படுகிறது.'

பெத்கேவிச் அதைப் படித்துச் சிரித்தான்.

''இது வேடிக்கையா இருக்கு,'' என்றான். ''எனக்குத் தெரியாது... இதைப் போல எதையுமே நான் கேள்விப்படலே. இது காரினைப் பற்றியதா இருக்க முடியாது.''

ஷெல்கா அவனிடம் இன்னொரு நறுக்கைக் கொடுத்தான்.

'...அமெரிக்க நாட்டுக் கடற்படை பசிபிக் பெருங்கடலில் நடத்தப்போகும் மிகப் பெரிய போர் ஒத்திகைகள் தொடர்பாக, சோவியத் ருஷ்யாவில் உற்பத்தி செய்யப்படும் பெரும் அழிவு உண்டாக்

கும் ஆயுதங்களைப் பற்றிய விவரம் ஏதேனும் உண்டா என்று பாதுகாப்பு அமைச்சகத்திடம் கேட்கப் பட்டுள்ளது.'

பெத்கேவிச் தனது தோள்களைக் குலுக்கிக் கொண்டான்: ''முட்டாள்தனம்,'' என்றவன் மூன்றாவது நறுக்கை எடுத்தான்.

'...கோடீஸ்வரரும் வேதியல் துறை மன்னருமான ரோல்லிங் ஐரோப்பாவுக்குப் புறப்பட்டுள்ளார். நிலக்கரித் தார், உப்புப் பொருள்கள் இவற்றைப் பதன்படுத்தும் தொழிற்சாலைகளை ஏகபோகமாக ஒன்றுசேர்க்கும் விஷயம் குறித்தது அவரது பயணம். புரட்சிச் சக்திகளால் ஆட்டங்கண்டிருக்கும் பழைய உலகத்தைத் தனது ராட்சச வேதியல் நிறுவனம் அமைதியுறச் செய்யும் என்று ரோல்லிங் பாரிசில் அளித்த பேட்டியொன்றில் கூறினார். வெப்பச் சக்தியை நெடுந்தொலைவு செலுத்துவதற்கு மர்மமான சோதனைகள் செய்யப்படுவதாக வதந்தி உலவுகிற சோவியத் ருஷ்யாவை மிக உக்கிரமாகத் தாக்கி ரோல்லிங் பேசினார்.'

பெத்கேவிச் அதனைக் கருத்தூன்றிப் படித்தான். சிறிது நேரம் சிந்தனையில் ஆழ்ந்து அமர்ந்திருந்தான். புருவத்தைச் சுளித்தான்.

இறுதியாக, ''ஆம். இந்தப் பத்திரிகைச் செய்தியுடன் காரினின் கொலை ஏதோ ஒருவகையில் தொடர்புடையதாக இருப்பது முற்றிலும் சாத்தியம்,'' என்றான்.

''நீங்க விளையாட்டுப் போட்டிக்குப் போறீங்களா?'' என்று ஷெல்கா திடீரெனக் கேட்டான். பெத்கேவிச்சின் கையைப் பிடித்து உள்ளங்கையை மேற்புறம் திருப்பினான். ''எனக்கு விளையாட்டுப் போட்டியில் மிக்க ஆர்வமுண்டு.''

''தோழர் ஷெல்கா, துடுப்பு வலிப்பதால் ஏற்படும் கொப்புளங்களைத் தேடுறீங்களா?.. இந்த இரண்டையும் பாருங்க. நான் எத்தனை மோசமாகத் துடுப்புப்போடுகிறவன் என்பதற்கு இது சாட்சி. இரண்டு நாளைக்கு முன்னாலே க்ரெஸ்தோவ்ஸ்கி தீவுக்கு காரினை அழைத்துச் சென்றபோது ஒன்றரை மணி நேரம் ஒரு படகை நான்

ஓட்ட வேண்டியிருந்துச்சு... இந்தத் தகவல் உங்களுக்குத் திருப்தியளிக்குதா?''

ஷெல்கா அவன் கையை விட்டுவிட்டுச் சிரித்தான்.

''தோழர் பெத்கேவிச், நீங்க ரொம்பச் சாமர்த்தியசாலி. உங்களோட உண்மையான சச்சரவு வைத்துக்கொள்றதை நான் விரும்புறேன்.''

''நானும் அதைத் தவிர்க்கிற ஆள் இல்லே.''

''பெத்கேவிச், சொல்லுங்க, அந்த நான்கு விரல் போலந்துக்காரனை உங்களுக்கு முன்பே தெரியுமா?''

''அவனது கையிலே ஒரு விரல் காணாததைக் குறித்து நான் ஏன் ஆச்சரியப்பட்டேன் என்பதை அறிய விரும்புகிறீங்களா? தோழர் ஷெல்கா, நீங்க ரொம்ப எச்சரிக்கையானவர். ஆமா, நான் ஆச்சரியப் பட்டேன்... அதற்கும் மேலா, நான் பயந்து போயிட்டேன்.''

''ஏன்?''

''அதைத்தான் நான் உங்களுக்குச் சொல்லப் போறதில்லே.''

ஷெல்கா உதட்டைக் கடித்துக்கொண்டு, வெறிச்சோடியிருந்த சாலையை ஏதோ மாதிரிப் பார்த்தான்.

''அவன் ஒரு விரலை மட்டும் இழந்திருக்கலே,'' என்று தொடர்ந்தான் பெத்கேவிச், ''அவனோட நெஞ்சுக்குக் குறுக்கே பயங்கரமான வடுவும் இருக்கு. 1919ஆம் ஆண்டு காரின் அதனை ஏற்படுத்தினான். அந்த ஆளோட பெயர் ஸ்டாஸ் திக்லின்ஸ்கி...''

''மூன்று அங்குலத் தடிப்புள்ள பலகைகளை அறுத்த அதே முறையில் காரின் அவனை வடுப்படுத்தினானா?'' என்று ஷெல்கா வினவினான்.

தன்னோடு பேசிக்கொண்டுவந்தவன் பக்கம் திடீரென்று பெத்கேவிச் திரும்பினான். சிறுபொழுது ஒருவரையொருவர் நேருக்கு நேர் கண்ணுக்குள் நோக்கினர்: ஒருவன் அமைதியாகவும் ஊடுருவிப் பார்க்க முடியாதவனாகவும் இருந்தான், மற்றவனோ குதூகலமாகவும் கலகலப்பாகவும் இருந்தான்.

''ஆக, தோழர் ஷெல்கா, என்னைக் கைது செய்ய உத்தேசித்திருக்கீங்களா?''

''இல்லை, அதற்கு இன்னும் நேரமிருக்கு.''

''நீங்க சொல்றது சரி. எனக்கும் நிறையத் தெரியும். ஆனா எவ்வகையான நிர்ப்பந்தமும் நான் விரும்பாததை உங்களுக்குச் சொல்ல என்னைக் கட்டாயப் படுத்த முடியாது என்பதை நீங்க புரிஞ்சுக்கணும். நான் அந்தக் குற்றத்திலே சம்பந்தப்படலே, உங்களுக்கே அது தெரியும். நீங்க விரும்பினா நாம் வெளிப்படையாகவே ஆடக் கூடும். அதற்குரிய நிபந்தனைகளாவன: நல்ல அடிகொடுத்த பிறகு வெளிப்படையாக விவாதிக்க நாம் கூடுவோம். அது சதுரங்க ஆட்டம் போலிருக்கும். நாம் ஒருவரையொருவர் கொல்றதுக்கு அநுமதி கிடையாது. அத்துடன், நாம் பேசிக் கொண்டிருந்த நேரம் முழுக்க உங்க உயிருக்குக் கடும் அபாயம் காத்துக்கொண்டே இருந்தது. என்னை நம்புங்க, நான் வேடிக்கை பேசலே. உங்களோட இடத்தில் ஸ்டாஸ் திக்லின்ஸ்கி அமர்ந்திருந்தானேயானால் நான் சுற்றிலும் பார்த்திருப்பேன்... ஒருத்தரும் காணப்படலே?.. அமைதியாக நான் சேனட் சதுக்கத்திற்கு நடந்திருப்பேன் என்று வைத்துக் கொள்ளுவோம். அவன் அதே இருக்கையில் இறந்து கல் போலக் கிடப்பான், அவனுடைய உடம்பு முழுக்க பல பயங்கரமான புண்கள் இருக்கும். இருந்தபோதிலும், திரும்பவும் சொல்றேன், உங்க விஷயத்தில் அந்தத் தந்திரங்களை பயன்படுத்தப் போறதில்லே. ஒப்புக்கொள்றீங்களா?''

''அது சரி. நான் ஒப்புக்கொள்றேன்,'' என்றான் ஷெல்கா, தனது கண்கள் மின்ன. ''நான் முதலில் நகர்த்துவேன், சரியா?''

''இயற்கையாவே, அஞ்சல் நிலையத்தில் நீங்க என்னைப் பிடித்திராவிட்டால், நான் இந்த ஆட்டம் பற்றி யோசனை கூறியிருக்க மாட்டேன். நான்கு விரல்காரனைப் பொருத்தவரை—நீங்க அவனைத் தேடுறதுக்கு என்னாலான உதவியைக் கட்டாயம் செய்வேன். எங்கேயாவது அவனைச் சந்திக்க நேர்ந்தா —உடனே தொலைபேசி அல்லது தந்தி வாயிலா உங்களுக்குத் தெரிவிக்கின்றேன்.''

''நல்லது, பெத்கேவிச், இப்ப என்னை அச்சுறுத்தினீங்களே, அந்தக் கருவியைக் காட்டுங்க.''

பெத்கேவிச் சரி என்று தலையை ஆட்டினான். பிறகு முறுவலித்தான்: ''உங்க விருப்பப்படியே இருக்கட்டும். நாம் வெளிப்படையாகவே போட்டியிடுறோம்,'' எனச் சொல்லி மிகக் கவனத்துடன் தனது பக்கப் பையிலிருந்து தட்டையான பெட்டி ஒன்றை வெளியில் இழுத்தான். பெட்டியினுள்ளே ஒரு விரலளவு தடிப்புள்ள ஓர் உலோகக் குழாய் இருந்தது.

''அங்கே இருப்பது இவ்வளவுதான். ஒரு நுனியைச் சிறிது அழுத்தினால் போதும்—உள்ளேயிருக்கும் கண்ணாடி நொறுங்கி விடும்...''

9

துப்பறியும் அலுவலகத்தை நெருங்கிய போது தந்தி கம்பத்தில் மோதிக்கொண்டது போன்று திடீரென்று ஷெல்கா நின்றான். ''அடச்சே!'' என்று பெருமூச்செறிந்து, வெறியுடன் காலைத் தரையில் அடித்தான். ''அடேயப்பா, எத்தகைய தந்திரக்காரன்! அடேயப்பா, எத்தகைய நடிகன்!''

தான் முற்றிலும் ஏமாற்றப்பெற்றதாக ஷெல்கா உணர்ந்தான். கொலைகாரனுக்கருகில் இரண்டு நாலடிக்குள் நின்றிருந்தான் (அவன் கொலைகாரன் என்பதில் இப்போது சிறிதும் ஐயமில்லை), எனினும் அவனைக் கைது செய்யவில்லை. இது குறித்து எல்லா விபரங்களையும் பெரும்பாலும் நன்கு அறிந்த ஒருவனுடன் பேசிவிட்டான், அவனோ தெளிவாகவே இவனுக்கு எதுவுமே சொல்லாமல் சமாளித்துவிட்டான். அந்த பியான்கோவ்-பெத்கேவிச் ஏதோ இரகசியம் வைத்துள்ளான்... இந்த இரகசியம் அரசாங்க, மேலும் சர்வதேச முக்கியத்துவமுடையதாகக்கூட இருக்கும் என்று ஷெல்கா திடீரென்று உணர்ந்தான்... இவன் பியான்கோவ்-பெத்கேவிச்சைக்கிட்டத் தட்டப் பிடித்து விட்டிருந்தான்... ''சரடு விட்டுட்டான், அவன் நாசமாய்ப் போக, நழுவி விட்டானே!''

மூன்றாவது மாடியிலுள்ள தனது அலுவலகத்திற்கு ஷெல்கா படிகளில் ஓடி ஏறிவந்தான். அவனது மேசை மேல் ஒரு பொட்டலம் பத்திரிகைக் காகிதத்தால் சுற்றப்பெற்றுக் கிடந்தது. ஆழ்ந்த சன்னல் மாடக்குழியில் பணிந்த தோற்றமுள்ள ஒரு தடித்த நபர் கனத்த புதைமிதியடி அணிந்து அமர்ந்திருந்தான். அவன் தனது தொப்பியை வயிற்றோடு அழுத்திக்கொண்டு குனிந்து ஷெல்காவுக்கு வணக்கம் செய்தான்.

''என் பெயர் பாபிச்சேவ். வீட்டுக் கண்காணிப்பாளன்,'' என்ற அவனது மூச்சில் வீட்டில் காய்ச்சிய வோத்கா சாராய வாடை குப்பென்று அடித்தது. ''புஷ்கார்ஸ்கயா தெருவில் 24ஆம் எண்ணுள்ள வீட்டிலிருந்து வருகிறேன். அது கூட்டுறவு வீடு.''

''இப்பொட்டலத்தை நீ கொண்டுவந்தாயா?''

''ஆம், நான் கொண்டுவந்தேன். 13ஆம் எண் குடியிருப்பிலிருந்து... அது பிரதானக் கட்டடத்தில் இல்லை, பக்கக் கட்டடத்தில் இருக்கிறது. இரண்டு நாளா அங்கே இருந்தவனைக் காணோம். இன்னைக்கு மிலீஷியா அழைக்கப்பட்டு, கதவைப் பலாத்காரமாகத் திறந்து சட்டப்படி அறிக்கை தயாரித்தார்கள்.'' வீட்டுக் கண்காணிப்பாளன் கையினால் வாயைப் பொத்திக்கொண்டான், அவன் கன்னங்கள் சிவந்தன, கண்கள் உருண்டன, கண்ணீரால் பெருகியது. மட்டமான சாராய வாடை அறையை மூழ்கடித்தது. ''ஆகவே, இந்தப் பொட்டலத்தை அடுப்பில் கண்டேன்.''

''அங்கு குடியிருந்தவன் பெயர் என்ன?''

''இவான் அலெக்ஸேயெவிச் சவேலியெவ்.''

ஷெல்கா பொட்டலத்தைப் பிரித்தான். அதனுள் பியான்கோவ்-பெத்கேவிச்சின் புகைப்படமும், சீப்பு ஒன்றும், கத்தரிக்கோல் ஒன்றும், மயிர்ச்சாயம் போன்ற இருண்ட திரவம் நிறைந்த புட்டி ஒன்றும் இருந்தன.

''சவேலியெவின் தொழில் என்ன?''

''ஏதோ விஞ்ஞான சம்பந்தமானது. ஒரு முறை வீட்டின் பலகணி அமைப்பில் பழுது நேர்ந்தது.

அப்போது அதனைச் சரிப்படுத்துமாறு வீட்டுக்குழுவினர் அவனைக் கேட்டனர். 'மகிழ்ச்சியோட செய்வேன். ஆனா நான் வேதியலாளன் மட்டுந்தான்,' என்றான் அவன்.''

''இரவில் அடிக்கடி வெளியே சென்று வருவானா?''

''இரவிலா? நான் அறிந்தவரை இல்லை.'' மீண்டும் வீட்டுக் கண்காணிப்பாளன் தன் வாயைப் பொத்திக்கொண்டான். ''ஆனா எப்பவுமே விடிஞ்சதும் வீட்டிலிருந்து போவான். அதுதான் உண்மை. ஆனா இரவில் இல்லை. நான் ஒருபோதும் அதைப் பார்த்ததில்லை. அவன் குடித்திருந்ததையும் நான் பார்த்ததில்லை.''

''அவனைப் பார்க்க வருவோர் உண்டா?''

''நான் எவரையும் எப்பவும் பார்த்ததில்லை.''

ஷெல்கா பெத்ரோகிராடுப் புறத்தின் மிலீஷிய நிலையத்துக்குப் போன் செய்தான். புஷ்கார்ஸ்கயா தெருவில் 24ஆம் எண் விட்டின் பக்கக் கட்டடத்தில் வேதியலாளனும் முப்பத்தாறு வயதுவந்தவனுமான சவேலியெவ் இவான் அலெக்ஸேயெவிச் என்பான் வாழ்ந்ததாக ஷெல்காவுக்குச் செய்தி தரப்பட்டது. தாம்போவ் மிலீஷிய நிலையம் தந்த அறிமுகச் சீட்டுடன் புஷ்கார்ஸ்கயா தெருவில் பிப்ரவரி மாதத்தில் குடியேறினான் என்று தெரிந்தது.

மேலும் தகவல் கோரி தாம்போவுக்கு ஷெல்கா ஒரு தந்தியனுப்பிவிட்டு, வீட்டுக் கண்காணிப்பாளனுடன் ஃபன்தான்கா தெருவிலுள்ள மிலீஷிய நிலையத்திற்குச் சென்றான். அங்குதான் பிணக்கிடங்கில் க்ரெஸ்தோவ்ஸ்கிதீவில்கொல்லப்பட்டவனது உடம்பு பனிக்கட்டியில் கிடந்தது. 13ஆம் எண் குடியிருப்பில் தங்கியவனது உடல்தான் என்று வீட்டுக் கண்காணிப்பாளன் உடனடியாகஅடையாளம் கண்டு கூறினான்.

10

ஏறத்தாழ அதே நேரத்தில் பியான்கோவ்-பெத்கேவிச் என்று தன்னை அழைத்துக்கொண்ட மனிதன்

மூடிய வண்டியில் பெத்ரோகிராடுப் புறத்தில் காலி யிடம் ஒன்றுக்குச் சென்று, வண்டிக்குக் கூலி கொடுத்து அனுப்பிவிட்டு காலியிடத்தின் ஓரமாகக் கால்நடை யாக மேலும் சென்றான். ஒரு வேலியிலிருந்த வாயி லைத் திறந்து முற்றத்தின் குறுக்கே சென்று ஒரு வீட்டின் பின்வழியை அடைந்து, குறுகிய மாடிப்படி களில் ஏறி, ஐந்தாவது மாடியை அடைந்தான். இரண்டு சாவிகளினால் கதவைத் திறந்தான். முன் வாயில் அறையிலிருந்த ஒரே கொக்கியில் மேற் கோட்டையும், தொப்பியையும் தொங்கவிட்டுப் பின் ஓர் அறையினுள் நுழைந்தான். அங்கிருந்த நான்கு சன்னல்களில் பாதியளவு வெள்ளையடிக்கப்பட்டிருந் தது. கிழிந்த சோபா ஒன்றில் அவன் அமர்ந்து, கை களால் முகத்தை மூடிக்கொண்டான்.

இந்தத் தனியறையில் புத்தக அலமாரிகளும், பௌதிகக் கருவிகளும் இடம்பெற்றிருந்தன. கடந்த இரண்டு நாள்களாக அவனைத் தன் பிடிப்பில் சிக்க வைத்திருந்த, திடுக்கிடவைத்த கடும் பதற்றத்தின் பரப்பை, கிட்டத்தட்ட நம்பிக்கை இழந்துபோன தன்மையை, இங்குதான் அவன் கடைசியாக வெளிப் படுத்த முடிந்தது.

அவன் முகத்தை அழுத்தியிருந்த கைகள் நடுங் கின. மரண அபாயத்தில் தான் இன்னும் இருப்பதை உணர்ந்தான். எல்லாப் பக்கங்களிலும் வளைத்துக் கொள்ளப்பட்டிருந்தான். அவனுக்குச் சாதகமாக ஒரேயொரு வாய்ப்பும், எதிராகத் தொண்ணூற்று ஒன்பதும் இருந்தன. ''எத்தகைய அசட்டை! சே, எத்தகைய அசட்டை!'' என்று கிசுகிசுத்தான்.

தனது பெரிய மனவலியைப் பயன்படுத்திப் பதற் றத்தைக் கட்டுப்படுத்தினான். அழுக்குத் தலை யணையில் தனது முட்டியை மடக்கிக் குத்தினான். மல்லாந்துப் படுத்து கண்களை மூடிக்கொண்டான்.

பயங்கரமான இறுக்கத்தால் சுமை ஏறிவிட்ட அவனது சிந்தனை ஓய்வு பெற்றது. இறந்தது போன்று அசைவின்றிச் சில நிமிடங்கள் இருந்ததால் மீண்டும் உணர்வடைந்து எழுந்தான். மடீர ஒயினை ஒரு கோப்பையில் ஊற்றி, ஒரே மடக்கில் குடித்

தான். சூடேற்றும் அலை அவன் உடலில் பரவவே அமைதியுடனும் பரபரப்பின்றியும் விமோசனத்திற்குச் சிறிதேனும் வாய்ப்பு உள்ளதா என்று ஆய்ந்து கொண்டே இங்குமங்கும் நடக்கத் தொடங்கினான்.

சுவரில் பலகை பொருத்தப்பட்ட இடத்தில் விடுபட்ட பழைய சுவர்க்காகிதத்தை மிகுந்த எச்சரிக்கையுடன் அகற்றி, அதன் பின்னிருந்து சில அமைப்புப்படங்களை வெளியில் இழுத்து, அவற்றைக் குழாய் வடிவில் சுருட்டினான். புத்தக அலமாரிகளிலிருந்து எடுத்த சில புத்தகங்களையும் அவற்றுடன் அமைப்புப்படங்களையும் ஒரு கைப்பெட்டியில் வைத்து மூடினான். மிகவும் எச்சரிக்கையுடன் கவனித்துக் கொண்டே அப்பெட்டியை எடுத்துப் போய் விறகுக் கிடங்காகப் பயன்பட்ட நிலவறையில் ஒரு குப்பைக் குவியலுக்கடியில் ஒளித்து வைத்தான். தன் அறைக்குத் திரும்பி வந்து, எழுது மேசையிலிருந்து ஒரு கைத்துப்பாக்கியை எடுத்து, அதனைச் சோதனை செய்து பின்புறப் பையில் திணித்துக்கொண்டான்.

ஐந்தாக கால் மணி நேரம் இருந்தது. மீண்டும் படுத்தபடி ஒன்றன்பின் ஒன்றாக சிகரெட்டுகளைப் புகைத்துக் கடைத்துண்டுகளை அறையின் ஒரு மூலையில் எறிந்தபடி இருந்தான். ''நிச்சயமாக, அவர்கள் அதனைக் கண்டுபிடிக்கலே!'' என்ற அவன் கிட்டத்தட்ட அலறிவிட்டான். சோபாவிலிருந்து கால்களை எடுத்துவிட்டு மீண்டும் அறையின் குறுக்கேரு மூலையிலிருந்து மற்றொரு மூலைக்கு நடைபாடத் தொடங்கினான்.

மாலை மங்கும் வேளையில் முழங்கால் அளவு அணியும் முரட்டு மூடுசெருப்பைப் போட்டுக் கொண்டு கப்பற்பாய்த் துணியாலான மேற்கோட்டையணிந்து வெளியேறிச் சென்றான்.

11

16ஆவது மிலீஷியப் பகுதியில் இரவில் முறை அலுவல் புரிந்துவந்த அதிகாரி நள்ளிரவில் தொலை

பேசிக்கு அழைக்கப்பட்டான். மிகுந்த பதட்டத்துடன் பேசிய யாரோ ஒருவன் சொன்னான்:

''முந்தா நாள் க்ரெஸ்தோவ்ஸ்கி தீவில் ஒரு மனிதன் கொலை செய்யப்பட்ட வீட்டிற்கு உடனேயே ஒரு மிலீஷியப் படை வண்டியை அனுப்புங்க...''

குரல் திடீரென்று நின்று போனது. மிலீஷிய அதிகாரி பேச்சுக் குழலிலே சபித்தான். கூப்பிட்டது எங்கிருந்து என்று சரிபார்த்துப் படகோட்டும் பள்ளியிலிருந்து அழைப்பு வந்தது என அறிந்து, அங்கே தொடர்பு கொண்டான். நீண்ட நேரம் மணியடித்தது. பிறகு உறக்கக் கலக்கத்துடன் இருந்த ஒரு குரல் பதிலளித்தது:

''உங்களுக்கு என்ன வேணும்?''

''அங்கிருந்து யாரேனும் தொலைபேசியில் கூப்பிட்டார்களா?''

ஒரு கொட்டாவி விட்டுக்கொண்டே, ''ஆமா,'' என்று கூறிற்று அக்குரல்.

''யார் பேசியது? நீங்க அவரைப் பார்த்தீங்களா?''

''இல்லை. நான் பார்க்கலே. இங்கே ஏதோ மின் கோளாறு இருக்கு. தோழர் ஷெல்காவிடமிருந்து தனக்கு உத்தரவு இருப்பதாச் சொன்னான்.''

அரை மணி நேரம் கழித்து க்ரெஸ்தோவ்ஸ்கி தீவிலுள்ள மரப்பலகை அடித்த சிறு வீட்டிற்கு வெளியே நான்கு மிலீஷியர்கள் ஒரு காரினின்றும் குதித்தனர். அஸ்தமன சூரியனின் இறுதிக் கற்றைகள் பிர்ச் தோப்பிற்கு அப்பால் செவ்வொளியைப் பரப்பிக் கொண்டிருந்தன. மிக லேசான முனகல்கள் அமைதியைக் கலைத்தன. வீட்டின் பின்கதவுக் கருகில் ஆட்டுத்தோல் மேற்கோட்டு அணிந்திருந்த ஒருவன் முகம் குப்புறக் கிடந்தான். அவனை அவர்கள் புரட்டிப் பார்த்தார்கள்—அது காவற்காரன். அவனுக்கருகில் மயக்கமருந்து தோய்ந்து நனைந்த பஞ்சுப் பட்டையொன்று கிடந்தது.

பின்கதவு அகலத் திறந்திருந்தது, பூட்டு நொறுங்கி இருந்தது. மிலீஷியர் வீட்டினுள் நுழைந்த

போது தரையின் அடியிலிருந்து அடங்கிய குரலில் கூப்பிடுவதைக் கேட்டனர்:

''தோழர்களே, சமையலறையிலுள்ள நிலவறை மடிப்புக் கதவைத் திறங்க...''

மேசைகளும், பெட்டிகளும், பளுவான பைகளும் சுவரின் ஓரத்தில் குவிக்கப்பட்டிருந்தன. அவற்றை விலக்கித் தள்ளிவிட்டு, நிலவறை மடிப்புக் கதவைத் திறந்தனர்.

பயங்கரமான முறைத்த விழிகளுடன், தூசியாலும் நூலாம்படையாலும் மூடியிருந்த ஷெல்கா நிலவறையிலிருந்து தொத்தியேறி வெளியே வந்தான்.

''இவ்வழியா, சீக்கிரம்!'' என்று கத்தியவன் ஒரு கதவினூடே மறைந்தான். ''விளக்கைக் கொண்டு வாங்க, சீக்கிரம்!''

இரும்புக் கட்டிலைக் கொண்ட அறையில் வெடி தீர்க்கப்பட்ட இரண்டு கைத்துப்பாக்கிகளும், ஒரு வெல்வெட் குல்லாயும், அருவருக்கத்தக்க கார நெடியுள்ள வாந்தியின் தடங்களும் மிலீஷியரின் டார்ச் விளக்குகளின் ஒளியில் தரையில் தென்பட்டன.

''எச்சரிக்கையா!'' கத்தினான் ஷெல்கா. ''மூச்சு விடாதிங்க, இங்கிருந்து வெளியேறுங்க! இது ஆட்கொல்லி!''

பின்புறமாக நகர்ந்து மிலீஷியர்களைக் கதவுப் பக்கம் தள்ளியபடி அவன், தரையில் கிடந்த, மனித விரலுக்குமேல் பெரிதல்லாத ஒரு சிறு உலோகக் குழாயைத் திகிலுடனும், வெறுப்புடனும் நோக்கினான்.

12

எல்லாப் பெரும் வர்த்தக அதிபர்களைப் போலவே வேதியல் மன்னன் ரோல்லிங் வணிக நிமித்தம் வரும் பார்வையாளர்களை வரவேற்க ஒரு தனி அலுவலகம் அமர்த்தியிருந்தான். அங்கே அவனுடைய செயலாளன் வருபவரின் முக்கியத்துவத்தின் தரத்தை மதிப்பிட்டும், அவர்களின் எண்ணங்களைப் படித்த

றிந்தும், அவர்களது எல்லா வினாக்களுக்கும் மிகைப் பட்ட கண்ணியத்துடன் விடையளித்தும், காணவரு பவர்களை வடிகட்டித் தேர்ந்து கொண்டிருந்தான். ரோல்லிங்கினுடைய கருத்துகளையெல்லாம் சுருக் கெழுத்துக்காரி மானிட மணிவாசகங்களாக மாற்றி னாள். இந்தக் கருத்துகள் (அவற்றின் ஆண்டுச் சராசரியை எடுத்துக்கொண்டு, அதற்கீடான பணத் தொகையாகப் பெருக்கினால்) அந்தக் கரிமமற்ற வேதியல் மன்னனுடைய கருத்தின் ஒரு செகண்ட் கூறுக்கு ஐம்பதினாயிரம் டாலர் விலையாகும். நான்கு தட்டெழுத்துக்காரிகளின் வாதுமை வடிவான நகங் கள் நான்கு 'அண்டர்வுட்' தட்டெழுத்துப் பொறி களில் இடைவிடாது திரிந்து கொண்டிருந்தன. ஏவல் பையன் கூப்பிடப்பட்ட அந்தக் கணத்தில் ரோல்லிங்கின் விருப்பத்தின் பருவடிவு போல வந்து தோன்றினான்.

மால்ஸேர்ப் சாலையில் இருந்த ரோல்லிங்கின் அலுவலகம் கலகலப்பில்லாத, எடுப்பான அறை. சுவர்களில் இருண்ட பட்டுத் துணி பொருத்தப்பட்டி ருந்தது, தரையின் மேல் தடித்த இருண்ட கம்பளங் கள் விரிக்கப்பட்டிருந்தன, அங்கிருந்த தவிசுகளெல் லாம் இருள் நிறத் தோலினால் தைக்கப்பட்டிருந் தன. கண்ணாடிப் பாளம் அமைந்த கரிய மேசை களின் மேல் விளம்பரங்களும், தவிட்டுநிற மொராக் கோ தோலினால் கட்டப்பெற்ற தகவல்விவரப் புத் தகங்களும், வேதியல் ஆலைகளின் திட்ட விளக்க அறிவிப்புகளும் தொகுத்து வைக்கப்பட்டிருந்தன. போர்க்களத்திலிருந்து கொண்டுவரப்பட்ட துருப்பி டித்த சில புகையாவிக் குண்டுகளும், சிறு சுரங்கப் பீரங்கி ஒன்றும் கணப்படுப்பை அழகுபடுத்தின.

உயரமான இருண்ட வால்நட் மரக் கதவுகளுக் குப் பின்னே வரிச்சித்திரங்கள், வரைபட்டியல் சித் திரங்கள், புகைப்படங்கள் இவற்றுக்கு நடுவே தனது மூலஸ்தானத்தில் வேதியல் மன்னன் ரோல்லிங் அமர்ந் திருந்தான். காணவந்தவர்களில் வடிகட்டப்பட்ட பார்வையாளர்கள் முன்னறையில் கம்பளத்தின் மேல் மிருதுவாக நடந்துசென்று, தோல்தைத்த நாற்

காலிகளில் அமர்ந்து வால்நட் மரக் கதவுகளைத் தயக்கத்துடன் பார்த்துக்கொண்டிருந்தனர். அங்கே, அக்கதவுகளுக்குப் பின்னால், மன்னர் அறையிலிருந்த காற்றுங்கூட நம்பமுடியாத அளவு மதிப்புள்ளதாக இருக்கும். ஏனெனில் ஒரு செகண்டிற்கு ஐம்பதினாயிரம் டாலர் பெறுமானமுள்ள எண்ணங்கள் கலந்து செறிந்துள்ள காற்றல்லவா அது!

இவ்வாறு பயபக்தியான அமைதி நிலவும் முன்னறையில் வளைநகங்கள் பற்றியுள்ள பந்து போன்ற வடிவுபெற்ற பருத்த வெண்கலம் கதவுப்பிடி திடீரென்று சற்று அசைந்து, வால்நட் கதவுகளின் ஊடே இருந்து இருண்ட பழுப்பு நிறக் கோட்டு அணிந்த ஒரு சிறிய மனிதன், சித்திரவதைப்படுத்துகிற இரக்கமற்ற மனிதன், அநேக்மாக அதீதமனிதன் தோன்றியதுமே எந்த மனித இதயந்தான் அமைதியாக அடித்துக் கொள்ளும்? உலகப் புகழ்பெற்ற தாடி அவன் கன்னங்களை மூடியிருந்தது. அவனது மஞ்சள் பாரித்த, ஆரோக்கியமற்ற முகம், மஞ்சள் வட்டத்துக்குள் நான்கு கரிய பட்டைகள் கொண்ட உலகறிந்த வணிகச் சின்னத்தை நினைவுபடுத்தியது... கதவைச் சற்றே திறந்து, பார்வையாளரைக் கண்களால் துளைப்பதுபோல நோக்கி, கடுமையான அமெரிக்க ஒலி அழுத்தத்துடன், ''வாங்க,'' என்பான் வேதியல் மன்னன்.

13

தன்னுடைய தங்கப் பென்சிலை இரு விரல்களால் பற்றிக்கொண்டு அபாரமான கண்ணியத்துடன் செயலாளன் கேட்டான்:

''தயவுசெய்து உங்கள் பெயரைச் சொல்றீங்களா?''

''ஜெனரல் ஸுபோத்தின், ருஷ்ய அகதி.''

ஜெனரல் சினத்துடன் தோள்களை நிமிர்த்திக் கசங்கிய கைக்குட்டையால் வெளுத்த மீசையைத் துடைத்துக்கொண்டான்.

உரையாடல் மிகவும் இனிமையாக, நேசபூர்வ

மான விஷயங்களைத் தொட்டதாக இருந்தது என்று கருதியவன் போல முறுவலித்தான் செயலாளன். தன் குறிப்பேட்டில் விரைவாகக் குறித்துக்கொண்டு மிகுந்த எச்சரிக்கையுடன் கேட்டான்:

''திரு. ஸுபோத்தின், திருவாளர் ரோல்லிங் அவர்களுடன் நீங்கள் எது குறித்துப் பேசப் போகிறீர்கள்?''

''மிகவும் அசாதாரணமான முக்கியத்துவமுள்ளது.''

''நீங்க என்னிடம் சொன்னா, நான் அதனைச் சுருக்கமாகத் திரு. ரோல்லிங் அவர்களுக்கு எடுத்துச் சொல்ல முடியும்.''

''பாருங்க, என்னுடைய நோக்கம் மிகச் சாதாரணமான ஒன்னு... சொல்லப்போனா அது ஒரு திட்டம்... பரஸ்பரம் பயன் தருவது...''

''போல்ஷெவிக்குகளுக்கு எதிரான வேதியல் போர் முறை பற்றியது அத்திட்டம், எனது ஊகம் சரிதானே?'' என்று வினவினான் செயலாளன்.

''முற்றிலும் சரி... நான் திரு. ரோல்லிங்கிடம் யோசனை சொல்ல உத்தேசித்திருப்பது...''

''பாருங்க...'' என்று தனது கவர்ச்சி நிறைந்த கண்ணியத்துடன் குறுக்கிட்டுக் கூறிய செயலாளனது இனிய முகத்தில் வேதனைகூடப் பதிந்திருந்தது, ''திரு. ரோல்லிங் அவர்களிடத்தில் இத்தகைய திட்டங்கள் அளவுக்குமேல் வந்திருக்கின்றன என்று நான் பயப்படுறேன். கடந்த ஒரு வாரத்தில் போல்ஷெவிக்குகளுக்கு எதிரான வேதியல் போர் முறை குறித்து நூற்றியிருபத்து நான்கு ஆலோசனைகள் ருஷ்யர்களிடமிருந்து மட்டுமே பெற்றிருக்கிறோம். ஏககாலத்தில் கார்க்கவ், மாஸ்கோ, பெத்ரோகிராடு ஆகிய மூன்று ஊர்களின் மேலும் வேதியல் விமானத் தாக்குதலுக்குரிய அருமையானதொரு திட்டம் எங்க கைப்பைக்குள் இருக்கிறது. அந்தத் திட்டத்தின் கர்த்தா இடைப்பட்ட சிறிய நடுநிலை நாடுகளின் பிராந்தியங்கள் மீது படைகளை மிகவும் சாமர்த்தியமாக அமைத்திருக்கிறார்,—மிகமிக ஆர்வமூட்டக்கூடியது. செலவு குறித்த துல்லியமான

மதிப்பீட்டையும் கூட இக்கர்த்தா அளித்துள்ளார்: அம்முப்பெரும் நகரங்களில் வாழ்வோர் அனைவரையும் நிர்மூலமாக்குவதற்கு ஆறாயிரத்து எண்ணூற்று ஐம்பது டன் கடுகுப் புகையாவி தேவை.''

தலைக்கு இரத்தம் பாய்ந்ததன் விளைவாக ஜெனரல் ஸுபோத்தின் கன்றிச் சிவந்தான்.

''பிறகு விஷயம் என்ன, ஐயா, உங்க பெயரென்ன!'' என்று செயலாளனின் பேச்சை அவன் இடைமறித்தான். ''என்னுடைய திட்டமும் இதைப் போலவே சிறந்தது, ஆனால் அதுவும் சிறப்புவாய்ந்ததுங் கூட. நாம் செயல்பட வேண்டும்! பேச்சிலிருந்து செயலுக்குச் செல்ல வேண்டும்... என்ன தயக்கம்?''

''அருமை ஜெனரல் அவர்களே, தமது செலவுக்கு ஏற்ற ஈடு இருப்பதாகத் திரு. ரோல்லிங் இன்னும் காணவில்லை என்ற தயக்கந்தான்.''

''ஈடா? என்ன சொல்றீங்க?''

''திரு. ரோல்லிங் அவர்களுக்குப் போர் விமானங்களிலிருந்து ஆறாயிரத்து எண்ணூற்று ஐம்பது டன் கடுகுப் புகையாவியைக் கொட்டுவதற்குப் பெரிய கஷ்டமொன்றும் இல்லை. ஆனால் இதில் ஓரளவு செலவு ஏற்படுமே. போர் என்றால் பணச்செலவு தானே இல்லையா? திரு. ரோல்லிங் அவர்களுக்குத் தரப்பட்டுள்ள திட்டங்கள் அனைத்திலும் செலவு தவிர வேறெதையும் அவர் காணவில்லை. துரதிர்ஷ்டவசமாக போல்ஷெவிக்குகளுக்கு எதிராகச் செய்யப்படும் நாசவேலைகளுக்கு ஈடு எதுவும், இலாபம் எதுவும் இதில் சுட்டிக்காட்டப்படவில்லை.''

''ஏன்? இதுதான் பகல்வெளிச்சம் போலத் தெளிவா இருக்கே... ருஷ்யாவை மீண்டும் சட்டபூர்வமான ஆட்.சியாளரிடம் ஒப்படைப்போர், சட்டபூர்வமான, இயல்பான சமூக அமைப்பை அளிப்போர் யாராக இருப்பினும் அவருக்கு இலாபம்—பிரம்மாண்டமான இலாபமே,—அத்தகைய மனிதனுக்கு மலைமலையாத் தங்கம் காத்திருக்கே!'' ஒரு கழுகைப் போன்று தன் புருவங்களின் அடியிலிருந்து செயலாளனை வைத்தகண் வைத்தபடி ஊடுருவிப் பார்த்தான் ஜெனரல். ''அப்பொழுது நானும் இலா

பம் காட்ட வேண்டும் போலும்?''

''ஆம், சரியான எண்ணிக்கைகளைக் கொடுங்க. வரவை வலப் புறமும் செலவை இடப் புறமும் எழுதி, ஒரு கோடிட்டு மீதியைக் கூட்டல் குறியுடன் கொடுங்க, அது திரு. ரோல்லிங்குக்கு அக்கறை ஏற் படுத்தும்.''

''அப்படியா!'' என்று ஜெனரல் சீறிவிட்டுத் தன் கண்களுக்கு மேல் தூசுபடிந்த தொப்பியை இழுத்து விட்டுக்கொண்டு மனவுறுதியுடன் வெளியே சென் றான்.

14

ஜெனரல் சென்றவுடனேயே வாயிலில் ஏவல் பைய னின் மறுப்பொலி கேட்டது. அதனைத் தொடர்ந்து அப்பையனைச் சைத்தான் வாரிக் கொண்டுபோகட் டும் என்ற விருப்பத்தை ஒரு குரல் வெளியிட்டது. செயலாளன் முன் ஸெமியோனவ் நின்றான். அவனது மேற்கோட்டுப் பொத்தான்கள் கழற்றப்பட்டிருந் தன. தொப்பியும் கைத்தடியும் அவன் கையிலிருந் தன. வாய்க் கோடியில் பாதிமென்ற சுருட்டு இருந் தது.

''நண்பரே, காலை வணக்கம்,'' என்று மேசை யின்மேல் தடியையும் தொப்பியையும் போட்டுவிட்டு அவசர அவசரமாகச் செயலாளனிடம் சொன்னான். ''மன்னரிடம் நேரே போக விடுவீங்களா?''

செயலாளனின் தங்க எழுதுகோல் காற்றில் உயர்ந்து நின்றது.

''ஆனால், திரு. ரோல்லிங்கிற்கு இன்று குறிப்பா ரொம்ப வேலையிருக்கு.''

''அபத்தமாப் பேசாதீங்க, நண்பரே. எனது காரில் இப்போதுதான் வார்ஸாவிலிருந்து வந்த ஒரு வன் காத்திருக்கிறான்... காரினின் விஷயமாக நாங்க வந்திருப்பதாக ரோல்லிங்கிடம் சொல்லுங்க.''

செயலாளனின் புருவங்கள் உயர்ந்தன. அவன் உடனே வால்நட் கதவுகளுக்குப் பின் மறைந்தான். கண நேரத்திற்குப்பின் கதவருகில் அவன் தலை தெரிந்தது. ''திரு. ஸெமியோனவ், தயவு செய்து

உள்ளே வாங்க,'' என்று மெல்லிய குசுகுசுப்பில் அழைத்தான். பந்து பிடித்த கைவடிவான கதவுப் பிடியைத் தானே அழுத்தினான்.

வேதியல் மன்னரை எதிரில் சந்தித்தபோது ஸெமியோனவ் குறிப்பாக எவ்விதப் பதைபதைப்பும் அடையவில்லை. ஏனெனில், முதலாவதாக, இயல்பாகவே அவன் துடுக்குக்காரன்; இரண்டாவதாக, இந்நேரத்தில் அவனுக்கு மன்னர் தேவைப்பட்டதை விட மன்னருக்குத்தான் அவன் அதிகமாகத் தேவைப் பட்டான்.

ரோல்லிங்கின் பசிய கண்கள் அவனைத் துருவித் துருவி நோக்கின. இதனால் சிறிதும் கலங்காமல் மேசையின் எதிர்ப்புறத்தில் அவனுக்கு எதிராக ஸெமியோனவ் அமர்ந்தான்.

''அப்புறம்?'' என்றான் ரோல்லிங்.

''நாங்கள் வேலையை முடித்து விட்டோம்.''

''அமைப்புப்படங்களா?''

''இதோ பாருங்க, திரு. ரோல்லிங், அங்கே சற்று சிக்கல் ஏற்பட்டிருக்கு...''

''அமைப்புப்படங்கள் எங்கே என்றேனே? அவற்றை நான் காணவில்லையே,'' என்று கடுமையாகக் கூறி, மேசையின் மேல் கையினால் இலேசாக அடித்தான் ரோல்லிங்.

''கேளுங்க, ரோல்லிங், அமைப்புப்படங்களுடன் அந்தக் கருவியையும் நான் கொண்டுவர வேண்டும் என்று நாம் ஒப்புக்கொண்டிருந்தோம்... நான் ஏராளமான வேலையைச் செய்திருக்கிறேன்... ஆட்களைப் பிடித்தேன்... பெத்ரோகிராடுக்கு அவர்களை அனுப்பினேன். அவர்கள் காரினின் ஆய்வுக்கூடத்திற்குள் நுழைந்தார்கள். அந்தக் கருவி வேலை செய்வதைக் கண்டார்கள்... அதன்பிறகு நடந்தது சைத்தானுக்குத்தானே தெரியும்... முதன்முதலாக அங்கே இரண்டு காரின்கள் இருந்தனர்.''

''தொடக்கத்திலிருந்தே இப்படி நடக்கும் என்று அநுமானித்தேன்,'' என்று ரோல்லிங் இகழ்ச்சியாகக் கூறினான்.

''அவர்களின் ஒருத்தனை அகற்றிட்டோம்.''

''அவனைக் கொன்னுட்டீங்களா?''

''நீங்க விரும்பினா, அது மாதிரி ஒன்னு. எப்படியோ அவன் செத்துப்போனான். அதுபற்றி நீங்க தொல்லைப்பட வேணாம்: அவன் ஒழித்துக்கட்டப் பட்டது பெத்ரோகிராடில். மேலும் அவன் ஒரு சோவியத் குடிமகன். ஆகையால் ஒன்னும் பொருட் படுத்தத் தேவையில்லை... ஆனா பிறகு அவனோட இரட்டையன் தோன்றினான்... அப்போது மிகப் பெரிய முயற்சி செய்தோம்...''

''ஒரே வார்த்தையில் சொன்னா,'' என்று அவனை ரோல்லிங் இடைமறித்தான், ''காரினோ அவனது இரட்டையனோ இன்னும் உயிரோடுதான் இருக்கிறான். நான் பணம் செலவு செய்தும் அமைப் புப்படங்களையோ அல்லது கருவியையோ நீங்க கொண்டுவரலே.''

''நீங்க விரும்பினா, ஸ்டாஸ் திக்லீன்ஸ்கியைக் கூப்பிடுறேன், வெளியில் காரில்தான் அவன் உட் கார்ந்திருக்கான், காரியத்தில் முழுதும் பங்குகொண் டவன் அவன். விபரம் முழுதும் அவன் சொல்ல முடியும்.''

''எந்தத் திக்லீன்ஸ்கியையும் நான் பார்க்க விரும் பலே, அமைப்புப்படங்களும் கருவியுமே எனக்குத் தேவை... வெறுங்கையுடன் இங்கே வந்த உங்க ளோட துணிவைக் கண்டு நான் ஆச்சரியப்படு றேன்...''

இந்தக் கடும் சொற்களுக்கு மாறாக, பாழாய்ப் போன ருஷ்ய அகதி ஸெமியோனவ் சாம்பலாகிச் சுவடின்றி மறைந்துவிடுவான் என்ற நம்பிக்கையுடன் ரோல்லிங் பேசுவதை நிறுத்திவிட்டுக் கொலைக்குறி தோன்றப் பார்த்ததற்கு மாறாக, ஸெமியோனவ் கலங்காமல் நன்கு சுவைத்திருந்த சுருட்டை வாயினுள் திணித்துக்கொண்டு சரளமாகத் தொடர்ந்து பேசி னான்:

''நீங்க திக்லீன்ஸ்கியைப் பார்க்க விரும்பாவிட் டா, தேவை இல்லை—எப்படியும் அதில் ஏதோ மகிழ்ச்சி இல்லை. ரோல்லிங், இன்னொரு விஷயம். எனக்குப் பணம் தேவை. இருபதாயிரம் ப்ராங்கு.

எனக்குச் செக் அல்லது ரொக்கமாத் தருவீங்களா?''

ரோல்லிங் பழுத்த அநுபவசாலியாக இருந்தும், மக்களைப் பற்றி அறிந்திருந்தும் இதற்கு முன் தன் வாழ்க்கையில் இதைப் போன்ற துடுக்குத்தனத்தை எதிர்கொண்டதே இல்லை. ஸெமியோனவின் தேமல் நிறைந்த முகத்தின் மீது மைப்புட்டியை வீசியெறியாமல் மிகவும் சிரமப்பட்டுத் தன் சீற்றத்தை அடக்கிக்கொண்ட அவனது தசைப்பற்றுள்ள மூக்கில் வியர்வைத் துளிகள் அரும்பின. (இந்தப் பயனற்ற உரையாடலின் மூலம் விலைமதிப்புள்ள எத்துணை விநாடிகள் நட்டமாயுள்ளன!) தன்னைத்தானே கட்டுப்படுத்திக்கொண்டு மணியடிக்கக் கையை நீட்டினான்.

அவன் கையசைவை ஸெமியோனவ் பின்தொடர்ந்து பார்த்தான்.

''உண்மைச் செய்தி என்னவெனில், அன்பார்ந்த திரு. ரோல்லிங், என்ஜினியர் காரின் தற்சமயம் பாரிசில் இருக்கிறான்,'' என்றான்.

15

ரோல்லிங் துள்ளினான்—அவனது மூக்குத்துளைகள் விரிந்தன, புருவங்களுக்கு இடையில் ஒரு குருதிக் குழாய் புடைத்தது. கதவுக்கு ஓடி அதைப் பூட்டினான். பிறகு ஸெமியோனவிற்கு மிக அருகில் வந்து, ஒரு கையால் நாற்காலியின் பின்பகுதியைப் பற்றி, மற்றொன்றினால் மேசையின் ஓரத்தைப் பிடித்துக் கொண்டான்.

ஸெமியோனவின் முகத்தின் அருகே குனிந்து கொண்டு, ''நீங்க பொய் சொல்றீங்க,'' என்றான்.

''உங்களிடத்தில் ஏன் நான் பொய் சொல்லணும்? இது தான் நடந்தது: அந்த இரட்டைப் பேர் வழி பெத்ரோகிராடு அஞ்சல் நிலையத்தில் தந்தி கொடுத்துக்கொண்டிருக்கும் போது ஸ்டாஸ் திக்லீன்ஸ்கி அவனைப் பார்த்து, அதில் உள்ள முகவரியைக் குறித்துக் கொண்டான்: பாட்டினியோல் சாலை, பாரிஸ்... நேற்று வார்ஸாவிலிருந்து திக்

லின்ஸ்கி வந்தான். நாங்க இருவரும் நேரே பாட்டி ஸியோல் சாலைக்குப் போனோம். அங்கே ஒரு காப்பிக் கடையில் திடீரென காரினைக் கண்டோம்—அது அவனது இரட்டையாகவும் இருக்கலாம், சைத்தானுக்கே வெளிச்சம்.''

ஸெமியோனவின் தேமல் படர்ந்த முகத்தை ரோல்லிங்கின் கண்கள் துருவிநோக்கின. பிறகு நிமிர்ந்து கொண்டான், அவனது சுவாசம் சிறிய பெருமூச்சுகளாக வெளிவந்தது.

''நாம் சோவியத் ருஷ்யாவில் இல்லை, ஆனா பாரிசில் இருக்கிறோம் என்பது உங்களுக்கு நல்லாத் தெரியும்,—இங்கே நீங்க ஏதேனும் குற்றம் செஞ்சா உங்களைத் தலைவெட்டி எந்திரத்திலிருந்து நான் தப்பிக்க விட மாட்டேன். ஆனா என்னை ஏமாற்ற முயற்சி செய்தால் உங்களை நசுக்கிவிடுவேன்.''

தன்னுடைய இடத்திற்குத் திரும்பிய அவன் வெறுப்பான பார்வையுடன் தனது காசோலை புத்தகத்தைத் திறந்தான். ''நான் உங்களுக்கு இருபதாயிரம் தர மாட்டேன், ஐயாயிரம் போதும்...'' என்று கூறிக்கொண்டே காசோலை எழுதி, மேசையின் குறுக்கே தனது நகத்தினால் ஸெமியோனவுக்குச் சுண்டியெறிந்தான். பிறகு ஒரு விநாடிக்கும் சற்றுக் குறைந்த நேரம் மட்டுமே தன் முழங்கைகளை மேசை மீது ஊன்றி முகத்தைக் கைகளுக்குள் அழுத்திக் கொண்டபடி இருந்தான்.

16

அழகி ஸோயா மான்ரோஸ் வேதியல் மன்னனின் ஆசைநாயகியானது தற்செயலானது அல்ல என்பது கூறாமலே விளங்கும். ஐந்து ஆண்டுக்கு முன் (1919 இல்) ஸோயா பெத்ரோகிராடிலிருந்து பாரிசுக்குத் தப்பி ஓடி வந்து, கலைஞர்கள் வட்டங்களில் மிகவும் அழகானவள் என்றும் புத்திசாலியான பெண் என்றும் பெரும் புகழ் பெற்றாள். திரைப்படங்களில் நடித்தாள், காபரே தியேட்டர்களில் நடனமாடவும், பாடவும் செய்தாள். போரின் போது சம்பாதித்த

பெரும் செல்வத்தைச் செலவிடுவதற்காகவே பாரி சில் வந்து குழுமிய அந்நிய நாட்டவர்களின் கொருத்த பணப்பைகளை அமைதியாகக் காலிசெய் தாள்.

ஸோயா ஒரு நவயுகப் பெண்ணாக இருந்தாள். அவளது மிகுதியான பொழுதுபோக்கு அட்டவ ணைக்கு மத்தியில் அரசியலிலும் விழிப்போடு இருக்க அவள் நேரத்தைத் தேடிக்கொண்டாள்.

புகழ்பெற்ற ரோல்லிங்கின் எதிர்பார்க்கப்பட்ட ஐரோப்பிய வருகை பற்றி அறிந்த போது அவள் நியூயார்க்கிற்கு உடனேயே புறப்பட்டுச் சென்றாள். அங்கே பெரிய செய்திப் பத்திரிகை ஒன்றின் நிருப னை, உடலாலும் உள்ளத்தாலும், விலைக்கு வாங்கி னாள்; இதன் விளைவாக ஐரோப்பாவினுடைய புத்திசாலியும், மிகவும் அழகிய பெண்ணுமாகிய அவ ளது நியூயார்க் வருகை பற்றி பத்திரிகைச் செய்தி கள் வந்தன. நவீன அறிவியலின் மிகவும் கால நடை முறைக்கேற்ற வேதியலில் ஆழ்ந்த அக்கறை கொண்ட பாலே நடிகை, வைரங்களைப் போன்ற இழிந்த ஆபரணத்தைக் கைவிட்டு விட்டு ஒளிரும் புகையாவி நிறைந்த சிறு குண்டுகளால் ஆன கழுத் தாரத்தை அணிந்துள்ளவள் எனச் செய்திகள் வந் தன. இந்தக் குண்டுகள் அமெரிக்கர்களின் கற்பனை யைக் கவர்ந்தன.

பிரான்ஸ் செல்ல ரோல்லிங் கப்பலில் இருந்த போது, கப்பலின் மேல்தளத்தில் இருந்த ஆடுகளத் தில் தனது பயிற்சியாளனுடன் ஸோயா மான்ரோஸ் டென்னிஸ் ஆடிக் கொண்டிருந்ததைக் கண்டான். அநேகமாக நாள்தோறும் செய்திகளில் தோன்றிய இந்தப் பெண்ணை புருவங்களைச் சுளித்து ரோல்லிங் உற்று நோக்கினான். தான் பார்த்ததை அவன் விரும்பினான். அதே நாளில் பாரில் மது அருந்திக் கொண்டிருந்த போது, தன்னுடைய ஆசை நாயகியாகி விடுமாறு அவன் ஸோயாவைக் கேட் டான்.

''உங்களுடைய அழைப்புக்காக நன்றி,'' என ஸோயா பதிலளித்தாள். ''நான் ஏற்றுக்கொள்

கிறேன். அதற்காக நீங்க ஏமாந்துவிட மாட்டீங்க. நீங்க நல்ல தேர்வைத்தான் செய்திருக்கீங்க. எல்லா வகையான பெண் முட்டாள்தனத்திலும் நான் பெரிதும் ஆர்வம் கொண்டவள் அன்று... நான் புரட்சியின் ஊடாக வாழ்ந்தவள் என்பதை மறந்து விடாதீங்க. எனக்கு டைபஸ் வந்திருந்தது, செஞ்சேனையுடன் சண்டையிட்டேன்... நான் பேராசைக்காரி. நீங்களோ பெரிய மனிதர். நான் உங்களை நம்புகிறேன். நீங்க நிச்சயமா வெல்வீங்க... நான் உங்களோட தனிப்பட்ட செயலாளராக விரும்புறேன்.''

தனது நாற்காலியில் ரோல்லிங் சுற்றிச் சுழன்றான், உச்ச மகிழ்ச்சியின் நிச்சயமான அடையாளமாக அசட்டுச் சிரிப்புச் சிரித்தான்.

''நீங்க வெறி கொண்டவர்,'' என்றான். ''பதவியிழந்த நான்கு அரசர்களும், ருஷ்யப் பேரரசின் சில பெரும் இளவரசர்களும் எனது தனிப்பட்ட செயலாளர்களாவதற்காகக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்... ஆனா, என்ன சனியன், நான் உங்களை விரும்புறேன்...''

தனது ஆசைநாயகியைத் தேர்ந்தெடுத்ததில் ரோல்லிங் எந்தத் தவறும் செய்து விடவில்லை.

வேதியல் தொழிற்சாலைகளை ஒன்றுகூட்டி இணைப்பதற்குரிய பேரப் பேச்சுக்களை பாரிசில் அவன் தொடங்கினான். பழைய உலகத்துத் தொழில்களில் பெரிய பண முதலீடுகளை அமெரிக்கா செய்து கொண்டிருந்தது. ரோல்லிங்கின் முகவர்கள் கூரிய நோக்குடன் பங்குகளை வாங்கினார்கள். பாரிசில் அவன் 'அமெரிக்க எருமை' என்று அறிமுகமாகி இருந்தான். ஐரோப்பியத் தொழில் அதிபர்களுக்கு நடுவே உண்மையிலேயே அவன் பேராற்றல் மிக்கவனாய் இருந்தான். எதையும் தகர்த்தெறிந்து கொண்டு நேராக முன்னேறினான். அவன் நோக்கு வட்டம் மிகக் குறுகியதாக இருந்தது: அவனுக்கு ஒரே ஒரு குறிக்கோள்தான்—உலகிலுள்ள வேதியல் தொழில் அத்தனையும் தன் கைகளில் வர வேண்டும் என்பதே.

அவனது இயல்பையும், போராட்ட முறைகளையும் மிக விரைவில் ஸோயா அறிந்துகொண்டாள். அவனது வலிமையையும், பலவீனங்களையும் கண்டு கொண்டாள். அரசியலறிவு அவனுக்கு மிகக் குறைவு. புரட்சியைப் பற்றியும், போல்ஷெவிக்குகளைப் பற்றியும் அடிக்கடி முட்டாள்தனமாகப் பேசினான். தேவையான மற்றும் பயன்படக்கூடிய ஆட்களை அவன் அறியாமலேயே மெல்லமெல்ல அவனைச் சுற்றிச் சுழல வைத்தாள். பத்திரிகை உலகத்தோடு அவனுக்குத் தொடர்பு ஏற்படுத்தினாள், அவர்களது பேச்சுக்கு அவளே வழிகாட்டினாள். அவனிடம் எந்த அக்கறையும் காட்டாத சிறு தினசரிப் பத்திரிகையாளர்களுக்குப் பணம் கொடுத்து அவர்களையும் தன் பக்கம் சேர்த்துக் கொண்டாள். ஆனால் பெரிய பத்திரிகையாளர்களைவிட இவர்கள் நிறைய உதவினர். ஏனெனில் கொசுக்களைப் போன்ற இவர்கள்தான் வாழ்க்கையின் மூலை முடுக்குகளிலெல்லாம் ஊடுருவிச் சென்றனர்.

ஒரு முறை வலதுசாரிப் பிரதிநிதி ஒருவனை நாடாளுமன்றத்தில் 'வேதியல் முறையில் பிரான்சின் தற்காப்பு நலன்களுக்கு அமெரிக்க வேதியல் தொழிலுடன் நெருங்கிய தொடர்பு கொள்வது அவசியம்' என்று சிறு உரை நிகழ்த்த அவள் 'ஏற்பாடு' செய்த போது, முதன்முறையாக ரோல்லிங் ஆண் நண்பனுடன் கைகுலுக்குவது போன்று ஸோயாவுடன் கைகுலுக்கினான்.

''ஓ.கே., நான் உங்களை எனது செயலாளராக எடுத்துக்கொள்கிறேன். வாரம் ஒன்றுக்கு ஊதியம் இருபத்தேழு டாலர்,'' என்றான்.

ஸோயா மிகவும் பயன்படுவாள் என்று ரோல்லிங் நம்பினான். தனது தொழில்முறை ரகசியங்கள் எவற்றையும் அவளிடமிருந்து மறைக்கவில்லை.

17

சில ருஷ்ய அகதிகளுடன் ஸோயா மான்ரோஸ் தொடர்பு வைத்துக்கொண்டிருந்தாள். அவர்களில்

ஒருவனான ஸெமியோனவ் அவளிடமிருந்து நிலையாக ஊதியம் பெற்றுவந்தான். போர்க் காலத்தில் பட்டம் பெற்ற வேதியல் என்ஜினியர் அவன். ஜார் படையில் ஜூனியர் லெப்டினன்ட் ஆக அமர்த்தப் பெற்றான். பிறகு வெண்படையில் ஓர் அதிகாரியானான். நாட்டை விட்டு வெளியேறிய பின் எல்லா வகையான சில்லறை வேலைகளையும் செய்தான்.

ஸோயாவின் ஊழியர்களில் அவன் எதிர்வேவு நடவடிக்கைகளை நடத்தி வந்தான். அவளுக்கு சோவியத் பத்திரிகைகளையும் வெளியீடுகளையும் கொண்டுவந்து தருவான். அன்றாடச் செய்திகளையும் ஊர்வம்புகளையும் வதந்திகளையும் அவளுக்குத் தெரிவிப்பான். அவன் உழைப்பாளி, துரிதமான சமயோசித அறிவுடையவன், பூச்சி பிடிப்பவனன்று.

ஒரு நாள் ரேவெல்* பத்திரிகையிலிருந்து ஒரு துணுக்கை ரோல்லிங்கிடமே ஸோயா காட்டினாள். பெத்ரோகிராடில் செய்யப்பட்டு வந்த மிகக் கொடிய அழிவுக் கருவியொன்றைப் பற்றிய செய்தி அதில் இருந்தது. ரோல்லிங் முறுவலித்தான்:

''முட்டாள்தனம், அது யாரையும் பயமுறுத்தாது... அளவுக்கு மீறிய கற்பனை உங்களுக்கு இருக்கிறது. போல்ஷெவிக்குகள் எதையும் கட்டியமைக்கும் திறமையுள்ளவர்கள் அல்ல.''

பிறகு ஸோயா ஸெமியோனவைப் பகலுணவுக்கு அழைத்தாள். அந்தப் பத்திரிகைச் செய்தியோடு சம்பந்தப்பட்ட ஒரு விசித்திரமான கதையை அவன் அவர்களுக்குச் சொன்னான்:

''...1919இல், பெத்ரோகிராடிலிருந்து நான் வெளியேறுவதற்குச் சிறிது முன்பு, தெருவில் ஒரு நண்பனைச் சந்திச்சேன். அவன் பெயர் ஸ்டாஸ் திக்லீன்ஸ்கி, போலந்துக்காரன். தொழில்நுட்பக் கல்லூரியில் நாங்க ஒன்னாப் படிச்சுப் பட்டம் பெற்றவர்கள். அவன் முதுகில் ஒரு சாக்கு இருந்தது, கால்களில் சமக்காளத் துண்டுகளால் கட்டுப் போட்டிருந்

---

* ரேவெல்—எஸ்தோனியாவின் தலைநகர் தாலினின் பழைய பெயர். (ப-ர்.)

தான், அவனுடைய கோட்டு முதுகில் சுண்ணாம்புக் கட்டியால் எண்கள் எழுதப்பட்டிருந்தன—அவன் 'க்யூ' வரிசைகளில் நின்று வந்திருக்கிறான் என்பதை அவை காட்டின. வேறு வார்த்தைகளில் சொன்னால், எல்லாம் இருக்கவேண்டியபடி இருந்தது. ஆனா அவன் மிகக் களிப்புடன் இருந்தான். என் பால் கண் சிமிட்டினான். என்ன விஷயமோன்னு நான் ஆச்சரியப்பட்டேன். 'பெரும் பணம் கிடைக்கிற காரியத்தைக் கண்டுபிடிச்சிருக்கேன்... ஓ-லா-லா!—மில்லியன்கள்,' என்றான். 'இல்லை, மில்லியன்கள் அல்ல, பத்துகோடி, தங்க ரூபிள்களில், நிச்சயமாக!' இயல்பாகவே, நான் அவனைப் போக விடாது, அதைப்பற்றி என்னிடம் சொல்லும்படி வற்புறுத்தினேன். ஆனா அவன் சிரிப்போடு நின்றுவிட்டான். அத்தோடு நாங்க பிரிஞ்சு போயிட்டோம். இரண்டு வாரங்களுக்குப் பிறகு நான் திக்லீன்ஸ்கி வாழ்ந்து கொண்டிருந்த வஸீலியெவ்ஸ்கி தீவு வழியாகச் சென்றேன். மில்லியன்களைப் பற்றி அவன் பேசியது நினைவுக்கு வந்துச்சு. இந்த மில்லியனரிடத்தில் அரைராத்தல் சர்க்கரை கேட்பது நல்லது என்று கருதினேன். ஆகவே அவன் வீட்டிற்குள் நுழைந்தேன். அவனோ படுக்கையில் மரண வேதனையில் கிடந்தான். அவன் கையிலும், மார்பிலும் கட்டுக்கள் போடப்பட்டிருந்தன.

'''யார் உன்னை இப்படிச் செய்தது?' எனக் கேட்டேன்.

'''சற்றுப்பொறு,' என்றான், 'புனித கன்னிமாதாவின் துணையினால் நான் நலமடைவேன்—அவனைக் கொல்லுவேன்!'

'''யாரை?'

'''காரினை.'

''அவனுடைய பழைய நண்பன் என்ஜினியர் காரின் அசாதாரணமான அழிவுச் சக்தியுள்ள கருவிக்குத் தேவையான கரிவத்திகளை அவன் செய்து தர வேண்டும் என்று யோசனை சொல்லியிருந்தான் என்பதைத் திக்லீன்ஸ்கி இங்குமங்குமாக அரைகுறையாகச் சொன்னான். ஏன்னா முழு விவரத்தை

யும் நான் அறிந்துகொள்ள அவன் விரும்பலே. திக் லீன்ஸ்கிக்கு வேலையில் அக்கறை ஏற்படுத்துறதுக் காக அவனுக்கு இலாபத்தில் பங்கு தருவதாக காரின் சொன்னானாம். சோதனைகள் முடிந்தவுடன், தயா ரான கருவியை எடுத்துக்கொண்டு காரின் ஸ்விட னுக்கு ஓடிப்போய் அங்கு அதற்கு உரிமைப் பதிவு செய்து, தானே கருவியைப் பயன்படுத்துவது என்று கருதினானாம்.

''திக்லீன்ஸ்கி சுறுசுறுப்புடன் கரிக்கோபுரவத்தி கள் செய்வதில் முனைந்தான். மிகக் குறைந்த அள வுக்குள் அதிகபட்சமான வெப்ப சக்தியைப் பெறு வதுதான் பிரச்சினை. கருவியின் அமைப்புக் கோட் பாட்டை காரின் இரகசியமாகவே வைத்துக்கொண் டானாம். அது மிகவும் அசாதாரண முறையில் எளி மையானதென்றும், எந்தச் சாடையும் இரகசியத் தை வெளிப்படுத்திவிடும் என்றும் சொன்னானாம். திக்லீன்ஸ்கி கரிக்கோபுரவத்திகளைக் காரினுக்குக் கொடுத்துக் கொண்டுவந்தானாம், ஆனா கருவியைக் காட்டுமாறு காரினைத் தூண்ட முடியவில்லையாம்.

''இத்தகைய அவநம்பிக்கை திக்லீன்ஸ்கிக்குச் சீற்றமூட்டியது. அடிக்கடி அவர்கள் சண்டையிட்ட னர். ஒரு நாள் காரின் சோதனை நடத்தும் இடத் திற்கு அவனை திக்லீன்ஸ்கி பின்தொடர்ந்து சென் றான். அது பெத்ரோகிராடுப் புறத்தில் ஏதோ ஆளர வமற்ற தெருவில் இருந்த பாதிப் பாழடைந்த வீடு. திக்லீன்ஸ்கி காரினுக்குப் பின்னால் வீட்டிற்குள் சென்றான். மாடிப்படிகளின் நெடு நேரம் மேலும் கீழும் அலைந்தான். உடைந்த சன்னல்களுடைய வெற்றறைகளில் எல்லாம் சுற்றினான். இறுதியாக நீராவி வெளிப்படுவது போன்று 'ஹிஸ்' என்ற ஓசை நிலவறையிலிருந்து வருவதை அவன் கேட்டான். அதே நேரத்தில் தனக்கு நன்கு பழக்கமான கோபுர வத்தி எரிகின்ற நெடியையும் கவனித்தான்.

''மிகுந்த எச்சரிக்கையோட நிலவறைக்குப் போனான். ஆனா சில உடைந்த செங்கல்கள் மீது இடறி, சத்தத்தோடு விழுந்தான். முப்பது தாவடித் தொலைவில் ஒரு வளைவுப் பாதையினூடே என்

ணெய் விளக்கின் ஒளியில் காரினுடைய அலங்கோல மான முகத்தைப் பார்த்தான். 'யார் அங்கே? யார் அங்கே?' என்று காரின் பயங்கரமாகக் கூவினான், அதே நேரத்தில் பின்னல் ஊசிக்கு மேல் கனமில்லாத கண்ணைப் பறிக்கும் ஒளிக்கதிர் ஒன்று சுவரின் குறுக்கே பாய்ந்து, திக்லீன்ஸ்கியின் மார்பிலும் கையிலும் ஊடுருவிச் சென்றது.

''விடியற்காலந்தான் திக்லீன்ஸ்கிக்கு உணர்வு வந்து, நெடுநேரம் உதவிக்காகக் கூப்பிட்டுப் பார்த்தான். பிறகு இரத்தம் சொட்டச் சொட்ட நிலவறையை விட்டு மண்டியிட்டுத் தவழ்ந்தபடி வெளியே வந்தான். யாரோ சில வழிப்போக்கர்கள் அவனை ஒரு கைவண்டியில் தூக்கிப்போட்டு வீடு கொண்டு வந்து சேர்த்தனர். காயங்கள் ஆறும் சமயம் ஆன பொழுது போலந்துடன் போர் வந்துவிட்டது. ஆகவே அவன் பெத்ரோகிராடிலிருந்து வெளியேற வேண்டியதாயிற்று.''

இந்தக் கதை ஸோயா மான்ரோஸின் உள்ளத்தில் பேருணர்ச்சியுடன் பதிந்தது. ரோல்லிங் நம்பிக்கையின்மை தோன்ற முறுவலித்தான்: மூச்சுத் திணற வைக்கும் புகையாவிகளின் ஆற்றலில்தான் அவனுக்கு நம்பிக்கை இருந்தது. போர்க்கப்பல்கள், கோட்டைகள், பீரங்கிகள், பெரிய படைகள் ஆகிய இவைகளெல்லாம் அவன் கருத்துப்படி காட்டுமிராண்டித்தனத்தின் மீதமிச்சங்கள். விமானங்களும் வேதியல் பொருள்களும் மட்டுமே ஆற்றல்வாய்ந்த போர்க் கருவிகள். பெத்ரோகிராடில் செய்யப் பெறும் ஏதோ விசித்திரமான கருவி என்பதெல்லாம்— முழு முட்டாள்தனம்!

ஆனால் ஸோயாவின் மனம் அமைதியுறவில்லை. காரினைக் குறித்துத் திட்டவட்டமான விபரங்களைத் திரட்டி வருவதற்காக உடனே ஸெமியோனவைப் பின்லாந்திற்கு அனுப்பினாள். ஸெமியோனவால் அமர்த்தப்பட்ட ஒரு வெண்படை அதிகாரி பனிச் சறுக்குக் கட்டைகளில் ருஷ்ய எல்லையைத் தாண்டி பெத்ரோகிராடில் காரினைக் கண்டுபிடித்தான். அவனோடு பேசி, இணைந்து வேலை செய்வது பற்றி

யோசனையும் முன்வைத்தான். காரின் மிக முன் னெச்சரிக்கையுடன் நடந்துகொண்டான். வெளிநாட் டவர் தன்னைக் கண்காணித்து வருகிறார்கள் என் பதை அவன் தெரிந்திருந்தான் போலும். தனது கருவியைப் பொருத்தவரை, அது யாரிடத்திலிருக் கிறதோ அவன் அற்புதமான அதிகாரமுடையவனாக இருப்பான் என்று அவன் சொன்னான். ஒரு மாதிரிக் கருவியை வைத்துச் சோதனைகள் நடத்தியது மிகச் சிறந்த பலன் தந்தது. கோபுரவத்திகள் பற்றிய வேலை பூர்த்தியடைவதற்காக மட்டுமே அவன் காத்திருக்கிறான்.

18

இளவேனிற் காலத் தொடக்கத்தில் மழை பெய்து கொண்டிருந்த ஒரு ஞாயிற்றுக்கிழமை மாலையில், சன்னல்களின் வழித்தெரியும் வீட்டுவிளக்குகளும் தெருவிளக்குகளும் பாரிஸ் நகர நடைபாதைத் தளங் களில் பிரதிபலித்தன.

நனைந்த கார்கள், அகாதமான வெளிச்சத்திற்கு மேலாக, கறுப்பு வாய்க்கால்கள் வழியாக ஓடிக் கொண்டிருப்பது போலக் காணப்பட்டன; ஈரக் குடைகள் விரைந்தன, ஒன்றோடொன்று மோதிக் கொண்டன, சுழன்றன. மழையிருட்டுடன் சாலைக ளின் மக்கள் நாற்றமும், காய்கறிக் கடைகளின் நெடி யும், பெட்ரோல், நறுமணப்பொருள்கள் ஆகிய வற்றின் மணமும் செறிந்திருந்தன.

கற்பலகைக் கூரைகளின் மீதும், முன்மாடங் களின் கம்பிப் பிடிகளின் மீதும், இன்னும் கீழேயுள்ள காப்பிக்கடைகளின் மேல் போடப்பட்டிருந்த கோ டிட்ட பிரமாண்டமான துணிப்பந்தர்களின் மீதும் மழை நன்கு அடித்துப்பெய்தது. எல்லாவகையான களியாட்டங்களின் ஒளி விளம்பரங்கள் அணைந்தும் எரிந்தும் சுழன்றும் மின்னியும் மங்கலில் தேய்ந்து தோன்றின.

கடைகளிலும் அலுவலகங்களிலும் பணியாற்றும் சாமானிய ஆடவரும், பெண்களும் அவரவருக்கு

இயன்ற விதத்தில் இந்த ஞாயிற்றுக்கிழமையில் பொழுதைக் கழித்தார்கள். வர்த்தகப் புள்ளிகளாகிய பெரிய மனிதர்கள் வீட்டினுள் கணப்புக்கருகில் அமர்ந்திருந்தனர். ஞாயிற்றுக்கிழமை சாமானிய மக்களுக்குரியது, அவர்கள் இன்புற்றுத்திளைப்பதற்காக ஒதுக்கப்பட்ட நாள்.

ஒரு பரந்த சோபாவில் பல திண்டுகளுக்கு இடையே ஸோயா கால்களை மடக்கி அமர்ந்திருந்தாள். புகைபிடித்துக்கொண்டும், கணப்பின் நெருப்பை விழித்து நோக்கிக்கொண்டும் இருந்தாள். ரோல்லிங் மாலையுடையணிந்து பெரிய சாய்வு நாற்காலி ஒன்றில் அமர்ந்து ஒரு சிறு கால்மணையில் கால்களை வைத்துக் கொண்டிருந்தான். ஸோயாவைப் போலவே அவனும் புகைத்துக்கொண்டு, நிலக்கரி எரிவதை ஆழ்ந்து நோக்கிக் கொண்டிருந்தான்.

கணப்பு வெளிச்சம் அந்த அகிலத்து நாயகனின் சதைப்பற்றுள்ள மூக்கு, தாடியுள்ள கன்னங்கள், பாதி மூடிய கண்ணிமைகள், சற்று அழுன்ற கண்கள் இவற்றிற்குத் தீயின் செவ்வொளியைத் தந்தது. வாரத்தில் ஒரு முறை தனது மூளைக்கும், நரம்புகளுக்கும் ஒய்வு தரும் இன்றியமையாத நல்ல அவசியத்துக்கு அவன் தன்னை ஆளாக்கிக் கொண்டிருந்தான்.

ஸோயா தன்னுடைய அழகிய திறந்த கரங்களை முன்னே நீட்டினாள்.

''ரோல்லிங், நாம் மதிய உணவு சாப்பிட்டு இரண்டு மணி நேரமாகிறது,'' என்றாள்.

''ஆம், ஜீரணிக்கிற வேலையும் முடிந்திருக்கும் என்று எனக்கும் தோனுது,'' என்று அவன் பதிலளித்தான்.

அவளது தெளிவான, ஏறக்குறையக் கனவுநிலையிலுற்ற கண்கள் அவன் முகத்தின் மீது நோட்டமிட்டன. மெதுவாகவும் அழுத்தமான குரலிலும் அவனது கிறிஸ்துவப் பெயரால் அவனை அழைத்தாள். அவன் தனது கதகதப்பான சாய்வு நாற்காலியிலிருந்து சிறிதும் அசையாது பதிலளித்தான்:

''நல்லது, நீங்க சொல்றதைக் கேட்கிறேன், பாப்பா.''

பேசுவதற்கு அநுமதி தரப்பட்டுவிட்டது. ஸோயா சோபாவின் ஓரத்திற்கு நகர்ந்து முழங்காலைக் கட்டிக்கொண்டாள்.

''ரோல்லிங், சொல்லுங்க, வேதியல் தொழிற் சாலைகளில் பெரும் வெடிவிபத்து ஏற்பட இடமுண்டா?''

''உண்டு. நிலக்கரியிலிருந்து பிரித்தெடுக்கப்படுகிற நான்காவது பொருளாகிய ட்ராடில், மிகச் சக்திவாய்ந்த வெடிப்பொருளாகும். நிலக்கரியின் எட்டாவது பிரிவாகிய பிக்ரிக் அமிலம் இரும்புறைகளைத் துளைக்கும் கடற்படைப் பீரங்கிக் குண்டுகளில் நிரப்பப்படுகிறது. இன்னும் அதிகச் சக்தி வாய்ந்த வெடி மருந்தும் உண்டு. அதுதான் டெட்ரில்.''

''ரோல்லிங், டெட்ரில் என்பது என்ன?''

''அதே நிலக்கரிதான். நைட்ரிக் அமிலத்தை HNO_3) பென்ஸீனுடன் (C_6H_6) கலந்து 80° சென்டிகிரேடுக்குச் சூடேற்றினால் நைட்ரோபென்ஸீன் கிடைக்கும். அதற்குச் சூத்திரம் $C_6H_5NO_2$. இருபங்கு ஆக்ஸிஜெனுக்கு O_2 ஈடாக இருபங்கு ஹைட்ரஜனை H_2 அமைத்தால், அதாவது நைட்ரோபென்ஸீனுடன் இரும்புப் பொடியை 80° சென்டிகிரேடு சூட்டில் மெதுவாகக் கலக்கத் தொடங்கி, அத்துடன் சிறிதளவு ஹைட்ரோக்குளோரிக் அமிலத்தையும் கலந்தால், அனிலைன் ($C_6H_5NH_2$) கிடைக்கும். அனிலைன் மரச் சாராயத்துடன் ஐம்பது மடங்கு வாயு மண்டல அழுத்தத்தில் கலக்கப்பட்டால் டிமெத்தில்-அனிலைன் கிடைக்கும். பிறகு தரையில் பெரிய தொளை செய்து, அதைச் சுற்றி மண்ணினால் மதில் கட்டி, நடுவில் கொட்டில் அமைத்து அவ்விடத்தில் டிமெத்தில்-அனிலைனுடன் நைட்ரிக் அமிலத்தை நாம் கலப்போம். எதிர்விளைவின் போது தொலை நோக்கி வழியாக வெப்பமானியைக் கூர்ந்து நோக்குவோம். நைட்ரிக் அமிலம் டிமெத்தில்-அனிலைனுடன் கலந்து இயங்குவதன் விளைவால் நமக்கு டெட்ரில்

கிடைக்கும். அந்த டெட்ரில் ஒரு சைத்தானேதான். புரியாத சில காரணங்களால் சில வேளைகளில் இது எதிர்விளைவின் போது வெடித்து மிகப் பெரிய தொழிற்கட்டடங்களைத் தவிடுபொடி ஆக்கும். துரதிர்ஷ்டவசமாக நாம் இந்தப் பொருளைக் கையாள வேண்டியிருக்கிறது: அதில் பாஸ்ஜீன் பூசப் பெறும் போது செந்நீலச் சாயப்பொருளைத் தருகிறது. இந்தப் பொருள் எனக்கு நிறையப் பணத்தைக் கொண்டுவந்தது. நீங்க வேடிக்கையாக கேள்வி கேட்டீங்க... உம்ம்... வேதியலோட உங்களுக்கு நல்ல அறிமுகம் இருக்கும் என்று நினைச்சேன்... பாருங்க, உங்கு தலைவலியைப் போக்குவதற்கான பிரமிடான் மாத்திரையை நிலக்கரிக் கீலிலிருந்து செய்வதற்காகப் பல கட்டங்களைத் தாண்ட வேண்டும்... நிலக்கரியிலிருந்து பிரமிடான் அல்லது ஒரு புட்டி நறுமணப்பொருள் அல்லது சாதாரணப் புகைப்பட வேதியல் பொருள் ஆகியவற்றுள் ஒன்றாக மாறும் வழிமுறையில் ட்ராடிலும் பிக்ரிக் அமிலமும் போன்ற பேய்த்தன்மையுடைய பொருள்கள் கிடைக்கின்றன.வியத்தகு சிறு பொருள்களாகிய ப்ராம்பென்ஸில்ஸியானைட், குளோர்ப் பிக்ரைன், டிபெனில்குளோரர்ஸீன் முதலியவையும் தோன்றும். அதாவது, போரில் பயன்படுத்துகிற அதே புகையாவிகளை விட்டால், ஆட்கள் தும்மு வாங்க, அழுவாங்க, தங்களோட புகையாவி முகமூடிகளைக் கிழிச்சு எறிவாங்க, திணறுவாங்க, ரத்தமா வாந்தியெடுப்பாங்க, உடல் முழுக்கப் புண்ணாகி, உயிரோட அழுகிப் போவாங்க...''

இந்த மழை ஞாயிற்றுக்கிழமை மாலையில் ரோல்லிங்குக்குச் சலிப்பாக இருக்கவே, வேதியலின் அருமையான வருங்காலத்தைப் பற்றிய சிந்தனையில் மகிழ்வுடன் மூழ்கினான்.

''நான் நம்புறேன் (அவன் பாதிபுகைத்த சுருட்டைத் தன் மூக்குக்கு அருகில் ஆட்டினான்), பெருங்கடவுள் விண்ணையும், மண்ணையும், அவற்றுள் உள்ள எல்லா உயிரிகளையும் நிலக்கரிக் கீலையும், சமையல் உப்பையுமே கொண்டு படைத்திருக்கிறார்

என்று நம்புகிறேன். சரியா இம்மாதிரியே விவிலியத்தில் சொல்லப்படலே என்றாலும் அப்படித்தான் அநுமானிக்கணும். எவன் நிலக்கரிக்கும் உப்புக்கும் சொந்தக்காரனோ, அவனே உலகத்தோட எசமானன். உலகத்திலிருந்த வேதியல் தொழிற்சாலைகளிலே பத்தில் ஒன்பது ஜெர்மனிக்குச் சொந்தமா இருந்ததனால் தான் 1914ஆம் ஆண்டில் ஜெர்மானியர்கள் போரைத் தொடங்கினாங்க. நிலக்கரியோட, உப்போட இரகசியத்தை ஜெர்மானியர்கள் புரிஞ்சுக்கிட்டாங்க: அன்றைக்கு அவுங்கதான் மிகுந்த அறிவொளி பெற்ற நாட்டினர். இருந்தாலும், அமெரிக்கர்களாகிய நாங்க, ஒன்பது மாதங்களில் எஜ்வுட் ஆயுதக்கிடங்கைக்* கட்டிருடுவோம் என்று அவர்கள் எதிர்பார்க்கலே. ஜெர்மானியர் எங்க கண்களைத் திறந்துவிட்டாங்க. எங்க பணத்தை எங்கே முதலீடு செய்யணும் என்பதை உணர்ந்தோம். இப்ப நாங்கதான் உலகத்திலே ஆதிக்கம் செலுத்தப்போறோம், அவர்கள் அல்ல. ஏன்னா போருக்குப் பின்னாலே எங்களிடத்தில்தான் பணமும் வேதியல் பொருள்களும் இருக்கு. ஜெர்மனியையும், உழைக்கத் தெரிந்த மற்ற நாடுகளையும் (உழைக்கத் தெரியாதவுங்க இயற்கையாவே சாவாங்க, அதற்கு நாங்களே அவர்களுக்கு உதவுவோம்) ஒரு பிரமாண்டத் தொழிற்சாலையா மாற்றுவோம்... சாக்லெட் பெட்டி மேலிருக்கும் நாடாவைப் போல அமெரிக்கக் கொடி உலகை பூமத்திய ரேகையைச் சுற்றியும், ஒரு துருவத்திலிருந்து மறு துருவத்தைச் சுற்றியும் வளைக்கும்...''

''ரோல்லிங், நீங்க தொல்லைக்கு வழி வகுக்குறீங்க,'' என்று ஸோயா அவனை இடைமறித்தாள். "அவர்கள் எல்லாரும் கம்யூனிஸ்டா மாறிடுவாங்க... நீங்க இனிமேல் எப்பவுமே எங்களுக்குத் தேவையில்லேன்னு அவர்கள் சொல்கிற நாள் வரும், அவர்

---

* எஜ்வுட் ஆயுதக்கிடங்கு—அமெரிக்காவில் எஜ்வுட் அருகே 1917-1918இல் கட்டப்பட்டது. அந்நேரத்தில் அது அமெரிக்காவின் மிகப்பெரும் போர் வேதியல் தொழில் மையமாக இருந்தது. (ப-ர்.)

கள் தங்களுக்காக உழைக்கவே விரும்புவாங்க... ஓ, அந்தப் பயங்கரத்தை நான் ஏற்கெனவே அநுபவிச் சிருக்கேன்... உங்களோட கோடிக்கணக்கான பணத் தை உங்ககிட்டே திருப்பித் தர மாட்டாங்க...''

''அப்படியானா, பாப்பா, ஐரோப்பாவைக் கடுகுப் புகையாவியில் மூழ்கடிச்சிருவேன்.''

''ரோல்லிங், அதற்குள் காலங் கடந்துபோயிரும்!'' ஸோயா தன் முழங்காலை இறுக்கிக் கொண்டு முன்புறம் குனிந்தாள். ''ரோல்லிங், என்னை நம்புங்க, நான் உங்களுக்கு எப்பவுமே தப்பான யோசனை சொன்னதில்லே... வேதியல் தொழிற் சாலைகளில் வெடிவிபத்து அபாயம் உண்டா என்று தானே உங்களைக் கேட்டேன். தொழிலாளிங்க, புரட்சியாளுங்க, கம்யூனிஸ்டுங்க கைகளில், நம்ம விரோதிகளோட கைகளில், அதிபயங்கரச் சக்தியுடைய ஓர் ஆயுதம் இருக்கும்... வேதியல் தொழிற் சாலைகளையும், வெடிமருந்தும் கிடங்குகளையும் வெடிவச்சுத் தகர்க்கவும், படைவிமான அணிகளுக் குத் தீ வைக்கவும், புகையாவிச் சேமிப்புக்களை அழிக்கவும், வெடிக்கவோ, எரியவோ கூடிய எதனையும் வெகுத்தொலைவில் இருந்தே தொழிலாளிங்க அழிக்கக் கூடும்.''

ரோல்லிங் கால்மணையை விட்டுத் தன் கால்களை எடுத்தான், அவனது சிவந்த கண்ணிமைகள் துடித்தன, சற்று நேரம் அந்த இளம் மங்கையைக் கூர்ந்துப் பார்த்தான்.

''நான் புரிந்துகொண்ட வரையில் மறுபடியும் நீங்க குறிப்பிடுறது...''

''ஆம், ரோல்லிங், ஆம், காரினின் கருவிதான்... அதைப் பற்றிக் கூறிய எல்லாம் உங்க கவனத்திலிருந்து நழுவிவிட்டன... ஆனா அது எவ்வளவு கடுமையானது என்பதை நான் உணர்றேன்... ஸெமியோனவ் ருஷ்யாவிலிருந்து பெற்ற ஒரு விந்தையான பொருளைக் கொண்டுவந்துள்ளான்...''

ஸோயா மணியடித்தாள். பணியாள் உள்ளே வந்தான். அவளது உத்தரவுப்படி பைன் மரத்தால் செய்த சிறு பெட்டியைக் கொண்டுவந்தான். அத

னுள் அரை அங்குலக் கனமுள்ள ஓர் எஃகுத் துண்டு கிடந்தது. ஸோயா அதைப் பெட்டியிலிருந்து வெளியே எடுத்து நெருப்பு ஒளியில் பிடித்தாள். கீறலும், சுருட்டலும், பொத்தலும் ஆக, அந்த எஃகின் முழுப் பருமனிலும் ஏதோ மிக மெல்லிய கருவியினால் ஊடுருவி அறுக்கப்பட்டிருந்தது. அதன் குறுக்கே அரிய பேனாவினால் எழுதப்பட்டது போல 'வலிமைச் சோதனை... சோதனை... காரின்' என்ற எழுத்துக்கள் தெரிந்தன. சில எழுத்துக்களின் உட்பகுதி அமைந்திருந்த உலோகத் துண்டுகள் வெளிச் சிதறி விட்டிருந்தன. அந்த உலோகத் துண்டை ரோல்லிங் நீண்ட நேரம் நோக்கினான்.

''பேனாவைச் சோதனை செய்ததுபோலத் தோனுது,'' என மெதுவாகச் சொன்னான், ''மிருதுவான பிசைந்த மாவில் ஊசியால் எழுதப்பட்டிருக்கணும்.''

''காரினுடைய கருவியின் மாதிரியைச் சோதனை செய்த போது முப்பது தாவடித் தொலைவிலிருந்து இது செய்யப்பட்டது,'' என்றாள் ஸோயா. ''இரண்டு மைல் நீள அளவுக்கு அப்பாலிருந்து நவீனப் போர்க் கப்பலை சுலபமா வெட்டிச் செல்லக்கூடிய ஒரு கருவியைச் செய்ய காரின் எதிர்பார்க்கிறான் என்று ஸெமியோனவ் உறுதியாச் சொல்றான்... என்னை மன்னிச்சிருங்க, ரோல்லிங், ஆனா இந்தப் பயங்கரக் கருவியை நீங்க கைப்பத்தணும் என்று நான் வற்புறுத்துறேன்.''

அமெரிக்காவில் வாழ்க்கைப் பள்ளியில் ரோல்லிங் தேர்ச்சி பெற்று வெளியேறியது பயனற்றுப் போவதற்காக அன்று. அவனது ஒவ்வோர் உயிரணுவும் போராட்டத்திற்குப் பயிற்சி பெற்றிருந்தது.

உடலின் தசைநார்கள் எல்லாவற்றிற்கும் சமமாக வேலைகொடுத்து அவற்றில் முடிந்தவரை அதிக இறுக்கத்தை பயிற்சி உண்டாக்குகிறது என்பதை எல்லாரும் அறிவர். ரோல்லிங் போராட்டத்தைத் தொடங்கிய போதும் இவ்வாறே நிகழ்ந்தது: முதலில் அவனுடைய கற்பனை வேலை செய்யத் தொடங்கியது—புது முயற்சிகள் என்ற அடர்ந்த காட்டிற்குள்ளே அது தாவி கவனத்திற்குரிய சிலவற்

றை அங்கே கண்டுபிடித்தது. நிறுத்தம். கற்பனையின் அலுவல் முடிந்தது. பொது அறிவு வேலையில் முனைந்தது—மதிப்பீடு செய்தது, ஒப்புநோக்கியது, சீர்தூக்கிப் பார்த்தது, பின்பு பயனுடையது என்று அறிவித்தது. நிறுத்தம். நடைமுறை அறிவு செயல் பட்டது—கணக்கிட்டது, ஆலோசனை செய்தது, ஐந்தொகை அறிவித்தது: லாபமே. நிறுத்தம். ரோல்லிங்கின் உயர்ந்த எஃகுப் போன்ற உறுதியுடைய பயங்கர மனவலிமை செயலில் முனைந்தது. குருதி கொப்புளிக்கும் கண்கள் கொண்ட எருமை போல, எதையும் தகர்த்துக்கொண்டு தனக்கோ அன்றி மற்றவருக்கோ நேரும் கஷ்டநஷ்டங்களைப் பொருட்படுத்தாமல், லட்சியத்தை அடைந்தே தீருவான்.

இன்றும் ஏறத்தாழ இதே போலத்தான் நடந்து கொண்டிருந்தது. ரோல்லிங் புரியாத காட்டிற்குள் பார்வையைச் செலுத்தினான். பொது அறிவு அவனுக்கு 'ஸோயா கூறுவது சரி' எனச் சொல்லியது. காரின் வைத்துள்ள அமைப்புப்படங்களையும், கருவியையும் திருடிக்கொண்டு அவனைத் தீர்த்துக் கட்டுவதுதான் மிகவும் லாபகரமான வழி என்று அவனுடைய நடைமுறை அறிவு கூறியது. அது முடிந்து போகும். காரினினுடைய தலைவிதி நிர்ணயிக்கப்பட்டது, பற்றுக்கணக்குத் திறக்கப்பட்டது, மனவலிமை செயலில் முனைந்தது.

ரோல்லிங் இருக்கையிலிருந்து எழுந்தான். முதுகை நெருப்பின் பக்கம் வைத்து நின்று, தன் தாடையை முன்னே தள்ளினான்.

''மால்ஸேர்ப் சாலையில் நாளை நான் ஸெமியோனவை எதிர்பார்ப்பேன்,'' என்றான்.

19

அந்த மாலைக்குப் பின் ஏழு வாரங்கள் கடந்துவிட்டன. க்ரெஸ்தோவ்ஸ்கி தீவில் காரினின் இரட்டையன் கொல்லப்பட்டான். அமைப்புப்படங்களையோ கருவியையோ கொணராது ஸெமியோனவ் மால்ஸேர்ப் சாலையில் தோன்றினான். ரோல்லிங் ஒரு

மைப்புட்டியை எறிந்து அவனது தலையை உடைக்காததுதான் பாக்கி. நேற்று முன் நாள் பாரிஸ் நகரில் காரினோ அல்லது அவனுடைய இரட்டையனோ காணப்பட்டான்.

மறு நாள் வழக்கம் போல ஸோயா மால்ஸேர்ப் சாலையில் ஒரு மணிக்கு ரோல்லிங்கைக் காரில் ஏற்றிக்கொண்டாள். மூடிய காரில் ரோல்லிங் அவள் அருகில் அமர்ந்து கைத்தடியில் தன் முகவாயை ஊன்றியபடி இருந்தான்.

''காரின் பாரிசில் இருக்கிறான்,'' என்று பற்களுக்கிடையே முனகினான்.

ஸோயா பின்புறம் திண்டுகளில் நன்கு சாய்ந்து கொண்டாள். ரோல்லிங் வாட்டத்தோடு அவளை நோக்கினான்.

''எப்போதோ ஸெமியோனவ் தலைவெட்டி எந்திரத்திற்குக் கொண்டு போயிருக்க வேணும். அவன் அசட்டுத்தனமானவன், சாமானியக் கொலைகாரன், திமிரான முட்டாள். அவனை நம்பி என்னை நானே நகைப்புக்காளாக்கிட்டேன். இப்போது ஏதோ ஒரு படுகேவலமான விவகாரத்திலே என்னை இழுத்து விடப் போறான் என்றே கருதுறேன்,'' என்றான் ரோல்லிங்.

ஸெமியோனவுடன் தான் நடத்திய உரையாடல் பற்றி ரோல்லிங் ஸோயாவிடம் சொன்னான். மற்ற எதையும் விட, இரட்டையனின் தோற்றம் ரோல்லிங்கைக் கவலைக்குள்ளாக்கியது. தனது எதிரி முட்டாள் அல்லன் என்பதை அவன் உணர்ந்துகொண்டான். ஒன்று அவனைக் கொல்ல முயற்சி நடைபெறுகின்றது என்று முன்னேயே காரின் எச்சரிக்கை செய்யப்பட்டிருக்க வேண்டும், அல்லது இத்தகைய முயற்சி தவிர்க்க முடியாதது என்று அவனே ஊகித்து, தான் சென்ற சுவடுகளை மறைத்துவிட்டு அவர்களுக்கு ஒரு இரட்டையனை விட்டுச் சென்றிருக்க வேண்டும். இவை எல்லாமே மிகத் தெளிவின்றி இருந்தன. இவற்றில் மிக மிகப் புரிந்துகொள்ள முடியாத விஷயம்—பாரிசில் காரின் என்ன இழவுக்காக வந்திருக்கிறான்?

ஷாம் எலிஸே என்ற பெருஞ்சாலையில் மற்ற பல கார்களுடன் இந்த மூடு காரும் மெல்ல நகர்ந்தது. அன்று வெம்மையும் ஈரமும் புழுக்கமுமாயிருந்தது. க்ராட் ஸாலோனின் கண்ணாடிக் கும்மட்டமும், சிறகு கொண்ட குதிரைச் சிலைகளும், உயர்ந்த வீடுகளின் அரைவட்ட முகடுகளும், சன்னல்களின் மேற்திரைகளும், கொட்டை மரங்களின் அளவுமீறிச் செழித்த கொப்புகளும் மெல்லிய நீலவண்ண மங்குலில் ஓவியக் காட்சி அளித்தன.

கார்களின் உள்ளிருந்தவர்களில் சிலர் நன்கு பின்புறம் சாய்ந்திருந்தனர், சிலர் ஒரு பாதத்தை மறுமுழங்கால் மேல் வைத்திருந்தனர், சிலர் தங்கள் கைப்பிரம்பின் பிடியைச் சுவைத்துக் கொண்டிருந்தனர். இவர்களில் பெரும்பாலோர் புதுப்பணக்காரர்கள், அவ்வளவு உயரமானவர்கள் அல்லர், இளவேனில் தொப்பிகளும், குதூகல வண்ணங்களுடைய டைகளும் அணிந்திருந்தனர். புலோன் சோலைக்கு மதிய உணவு கொள்ளப் போய்க் கொண்டிருந்தனர். வெளிநாட்டவரின் களியாட்டத்திற்குத் தடையின்றி மகிழ்வுடன் பாரிஸ் நகரம் அளிக்கும் அழகிய பெண்கள் அவர்களுடன் இருந்தனர்.

எத்துவால் சதுக்கத்தில் ஸோயா மான்ரோஸின் மூடு கார் ஒரு வாடகைக் காரை நெருங்கிச் சென்றது. அதனுள் ஸெமியோனவும், தடித்த மஞ்சள் நிற முகமும் தூசிபடிந்த மீசையும் உடைய ஒருவனும் இருந்தனர். அவர்கள் இருவரும் முன்னே சாய்ந்து, அச்சதுக்கத்தில் குறுக்கே வளைந்து பாதாள ரயில் நிலைய வாயிலை நோக்கி விரைந்த ஒரு சிறு பச்சை நிறக் காரை வெறியுடன் நோக்கிய வண்ணம் இருந்தனர்.

முன்னே சென்ற காரை ஸெமியோனவ் காரோட்டிக்குச் சுட்டிக்காட்டினான். ஆனால் போக்குவரத்து நெரிசலுக்கு இடையே வழிசெய்துகொண்டு செல்வது கடினமாக இருந்தது. கடைசியாகக் கடந்து சென்று, முழு வேகத்துடன் ஓட்டி, அந்தப் பச்சைக் காரின் முன்னே குறுக்கிட முயன்றனர். ஆனால் அதற்குள் அந்தக் கார் பாதாள ரயில் நிலைய வாயி

வில் நின்றுவிட்டது. பெரிய மேற்கோட்டு அணிந்திருந்த நடுத்தர உயரமுள்ள ஒருவன் அக்காரினின்றும் வெளியே குதித்துத் தரைக்குக் கீழே ஓடி மறைந்தான்.

இது எல்லாமே இரண்டு மூன்று நிமிடங்களுக்குள் ரோல்லிங், ஸோயா இவர்கள் கண் முன்னே நடந்தது. பாதாள ரயில் நிலையத்தின் பக்கம் வண்டியைத் திருப்புமாறு தனது காரோட்டியிடம் ஸோயா கூவினாள். ஏறத்தாழ ஸெமியோனவ் கார் நின்ற அதே நேரத்தில் இவர்களும் நின்றனர். தன் பிரம்பை ஆட்டியபடி ஸெமியோனவ் மூடுகாருக்கருகில் ஓடினான். மினுமினுக்கும் கதவை இழுத்துத் திறந்து, பயங்கரமான பரபரப்புடன் கூறினான்:

''அது காரின்தான். அவன் போய்விட்டான். ஆனாலும் பரவாயில்லை. பாட்டினியோல் சாலைக்குச் சென்று அவனைப் பார்த்து ஓர் ஒப்பந்தம் பற்றிப் பேசிப் பார்க்கிறேன். ரோல்லிங், நாம் ஓர் உடன்பாட்டிற்கு வந்தாகணும்: அந்தக் கருவியை அடைவதற்கு நீங்க எவ்வளவு கொடுப்பீங்க? நீங்க கவலைப்படத் தேவையில்லை. நான் சட்டத்திற்குட்பட்டு நிற்பேன். அதிருக்கட்டும், இவன்தான் ஸ்டாஸ் திக்லீன்ஸ்கி. அறிமுகப்படுத்த அநுமதிங்க. இவன் மிகவும் மரியாதையான ஆள்.''

அநுமதிக்காகக் காத்திராமலேயே அவன் திக்லீன்ஸ்கியைக் கூப்பிட்டான். திக்லீன்ஸ்கி அந்த ஆடம்பரமான மூடு காருக்கு அருகில் ஓடித் தனது தொப்பியை நீக்கினான். குனிந்து வணங்கியபடி மான்ரோஸ் சீமாட்டியின் கையில் முத்தமிட்டான்.

அவர்களில் யாருக்கும் ரோல்லிங் கை தரவில்லை. ஆனால் மூடு காரின் உள்ளிருந்துகொண்டு கூண்டிலிருக்கும் புலியைப் போல வெளியே வெறித்து நோக்கினான். எத்துவால் சதுக்கத்தில் போவோர் வருவோர் அனைவரும் பார்க்கும் நிலையில் இருப்பது புத்திசாலித்தனம் அன்று. இடக் கரைக்கு, ஆண்டின் இந்த நேரத்தில் கூட்டம் குறைவாயுள்ள 'லாபெரூஸ்' ரெஸ்டாரன்டில் சாப்பிடச் செல்லலாம் என்று ஸோயா ஆலோசனை கூறினாள்.

20

ஒவ்வொரு நிமிடமும் குனிந்தபடி வணக்கம் செய்து கொண்டேயிருந்த திக்லீன்ஸ்கி தனது தொங்கு மீசையைத் தடவிப் பதப்படுத்தியவாறு நீர் கசிந்த கண்களுடன் ஸோயா மான்ரோஸை விழித்து நோக்கி, தனது மீதூண் விருப்பத்தை அடக்கிக்கொண்டு உண்டான். சன்னலின் பக்கம் முதுகைக் காட்டியபடி ரோல்லிங் கடுகடுப்பாக அமர்ந்திருந்தான். ஸெமியோனவ் அநாவசியச் சொந்தம் பாராட்டியபடி சளசளவென்று பேசினான். ஸோயா அமைதியாகக் காணப்பட்டாள். கவர்ச்சியுடன் முறுவலித்து மிக அடிக்கடி விருந்தினர்களின் கிளாசுகளை நிரப்புமாறு தலைமை வெயிட்டருக்குக் கண்ணால் குறிப்புக் காட்டினாள். ஷாம்பேயின் கொண்டுவரப் பட்டவுடன் அவனது கதையைச் சொல்லுமாறு திக்லீன்ஸ்கியிடம் கூறினாள்.

தனது கழுத்துப் பட்டையிலிருந்து அவன் நாப்கினை இழுத்து அகற்றினான்.

''திருமிகு ரோல்லிங்குக்காக நாங்கள் எங்கள் உயிரைக் கூடப் பொருட்படுத்தலே. ஸெஸ்த்ரொரேத்ஸ்க் அருகில் நாங்கள் சோவியத் எல்லையைக் கடந்தோம்.''

''நாங்கள் என்று யாரைக் குறிப்பிடுறீங்க?'' என வினவினான் ரோல்லிங்.

''நானும் என்னுடைய துணையாளும், ஐயா, அவன் வார்ஸாவிலிருந்து வந்த ருஷ்யன். பலகோவிச்சின் படையில் ஓர் அதிகாரி... மிகக் கொடூரமான மனிதன்... அவனும் எல்லா ருஷ்யர்களும் நாசமாப் போகட்டும். உதவியை விட அதிகமாத் தொல்லை தான் கொடுத்தான். காரின் தன்னோட சோதனைகளை எங்கே நடத்துறான் என்பதைக் கண்டுபிடிக்கிறதே என் குறிக்கோள். நான் அந்தப் பாழடைந்த வீட்டிற்குப் போனேன். அந்தப் பாழாய்ப் போகிற பன்றிப்பயல் தன்னோட கருவியால் என்னைக் கிட்டத்தட்ட இரண்டா எப்படி வெட்டிட்டான்னு அம்மாவுக்கும் ஐயாவுக்கும் தெரியுமே. அங்கேதான்

நிலவறையில் அந்த உலோகத் துண்டைக் கண்டேன் —சீமாட்டி ஸோயா அதை வச்சிருக்காங்க, என்னோட முயற்சிக்கு அதுதான் சாட்சி. காரின் தன்னோட சோதனைகளை இன்னொரு இடத்திற்கு மாற்றிக்கொண்டான். பகலிலோ இரவிலோ நான் உறங்கவே இல்லை. சீமாட்டி ஸோயாவும், திரு. ரோல்லிங்கும் என்பால் வச்சிருக்கும் நம்பிக்கையை நியாயப்படுத்த விரும்பினேன். க்ரெஸ்தோவ்ஸ்கி தீவின் சதுப்பு நிலங்களில் என்னோட சுவாசப்பைகள் ஜில்லிட்டுப் போச்சு, ஆனா என்னோட குறிக்கோளை அடைஞ்சுட்டேன். காரினின் இருக்குமிடத்தைக் கண்டுபிடிச்சேன். ஏப்ரல் 27ஆம் தேதி ராத்திரி நானும் என்னோட துணையாளும் காரினுடைய குடிசைக்குள்ளே புகுந்தோம். ஓர் இரும்புக் கட்டிலோடு சேர்த்து அவனைக் கட்டினோம். அந்த இடத்தை ரொம்பக் கவனமாகச் சோதித்துப் பார்த்தோம். ஒன்னும் கிடைக்கலே... அந்தக் கருவியோட அடையாளம்கூடக் காணப்படலே. இது போதாதா ஒருத்தனைப் பைத்தியமாக்க?.. இருந்தாலும் அந்தக் குடிசையில் தான் அவன் அதை ஒளிச்சு வச்சிருக்கான் என்பது எனக்குத் தெரியும்... அப்பத்தான் என்னோட துணையாள் காரினிடம் கொஞ்சம் முரட்டுத்தனமா நடந்துக்கிட்டான்... எங்களுக்குக் கொஞ்சம் பரபரப்பு ஏற்பட்டிருக்கும் என்பதை அம்மாவும் ஐயாவும் புரிஞ்சுக்குவீங்க... திரு. ரோல்லிங் கொடுத்த உத்தரவுகளின்படி நாங்க நடந்தோம் என்று நான் சொல்லலே... இல்லை, என் துணையாள் தன் நிதானத்தை இழந்துட்டான்...''

ரோல்லிங் தன் தட்டை நோக்கினான். ஸோயாவின் நீண்ட விரல்கள் மேசை விரிப்பின் மீது விரைவாகத் தாளம் போட்டன. அப்போது அவற்றின் வழுவழுப்பாகப் பூசப்பட்ட நகங்களும், பச்சைக் கற்களும், வைரங்களும், நீலக் கற்களும் பளிச்சிட்டன. அந்த மதிப்பிட முடியாத கையைப் பார்த்துக் கொண்டிருந்த திக்லீன்ஸ்கி உத்வேகமடைந்தான்.

''மறு நாள் நான் எப்படி அஞ்சல் நிலையத்தில் காரினைக் கண்டேன் என்பது அம்மாவுக்கும் ஐயா

வுக்கும் தெரியும். ஆதி பராசக்தி! ஓர் உயிர்ப்பிணம் நேருக்கு நேராக வருவதைப் பார்த்தா யாருக்குத் தான் அறிவு மழுங்கி அச்சம் தோனாது? அத்தோட நாசமாய் போன மிலீஷியா என்னைத் துரத்தத் தொடங்கிட்டாங்க. நாங்க ஒரு சூழ்ச்சிக்கு இரை யாகிப் போனோம். தனக்குப் பதிலா வேறொருத் தனை அமர்த்திட்டான் அந்தப் படுபாவி காரின். அந்த வீட்டில் இன்னொரு முறை தேடணும்னு தீர்மானிச்சேன். அங்கு ஒரு நிலவறை இருந்திருக் கணும். அன்னைக்கு ராத்திரி நான் மட்டும் தனியாப் போனேன், காவல்காரனைத் தூங்க வைச்சேன். சன் னலின் வழியா உள்ளே நுழைஞ்சேன்... என்னை திரு. ரோல்லிங் தவறாகக் கருத வேணாம்... திக் லீன்ஸ்கி தன் உயிரைப் பணயம் வைக்கிற போது ஒரு கோட்பாட்டுக்காகவே மட்டுமே... மோதுவ தும், நொறுங்குவதும், உடைவதுமாக எவனுக்கும் மயிர்க்கூச்செறியச் செய்யுற பயங்கரமான பேரொலி கேட்டதும் சன்னல் வழியா நான் மீண்டும் வெளியே குதிச்சிருக்கலாம்... ஆமா, திரு. ரோல்லிங், அந்தக் கொடூரமான கருவியை ருஷ்யர்களிடமிருந்து பிடுங் கிவிடுமாறு என்னை நீங்க அனுப்பியபோது ஆண்ட வனே உங்களுக்கு வழிகாட்டியிருக்கிறான் என்பதை அந்தக் கணமே நான் உணர்ந்தேன். நாகரிக உலகம் முழுமைக்கும் எதிரா அவர்கள் அந்தக் கருவியைத் திருப்பலாம், அல்லவா? போலந்து நாட்டுக் குடிப் பிறப்பின் கௌரவத்தின் மீது ஆணையிட்டுச் சொல் றேன், சிமாட்டி ஸோயா, அந்த நிமிஷம் வரலாற் றிலே பொறிக்க வேண்டிய நேரம். சத்தம் வந்து கொண்டிருந்த சமையலறைக்குள்ளே காட்டு விலங் கைப் போலப் பாய்ந்தேன். காரினைக் கண்டேன்— மேசைகளையும், சாக்குகளையும், பெட்டிகளையும் சுவருக்கருகே அடுக்கிக் கிட்டிருந்தான். என்னைக் கண்டதுமே தன் தோல் கைப்பெட்டியை எடுத்துக் கிட்டு, அடுத்த அறைக்கு நழுவினான். அந்தப் பெட் டியில்தான் தன் கருவியோட மாதிரியை அவன் வச் சிருந்தான். இது எனக்கு நல்லாத் தெரியும். நான் கைத்துப்பாக்கியை வெளியே எடுத்துக்கிட்டு அவ

னைத் துரத்தினேன். அதற்குள் அவன் வெளியே குதிக்க சன்னலைத் திறந்துட்டான். நான் சுட்டேன். ஒரு கையில் பெட்டியும் மற்றொரு கையில் கைத்துப் பாக்கியும் வச்சிக்கிட்டு அறையின் மறுகோடிக்கு ஒடி படுக்கைக்குப் பின்னாலே ஒளிந்துகொண்டு அவனும் சுட்டான். சீமாட்டி ஸோயா, அது உண்மையான ஒத்தைக்கு ஒத்தைச் சண்டை. என்னுடைய குல்லாயை ஒரு குண்டு தொளைச்சது. திடீரென்று அவன் தன்னோட வாயையும் மூக்கையும் ஏதோ கந்தையால மூடிக்கிட்டு, ஒரு சிறு உலோகக் குழாயை என் பக்கம் நீட்டினான். ஷாம்பேயின் மூடி திறக்கிறது மாதிரி ஒரு வெடிச்சத்தம் கேட்டது. அதே நிமிஷமே என் மூக்கு, தொண்டை, மார்பு எல்லாத்தையும் ஆயிரக்கணக்கான சின்னஞ்சிறு வளைந்த கூரிய நகங்கள் பற்றிப்பிடுங்கிச்சு. பொறுக்கமுடியாத வலியால் கண்களில் கண்ணீர் பெருகுச்சு. தும்மவும் இருமவும் தொடங்கினேன். வயிற்றைப் புரட்டியெடுத்தது, சீமாட்டி ஸோயா, என்னை மன்னிச்சுருங்க, படுமோசமா வாந்தி செய்தபடித் தரையில் புரண்டேன்.''

''டிபெனில்குளோரார்ஸினையும் பாஸ்ஜீனையும் பாதிப்பாதிக் கலந்திருப்பான்... அற்பச் சரக்கு. நம்மபோலீஸார் வைத்திருக்கும் குண்டுகளில் இதைத்தான் பயன்படுத்துறோம்,'' என்றான் ரோல்லிங்.

''நீங்க சொல்றது சரிதான், ஐயா. அது ஒரு புகையாவிக் குண்டுதான்... நல்ல வேளையா காத்து புகையை விரைவா போக்கிருச்சு. சீக்கிரமே உணர்வு வந்து பாதி உயிரோட எப்படியோ வீடு வந்து சேர்ந்தேன். நான் நஞ்சூட்டப்பட்டேன், பாதி செத்துப்போனேன், நகரம் பூராவும் புலனாய்வாளர்கள் என்னைத் தேடிக்கிட்டிருந்தாங்க. லெனின்கிராடிலிருந்து ஓடுறதைத் தவிர வேறொன்னும் செய்யுறதுக்கில்லை. இதைத்தான் ரொம்பக் கஷ்டத்தோடவும் பெரிய அபாயத்தோடவும் செய்தேன்.''

தனது முதலாளியின் கருணைக்குத் தன்னை ஒப்படைத்தபடி. திக்லின்ஸ்கி கைகளை விரித்துத் தலை வணங்கினான்.

''காரினும் ருஷ்யாவிலிருந்து வெளியேறிட்டான்னு நீங்க நிச்சயமா சொல்ல முடியுமா?'' என்று வினவினாள் ஸோயா.

''அவன் வெளியேறித்தான் இருக்கணும். அந்த விவகாரத்துக்குப் பிறகு புலனாய்வுத் துறைக்குத் தன் செயலைப் பற்றி அவன் விளக்கம் தரக் கடமைப்பட்டிருக்கிறான்.''

''ஏன் பாரிசைத் தேர்ந்தெடுத்தான்?''

''அவனுக்குக் கரிக்கோபுரவத்திகள் வேணும். அவையில்லாட்டி தோட்டா இல்லாத துப்பாக்கி மாதிரியாயிரும் அவனோட கருவி. காரின் ஒரு பௌதிகவியலாளன். வேதியலைப் பற்றி அவனுக்கு ஒன்னும் தெரியாது. அவனோட அறிவுரைப்படி நான் அந்தக் கோபுரவத்திகள் உற்பத்தியில் வேலை செய்தேன். எனக்குப் பிறகு க்ரெஸ்தோவ்ஸ்கி தீவில் உயிரைப் பலி கொடுத்தவன் வேலை செய்தான். ஆனா பாரிசில் காரினுக்கு இன்னொரு கூட்டாளி இருக்கான். பாட்டினியோல் சாலையின் முகவரிக்கு அவனுக்குத் தந்தி கொடுத்தான். கோபுரவத்திகள் பற்றிய சோதனைகளை மேற்பார்க்க காரின் இங்கு வந்திருக்கான்.''

''காரினோட கூட்டாளியைப் பற்றி உங்களுக்கு என்ன தெரியும்?'' என வினவினான் ரோல்லிங்.

''அவன் பாட்டினியோல் சாலையில் ஒரு மோசமான ஓட்டலில் வசிக்கிறான். நேற்று அங்கே போயிருந்தோம். அங்கிருந்த போது, காவல்காரனிடமிருந்து சில விஷயங்களை அறிந்து வந்திருக்கிறோம்,'' என்று பதிலளித்தான் ஸெமியோனவ். ''நாள் முழுக்க வெளியே போயிட்டு ராத்திரிக்குப் படுக்க மட்டுந்தான் அம்மனிதன் வருகிறான். சாமான்கள் ஒன்னும் கிடையாது. பாரிஸ் நகரில் மருத்துவர்களும், ஆய்வுக்கூடத் தொழிலாளர்களும், வேதியல் கல்லூரி மாணவர்களும் அணிந்து கொள்கிற கப்பற்பாய்த் துணியாலாகிய மேலங்கியை அணிந்தபடி வீட்டிலிருந்து வெளியே போறான். அருகே எங்கேயாவது அவன் பணிபுரிந்தாகணும்.''

''பார்ப்பதற்கு அவன் என்ன மாதிரி இருக்கான்?

அவன் அணிகிற கப்பற்பாய்த் துணியைப் பற்றி எனக்கு என்ன கவலை? சனியன்! அவன் என்ன மாதிரி இருக்கான்னு காவல்காரன் உங்ககிட்டச் சொன்னானா?'' என்று ரோல்லிங் உரக்கக் கத்தினான்.

ஸெமியோனவும் திக்லீன்ஸ்கியும் ஒருவரையொருவர் பார்வைகளைப் பரிமாறிக்கொண்டனர்.

''தங்களுக்கு விருப்பமென்றால், அந்த ஆள் எப்படி இருப்பான்னு இன்னைக்கே நாங்க கண்டுபிடிக்கிறோம்,'' என்று திக்லீன்ஸ்கி தன் மார்பின் மீது கை வைத்துச் சொன்னான்.

ரோல்லிங் நீண்ட நேரம் எதுவும் பேசாது தனது புருவங்களை நெரித்தான்.

''நேற்று பாட்டினியோல் சாலையில் உள்ள ஓட்டலில் நீங்க பார்த்த மனிதனும் எத்துவால் சதுக்கத்தில் தரைக்கடியில் மறைந்த மனிதனும் ஒரே ஆள்தான், என்ஜினியர் காரினேதான் என்று எப்படி நீங்க நிச்சயமாச் சொல்ல முடியும்? லெனின்கிராடில் ஏற்கெனவே ஒரு தடவை நீங்க தப்பாப் புரிஞ்சுக்கிட்டீங்க, இல்லையா?''

ஸெமியோனவும் திக்லீன்ஸ்கியும் மீண்டும் பார்வைகளைப் பரிமாறிக்கொண்டனர். எல்லைமீறிய நன்னயத்துடன் முறுவலித்தான் திக்லீன்ஸ்கி:

''ஒவ்வொரு நகரத்திலும் காரின் இரட்டையர்கள் வைத்திருக்கிறான் என்று திரு. ரோல்லிங் நிச்சயமா நம்ப வேண்டாம்...''

ரோல்லிங் பிடிவாதமாகத் தலையசைத்தான். கைகளில் கீரித் தோலுறை அணிந்து உட்கார்ந்திருந்த ஸோயா மான்ரோஸ், இதில் அக்கறையில்லாதவள் போல சன்னலுக்கு வெளியே பார்த்துக் கொண்டிருந்தாள்.

''அம்மாதிரி தவறு செய்ய முடியாத அளவுக்கு காரினை திக்லீன்ஸ்கிக்கு மிக நல்லாத் தெரியும்,'' என்றான் ஸெமியோனவ். ''இந்த நேரத்தில் இதைவிட முக்கியமான ஒன்னை நாம் முடிவு செய்ய வேண்டியுள்ளது. இந்த வேலையை நாங்களே தனியாச் செய்து ஒரு நாளைக்கு மால்ஸேர்ப் சாலையில் உள்ள உங்க அலுவலகத்துக்கு அமைப்புப் படங்களையும் கருவியையும் கொண்டுவர விடுகிறீர்களா, அல்லது

நீங்களும் எங்களோட சேர்ந்து உழைக்கப் போறீங்களா?''

''எந்தச் சந்தர்ப்பத்திலும் இல்லை!'' இன்னும் சன்னலின் வெளியே பார்த்துக் கொண்டிருந்த ஸோயா திடீரென்று சொன்னாள். ''என்ஜினியர் காரினோட சோதனைகளில் திரு.ரோல்லிங் மிகுந்த அக்கறை காட்டுறார். இந்தப் புதுக் கண்டுபிடிப்பின் உரிமையைப் பெற திரு.ரோல்லிங் மிகவும் விருப்பம் கொண்டிருக்கிறார். திரு. ரோல்லிங் எப்பவும் சட்டத்திற்கு உட்பட்டு கண்டிப்பா நடக்கிறவர்; இப்ப திக்லீன்ஸ்கி சொன்னதில் ஒரு சொல்லையாவது திரு. ரோல்லிங் நம்பினால், போலீஸ் கமிஷனரை அழைத்து, இம்மாதிரியான குற்றவாளியையும் கயவனையும் அதிகாரிகளிடம் ஒப்படைக்கத் தயங்க மாட்டார். இது நியாயமானதுங்கூட. ஆனால் தன்னிடமிருந்து இன்னும் கூடுதலான பணத்தைப் பெறுவதற்காக இந்தக் கதையை திக்லீன்ஸ்கி ஜோடித்துள்ளதாக திரு. ரோல்லிங் தெளிவாய் புரிந்து கொண்டிருப்பதனாலே, இன்னும் தொடர்ந்து சில சிறிய தொண்டுகளைச் செய்யுறதுக்கு நல்லியல்புடன் அநுமதிப்பார்.''

சாப்பாட்டின்போது முதல் முறையாக ரோல்லிங் முறுவலித்தான். தன் இடையளவுச் சட்டைப் பையிலிருந்து ஒரு தங்கப் பல் குத்தியை எடுத்துத் தன் பற்களுக்கு இடையில் குத்தினான். திக்லீன்ஸ்கியின் சிவந்த நெற்றியின் வழுக்கைத் திட்டுகளில் வியர்வை முத்துக்கள் அரும்பின, கன்னங்கள் தளதளத்துத் தொங்கின.

''மால்ஸேர்ப் சாலையிலுள்ள எனது அலுவலகத்தில் இன்னைக்கு பிற்பகல் மூனு மணிக்குத் தரப்படும் விபரமான உத்தரவுகளின்படி திட்டவட்டமா முழு விபரத்தையும் ஒன்னு பின்னாலே ஒன்னா எனக்குத் தருவதுதான் உங்க வேலை,'' என்றான் ரோல்லிங். ''நீங்க தகுதியான புலனாய்வாளர்களாகப் பணியாற்றணும்—அதற்கு மேல் ஒன்றுமில்லே. என்னோட உத்தரவுகள் இல்லாமல் ஓர் எட்டோ, ஒரு வார்த்தையோ கூடாது.''

21

இருண்ட, நெளிந்த சுரங்க வழிகளினூடே பாரிசின் அடியில் நார்த்-ஸூத் பாதாளப் பாதையில் ஒளிர் கின்ற வெள்ளிய தகட்டுக் கண்ணாடியாலான பக் கங்களையுடைய ரயில் வண்டி மெல்லிய உறுமலு டன் விரைந்தது. மின்கம்பி வலைகள், ஓடும் விளக்கு களால் ஒளியூட்டப்பட்ட தொழிலாளிகள் பதுங்கி ஒட்டிக்கொண்ட சிமென்டுச் சுவர்ப் பிறைகள், கறுப்புப் பின்னணியில் மஞ்சள் எழுத்துக்கள் பாரிஸ் வாழ்வோர் மனத்தில் நன்கு பதியுமாறு அறைந்து கொண்டிருக்கும் வெறுப்பூட்டும் குடிப்பொருளின் விளம்பரமான டியூபொனே, டியூபொனே, டியூபொனே, என மினிர்வது, எல்லாவற்றையும் ரயில் கடந்து சென்றது.

ஒரு கணம் நிறுத்தம். தரையடி வெளிச்ச வெள் ளம் பாயும் ஒரு ரயில் நிலையம். அற்புத சோப், உலகத்தின் மிகவலு இறுக்குவார்கள், சிங்கத் தலை காலணி பாலிஷ், சிவப்புப் பிசாசு கார் டயர்கள், ஆகிய பொருள்கள், ''லூவர்', 'லா பெல் ப்ளோரிஸ்த்', 'காலரி லாபயேத்' ஆகிய டிபார்மென்ட் ஸ்டோர் களிலே கழிவு விற்பனையாவது பற்றிய வண்ண விளம்பரங்கள் கொண்ட சதுக்கங்கள் இருந்தன.

கடைகளில் பணியாற்றும் அழகிய பெண்கள். ஏவல் பையன்கள், வெளிநாட்டினர், இறுகப்பிடிக் கும் கோட்டுகள் அணிந்த இளைஞர்கள், வேர்வை யில் நனைந்த உள்சட்டைகளும் அவற்றை இறுக்கிய சிவப்புப் பட்டிகளும் அணிந்த தொழிலாளர்கள் ஆகியவர்களின் ஓசையுடன் வரும் முறுவலித்த கூட் டம் முண்டியடித்துக் கொண்டு நெருக்கமாக ரயிலை நோக்கிச் சென்றது. கண்ணாடிக் கதவுகள் நழுவித் திறந்தன. தொப்பிகள், பிதுங்கும் கண்கள், பிளந்த வாய்கள், சிவந்தும் மகிழ்ந்தும் சினந்தும் காட்சி தரும் முகங்கள் ஆகிய இத்துணையும் சுழன்று நீர்ச்சுழல் போல வண்டியினுள் நுழையும் போது பெரிய பெரு மூச்சுப் போன்று ''ஊ-ஊ-ஊ'' என்ற ஓசை வந்தது.

செங்கல் நிறச் சட்டையணிந்த நடத்துநர்கள் கைப் பிடிக் கம்பிகளில் தொங்கிக்கொண்டு பயணிகளைத் தங்களது வயிறுகளால் வண்டிகளுக்குள் நெருக்கித் தள்ளினர். ஒரு பெரிய ஓசையுடன் கதவுகள் மூடின; ஒரு குறுகிய ஊதலொலி வர, இருண்ட சுரங்கத் திற்குள் ஒரு தீப்பட்டையைப் போல ரயில் மறைந் தது.

நார்த்-ஸௌத் ரயிலில் ஒரு பக்க இருக்கையில் தங்கள் முதுகுகள் கதவுப் பக்கம் இருக்க ஸெமி யோனவும் திக்லீன்ஸ்கியும் அமர்ந்து கொண்டிருந் தனர். திக்லீன்ஸ்கி சினத்துடன் காணப்பட்டான்:

''இந்தா, இதை மனசிலே வச்சுக்க, மரியாதைக் காகப் பார்த்தேன், இல்லாட்டா கலாட்டா செய் திருப்பேன்... நூறு தரம் எனக்குக் கோபம் வந் துச்சு... நான் எப்பவுமே கோடீஸ்வரங்கூட சாப் பிடாததைப் போல! அவர்களும் அவர்கள் சாப்பா டும் நாசமாய்ப் போக... என்னைப் போக்கிரின்னு கூப்பிடுறாங்க!''

''ஓ, நிறுத்து, ஸ்டாஸ்! ஒன்னுமில்லாததற்காக நாம் நிறையச் சம்பளம் வாங்குறோம். வேலை ாதுகாப்பானது, மகிழ்ச்சியானதுங்கூட: பொது]டுதிகளிலும், காஃபி பார்களிலும் சும்மா சுத்திக் ட்டு வருவோம்...''

''என்னை மதிக்க வேண்டும் எனக் கோரு கிறேன்!''

''அதை விட்டுத் தள்ளு, ஸ்டாஸ், மரியாதைக்கு யாரும் பணம் தருவதில்லே.''

ஸெமியோனவும் திக்லீன்ஸ்கியும் அமர்ந்திருந்த இருக்கைக்குப்பின் கதவுக்கு அருகில் ஒருவன் வண்டி யின் பித்தளைத் தூணில் முழங்கையைச் சாத்திய படி நின்று கொண்டிருந்தான். லெனின்கிராடில் தொழிற்சங்கச் சாலையில் ஷெல்காவிடம் பேசிக் கொண்டிருந்த போது பியான்கோவ்-பெத்கேவிச் என்று தன்னைக் கூறிக்கொண்டவன் இவன்தான். அவனது மேற்கோட்டின் கழுத்து மடிப்பு மேல் நிமிர்ந்து நின்று, அவனது முகத்தின் அடிப்பகுதியை மறைத்திருந்தது. அவனுடைய கண்களுக்கு மேலா

கத் தொப்பி இழுத்து விடப்பட்டிருந்தது. அசட்டையான போக்கில் தனது கைத்தடியின் எலும்புப் பிடியில் வாய் வைத்து உறிஞ்சியபடி அங்கு நின்றிருந்தான்; ஸெமியோனவும் திக்லின்ஸ்கியும் பேசிய அனைத்தையும் கவனித்துக் கேட்டான். அவர்கள் விரைந்து வண்டியிலிருந்து இறங்கும்போது பண்பாடோடு அவர்களுக்கு வழி விட்டான். இரண்டு நிலையங்களுக்குப் பிறகு மான்மார்டரில் அவனும் இறங்கி விட்டான். அருகில் இருந்த ஓர் அஞ்சல் நிலையத்தில் தந்தி ஒன்று கொடுத்தான்:

ஷெல்கா. புலனாய்வுத்துறை. லெனின்கிராடு. நான்கு விரலான் இங்கு இருக்கிறான். நிகழ்ச்சிகள் அச்சுறுத்துபவை.

22

அஞ்சல் நிலையத்தை விட்டு வெளியேறி, மான்மார்டரின் உச்சிக்குச் செல்லும் அழுக்கடைந்த படிகள் கொண்ட குறுகிய தெருவுக்குள்ளாகத் திரும்பினான்; சுற்றிலும் கவனமாகத் திரும்பிப் பார்த்து ஓர் இருண்ட மதுக்கடைக்குள் நுழைந்து, ஒரு கிளாஸ் போர்ட் ஒயினும் ஒரு பத்திரிகையும் கேட்டு வாங்கி, படிப்பதற்காக ஓரிடத்தில் அமர்ந்தான்.

பொன் மயிரையுடைய திறந்த தலையுடன் ஒல்லியான ஒருவன் கப்பற்பாய்த் துணியாலான மேலங்கி அணிந்துகொண்டு அந்த மதுக்கடைக்குள் விரைந்து நுழைந்தான்.

''காரின், வணக்கம்,'' என்று செய்தித்தாள் படித்துக்கொண்டிருந்த மனிதனிடம் கூறினான். ''எனது வெற்றிக்காக நீ என்னைப் பாராட்டலாம்...''

காரின் குதித்தெழுந்து அவன் கையைப் பற்றி நெறித்தான்:

''விக்டர்...''

''ஆமாம், ஆமாம். நான் ரொம்ப மகிழ்ச்சியா இருக்கேன். நாம் உரிமைப் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று வற்புறுத்துறேன்.''

''எந்தச் சந்தர்ப்பத்திலும் கூடாது... போவோம்.''

அவர்கள் மதுக்கடையை விட்டுப் புறப்பட்டு படிகளின் மேல் ஏறி வலப்புறம் திரும்பி நகர்ப்புறத்தின் அழுக்கடைந்த வீடுகளுக்கும், அழுக்கான லினென் துணிகள் கயிற்றுக்கொடிகளில் படபடத்துக்கொண்டிருந்த முள்கம்பி வேலியுள்ள வெற்றிடங்களுக்கும், சிறு தொழிற்சாலைகளுக்கும் பட்டறைகளுக்கும் இடைப்பட்ட பாதையில் நீண்ட நேரம் நடந்தனர்.

அந்திசாயும் நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது. தங்களுடைய வழியில் ஓய்ந்துவரும் தொழிலாளர் குழுக்களைச் சந்தித்தனர். இங்கே, குன்றின் மேல் வேறு இனத்தைச் சேர்ந்த மக்கள் வாழ்ந்தது போலத் தோன்றியது. அவர்களது முகங்கள் வேறானவையாக—உறுதியும், ஒடிசலும், வலிமையும் உள்ளவையாக—இருந்தன. பிரெஞ்சு தேசிய இனம், அமிதக் கொழுப்பு மற்றும் இனச்சிதைவிலிருந்து தன்னைக் காப்பாற்றிக்கொள்ளப் பாரிசின் மேட்டுப் பகுதிக்கு ஏறிவந்து, தாழ்வான நகரைத் தூயதாக்கி, லுத்தீஷியாவின் தங்கக் கப்பலை* ஒளிக்கடலில் செலுத்தும் வாய்ப்பை அமைதியுடனும், உறுதியுடனும் எதிர்நோக்கி இருப்பது போலத் தோன்றியது.

''இந்த வழியா,'' தாழ்ந்த கல் கொட்டாரம் ஒன்றின் கதவை அமெரிக்கச் சாவியினால் திறந்துகொண்டே, விக்டர் சொன்னான்.

23

காரினும் விக்டர் லெனுவாரும் மேல்மூடிக்குக் கீழிருந்த செங்கல் உலைக்கு அருகில் சென்றனர். பக்கத்தில் மேசையின் மேல் சிறிய கோபுரவத்திகள் வரிசையாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. உலையின் உள்ளாக ஒரு வெண்கல வளையம் இருந்தது. அதன் சுற்று வட்டத்தில் பன்னிரண்டு பீங்கான்

* தங்கக் கப்பல்—பாரிஸ், அல்லது தொன் மரபுப்படி லுத்தீஷியா நகர இலச்சினை. (ஆ-ர்.)

கிண்ணங்கள் இருந்தன. லெனுவார் ஒரு மெழுகு வர்த்தியை ஏற்றி விந்தையான புன்னகையுடன் காரினை நோக்கினான்.

''பியோத்தர் பெத்ரோவிச், நமக்குள்ளே அறிமுகம் இன்றைக்கு நேற்று அல்ல. பதினைந்து ஆண்டுகளா, இல்லையா? நான் நேர்மையானவனா இல்லையா என்பதைத் தெரிஞ்சுக்க உங்களுக்கு இவ்வளவு நீண்ட காலம் நிச்சயமாப் போதும். சோவியத் ருஷ்யாவிலிருந்து நான் ஓடிவந்த போது நீங்க எனக்கு உதவினீங்க... அதிலிருந்து என்னைப் பற்றி நீங்க தப்பாக நினைக்கலேன்னு கருதுறேன். ஆகவே நேரடியா எங்கிட்டேச் சொல்லிருங்க—என்ன இழவுக்காக உங்க கருவியை என்னிடமிருந்து ஒளிக்கிறீங்க? நான் இல்லாமல், அதோ அந்தக் கோபுரவத்திகள் இல்லாமல் நீங்க ஒன்னும் செய்ய முடியாது என்பது எனக்குத் தெரியும். நாம் நண்பர்களைப் போலவே நடந்துகொள்வோம்...''

பீங்கான் கிண்ணங்கள் கொண்ட வெண்கல வளையத்தை உற்று நோக்கினான் காரின்.

''எனது ரகசியத்தை நான் உங்களுக்கு வெளிப்படுத்தணும்னு விரும்புறீங்களா?'' என வினவினான்.

''ஆமாம்.''

''எனது வியாபாரத்திலே பங்குபெற விரும்புகிறீங்களா?''

''ஆமாம்.''

''தேவைப்பட்டா, எதிர்காலத்தில் அது தேவைப்படும் என்றே எண்ணுறேன், வெற்றிபெறுவதற்காக எந்த மீறிய செயலையும் புரிய நீங்க தயாராக இருக்கணும்...''

காரின் மீது கண்ணை வைத்தபடியே லெனுவாரும் உலையின் ஓரத்தில் அமர்ந்தான். அவனது வாயின் ஓரங்கள் நடுங்கின.

''சரி, நான் ஒப்புக்கொள்றேன்,'' என்றான் உறுதியுடன்.

கண நேரத்திற்கு காரின் மௌனமாக இருந்தான்.

''அப்ப சரி... என்னோட கூட்டாளியா உங்

களை நான் ஏற்றுக்கொள்றேன். ஒரே ஒரு நிபந்த னைதான்...''

''சரி, எந்த நிபந்தனைகளும் நான் ஒப்புக்கொள் கிறேன்.''

''விக்டர், ஒரு பொய்யான பாஸ்போர்ட்டில் நான் பாரிசுக்கு வந்தேன் என்று உங்களுக்குத்தான் தெரியுமே. ஒவ்வோரிரவும் வெவ்வேறு ஒட்டலுக்குச் செல்கிறேன். நான் பின்தொடரப்படுவதை நேற்று அறிந்தேன். என் நடமாட்டத்தைக் கண்காணிக்கும் வேலை சில வெண்படை ருஷ்யர்களிடம் ஒப்படைக் கப்பட்டிருக்கிறது. நான் போல்ஷெவிக் கையாள் என்று தவறா கருதியிருக்கலாம். துப்பறிபவர்களைத் தவறான வழியில் நான் திசை திருப்பியாகணும்.''

''நான் என்ன செய்யணும்னு விரும்புறீங்க?''

''என்னைப் போல தோன்றுமாறு ஒப்பனை செய்துகொள்ளுங்க. நீங்க பிடிபட்டால் உங்க ஆவணங்களைக் காண்பிக்கலாம். என்னோட இரட் டையாக நீங்க இருக்க விரும்புறேன். நாம இரண்டு பேரும் ஒரே உயரம். உங்க மயிருக்கு சாயம் பூசிக் கிற முடியும், பொய்த்தாடியை ஒட்டிக்கொள்ளுங்க, ஒரே மாதிரி உடைகளை நாம் வாங்கிக் கொள்வோம். இன்னைக்கு ராத்திரி உங்க ஒட்டலை விட்டு உங் களைத் தெரியாத நகரத்தின் வெறொரு பகுதிக்குப் போயிருங்க — உதாரணமா லத்தீன் வட்டாரம், சரி யா?''

லெனுவார் உலையினின்றும் கீழே குதித்து காரி னின் கையை இறுகப்பற்றிக் கொண்டான். பிறகு கடின எண்ணெயுடனும், மஞ்சள் பாஸ்பரசுடனும், அலுமினியத்தையும் பெர்ரிக் ஆக்ஸைடையும் (தேர்மிட்) சேர்த்த கலவையிலிருந்து கோபுரவத்தி கள் செய்வதில் தான் வெற்றிபெற்ற முறையை விளக்கத் தொடங்கினான்.

அந்த வளையத்தின் பீங்கான் கிண்ணங்களில் பன்னிரண்டு கோபுரவத்திகளை வைத்து, அவற்றை ஒரு ப்யூஸ் திரியினால் அவன் பற்றவைத்தான். உலை யின் மேலாக குருடாகச் செய்யும் அனற் கொழுந்து தூணாய் எழுந்தது. தாங்கிக் கொள்ள முடியாத

வெப்பம் மற்றும் ஒளி [illegible] டாரத்தின் மறுகோடிக்கு [illegible] வாங்க வேண்டியதாயிற்று.

''பிரமாதம்,'' என்று [illegible] இருக்கானுன்னு நம்புறேன். [illegible]''

''அந்தப் பயங்கரமான [illegible] எரிஞ்சு போச்சு. [illegible] வேதியல் முறையில் [illegible].''

''நல்லது. இன்னும் ஒரிரு நாள்களில் [illegible] கள் செய்யப்படுவதை நீங்க பார்ப்பீங்க,'' என்று [illegible] காரின். ''கொஞ்சம் உணவு [illegible] ளோட பொருள்களை எடுத்து வருவதற்காக [illegible] லுக்கு ஓராள் அனுப்புவோம். இன்னைக்கு [illegible] இடக் கரையில் தங்குவோம். நாளை, [illegible] காரின்கள் இருப்பாங்க... இந்தக் கொட்டாரத்தின் இரண்டாவது சாவி உங்க கிட்டே இருக்கா?''

24

இம்மாநகரில் பளபளக்கும் கார் வரிசைகள் இல்லை. கடைச் சன்னல்களில் அலங்காரமாக வைக்கப்பட் டுள்ள பொருள்களைத் தமது கழுத்தை வளைத்து பார்த்துத் திரியும் சோம்பேறிகள் இல்லை, தலை கிறுகிறுக்கச் செய்யும் பெண்கள் இல்லை, எந்திர தொழில் மன்னர்களும் இல்லை.

புதிதாக அறுக்கப்பட்ட மரப் பலகை அடுக்கு களும், தளம் போடும் கற்களின் குவியல்களும், [illegible] வின் நட்ட நடுவில் நீலவண்ணக் [illegible] களும், நடைபாதையோரமாக, துண்டுகளாக வெட் டப்பட்ட பெரிய புழுப்போன்று கிடக்கும் சாக்க டைக் குழாய்ப் பகுதிகளுமே காணப்பட்டன.

'ஸ்பார்ட்டாக்' விளையாட்டுக் [illegible] சேர்ந்த தராஷ்கின், தீவிலிருந்து [illegible] மெதுவாகச் சென்று கொண்டிருந்தான். அவன் [illegible] வும் நல்ல உற்சாகத்துடன் இருந்தான். [illegible] மாகப் பார்ப்பவர்களுக்கு அவன் [illegible] வாட்டமானவன் போலத் [illegible]

ஏனெனில் தராஷ்கின் முனைப்பும், நிதானமும் உள்ளவன், தனது மனநிலையை வெளியே காட்டாதவன். மெதுவாகச் சீழ்க்கையடிப்பதையு , கவலையில்லாத நடைபோடுவதையும் கணக்கில் எடுத்துக் கொள்ளாவிட்டால், அவனது உற்சாகம் புற அடையாளங்கள் வாயிலாக வெளித் தெரியாது.

டிராம் நிறுத்தத்திற்கு இப்பால் இன்னமும் நூறு கெஜ தூரத்தில் அவன் இருந்த போது, பலகை அடுக்குகளுக்கிடையில் சச்சரவும் கீச்சிடலும் கேட்டன. உண்மையில், நகரத்தில் நடக்கும் ஒவ்வொன்றிலும் தராஷ்கினுக்கு நேரடியான அக்கறையுண்டு.

பலகை அடுக்குகளுக்கு அப்பால் மேலோட்டமாகப் பார்த்தான். அடியகன்ற காற்சட்டைகளும், தடித்த குட்டைக் கோட்டுகளும் அணிந்திருந்த மூன்று சிறுவர்களைக் கண்டான்; சினத்துடன் உறுமிக்கொண்டு அம்மூவரும் அவர்களிலும் சிறிய ஒரு பையனை நொறுங்க அடித்துக்கொண்டிருந்தனர். அவன் தலையிலும் கால்களிலும் ஒன்றுமில்லை. பஞ்சு வைத்துத் தைத்த கோட்டு போட்டிருந்தான். அது எப்படிச் சேர்த்து பிடித்துக் கொண்டிருக்கிறது என்று எவரையும் வியக்கச் செய்யும் அளவுக்கு நைந்தும் இருந்தது. ஒன்றும் பேசாது அவன் தன்னைத்தானே தற்காத்துக் கொண்டிருந்தான். அவனது மெலிந்த முகம் பிறாண்டப்பட்டிருந்தது, சிறிய வாய் உறுதியாக மூடியிருந்தது. ஓநாய்க்குட்டியின் கண்களைப் போன்று அவன் பழுப்பு நிறக் கண்கள் மின்னின.

உடனே தராஷ்கின் இரு பையன்களின் பின் காலர்களைப் பிடித்துத்தூக்கி, மூன்றாமவனின் உடலின் மெதுவான பகுதியில் ஓர் உதை கொடுத்தான். சிறுவன் விறிட்டுப் பலகைகளுக்குப் பின் மறைந்து கொண்டான்.

மற்றைய இருவரும் பிடியில் அகப்பட்டுத் தொங்கிக்கொண்டே பயங்கரமான சொற்களால் அவனை அச்சுறுத்தத் தொடங்கினர். தராஷ்கின் அவர்களை ஒரு முறை குலுக்க அவர்கள் அமைதியாக அடங்கிவிட்டனர்.

அவர்களது அழுக்கு முகங்களின் மேல் கண்ணோட்டம் விட்ட தராஷ்கின், ''ஏன்டா, காவாளிப் பயல்களே, திரும்பவும் சண்டை போடுவீங்களா? உங்களைவிடச் சின்னப் பையன்களை அடிக்கிற உங்களுக்குப் பாடம் புகட்டுறேன். மறுபடியும் நான் உங்களைப் பிடிக்க நேராதபடி நடந்துகொள்ளணும், புரியுதா?'' என்றான்.

அவனுடைய வினாவிற்கு உடன்பாடாகப் பதிலளிக்க வேண்டிய கட்டாயத்தில் அப்பையன்கள் இருந்தமையால் சிடுசிடுப்போடு முணுமுணுத்தார்கள்:

''புரியுது.''

அவன் அவர்களைப் போக அநுமதித்தான். அந்தப் பையனைப் பார்த்து மீண்டும் தங்கள் கைகளில் அவன் அகப்பட்டால் என்ன நடக்கும் எனக் கூறிக் கொண்டே, தங்கள் பைகளில் கைகளைப் போட்டுக்கொண்டு அவர்கள் புறப்பட்டுச் சென்றனர்.

அடிபட்ட பையனும் ஓட முயன்றான், ஆனால் அவன் மிகவும் பலவீனமாக இருந்தான். ஒரே இடத்தில் சுழன்றான், அவ்வளவுதான். மெல்லிய முனகலுடன் தரையில் அமர்ந்து, கிழிந்த சட்டைக்குள் தலையை நுழைத்துக்கொண்டான்.

தராஷ்கின் குனிந்து அவனைப் பார்த்தான். பையன் அழுது கொண்டிருந்தான்.

''ஏய், நீ எங்கே வசிக்கிறே?''

சட்டைக்குள் தலையை வைத்துக்கொண்டே, ''எங்கேயுமில்லை,'' எனப் பதிலளித்தான்.

''என்ன சொல்றே, எங்கேயுமில்லையா? உனக்கு அம்மா இருக்கிறாளா?''

''இல்லை.''

''அப்பாவும் இல்லையா? அப்படியா.''

மூக்கைச் சுளித்துக்கொண்டே தராஷ்கின் சற்று நேரம் அப்படியே நின்றான். சட்டைக்குள்ளேயே அந்தப் பையன் ஈயைப் போலச் சிணுங்கினான்.

''தின்ன ஏதாவது வேணுமா?'' என்று கரகரத்த குரலில் தராஷ்கின் வினவினான்.

''ஆமா.''

''சரி. என்னுடன் கழகத்துக்கு வா.''

பையன் எழுந்து நிற்க முயன்றான். ஆனால் அவன் கால்கள் அவனுக்கு உதவி செய்யவில்லை. தராஷ்கின் அவனைத் தன் கைகளில் தூக்கிக்கொண்டு —நாற்பது ராத்தல்களுக்குமேல் அப்பையன் எடை இல்லை—டிராம் வண்டிக்குத் தூக்கிச்சென்றான். அவர்கள் நெடுந்தூரம் போக வேண்டியிருந்தது. டிராம் வண்டி மாற்றிய போது தராஷ்கின் ஒரு ரொட்டி வாங்கிக் கொடுத்தான்; பசியுடன் பையன் அதனை விரைந்து கடித்துத் தின்றான். பயணத்தின் இறுதிப் பகுதியில் அவர்கள் நடந்தார்கள். கழக முற்றத்தின் கதவைத் திறந்து பையனை உள்ளே விட்டுக்கொண்டே, தராஷ்கின் அவனிடம் சொன்னான்:

''டேய், இங்கு எதனையும் திருடிவிடாதே.''

''திருட மாட்டேன். ரொட்டிதான் நான் திருடுவேன்.''

படகுகளின் வார்னிஷ் பூசிய பக்கங்களின் மீதும் தண்ணீரின் மீதும் விளையாடிய சூரியக் கதிர்களையும், ஆற்றில் தன் வண்ணத்தைப் பிரதிபலிக்கச் செய்த வெண்-பச்சை வில்லோ மரத்தையும், இரு துடுப்பும் நான்கு துடுப்பும் உடைய போட்டிப் படகுகளையும், முறுக்கேறிய தசைகளும் வெயிலில் பழுப்பேறிய மேனிகளுமாக அவற்றில் அமர்ந்திருந்த துடுப்புவலிப்போரையும் தூக்கக் கலக்கம் நிறைந்த கண்களால் பையன் பார்த்தான். அவனது ஒட்டியுலர்ந்த முகம் எதிலும் ஈடுபாடின்றி களைத்திருந்தது. தராஷ்கின் அப்பால் திரும்பியவுடனேயே கழக முற்றத்தின் அகன்ற வாயிலிலிருந்து மிதவைத் துறைக்குப் போடப்பட்டிருந்த நடைபலகைக்கு அடியில் நுழைந்து பந்து போலச் சுருண்டு உடனே உறங்கிவிட்டான் அப்பையன்.

மாலையில் நடைபலகைக்கு அடியிலிருந்து தராஷ்கின் அவனை வெளியே இழுத்து, ஆற்றில் முகத்தையும் கைகளையும் கழுவச் சொல்லி, இரவு உணவுக்காக உள்ளே அழைத்துச்சென்றான். கழக

உறுப்பினர்களுடன் இரவுணவு கொள்ள அவனையும் அமரச் செய்தான்.

''நமது கழகத்தில் இப்பையனை வைத்துக் கொள்ளலாம்,'' என தராஷ்கின் தனது சக கழக ஆட்களிடம் கூறினான். ''இவன் அதிகம் சாப்பிட மாட்டான். நாம் நீரில் அவனைப் பழக்கப்படுத்தி விடலாம்: எப்படியாயினும் இந்த இடத்திலே நமக்கு சுறுசுறுப்பான ஒரு பையன் தேவைதான்.''

அவனை அங்கே தங்குவதற்கு மற்றவர்கள் இசைந்தனர். இந்தப் பேச்சை அமைதியாகக் கேட்டுக்கொண்டே பையன் அளவாக உண்டான். இரவுணவுக்குப் பின் பேசாது எழுந்து சென்றான். எதுவும் அவனுக்கு வியப்பூட்டவில்லை. இதைவிட விந்தையானவற்றை அவன் பார்த்திருக்கிறான்.

தராஷ்கின் அவனை மிதவைத் துறைக்குக் கூட்டிப்போய் அவனுக்கு அருகே அமர்ந்து பேசத் தொடங்கினான்:

''உன் பெயர் என்ன?''

''இவான்.''

''எங்கேயிருந்து வந்தாய்?''

''சைபீரியா. ஆமூர் ஆற்றின் மேற்பகுதியிலிருந்து.''

''வந்து ரொம்பக் காலமாச்சா?''

''நேற்றுத்தான் வந்தேன்.''

''இங்கு எப்படி வந்தே?''

''கொஞ்ச தூரம் நடந்து வந்தேன், மீதி தூரத்தை ரயில் பெட்டிக்கு அடியில் புகுந்து வந்தேன்.''

''லெனின்கிராடுக்கு எதற்காக விரும்பி வந்தே?''

''அது என்னுடைய வேலை,'' என்று பதிலளித்த பையன் அப்பால் திரும்பிக் கொண்டான், ''இங்கே வந்திருக்கிறேன், ஏன்னா வரவேண்டியிருந்துச்சு.''

''எங்கிட்டே சொல்லு. உன்னைத் துன்புறுத்த மாட்டேன்.''

பையன் பதில் கூறவில்லை. மீண்டும் தோள்களைக் கூனிக்கொண்டு தன் சட்டைக்குள் தலையை மறைத்துக்கொண்டான். அன்று மாலை அவனிடமிருந்து தராஷ்கின் எதனையும் தெரிந்து கொள்ள முடியவில்லை.

25

நன்றாக வழுவழுப்பாக்கப்பட்ட கருங்காலிக் கட்டையாலான போட்டிப் படகு, கண்ணாடி போன்ற நீரில் மெதுவாக நழுவிக்கொண்டிருந்தது. பிடில் வாத்தியம் போன்று நேர்த்தியாக, குறுகிய பக்கங்கள் கொண்டிருந்தது அப்படகு. அதனுடைய இரண்டு சதைத் துடுப்புக்கள் நீர்மட்டத்தின் மேல் மெதுவாய் வழுக்கிக்கொண்டிருந்தன. ஷெல்காவும் தராஷ்கினும் முழங்கால்களை மடக்கி அசையாது அமர்ந்திருந்தனர். வெள்ளை அரைக்காற்சட்டையணிந்து இடுப்பு வரை வெற்றுடம்பாயிருந்தனர். அவர்களது தோள்களும் முதுகுகளும் வெயிலால் பழுப்பேறியிருந்தன.

சுக்கான்காரன், ஆழ்ந்த போக்குள்ள இளைஞன். கப்பற்படைக் குல்லாயும், கழுத்துக்குட்டையும் அணிந்திருந்த அவன் நிறுத்துக் கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

''புயலடிக்கப் போகுது,'' என்றான் ஷெல்கா.

ஆற்றில் வெப்பமாயிருந்தது, மரங்கள் அடர்ந்திருந்த கரையில் ஓர் இலைகூட அசையவில்லை. மரங்கள் மட்டுமீறி நேராக நிமிர்ந்திருப்பவை போலக் காணப்பட்டன. வானம் முழுதும் கதிரவனின் ஒளியால் நனைந்து கொண்டிருந்தது. சூரியனது வெண்ணீல ஒளி கீழே பளிங்கு மழையாக விழுவது போன்று கண்ணை உறுத்தி, நெற்றியில் நோவையும் உண்டாக்கிற்று.

''தயாராகுங்க,'' என்று ஆணையிட்டான் சுக்கான்காரன்.

துடுப்புவலிப்போர் முழங்கால்களின் மேல் முன்னே குனிய அவர்களது துடுப்புக்கள் பின்னே விரைந்தன, தண்ணீருக்குள் துடுப்பு அலகுகள் மூழ்கின. சுக்கான்காரனுடைய ஆணையின் பேரில் பின்னே சாய்ந்து, கால்களை அகற்றி, கிட்டத்தட்டப் படுக்கும் நிலையில் இருக்கைச் சட்டங்கள் மீது அசைந்தாடியவாறு அவர்கள் வலிக்கத் தொடங்கினார்கள்.

''ஒன்னு, இரண்டு!..''

துடுப்புக்கள் வளைந்தன. மயிர்மழிக்கும் கத்தி போன்று போட்டிப் படகு நீரைக் கிழித்துச் சென்றது.

ஒழுங்காகவும், விரைவாகவும் தங்கள் நாடித் துடிப்பிற்கு ஏற்ற கால அளவில் மூச்சிழுத்து விடுவது போன்று தண்டுவலிப்போர் வளைந்தனர், தங்கள் முழந்தாள்களின் மேல் படிந்தும் பிறகு எஃகு விசைச் சுருள்களைப் போல நிமிர்ந்தும் வலித்தனர். குருதியோட்டத்தின் கால அளவிற்கேற்ற தாளத்துடனும் அழுத்தத்துடனும் அவர்களது தசைநார்கள் இயங்கின.

இறுக்குவார்க் காற்சட்டைகள் அணிந்த மனிதர்கள் வெறுமனே துடுப்புக்களை அடித்துக்கொண்டிருந்த வேடிக்கைப் படகுகளைத் தாண்டிப் போட்டிப் படகு பறந்து சென்றது. படகு செலுத்தப்படும் போது ஷெல்காவும் தராஷ்கினும் முன்னே பார்த்துக் கொண்டிருந்தனர். சரிந்து விழாது மையத்திலிருப்பதற்காகச் சுக்கான்காரனது மூக்கு வளைவைப் பார்த்தவண்ணமே அமர்ந்திருந்தனர். வேடிக்கைப் படகிலிருந்தவர்களுக்கு அவர்கள் கடந்துசென்றபின் ஒன்றிரண்டு சொற்களைக் கூவுவதற்கு மட்டுமே நேரம் கிடைத்தது: அவ்வளவு விரைவாகச் சென்றது போட்டிப் படகு.

''அடடா, எப்படிப் பாய்ந்து போய்ட்டாங்க!..''

அவர்கள் கடற்கரையோரத்தை அடைந்தனர். மீண்டும் ஒரு நிமிட நேரம் தண்ணீரில் அசைவின்றி அவர்களது போட்டிப் படகு கிடந்தது. தங்கள் முகங்களிலிருந்து வியர்வையை வழித்தார்கள். ''ஒன்னு, இரண்டு!'' உல்லாசப் படகுக் கழகத்தைத் தாண்டி அவர்கள் திரும்பினர். அங்கு லெனின்கிராடுத் தொழிற்சங்கக் கழகத்தின் போட்டிப் படகுகளின் பாய்கள் படிகக்கல் போன்ற வெப்பத்தில் துவண்டு கிடந்தன. உல்லாசப் படகுக் கழகத்தின் தாழ்வாரத்தில் கருவிகள் இசைத்துக் கொண்டிருந்தன. பகட்டான வண்ணமுடைய கொடிகளும் சின்னங்களும் கரை நெடுகிலும் அசைவின்றித் தொங்

கின. ஆற்றின் நடுவிலிருந்த படகுகளிலிருந்து பழுப்பு நிறமுள்ள ஆட்கள் தண்ணீருக்குள் பாய்ந்து நீரை வாரியிறைத்தனர்.

நேவ்கா ஆற்றில் குளித்தவர்களின் ஊடே இப் போட்டிப் படகு வழிசெய்துகொண்டு போய், பாலத் திற்கடியில் வேகமாய்ச் சென்று, 'அம்பு'க் கழகத் தின் நால்வர் படகின் சுக்கான் அருகே சில கணங்கள் தயங்கிப் பிறகு அதனை முந்தியது. (சுக்கான்காரன் மெல்லத் திரும்பித் தோளுக்குப்பின் ''நாங்கள் உங்களை இழுத்துக்கொண்டு போகவா?'' என வின வினான்.) பிறகு காடுகள் செறிந்த குறுகலான க்ரெஸ்தோவ்கா ஆற்றிற்குள் திரும்பியது. இங்கே வெண் வில்லோக்களின் பசிய நிழலுக்கடியில் பெண் கள் பயிற்சிக் குழுவினரின் சிவப்புத் தலைக்குட்டை களும், மூடப்படாத முழங்கால்களும் ஒளி வீசின. படகோட்டும் பள்ளியின் மிதவைத்துறைப் பக்க மாகப் போட்டிப் படகு நின்றது.

ஷெல்காவும் தராஷ்கினும் மிதவைத்துறையில் குதித்து, சாய்ந்த நடைப்பலகையில் தங்கள் துடுப்பு களைக் கருத்துடன் வைத்தனர். போட்டிப் படகின் மேல் குனிந்து சுக்கான்காரன் கட்டளையின்படி தங் கள் கைகளில் அதனைத் தூக்கிக்கொண்டு அகன்ற வாயில் வழியாகப் படகு வீட்டிற்குச் சென்றனர். அதன் பிறகு பூந்தாரை கொட்டும் குளிப்பறைக்குள் அவர்கள் நுழைந்தனர். அப்புறம் உடம்பு சிவப் பேறும்படி நன்றாகத் துவட்டி, வழக்கப்படி எலு மிச்சம் பழம் கலந்த ஒரு குவளை தேநீர் பருகினர். இதன் பின்னர் அப்போதுதான் இந்த அதிசய உலகில் பிறந்திருப்பதாக உணர்ச்சி கொண்டனர். உலகம் பார்க்க மிக நன்றாகத் தோன்றிற்று. வாழ்வதற்குத் தகுதியுடையதாக இதை ஆக்குவது பயனுள்ளதாகத் தோன்றியது.

26

தரைமட்டத்திற்கு மேல் ஒரு மாடியில் வெளித் தாழ்வாரத்தில் தேநீர் அருந்தியபோது முதல் நாள்

தான் கண்டு கொணர்ந்த பையனைப் பற்றி தராஷ்கின் ஷெல்காவுக்குச் சொன்னான்.

''மிகவும் கெட்டிக்காரப் பையன், புத்திசாலிப் பையனுங்கூட,'' என்று கூறி, கைப்பிடிக் கம்பிகளின் மேல் குனிந்து பையனைக் கூப்பிட்டான்: ''இவான், இங்கே வா!''

உடனே படிகளில் வெறுங்காலுடன் அடிவைத்து நடக்கும் ஓசையில் பதில் வந்தது. இவான் தாழ்வாரத்திற்கு வந்தான். அவனது நைந்த சட்டை போய்விட்டது. (சுகாதாரக் காரணங்களுக்காக அது சமையலறை அடுப்பில் எரிக்கப்பட்டது.) படகோட்டும் அரைக்காற்சட்டையும், பல இடங்களில் நூலினால் சுருக்கிக் கட்டப்பெற்ற நம்பமுடியாத அளவு மிகப் பழமையான அரைக்கோட்டும் வெறும் மேனியில் அணிந்திருந்தான்.

''இதோ இவன்தான்,'' என்று தராஷ்கின் பையனைச் சுட்டிக்காட்டிச் சொன்னான். ''எவ்வளவு தான் அவனிடம் சொன்னாலும் அரைக்கோட்டை அவன் கழற்றுவதே கிடையாது. இதோடு நீ எப்படிக் குளிப்பே? அரைக்கோட்டு அப்படியொன்றும் நல்லதாகவும் இல்லை. அழுக்கு மூட்டை மாதிரி.''

''நான் குளிக்க முடியாது,'' என்றான் இவான்.

''நீ கறுத்துப்போய் அழுக்குடன் இருக்கின்றாய். உன்னைத் தொட்டியில் நாங்க குளிப்பாட்டப் போறோம்.''

''நான் தொட்டியில் குளிக்க மாட்டேன். இது வரையில் தான் முடியும்,'' என்று தன் தொப்புள் வரை சுட்டிக்காட்டித் தயங்கிக் கதவுப் பக்கமாகப் பின்னால் நகர்ந்தான்.

சூரிய வெப்பத்தினால் தோல் உரிந்திருந்த கெண்டைக் காலைச் சொறிந்தபடி தராஷ்கின் வருத்தத்துடன் முனகினான்:

''அங்கே பார், அவனை என்ன செய்வது?''

''நீ என்ன, தண்ணீரைக் கண்டு பயப்படுறியா?'' என வினவினான் ஷெல்கா.

பையன் அவனை உர்ரென்று பார்த்தான்:

''இல்லை. நான் பயப்படலே.''

''பிறகு ஏன் நீ ஆற்றில் குளிக்க விரும்பலே?''

பையன் தலை குனிந்து, பிடிவாதமாக உதடுகளைச் சேர்த்து அழுத்திக்கொண்டான்.

''ஏன் உனது அரைக்கோட்டைக் கழற்ற அஞ்சுறியா? அது திருடு போயிரும்னு அச்சமா?''

இவான் தோள் குலுக்கிப் பல்லிளித்தான்.

''அது சரி, இவான், நீ குளிக்க விரும்பாட்டா குளிக்கத் தேவையில்லை. அது உன் பாடு. ஆனா அந்த அரைக்கோட்டை நீ போட்டுக்கிட்டிருக்க நாங்க விடப்போறதில்லே. இதோ, என்னோடதை வச்சுக்க. அதனைக் கழற்று.''

ஷெல்கா தன்னுடைய அரைக்கோட்டின் பொத்தான்களைக் கழற்றினான். இவான் பின்வாங்கினான். அவன் கண்களின் விழிகள் இருமருங்கும் பாய்ந்து நோக்கின. ஒருமுறை கெஞ்சும் பாவனையில் தராஷ்கினை நோக்கியவாறு இருண்ட மாடிப் படிகளுக்குச் செல்லும் கண்ணாடிக் கதவை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தான்.

''ஓ, இல்லை! அது விதிகளில் கிடையாது,'' எனக் கூறி ஷெல்கா எழுந்துபோய்க் கதவைப் பூட்டிச் சாவியைப் பையில் போட்டுக்கொண்டு கதவுக்கு நேர் எதிரே அமர்ந்தான். ''ஊம், கழற்று,'' என்றான்.

ஒரு காட்டு விலங்கைப் போன்று பையன் சுற்றிலும் நோக்கினான். இப்போது அவன் கதவுக்கு மிக அருகில் நின்று கொண்டிருந்தான். அவன் முதுகுப் புறம் கண்ணாடிக் கதவு இருந்தது. புருவத்தைச் சுளித்தான். உறுதி தோன்றும் இயக்கத்துடன் திடீரென்று தனது கந்தையைக் கழற்றி ஷெல்காவிடம் எட்டி நீட்டிக்கொண்டு சொன்னான்:

''இதோ, உங்களுடையதைக் கொடுங்க.''

எனினும், பெருத்த வியப்புடன் ஷெல்கா பையனைத் தாண்டி அவனுடைய தோள் மேற்புறமாகக் கண்ணாடிக் கதவைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

''அதை எனக்குக் கொடுங்க,'' என்றான் இவான்

கோபமாக. ''என்னிடம் ஏன் வேடிக்கை செய்றீங்க, நீங்கள் குழந்தைகள் இல்லே.''

''வேடிக்கையான பையனப்பா!'' என்று கூறி ஷெல்கா இடிக்குரலில் சிரித்தான். ''பின்புறம் திரும்புடா.'' (தள்ளப்பட்டவன் போன்று பையன் மல்லாந்து விழுந்து கண்ணாடியில் தலையை மோதிக் கொண்டான்.) ''திரும்புடா, உன் முதுகில் எழுதியிருப்பதை நான் எப்படியும் பார்க்க முடியும்.''

தராஷ்கின் குதித்தெழுந்தான். பையன் தாழ்வாரத்தில் ஒரு பந்தைப் போல ஓடிச்சென்று கைப்பிடிக் கம்பிகளின் மேல் பாய்ந்தேறினான். அவன் குதிப்பதற்குள் தராஷ்கின் அவனைப் பிடித்துக் கொண்டான். இவானது கூரிய பற்கள் அவன் கையைக் கடித்தன.

''என்ன மாதிரி முட்டாள்! கடிப்பதை நிறுத்துடா!''

தராஷ்கின் பையனை இறுகப்பற்றிக்கொண்டான். அவனது மழித்த தலையைத் தடவினான்.

''பயல் முரடனாயிருக்கிறான். சுண்டெலியைப் போல நடுங்குகிறான். முட்டாள்தனத்தை நிறுத்து, நாங்கள் உன்னைத் துன்புறுத்த மாட்டோம்.''

பையன் அமைதியடைந்து தராஷ்கினின் பிடிக்குள் நின்றான். அவன் நெஞ்சு மட்டுமே விரைந்து அடித்தது. தராஷ்கினுடைய செவியில் திடீரென்று கிசுகிசுத்தான்:

''என் முதுகில் எழுதியிருப்பதை அவர் படிக்கக் கூடாது என்று சொல்லுங்க. யாரும் படிக்கக் கூடாது. அதுக்காக அவர்கள் என்னைக் கொன்னு போடுவாங்க.''

''நாங்கள் படிக்க மாட்டோம். எங்களுக்கு அக்கறை இல்லை,'' என்று திரும்பச் சொன்னான் தராஷ்கின். சிரிப்பின் மிகுதியினால் அவன் கண்களில் நீர் மல்கியது.

ஷெல்கா இன்னும் தாழ்வாரத்தின் மறுகோடியில் நின்றான்; தன் நகங்களைக் கடித்துக்கொண்டு ஏதோ புதிரை விடுவிப்பவன் போல முகஞ்சுளித்துக் கொண்டிருந்தான். திடீரென்று முன்னே பாய்ந்து,

தராஷ்கின் தடுத்ததையும் பொருட்படுத்தாது, பையனது முதுகு தன் புறம் வருமாறு திருப்பினான். பெருவியப்பு, அநேகமாக அச்சம் அவன் முகத்தில் பதிந்திருந்தது. பையனின் தோள்பட்டைகளுக்குக் கீழே, வியர்வையினால் பாதி கலைந்த நிலையில் அழியாத பென்சிலால் சொற்கள் எழுதப் பெற்றிருந்தன:

''பியோத்தர் காரி... முடி... மிக ஆறுதலளிப்... ஆலிவீனின் ஆழம் ஐந்து கிலோமீ... என்று எண்ணுகிறேன். தொடர்... ஆராய்... உதவி தேவை... பசி... மிகவிரை...''

''காரின், அது காரினுக்கு!'' எனக் கூவினான் ஷெல்கா.

அந்த நிமிடத்தில் புலனாய்வுத் துறையிலிருந்து வந்த மோட்டார் சைக்கிள் ஓட்டி ஒருவன் கழகத்தின் முற்றத்தில் தடதடவென்று வந்துசேர்ந்தான்.

''தோழர் ஷெல்கா, ஓர் அவசரத் தந்தி.''

அது பாரிசிலிருந்து காரின் அனுப்பிய தந்தி.

27

குறிப்பு நோட் புத்தகத்தின் மீது தங்கப் பென்சில் பதிந்தது.

''ஐயா, உங்களுடைய பெயர் என்ன?''

''பியான்கோவ்-பெத்கேவிச்.''

''உங்க வருகையின் நோக்கம்?''

''திரு. ரோல்லிங்கிடம் என்ஜினியர் காரினுடைய கருவி குறித்துப் பேச்சு நடத்த அதிகாரம் பெற்று வந்துள்ளேன் என்று சொல்லுங்கள், அதைப் பற்றி அவருக்கு எல்லாம் தெரியும்.''

செயலாளன் உடனே மறைந்தான். ஒரு நிமிடத்திற்குப் பின்னர் வால்நட் கதவைத் தாண்டி வேதியல் மன்னனின் செயலகத்துக்குள் காரின் நுழைந்தான். ரோல்லிங் எழுதிக் கொண்டிருந்தான். கண்களை நிமிர்த்தாமலேயே, வந்தவனை இருக்கையில் அமரச் சொன்னான். பிறகு, இன்னும் நிமிர்ந்து பாராமலே பின்வருமாறு கூறினான்:

''சின்னஞ்சிறு பண நடவடிக்கைகளையெல்லாம் எனது செயலாளன் கவனித்துக் கொள்வான்,'' என்று வலிமையற்ற கையினால் மையொற்றியை எடுத்துத் தான் எழுதியிருப்பதன் மேல் ஒத்தினான். ''இருப் பினும் நீங்க சொல்வதைக் கேட்கிறேன். இரண்டு நிமிடங்கள் தருகிறேன். என்ஜினியர் காரினைப் பற்றி என்ன புதிய செய்தி?''

காரின் கால்மேல் கால் போட்டமர்ந்து கைகளை முழந்தாள் மேல்வைத்துக் கொண்டான்.

''தன்னுடைய கருவி வடிவமைக்கப்படுவதன் சரியான நோக்கம் உங்களுக்குத் தெரியுமா என்று என்ஜினியர் காரின் அறிய விரும்புகிறார்,'' என்றான்.

''ஆம்,'' என பதிலளித்தான் ரோல்லிங், ''எனக்குத் தெரிந்தவரையிலும் தொழில் நோக் கங்களுக்கு அக்கருவி சற்று அக்கறைக்குரியது. எங் கள் நிறுவனத்தின் நிர்வாகக் குழு உறுப்பினர்கள் சிலரிடம் இதைப் பற்றி பேசியிருக்கிறேன், உரி மையை வாங்க அவர்கள் ஒப்புக்கொள்கிறார்கள்.''

''தொழிற்சாலையில் பயன்படுத்த ஆனதல்ல இக்கருவி,'' என்று நாசூக்காகக் கூறினான் காரின். ''இது அழிக்கும் எந்திரம். இரும்பு, எஃகு, சுரங்கம் முதலிய தொழில்களில் அது பயன்படும் என்பது உண்மையே, ஆனா தற்போது என்ஜினியர் காரின் வேறு கருத்துக்களைக் கொண்டுள்ளார்.''

''அரசியலா?''

''சிறிதும் இல்லை. என்ஜினியர் காரின் அரசி யலில் மிகுந்த ஆர்வம் கொண்டவரல்லர். தமது விருப்பத்திற்கு ஒரு குறிப்பிட்ட சமுதாய அமைப் பை நிறுவ அவர் நம்பிக்கை கொண்டிருக்கிறார்.''

''அவர் தமது அமைப்பை எங்கே நிறுவ விரும் புறார்?''

''இயல்பாகவே, எல்லா இடத்திலும், ஐந்து கண்டங்களிலும்.''

''ஓகோ,'' என்று வியந்தான் ரோல்லிங்.

''என்ஜினியர் காரின் கம்யூனிஸ்ட் அல்ல. கவ லைப்பட வேணாம். ஆனா அவர் பூரணமா உங்கள் பக்கமும் இல்லை. மீண்டும் சொல்றேன், அவரிடம்

மிகவும் விரிவான திட்டங்கள் இருக்கு. மிக அசாதாரணமான கற்பனையில் தோன்றும் விருப்பத்தையெல்லாம் செயற்படுத்துற திறமையை என்ஜினியர் காரினுக்கு அவர் கருவி சாத்தியமாக்கித் தரும். ஏற்கெனவே கருவி செய்து முடிக்கப்பட்டு விட்டது. இன்றைக்குக் கூட அதனை இயக்கிக் காட்ட முடியும்.''

''உம்ம்,'' என்றான் ரோல்லிங்.

''திரு. ரோல்லிங், உங்களோட எல்லா நடவடிக்கைகளையும் காரின் கண்காணித்து வருகிறார். உங்களது பரப்பு மோசமானது அல்ல, ஆனால் உங்களுக்குப் பெரிய கருத்தெதுவும் இல்லை என்று கருதுகிறார். வேதியல் பெரும் தொழிற்சாலைகளோ, வேதியல் விமானப் போர் முறையோ, ஐரோப்பாவை அமெரிக்கச் சந்தையாக மாற்றுவதோ... ஆகியவையெல்லாம் அற்பம், இவற்றுள் மையக் கருத்து இல்லை. என்ஜினியர் காரின் உங்களுடைய ஒத்துழைப்பை விரும்புகிறார்.''

''யார் பைத்தியம், நீங்களா அவரா?'' என வினவினான் ரோல்லிங்.

காரின் நகைத்துக்கொண்டே மூக்கின் பக்கத்தில் ரிருவிருப்புடன் ஒரு விரலால் தேய்த்துக்கொண்டான்.

''பாருங்க, இரண்டு நிமிடம் என்று சொல்லி ஒன்பதரை நிமிடங்கள் என் பேச்சைக் கவனிச்சிருக்கீங்க. இதுவே ஒரு நல்ல அறிகுறி.''

''என்ஜினியர் காரினின் புதுக்கண்டுபிடிப்புக்காக ஐம்பது ஆயிரம் ப்ராங்கு தரத் தயாரா இருக்கேன்,'' என்று சொல்லிக்கொண்டே ரோல்லிங் மீண்டும் எழுதத் தொடங்கினான்.

''உங்களோட பேரத்தை நான் இந்த வழியில் புரிஞ்சுக்கிறேன்: தந்திரமாகவோ அல்லது பலாத்காரமாகவோ அந்தக் கருவியைக் கைப்பற்றிக் கொண்டு பிறகு காரினது துணையாளை க்ரெஸ்தோவ்ஸ்கி தீவில் செய்தது போல காரினையும் முடித்துவிடலாம் என்று உத்தேசிக்கிறீங்க. நான் கூறுவது சரிதானே?''

ரோல்லிங் பேனாவைக் கீழே வைத்தான். அவனது

உள்ளக் கிளர்ச்சியை முகத்தில் தோன்றிய இரு செந்நிறக் கறைகள் மட்டுமே காட்டிக்கொடுத்தன. புகைந்துகொண்டிருந்த ஒரு சுருட்டை ஆஷ்டிரேயி லிருந்து எடுத்து, தன் நாற்காலியில் பின்னுக்குச் சாய்ந்தான். உணர்வற்ற மங்கிய கண்களால் காரி னை விழித்து நோக்கினான்.

''என்ஜினியர் காரினை நான் அப்படித்தான் செய்யப்போகிறேன் என்று வைத்துக்கொண்டால், பிறகு என்ன?''

''பிறகு, என்ஜினியர் காரின் தவறாகக் கருதியுள் ளார் என்று தெரிகிறது.''

''எதில்?''

''நீங்க மிகப்பெரும் அளவில் கயவாளி என்று உத்தேசித்ததில்,'' என்று முறுவலித்துக்கொண்டும், துடுக்கான வகையில் ரோல்லிங்கைப் பார்த்துக் கொண்டும் மெதுவாக கூறினான்.

ரோல்லிங் ஒரு புகைத் திரளை வெளியே ஊதி விட்டுத் தன் மூக்கிற்கு முன்னால் சுருட்டை அசைத் தான்.

''நூற்றுக்கு நூறு விழுக்காட்டையும் நானே முழுமையாக எடுத்துக்கொள்ள முடியும் போது என் ஜினியர் காரினுடன் லாபத்தைப் பங்கு போடுதல் முட்டாள்தனமாகும்,'' என்று அவன் சொன்னான். ''நல்லது, இதற்கு ஒரு முடிவு கட்டுவதற்காக, நூறாயிரம் ப்ராங்கு தர முன்வருகிறேன். மேலே ஒரு சன்டீம் காசு கூடத் தர மாட்டேன்.''

''திரு. ரோல்லிங், நீங்க எப்படியோ எல்லாத் தையும் போட்டுக் குழப்புறீங்க. நீங்க எதனையும் இழக்க முன்வரலே. உங்களோட கையாட்களாகிய ஸெமியோனவும் திக்லீன்ஸ்கியும் காரின் எங்கே வசிக்கிறார் என்பதைக் கண்டுபிடிச்சுட்டாங்க. போ லீசுக்கு அறிவியுங்க. அவர் போல்ஷெவிக்குகளின் ஒற்றன் எனக் கைது செய்யப்படுவார். பிறகு ஸெமி யோனவும் திக்லீன்ஸ்கியும் கருவியையும், அமைப் புப்படங்களையும் திருட முடியும். எல்லாத்துக் கும் ஐயாயிரத்திற்கு மேல் செலவாகாது. காரினை, மீண்டும் அமைப்புபடங்களைச் செய்ய முயல முடி

யாதபடி செய்து, போலந்து வழியாக ருஷ்யாவுக்குத் தக்ககாவலோட அனுப்பி, எல்லையில் அவரைக் கொல்லச் செய்யலாம். எளிமையானதும் மலிவானதும். நூறாயிரம் ப்ராங்கு ஏன் வீணாக்க விரும்புறீங்க?''

ரோல்லிங் எழுந்தான். காரினைக் கடைக்கண்ணால் நோட்டமிட்டு, இங்கும் அங்கும் நடக்கத் தொடங்கினான். வெண்ணிறக் கம்பளத்திற்குள் அவனது பளபளத்த தோல் மூடுசெருப்புக்கள் அழுந்தின. திடீரென்று தன் பையிலிருந்து கையை எடுத்து விரல்களை நொடித்தான்.

''அற்ப விளையாட்டு,'' என்றான். ''நீங்க புளுகுறீங்க. ஐந்து நடவடிக்கைகளுக்குப் பின்வரக் கூடிய எல்லாவகையான கூட்டுகளையும் எண்ணிப் பார்த்தேன். ஓர் ஆபத்தும் இல்லை. நீங்க சாதாரண மோசடிக்காரன். காரினைத் தடுத்து வளைச்சிட்டேன். அவனுக்குத் தெரியும், அதனால்தான் பேரம் பேச உங்களை அனுப்பியிருக்கிறான். அவனது கருவியின் உரிமைக்காக சல்லிக்காசு கூடத் தர மாட்டேன். காரின் வீடுவரை பின்தொடரப் பட்டுள்ளான். அவன் என் கையிலிருக்கிறான். (பரபரப்புடன் தன் கடிகாரத்தைப் பார்த்தான். அதே பரபரப்புடன் திரும்பவும் தன் அரைக்கோட்டுப் பையினுள் அதைத் திணித்துக் கொண்டான்.) நாசமாப் போங்க!''

அதே நேரத்தில் காரினும் எழுந்து, தலை குனிந்தபடி மேசைக்கருகில் நின்றான். ரோல்லிங் தன்னைத் தொலைந்து போவெனச் சொன்னபோது தலையைத் தடவிக்கொண்டான். எதிர்பாராத முறையில் ஒரு கண்ணிக்குள் விழுந்துவிட்டவன் போலத் தாழ்ந்த குரலில் சொன்னான்:

''சரி, திரு. ரோல்லிங், உங்களோட நிபந்தனைகளை நான் ஒப்புக்கொள்றேன். நூறாயிரத்தைப் பற்றிப் பேசினீங்க...''

''சல்லிக்காசு இல்லை!'' என்று கூவினான் ரோல்லிங். ''இங்கிருந்து வெளியேறுங்க, இல்லாட்டா வெளியே தள்ளப்படுவீங்க!''

தனது கழுத்துப்பட்டியை விரல்களால் காரின் இழுத்துக்கொண்டான். அவன் கண்கள் உருண்டன. அவன் தள்ளாடினான்.

''எந்தத் தந்திரங்களும் செய்ய முயலாதே!'' எனக் கர்ஜித்தான் ரோல்லிங். ''வெளியே போ!''

காரின் கமறிக்கொண்டே மேசை மீது பக்கவாட்டில் விழுந்தான். ரோல்லிங் முன் எழுதிக் கொண்டிருந்த தாள்களின் மேல் அவனது வலக் கை படிந்து இசிவுற்ற நிலையில் அவற்றைப் பற்றிற்று. ரோல்லிங் குதித்தோடி மின்சார மணியை அடித்தான். ஒரு விநாடியில் செயலாளன் தோன்றினான்...

''இந்த ஆளை வெளியே நெட்டித்தள்ளுங்க...''

செயலாளன் சிறுத்தைப் போலப் பதுங்கினான், அவனது எடுப்பான மீசை சிலிர்த்தது. மெல்லிய கோட்டுக்குள் எஃகுப் போன்ற தசைநார்கள் நெளிந்தன... எனினும், காரின் ரோல்லிங்குக்குத் தலை குனிந்து மேசையிலிருந்து முன்னேயே நகர்ந்து கொண்டிருந்தான். சலவைக்கல் மாடிப்படிகளில் ஓடி, மால்ஸேர்ப் சாலையை அடைந்து, மூடிய வாடகைக் காரில் குதித்தமர்ந்து, ஒரு முகவரியை உரக்கக் கூறி, இரு மருங்கு சன்னல்களையும் மூடிப் பச்சை நிறத் திரைகளை இழுத்துவிட்டு, குறுகிய, கூர்மையான சிரிப்புச் சிரித்தான்.

பையிலிருந்து கசக்கிச் சுருக்கிய தாள் ஒன்றை வெளியே எடுத்து முழந்தாள்களின் மேல் வைத்துக் கருத்துடன் அதை விரித்தான். (ஒரு பெரிய குறிப்பு நோட்டிலிருந்து கிழிக்கப்பெற்றிருந்தது அது.) அந்தக் கசங்கிய தாளில் அன்றையத் தொழில் பற்றிய குறிப்புகளை ரோல்லிங் கிறுக்கியிருந்தான். ஒரு வேளை காரின் ரோல்லிங்கின் அலுவலகத்திற்குள் நுழைந்த போது விழிப்புணர்வுடன் இருந்த ரோல்லிங்கின் கை இரகசிய எண்ணங்களை எந்திரகதியில் எழுதத் தொடங்கியது. ஒன்றன்பின் ஒன்றாக மூன்று முறை ஒரு முகவரி எழுதப் பெற்றிருந்தது: ''63, கொபெலேன் தெரு, என்ஜினியர் காரின்''. (இது விக்டர் லெனுவாரின் புது முகவரி. அப்போதுதான் ஸெமியோனவ் தொலைபேசி மூலம் இதனை அறி

வித்திருந்தான்.) பிறகு: ''ஸெமியோனவுக்கு—ஐயாயிரம் ப்ராங்கு...'' என்று குறிக்கப்பட்டிருந்தது.

''அதிர்ஷ்டம்! என்ன ராட்சத அதிர்ஷ்டம்!'' என்று கிசுகிசுத்துக் கொண்டே, தன் முழங்கால்களின் மேல் அத்தாளைக் கருத்துடன் விரித்து நிமிர்த்தினான் காரின்.

28

பத்து நிமிடங்களுக்குப் பிறகு சென் மிஷேல் சாலையில் காரின் தனது காரை விட்டு வெளியேறினான். 'பேந்தியன்' காப்பிக் கடையின் தகட்டுக் கண்ணாடி சன்னல்கள் மேல் தூக்கப்பெற்றிருந்தன. காப்பிக் கடையின் பிற்பகுதியில் ஒரு மேசையருகில் விக்டர் லெனுவார் அமர்ந்திருந்தான். அவன் காரினைக் கண்டவுடன் கையைத் தூக்கி விரல்களை நொடித்தான்.

அவனது மேசைக்கு அருகில், வெளிச்சத்துக்கு முதுகைக் காட்டியவாறு விரைவாக காரின் அமர்ந்தான். முகம்பார்க்கும் கண்ணாடியின் முன் அவன் அமர்ந்திருப்பது போலத் தோன்றிற்று: விக்டர் லெனுவாரின் கூரியதாடி, மெத்தென்ற தொப்பி, பவ் டை, கோடுபோட்ட கோட்டு ஆகியவையெல்லாம் ஒரே மாதிரி இருந்தன.

''வெற்றிக்கு என்னைப் பாராட்டு! அபாரமான வெற்றி!'' என்று கண்களில் சிரிப்பு எழ காரின் பேசினான். ''எல்லாவற்றையும் ரோல்லிங் ஒப்புக்கொள்கிறான். எல்லாச் செலவுகளையும் அவனே ஏற்பான். கருவியைப் பயன்படுத்தத் தொடங்கியவுடன் மொத்த வருவாயில் நமக்கு ஐம்பது விழுக்காடு, அவனுக்கு ஐம்பது விழுக்காடு.''

''ஒப்பந்தத்தில் நீ கையெழுத்திட்டு விட்டாயா?''

''இன்னும் இரண்டு அல்லது மூன்று நாள்களில் கையெழுத்திடுவோம். கருவியை இயக்கிக் காட்டுவதை ஒத்திப்போட வேண்டும். கருவி வேலை செய்வதைப் பார்த்த பிறகுதான் ஒப்பந்தத்தில் கையெ

ழுத்திடுவது என்பது ரோல்லிங்கின் நிபந்தனை.''

''ஒரு பாட்டில் ஷாம்பேயின் வாங்கித் தரு கிறாயா?''

''இரண்டு, மூன்று, ஒரு டஜன்.''

''இருந்தாலும், வருவாயில் பாதியை அந்தச் சுறாமீன் விழுங்கப் போவது வருந்தத்தக்கதே,'' என்றான் லெனுவார். பணியாளை அழைத்து, ''ஒரு பாட்டில் 'இர்ருவா' கொண்டுவா. இருப்பதற்குள் மிகவும் இனிப்புக் குறைந்ததாக...''

''முதல் இல்லாமல் நாம் நகர முடியாது. ஒன்னு சொல்றேன், விக்டர், என்னோட காம்ச்சாத்கா தொழில் திட்டம் மட்டும் சரியாக நிறைவேறிவிட் டால், இந்த ரோல்லிங்கைப் போலப் பத்து பேரைக் கூடச் சைத்தானிடம் அனுப்பிருவேன்.''

''அதென்ன காம்ச்சாத்கா திட்டம்?''

பணியாள் ஒரு பாட்டிலும், இரண்டு கிளாசு களும் கொண்டுவந்தான். காரின் ஒரு சுருட்டைப் பற்றவைத்துக் கொண்டு, பிரம்பு நாற்காலியில் சாய்ந்து முன்னும் பின்னும் ஆடினான். புருவங் களைச் சுருக்கிக்கொண்டு தன் கதையைச் சொல்லத் தொடங்கினான்:

''மண்ணியலாளன் நிக்கலாய் க்ரிஸ்தபோரவிச் மாந்த்ஸெவை உனக்கு நினைவிருக்கா? 1915இல் அவன் பெத்ரோகிராடில் என்னைத் தேடி வந்தான். தொலைகிழக்கிலிருந்து அவன் அப்போதுதான் திரும்பி வந்திருந்தான். படைக்கு ஆள் திரட்டுவது கேட்டு அஞ்சி போர் முனைக்கு அனுப்பப்படாமலி ருக்கும் பொருட்டு எனது உதவியை வேண்டினான்.''

''பிரிட்டிஷ் தங்க நிறுவனத்திற்காக மாந்த் ஸெவ் வேலை செய்தான், அல்லவா?''

''லேனா, ஆல்டான் ஆகிய ஆற்றுப் பகுதிகளி லும், பிறகு கொலிமா பிரதேசத்திலும் ஆய்வு நடத் தினான். அற்புதமான கதைகளைச் சொன்னான். சுற்றிலும் முப்பது பவுண்டு எடைத் தங்கக் கட்டி களாகவே கிடப்பதை அவர்கள் கண்டார்கள்... அப் பத்தான் முதன் முதலா எனக்கு அந்த எண்ணம் தோன்றியது. என் வாழ்க்கையின் மிகப்பெரிய எண்

ணம் அதுதான்... இது துணிச்சலை விட மேலானது, பைத்தியக்காரத்தனமானதும் கூட, ஆனா இன்னும் அதில் நான் நம்பிக்கை வச்சிருக்கேன். நான் எதை நம்பினாலும் சரி, சைத்தான்கூட என்னைத் தடுக்க முடியாது. இங்கே பார், நண்பரே, இந்த உலகத்திலே என்னோட உள்ளமும், ஆன்மாவும் ஒருசேர நான் நாட்டம் வச்சிருக்கிற பொருள் அதிகாரம்... அரசனாகவோ அன்றி சக்கரவர்த்தியாகவோ... அது அற்பமானது, கொச்சைத்தனமானது, சலிப்புத் தருவது. இல்லை. நான் சொல்றது பரிபூரண அதிகாரம்... சில சமயம் என்னோட திட்டங்களைப் பற்றி உனக்கு விபரமாகச் சொல்வேன். அதிகாரத்தைப் பெறுவதற்கு எனக்குத் தங்கம் வேண்டும். நான் விரும்புற வழியில் ஆட்சி செலுத்த வேண்டுமானால் சகல தொழில்துறை, வங்கி, முதலிய எல்லாவற்றின் மன்னர்களையும் விட மிகுதியான தங்கம் நான் வைத்திருக்க வேண்டும்.''

''உன்னோட திட்டங்கள் நிச்சயமா துணிச்சலானது,'' என்றான் லெனுவார் எக்களிப்புடன் சிரித்துக்கொண்டே.

''ஆனா நான் சரியான வழியில் போறேன். இந்த உலகம் பூராவுமே என் கைக்குள்ளாக இருக்கும்—இதைப் போல!'' தன் விரல்களை மூடி இறுக்கிக் காட்டினான் காரின். ''என்னுடைய பாதையிலமைந்த மைல் கற்கள் மேதையான நிக்கலாய் க்ரிஸ்தபோரவிச் மாந்த்ஸெவ், பிறகு ரோல்லிங், அல்லது ஒருவகையில் அவனது கோடிகள், மூன்றாவதாக எனது அழிவுக்கதிர்...''

''பிறகு மாந்த்ஸெவ் விஷயம் என்ன ஆச்சு?''

''1915இல் என்னால் எவ்வளவு இயலுமோ அவ்வளவு பணத்தையும் திரட்டினேன். லஞ்சம் தருவதைவிட மிகுதியும் துடுக்காத்தான் அவனைப் போர்ப் படைப் பணியிலிருந்து விடுவிச்சேன். காம்ச்சாத்காவுக்கு, பின்னணிப் பகுதிக்கு ஆராய்வதற்காகச் சிறு குழுவுடன் சேர்த்து அனுப்பினேன்... 1917 வரை அவன் எனக்குக் கடிதங்கள் எழுதி வந்தான்: வேலை கடுமையா இருக்கு, பயங்கரமா சலியாம

உழைக்கக் கூடியது, அவனோட வேலை நிலைமைகள் நாய்க்குக்கூட பொருந்திவரலே... 1918இலிருந்து அவன் தொடர்பு விடுபட்டுப் போச்சு, ஏன் என்பது உங்களுக்குத் தெரியும்... எல்லாமே அவன் தேடிக் கண்டுபிடிக்கிறதைப் பொருத்திருக்கு.''

''எதைத் தேடிக்கிட்டிருக்கிறான்?''

''அவன் எதையும் தேடிக்கிட்டிருக்கவில்லை... நான் தத்துவார்த்தமாகக் கொண்டுள்ள சில ஊகங்களை மாந்த்ஸெல் உறுதிப்படுத்தினா மட்டும் போதும். அமெரிக்காவிலும், ஆசியாவிலும் இருக்கும் பசிபிக் பெருங்கடல் கரைப் பகுதிகள், கடலின் அடியில் அமிழ்ந்து போன பழங்காலத்து கண்டத்தின் பிரதேசங்களாம். இம்மாதிரி ராட்சசப் பளு இளகிய நிலையிலிருக்கும் பாறை அடுக்குகளின் பாகுபாட்டில் கட்டாயம் சில மாற்றங்களை உண்டாக்கியிருக்கணும். உண்மை என்னவென்றால் 'ஆலிவீன் பட்டை'* என்றழைக்கப்படும் உருகிப் போன கனியங்கள் உலகில் மற்றெங்கையும்விட பசிபிக் பெருங்கடலின் ஓரங்களில் தரை மேற்பரப்பின் மிக அருகே இருக்கும் என்பதை தென் அமெரிக்க ஆண்டிஸ், கார்டில்லெர்ராஸ் ஆகிய இயக்கமுள்ள எரிமலைத் தொடர்களும், ஜப்பானிலும், காம்ச்சாத்காவிலுமுள்ள எரிமலைகளும் உறுதிப்படுத்தும். அக்குழம்பில் தங்கம், பாதரசம், ஆலிவீன், முதலியன கலந்திருக்கு. இதுவரைக்கும் புரிந்து கொண்டாயா?''

''அந்த 'ஆலிவீன் பட்டையை' நீ ஏன் விரும்புறாய் என்று எனக்குத் தெரியலே.''

''உலகை வெல்ல, நண்பரே... நமது வெற்றிக்குக் குடிப்போம்...''

29

கடைப் பணிப்பெண் போல கருநிறப் பட்டுச் சட்டையும் குட்டைப் பாவாடையும் அணிந்துகொண்

* புவி ஓட்டிற்கும் கட்டியாக இருக்கும் நடுப் பகுதிக்கும் இடையில் 'ஆலிவீன் பட்டை' எனப்படும் உருகிய உலோக வகைகளின் குழம்பு ஒன்று இருக்கிறது என்ற ஒரு கொள்கை நிலவுகிறது. (ஆ-ர்.)

டும் ஸோயா மான்ரோஸ் பஸ்ஸை விட்டிறங்கி, கூட்டம் மிகுந்த தெருவின் குறுக்கே ஓடி, இரு தெருக்களில் வாயில்கள் கொண்ட 'காஃபே குளோப்' என்ற ஒரு பெரிய காப்பிக் கடைக்குள் நுழைந்தாள்.

ஒரு காலியான மேசைக்கு அருகில் அமர்ந்தாள். ஒரு சிகரெட் பற்றவைத்துக்கொண்டு, அங்கிருந்த பணியாளனை ஒரு லிட்டரளவு சிவப்பு ஒயின் கொணரச் சொல்லி, ஒரு கிளாசில் ஊற்றிவிட்டு, குவித்த கைகளில் தலையை வைத்தபடி அமர்ந்திருந் தாள்.

''குடிப் பழக்கம் கெட்டது, சின்னப் பெண்ணே,'' என்று கூறி அவள் முதுகில் தட்டிவிட்டு ஒரு கிழட்டு நடிகன் அப்பால் சென்றான்.

அவள் எதிர்பார்த்திருந்த மனிதன் வருவதற் குள் மூன்று சிகரெட்டுகள் புகைத்துவிட்டாள். கடை சியில் ஏக்கத் தோற்றமுள்ள தடித்தவனும், குறுகிய மயிர் படிந்த நெற்றியும், கடிய கண்களும் கொண்ட வனுமான ஒருவன் உலாவியபடி அவசரமின்றி கடைக் குள் வந்தான். அவன் மீசைகளை மேல்நோக்கி முறுக்கிவிட்டிருந்தான். தனது தடித்த கழுத்தைச் சுற்றி இறுக்கமாக வண்ணப் பட்டை அணிந்திருந் தான். அநாவசியப் பகட்டின்றி நன்கு உடுத்தியிருந் தான். அவன் அமர்ந்து, ஸோயாவிடம் சுருக்கமாக நலம் பாராட்டினான். அறையைச் சுற்றிலும் அவன் நோட்டம் விடுகையில், அவன் கண்களில் பட்ட சிலர் பார்வையைத் தாழ்த்திக்கொண்டனர். இவன் தான் வாத்து மூக்கன் கஸ்டோன். முதலில் திருட னாக இருந்து, பிறகு அவப்பேர்பெற்ற போனோ கூட் டத்தைச் சேர்ந்த வழிப்பறிக்காரனானான். போரின் போது சார்ஜண்ட் பதவி வரை உயர்ந்தான். படைக் கலைப்புக்குப் பின்பு எல்லாவகையான ரகசிய மற் றும் சந்தேகப்படத்தக்க தொழில்களின் கையாளாக அமைதியாக வேலை செய்து வந்தான்.

அவன் ஸோயாவை மிகவும் மரியாதையுடன் நடத்தினான். இரவு ரெஸ்டாரெண்டுகளில் அவ ளைக் கண்ட போது மிகக் கண்ணியமாக நடனத் திற்கு அவளை அழைத்து, அவள் கையில் முத்த

மிட்டான். பாரிசில் வேறு எந்தப் பெண்ணிடத்திலும் அவன் இவ்வாறு நடந்துகொண்டது இல்லை. ஸோயா தனது நட்புறவை அவனுடன் வைத்துக் கொண்டு இருந்தாள். அவன் அவளுடைய மிகவும் நுண்மையான வேலைகளில் சிலவற்றை அவ்வப் பொழுது நிறைவேற்றினான்.

புளித்த ஒயினைச் சப்பிக் குடித்துக்கொண்டும், தனது சுங்கானிலிருந்து வரும் புகையில் கண்ணைச் சுருக்கிக்கொண்டும், ஸோயா சொல்ல விரும்பியதையெல்லாம் கஸ்டோன் மனச்சோர்வோடு செவி மடுத்தான். சொல்லி முடித்த பொழுது ஸோயா தன் விரல்களை நன்கு இழுத்துச் சொடக்கினாள்.

''ஆனால் அது... ஆபத்தானது,'' என்றான் அவன்.

''கஸ்டோன், அது நிறைவேறினால் உனது வாழ்க்கை பூரா பணக்காரனா இருப்பாய்.''

''உலகத்தில் உள்ள எல்லாப் பணமும் கிடைக்கிறதா இருந்தாலும் திருட்டு, கொலை ஆகிய எதிலும் நான் கலக்க மாட்டேன்: இப்போது காலம் மாறிவிட்டது. இன்று கொள்ளைக்காரர்கள் போலீஸ் தொழிலை மேலாகக் கருதுறாங்க. திருட்டே தொழிலாக இருந்தவர்கள் பத்திரிகை வெளியிடவும், அரசியலில் ஈடுபடவும் செய்யுறாங்க. பணத்திற்காக நீங்க என்னைக் கூலியாளாக்க விரும்பினா—நான் மறுக்கிறேன். உங்களுக்காக நான் அதைச் செய்யுறது அது வேறு. உங்களுக்காக என் தலையைக் கூடக் கொடுப்பேன்.''

தனது சிவந்த உதடுகளின் ஓரத்தை விட்டுப் புகையை வெளியே ஊதிவிட்டு, ஸோயா மெல்ல முறுவலித்துத் தனது அழகிய கையை வாத்து மூக்கனின் சட்டைக்கையின் மேல் வைத்தாள்.

''அப்பச் சரி, அதை எனக்காகச் செய்...''

30

மான்மார்டரில் உள்ள குறுகிய தெருவொன்றில் ரோல்லிங்கின் கார் வந்து நின்றது. ஓர் இரவு ரெஸ்

டாரெண்டில் பத்து சன்னல்களினின்றும் வந்த வெளிச்சம் தெருவை நிறைத்தது.

குட்டையாக, வெப்பமும் புகையும் நிறைந்ததாக இருந்த அம்மண்டபத்தில் சுவர்களிலும், மேல் அட்டத்திலும் நிலைக்கண்ணாடிகள் இருந்தன. வண்ணத்தாள் நாடாக்கள், செலுலோய்ட் பந்துகள், எறியப்பெறும் வர்ணக் காகிதத் துண்டுகள் ஆகியவற்றின் நடுவிலே காகித ரிப்பன்களில் மாட்டிக் கொண்ட ஜோடிகள் நடனமாடினார்கள். ஒரு பியானோ ஒலித்துக்கொண்டிருந்தது. பிடில்கள் கீச் சொலித்தன. வியர்த்திருந்த மூன்று நீக்ரோக்கள் தாம்பாளங்களைக் கொட்டினர், மோட்டார் ஒலிக் குழலை அமுத்தினர், மரப்பலகைகளில் அடித்தனர், மணிகளையடித்தனர், தட்டுக்களைத் தட்டி ஒலி எழுப்பினர், பித்தளைத் தட்டைப்பறையைத் தட்டினர்.

''எனது குழந்தைகளே, வேதியல் மன்னருக்கு வழிவிடுங்கள்!'' என்று தலைமை வெயிட்டர் இரைந்து, குறுகிய மேசைக்குப் பின்னே மிகவும் சிரமப்பட்டு அவர்களுக்கு இடங்கள் பிடித்துக்கொடுத்தான். ஸோயாவும் ரோல்லிங்கும் அமர்ந்ததும் அவர்கள் மேல் செலுலோய்ட் பந்துகளும், காகிதத் துண்டுகளும், காகித ரிப்பன்களும் பறந்துவந்து விழுந்தன.

''நீங்க கவனத்தை ஈர்த்துக் கொண்டிருக்கீங்க,'' என்றான் ரோல்லிங்.

தன் கண்கள் பாதிமூடிய நிலையில் ஸோயா ஷாம்பேயின் குடித்துக் கொண்டிருந்தாள்.

மெதுவாகத் தன் தலையைத் திருப்பினாள்—கரியினால் கோடிட்டது போன்ற ஒருவனது கறுத்த கண்கள் ஏங்கிய பாராட்டுடன் அவளை ஊடுருவிப் பார்த்துக் கொண்டிருந்தன. அவன் யாராக இருக்கக் கூடும்? அவன் ஆங்கிலேயனும் அன்று, பிரெஞ்சுக்காரனும் அன்று. அவனை முன்னமேயே எங்கோ அவள் பார்த்திருப்பது போலத் தோன்றியது.

நடனமாடிக் கொண்டிருந்த கூட்டத்திற்குள் வலியப் புகுந்து சென்று ஒரு பணியாள் அவள் கையில்

ஒரு குறிப்பைக் கொடுத்தான். வியப்புடன் தன் இருக்கையின் பின்னே சாய்ந்தாள். அதைப் படிக்கு முன் பக்கத்தில் சுருட்டை உறிஞ்சிக்கொண்டிருந்த ரோல்லிங்கின் மீது கண்ணோட்டினாள்.

''ஸோயா, நீங்க அவ்வளவு கனிவோடு பார்த்துக் கொண்டிருக்கும் அம்மனிதன்தான் காரின்... உங்க கைக்கு முத்தமிடுகிறேன். ஸெமியோனவ்.''

அவள் ஒரேயடியாக வெளிறிப் போயிருக்க வேண்டும், ஏனெனில் அருகில் ஒரு குரல் கூச்சலுக்கு மேலெழுந்து கேட்டது: ''பாருங்க, அந்தச் சீமாட்டிக்கு உடல் நலமில்லை.'' பிறகு அவள் தன் காலி கிளாசை நீட்டினாள். பணியாள் ஷாம்பேயினால் அதை நிரப்பினான்.

''ஸெமியோனவ் என்ன எழுதினான்?'' என வினவினான் ரோல்லிங்.

''உங்களுக்குப் பிறகு சொல்கிறேன்.''

''உங்களைத் துடுக்குடன் நோக்குறானே அக்கனவானைப் பற்றி ஏதேனும் எழுதியிருக்கிறானா? நேற்று என்னைப் பார்க்க வந்தவன் இவன்தான். நான் இவனை வெளியே பிடித்துத்தள்ள வைத்தேன்.''

''ரோல்லிங், அவனை உங்களுக்குத் தெரியலே?.. எத்துவால் சதுக்கத்தில் நடந்தது உங்களுக்கு நினைவில்லையா? அது தான் காரின்.''

ரோல்லிங் மட்டுமே செருமச் செய்தான். சுருட்டைத் தனது வாயினின்றும் வெளியே எடுத்தான்: ''ஆகா''. திடீரென்று அவன் முகம் மாறியது: ஐந்து நடவடிக்கைகளுக்குப் பின்வரக் கூடிய எல்லாவகையான கூட்டுச் சேர்க்கையைப் பற்றியும் எண்ணிக் கொண்டு தனது செயலகத்தில் வெள்ளைக் கம்பளத்தில் இங்குமங்கும் நடந்தபோது பெற்றிருந்த தோற்றம் இப்போது அவன் முகத்தில் தெரிந்தது. அப்போது தனது விரல்களை வலிமையுடன் நொடித்தான். ஆனால் இப்போது, இந்தச் சந்தர்ப்பத்தில், கோணிய வாயுடன் ஸோயா பக்கம் திரும்பினான்:

''நாம் போவோம், பேச வேண்டிய விஷயங்கள் ஏராளமிருக்கு.''

வாயிலில் ஸோயா பின்புறம் நோக்கினாள்.

புகையினூடும், காகித ரிப்பன் பின்னலுக்கிடையிலும் காரினின் எரியும் கண்களை மீண்டும் கண்டாள். பிறகு நம்ப முடியாவகையில் மங்கலாக அவனது முகம் இரண்டாயிற்று: நடனமாடுபவர்களின் பக்கம் முதுகைத் திரும்பி அமர்ந்திருந்த யாரோ ஒருவன் அவன் பக்கம் நகர்ந்தான்; இருவரும் ஸோயாவைப் பார்த்தனர். அல்லது அது கண்ணாடிகள் உண்டாக்கிய மயக்கந்தானோ?..

ஒரு விநாடிப் பொழுது ஸோயா கண்களை மூடினாள். பிறகு நைந்த கம்பளத்தின் மீது ஓடிச்சென்று தனது காரையடைந்தாள். ரோல்லிங் அவளுக்காகக் காத்துக்கொண்டிருந்தான். அவன் கதவைச் சாத்திய போது அவள் கையைத் தொட்டான்:

''தன்னை பியான்கோவ்-பெத்கேவிச் எனஅழைத்துக்கொண்ட அந்த ஆசாமியுடன் நான் பேசியது பற்றி எல்லாவற்றையும் உங்களுக்குச் சொல்லவில்லை... நான் புரிந்துகொள்ள முடியாத சில விஷயங்கள் இருக்கு: போலியான வலிப்பு நடிப்பு ஏன்? என்னிடமிருந்து எத்தகைய அநுதாபத்தையும் நிச்சயமா அவன் எதிர்பார்க்க முடியாது, இல்லையா? மாத்தத்தில் அவனது நடத்தை சந்தேகத்திற்குரியதாக இருந்தது. எதற்காக என்னிடம் வந்தான்?.. மசையின் மேல் ஏன் தடுமாறி வீழ்ந்தான்?..''

''ரோல்லிங், நீங்க எனக்கு அதனைச் சொல்லவில்லையே.''

''ஆமாம், ஆமாம்... கடிகாரத்தைத் தள்ளிவிட்டான்... எனது தாள்களைக் கசக்கினான்...''

''உங்களோட தாள்களைத் திருட முயன்றானா?''

''என்ன? திருடவா?'' ரோல்லிங் அதுபற்றிச் சிந்தனை செய்தான். ''இல்லை, அவன் முயன்றதாக நான் நினைக்கலே. அவன் நிலைதவறி என் எழுது அட்டையின் மீது தன் கை படும்படி விழுந்தான்... அங்கே சில தாள்கள் இருந்தன...''

''எதுவும் காணாமல் போகலே என்பது உறுதிதானா?''

''முக்கியமல்லாத குறிப்புக்கள் மட்டுமே இருந்

தன. அவற்றை அவன் கசக்கிவிட்டான். நான் அவற்றைக் குப்பைக் கூடையில் எறிந்துவிட்டேன்.''

''அந்தப் பேச்சின் ஒவ்வொரு விவரத்தையும் நினைவுகூர முயலுங்கள் என்று நான் உங்களைக் கெஞ்சிக் கேட்டுக்கிறேன்.''

ஸேன் தெருவில் கார் வந்து நின்றது. ரோல்லிங்கும் ஸோயாவும் நேரே படுக்கையறைக்குச் சென்றனர். ஸோயா விரைவில் உடைகளைக் களைந்து, நான்கு கழுகுக் கால்களையுடைய செதுக்கு வேலைப்பாடமைந்த அகன்ற படுக்கையில் படுத்துக் கொண்டாள்—அந்தப் படுக்கை சக்கரவர்த்தி முதலாவது நெப்போலியனின் உண்மையான படுக்கைகளில் ஒன்று. ரோல்லிங் மெதுவாக உடைகளைக் களைந்தவாறு கம்பளத்தில் இங்குமங்கும் அலைந்தான். உடுத்தும் பொருள்களைப் பொன்முலாம் பூசிய நாற்காலிகள் மேலும், மேசைகள் மீதும், கணப்புக் குறட்டின் மேலும் வைத்தவாறு, நேற்று காரின் தன்னைப் பார்க்கவந்தபோது நடந்த எல்லா விபரங்களையும் ஸோயாவுக்குக் கூறினான்.

முழங்கையூன்றிச் சாய்ந்துகொண்டே ஸோயா அவன் கூறுவதைச் செவிமடுத்தாள். தனது காற்சட்டையைக் கழற்றி இழுப்பதற்காக ரோல்லிங் ஒற்றைக் காலில் தத்திக்கொண்டிருந்த அந்நேரத்தில் அவன் மன்னனைப் போலத் தோன்றவில்லை. ''நடந்தது எல்லாம் இவ்வளவுதான்,'' என்ற சொற்களுடன் அவன் படுக்கையை அடைந்து தனது மூக்கு வரையும் ஸாடின் மெத்தைப் போர்வையை இழுத்துக்கொண்டான். ஆடம்பரமான படுக்கையறை, இறைந்து கிடக்கும் உடைகள், படுக்கைத் தூண்களில் நிற்கும் தங்கத்தாலான காமவேள் உருவங்கள், மெத்தைப் போர்வைக்குள் அழுத்தப்பெற்றிருக்கும் ரோல்லிங்கின் தசை நிறைந்த மூக்கு ஆகியவற்றின் மீது நீலவண்ண விடிவிளக்கு ஒன்று ஒளி வீசிற்று. தலையணையில் ஆழமாக அவன் தலை அழுந்தியிருந்தது, அவன் வாய் பாதி திறந்திருந்தது. வேதியல் மன்னன் தூங்கிவிட்டான்.

அந்தச் சீறும் மூக்கு ஸோயாவைக் குறிப்பாகத்

தொல்லைப்படுத்திக் கொண்டிருந்தது. இதர நிகழ்ச்சிகளின் விரும்பத்தகாத நினைவுகளை மீண்டும் கொண்டுவந்தது... உளக்கிளர்ச்சியினால் வெளிறிய காரினின் முகம் அவள் முன் மிதந்துவந்தது. திடீரென்று ஓர் எண்ணம் ஊசி போன்று குத்தி ஊடுருவிச் சென்றது: ''கஸ்டோன் இப்போது அவனிடத்தில் இருக்கிறான்...''

படுக்கையினின்றும் வெளியே நழுவி கால்களில் உறைகளைப் போட்டுக்கொள்ளத் தொடங்கினாள். ரோல்லிங் உறக்கத்தில் ஏதோ முணுமுணுத்தான், ஆனால் ஒரு பக்கமாக ஒருக்கணிக்க மட்டுமே செய்தான்.

ஸோயா உடுத்தும் அறைக்குள் ஓடினாள். மழை மேலங்கியை அணிந்து வாரை இறுக்கிக்கொண்டாள். பிறகு படுக்கையறைக்குத் திரும்பச் சென்று பணம் உள்ள தனது பையை எடுத்துக்கொண்டாள்.

''ரோல்லிங்,'' என மெதுவாக அழைத்தாள், ''ரோல்லிங்... நாம் ஒழிந்து விட்டோம்...''

ஆனால் அவன் மீண்டும் முனக மட்டுமே செய்தான். முன்கட்டிற்கு ஓடிச்சென்று தடித்த தெருக் தவுகளை முயன்று திறந்தாள். ஸேன் தெரு வெறிச்சாடிக்கிடந்தது. முகட்டறைக் கூரைகளின் இடைவளியினூடே மங்கிய மஞ்சள் நிற நிலவு எட்டிப்பார்த்தது. ஸோயாவின் நெஞ்சு சோர்ந்தது. உறங்கும் நகருக்கு மேலே தொங்கும் நிலா வட்டத்தின் மீது கண்ணோட்டினாள்... ''அட கடவுளே, எவ்வளவு பயங்கரம்! எவ்வளவு உற்சாகமற்றது...'' இருகைகளாலும் நெற்றிக்கு மேல் தொப்பியை நன்கு இழுத்துவிட்டுக்கொண்டு கரையை நோக்கி ஓடினாள்.

31

கொபெலேன் தெருவில் அறுபத்து மூன்றாம் எண்ணுள்ள பழைய மூன்று மாடி வீட்டின் ஒரு சுவரின் எதிரே காலியிடம் இருந்தது. அப்பக்கத்தில் இருந்த சன்னல்களெல்லாம் மூன்றாவது மச்சில் இருந்தன.

மற்றொரு சன்னல் இல்லாத சுவர் பூங்காவை ஒட்டி இருந்தது. தெருவை நோக்கியிருந்த பக்கத்தில் அடித்தளத்தில் சரக்கு வண்டிக்காரர்களுக்கும், லாரி ஓட்டுநர்களுக்கும் ஆன உண்டிக்கடை இருந்தது. இரண்டாந்தளத்தில் கீழ்த்தரமான ஓட்டல் ஒன்று இருந்தது. கூரையிட்ட மச்சின் மேல்தளத்தில் நிரந்தரமாக வசிக்கும் ஆள்களுக்குத் தனித்தனி அறைகள் குடிக்கூலிக்கு விடப்பட்டிருந்தன. வெளிவாயில்களினூடே நீண்டிருந்த சுரங்கவழியாக மேல்தளத்துக்குப் பாதை சென்றது.

இரவு ஒரு மணிக்கு மேலாயிற்று. கொபெலேன் தெரு முழுவதிலும் வெ.ளிச்சம் தெரியும் ஒரு சன்னலாவது இல்லை. உண்டிக்கடை மூடியிருந்தது. நாற்காலிகள் மேசைகளின்மேல் கவிழ்த்து வைக்கப் பெற்றிருந்தன. அறுபத்து மூன்று என்ற எண்ணை விழித்து நோக்கிக்கொண்டு ஒரு நொடிப்பொழுது தெருவாயிலின்முன் ஸோயா நின்றாள். முதுகு குளிரால் விறைத்தது. சற்றுத் துணிவடைந்து மணியை அடித்தாள். ஒரு கயிற்றின் உராய்வு கேட்டது. கதவுகள் திறந்தன. இருண்டிருந்த வாயிலினுள் நழுவினாள். வாயில் காக்கும் பெண்ணின் குரல் உருமியது: ''இரவில் தூங்கணும், நீங்க நேரத்தோடு வீடு திரும்பணும்.'' ஆனால் அது யார் என்று கேட்கவில்லை.

ஸோயா மெய்யாகவே நடுக்குற்றாள். அவளுக்கு முன்னே தாழ்ந்த இருண்ட சுரங்கவழி இருந்தது. கருஞ்சிவப்பு வர்ணம் பூசப்பட்ட கரடுமுரடான சுவர்களில் ஓர் எரியாவி விளக்கு மங்கலாக எரிந்துகொண்டிருந்தது. ஸெமியோனவின் குறிப்புகள் பின்வருமாறு: சுரங்கவழியின் முடிவில் இடப்புறத்துக்கு— வளைந்து செல்லும் மாடிப்படியில் மேல்மாடிக்கு— இடப்புறத்துக்கு — பதினொன்றாம் எண்ணுள்ள அறை.

சுரங்கப் பாதையின் பாதிவழியில் ஸோயா நின்றாள். தொலைவிலிருந்த கோடியில் யாரோ எட்டி நோக்கிவிட்டு மீண்டும் மறைந்தது போல அவளுக்குத் தோன்றியது. ஒருவேளை அவள் திரும்பிச் செல்ல

வேண்டுமோ? உற்றுக்கேட்டாள், ஆனால் எவ்வித ஒலியும் கேட்கவில்லை. அந்தச் சுரங்கப் பாதையின் ஒரு திருப்பம் வரை அவள் ஓடினாள். அங்கு ஒரு வகையான வீச்சம் அடிக்கும் இடைத்தட்டு இருந்தது. இங்குதான் தொடங்கியது குறுகலான • வளை மாடிப்படி., மேலிருந்து அரைகுறையான வெளிச்சம் மாடிப்படியில் விழுந்தது. ஸோயா விரல்களை ஊன்றி நடந்து படிகளில் ஏறினாள். பிசுபிசுப்பான சாரக் கம்பியைத் தொடக் கூசினாள்.

வீடு முழுதும் உறக்கத்திலிருந்தது. முதல் மச்சின் தொடக்கத்தில் காரைப்பூச்சு சரிந்த வளைவு இருண்ட நடைக்கு இட்டுச்சென்றது. படிகளில் தொடர்ந்து மேலே நடந்தபோது ஸோயா பின்னால் திரும்பிப் பார்த்தாள். வளைவுக்கு வெளியே யாரோ திரும்பவும் எட்டிப்பார்த்துவிட்டு மறைந்து போலத் தோன்றியது. இது வாத்து மூக்கன் கஸ்டோன் மட்டும் இல்லை... ''இல்லை, இல்லை, கஸ்டோன் இங்கு வந்திருக்கவில்லை, வந்திருக்க இயலாது. வருவதற்கு நேரம் கிடைத்திருக்காது...''

மேல்மச்சின் இடைத்தட்டில் மூச்சு வாங்கிக் கொள்வதற்காக ஸோயா நின்றாள். காரின் வீட்டில்]ல்லாவிட்டால் அவனுக்காக அவள் காலைவரை ாத்திருப்பாள். வீட்டிலிருந்து உறங்கிக்கொண் ஓருந்தால் மால்ஸேர்ப் சாலையிலுள்ள அலுவலகத்தில் மேசையினின்றும் அவன் எடுத்துவந்ததைப் பெறும் வரை இங்கிருந்து போக மாட்டாள்.

ஸோயா கையுறைகளைக் கழற்றி விட்டு தொப்பியின் கீழுள்ள மயிரைப் பின்புறம் தள்ளினாள். இடப்புறம் திரும்பிய இடைக்கழி வழிச் சென்றாள். ஐந்தாவது கதவில் 11 என்ற எண் வெண்ணிறத்தில் தீட்டப்பெற்றிருந்தது. கதவின் பிடியை ஸோயா திருப்ப எளிதில் கதவு திறந்துகொண்டது.

ஒரு சிறு அறையின் திறந்த சன்னல் வழியாக நிலவொளி வந்தது. தரையில் திறந்த சூட்கேஸ் ஒன்று கிடந்தது. சிதறிக்கிடந்த தாள்கள் நிலவொளியில் வெள்ளையாகத் தெரிந்தன. கை கழுவும் தட்டிற்கும் செருகறை அலமாரிக்கும் இடையில் உட்

சட்டை மட்டும் அணிந்த ஒருவன் சுவர்மீது சாய்ந்து கொண்டு வெறுங்கால்களை மடக்கி அமர்ந்திருந்தான்; அவன் பாதங்கள் மிகப்பெரியனவாகத் தோன்றின... அவன் முகத்தின் ஒரு பாதியில் நிலவொளி பட்டு, பிரகாசமான அகல விரிந்த கண்ணையும், இளித்த வாயில் ஒளி வீசும் வெண்பற்களையும் காட்டின. பயங்கரமான இளிப்பைக் கொண்ட அந்த முகத்தை அவள் விழித்து நோக்கி நின்றபோது மூச்சுவிடமுடியாது ஸோயா தவித்தாள்—அதுதான் காரின்.

அன்று காலை 'காஃபே குளோபி'ல் வாத்து மூக்கன் கஸ்டோனிடம் அக்கருவியையும் அமைப்புப் படங்களையும் திருடிவரவும், முடிந்தால் காரினைக் கொல்லவும் அவள் கூறியிருந்தாள். ஆனால் மாலையில் ஷாம்பேயின் அருந்தும்போது புகையினூடே காரினின் கண்களைக் கண்டபோது, அத்தகைய மனிதன் தன்னை விரும்பினால்—அவனைப் பின்தொடர்ந்து செல்வதற்காக அவள் எதையும் துறக்கலாம், மறக்கலாம் என்று உணர்ந்தாள். இரவில் இதன் அபாயத்தைப் புரிந்துகொண்டவுடன் கஸ்டோனைக் கண்டு தடுத்து நிறுத்துவதற்காகப் புறப்பட்டிருந்தாள். பாரிஸ் நகரில் இரவு வேளையில் செல்லவும், இறுதியில் கொபெலேன் தெருவில் உள்ள வீட்டிற்கு வந்து சேரவும் அவளை இத்தகைய பரபரப்புடன் ஓடுமாறு விரட்டியது என்ன என்பதை அவள் ஏற்கெனவே அறிந்திருக்கவில்லை. அந்தப் புத்திசாலியான, இரக்கமற்ற, கொடிய பெண்ணை, அவளால் கொலைத்தண்டனை விதிக்கப்பட்ட மனிதனின் அறையினுள்ளேயே நுழையுமாறு தூண்டியது தான் என்ன?

காரினின் வெண்பற்களையும், வெளிப்பிதுங்கிய கண்ணையும் விழித்து நோக்கினாள். கரகரப்பாக, பாதியடக்கிய ஓலத்துடன் சென்று அவனைக் குனிந்து நோக்கினாள். அவன் இறந்து கிடந்தான். அவன் முகம் நீலம் பாய்ந்திருந்தது. காயங்களால் கழுத்து வீங்கியிருந்தது. பரபரக்கும் கண்களும் பட்டுப் போன்ற தாடியில் வண்ணத் தாள் துண்டுகளும்

கொண்ட, ஒட்டலான, ஈர்ப்புடைய அதே முகம் தான் இது... கை கழுவு தட்டின் பனிக்கட்டி போலக் குளிர்ந்த சலவைக்கல்லைப் பிடித்துக்கொண்டு மிக வும் கஷ்டத்துடன் ஸோயா நிமிர்ந்தாள். எதற்காக வந்தாள் என்பதை மறந்துவிட்டாள். வாயில் கசப்பு உமிழ்நீர் ஊறிற்று. ''எனக்குத் தேவையெல்லாம் மயங்கி விழ வேண்டியதுதான்.'' கழுத்தை இறுக்கி யிருந்த கழுத்துப் பட்டையின் பொத்தானை முடி வான முயற்சியுடன் பிய்த்தெறிந்து விட்டு, கதவை நோக்கித் திரும்பினாள். வாயிலில் காரின் நின்று கொண்டிருந்தான்.

அவன் பற்கள் வெண்மையாய் ஒளி வீசின. இளிப் புடன் அவன் முகம் உறைந்திருந்தது. தரையில் கிடந்தவனின் அச்சாக இருந்தான் அவன். விரலை உயர்த்தி எச்சரித்தான். ஸோயா புரிந்துகொண்டு, கீச்சிடலை அடக்கிக்கொள்ள கையினால் வாயைப் பொத்திக்கொண்டாள். நீரை விட்டு அப்போதுதான் வெளிவந்தவள் போன்று அவள் இதயம் வெறித்தன மாகத் துடித்தது. ''அவன் உயிரோட இருக்கிறான்... அவன் உயிரோட இருக்கிறான்...''

''நீங்க என்னைக் கொல்லலே,'' என்று காரின் கிசுகிசுப்பில் கூறி, அவளை நோக்கித் தன் விரலை ஆட்டிக் கொண்டே இருந்தான். ''நீங்க கொன்றது என் துணையாள் விக்டர் லெனுவாரை... ரோல்லிங் தலைவெட்டி எந்திரத்துக்குப் போவான்...''

''உயிரோட, உயிரோட...'' என்றாள் கரகரப் பாக.

''ஏன் இங்கே வந்தீங்க?''

''கஸ்டோனைத் தேடிக்கொண்டிருந்தேன்...''

''என்ன கஸ்டோன்?''

''உங்களைக் கொல்வதற்கு நான் அனுப்பிய ஆள்...''

''நான் அதனை முன்கூட்டியே அறிந்தேன்,'' என்றான், அவள் கண்களுக்குள் பார்த்துக் கொண் டே.

கனவில் கூறுவது போன்று அவள் பதிலளித்தாள்:

''கஸ்டோன் உங்களைக் கொன்றிருந்தால் என்

னை நானே கொன்று கொண்டிருப்பேன் ...''

''எனக்குப் புரியலே.''

பரவச நிலையில் இருப்பது போல மெல்லிய தாழுங்குரலில் அவனுடைய சொற்களையே அவள் திருப்பிக்கூறினாள்:

''எனக்கும் என்னைப் புரியலே...''

இந்த உரையாடல் வாயிற்படியில் நடந்தது. கல் தகட்டுக் கூரைகளுக்குப் பின்னே மறைந்து கொண்டிருந்த நிலவு சன்னலின் வழியாக ஒளி பாய்ச்சியது. தாழ்ந்த குரலில் காரின் பேசினான்:

''ரோல்லிங்கின் குறிப்புக் காகிதத்திற்காக வந்திருக்கீங்க?''

''ஆமா. இரக்கங் காட்டுங்க.''

''யார் மீது? ரோல்லிங் மீதா?''

''இல்லை. என் மீது. என் மீது இரக்கங் காட்டுங்க,'' எனத் திரும்பக் கூறினாள்.

திடீரென்று உணர்வுகொண்டு விறைத்தபடி அவன் உற்றுக்கேட்டான். விரைந்த அசைவுடன் கதவுக்கு வெளியே முரட்டுத்தனமாகச் சட்டென்று ஸோயாவை இழுத்தான். அவளுடைய முழங்கையை இன்னும் இறுகப்பற்றிக் கொண்டிருந்தபடி வளைவாயிலின் வழியாகப் படிக்கட்டை நோக்கினான்.

''இப்படி வாங்க. இங்கிருந்து பூங்காவின் வழியா வெளியே உங்களைக் கூட்டிப்போறேன். கவனிங்க, நீங்க ஓர் அசாதாரணமான பெண்.'' அவனது கண்கள் வெறிகொண்ட கேலியுடன் மின்னின. ''நம் மோட பாதைகள் குறுக்கிட்டுள்ளன... நீங்களும் அதனை உணர்றீங்களா?''

ஸோயாவைத் தன்னுடன் அழைத்துக்கொண்டு வளைந்து செல்லும் படிக்கட்டில் இறங்கி ஓடினான். ஸோயா எதிர்ப்புக் காட்டவில்லை.

கீழே கடைப்படியில் இருட்டுக்குள் காரின் திரும்பிச் சற்று நின்று, ஒரு மெழுகுத் தீக்குச்சியைக் கொளுத்தினான். ஆண்டுக்கணக்காகத் திறக்கப்படாதது போலத் தோன்றிய துருப்பிடித்த பூட்டை முயன்று திறந்தான்.

''பாருங்க, எல்லாவற்றைப் பற்றியும் நான் சிந்தித்துப் பார்த்தேன்.''

அவர்கள் பூங்காவில் இருந்த ஈரமான இருண்ட மரங்களுக்கு அடியில் சென்றார்கள். அப்போது, கால் மணிக்கு முன் காரின் தொலைபேசி வாயிலாக அழைத்திருந்த ஒரு போலீஸ் படைக்குழு தெருப் பக்க வாயிலில் நுழைந்தது.

32

க்ரெஸ்தோவ்ஸ்கி தீவிலிருந்த வீட்டில் தான் 'இழந்த சதுரங்கக்காயை' ஷெல்கா நன்றாக நினைவில் வைத்திருந்தான். தொழிற்சங்கச் சாலையில் தாங்கள் பேசிக்கொண்டிருந்த போது பியான்கோவ்-பெத்கேவிச் சிறு வீட்டின் நிலவறையில் ஒளித்து வைக்கப்பட்ட பொருளுக்காக மீண்டும் செல்வான் என்பதைத் தெரிந்துகொண்டான். அதே நாள் அந்திப்பொழுதில் ஷெல்கா மீண்டும் தீவிற்குச் சென்று, காவல்காரனைத் தொந்தரவு செய்யாமல் வீட்டினுள் நுழைந்து, கையில் கரிய மறைப்புடைய விளக்குடன் நிலவறையினுள் இறங்கினான். 'காய்' உடனேயே இழக்கப்பட்டது: சமையலறையின் மடிப்புக்கதவிற்கு அப்பால் இரண்டு தாவடித் தொலையில் காரின் நின்றான். ஷெல்கா சேருவதற்கு ஒரு நொடிக்கு முன்புதான் கையில் ஒரு சூட்கேசுடன் நிலவறையினின்றும் ஏறி வந்து கதவின் பின்புறம் சுவரோடு ஒட்டிநின்றான். ஷெல்கா நுழைந்தவுடனேயே அவன் மடிப்புக்கதவைச் சத்தமாக மூடி அதன் மேல் நிலக்கரி மூட்டைகளை அடுக்கத் தொடங்கினான். ஷெல்கா விளக்கை மேலே உயர்த்தி மடிப்புக்கதவின் இடுக்குகள் வழியே தூசி கீழே கொட்டுவதை முறுவலிப்புடன் நோக்கினான். சமாதானப் பேச்சுவார்த்தைகளைத் தொடங்க அவன் எண்ணினான். எனினும், திடீரென்று சமையலறையில் ஓசை அடங்கிற்று. ஓடும் காலடிகளின் ஓசையும், கைத்துப்பாக்கி வெடிப்பொலிகளும், ஒரு கொடிய கீச்சுக் குரலும் செவியில் விழுந்தன. இதுதான் நான்கு

விரலானுடன் நடைபெற்ற சிறு சண்டை. ஒரு மணி நேரத்திற்குப் பின் மிலீஷியர் வந்தனர்.

தன் 'காயை' இழந்துவிட்ட பிறகு, ஷெல்கா ஒரு புத்திசாலித்தனமான நகர்த்தலைச் செய்தான். மிலீஷியப் படையினர் காரிலேயே சிறு வீட்டிலிருந்து படகுக் கழகத்திற்குச் சென்று, அங்கு முறை வேலையிலிருந்த பறட்டைத் தலையும் கரகரத்த குரலும் கொண்ட மாலுமியை எழுப்பி பிறகு அவனிடம் நேரடியாக வினவினான்:

''காற்று எப்பக்கம் வீசுது?''

உடனே அந்த மாலுமி தயக்கமின்றி விடை கொடுத்தான்:

''தென்மேற்கா.''

''வேகம்?''

''கணிசமானது.''

''எல்லாப் படகுகளும் கட்டுத்துறையில் இருக் குன்னு உறுதியாச் சொல்றீங்களா?''

''நிச்சயமா அங்கேதான் அவை இருக்கு.''

''அங்கே இரவுக் காவல்காரன் உண்டா?''

''ஆமா, பேத்கா.''

''மிதவைத் துறையை நான் பார்வையிடணும்.''

''சரி, சரி,'' என அவன் பதிலளித்தான், இன்னும் பாதி உறக்க நிலையிலேயே தன் சட்டைக் கைகளுக்குள் கைகளை நுழைப்பதற்குத் தடுமாறிக் கொண்டே.

கழகத்தின் தாழ்வாரத்துக்கு வந்து, ''பேத்கா!'' என்று குடியின் மிகுதியைக் காட்டிய கட்டைக் குரலில் அழைத்தான். பதில் இல்லை. ''எங்காவது உறங்கிப் போய் இருக்கணும், ஈரச்சாக்கைப் போட்டு அவனை மூட,'' என்று மாலுமி கூறி காற்றுக்கு எதிராகத் தன் சட்டையின் கழுத்துப்பட்டையை மேலே திருப்பிக்கொண்டான்.

பக்கத்தில் இருந்த புதர்களுக்குள் இரவுக் காவல் காரனைக் கண்டார்கள்—ஆட்டுத் தோலால் செய்யப் பெற்ற மேல்கோட்டின் கழுத்துப்பட்டையினால் தலையை மூடியிருந்த அவன் மனமாரக் குறட்டை விட்டுக்கொண்டிருந்தான். மாலுமி அவனைத் திட்டி

ெநாறுக்கினான். இரவுக் காவல்காரன் முனகிக் கொண்டே எழுந்தான். மிதவைத் துறையோரமாகச் சென்றனர். வைகறை நெருங்குவதால் உண்டாகும் நில ஒஃகு வண்ண நீருக்கு மேலே பாய்மரங்கள் காடுபோன்று அடர்ந்து தோன்றின. மிதவைத் துறையில் அலைகள் மோதின. வேகமான காற்று சீறியடித்துக்கொண்டு வீசியது.

''எல்லாப் படகுகளும் அவற்றின் இடத்திலே இருக்குன்னு நிச்சயமாச் சொல்றீங்களா?'' என மீண்டும் ஷெல்கா வினவினான்.

'''ஓரியான்' இங்கே இல்லை. அது பீட்டர்ஹோஃபில் இருக்கு... மேலும் இரண்டு படகுகள் ஸ்த்ரேல்னாவுக்கு அனுப்பப்பட்டன.''

தண்ணீர் திரை தெளித்து அடித்துக்கொண்டிருக்கும் மிதவைத் துறையோரம் நடந்து கொண்டிருந்த ஷெல்கா படகு இணைக்கும் கயிறு ஒன்றின் நுனியை எடுத்தான். அது ஒரு வளையத்தில் கட்டப்பட்டிருந்தது. அக்கயிறு அறுக்கப்பெற்றிருக்க வேண்டும். மாலுமி இறங்கு துறையை நிதானமாகச் சோதித்தான். தனது தொப்பியை மூக்கு வரையில் இழுத்துவிட்டுக்கொண்டான். ஆனால் எதுவும் சொல்லவில்லை. படகுகளை விரல் கொண்டு எண்ணிக்கொண்டே நடந்தான். கையைப் பலவாறும் காற்றில் உதறினான்.

''ஏய், பேத்கா உன்னைத்தான்!'' என்று நம்ப முடியாத வலிமையோடு கத்தினான். ''உன் நெஞ்சிலே ஈட்டி பாய! 'பிபிகோண்டா' திருடு போச்சு, இத்தொகுதியிலே முதல் தரமான படகாச்சே! உன்னை முப்பது முறை வீச்சத் தண்ணீரில் மூழ்கடிக்கணும், உன் கண்ணு எங்கே போச்சு? அட ஒட்டுண்ணிப் பயலே!..''

இரவுக் காவல்காரன் பேத்கா முனகினான். வியப்பைத் தோற்றுவித்தான். தனது ஆட்டுத் தோல் மேற்கோட்டின் நீண்ட கைகளால் தொடைகளில் தட்டிக்கொண்டான். தான் செய்வதற்கு இங்கே ஒன்றும் இல்லாததால் ஷெல்கா கப்பல் துறைக்குப் போய் விட்டான்.

விரைந்து செல்லும் மோட்டார் படகு ஒன்றில் ஏறி ஷெல்கா திறந்த கடலை அடைவதற்குள் ஏறக் குறைய மூன்று மணி நேரம் கடந்துவிட்டது. கடலில் பெருத்த அலையெழுச்சி இருந்ததால் படகு மோசமாக உந்தி அலைக்கப்பட்டது. அவனது இணைக் குழல் தொலைநோக்கியில் தூவானம் தெறித்ததால் கண்ணாடி மங்கியது. கதிரவன் தோன்றியவுடன், கலங்கரை விளக்கத்திற்கு மிக அப்பால் மற்றைக் கரையையொட்டி பின்லாந்து நாட்டு நீர்ப்பகுதியில் ஒரு படகுப் பாய் தெரிந்தது; அதுதான் அதிர்ஷ்டம் கெட்ட 'பிபிகோண்டா' நீருள் மூழ்கியிருக்கும் பாறைகளிடையே அலைப்புண்டிருந்தது. அதன் மேல்தளம் வெறிச்சோடிக் கிடந்தது. ஏதேனும் செய்ய வேண்டும் என்பதற்காக அவர்கள் மோட்டார் படகிலிருந்து கொண்டே சில வெடிகளைத் தீர்த்துவிட்டு வெறுங்கைகளுடன் திரும்பினார்கள்.

ஆகவே அன்றிரவு காரின் எல்லையைத் தாண்டி ஓடிவிட்டான், மேலும் ஒரு 'காயை' வெற்றான். அந்த ஆட்டத்தில் நான்குவிரலான் ஆற்றிய பங்கைப் பற்றி அவனுக்கும் ஷெல்காவுக்கும் மட்டுமே தெரியும். கப்பல்துறைக்கு மீண்டு கொண்டிருந்த போது ஷெல்காவின் பொதுவான எண்ணங்களின் ஓட்டம் கிட்டத்தட்ட பின்வருமாறு இருந்தது:

''வெளிநாட்டில் காரின் தனது புதிரான கருவியை விற்றுவிடுவான், அல்லது தானே அதைப் பயன்படுத்துவான். இப்போதைக்கு சோவியத் யூனியனுக்கு அந்தப் புதுக்கண்டுபிடிப்பு நஷ்டமாகி விட்டது. வருங்காலத்தில், தலைவிதியை நிர்ணயிக்கிற பாத்திரத்தை இது மேற்கொள்ளும் என்று யாருக்குத் தெரியும்? எனினும் காரினுக்கு வெளிநாட்டில் நான்குவிரலானால் இடுக்கண் ஏற்படும். அவனை ஒழித்துக்கட்டும் வரை காரின் தனது கருவியை வெளியே கொண்டுவரத் துணியமாட்டான். இப்போராட்டத்தில் நாம் காரின் பக்கம் சேர்ந்தால் நீண்ட காலத்திட்டத்தில் நாம் வெற்றி பெறலாம். என்னவாயினும், லெனின்கிராடில் நான்குவிரலானை உடனே கைதுசெய்வது எல்லாவற்றிலும் பெருத்த

முட்டாள்தனமான திட்டமாகும், காரின் விரும்புவதும் அதுதான்.'' இவ்வகை எண்ண வரிசையிலிருந்து பெறக்கூடிய முடிவு மிக எளியதுதான்: கப்பல்துறையிலிருந்து ஷெல்கா நேரே தனது இருப்பிடத்திற்குச் சென்று, உலர்ந்த உடைகள் அணிந்துகொண்டு, தனது அலுவலகத்தினருக்கு ''வழக்கு கைவிடப்பட்டது'' என்று தொலைபேசி மூலம் அறிவித்துவிட்டுத் தொலைபேசியைத் தொடர்பறச் செய்துவிட்டான். புகையாவியினால் நஞ்சூட்டப்பட்டு, ஒருவேளை காயமடைந்து இருக்கும் நான்குவிரலான் அந்த நேரத்தில் லெனின்கிராடை விட்டுக் குடல்தெறிக்க ஓடிப்போய்க் கொண்டிருப்பான் என்பதை நினைத்து ஷெல்கா முறுவலித்துக் கொண்டே படுக்கைக்குச் சென்றான். 'இழந்த சதுரங்கக்காய்க்கு' ஷெல்காவுடைய பதில் இதுவே.

பிறகு பாரிசிலிருந்து தந்தி வந்தது: நான்குவிரலான் இங்கு இருக்கிறான். நிகழ்ச்சிகள் அச்சுறுத்துபவை. உதவி கோரும் ஓலம் இது.

இதைப் பற்றி ஷெல்கா மேலும் எண்ண எண்ண உடனே அவன் கட்டாயம் பாரிஸ் செல்ல வேண்டும் என்பது மேலும் தெளிவாகியது. பயண விமானங்கள் புறப்படும் நேரத்தைப் பற்றித் தொலைபேசியில் கேட்டறிந்து பிறகு தராஷ்கினும் இவானும், வட பகுதி வேனில் இரவில் தெரியும் வெண்ணிறமான அந்தி வெயிலில் அமர்ந்திருந்த தாழ்வாரத்தின் பக்கம் சென்றான். திக்கற்றவனின் முதுகில் இருந்த செய்தியை ஷெல்கா படித்ததிலிருந்து அப்பையன் அமைதியுற்று தராஷ்கின் பக்கத்தை விட்டு அகலாதிருந்தான்.

மரக்கிளைகளினூடே தெரியும் செம்மஞ்சள் நீரிலிருந்து குரல்களும், பெண்களின் சிரிப்பும், துடுப்பு வலிப்பதின் ஓசையும் தவழ்ந்து வந்தன. பயத்தினால் ஏதோ பறவைகள் ஒன்றையொன்று அழைத்துக் கொண்டும், வானம்பாடிகள் பாடிக் கொண்டும் இருந்த காடுசெறிந்த தீவுகளில் இருண்ட மரங்களுக்கு அடியில் உலகத்தின் மிகப் பழைய விளையாட்டு நடந்துகொண்டிருந்தது. குளிர்காலத்

தின் மழையிலிருந்தும் பனிப்புயலிலிருந்தும் வெளிப் போந்துள்ள எல்லா உயிரிகளும் வாழ்வதற்காக விரைந்து கொண்டும், இரவின் மயக்கும் அழகை ஆர்வத்துடன் பருகிக்கொண்டும் இருந்தன. தராஷ்கின் அசையாது நின்றவாறு, தாழ்வாரச் சாரக் கம்பியில் சாய்ந்துகொண்டு ஒரு கையைப் பையன் தோள்களின் மேல் போட்டபடி மரங்களினூடே நீரை நோக்கிக் கொண்டிருந்தான். ஓசையின்றிப் படகுகள் நழுவிக்கொண்டிருந்தன.

''நல்லது, இவான், எப்படி இருக்கு?'' எனத் தன் நாற்காலியை நகர்த்தி, பையனின் முகத்தருகே குனிந்து வினவினான் ஷெல்கா. ''எது உனக்கு விருப்பம்: லெனின்கிராடா தூரக்கிழக்கா? அங்கே பெரும்பாலும் எல்லா வேளைகளிலும் பசியோடுதான் இருந்திருக்கிறாய், இல்லையா?''

இவான் இமைகொட்டாது ஷெல்காவை விழித்து நோக்கினான். அந்தி ஒளியில் அவனது கண்கள் கிழவனுடையவை போன்று ஏக்கம் நிறைந்து காணப்பட்டன. ஷெல்கா தனது அரைக்கோட்டுப் பையிலிருந்து ஒரு மிட்டாயை எடுத்து இவானின் பற்கள்மீது அவன் திறக்கும் வரைத் தட்டி வாய்க்குள் போட்டான்.

''இவான், நாங்கள் சிறு பையன்களிடம் அன்பாய் இருக்கிறோம். நாங்கள் அவர்களை வேலை செய்ய வைப்பதில்லை, அவர்கள் முதுகுகளில் கடிதங்கள் எழுதி ரயில் வண்டிகளின் அடியில் செல்லுமாறு ஐயாயிரம் மைல் தொலைவு அனுப்புறதில்லே. இந்தத் தீவுகளில் வாழ்க்கை நேர்த்தியா இருக்கு. இல்லையா? இங்கே இருப்பது எல்லாம் யாருடையவை என்று உனக்குத் தெரியுமா? இவற்றை எல்லாம் வைத்துக்கொள்வதற்காகக் குழந்தைகளுக்கே கொடுத்துட்டோம். ஆறு, தீவுகள், படகுகள், ரொட்டியும் கறிவடையும்—உனக்கு வேண்டிய அளவுக்குச் சாப்பிடு,—எல்லாம் உன்னுடையவை...''

''பையனை ஒரே குழப்பத்தில் ஆழ்த்தப் போறீங்க,'' என்றான் தராஷ்கின்.

''ஓ, இல்லை. அவன் கெட்டிக்காரன், புரிந்து கொள்வான். இவான், உனக்கு எந்த ஊர்?''

''நாங்கள் ஆமூரைச் சேர்ந்தவர்கள். அம்மா செத்துப்போனாள், அப்பா போரில் கொல்லப்பட்டுட்டார்.''

''நீ எப்படிப் பிழைத்தாய்?''

''எல்லாவகையான ஆள்களுக்காகவும் வேலை செய்தேன்.''

''உன்ன மாதிரி சிறு குழந்தையா?''

''ஆமா... குதிரைகளை மேய்ச்சலுக்கு வெளியே ஓட்டிப் போனேன்...''

''பிறகு என்ன?''

''பிறகு அவர்கள் என்னைப் பிடிச்சாங்க...''

''யார் பிடிச்சது?''

''சில பேர். மரங்களில் ஏறவும், காளான்களும் கொட்டைகளும் சேகரித்து வரவும், உணவுக்காக அணில் பிடிக்கவும், இன்னும் எல்லாவகையான எடுபிடி வேலைக்காகவும் அவர்களுக்கு ஒரு பையன் தேவைப்பட்டது...''

''ஆக, ஏதோ ஓர் ஆராய்ச்சிப் பயணக் குழுவோடு சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கே? (இவான் விழித்து, விடை தரவில்லை.) நெடுந்தொலைவு போனியா? பயப்படாதே, இதைப்பற்றி எல்லாத்தையும் எங்கிட்டச் சொல். உன்னைக் கைவிடமாட்டோம். இப்போது நீ எங்களில் ஒருத்தன்...''

''நீராவிக் கப்பலில் நாங்க எட்டு நாள் போனோம்... அப்பயணத்திலே உயிர்வாழமாட்டோம்னு நாங்க நெனச்சோம். பிறகு ஒரு நெருப்பு மலையை அடையும் வரை கால்நடையா எட்டு நாள் போனோம்.''

''ஓகோ, அப்படியா,'' என்றான் ஷெல்கா, ''ஆக, ஆராய்ச்சிப் பயணம் காம்ச்சாத்காவுக்குத் தான் போயிருக்கு.''

''ஆமா, காம்ச்சாத்காவுக்குத்தான்... அங்கே ஒரு குடிசையில் வசித்தோம்... ரொம்பக் காலம் வரை புரட்சியைப் பற்றி எங்களுக்கு எதுவுமே தெரியாது. அதைப்பற்றி நாங்கள் கேள்விப்பட்ட போது

அவர்களில் மூனு பேர் போயிட்டாங்க, பிறகு இன்னும் இரண்டு பேர் போயிட்டாங்க. சாப்பாட்டுக்கு எதுவுமே மிஞ்சி இருக்கலே: நான் அவனோட தங்கிட்டேன்...''

''யாரோ? யார் அந்த 'அவன்'? அவனோட பெயரென்ன?''

இவான் மறுபடியும் சோர்ந்துபோய் விடை தரவில்லை. நெடுநேரம் வரை ஷெல்கா அவனைச் சமாதானப்படுத்தினான். அவனது குனிந்த, மயிர் திருத்தப் பெற்ற தலையில் தட்டிக்கொடுத்தான்.

''நான் உங்ககிட்டச் சொன்னா, அவன் என்னைக் கொன்னுருவான். என்னைக் கொல்றதா உறுதி சொன்னான்...''

''யார்?''

''நிக்கலாய் க்ரிஸ்தபோரவிச் மாந்த்ஸெவ். அவன் சொன்னான்: 'நான் உன் முதுகில் ஒரு கடிதம் எழுதியிருக்கேன். குளிக்கக் கூடாது. உள்சட்டை அல்லது அரைக்கோட்டு எதையும் கழற்றக் கூடாது. ஓராண்டு அல்லது ஈராண்டு ஆனாலும் கழற்றாதே. பெத்ரோகிராடு போய் பியோத்தர் பெத்ரோவிச் காரின் என்பவரைக் கண்டுபிடிக்கிற வரை கழற்றாதே; உன் முதுகில் எழுதி இருப்பதை அவருக்குக் காட்டு. அவர் உனக்கு நல்ல வெகுமதி கொடுப்பார்...''

''காரினைப் பார்க்க விரும்பி இருந்த அந்த மாந்த்ஸெவ் ஏன் தானே பெத்ரோகிராடுக்குப் போகலே?''

''போல்ஷெவிக்குகளிடம் அவனுக்கு அச்சம். 'அவுங்க பேய்களைவிட மட்டமானவுங்க. என்னைக் கொன்னு போடுவாங்க,' என்றான்... ஆறு ஆண்டுகளாக மலைமேல் உட்கார்ந்திருப்பவனுக்கு எப்படித் தெரியும்?''

''அங்கே அவன் என்ன செய்து கொண்டிருக்கான்? எதைத் தேடிக்கொண்டிருக்கான்?''

''அவன் எனக்குச் சொல்வான்னு நீங்க நினைக்கிறீங்களா? ஆனால் எப்படியிருந்தாலும் எனக்குத் தெரியும். (தந்திரம் கலந்த களிப்புடன் இவானின்

கண்கள் மின்னின.) தரைக்கடியில் தங்கத்தைத் தேடிக்கிட்டிருக்கான்...''

''ஏதாவது கண்டுபிடிச்சானா?''

''அவனா? ஆமாம், கண்டுபிடிச்சான்.''

''நீ போகவேண்டியிருந்தால் மாந்த்ஸெவ் தங்கியுள்ள மலைக்கு உன்னால் வழி கண்டுபிடிக்க முடியுமா?''

''உண்மையில் என்னால முடியும்... என்னை மட்டும் நீங்க காட்டிக்கொடுத்துவிட வேணாம். அவன் படு கோபக்காரன்...''

அந்தப் பையனின் கதையை ஷெல்காவும் தராஷ்கினும் ஆழ்ந்த கருத்துடன் கேட்டுவந்தனர். ஷெல்கா மீண்டும் பையனின் முதுகில் பொறிக்கப்பட்டுள்ளதைக் கூர்ந்து படித்து, பிறகு அதனை நிழற்படம் எடுத்துக் கொண்டான்.

''இப்பக் கீழே போ. தராஷ்கின் உன்னைச் சோப்புப் போட்டுக் குளிப்பாட்டுவார். பிறகு உறங்கப் போ,'' என்றான் ஷெல்கா. ''இங்கு வந்தபோது உனக்கு ஒன்னுமே இல்லை: அப்பா இல்லை, அம்மா இல்லை, வெறும் வயிற்றைத்தவிர வேறு எதுவுமே இல்லை. இப்ப உனக்குத் தேவையான எல்லாத்தையும் பெற்றுக்கொண்டாய்—நீ வாழலாம், படிக்கலாம், நல்லா வளரலாம். நீ அறிய வேண்டியதைத் தராஷ்கின் கற்பிப்பார். அவர் உனக்குச் சொல்கிறபடி செய். போய் வருகிறேன். இன்னும் மூனு நாள்களில் நான் காரினைக் காண்பேன். அப்ப உன் செய்தியை அவனிடம் கொடுப்பேன்.''

ஷெல்கா சிரித்தான். விரைவில் அவனது சைக்கிள் வண்டியின் விளக்கு குதித்துக் கொண்டே இருண்ட புதர்களுக்குப் பின்னே போயிற்று.

33

விமானநிலையத்தின் பச்சை விரிப்புக்கு உயரே அலுமினியச் சிறகுகள் பளிச்சிட்டன. அறுவர் அமரும் பயண விமானம் வெண்பனி மேகங்களுக்குப் பின்னே மறைந்தது. நண்பர்களை வழியனுப்ப வந்திருந்த

சிறு மக்கள் கூட்டம் கழுத்துகளை வளைத்து எக்கி ஒளிமின்னிய நீல வானத்தை நோக்கி நின்றது. வானில் ஒரு பருந்து சோம்பலுடன் வட்டமிட்டுக் கொண்டிருந்தது, ஊர்க் குருவிகள் காற்றில் விரைந்து பறந்தன. ஆனால் அலுமினியப் பறவை எங்கே மறைந்து விட்டது என்பது சாத்தானுக்கு மட்டுமே தெரியும்.

பயணிகள் ஆறு பேரும் கிரீச்சிடும் பிரம்பு நாற்காலிகளில் அமர்ந்து கீழே நீலமும் பச்சையும் கலந்த தரை மறைந்து போவதை நோக்கினர். அதன் குறுக்கே சாலைகள் நூல்கள் போலச் சென்றன. கட்டடங்களின் தொகுப்புக்களும், மணிக்கூண்டுகளும் எல்லாம் சற்றே சாய்ந்து விளையாட்டுப் பொருள்கள் போலத் தோன்றின. நெடுந்தொலைவுக்கப்பால் வலப்புறத்தில் நீலநீரின் பரப்பு நீண்டு கிடந்தது.

ஒரு மேகத்தின் நிழல் தரையின் மீது நகர்ந்து சென்று நிலக்காட்சியின் விவரங்களை மறைத்தது. விரைவில் அந்த மேகம் தானே விமானத்துக்கு அருகே கீழே தோன்றியது.

சன்னல்களுடன் ஒட்டியமர்ந்திருந்த ஆறு பயணிகளும் முறுவலித்தனர். தம்மைத் தாமே கட்டுப் படுத்திக்கொள்ள வல்லவர்களின் செயற்கை முறுவலிப்பாக இருந்தது அது. வான்வழிப் பயணம் ஏதோ இன்னும் புதுமையாகத்தான் இருந்தது. வசதிகள் மிகுந்த அறை, மடக்கு மேசைகளின் மேல் சஞ்சிகைகளும் விலைப்பட்டியல்களும் குப்பைபோன்று குவிந்திருந்தன. நல்ல வசதியும், பாதுகாப்பும் இருப்பதாகத் தோன்றினும், வான்வழிப் பயணம் தெருவைக் கடப்பதைவிட மிகமிகக் குறைவான அபாயமுள்ளது என்பதைப் பயணிகள் இன்னும் தாங்களே சிந்தித்து மனந்தெளிய வேண்டியிருந்தது. காற்றில் தடைகள் இல்லை—ஒரு மேகம் எதிர்ப்பட்டு அதற்குள்ளாக நீந்திக் கடந்தால், நடப்பனவெல்லாம் சன்னல்கள் ஈரமாவதும், அல்லது உலோகத் தகடுகளில் ஆலங்கட்டிகள் சடசடப்பதும், அல்லது சாலைகளில் நொடிகளுக்கு மேலாகச் செல்வது போல எந்திரம் குதிப்பதும் நிகழ்கிறது — பிரம்பு நாற்காலியின்

கைகளை இறுகப்பிடித்துக் கொண்டு கண்களை அகல விழிக்க நேரிடும், ஆனால் அருகிருப்பவர் கண் சிமிட்டி மெல்ல நகைப்பார்—அற்ப நொடி இது!.. நீரில் செல்லும் படகுகளின் பாய்மரங்களை முறித்து, சுக்கானை நொறுக்கி, உயிர் தப்ப உதவும் படகு களையும் மக்களையும் அப்படியே உருட்டியடித்துக் கொந்தளிக்கும் கடலுக்குள் அழுத்தும் பேய்க் காற்று களில் ஒன்று இந்த உலோகத்தாலான பறவையைத் தாக்கினால் அது சற்றும் பொருட்படுத்துவதில்லை; வன்மையும் விரைவும் கொண்டு ஒரு சிறகில் தாங்கிப் பறக்கிறது, எந்திரங்கள் உறுமுகின்றன, புயலின் மை யத்திலிருந்து மேலே மூவாயிரம் அடிகள் அப்பால் நன்றாகக் கடந்து உயரச் சென்றுவிடுகிறது.

சுருங்கக் கூறின், ஒரு மணி கடப்பதற்குமுன் விமானத்தின் அலைப்புகளுக்கும் காலடியின்கிழ் பெரிய இடைவெளியுள்ளது என்ற எண்ணத்திற்கும் பயணிகள் பழக்கப்பட்டுக் கொண்டிருந்தனர். எந் திரத்தின் இரைச்சல் அவர்கள் பேச்சில் குறுக்கிட் டது. அவர்களில் சிலர் செவிக்குழாய்களுடன் கூடிய தலைக்கவசம் அணிந்துகொள்ள பேச்சுத் தொடங் கியது. ஷெல்காவின் எதிரில் முப்பத்தைந்து வயது மதிக்கத்தக்க மெலிந்த ஒருவன் அமர்ந்திருந்தான். சற்றே கலைந்த மேற்கோட்டும், கட்டம் போட்ட குல்லாவும் அணிந்திருந்தான். வெளிநாட்டுப் பய ணத்துக்காக அதை அவன் வாங்கியிருப்பான் போ லும்.

மெல்லிய தோலுடைய வெளுத்த முகம், நுண் ணறிவு காட்டும், சுளித்த நேர்த்தியான பக்கத் தோற்றம், சிறு வெண்பழுப்புத் தாடி, அமைதியும் உறுதியும் காட்டும் வாய், இப்படித் தோன்றினான். முதுகைக் கூனிக்கொண்டு முழந்தாள்கள் மேல் கைகளை வைத்து அமர்ந்திருந்தான். ஒரு முறுவ லுடன் ஷெல்கா அவனுக்குக் குறிப்புக் காட்டினான். அம்மனிதன் தன் காதில் ஒலிவாங்கியை மாட்டிக் கொண்டான்.

''யரொஸ்லாவலில் உள்ள தொழில்நுட்பப் பள் ளியில் நீங்க படிக்கவில்லையா?'' என வினவினான்

ஷெல்கா. (அந்த மனிதன் தலையை அசைத்தான்.) ''எனக்கு உங்களை நினைவிருக்கு. நீங்க அலெக்சேய் ஸெமியோனவிச் ஹ்றலினோவ், இல்லையா? (ஒரு தலையாட்டம்.)இப்ப எங்கே வேலை பாக்குறீங்க?''

''பாலிடெக்னிக்கல் இன்ஸ்டிடியூட்டு பௌதிக ஆய்வுக்கூடத்தில்,'' என்ற ஹ்றலினோவின் தாழ்ந்த குரல் எந்திரங்களின் உறுமலில் அமுந்தி விழுந்தது.

''அலுவல் பயணமோ?''

''பெர்லினிலுள்ள ரேய்ஹறுக்கு.''

''இரகசியமோ?''

''இல்லை. கடந்த மார்ச் மாதத்தில் ரேய்ஹறி னுடைய ஆய்வுக்கூடத்தில் பாதரசத்தின் அணுவைக் குலைக்கும் செயல் வெற்றிகரமாக நிகழ்த்தப்பட்ட தாகக் கேள்விப்பட்டோம்.''

ஷெல்காவைப் பார்ப்பதற்காகத் திரும்பி ஹ்றலி னோவ் அவனை நேரே ஊடுருவி நோக்கும் போது அவன் கண்கள் பரபரப்பை வெளிக்காட்டின.

''அது எனக்கு அப்பாற்பட்டது. நான் நிபுண னல்ல,'' என்றான் ஷெல்கா.

''இதுவரை அவ்வேலை ஆய்வுக்கூடத்திற்குள் ளேயே நடந்திருக்கிறது. தொழில் துறையில் அதனைப் பயன்படுத்த நெடுங்காலம் பிடிக்கும்... ஆயி னும்,'' தரையை மறைத்துக்கொண்டு மிகக்கீழே இருந்த வெண்பனி போன்ற மேகங்களை நோக்கி ஹ்றலினோவ் கண்ணோட்டினான், ''விஞ்ஞானியின் பயிற்சி அறையிலிருந்து தொழிற்சாலை நெடுந் தொலை இல்லை. அணுவைச் செயற்கையாகச் சிதைக்கும் முறை பற்றிய கருத்து மிக எளியதாகத் தான் இருக்க வேண்டும். உங்களுக்குத்தான் அணு என்ன என்பது தெரியுமே?''

''ஏதோ மிகச் சிறியது,'' எனக் கூறி ஷெல்கா தனது விரல்களால் அளவைச் சுட்டிக்காட்டினான்.

''ஓர் அணுவை ஒரு சிறு நுண் மணலோடு ஒப் பிட்டுப் பார்த்தால், ஒரு நுண் மணலை இப்பெரு உலகுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் வேறுபாடு போலத் தெரியுமளவு அணு நுண்ணியது. இருந்தபோதிலும் அணுவை நாம் அளக்கக் கூடும், உட்கருவைச் சுற்றி

வட்டமிடும் அதன் மின்னணுக்களது சுழற்சி வேகத்தையும், அதன் எடையையும் பருமையையும் மின்னேற்ற அளவையும் கணக்கிட முடியும். அணுவின் இதயத்தை, அதன் உட்கருவை, நாம் நெருங்குகிறோம். பருப்பொருளின்மேல் ஆட்சி செலுத்துவது குறித்த முழு இரகசியமும் அந்த உட்கருவில் அடங்கியிருக்கிறது. அணுவின் உட்கருவை, ஒரு சென்டிமீட்டரில் நூறு கோடியில் ஒரு கூறே அளவான பருப்பொருளாற்றலின் நுண்துணுக்கை, வசப்படுத்த நம்மால் முடியுமா இல்லையா என்பதையே மனித குலத்தின் எதிர்காலம் சார்ந்திருக்கிறது.''

தரைக்குமேல் ஆறாயிரம் அடி உயரத்திலிருந்து கொண்டு ஷெஹராஸாதியின்* கதைகளை விட மிக வியப்பான கதையொன்றை ஷெல்கா கேட்டான், ஆனால் இது கற்பனைக் கதையல்ல. வரலாற்றின் இயக்கவியல் ஒரு வர்க்கத்தை அழிவுப் போருக்கும் மற்றொரு வர்க்கத்தைப் புரட்சிக்கும் இழுத்துச் சென்றுள்ள நேரத்திலே; நகரங்கள் எரிந்து கொண்டிருந்தபோது, தூசி, சாம்பல், நச்சுப்புகையாவி ஆகியவற்றின் மேகங்கள் உழுநிலங்களையும் பழத் தோட்டங்களையும் மறைத்தபோது, ஒடுக்கப் பெற்ற புரட்சிகளின் சினமிக்க கூச்சல்களால் இந்தத் தரையே நடுங்கியபோது, பழங்காலத்தைப் போன்று சிறைக்கிடங்குகளில் சித்திரவதைச் செய்தவர்கள் இடுக்கியும் மடக்குப் பலகையும் பயன்படுத்துவதில் சுறுசுறுப்புடன் இருந்தபோது, இரவு நேரத்தில் பூங்காக்களின் மரங்களில் நாய்க்குகள் தொங்கும் நிலையில் மிகப்பெரிய பழங்கள் போன்று தலைகள் தொங்கியபோது, மனித இனம் மிக விருப்பத்துடன் தீட்டிய லட்சியம் என்ற மூடுதிரை வெளியே விழுந்த போது—இத்தகைய பயங்கர ரட்சசக் காலமாகிய

---

* ஷெஹராஸதி — 'அராபிய இரவுகள்' என்ற புத்தகத்தின் கதாநாயகியாகிய அவள், கதைகள் சொல்வதில் திறமைசாலியான சுல்தானுடைய புது மணப்பெண். அக்கதைகளில் சுல்தானுக்கு இருக்கும் ஆர்வத்தைப் பயன்படுத்திக் கதைகள் சொல்லி தன் உயிரைக் காப்பாற்றிக்கொள்கிறாள். (ப-ர்.)

பத்தாண்டுகளில் விஞ்ஞானிகளின் வியத்தகு மனங்கள் வழிகாட்டும் தனித்தனி விளக்குகளாக ஒளி வீசின.

34

கோவ்னோவுக்கு* மேலாக விமானம் தாழ வட்டமிட்டது. மழையால் நனைந்திருந்த பச்சைத் திடல் அதனை எதிர்கொள்ள விரைந்தது. விமானம் ஓடுபாதை நெடுகிலும் வந்து நிலைத்து நின்றது. விமான ஓட்டி வெளியே புல்தரையில் குதித்தான். பயணிகளும் கால்களை நீட்டிக்கொள்ளவும் சிகரெட் புகைக்கவும் வெளிவந்தனர். ஷெல்கா தலைக்குக்கீழ் கைகளை வைத்துப் புல்லின்மேல் படுத்து, தொலைவில் நீல விளிம்புடைய ·மேகங்களை வியப்புடன் பார்த்தான். அவன் அங்கிருந்து இப்போதுதான் வந்திருக்கிறான். வெண்பனி படிந்த மென் மலைகள், நீலநிறச் சமவெளிகள் ஆகியவற்றினிடையே பறந்து வந்திருக்கிறான்.

அவனது சமீபகாலக் கூட்டாளியான ஹ்லீனோவ், சற்றே கூனியவாறு கசங்கிய கோட்டுடன் விமானத்தின் சிறகுக்கருகில் நின்றுகொண்டிருந்தான். அவன் மிகச் சாதாரணமாகக் காணப்பட்டான், அவனது குல்லா கூட ஒரு லெனின்கிராடுத் தொழிற்சாலையிலிருந்து வந்ததுதான்.

ஷெல்கா சிரித்தான்:

''எவ்வழியிலும் உயிருடன் இருத்தல் நல்லது. மிகச் சிறப்புடையது!''

கோவ்னோ விமான நிலையத்திலிருந்து அவர்கள் புறப்பட்டபோது ஹ்லீனோவின் பக்கத்தில் ஷெல்கா அமர்ந்துகொண்டான். பெயர்கள் எதையும் கூறாமல் காரினின் அசாதாரணமான சோதனைகள் பற்றித் தான் அறிந்ததைக் கூறினான்; அவை பற்றி வெளிநாடுகளில் பெரிய அளவுக்கு அக்

---

* கோவ்னோ—இப்போது காவுனாஸ், லித்துவேனியாவில் ஒரு பெரிய நகரம். (ப-ர்.)

கறை காட்டப்படுவதையும் சொன்னான்.

ஹ்றலீனோவ் ஷெல்காவை அவன் அந்தக் கருவியைப் பார்த்திருக்கிறானா என்று வினவினான்.

''இல்லை, ஒருத்தரும் அக்கருவியைக் கண்டதில்லை.''

''ஆகவே, அதெல்லாம் ஊகமும் அனுமானமும் அழகுபடுத்தப்பட்ட கற்பனையும்தான், இல்லையா?''

பிறகு பாழடைந்த வேனில் வீட்டின் நிலவறை, வெட்டப்பட்ட எஃகுத் துண்டுகள், கரிக்கோபுரவத்திகள் அடங்கிய பெட்டிகள் ஆகியவை பற்றி ஷெல்கா சொன்னான். ஹ்றலீனோவ் தலையசைத்தான்:

''ஓகோ, அப்படியா? கோபுரம் போன்ற வத்திகள். ரொம்ப நல்லது. எனக்குப் புரியுது. அது பெரிய இரகசியமில்லையென்றால் எனக்குச் சொல்லுங்க,—ஏதோ சந்தர்ப்பத்தாலே தானே என்ஜினியர் காரினைப் பற்றிப் பேசுறீங்க?''

ஷெல்கா ஒரு கணப்பொழுது ஹ்றலீனோவின் கண்களில் நேரே பார்த்தவாறு மௌனமாயிருந்தான்.

''ஆமாம், காரினைப் பற்றித்தான். அவனை உங்களுக்குத் தெரியுமா?'' என வினவினான்.

''மிகமிகத் திறமைவாய்ந்த ஆள்.'' தனது வாயில் ஏதோ புளிப்புப் பண்டம் வைத்திருப்பவன் போன்று ஹ்றலீனோவ் முகம் சுளித்தான். ''அசாதாரண மனிதன். ஆனா அவன் விஞ்ஞானி அல்ல. அவன் அதிகாரவேட்கை கொண்டவன். முற்றிலும் தனிப்படுத்தப்பட்ட நபர். சாதனையாளன், ஒரு மேதையின் அடையாளங்களோட உள்ள ஒரு சிடுமூஞ்சி. ரொம்பக் கிளர்ச்சி மிக்கவன். பயங்கரமான கற்பனையுள்ளவன். ஆனா அவனோட வியப்பூட்டும் அறிவு எப்பவுமே மிகக் கீழான ஆசைகளால் துண்டப்படுது. அவன் நிறையச் சாதிப்பான். இறுதியில் மீளாக் குடிகாரனாக மடிவான், அல்லது 'மனித இனத்தை அச்சுறுத்த' முயல்வான்... ஒரு மேதைக்கு வேறு எவரையும் விட மிகக் கண்டிப்பான கட்டுப்பாடு அவசியம். அவன் ஏற்க வேண்டிய பொறுப்பு நிறைய இருக்கு.''

மீண்டும் ஹ்றலீனோவ் கன்னங்களில் செம்மை படர்ந்து ஒளிர்ந்தது.

''அறிவொளியும் கட்டுப்பாடும் கொண்ட மனம் புனிதங்களிலும் புனிதமானது, அற்புதங்களில் அற்புதமானது. பிரபஞ்சத்தில் இந்த உலகம் ஒரு மணல் போன்றது. இந்தப் பூமியில் வாழும் மனிதனோ, மிகச் சிறிய அளவின் நூறு கோடிப் பங்கில் ஒரு சிறு அளவை விடச் சிறியவன்... இவ்வாறு, கற்பனை செய்து மட்டுமே உணரக்கூடிய அளவு உடைய மனிதன், உலகவுருண்டை சூரியனைச் சுற்றி அறுபது முறைவரும் கால அளவே வாழ்பவன் ஆயினும், இந்தப் பிரபஞ்சம் பூராவையும் கிரகிக்கக்கூடிய அறிவைப் பெற்றிருக்கிறான்... இதைப் புரிந்து கொள்ள உயர் கணிதக் குறிச்சொற்களை நாம் பயன்படுத்த வேண்டும்... எடுத்துக்காட்டா ஒன்று சொல்கிறேன். உங்களுடைய ஆய்வுக்கூடத்திலிருந்து பெரு மதிப்புள்ள உருப்பெருக்கியை ஒருத்தன் எடுத்து, அதைக் கொண்டு சுவரில் ஆணி அறைந்தால் நீங்க என்ன சொல்வீங்க? காரின் தனது மேதமையை இப்படித் தான் பயன்படுத்துறான்... தொலைவுக்கு அப்பால் சிவப்புக் கதிர்களைக் கடத்துவது பற்றிய முக்கியமான கண்டுபிடிப்பை அவன் சாதித்திருக்கிறான் என்பது எனக்குத் தெரியும். உண்மையில், கிரிண்டல்-மாத்யூசின் மரணக்கதிர்* பற்றி நீங்க கேள்விப்பட்டிருக்கிறீர்களா? அவர் சரியான கொள்கைகள் கொண்டிருந்தாலும், அந்த மரணக் கதிர் வெறும் போலியாக முடிந்தது. ஒன்றுக்கு ஒன்று இணையாக அனுப்பப்படும் ஆயிரம் டிகிரி ஸென்டிகிரேட் வெப்பமுள்ள கதிர்கள் அழிப்புக்கும் இராணுவத் தற்காப்புக்கும் பயன்படும் கொடிய கருவியா அமையும். சிதறிப்போகாத கதிரை அனுப்புவதில்தான் அதனுடைய முழு இரகசியமே அடங்கியிருக்கு. இதுவரை இதைச் செய்ய ஒருத்தராலேயும்

---

* கிரிண்டல்-மாத்யூஸ்—தமது 'மரணக்கதிரி'னால் 20ஆம் நூற்றாண்டின் மூன்றாம் பத்தாண்டுகளில் பெருத்த ஆரவாரம் விளைவித்த கண்டுபிடிப்பாளர். (ப-ர்.)

முடியலே. உங்க கதையை வைத்துப்பார்த்தால், இதைச் செய்யக்கூடிய ஓர் எந்திரத்தை காரின் அமைத்திருக்கிறான் என்று தெரிகிறது. அது அப்படித்தான் என்றால்,—அது மிகமிக முக்கியமான கண்டுபிடிப்புத்தான்.''

''இந்தக் கண்டுபிடிப்பில் பெருத்த அரசியல் மணம் வீசுறதாக எனக்கு நெடுங்காலமாவே புலப்பட்டுவருது,'' என்றான் ஷெல்கா.

சற்று நேரம் ஹ்லீனோவ் அமைதியாய் அமர்ந்திருந்தான், பிறகு அவன் காதுகள் கூடக் கன்றிச் சிவந்தன.

''காரினைத் தேடிப்பிடிங்க, அவன் பிடரியைப் பிடித்துத்தள்ளி அவனோட எந்திரத்தோட சோவியத் யூனியனுக்குத் திரும்பக் கொண்டுவாங்க. இந்தக் கருவி நமது எதிரிகளுக்குக் கிடைக்கக் கூடாது. தன்னுடைய கடமை என்னவென்று அவனுக்குத் தெரியுமா அல்லது அவன் வெறுமனே இழிமகனா என்று கேளுங்க... அப்படித்தான் என்றால் அவன் விரும்புற அளவுக்குப் பணம் கொடுங்க... அல்லது அவனைக் கொன்றுவிடுங்க...''

ஷெல்கா புருவங்களை உயர்த்தினான். ஹ்லீனோவ் தனது ஒலிவாங்கியைத் தட்டின்மேல் வைத்துவிட்டுப் பின்புறம் சாய்ந்து கண்களை மூடினான்.

சமசதுரங்களாகப் பகுக்கப்பட்ட வயல்களுக்கும் நேர்கோடுகள் போன்ற சாலைகளுக்கும் மேலாக விமானம் காற்றில் பறந்து சென்றது. அவர்கள் சென்ற உயரத்தினின்று தொலைவில் உள்ள ஏரிகளாகிய நீலத்திட்டுகளுக்கிடையில் பெர்லின் நகரின் பழுப்பு வண்ண எல்லைக் கோடுகளைப் பார்க்க முடிந்தது.

35

வழக்கம்போல, காலை ஏழரை மணிக்கு ஸேன் தெருவிலுள்ள வீட்டில் சக்கரவர்த்தி நெப்போலியனது படுக்கையில் இருந்த ரோல்லிங் விழித்தெழுந்தான். கண்களைத் திறக்காமலே தனது தலைய

ணைக்கு அடியிலிருந்து கைக்குட்டை ஒன்றை எடுத்து, உறுதியுடன் மூக்கைச் சிந்தினான்.

முற்றிலும் புத்துணர்வு அடையவில்லை என்பது உண்மையே, ஆனாலும் தனது சுய ஆற்றல் முழுதையும் பெற்றவனாய் கம்பளத்தின் மேல் கைக்குட்டையை எறிந்துவிட்டு, பட்டுத் தலையணைகளுக்கு மத்தியில் அமர்ந்து சுற்றிலும் பார்த்தான். படுக்கையும் அறையும் காலியாக இருந்தன.

ரோல்லிங் மணியை அழுத்த, ஸோயாவின் பணிப்பெண் தோன்றினாள். அவளைக் கடந்து நோக்கியபடி, ''சீமாட்டி?'' என வினவினான்.

பணிப்பெண் தோள்களை உயர்த்தித் தலையை இப்புறமும் அப்புறமும் ஆந்தை போல திருப்பினாள். கழிவறைக்கு விரலூன்றி நடந்துசென்று நோக்கினாள், அங்கிருந்து இப்போது விரைந்து உடுத்தும் அறைக்குச் சென்று, குளியலறையின் கதவைப் படீரென்று மூடிவிட்டுப் படுக்கையறைக்கு மீண்டாள். அப்போது அவளுடைய விரல்கள் நடுக்கத்துடன் அவளது முன்றானை ஓரத்தில் தைத்துள்ள பின்னல் பட்டியை இழுத்துக் கொண்டிருந்தன.

''சீமாட்டியை இங்கே எங்கேயுமே காணாம்.''

''காப்பி,'' என்றான் ரோல்லிங்.

தானே குளியல்தொட்டியை நிரப்பிக் குளித்து, தானே உடையணிந்து, காப்பியைத் தானே ஊற்றிக் கொண்டான். இதற்கிடையில் வீட்டிலிருந்த அனைவரும் சத்தமற்ற கலவர நிலையில் இருந்தனர். ஒவ்வொருவரும் ஓசைப்படாது விரலூன்றி நடக்கவும், கிசுகிசுக்கவும் செய்தனர். வீட்டை விட்டு வெளியேறும் போது, வெருட்சியுடன் கதவைத் திறக்கப் பாய்ந்துசென்ற வாயிற்காவலனை ரோல்லிங் தனது முழங்கையினால் இடித்தான். தனது அலுவலகத்திற்கு அவன் இருபது நிமிடங்கள் தாழ்த்திச்சென்றான்.

மால்ஸேர்ப் சாலையில் அன்று காலையில் தீப்பொறி பறந்தது. தீங்கை முற்றிலும் தடுக்க முடியாத தன்மையை செயலாளனின் முகம் தெரிவித்தது. பார்வையாளர்கள் வால்நட் கதவுக்கு வெளி

யே குலைந்த முகத்துடன் வந்தனர். ''இன்னைக்கு திரு. ரோல்லிங் மோசமான மனநிலையுடன் இருக்கிறார்,'' என்று அவர்கள் கிசுகிசுத்தவாறு கூறிக் கொண்டனர். சரியாக ஒரு மணி ஆகும் போது கடிகாரத்தைப் பார்த்தபடி ரோல்லிங் ஒரு பென்சிலை ஒடித்தான். பகலுணவு கொள்ள அவனை அழைக்க ஸோயா வர மாட்டாள் என்பது தெளிவாய்த் தெரிந்தது. அவன் ஒன்றே கால் மணி வரை பொறுத்திருந்தான். அந்த அச்சம் ஊட்டிய கால் மணிப்பொழுதிற்குள் செயலாளனின் தூய தலை வகிடில் இரு நரைமயிர்கள் தோன்றின. பகலுணவு கொள்ள ரோல்லிங் தனியே 'க்ரிப்பான்' ரெஸ்டாரன்டுக்குச் சென்றான்.

திரு. க்ரிப்பான் என்ற அக்கடைக்காரன் உயரமாயும் பருத்தும் இருந்தான்; முன்னாளைய சமையற்காரனும், ஒரு மதுபானக் கடைக்குச் சொந்தக்காரனும் ஆவான். தற்போது சுவையறிவுப் பெருங்கலை, செரிமானம் ஆகியவைப்பற்றிய தலைமை ஆலோசகனாகத் திகழ்ந்தான். அவன் தனது கையை ஒரு வீரன் போன்று அலைத்துக்கொண்டு ரோல்லிங்கைச் சந்தித்தான். கருஞ்சாம்பல் நிறக் கோட்டு, கச்சிதமான அசிரியத் தாடி, உயர்ந்த நெற்றி ஆகியவற்றுடன் திரு. க்ரிப்பான் தனது ரெஸ்டாரன்டின் ஒரு சிறு மண்டபத்தின் நடுவே நின்றிருந்தான். பலிபீடம் போன்ற வெள்ளி மேடைமீது கையைத் தாங்கி நின்றான். விசேட அலங்கார முறையில் செய்யப் பெற்ற வெள்ளி மேடையாக இருந்த அதில் புகழ் பெற்ற வதக்கிய ஆட்டுச் சந்துக்கறியும் மொச்சையும் ஒரு குவிந்த கிண்ண மூடியின் கீழ் அமைந்த கணப்புக்குள் வைக்கப்பெற்று அம்மேடைமீது இருந்தது.

நான்கு சுவர்களையொட்டி, சிவப்பு வண்ணத் தோல் தைத்த நீள் சோபாக்களில் குறுகலான நீண்ட மேசைகளுக்குப் பின்னே அக்கடைக்கு வழக்கமாக வருகின்றவர்கள் அமர்ந்திருந்தனர் — பெரும்பாலும் அவர்கள் க்ராண் புள்வார்களிலுள்ள வணிகத் துறைச் செல்வர்கள், பெண்களும் சிலர் இருந்தனர்.

பலிபீடம் இருந்த இடம் தவிர அறையின் நடுப் பகுதி காலியாக இருந்தது. தனது தலையைத் திருப்பித் தன் ரெஸ்டாரன்டுக்கு வருகின்றவர்களின் சுவையறிவு நிகழ்முறையைக் கடைக்காரன் காணலாம். மனநிறைவின்மையின் குறியாக ஏற்படும் சிறு முகச்சுளிவும் அவன் பார்வையினின்றும் தப்பவில்லை. அத்துடன் அவன் பல விஷயங்களை எதிர்நோக்கினான்: பழச்சாறு சுரக்கும் மர்மமான நிகழ்முறை, இரைப்பையின் மறையாணி போன்ற வேலை, எப்போதோ உண்ட ஏதோ ஒன்றின் நினைவுகள், முன்னுணர்வுகள், உடலின் வெவ்வேறு பகுதிகளுக்கும் குருதிபாய்தல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட உணவு மனோதத்துவம்—இவை எல்லாம் திரு. க்ரிப்பானுக்குத் திறந்த புத்தகம்.

கண்டிப்புடனும், அதே நேரத்தில் தகப்பன் போன்ற பரிவு முகத்தோற்றத்துடனும் அவன் உண்ணவந்திருக்கும் ஒருவர் அருகே சென்று கவர்ச்சியுடன் தனது கட்டையான மென்மைக் குரலில் பின்வருமாறு கூறுவான்: ''ஐயா, இன்று உங்களோட மனநிலைக்கு ஏற்றது ஒரு குவளை 'மடீர'வும் சிறிதளவு மிக இனிப்பற்ற 'பூயி'யும் ஆகும். நீங்க என்னைத் தலைவெட்டி எந்திரத்துக்கு அனுப்பலாம், ஆனா உங்களுக்குச் சிவப்பு மது ஒரு சொட்டுக்கூடத் தர மாட்டேன். ஆளி, சற்றே வேகவைத்து ட்யூர்போ மீன், கோழியின் தொடைக்கறி, சில அஸ்பராகஸ் கீரைத் தண்டுகள் ஆகியவை மட்டுமே. அந்த எளிய உணவு உங்களோட வலிமையைத் திரும்பத் தரும்''. நீரெலியையே எப்போதும் உணவாகக் கொள்ளும் பெதகோனியனைத்* தவிர எவராலும் இந்தச் சந்தர்ப்பத்தில் அதனை மறுக்க முடியாது.

வேதியல் மன்னன் மேசைக்குப் பணியாளன் மனப்பான்மையுடன் திரு. க்ரிப்பான் எதிர்பார்க்கப்

---

* பெதகோனியன் — தென் அர்ஜென்டீனாவில் உள்ள இந்திய இனக்குழு உறுப்பினன். இந்தப் பெயர் மெக்கல்லனால் வழங்கப்பட்டது. 19ஆம் நூற்றாண்டின் மத்தியில் காலனிவாதிகளால் இனக்குழுவினர்களில் சிலர் சிரச்சேதம் செய்யப்பட்டார்கள். (ப-ர்.)

பட்டபடி ஓடவில்லை. சிரணக்கலை அகாதமியாகிய இங்கு கோடீசுவரனும், கணக்கெழுதுபவனும், தனது ஈரக் குடையை வாயில்காவலனிடம் திணித்துவிட்டு வருபவனும், 'ஹவானா' சுருட்டின் மணத்துடன் ஒரு ரோல்ஸ் ராய்ஸ் காரினின்றும் சிறப்புடன் இறங்குபவனும் ஆகிய எல்லாரும் ஒரே விலைதான் கொடுத்தனர். திரு. க்ரிப்பான் ஒரு குடியரசுவாதியும், தத்துவவாதியும் ஆவான். பெருமிதம் ததும்பும் முறுவலுடன் ரோல்லிங்கிடம் உண்டிவகைப் பட்டியலைக் கொடுத்து, முதலில் முலாம்பழத்தையும், அதன் பிறகு ட்ரப்பல் காளான்களுடன் அவிக்கப்பெற்ற இறாலையும், ஆட்டிறைச்சியின் சந்துக் கறியையும் உண்ணுமாறு ஆலோசனை சொன்னான். திரு. ரோல்லிங் பகற்பொழுதில் ஒயின் குடிப்பதில்லை என்பது அவனுக்குத் தெரியும்.

''விஸ்கியும் சோடாவும் கலந்து தா, ஒரு பாட்டில் ஷாம்பேயின் பனிக்கட்டியில் போட்டுக்கொடு,'' என்று பல்லைக் கடித்துக்கொண்டே ரோல்லிங் கூறினான்.

திரு. க்ரிப்பான் அதிர்ச்சியுடன் பின்னுக்கு நகர்ந்தான். அவன் கண்களில் கணநேர வியப்பும் அச்சமும் அருவருப்பும் ஒளிர்ந்தன: உண்ணவந்தவன் அண்ணத்தை மழுங்கச் செய்த விஸ்கியுடன் தொடங்கி, தொடர்ந்து ஷாம்பேயின் குடிக்க விரும்பினான். அது வயிற்றை ஊதவைத்தது. திரு. க்ரிப்பானின் கண்கள் மங்கின, மரியாதையுடன் தலைவணங்கினான்: அவனுடைய வாடிக்கையாளன் இன்று சரியான நிலையில் இல்லாததால், தனக்குத்தானே அவனால் சமாதானம் செய்துகொள்ள முடிந்தது.

மூன்றாவது கிளாஸ் விஸ்கி குடித்தபிறகு ரோல்லிங் நாப்கினைக் கசக்கத் தொடங்கினான். இத்தகைய மனநிலையுடைய ஒருவன் சமூக ஏணியின் மறுமுனையில் இருப்பானானால், உதாரணமாக வாத்து மூக்கன் கஸ்டோனாக இருந்தால், ஸோயா மான்ரோஸை கதிரவன் மறைவதற்குள் தேடிப்பிடித்து, அவளது விலாவில் பிடிகத்தியை ஆழச் செருகியிருப்பான். ஆனால் ரோல்லிங்கிற்கு வேறு வழிகள்தாம் பொருத்

தமானவை. பழிவாங்குதலைப் பற்றிய மிகவும் நேர்த்தியானதும் ஆரோக்கியமற்றதுமான கருத்துகள், விஸ்கியின் மஞ்சள் நிற ஆவியினின்றும் வெளிப்பட்டு ஒன்றுகூடி ரோல்லிங்கின் மூளையில் வளர்ந்தன. அழகி ஸோயா அவன் வாழ்வில் எந்தளவு முக்கியத்துவமுடையவள் என்பதை இப்போதுதான் உணர்ந்தான்... மன உளைவினால் துடைப்புக்குட்டையினுள் நகங்களைக் குத்தினான்.

தொடப்படாத உணவைப் பணியாள் அப்புறப்படுத்திவிட்டு ஷாம்பேயின் ஊற்றினான். ரோல்லிங் கிளாசை இறுகப்பற்றி தாகம்தீரப் பருகினான். அவனது தங்கப் பற்கள் கிளாசின் ஓரத்தில் இடித்தன. அந்தக் கணத்திலே ஸெமியோனவ் தெருவிலிருந்து ரெஸ்டாரன்டுக்குள் விரைந்து புகுந்தான். ரோல்லிங்கைப் பார்த்தவுடன் தனது தொப்பியை நீங்கி மேசையின் குறுக்கே சாய்ந்து ரோல்லிங்கிடம் கிசுகிசுத்தான்:

''பத்திரிகைகளைப் பார்த்தீங்களா?... இப்பத்தான் பிணக்கிடங்கிலிருந்து வந்தேன்... அது அவன்தான். அதைப்பற்றி நமக்கு ஒன்னும் தெரியாது. என்னால சத்தியம் பண்ணிச் சொல்ல முடியும்... காலை மூன்று மணியிலிருந்து நாலு மணிக்கு இடையே கொலை நடைபெற்றதாக நிலைநாட்டப்பட்டிருக்கு. பத்திரிகைகளிலிருந்து எனக்குத் தெரிந்தது, பத்திரிகைகளிலிருந்து...''

ஒரு கொடிய முறுக்குண்ட முகம் ரோல்லிங்கின் கண்களுக்கு முன் மேலும் கீழும் குதித்தது. அருகிருந்தோர் இவர்களைப் பார்க்கத் திரும்பினர். ஸெமியோனவுக்காக நாற்காலியை எடுத்துக்கொண்டு ஒரு பணியாள் அணுகினான்.

''நாசமாய்ப் போக,'' என்று விஸ்கியின் மயக்கத்தில் இருந்த ரோல்லிங் கூறினான். ''என் பகலுணவைத் தொல்லை செய்யுறீங்க...''

''சரி, என்னை மன்னிச்சுருங்க, தெரு மூலையில் தங்களுக்காகக் காரில் காத்திருப்பேன்...''

36

அந்நாள்களிலெல்லாம் பாரிஸ் நகரப் பத்திரிகைகளில் எவ்வித முக்கியத்துவமும் காணப்படவில்லை, காட்டு ஏரியைப்போல எல்லாம் அமைதியாக இருந்தன. இலக்கியத்தைப் பற்றிய தலையங்கங்களையும், நாடக நிகழ்ச்சிகளைப் பற்றிய விமர்சனங்களையும், நடிகர்களின் வாழ்க்கை விவரங்களையும் படிக்கும் போது பூர்ஷ்வாக்கள் கொட்டாவி விட்டனர்.

இத்தகைய தடையற்ற அமைதியுடன் பத்திரிகைகள் நடுத்தர பூர்ஷ்வாக்களின் பணப்பைகளைப் புயல்போன்று தாக்கத் தயாராகிக் கொண்டிருந்தன. வேதியல் அரசன் ரோல்லிங்கின் நிறுவனம் நன்கு தொடங்கப்பட்டிருந்தது, சிறு போட்டியாளர்கள் நசுக்கப்பட்டிருந்தார்கள்; விலைகளை உயர்த்தும் இயக்கத்தைத் தொடங்கும் தறுவாயில் அவன் இருந்தான். பத்திரிகைத் துறை விலைக்கு வாங்கப்பட்டது, வேதியல் தொழில் பற்றித் தேவையான தகவல்கள் அனைத்தும் பத்திரிகையாளருக்குத் தரப்பட்டன. அரசியல் தலையங்கங்களுக்கு ஆதாரமாகப் பிரமிப்பூட்டும் விவரங்கள் தயாரிக்கப்பட்டன. நிறுவனத்தின் பொதுத்திட்டத்துக்கு எதிராக முணுமுணுக்க முயன்ற சில முட்டாள்கள் முகத்திலறையப்பட்டும், இரண்டொரு சண்டைகள் மூலமும் ஒழித்துக்கட்டவும் பட்டனர்.

சந்தடியின்மையும் கொந்தளிப்பின்மையும் பாரிசில் ஆட்சி புரிந்தன. நாளிதழ்களின் விற்பனை கொஞ்சம் குறைந்தது. ஆகவே, கொபெலேன் தெருவில் 63ஆம் எண் இல்லத்தில் நடைபெற்ற கொலை உண்மையில் நல்லதிர்ஷ்டமாக வந்தது.

மறுநாள் காலையில் எல்லா எழுபத்தைந்து பத்திரிகைகளும் ''மர்மமான, பயங்கர இரவுக் கொலை'' என்ற பெரிய தலைப்புச் செய்திகளுடன் வெளிவந்தன. கொலை செய்யப்பட்டவன் பற்றிய அடையாளம் தெரியவில்லை. அவனது ஆவணங்கள் திருடப்பட்டிருந்தன. வெளிப்படையாகவே பொய்யான பெயரில் அவன் ஓட்டலில் பதிவுசெய்திருந்

தான். கொள்ளையடிப்பதற்காகக் கொலை செய்யப் படவில்லையெனத் தோன்றியது. இறந்தவனிடமிருந்த தங்கத்தாலான பொருள்களும் பணமும் தொடப்படவில்லை.பழிவாங்கும் நோக்குடன் நடந்த குற்றமாகவும் இருந்திருக்க முடியாது. ஏனெனில் பதினோறாம் எண் அறையில் முழுதும் தீவிரமாகத் தேடியதற்கு மிகத் தெளிவான குறிகள் இருந்தன. மர்மம், எல்லாம் மர்மம்.

இரண்டு மணிப் பதிப்புக்கள் பிரமிப்பளிக்கும் விவரத்தை வெளியிட்டிருந்தன: கொலை நடந்த அறையில் ஆமையோட்டில் ஐந்து பெரிய வைரங்கள் பதித்து அழகு செய்யப்பெற்றிருந்த ஒரு பெண்ணின் கொண்டையூசி காணப்பட்டது. தூசிபடிந்த தரையில் பெண்ணுடைய காலணிகளின் அடையாளங்கள் இருந்தன. கொண்டையூசிக் கதை குறித்து பாரிஸ் நகரமே நடுநடுங்கியது. ஓர் ஒய்யாரியால் இக்கொலை செய்யப்பட்டுள்ளது. உயர் சமூகமாதோ? பூர்ஷ்வா வர்க்கமாதோ? மர்மம்... மர்மம்...

பாரிஸ் நகரின் மிகவும் புகழ்பெற்ற பெண்களுடைய பேட்டிகள் நான்கு மணிப் பதிப்புக்களின் பத்திகளை நிரம்பியிருந்தன.

சுருங்கச் சொன்னால், கொபெலேன் தெருவில் நடந்த கொலையைப்பற்றி பாரிஸ் நகர முழுமைக்கும் ஏதுமே அறியாதிருந்தவன் 'க்ரிப்பான்' ரெஸ்டாரன்டில் அமர்ந்திருந்த ரோல்லிங் ஒருவன் தான். அவன் மிகக் கெட்ட கடுப்புடன் இருந்தான். ஸெமியோனவை வாடகைக் காரில் காத்திருக்குமாறு வேண்டுமென்றே செய்தான். கடைசியாகத் தெரு மூலையில் தோன்றி வாடகைக் காருக்குள் ஏறிப் பிணக்கிடங்கிற்குத் தங்களைக் கொண்டுசெல்லுமாறு ஓட்டுநரை ஏவினான். பத்திரிகைகளில் இருந்த ஒவ்வொன்றையும் வழியில் ரோல்லிங்கிற்கு ஸெமியோனவ் ஏற்றுக்கொள்ளக்கூடிய முறையில் சொல்லி வந்தான்.

ஐந்து வைரங்கள் பதிக்கப்பட்ட ஆமையோட்டுக் கொண்டையூசியைக் குறிப்பிட்ட போது ரோல்லிங்கின் விரல்கள் கைத்தடியின் பிடிமேல் நடுங்கின.

பிணக்கிடங்கை அவர்கள் நெருங்கியபோது காரை நிறுத்தச் சொல்லும் ஜாடையுடன் அவன் ஓட்டுநரின் பக்கம் திடுமெனச் சாய்ந்தான், ஆனால் மனத்தை மாற்றிக்கொண்டு சினத்தோடு உறுமமட்டுமே செய்தான்.

பிணக்கிடங்கின் கதவுக்கருகில் கூட்டம் அலை மோதியது. விலையுயர்ந்த மென்மயிர் மேல்கோட்டுகளை அணிந்த பெண்கள், மேல் தூக்கிய மூக்கையுடைய கடை வேலைக்காரிகள், பாரிஸ் நகர்ப்புறப் பகுதிகளிலிருந்து வந்துள்ள சந்தேகத்திற்குரிய புள்ளிகள், பின்னல் தொப்பிகளை அணிந்துகொண்டு ஆர்வத்தோடு வந்துள்ள வாயிற்காப்போர்கள், வியர்த்த மூக்குகளும் கசங்கிய கழுத்துப்பட்டைகளும் கொண்ட நிருபர்கள், கொழுத்த நடிகர்களின் கைகளில் சாய்ந்துவந்த நடிகைகள் ஆகிய எல்லாரும் சலவைக்கல் பாளமொன்றில் கிடத்தப்பட்டு, சட்டை கிழிந்தும், வெறும் பாதங்களுடனும் அடித்தளத்தினின்றும் பாதி உயரத்தில் அமைந்திருந்த சன்னலின் பக்கம் தலை வைக்கப்பட்டு இருந்த கொலையுண்டவனை ஒரு பார்வை பார்க்க முயன்று கொண்டிருந்தனர்.

இந்த வெறும் பாதங்கள் பயங்கரமான தோற்றமளித்தன—பெரியனவாகவும், நீலம் பாய்ந்தும், நறுக்கப்பெறாத நகங்களுடனும் அவை இருந்தன. இறப்பினால் வெளுத்திருந்த முகம் 'பீதியில் அஞ்சி நடுங்க வைத்தது'. தாடி மேல் நோக்கித் துருத்திக் கொண்டிருந்தது.

கூட்டத்தினூடே ஒரு விலாங்கு போன்று நெளிந்து சென்று ரோல்லிங்கிற்கு வழி ஒதுக்கிக் கொடுத்தான் ஸெமியோனவ். இறந்தவனின் முகத்தில் தனது பார்வையை அசையாது செலுத்தினான் ரோல்லிங். கணப்போது கூர்ந்து பார்த்தான். அவன் விழிகள் சுருங்கின, தடித்த மூக்குச் சுளித்தது. அவனது தங்கப் பற்கள் ஒளிவீசின.

''என்ன, அவன்தானே, இல்லையா?'' என்று ஸெமியோனவ் கிசுகிசுத்தான்.

இம்முறை ரோல்லிங் அவனுக்குப் பதில் பேசினான்:

''இன்னொரு இரட்டையன்.''

இவ்விரு சொற்கள் முடிவதற்குள் பொன்மயிர்த் தலையொன்று ரோல்லிங்கின் தோளுக்குப் பின்னிருந்து தோன்றி அவனை நிழற்படம் பிடிப்பது போன்று அவன் முகத்தை நோக்கிப் பிறகு கூட்டத்துள் மறைந்தது.

அதுதான் ஷெல்கா.

37

பிணக்கிடங்கில் ஸெமியோனவை விட்டுவிட்டு ஸேன் தெருவுக்குக் காரில் திரும்பினான் ரோல்லிங். அங்கே முன்போலவே சந்தடியற்ற கலவரம் நிலவியது. வீட்டில் ஸோயா வந்திருக்கவில்லை, தொலைபேசியில் பேசவும் இல்லை.

படுக்கையறையை உள்ளே பூட்டிக்கொண்டு தலைகுனிந்து காலணிகளின் நுனிகளை நோக்கியவாறு தரைவிரிப்பின் மேல் இங்கும் அங்கும் நடந்தான் ரோல்லிங். படுக்கையில் தான் வழக்கமாக உறங்கும் பக்கத்தில் நின்றான். முகவாயைத் தேய்த்துக்கொண்டான். கண்களை மூடினான். ஏதோ மறந்துபோய் அவனுக்கு நாள் முழுக்கத் தொல்லை தந்துகொண்டிருந்தது, கடைசியாக நினைவுக்கு வந்தது.

''ரோல்லிங், ரோல்லிங்... நாம் ஒழிந்துவிட்டோம்...''

நம்பிக்கை இழந்த மெல்லிய குரலால், ஸோயாவினுடைய குரலால் அது சொல்லப்பட்டது. அது நேற்று இரவு நடந்தது—அவர்கள் பேசிக்கொண்டிருக்கும் போதே இடைநடுவில் அவன் திடீரென்று தூங்கிப்போய்விட்டான். ஸோயாவின் குரல் அவனை எழுப்பவில்லை, அவனது மூளைக்கு எட்டவில்லை. இருப்பினும் நம்பிக்கை இழந்த அச்சொற்கள் அவன் காதுகளில் இப்போது ஒலித்தன.

சுருள் கம்பியினால் உந்தப்பட்டவன் போன்று

ரோல்லிங் குதித்தான்... ஆகவே, — மால்ஸேர்ப் சாலையில் காரினுக்கு உண்டான விந்தையான வலிப்பு; இரவுநேர மதுக்கடையில் ஸோயா அடைந்த கிளர்ச்சி; அலுவலகத்திலிருந்து என்ன தாள்களை காரின் திருடிச் சென்றிருக்கலாம் என்பதைத் தெரிந்து கொள்வதில் அவளது பிடிவாதம்; அதன் பிறகு அந்த ''ரோல்லிங், ரோல்லிங்... நாம் ஒழிந்து விட்டோம்...''; அதைத் தொடர்ந்து அவளது மறைவு; பிணக்கிடங்கில் அந்த இரட்டையனின் உயிரற்ற உடல்; வைரங்கள் பதித்த கொண்டையூசி... முன்னைய இரவில் தானே—அவன் நினைவு கூர்ந்தான் —அவளது அடர்ந்த கூந்தலில் அந்த ஐந்து வைரங்களும் மிளிர்ந்தன.

நிகழ்ச்சிகளின் சங்கிலித் தொடரில் ஒன்று முற்றும் தெளிவாயிருந்தது: தாக்குதலைத் தன்னிடமிருந்து இரட்டையனுக்கு மாற்றிவிடும் பழைய முறையை காரின் கையாண்டுள்ளான். ரோல்லிங்கின் கையெழுத்துடன் இருந்த குறிப்புக் காகிதங்களைக் கொலை நடந்த இடத்தில் வைத்து, மால்ஸேர்ப் சாலையிலுள்ள ரோல்லிங்கின் அலுவலகத்திற்குப் போலீஸார் வருமாறு செய்யும் நோக்குடன் அவற்றை அவன் திருடியுள்ளான்.

ரோல்லிங் இயல்பாக மனத்திண்மை பெற்றிருந்தும், தன் முதுகுப்புறம் குளிரால் நடுங்குவதை உணர்ந்தான். ''ரோல்லிங், ரோல்லிங், நாம் ஒழிந்து விட்டோம்...'' அவள் எதிர்நோக்கியிருக்க வேண்டும், கொலை பற்றிக் கட்டாயம் தெரிந்திருக்க வேண்டும். காலை மூன்று மணிக்கும் நான்கு மணிக்கும் இடையில் அது நிகழ்ந்தது. (போலீஸார் நாலரை மணிக்கு வந்துள்ளனர்.) தான் உறக்கமுற்ற போது தன் மூளையில் கடைசியாக நுழைந்த ஒலி கடிகாரம் ஒன்றே முக்கால் மணியை அடித்ததுதான் என்பதை ரோல்லிங் நினைவுகூர்ந்தான். இதன்பிறகு ஸோயா மறைந்திருக்கிறாள். ரோல்லிங்கின் கையெழுத்திலிருந்த எதையேனும் அழிக்கவே கொபெலேன் தெருவுக்கு அவள் விரைந்துள்ளாள் என்பது தெளிவு.

அதனை அவளே திட்டமிட்டிரா விட்டால் கொலை எப்போது நடக்க இருந்தது என்பதைச் சரியாக எப்படி ஸோயா தெரிந்திருக்கக் கூடும்? ரோல்லிங் கணப்பருகில் சென்று, சலவைக்கல்லா லான குறட்டில் முழங்கைகளை ஊன்றிக் கைகளால் முகத்தை மூடிக்கொண்டாள். ''ரோல்லிங், ரோல் லிங், நாம் ஒழிந்து விட்டோம்...'' என்று அவ்வளவு பீதியுற்ற குரலில் அவள் மெல்லக் கூறியது ஏன்? அவளது திட்டங்களைக் கவிழ்க்க ஏதோ ஒன்று நேற்று நிகழ்ந்திருக்க வேண்டும். ஆனால் என்ன? எந்தக் குறிப்பிட்ட கணத்தில்?..

தான் செய்துவிட்ட ஏதோ தவற்றைத் திருத்த விரும்பினாள் என்று எண்ணலாம். அதைச் செய்து விட்டாளா? காரின் உயிருடன் இருந்தான். ரோல் லிங்கின் கையெழுத்து இன்னும் கண்டுபிடிக்கப்பட வில்லை. இரட்டையன்தான் கொல்லப்பட்டுள்ளான். இதன் பொருள் விமோசனமா அழிவா? கொலை யாளி யார் — ஸோயாவின் கையாளா? காரினே தா னா?

ஏன் ஸோயா மறைந்துவிட்டாள்? ஏன், ஏன், ஏன்? ஸோயாவிடம் மாறுதல் ஏற்பட்ட கணத்தைத் தனது நினைவிலிருந்தே தேடிப்பிடிக்க முயன்றான். முதல் நாள் அவள் பேசிய ஒவ்வொரு சொல்லையும், அவள் செய்த ஒவ்வொரு கையசைவையும், நினைவு கூர முயன்றான். வேறுவகையான வேலையில் பழக் கமுற்றிருந்த தனது மூளையை அலைத்துக்கொண்டு முயன்றதால், முடிவில் அவனுக்குத் தலை நோவு கண்டது.

கணப்பருகில் அவன் நின்றபோது நிகழ்ந்த ஒவ் வொரு விவரத்தையும் நினைவுகூர முடியாவிட்டால் —பந்தயம் தோற்றுப்போகும் என்றும், தான் தோற்கடிக்கப்பட்டு அழிய நேரிடும் என்றும் ரோல் லிங் உணர்ந்தான். பங்கு மார்க்கெட் மீது ஒரு பெரிய தாக்குதலை இன்னும் மூன்று நாள்களில் தொடங்க இருந்தான். இக்கொலையுடன் அவன் பெயரைத் தொடர்புபடுத்தி வெறுமனே குறிப்பிடப் பட்டாலே போதும், பங்கு மார்க்கெட்டில் பெரும்

கூக்குரல் கிளம்பி அதன் விளைவாக நொடிப்பு ஏற் படும்... ரோல்லிங்கின் மீது படும் ஒரு அடி அமெரிக் கா, சீனா, இந்தியா, ஐரோப்பா, ஆப்பிரிக்கக் காலனிகள் ஆகியவற்றில் ஆயிரக்கணக்கான தொழிற் சாலைகளை இயக்கிவரும் பெரும் பணத்தொகை களைத் தாக்கும். இயங்கும் செயல்திட்டத்தின் துல் லியமான செயல் சீர்கேடு அடையும்... ரயில்வேக் கள், நீராவிக்கப்பல் வழிகள், சுரங்கங்கள், தொழிற் சாலைகள், வங்கிகள், லட்சக்கணக்கான எழுத்தர் கள், பத்து லட்சக்கணக்கான தொழிலாளர்கள், கோடிக்கணக்கான பங்குதாரர்கள்—ஆகிய இத்து ணையும் செறிந்த அந்த முழு அமைப்பும் ஆட்டங் கண்டு திகிலடித்து நின்று உயிரற்றுப் போகும்— பிறகு குழப்பந்தான்...

எப்பக்கத்திலிருந்து அடி விழும் என்று அறியாத நிலையில் ரோல்லிங் இருந்தான். அவன் மரண பயத் தில் இருந்தான். எண்ணம் நிகழும் ஒவ்வொரு கணத் திற்கும் பத்து லட்சம் டாலர் அவனுக்குக் கொடுக் கப்படுவது போன்று பேய்வேகத்தில் அவன் மூளை வேலை செய்தது.

கம்பளத்தின் மீது இரண்டு காலடிகள் தொப் பென்று அடித்த ஓசையினால் வேதியல் மன்னன் ண்மையில் வியப்பளிக்கும் இந்த மனநிலையிலி ருந்து திடுக்கிட்டு விழித்தான். (முதல் தளத்தில் இருந்த படுக்கையறையில் தோட்டப்பக்கம் அமைந் திருந்த சன்னல் திறந்திருந்தது.) ரோல்லிங் உடல் முழுக்க நடுங்கினான். பெரிய மீசையும், சுருக்கம் விழுந்த நெற்றியும், வலிய உடற்கட்டும் உடைய ஒருவனுடைய பிரதிபலிப்பு நிலைக்கண்ணாடியில் தோன்றியது. அவன் தலை குனிந்து இமைக்காது ரோல்லிங்கை விழித்து நோக்கினான்.

38

''உங்களுக்கு என்ன வேண்டும்?'' எனக் கீச்சிட்டான் ரோல்லிங், 'ப்ரௌனிங்' கைத்துப்பாக்கி வைத்தி

ருந்த காற்சட்டையின் பின்பையில் கையை நுழைக்க முடியாமல் திண்டாடியவாறு.

இந்தச் செயலைத் தேகக்கட்டுள்ள மனிதன் எதிர்நோக்கியிருந்தான் போலும். திரைக்குப் பின்னே அவன் குதித்தான். அங்கிருந்து தன் தலையை மறுபடியும் வெளியே நீட்டினான்.

''அமைதியாய் இருங்க. கூச்சல் போட வேணாம். உங்களைக் கொல்லவோ, எதனையும் திருடவோ நான் எண்ணலே,'' என்று தனது கைகளை உயர்த்தினான். ''காரியமாக வந்திருக்கேன்.''

''காரியத்திற்கு இது இடம் இல்லை. உங்களோட காரியத்தை எடுத்துக் கொண்டு, மால்ஸேர்ப் சாலை 48 'பி' எண் இல்லத்தில் காலை பதினொன்று முதல் ஒரு மணி வரை உங்களோட விவகாரங்களைக் கொண்டு வாங்க. திருடனைப் போலச் சன்னல் வழியாக வந்திருக்கீங்க.''

''மன்னிக்கணும்,'' என்று அம்மனிதன் நயமாக விடையளித்தான். ''எனது பெயர் கஸ்டோன் லெக்லேர். நான் சார்ஜண்ட் பதவி வகித்தவன். போரில் பெற்ற பதக்கமும் வைத்திருக்கின்றேன். அற்ப விவகாரங்களுக்கு நான் எப்போதும் போறதில்லை, என்றுமே திருடனாகவும் இருந்ததில்லை. திரு. ரோல்லிங், உடனேயே என்னிடம் மன்னிப்புக் கோருமாறு உங்களுக்குச் சொல்றேன். இல்லாவிட்டால் நமது பேச்சு மேலே தொடராது.''

''நாசமாப் போக!'' என்ற ரோல்லிங் முன்னேயே அமைதியுற்றிருந்தான்.

''நீங்க சொன்ன முகவரியை நாடி நான் போனால் உங்களுக்கு நன்கு தெரிந்த மான்ரோஸ் சீமாட்டி இறந்திடுவாள்.''

ரோல்லிங் முகம் மாறுபட்டது. நேரே கஸ்டோனிடம் சென்றான். பலகோடிச் செல்வமுடையவனுக்குக் காட்டவேண்டிய மதிப்புக் கொடுத்து கஸ்டோன் பேசினான். அதே நேரத்தில் தனது ஆசை நாயகியின் கணவனிடத்தில் பேசும்போது ஒருவன் பயன்படுத்துகிற முரட்டுத்தனமான சொந்தப்பாங்கும் அதில் கலந்திருந்தது.

''ஆக, கனவானே, மன்னிப்பு வேண்டுறீங்களா?''

''மான்ரோஸ் சீமாட்டி எங்கே ஒளிந்திருக்கிறாள் என்பது உங்களுக்குத் தெரியுமா?''

''ஆகையால், கனவானே, நம்முடைய பேச்சைத் தொடங்குறதுக்கு முன்னே நீங்க எங்கிட்ட மன்னிப்பு வேண்டுவதாக நான் புரிந்துகொள்ளலாமா?''

''நான் மன்னிப்புக் கேட்டுக்கிறேன்,'' எனக் கர்ஜித்தான் ரோல்லிங்.

''நான் ஏற்றுக்கொள்றேன்,'' எனக் கூறி கஸ்டோன் சன்னலை விட்டு நகர்ந்து, பழக்கமான கையாட்டத்துடன் தனது மீசையைச் சரிப்படுத்திய வாறு இருமி பிறகு கூறத் தொடங்கினான்: ''பாரிஸ் மக்கள் பூராவும் எந்தக் கொலைகாரனைப் பற்றிப் பேசிக்கிட்டிருக்கிறார்களோ, அவன் கைகளில் ஸோயா மான்ரோஸ் இருக்கிறாள்.''

''எங்கிருக்கிறாள்?'' (ரோல்லிங்கின் உதடுகள் நடுங்கின.)

''வில் தவ்ரேவில், கம்பேட்டா கண்காட்சிச் சாலைக்கு அருகிலுள்ள இரவு விடுதியிலே இருக்கிறாள். நேற்று ராத்திரி ஒரு காரில் அவர்களை வில் தவ்ரே வரையில் பின்தொடர்ந்தேன். இன்று சரியான முகவரியைக் கண்டுபிடிச்சுட்டேன்.''

''அவள் அவனுடன் விருப்பப்படி போனாளா?''

''மற்ற எதைக் காட்டிலும் அதையே அதிகம் தெரிந்துகொள்ள விரும்புறேன்,'' என விடையளித்தான் கஸ்டோன். அவனை அதிசயத்துடன் ரோல்லிங் பார்க்குமளவு அவனது விடை கெடு நோக்குடையதாக இருந்தது.

''மன்னிக்கவும், திரு. கஸ்டோன், இந்தக் கதையில் உங்களோட பங்கு என்ன என்பது முழுக்கத் தெரியலே. மான்ரோஸ் சீமாட்டியுடன் உங்களுக்கு என்ன தொடர்பு? இரவில் அவளைப் பின்தொடர்ந்து அவள் இருப்பிடத்தை உறுதிப்படுத்திக்கொள்வது ஏன்?''

''போதும்!'' எனக் கூறி கஸ்டோன் கண்ணியமானதொரு சாயலுடன் தன் கையை முன்னே நீட்டி

னான். ''உங்களைப் புரிந்துகொள்கிறேன். நீங்க அந்தக் கேள்வியை என்னிடம் கேட்க வேண்டியது தான். பதில் சொல்றேன்: நான் காதலிக்கிறேன், அதனால் பொறாமைப்படுறேன்...''

''ஆகா!'' எனக் கத்தினான் ரோல்லிங்.

''உங்களுக்கு விவரங்கள் வேணும்? இதோ அவை: நேற்று ராத்திரி ஒரு கிளாஸ் 'குரோக்' மதுவைக் குடிச்சிட்டு ஒரு காப்பிக் கடையிலிருந்து வெளி வந்தபோது, மான்ரோஸ் சீமாட்டியைப் பார்த் தேன். ஒரு வாடகைக் காரில் மிக விரைவாப் போய்க் கொண்டிருந்தாள். அவள் முகம் பேயறைந்தது போல இருந்தது. ஒரு வாடகைக் காருக்குள் குதித்து கணப்பொழுதிற்குள் அவளைப் பின்தொடர்ந்தேன். கொபெலேன் தெருவில் தன் காரை நிறுத்திட்டு அறுபத்து மூன்றாம் எண்ணுள்ள வீட்டின் வெளி வாயிலுக்குள் நுழைந்தாள். (தேள் கொட்டப்பட்டவன் போல ரோல்லிங் விழித்தான்.) பொறாமையால் ஆவேசமுற்ற நான் அந்த வீட்டுக்கு முன்னாலே நடைபாதையில் இங்குமங்கும் நடந்தேன். சரியாக நாலே கால் மணிக்கு மான்ரோஸ் சீமாட்டி வீட்டி னின்று வெளியே வந்தாள். நான் எதிர்பார்த்தது போல வெளிவாயில் வழியாக இல்லாமல், அதை ஒட்டிய பூங்காவிற்குச் செல்லும் வாயில் வழியா வந்தாள். துணிக்கோட்டும், சாம்பல் நிறத் தொப்பியும் அணிந்த கருந்தாடியுடைய ஒருத்தன் அவளது தோள்களைப் பற்றியிருந்தான். மற்றவை உங் களுக்குத் தெரியும்.''

ரோல்லிங் ஒரு நாற்காலியில் (சிலுவைப் போர்க் காலத்தைச் சேர்ந்தது) சாய்ந்து அமர்ந்தான். நாற்காலியின் செதுக்குக் கைகளை நோண்டியவாறு நெடுநேரம் ஒன்றும் பேசாதிருந்தான்... அகப்படாத தகவல் இங்கு கிடைத்துவிட்டது. கொலைகாரன்— காரின்தான். ஸோயா — அவனது கையாள்... கொலைத் திட்டம் தெளிவாக இருந்தது. ரோல்லிங் ஆகிய தன்னை இந்தச் சதிவிவகாரத்தில் இழுத்து விட்டுப் பிறகு அந்த எந்திரத்தைச் செய்வதற்குத் தேவையான பணத்தைத் தன்னிடம் பயங்காட்டிப்

பறிக்கும் நோக்கத்துடன் கொபெலேன் தெருவிலிருந்த இரட்டையனை அவர்கள் கொன்றிருக்கின்றனர். நேர்மையான சார்ஜண்டும் முதல்தர முட்டாளும் ஆகிய கஸ்டோன் ஏதோ தற்செயலாகக் குற்றத்தைக் கண்டுபிடித்துவிட்டான். எல்லாம் மிக விளக்கமாக உள்ளன. இரக்கமின்றி உறுதியுடன் கட்டாயம் அவன் செயல்புரிய வேண்டும்.

ரோல்லிங்கின் கண்களில் கொடுமை தழல் விட்டது. எழுந்து காலால் நாற்காலியை உதைத்துத் தள்ளினான்.

''போலீசுக்கு ஃபோன் பண்றேன். வில் தவ்ரேவுக்கு என்னுடன் நீங்க வாங்க.''

கஸ்டோன் இளித்தான், அவன் மீசை உதட்டோரத்தில் பரந்தது.

''திரு. ரோல்லிங், இச்செயலில் போலீசைக் கலக்க விடாமலிருப்பதே புத்திசாலித்தனமானது என்று நினைக்கிறேன். நாமே சொந்தத் திறத்தால் சமாளித்துக்கொள்ளலாம்.''

''கொலைகாரனையும் அவனோட கூட்டாளியையும் கைதுசெய்து நீதிக்கு முன்னே ஒப்படைக்க விரும்புறேன்.'' ரோல்லிங் நிமிர்ந்து நின்றான், அவனுடைய குரல் எஃகுப் போல அழுத்தம் பெற்றிருந்தது.

கஸ்டோன் தெளிவிலா முறையில் கையசைத்தான்.

''அப்படியே இருக்கலாம்... ஆனா ஒன்றிரண்டு செயல்களை நிறைவேற்றியுள்ள நம்பிக்கைக்குரிய ஆறு பையன்களின் அருமையான குழு எங்கிட்ட இருக்கு... இன்னும் ஒரு மணி நேரத்திலே அவர்களை இரண்டு கார்களில் வில் தவ்ரேவுக்கு நான் கொண்டு வரக் கூடும்... நான் உங்களுக்கு உறுதியா சொல்றேன், போலீஸாருடன் கலப்பது பலன் தராது.''

இதனைக் கேட்டு ரோல்லிங் உறும மட்டுமே செய்து கணப்பின் குறட்டுக்கு மேலிருந்த தொலைபேசியைப் பற்றினான். எனினும், விரைவாக கஸ்டோன் அவன் கையைப் பற்றிக்கொண்டான்.

''போலீசுக்கு ஃபோன் செய்ய வேணாம்!''

''ஏன் கூடாது?''

''ஏன்னா இதைவிட முட்டாள்தனத்தை எண்ணவே முடியாது... (ரோல்லிங் தொலைபேசியை எடுக்க மீண்டும் கை நீட்டினான்.) அபார அறிவு படைத்தவர் நீங்க, திரு. ரோல்லிங். ஒருவர் வெளிப் படையாகப் பேசக்கூடாத காரியங்கள் இருக்கு என்பதை நிச்சயமா நீங்க புரிஞ்சுக்கணும்... நான் கெஞ்சிக் கேட்டுக்கிறேன், ஃபோன் செய்ய வேணாம்... அட, சனியனே! நீங்க கட்டாயம் அறியணுமா, ஏன்னா நீங்க போலீசைக் கூப்பிடுறது நம்ம இரண்டு பேரையும் தலைவெட்டி எந்திரத்துக்குக் கொண்டுபோயிரும்... (அவன் நெஞ்சைப் பிடித்துத் தள்ளிவிட்டு ரோல்லிங் ரிசீவரை விரைந்து பற்றினான். கஸ்டோன் பரபரப்புடன் சுற்றிலும் பார்த்துக்கொண்டு, பிறகு நேரே ரோல்லிங்கின் காதிற்குள் கிசுகிசுத்தான்.) கொபெலேன் தெருவில் யாரோ ஒரு ருஷ்ய என்ஜினியர் வசிக்கிறான். உங்களோட கட்டளைக்கு ஏற்ப, அவனது முன்னோர் இருக்கிற இடத்திற்கு மிக அவசரமாக அவனை அனுப்பும்படி ஸோயா சீமாட்டி என்னை அமர்த்தினாள். நேற்று இரவு அந்தப் பணியை நிறைவேத்தியாச்சு. என்னுடைய ஆள்களுக்கு முன்பணம் தர இப்ப எனக்குப் பத்தாயிரம் ப்ராங்கு தேவை. உங்களிடம் பணம் இருக்கா?''

கால் மணி நேரத்திற்குப் பின் சுற்றுப்பயணக் கார் ஒன்று மேல்மூடி கவிக்கப்பெற்ற நிலையில் ஸேன் தெருவில் வந்து நின்றது. வீட்டினின்றும் ஓடிவந்து ரோல்லிங் அதனுள் குதித்தான். அந்தக் கார் குறுகிய தெருவில் திரும்பிக் கொண்டிருந்தபோது, வீட்டின் ஒரு மூலையின் பின்னிருந்து ஷெல்கா வெளி வந்து காரின் பின்பகுதியில் குதித்தான்.

கரை நெடுகிலும் அந்தச் சுற்றுப்பயணக் கார் ஓட்டப்பட்டது. ஷாம்ப் டெ மார்ஸ் என்ற சதுக்கத்தில் ஒரு காலத்தில் ரொபெஸ்பியேர் என்பவன் தானியக் கதிர்களைக் கையில் வைத்துக்கொண்டு

மேலான ஒன்றின் பலிமேடையின் முன், என்றும் அழியாத நீதியையும் அழியாத அமைதியையும் பேணும் நோக்குடன் மனிதகுலம் அனைத்தையும் ஒரு மகத்தான கூட்டு உடன்பாட்டில் கையொப்ப மிடுமாறு நிர்ப்பந்தப்படுத்தப் போவதாக ஆணை யிட்டுக் கூறி நின்ற அதே இடத்தில் இப்போது எய்ஃபேல் கோபுரம் நின்றது; அதன் இரும்புக்கூட் டினின்றும் இருபத்தைந்து லட்சம் மின்வத்திகள் இமைத்து விழித்தன, தீயம்புகள் படங்கள் தீட்டி, இரவு முழுவதும் பாரிஸ் மக்கள் எல்லாரும் படிப் பதற்காக எழுதின: '''ஸித்ரோயேன்' கார்களை வாங்குங்கள்—மலிவும் செயல்பாங்கும் கொண் டது.''

39

அந்த இரவு வெதுவெதுப்பாகவும், புழுக்கமாகவும் இருந்தது. தரையிலிருந்து மேல்தளம் வரை உயர்ந் திருந்த சன்னல் திறந்திருந்தது. கண்ணுக்குத் தெரி யாத இலைகளின் சலசலப்பு அதனூடே அவ்வப் போது கேட்டது. 'கரும்பறவை' என்ற விடுதியின் முதல் மாடியில் இருந்த அறை இருண்டும் ஓசை யின்றியும் இருந்தது. பூங்காவிலிருந்து வந்த ஈர வாடை அத்தர் மணத்துடன் கலந்தது.

அறையினுள்ளே ஒரு கதவு கீச்சிட்டது. தரை விரிப்பின் மீது காலடிகளின் ஒலியைக் கேட்க முடிந் தது. அறையின் நடுவில் ஒரு மனிதனின் தெளிவில் லாத உருவமைப்பின் விளிம்பு வடிவம் நின்றது. அவன் தணிந்த குரலில் ருஷ்யனில் பேசினான்:

''நீங்க தீர்மானிக்க வேண்டும். இன்னும் முப்பது அல்லது நாற்பது நிமிடங்களில் கார் வந்துவிடும். ஆம் அல்லது இல்லை, என்ன சொல்கிறீங்க?''

படுக்கையில் அசைவு இருந்தது, ஆனால் பதில் இல்லை. அவன் நெருங்கிச் சென்றான்.

''ஸோயா, அறிவுடன் நடந்துகொள்ளுங்க.''

களிப்பில்லாத சிரிப்பொன்றுதான் அதற்கு விடை.

ஸோயாவின் முகத்திற்கு நேராகக் குனிந்து காரின் அவளைத் துருவி நோக்கி, பிறகு அவள் காலருகே படுக்கை மீது அமர்ந்தான்.

''உங்களை அடைவதற்கு எனக்கு என்ன தேவை என்பதை இன்று நான் கண்டுபிடித்தேன்: பணம், அதிகாரம், புகழ். உங்களைப் பிரிவதற்கு நான் விரும்பவில்லை, அப்படி எண்ணவும் இல்லை.''

''ஓ!'' என்றாள் ஸோயா.

'' 'ஓ!' என்றால் அருத்தமில்லை. நீங்க புத்தி சாலித்தனமும் செருக்கும் உள்ள பெண் என்பது எனக்குப் புரியுது. யாராவது உங்க கையைப் பிடிக் கணும்னு கட்டாயப்படுத்தினா சீற்றமடையிறீங்க. என்னால் வேறு என்ன செய்ய முடியும்? நீங்க ரோல் லிங்கிடம் திரும்பிப் போனால் நான் சண்டை போடு வேன். எல்லாரையும் தலைவெட்டி எந்திரத்திற்கு அனுப்புவேன், ரோல்லிங்கை, உங்களை, என்னை.''

''ரோல்லிங்கை மாற்றிக்கொள்வதற்காக நீங்க என்ன தரப்போறீங்க? நான் விலையுயர்ந்த பெண்.''

''ஆலிவீன் பட்டை.''

''என்ன?''

''ஆலிவீன் பட்டை. உம்! அது என்ன என்பதை விளக்க நீண்ட நேரம் பிடிக்கும். ஓய்வுள்ள மாலை நேரமும் நூல்களும் நமக்குத் தேவைப்படும். இருபது நிமிடங்களில் நாம் இங்கிருந்து போய் ஆகணும். இந்த முழு உலகத்தையும் ஆளும் அதிகாரம்—ஆலி வீன் பட்டை. உங்களோட ரோல்லிங்கை என்னோட வாயிற்காப்போனாகக் கூலிக்கமர்த்துவேன்,—அது தான் ஆலிவீன் பட்டை என்பது. இன்னும் இரண்டு ஆண்டுகளில் அது என் கைகளில் இருக்கும். நீங்க வெறுமனே ஒரு பணக்காரியாகவோ அல்லது உல கிலேயே மிகப்பெரிய பணக்காரியாகவோ மட்டும் இருக்க மாட்டீங்க—அது ஆர்வமற்றது. ஆனா அதி காரம்! உலகில் இதற்கு முன் அறிந்திராத அதிகார வெறி. இதைப் பெறுவதற்கு செங்கிஸ்கானிடம் இருந்தவைகளைவிட அதிகப்பூரணமான வழிகள் நம்மிடம் இருக்கு. தேவியைப் போல நீங்க பூசிக் கப்பட விரும்புறீங்களா? ஐந்து கண்டங்களிலும்

உங்களுக்குக் கோயில்கள் கட்டுமாறும் அவற்றில் ஒவ்வொன்றிலும் உள்ள உங்களோட சிலை மீது திராட்சை மகுடம் புனையப்படுமாறும் ஆணையிடுவோம்.''

''எத்தகைய மூடக்கனவு!..''

''சரி. நான் இப்ப வேடிக்கை செய்து கொண்டிருக்கலே. நீங்க விரும்பினா கடவுளுக்கோ சாத்தானுக்கோ, இருவரில் உங்களுக்கு அதிகம் பிடித்தமான ஒருவருக்கு நீங்க பிரதிநிதி ஆகலாம். நீங்க கொல்லணும்னு விரும்பினா—சில நேரங்களில் அத்தகைய ஆசை ஒருத்தருக்கு ஏற்படுவதுண்டு—மனித இனம் முழுமைக்கும் மேலாக நீங்க அதிகாரம் பெறுவீங்க. ஸோயா, உங்களைப் போன்ற ஒரு பெண் ஆலிவீன் பட்டையிலிருந்து கிடைக்கும் செல்வத்திற்குப் பலவகையான பயன்களைக் காண்பாள். நான் உங்களுக்கு ஒரு நல்ல யோசனை சொல்லுறேன். இரண்டு ஆண்டு போராட்டத்திற்குப் பின்னர் ஆலிவீன் பட்டையை நான் அடைவேன். நீங்க என்னை நம்பலேயா?''

ஸோயா ஒரு குறுகிய பெருமூச்சுவிட்டாள். படுக்கையில் எழுந்தமர்ந்து தன் தலைமுடியைச் சரிசெய்வதற்காகக் கைகளை உயர்த்தினாள் (இது ஒரு நல்ல அடையாளம்).

''வருங்காலத்தில் நமக்கு ஆலிவீன் பட்டை இருக்கும். இப்ப உங்களிடம் என்ன இருக்கு?'' என்று வினவிய அவள், கொண்டை ஊசிகளைப் பற்களுக்கு இடையில் வைத்தாள்.

''இக்கணத்தில் என்னுடைய கருவியும் கரிக் கோபுரவத்திகளும் வைத்திருக்கிறேன். எழுந்திருங்க. என் அறைக்கு வாங்க, கருவியை உங்களுக்குக் காட்டுறேன்.''

''அது அதிகம் இல்லை. சரி, சரி, அதைப் பார்க்கிறேன். போவோம்.''

40

காரினுடைய அறையில் முன்மாட சன்னல் மூடித் திரையிடப் பட்டிருந்தது. சுவரையொட்டி இரண்டு


சூட்கேஸ்கள் இருந்தன. (ஒரு வாரத்திற்கும் மேலாக அவன் 'கரும்பறவை' விடுதியில் இருந்தான்.) காரின் கதவைப் பூட்டினான். ஸோயா அமர்ந்து மேசை மீது முழங்கைகளை ஊன்றிக்கொண்டு, முகட்டு விளக்கு வெளிச்சத்தினின்றும் தன் கண்களை மறைத்துக்கொண்டாள். அவள் அணிந்திருந்த புல்வண்ணப் பச்சை மேலங்கி கசங்கியிருந்தது. அவளது தலைமுடி அக்கறையின்றி விடப்பட்டிருந்தது, அவளது முகத்தில் சோர்வின் தோற்றம் இருந்தது—இவை எல்லாம் எப்போதையும் விட அவளை மிகக் கவர்ச்சியுடையவளாகச் செய்தன. சூட்கேசைத் திறக்கையில் நீல வளையங்கட்கு நடுவில் இருந்த எரியும் கண்களால் காரின் அவளைத் தொடர்ந்து பார்த்துக்கொண்டிருந்தான்.

''இதுதான் எனது கருவி,'' என்ற அவன் மேசை மீது இரண்டு உலோகப்பெட்டிகளை வைத்தான்: அவற்றில் ஒன்று· ஒரு குழாயிலிருந்து வெட்டியெடுக்கப்பெற்ற துண்டு போலக் குறுகலாயிருந்தது, மற்றொன்று தட்டையாயிருந்தது, பன்னிரண்டு பட்டைகள் உடைய பெட்டி, முதல் பெட்டியினது போல மும்மடங்கு விட்டம் கொண்டதாயிருந்தது.

இரண்டு பெட்டிகளையும் ஒன்றாகச் சேர்த்து வைத்துத் தாழ்ப்பாள்களால் இணைத்தான். குழாயைக் கணப்பின் பக்கம் திருப்பிவைத்து, பிறகு பன்னிரண்டு பட்டைகளுடைய புறமூடியின் உருண்டை மூடியை நீக்கினான். விளிம்பில் வெண்கல வளையம் ஒன்று பன்னிரண்டு பீங்கான் கிண்ணங்களுடன் இருந்தது. கிண்ணங்கள் வளையத்துடன் பொருத்தப்பட்டிருந்தன.

''இது மாதிரிக் கருவி,'' என்ற அவன், மற்றொரு சூட்கேசிலிருந்து கோபுரவத்திகள் அடங்கிய பெட்டியை எடுத்தான். ''ஒரு மணி நேர வேலைக்கு மேல் இது நிற்காது. அசாதாரணத் திண்மையுள்ள, இதைவிடப் பத்து மடங்கு வன்மையுள்ள பொருள்களால் கருவி கட்டப்படுதல் வேண்டும். ஆனா அது மிகவும் எடையுள்ளதாய் இருக்கும், நானோ அடிக்கடி பயணம் செய்து கொண்டிருக்


கிறேன். (அந்தப் பன்னிரண்டு கிண்ணங்களுள்ளும் பன்னிரண்டு கரிக்கோபுரவத்திகளை வைத்தான்.) வெளிப்புறத்திலிருந்து எதனையும் பார்க்கவோ, புரிந்துகொள்ளவோ முடியாது. இதுதான் அமைப்புப்படம், நெடுக்குவெட்டில்.'' ஸோயாவினுடைய நாற்காலிக்குமேல் குனிந்து அவளது தலைமுடியின் நறுமணத்தை நுகர்ந்தவாறு, பத்திரிகையின் பாதியளவுள்ள ஒரு வரைவை விரித்தான். ''ஸோயா, உங்களைப் போலவே நானும் இந்த ஆட்டத்தில் எல்லாவற்றையும் ஆபத்துக்குள்ளாக்க விரும்புறீங்களா. இங்கே பாருங்க... இதுதான் பொதுவான திட்டம்...



1—பன்னிரண்டு பட்டைகளுடைய புறமூடி
2—வெண்கல வளையம்
3—வெட்டுக்குழாய் வடிவான உள்மூடி
4—12 பீங்கான் கிண்ணங்களில் ஒன்று
5—ஹைபர்பாலிக் ஆடி (A), வானவியல் வெண்கலத்தாலானது
6—கதிர்கள் அல்லது 'கதிர் வடத்'தின் செல்வழி
7—ஷாமோனீட் ஹைபர்பாலாயிட் (B) (தூயகரி, வைரம் போன்ற உறுதி, கடின உருகுநிலை)
8—ஹைபர்பாலாயிட் நிலைப்படுத்தும் நுண்மையளவித் திருகாணி
9—12 பீங்கான் கிண்ணங்களில் ஒன்று
10—வெண்கல வளையம்

''இது மிக எளிது, இரண்டும் இரண்டும் நான்கு என்பது போல. எனக்குமுன்னே ஒருத்தரும் இதைக் கண்டுபிடிக்காதது தற்செயல்தான். இதன் இரகசி

யம் முழுதும் இந்த ஹைபர்பாலிக் ஆடியிலும் (A), சாதாரணத் துருவு விளக்கில் உள்ள பிரதிபலிப்பி யைப் போலவே அதன் வடிவம் அமைந்திருக்கு. ஹைபர்பாலிக் உருண்டை வடிவில் செய்யப்பெற்ற இந்த ஷாமோனீட் துண்டிலும் (B) இருக்கின்றது. ஹைபர்பாலிக் ஆடி இந்த முறையில் வேலை செய் கிறது:




1—கதிர்கள்
2—ஹைபர்பாலிக் ஆடி, நெடுக்கு வெட்டில்
3—ஹைபர்பாலா குவியம்

''ஹைபர்பாலிக் ஆடியின் உள் மேற்பரப்பில் விழும் ஒளிக்கதிர்கள் ஒரு புள்ளியில், ஹைபர்பாலாக் குவியத்தில் சேருகின்றன. இது எல்லாருக்கும் தெரிந்ததே. தெரியாதது இது தான்: ஹைபர்பாலிக் ஆடியின் குவியத்தில் இரண்டாவது ஹைபர்பாலாவை (B), ஒருவகையில் சொன்னால் உள்வெளியாக அமைந்த விதத்தில் வைக்கின்றேன்—இதுதான் சுழலும் ஹைபர்பாலாயிட். நன்றாகப் பளபளக்கச் செய்வதும், மிக உயர்ந்த உருகுநிலை உடையதும் ஷாமோனீட் என்ற தாதுப் பொருளின்றும் அது செய்யப்பட்டது. ருஷ்யாவின் வட பகுதியில் எடுக்க எடுக்கக் குறையாதபடி தரைக்கடியில் இது படிந்து கிடக்கிறது. கதிர்களுக்கு என்ன நேருகிறது?

''ஆடியின் (A) குவியத்தில் ஒன்று கூடும் கதிர்கள் ஹைபர்பாலாயிட்டின் (B) மேல்பரப்பின் மீது விழுந்து, அதிலிருந்து வடிவகணிதரீதியில் இணையாகப் பிரதிபலிக்கப்படுகின்றன. வேறு வார்த்தைகளில் சொன்னால், ஹைபர்பாலாயிட் (B) எல்லாக் கதிர்களையும் ஒரே கதிராக, அதாவது எந்தப்

பருமை உள்ள 'கதிர் வடம்' ஆக, ஒருமுகப்படுத்து கிறது. நுண்மையளவுத் திருகாணியைத் திருப்பு



1—கதிர்கள்
2—ஹைபர்பாலிக் ஆடி
3—ஒரு வடமாகச் சேர்ந்த கதிர்கள் அல்லது 'கதிர் வடம்'
4 —ஷாமோனீட் ஹை பர்பாலாயிட்

வதன் மூலம் ஹைபர்பாலாயிட்டை (B) சரிசெய்து, வேண்டியளவு பருமனுள்ள ஒரு கதிரை உண்டாக்க முடியும். காற்றுப் பரப்பினூடே செல்கையில் இழக் கப்பெறும் அதன் சக்தி மிக அற்பமானது. எதார்த் தத்தில் இதனைச் செயற்படுத்தும் போது, கதிரை ஊசியொன்றின் பருமைக்கு நுண்ணிதாக்க என்னால் குறைக்க முடியும்.''

இதைக் கேட்டதும் ஸோயா எழுந்து நின்று விரல்களை இழுத்துச் சொடக்கெடுத்து மீண்டும் அமர்ந்தாள், முழந்தாளைக் கட்டிக்கொண்டாள்.

''என்னுடைய முதலாவது சோதனைகளுக்காக, வெளிச்சம் உண்டாக்குவதற்காகச் சாதாரண கொ ழுப்பு மெழுகு வத்திகளைத் தான் பயன்படுத்தி னேன். ஹைபர்பாலாயிட்டை (B) வேண்டுமளவு இயக்கிச் சரிசெய்து ஒரு பின்னல் ஊசியளவுப் பரு மைக்குக் 'கதிர் வடத்தை'ச் சுருக்கி ஓர் அங்குலத் தடிப்புள்ள பலகையொன்றை எளிதிலே வெட்டி னேன். பிறகு கதிர் ஆற்றலின் செறிவுள்ள, விறல் மிக்க ஊற்றுக்கண்களைக் கண்டுபிடிப்பதில் தான் எனது நோக்கம் முழுதும் அடங்கி உள்ளது என்று உணர்ந்தேன். எனது உதவியாளர்கள் இருவரை இழக்கச் செய்த மூன்று ஆண்டுகால உழைப்பு இந்தக் கரிக்கோபுரவத்திகளை உருவாக்கியுள்ளது. இவற் றை அக்கருவிக்குள் செருகிப்பற்றவைத்தால் (அவை ஏறத்தாழ ஐந்து நிமிடங்கள் எரியும்) இந்தக் கோபுர

வத்திகளில் உள்ள அந்தளவு ஆற்றல், ஒரு ரயில் வேப் பாலத்தைச் சில கணங்களில் வெட்டப் போது மான வன்மையுடைய 'கதிர் வடத்தை' எனக்குத் தரும்... எத்தகைய வாய்ப்புக்களை இவை அளிக் கின்றன என்பதை உணர்கிறீர்களா? கதிரின் சக் திக்கு எதிராக நிற்க இவ்வுலகம் பூராவிலும் எதுவும் கிடையாது... கட்டடங்கள், கோட்டைகள், போர்க் கப்பல்கள், விமானங்கள், பாறைகள், மலைகள், புவிப்புறணி—என்னுடைய கதிர் எல்லாவற்றையும் வெட்டி ஊடுருவி அழித்துவிடும்.''

காரின் திடீரென்று பேச்சை நிறுத்தி, தலையை நிமிர்த்தி உற்றுக்கேட்டான். சன்னலுக்கு வெளியே சரளைக்கல் மிதிபடும் சப்தம் கேட்டது. மோட் டார் கார் என்ஜின்கள் நிறுத்தப்பட்டவுடன் மெது வாக அவியும் ஒலி அறையினுள் புகுந்து வந்தது. அவன் சன்னலுக்குத் தாவித் திரைக்குப் பின் நழுவி நுழைந்தான். தூசுபடிந்த சிவப்பு வெல்வெட்டிற்குப் பின்னே தெரிந்த அசையாது நின்ற காரினின் உரு வத்தை ஸோயா கவனித்தாள்; பிறகு அவ்வுருவம் தயங்குவது போலத் தெரிந்தது. திரைக்குப் பின்னி ருந்து காரின் வந்தான்.

''மூன்று கார்களும் எட்டு மனிதர்களும்,'' என்று அவன் கிசுகிசுத்தான். ''நம்மைத் தேடி வருகிறார் கள். கார்களில் ஒன்று ரோல்லிங்குடையது என்று நம்புறேன். நம்மையும் காவல்காரியையும் தவிர இந்த ஒட்டலில் யாரும் இல்லை. (படுக்கை அருகி லிருந்த மேசைக்குள்ளிருந்து கைத்துப்பாக்கியை விரைந்து எடுத்துச் சட்டைப் பைக்குள் திணித்துக் கொண்டான்.) என்னைப் பொருத்தமட்டும் உயி ரோடு இங்கிருந்து விடமாட்டாங்க.'' திடீரென்று களிப்புடன் தன் மூக்கின் பக்கத்தைத் தேய்த்தான். ''நல்லது, ஸோயா, முடிவுகட்டுங்க: ஆமாவா இல் லையா? இது போல மற்றொரு கணம் வராது.''

''உங்களுக்குப் பைத்தியம்,'' ஸோயாவின் முகம் குப்பென்று சிவந்து, இளமையுடன் காணப்பட்டாள். ''தப்பிப் பிழையுங்க!..''

காரினோ, தாடியைத் தடவிவிட்டான்.

''எட்டு ஆட்கள்... ஒன்றுமில்லை!'' தனது கருவியைத் தூக்கிக் கதவுப்பக்கம் அதன் வாய் அமையுமாறு திருப்பினான். பைகளைத் தட்டினான். திடீரென்று அவன் முகம் விழுந்து போயிற்று.

''தீப்பெட்டி,'' எனக் கிசுகிசுத்தான். ''என்னிடம் தீப்பெட்டி இல்லை...''

ஒருவேளை ஸோயாவைச் சோதிப்பதற்காக வேண்டுமென்றே அவன் இப்படிச் சொல்லியிருப்பான். ஒருவேளை உண்மையாகவே அவன் பையில் தீப்பெட்டி இல்லை போலும்—அவனுடைய வாழ்வு தீப்பெட்டியைப் பொருத்திருந்தது. சாவை எதிர்நோக்கி இருக்கும் ஒரு விலங்கைப் போல ஊமையாக ஸோயாவை உற்றுப்பார்த்தான். அவள் உறக்கத்தில் இயங்குபவள் போல ஒரு நாற்காலியிலிருந்து தனது கைப்பையை எடுத்துத் திறந்து மெழுகுதீப் பெட்டியொன்றை எடுத்து, மெதுவாக, கஷ்டத்துடன் அவனிடம் கொடுத்தாள். அதனை வாங்கும்போது பனிக்கட்டி போன்று குளிர்ந்த அவளது மெல்லிய கையை அவன் உணர்ந்தான்.

எச்சரிப்பான காலடியோசை வளைந்த மாடிப் படிகளிலிருந்து வந்தது.

41

கதவுக்கு வெளியே சிலர் நின்றனர். அவர்களது மூச்சின் ஓசையைக் கேட்க முடிந்தது.

''யார் அங்கே?'' என காரின் உரக்க வினவினான்.

''தந்தி,'' என்று கரகரத்த குரல் பதிலளித்தது. ''கதவைத் திறங்க!''

ஒன்றும் பேசாது ஸோயா காரினுடைய தோள்களைப் பற்றித் தன் தலையை ஆட்டினாள். அவன் அறையின் ஒரு மூலைக்கு அவளை இழுத்துச்சென்று தரைவிரிப்பின் மீது வலுவில் அமரச் செய்தான். பிறகு நேரே தன் கருவிக்குச் சென்று கத்தினான்:

''கதவுக்கடியில் தந்தியைத் தள்ளு.''

''கதவைத் திறக்கச் சொன்னால், திறங்க,'' என்று அதே குரல் உறுமியது.

இன்னொரு குரல் எச்சரிக்கையோடு வினவியது:

''உங்களோடு அப்பெண் இருக்கிறாளா?''

''ஆமா, இருக்கிறாள்.''

''அவளை எங்களிடம் கொடுங்க, உங்களை அமைதியா விட்டுட்டுப் போறோம்.''

''நான் உங்களை எச்சரிக்கிறேன்,'' என்று காரின் கடுப்போடு சொன்னான், ''நீங்க இந்த இடத்தை விட்டுத் தொலையாட்டா, இன்னும் ஒரு நிமிடத்தில் உங்களில் ஒருத்தன்கூட உயிரோடு இருக்க மாட்டான்.''

''ஆ-கா-கா! அடேயப்பா! அம்மாடியோவ்...'' இவ்வாறு குரல்கள் ஓலமிடுவது கேட்டது. கதவின் மீது பல உடல்கள் தாக்கி மோதின. பீங்கான் கதவுப்பிடி திரும்பியது. கதவு நிலையைச் சுற்றிலும் இருந்த காரைப் பூச்சு விழுந்தது. ஸோயா வைத்த கண் வாங்காது, காரினைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவன் முகம் வெளுத்திருந்தது. அவனது நடவடிக்கைகள் விரைவானதாகவும் நம்பிக்கை கொண்டதாகவும் இருந்தன. குதிகாலில் அமர்ந்து தனது கருவியிலுள்ள நுண்மையளவித் திருகாணியைத் திருப்பினான். சில தீக்குச்சிகளை வெளியில் எடுத்து மேசையின்மேல் பெட்டியின் பக்கத்தில் வைத்தான். பிறகு தனது கைத்துப்பாக்கியை வெளியே எடுத்து, நிமிர்ந்தவாறு, காத்து நின்றான். கதவு மெல்லப் பின்வாங்கிக் கொண்டிருந்தது. திடீரென்று சன்னலிலிருந்து கண்ணாடி விழுந்து நொறுங்கி, திரைகள் முன்தள்ளி வந்தன. உடனேயே சன்னலுக்குள் குறிபார்த்து காரின் சுட்டான். கீழே அமர்ந்து, ஒரு தீக்குச்சியைக் கொளுத்தி, கருவியினுள் அதனைத் தள்ளி, அதன் வட்ட மூடியை மூடினான்.

துப்பாக்கி வெடிக்குப் பின்னர் சில விநாடிகள் ஓசையின்றிக் கழிந்தன. பிறகு ஏக காலத்தில் கதவு, சன்னல் ஆகிய இரண்டும் தாக்கப்பட்டன. ஏதோ கனமான பொருளைக் கொண்டு கதவை இடித்தனர். கதவுப் பலகைகள் வெடித்துப் பிளந்தன. சன்னலை மூடியிருந்த திரை தரையில் விழுந்தது.

''கஸ்டோன்!'' என அலறினாள் ஸோயா.

வாத்து மூக்கன் சன்னலின் இரும்பு வலைத்தட்டியின் ஊடாக, குத்துக் கத்தியொன்றை வாயில் கௌவியபடி ஊர்ந்து வந்தான். கதவு இன்னும் தாங்கி நின்றது. காகிதம் போல வெளிறிப்போன காரின், நுண்மையளவித் திருகாணியைத் திருப்பினான். கைத்துப்பாக்கி இடது கையில் ஆடிக்கொண்டிருந்தது. கருவியின் உள்ளே எரிக்கொழுந்து குதித்து உருமிக்கொண்டிருந்தது. சுவரின் மீது (கருவியின் குழல்வாய்க்கு நேரே) விழுந்த ஒளி வட்டம் சிறுத்துக்கொண்டே வந்தது. சுவர்மீது ஒட்டியிருந்த தாள் புகையத் தொடங்கியது. கைத்துப்பாக்கியைப் பார்த்துக் கொண்டே சுவர்ப் பக்கமாக நகர்ந்து கொண்டிருந்த கஸ்டோன் பாய்வதற்காகக் குனிந்தான். இப்போது கத்தியை, ஸ்பானிய முறைப்படி, கூர்முனை தன் உடல் பக்கம் இருக்குமாறு பிடித்திருந்தான். ஒளி வட்டம் கண் கூசச்செய்யும் அனற்புள்ளியாக மாறிற்று. கதவின் உடைந்த பலகைகளின் ஊடே மீசையுடைய முகங்கள் எட்டிப்பார்த்தன... காரின் இரு கைகளாலும் கருவியைப் பிடித்து வாத்து மூக்கன் பக்கம் குழல்வாயைத் திருப்பினான்...

ஸோயா எல்லாவற்றையும் கண்டாள்: கஸ்டோன் வாய் பிளந்தான், கீச்சிடவோ, காற்றுக்காக மூச்சுவாங்கவோ... ஒரு புகைக் கீறு அவன் மார்பின் குறுக்கே சென்றது. அவன் உயர்த்த முயன்ற கைகள் விழுந்தன. தரை விரிப்பின்மேல் குப்புற விழுந்தான். முழு ரொட்டியினின்றும் வெட்டியெடுக்கப்பெற்ற ஒரு துண்டு ரொட்டி போன்று அவனது தலையும் தோள்களும் அவன் உடலின் அடிப்பகுதியினின்றும் விழுந்தன.

காரின் கருவியைக் கதவுப்பக்கம் திருப்பினான். கருவியினின்றும் தோன்றிய கதிர், வழியிலிருந்த மின்விளக்குக் கம்பியை ஊடறுத்து வெட்டியதால், உட்கூரையில் தொங்கிய விளக்கு அணைந்தது. ஊசி போன்று மெல்லியதாய் இருந்த கதிர் ஒளி கண்ணைப் பறித்தது, மிக நேரே பாய்ந்து கதவின் மீது விழ,—பலகைத் துண்டுகள் கீழே விழுந்தன. கீழே தாழ்ந்து கதிர் நகர்ந்தது. ஒரு பூனை மிதிபட்டது

போலக் குறுகிய ஊளையொலி கேட்டது. யாரோ இருட்டில் தடுமாறினான். ஓர் உடல் மெதுவாக விழுந்தது. தரைக்குமேல் இரண்டு அடி உயரத்தில் அக்கதிர் நடனமிட்டது. எரிபடும் சதையின் வீச்சம் வந்தது. திடீரென்று அமைதியுண்டாயிற்று. அதனைக் கருவியின் உள்ளே உருமிக் கொண்டிருந்த எரிக்கொழுந்துதான் கலைத்தது.

காரின் இருமினான். அவனுக்குக் கீழ்ப்படிய மறுக்கும் நிலையில் கிட்டத்தட்ட இருந்த கரகரத்த குரலில் சொன்னான்:

''அவர்கள் எல்லாரும் ஒழிந்தார்கள்.''

உடைபட்ட சன்னலுக்கு வெளியே கண்ணுக்குத் தெரியாத லிண்டன் மரங்களில் மென்காற்று விளையாடியது. தூக்கமயக்கத்தில் மரங்கள் சலசலத்தன. கீழே கார்கள் அசைவற்று நின்ற இடத்தின் இருட்டிலிருந்து ஒரு குரல் ருஷ்ய மொழியில் அழைத்தது:

''பியோத்தர் பெத்ரோவிச்! உயிரோடு இருக்கீங்களா?'' (காரின் சன்னலில் தோன்றினான்.) ''எச்சரிக்கை, நான்தான் ஷெல்கா. நமது ஒப்பந்தத்தை நினைவு கொள்ளுங்க? ரோல்லிங்கின் கார் என்னிடம் உள்ளது. நீங்க வெளியேறணும். கருவியைக் காப்பாற்றுங்க. நான் காத்துக் கொண்டிருக்கிறேன்.''

42

ஞாயிற்றுக்கிழமை மாலையில் பேராசிரியர் ரேய் ஹார் மூன்றாவது தளத்திலிருந்த தனது இருப்பிடத்தின் திறந்த சிறு முன்மாடத்தில் இயல்பான தன் பழக்கத்தையொட்டிச் சதுரங்கம் ஆடிக் கொண்டிருந்தார். அவருக்கு எதிராக அவரது விருப்பமான மாணவன் ஹென்ரிஹ் வோல்ஃப் ஆடினான். சதுரங்கப் பலகைமீது கண்களை ஊன்றிக்கொண்டே அவர்கள் பேசாது புகைபிடித்துக் கொண்டிருந்தனர். நீண்ட தெருக்கோடியில் மாலையின் இறுதி ஒளி மறைந்து நெடுநேரம் ஆகியிருந்தது. இரவுக்காற்று இறுக்கமாயிருந்தது. முன்மாடத்தின் சாரத்தின்

மேல் படர்ந்திருந்த பச்சைக் கொடியில் இலைகள் அசையவில்லை. கீழே, நட்சத்திர வானத்தின் கீழ், கருங்காரைச் சதுக்கம் வெறிச்சென்றிருந்தது.

முறுமுறுத்துக்கொண்டும் செருமிக்கொண்டும் நகர்த்த வேண்டிய காயைப் பற்றி பேராசிரியர் எண்ணிக்கொண்டிருந்தார். மஞ்சள் பாரித்த நகங்கள் கொண்ட அவரது கை சதுரங்கப் பலகைமீது வட்டமிட்டதே ஒழிய ஒரு காயையாவது தொடவேயில்லை. வாயின் ஓரத்திலிருந்து சுருட்டை அகற்றினார்.

''ஆம், இது பற்றி நான் சிந்தித்தாக வேண்டும்.''

''உங்கள் விருப்பம்,'' என விடையளித்தான் வோல்ஃப்.

அவனது அழகிய முகம், உயர்ந்த நெற்றி, செப்பமாயமைந்த மோவாய், குட்டையாய், நேராய் இருந்த மூக்கு ஆகியவையெல்லாம் ஏதோ பலம் பொருந்திய எந்திரம் ஒய்வு கொண்டிருப்பது போன்ற மனப்பதிவைத் தந்தன. பேராசிரியர் அதிக உள்ளக் கிளர்ச்சியுடன் இருந்தார் (அவர் முதிய தலைமுறையைச் சார்ந்தவர்),—அவரது எஃகு நிறத் தாடி கலைந்திருந்தது, சுருக்கம் நிறைந்த நெற்றியில் சிவப்பு மறுக்கள் தெரிந்தன.

அகன்ற, வண்ண மறைப்பின்கீழ் இருந்து உயரமான விளக்கு அவர்களது முகங்களில் ஒளியை வீசிற்று. விளக்கைச் சுற்றிப் பறந்த, அல்லது புதிதாகப் பெட்டிபோடப்பட்ட மேசை விரிப்பின்மீது அமர்ந்த மெலிந்த சில பச்சைப் பூச்சிகள் மீசைகளைச் சுளித்துக்கொண்டன, அவற்றினுடைய சிறு புள்ளி போன்ற கண்களால் உற்று நோக்கி, இரண்டு கடவுளர்கள் விண் வாழ்வோரின் ஆட்டத்தால் இன்பப் பொழுதுபோக்குவதைக் காணும் பேறு அவற்றிற்கு வாய்த்திருப்பதைப் புரிந்து கொள்ளவில்லை. அறைக்குள்ளாக ஒரு கடிகாரம் பத்து மணி அடித்தது.

தூய்மையாகக் காணப்பட்ட முதியவளாகிய பேராசிரியரின் தாய் திருமதி. ரேய்ஹர், அசையாமல்

உட்கார்ந்து கொண்டிருந்தாள்; செயற்கையொளியில் படிக்கவோ அன்றிப் பின்னவோ இப்போது அவளால் முடியாது. தொலைவில், ஓர் உயரமான இல்லத்தின் விளக்குகள் இரவின் இருட்டினூடே பளிச்சென்று தெரிந்த இடத்தில், கல்நகர் பெர்லினின் பெரும் பரப்பு மங்கலாகக் காணப்பட்டது.

திருமதி. ரேய்ஹர் பழைய இன்பமான நாள்களை எண்ணிப்பார்த்தாள். அந்நாள்களில் பிரெஞ்சுச் சக்கரவர்த்தியை வெற்றிபெற்ற பிறகு ஸெடான்* நகரிலிருந்து அவளது காதலன் ஒட்டோ ரேய்ஹர் திரும்பியிருந்தான். உண்மையான போர்வீரனைப் போல அவன் மீது தோல் வாடை அடித்தது, தாடி வைத்துக்கொண்டு கனத்த குரலில் பேசினான். பூக்களுடனும் நாடாக்களுடனும் நீல உடையணிந்த அவள் நகருக்கு வெளியே அவனைச் சந்திக்கச் சென்றாள். ஒட்டோவின் குதூகலம் நிறைந்த தாடியுடன், செருக்குடனும் நம்பிக்கையுடனும் ஜெர்மனி வெற்றியை நோக்கி, இன்பத்தை நோக்கிப் பறந்து சென்றது. விரைவில் உலகம் முழுதும் வெல்லப்படும்...

திருமதி. ரேய்ஹரின் வாழ்க்கை முடிந்தது. இரண்டாவது போர் ஒன்றும் வந்து போய்விட்டது. கோடிக் கணக்கான மக்களின் பிணங்கள் அழுகிக் கொண்டிருந்த புதைசேற்றிலிருந்து எப்படியோ ஒருவிதமாகத் தங்களது கால்களை வெளியே இழுக்க அவர்களால் இயன்றது. பிறகுதான் இந்த மக்கள் திரள்கள் வந்தன. அவர்களில் யாருடைய கண்ணுக்குள் வேண்டுமானாலும் உற்றுப்பார். அவை ஜெர்மானியக் கண்கள் அல்ல. அக்கண்களின் தோற்றம் பிடிவாதமும், துயரமும், விளங்காமையும் கலந்ததாயிருந்தது. அக்கண்களை நெருங்கி உணர எவ்வழியும் இல்லை. திருமதி. ரேய்ஹரின் உள்ளத்தைத் திகில் பற்றிக்கொண்டது...

அலெக்சேய் ஸெமியோனவிச் ஹ்றலீனோவ் முன்

---

* ஸெடான் என்பது பிரான்சின் வடகிழக்கிலுள்ள நகரம். 1870ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 1-2 தேதிகளில் பிரெஞ்சுப் படை ஜெர்மானியப் படைகளுக்குமுன் சரணாகதி அடைந்தது. (மொ-ர்.)

மாடத்துக்கு வந்தான். ஞாயிற்றுக்கிழமையில் அணியும் சாம்பல் வண்ண உடுப்பை அணிந்திருந்தான்.

திருமதி. ரேய்ஹர் பக்கம் ஹ்ஸீனோவ் குனிந்து மாலை வணக்கம் தெரிவித்து, இன்முகச் செவ்வியுடன் முகஞ்சுளித்து சதுரங்கப் பலகையைப் பார்த்துக் கண் சிமிட்டிய பேராசிரியர் அருகில் அமர்ந்தான். சஞ்சிகைகளும் வெளிநாட்டுப் பத்திரிகைகளும் மேசைமேல் கிடந்தன. ஜெர்மனியில் இருந்த மற்ற எல்லா அறிவுஜீவிகளையும் போலவே இப்பேராசிரியரும் வறியவராய் இருந்தார். இருபது காசு விலையுள்ள சுருட்டைத் தருதல், வருபவருடன் உரையாடுதல் ஆகிய எல்லைக்குள் அடங்கிற்று அவரது விருந்தோம்பல். ஷாம்பேயினுடனும் மற்ற ஆடம்பரப் பண்டங்களுடனும் அளிக்கப்படுகிற இரவு விருந்தைவிட் எவ்வளவோ பெருமதிப்புடையதாக அவரது உரையாடல் இருந்தது.

வேலை நாள்களில் காலை ஏழு மணியிலிருந்து இரவு ஏழு மணி வரை அப்பேராசிரியர் கண்டிப்பாகவும் பிறருடன் பேசாமலும் பணி நோக்குடனேயே இருப்பார். ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டுமே ''கற்பனை உலகில் உல்லாசப்பயணம் செய்யத் தம் நண்பர்களுடன் விருப்பத்துடன் செல்வார்''. ''சுருட்டின் நுனி முதல் அடிவரை'' புகைத்துத் தீரும்வரை பேசிக்கொண்டிருப்பதை விரும்பினார்.

''ஆம், இதுபற்றி நான் சிந்தித்தாக வேண்டும்,'' என்று மீண்டும் கூறினார் பேராசிரியர்.

''தங்கள் விருப்பம்,'' என்று பதற்றமின்றி மதிப்புடன் வோல்ஃப் மறுமொழி கூறினான்.

'லா இன்ட்ரான்ஸிஜான்' என்ற பாரிஸ் நகரப் பத்திரிகையை ஹ்ஸீனோவ் பிரித்தான். 'வில் தவ்ரேவில் மர்மக் கொலை' என்ற தலைப்பின்கீழ் ஏழு பேர் வெட்டித் துண்டாக்கப்பட்டிருந்த ஒரு படத்தைப் பார்த்தான். ''அப்படியா!'' என்று ஹ்ஸீனோவ் எண்ணினான். ஆனால் அவன் படித்தது அவனைச் சிந்திக்கவைத்தது.

''...இதுவரை யாரும் அறிந்திராத ஏதோ ஆயுதத்தால், பழுக்கக்காய்ச்சிய கம்பியாலோ அல்லது

மிகப் பெருத்த இறுக்கமுள்ள வெப்பக் கதிராலோ இக்குற்றம் செய்யப்பட்டிருக்க வேண்டும் எனக் கருதப்படுகிறது. குற்றவாளியின் தேசிய இனத்தையும் தோற்றத்தையும் நிறுவுவதில் வெற்றிபெற்றுவிட்டோம். எதிர்பார்க்க வேண்டியபடியே, அவன் ஒரு ருஷ்யன். (ஒட்டல் சொந்தக்காரி சொல்லிய விளக்கத்தின் விபரம் இங்கு தரப்பட்டிருந்தது.) குற்றம் நிகழ்ந்த இரவில் அவனுடன் ஒரு பெண்ணும் இருந்தாள். மற்றவையெல்லாம் மர்மத்தில் புதைந்துள்ளன. ஃபான்டென்ப்ளோ காட்டில் சாலையினின்றும் முப்பத்தைந்து கஜத் தொலைவில், இன்னார் என்று தெரியாத இரத்தம் தோய்ந்த ஒருவன் உணர்வற்ற நிலையில் கிடந்ததைக் கண்டுபிடித்துள்ளனர். குற்றத்தை விளக்குவதற்கு இச்சான்று பயன்படலாம். அந்த உடலில் நான்கு குண்டுக் காயங்கள் காணப்பட்டன. அவனை அடையாளம் கண்டுபிடிக்க உதவக்கூடிய அறிமுகச் சீட்டுகளும், பிற யாவும் திருடப்பட்டுவிட்டன. பலியாள் ஒரு காரிலிருந்து தள்ளப்பட்டிருக்கலாம் என்று தோன்றுகிறது. இச் செய்தி அச்சுக்குப் போகும் வரை அவன் இன்னும் உணர்வற்றே இருந்தான்...''

43

''தடை!'' என்று கூவினார் பேராசிரியர். ''தடையும் கட்டும். வோல்ஃப், நீங்க தோற்றுப் போயிட்டீங்க. உங்க பிராந்தியம் பிடிக்கப்பட்டுள்ளது. தோற்று மண்டியிட்டு இருக்கீங்க, அறுபத்தாறு ஆண்டுகளுக்கு நஷ்டஈடு கட்டணும். உயர்தர ஏகாதிபத்திய அரசியலின் சட்டம் அவ்வாறு இருக்கிறது.''

''பழிவாங்குதலா?'' என வினவினான் வோல்ஃப்.

''ஓ, இல்லை. வென்றவனுக்குச் சாதகமான அனைத்தையும் நாம் அநுபவிக்கப் போறோம்.''

பேராசிரியர் ஹ்லீனோவின் முழந்தாளில் தட்டினார்.

''எனது இளைய, விட்டுக்கொடுக்காத போல்ஷெவிக்கே, செய்தித் தாளில் என்ன படித்துக் கொண்டிருந்தீர்கள்? அறுக்கப்பெற்ற ஏழு பிரெஞ்சுக்காரர்களைப் பற்றித்தானே? வேறு என்ன நீங்க

எதிர்பார்க்க முடியும்? வெற்றிபெற்றவர்கள் எப்போதும் எல்லைமீறிப் போகவே விருப்பங்கொள்கின்றனர். ஒரு சமநிலையை நிறுவவே வரலாறு எப்போதும் முயல்கிறது. வென்றவர்கள் கொள்ளைப் பொருளுடன் சோர்வு மனப்பான்மையையும் தங்களுடைய வீட்டிற்குக் கொண்டுசெல்கின்றனர். அளவு கடந்த கொழுப்பு உணவைத் தின்னத் தொடங்குகின்றனர். அவர்களது வயிறுகள் கொழுப்பைச் சமாளிக்க முடியாமல், அவர்களுடைய ரத்தம் நஞ்சுடன் கெடுகிறது. அவர்கள் மக்களை வெட்டிக் கூறுபோடுகின்றனர், காற்சட்டை இறுக்குவார்களாலேயே தூக்கிட்டுக் கொள்கின்றனர், பாலங்களிலிருந்து குதித்துச் சாகின்றனர். தங்களுடைய வாழ்க்கையின் அன்பை இழக்கின்றனர். வெல்லப்பெற்றோர் எதனை இழந்தார்களோ அதற்கு ஈடாக எவற்றிலும் நன்மைகாணும் மனப்பான்மையைப் பெறுகின்றனர். எல்லா உலகங்களிலும் மிகச் சிறந்த இந்த உலகில் எல்லாம் மிகச் சிறந்த நன்மைக்கே என்று நம்புகின்ற பண்பு மனித சித்தத்தின் உன்னதமான பண்பு. சோர்வு மனப்பான்மை வேரறுக்கப்பட வேண்டும். என் நண்பரே, உங்கள் லெனினுடைய நூல்களைப் படித்திருக்கிறேன்.] அவர் பெரிய நன்னம்பிக்கைவாதி. நான் அவரை உயர்வாக மதிக்கிறேன்...''

''பேராசிரியரே, நீங்கள் மிகுந்த உற்சாக இருக்கிறீர்கள்,'' என்று வோல்ஃப் கூறினான்.

''ஏன் தெரியுமா?'' பேராசிரியர் தனது பிரம்பு நாற்காலியில் நன்கு சாய்ந்து கொண்டார்; அவரது மோவாய் சுருக்கங்களாக மடிந்தது, அவர் கண்கள் புருவங்கட்கு அடியில் களிப்புடன் இளமை காட்டின. ''நான் மிக விசித்திரமான ஒன்றைக் கண்டுபிடித்துள்ளேன்... ஒரு சில அறிக்கைகள் எனக்குக் கிடைத்தன. அநேகப் புள்ளிவிவரங்களை ஒன்றுடனொன்று ஒப்புநோக்கி, திடீரென்று ஒரு குறிப்பிடத்தக்க முடிவுக்கு வந்தேன். ஜெர்மானிய அரசு வெற்றிவேட்டையாளர் கூட்டமாக இல்லையாயின், எனது கண்டுபிடிப்பு வெற்றிவேட்டையாளர்கள் மற்றும் போக்கிரிகளின் கைகளில் சிக்காது என்ற உறுதி எனக்கு

இருக்குமாயின் அப்போது ஒருகால் அதனை வெளியிட்டிருப்பேன்... இப்போது இருப்பதை நோக்கின் பேசாமல் இருப்பதே மேல்...''

''ஆனா உங்களோட ரகசியத்தை எங்களிடம் பங்கிட்டுக் கொள்ளலாம், இல்லையா?'' என்றான் வோல்ஃப்.

பேராசிரியர் தந்திரமாகக் கண்சிமிட்டினார்:

''நேர்மையான ஜெர்மானிய அரசுக்கு—கேட்கிறீங்களா, 'நேர்மையான' என்ற சொல்லை அழுத்திச் சொல்றேன், அதற்குத் தனிப்பட்ட பொருள் கொள்றேன்—அவர்களுக்கு வேண்டிய அளவு தங்கச் சேமிப்புக்களைத் திரட்டுவதற்கு நான் வழி தெரிவித்தால், அப்போது நீங்க, உதாரணமாக, என்ன சொல்வீங்க, என் நண்பரே?''

''எங்கிருந்து?'' வினவினான் வோல்ஃப்.

''உண்மையில், பூமியிலிருந்துதான்.''

''அந்த பூமி எங்கிருக்கு?''

''எங்காவது. பூமியின் மேற்பரப்பில் எந்த இடத்திலும். நீங்க விரும்பினா, பெர்லின் நகரின் நடுவில். ஆனா அதை வழங்க முன்வர மாட்டேன். உங்களையும், என்னையும், எல்லா ப்ரிட்ஸ்களையும், மீஹேல்களையும் தங்கம் செல்வந்தராக்கும் என்று நான் நம்பலே... பெரும்பாலும் அதற்காக நாம் ஏழைகளானாலும் ஆகலாம்... ஒரே ஒருவர்,'' சிங்கத்தினுடைய பிடரி மயிருடன் இருந்த தமது நரைத்த தலையை ஹ்லினோவ் பக்கம் திருப்பி, ''உங்க நாட்டவர், தங்கத்தின் சரியான உபயோகம் பற்றி ஆலோசனை கூறினார்... உங்களுக்குப் புரிகிறதா?''

ஹ்லீனோவ் முறுவலித்துத் தலையசைத்தான்.

''பேராசிரியரே, நான் உங்களுடைய பேச்சை ஆழ்ந்த முறையில் கேட்கும் பழக்கமுடையவன்,'' என்றான் வோல்ஃப்.

''நான் ஆழ்ந்த முறையிலேயே பேச முயல்கிறேன். மாஸ்கோவில் குளிர்காலத்தில் குளிர் முப்பது டிகிரி சென்டிகிரேடுக்குக் கீழே போகிறது. மூன்றாவது தளத்து சன்னலை விட்டு நீங்கள் நீரை வெளியே கொட்டினால், அது தரையில் சிறுசிறு பனி உருண்டைகளாக விழுகிறது. நமது பூமி, கோள்

களுக்கு இடைப்பட்ட வெளியில் ஆயிரம், ஆயிரம் புள்ளி ஐந்து கோடி ஆண்டுகளாகச் சுழன்றுகொண்டு வந்திருக்கிறது. இந்தக் காலத்தில் அது குளிர்ந் திருக்க வேண்டும், இல்லையா? நெடுங்காலத்திற்கு முன்பே பூமி குளிர்ந்துவிட்டது, தன்னுடைய வெப் பம் முழுவதையும் கதிரியக்கத்தின் வாயிலாகக் கோள் களுக்கு இடைப்பட்ட வெளிக்குத் தந்துவிட்டது என்பது என்னுடைய வாதம். இயல்பாகவே நீங்க கேட்கலாம்: எரிமலைகள், உருகிய லாவா, வெப்ப நீர் ஊற்றுக்கள் ஆகியவற்றைப் பற்றி என்ன? சூரிய னால் சற்றே வெதுப்புப் பெறும் இறுகிய புவிப்புற ணிக்கும் பூமியின் உட்கோளம் முழுவதற்கும் இடை யில் உருகிய உலோகங்கள் சேர்ந்த பட்டை ஒன்றுள் ளது. இது ஆலிவீன் பட்டை எனப்படும். உட் கோளத்தின் இடைவிடாத அணுச்சிதைவினால் இந் தப் பட்டை தோன்றியுள்ளது. இந்த உட்கோளம் உருண்டை வடிவானது. கோள்களுக்கு இடைப்பட்ட வெளியின் தட்ப நிலையை உடையது, அதாவது பூஜ்யத்திற்கும் கீழே இருநூற்று எழுபத்து மூன்று டிகிரி சென்டிகிரேட் குளிர்ச்சியுடையது. அங்கு நடைபெறும் அணுச்சிதைவின் விளைவு ஆலிவீன் ட்டை—உருகிய நிலையிலிருக்கும் ஆலிவீன் கனி ங்கள்—பாதரசம், தங்கம் ஆகிய உலோகங்கள் விர வேறொன்றுமில்லை. எண்ணற்ற புள்ளி விபரங்களுக்கேற்ப அந்தப் பட்டை தரையில் மிக்க ஆழத்தில் இல்லை: பத்து முதல் ஐம்பதனாயிரம் அடி ஆழத்திற்குள்தான் இருக்கிறது. பெர்லின் நகரத்தின் நடுவில் ஒரு சுரங்கம் தோண்ட முடியும். அதனுள்ளிருந்து உருகிய தங்கம், எண்ணெய் போன்று, தானே ஆலிவீன் பட்டையின் ஆழ்த்தி லிருந்து வெளிக்கொட்டும்...''

''தர்க்கப்பொருத்தமானது, கவர்ச்சியூட்டுவது, ஆனால் செயல்படுத்த முடியாதது,'' எனச் சிறிது நேர அமைதிக்குப் பிறகு வோல்ஃப் சொன் னான். ''இப்போது நம்மிடமுள்ள கருவிகளைக் கொண்டு அத்துணை ஆழமுள்ள சுரங்கம் தோண்ட முடியாது.''

44

'லா இன்ட்ரான்ஸிஜானின்' விரித்திருந்த பக்கத்தில் ஹ்லீனோவ் தனது கையை வைத்தான்.

''பேராசிரியரே, நான் பெர்லினுக்கு வரும் வழியில் விமானத்தில் ஒருவருடன் பேசியதை இப் படம் நினைவுபடுத்துகிறது. புவியின் மையப்பகுதி யில் அணுச்சிதைவுறும் பொருள்கள் இருக்கும் இடம் வரை தரையைக் குடைந்துகொண்டு போதல் அப் படியொன்றும் இயலாததல்ல.''

''துண்டாக வெட்டப்பட்ட பிரெஞ்சுக்காரர் களுக்கும் அதற்கும் தொடர்பு என்ன?'' என வின விய பேராசிரியர், இன்னொரு சுருட்டைப் பற்ற வைத்தார்.

''வில் தவ்ரேவில் கொலைகள் வெப்பக்கதிரால் செய்யப்பட்டிருக்கின்றன.'';

இச்சொற்களைக் கேட்டவுடன் வோல்ஃப் மே சைக்கு அருகில் நகர்ந்தான், அவனது உணர்ச்சி யற்ற முகத்தில் எச்சரிக்கையின் வெளிப்பாடு இருந் தது.

''அட, மீண்டும் இந்தக் கதிர்களா?'' பேராசிரி யர் புளிப்பைச் சுவைத்தவர் போல முகத்தைச் சுளுக்கிக்கொண்டார். ''அறிவீனம், உளறல், பிரிட் டிஷ் பாதுகாப்புத்துறை அலுவலகத்தினால் பரப்பிய ஒரு புரளி.''

''அந்தக் கருவியை வடிவமைத்தவன் ஒரு ருஷ் யன், அவனை எனக்குத் தெரியும்,'' என்று பதிலளித் தான் ஹ்லீனோவ். ''திறமை வாய்ந்த கண்டுபிடிப் பாளனும் இரக்கமற்ற குற்றவாளியுமாவான்.''

என்ஜினியர் காரினைப் பற்றித் தான் அறிந்த வைகளை அவர்களுக்கு ஹ்லீனோவ் கூறினான்: பாலிடெக்னிக்கல் இன்ஸ்டிடியூட்டில் அவனது பணி, க்ரெஸ்தோவ்ஸ்கி தீவில் நடத்திய குற்றம், வேனில் வீட்டின் நிலவறையில் காணப்பட்ட வியப்புறுத்தும் பொருள்கள், ஷெல்காவைப் பாரிசுக்கு அழைத்தது ஆகியவற்றை விவரித்துவிட்டு, காரினின் கருவிக்காக இப்போது வெறிகொண்ட முறையில் வேட்டை

நடைபெற்றுக் கொண்டிருக்கலாம் எனவும் கூறினான்.

''இதோ சான்று,'' என்று பத்திரிகையிலிருந்த புகைப்படத்தை ஹ்லீனோவ் சுட்டிக்காட்டினான், ''இது காரினின் வேலைதான்.''

படத்தை ஆய்ந்துபார்த்துக் கொண்டே வோல்ஃப் முகத்தைச் சுளித்தான். நினைவில்லாதபடியே பேராசிரியர் தொடர்ந்தார்:

''பூமியைத் துளையிட வெப்பக்கதிர்களைப் பயன்படுத்த முடியும் என நினைக்கிறீர்களா? ஆயினும்... ஆமாம், மூவாயிரம் டிகிரி சென்டிகிரேட் வெப்பத்தில் களிமண்ணும் பாறையும் உருகுகின்றன. மிகமிக ஆர்வமூட்டக்கூடியது... தந்தி வாயிலாக அந்த காரினை நாம் அடைய முடியுமா? ஹூம்... செயற்கையாகக் குளிரவைக்கும் முறையுடன் துளையிடுவதையும் இணைத்து, தோண்டப்பட்டவுடனேயே பாறைகளை வெளியேற்றுவதற்கு மின்சார லிப்டுகளையும் பயன்படுத்துவோமானால், மிக ஆழமாக நம்மால் தோண்டக் கூடும்... நண்பரே, நீங்க சொல்லியதில் எனக்குப் பேய்த்தன்மையான அக்கறை ஏற்பட்டுவிட்டது...''

வழக்கத்திற்கு மாறாகக் காலை இரண்டு மணிரையிலும் முன்மாடத்தில் பேராசிரியர் இங்குமங்கும் உலவினார்; சுருட்டைப் புகைத்துக்கொண்டே, முன்னதைவிடப் பின்னது திகைப்பூட்டுவதாகப் பல திட்டங்களை உருவாக்கிக் கொண்டிருந்தார்.

45

அவர்கள் பேராசிரியருடைய வீட்டை விட்டு வந்தபோது சதுக்கத்தில் வோல்ஃபும் ஹ்லீனோவும் வழக்கம்போல விடைபெற்றுக் கொண்டனர். எனினும், இம்முறை வோல்ஃப் ஹ்லீனோவுக்கு அருகே நடந்தான்; அவனுடைய தலை கவிழ்ந்திருந்தது. போகும்போதே தனது கைத்தடியினால் ஏதோ நினைப்பில் தரையைத் தட்டினான்.

''வில் தவ்ரேவில் அந்த விவகாரத்தை முடித்த பிறகு காரின் தனது கருவியுடன் மறைந்துவிட்டான் என்று நினைக்கிறீங்களா?'' எனக் கேட்டான்.

''ஆம்.''

'' 'ஃபான்டென்ப்ளோ காட்டில் கிடந்த இரத்தம் தோய்ந்த ஒருவனைப்' பற்றி என்ன சொல்றீங்க? அது காரினாக இருக்க முடியாதா?''

''கருவியை ஷெல்கா கைப்பற்றியிருப்பான் எனக் கருதுறீங்களா?''

''நிச்சயமாக...''

''அது பற்றி நினைத்தேன்... ஆமாம், அது அவ்வளவு மோசமாக இராது.''

''நானும் அப்படித்தான் நினைக்கிறேன்,'' என்று தலை நிமிர்ந்து ஏளனத்துடன் கூறினான் வோல்ஃப்.

ஹ்லீனோவ் தனது கூட்டாளி மீது விரைவான பார்வையைச் செலுத்தினான். இருவரும் நின்றனர். தொலைவிலிருந்த தெருவிளக்கு ஒன்று வோல்ஃபின் முகத்தில் ஒளி விசிற்று. அவனது கோபச் சிரிப்பு, கடுத்த பார்வை, உறுதி காட்டும் மோவாய் ஆகியவை தெரிந்தன.

''எதுவாயினும், இது எல்லாம் அனுமானம் தான். இது வரை நாம் சச்சரவிட்டுக் கொள்வதற்கு எதுவுமில்லை,'' என்றான் ஹ்லீனோவ்.

''ஆமாம், எனக்குத் தெரியும்.''

''வோல்ஃப், உங்களுடன் தந்திரமாகப் பேச நான் முயலவில்லை. ஆனா உறுதியாக, ஆழ்ந்த முறையில் சொல்லுறேன்—காரினின் கருவி சோவியத் யூனியனில் இருப்பது அவசியம். என்னுடைய அந்த ஓர் அவாவே என்னை உங்கள் பகைவனாக்கப் பொதுமானது. அருமை வோல்ஃப், என் கண்ணியத்தின் மேல் ஆணையிட்டுச் சொல்றேன்: உங்க நாட்டிற்கு நல்லதையும் கெட்டதையும் பற்றி மிகவும் தெளிவில்லாத கருத்துக் கொண்டிருக்கீங்க.''

''என்னை அவமானப்படுத்த முயல்றீங்களா?''

''அட, சனியனே! இருந்தாலும்... உண்மை தான்.'' தூய ருஷ்யப் பாணியில் ஹ்லீனோவ் தொப்பியை ஒரு காதுக்கு மேல் நன்றாகத் தள்ளிவிட்டுக்

கொண்டு மற்றொன்றின் பின்பக்கம் சொறிந்ததை வோல்ஃப் உடனேயே கவனித்தான். ''நமக்கிடையே ஏழு மில்லியன் மக்களைக் கொன்று விட்ட பிறகு ஏதோ ஒரு சொல்லுக்காக அவமானப்படுவதில் அருத்தம் இருக்கிறதா?.. தலை முதல் கால் வரை நீங்க ஒரு ஜெர்மானியர், இரும்புச்சட்டை அணியும் காலாட்படையினர், எந்திரங்கள் செய்கிறவர். என்னுடையவை போல அல்லாது உங்களோட நரம்புகள் வேறுவகையான பொருளால் ஆக்கப்பட்டிருக்கு என்று கருதுறேன். கேளுங்க, வோல்ஃப், காரினுடைய கருவி உங்களைப் போன்ற எவன் கையிலாவது சேர்ந்தால், நீங்க அதனைக் கொண்டு என்ன செய்வீங்க என்பது சைத்தானுக்கே வெளிச்சம்...''

''இழிவுபடுத்தப்படுறதை ஜெர்மனி ஒருபோதும் ஒப்புக்கொள்ளாது.''

முதல் தளத்தில் ஓர் அறையை வாடகைக்கு ஹ்லீனோவ் எடுத்திருந்த வீட்டை அவர்கள் நெருங்கிய போது, ஒன்றும் பேசாது பிரிந்தனர். ஹ்லீனோவ் உள்ளே சென்றான். சிறுபொழுது வோல்ஃப் வெளியே நின்று, அவிந்துபோன சுருட்டை பற்களுக்கிடையே உருட்டிக் கொண்டிருந்தான். திடீரென்று தரைமட்ட சன்னல் ஒன்று அகலத் திறந்தது, பரபரப்புற்ற நிலையில் ஹ்லீனோவ் வெளியே பாய்ந்தான்.

''ஆ... இன்னும் இங்கேயா இருக்கீங்க?.. கடவுளுக்கு நன்றி. வோல்ஃப், பாரிசிலுள்ள ஷெல்காவிடமிருந்து ஒரு தந்தி வந்திருக்கு. கேளுங்க:'குற்றவாளி தப்பிவிட்டான். நான் காயம்பட்டேன், நெடுநாட்களுக்கு ஒன்றும் செய்ய முடியாது. உலக நாசம் ஏற்படும் அபாயம். உங்கள் முன்னிலை இன்றியமையாதது'.''

''நானும் உங்களுடன் வருகிறேன்,'' என்றான் வோல்ஃப்.

46

வெண்ணிற சன்னல் திரைகளின் குறுக்கே இலைகளின் நிழலுருவங்கள் இயங்கிக் கொண்டிருந்தன.

திரைகளுக்கு அப்பால் தண்ணீரின் இடைவிடாத சல சலப்பொலி கேட்டது. மருத்துவமனையின் தோட் டப் புல் தரையில் கித்தான் குழாய்களிலிருந்து நீர் விசிறியடித்துக் கொண்டிருந்தது. வெயிலில் தண் ணீர் வானவில்லாகக் காட்சியளித்தது. சன்னலுக்குக் கீழிருந்த ப்ளேன் மரத்தின் இலைகளிலிருந்து நீர் சொட்டிற்று.

உயரமான வெண்ணிற அறையொன்றில் திரை களின் ஊடே நுழைந்துவந்த மெல்லிய ஒளியில் ஷெல்கா உறங்கிக் கொண்டிருந்தான்.

தொலைவிலிருந்து பாரிஸ் நகரின் பலவகை இரைச்சல் மிதந்து வந்து கொண்டிருந்தது. மரங் களின் சரசரப்பு, பறவைகளின் குரல்கள், நீரின் சலிப்பூட்டும் சிதறல் ஒலி ஆகியன அருகில் கேட்டன.

அருகே ஒரு கார் ஒலியெழுப்பிய போதோ, தாழ் வாரத்தில் காலடிச் சத்தம் கேட்டபோதோ ஷெல் கா உடனே கண்விழித்துக் கதவுப்புறம் எச்சரிக் கையுடன் கூர்ந்து நோக்கினான். அவனால் அசைய முடியவில்லை. அவனது இரு கைகளும் பிளாஸ்டர் போட்டு இறுக்கப்பெற்றிருந்தன. மார்பிலும் தலை யிலும் கட்டுகள் போடப்பட்டிருந்தன. அவன் கண் கள்தாம் ஒரே தற்காப்பாக இருந்தன. தோட்டத் திலிருந்து வந்த இனிய ஒலிகள் மீண்டும் அவன் உறங் கும்படி தாலாட்டின.

தலைமுதல் அடிவரை வெள்ளை உடுத்திருந்த கார்மெலீட் துறவிப் பிரிவினைச் சார்ந்த கன்னி யொருத்தி ஷெல்காவை எழுப்பினாள்: தேநீர் நிரப் பிய ஒரு பீங்கான் கிண்ணத்தை கொழுத்த கை களால் அவனது உதடுகளுக்கு அருகில் கவனமாகத் தூக்கிப்பிடித்தாள். அவள் சென்ற பிறகும் லாவெண் டரின் மணம் அங்கே கமழ்ந்தது.

உறக்கமும் திடீரென்று விழிப்பும் ஆக மாறி மாறி அன்றையப் பொழுது கழிந்தது. ஃபான்டென்ப் ளோ காட்டிலிருந்து இரத்தப் பெருக்குடன் உணர் வின்றிக் கிடந்த நிலையில் ஷெல்கா எடுத்து வரப் பட்டதிலிருந்து ஏழாவது நாள் இது.

ஒரு புலனாய்வாளன் ஏற்கெனவே இரண்டு

முறை ஷெல்காவைப் பல கேள்விகள் கேட்டு விட்டான். ஷெல்காவின் வாக்கு மூலம் பின்வருமாறு இருந்தது:

''நள்ளிரவில் பன்னிரண்டு மணிக்கு நான் இரு ஆட்களால் தாக்கப்பட்டேன். எனது கைத்தடியாலும், கைமுட்டிகளாலும் என்னைத் தற்காத்துக் கொண்டேன். நான்கு முறை குண்டுக் காயம் பட்டேன். வேறொன்றும் நினைவில்லை.''

''உங்களைத் தாக்கியவர்களின் முகங்களைப் பார்த்தீர்களா?''

''அவர்கள் முகங்களின் அடிப்பகுதிகள் கைக்குட்டைகளால் மறைக்கப்பட்டிருந்தன.''

''ஒரு கைத்தடியினால் உங்களைத் தற்காத்துக் கொண்டீங்க, அப்படித் தானே?''

''உண்மையில் அது ஒரு மரக்கொம்பு. காட்டில் கிடந்ததை எடுத்திருந்தேன்.''

''ஃபான்டென்ப்ளோவிலுள்ள காட்டிற்கு இரவில் அந்நேரத்தில் நீங்க எப்படி வந்தீங்க?''

''உலாவச் சென்றிருந்தேன், மாளிகையைப் பார்த்து வந்தேன். காட்டின் வழியாகத் திரும்பிவர விரும்பினேன், வழியைத் தவறவிட்டுட்டேன்.''

''நீங்க தாக்கப்பட்ட இடத்திற்கு அருகில் ஒரு மோட்டார் புத்தம்புது தடங்கள் காணப்பட்டன என்று எப்படி நீங்க சொல்றீங்க?''

''குற்றவாளிகள் ஒரு காரைப் பயன்படுத்தியிருக்க வேண்டும்.''

''உங்களைக் கொல்லவா, கொள்ளையிடவா?''

''இதுவுமில்லை, அதுவுமில்லேன்னு நினைக்கிறேன். பாரிஸ் நகரில் யாருக்கும் என்னைத் தெரியாது. தூதுவராலயத்தில் நான் பணிபுரியவில்லை. நான் நிறைவேற்றுவதற்குரிய அரசியல் பணியொன்றும் இல்லை. என்னிடம் மிகக் குறைந்த அளவே பணம் இருந்தது.''

''காட்டுவெளியில் இரட்டை ஓக் மரத்தடியில் குற்றவாளிகள் எதிர்நோக்கியிருந்த அந்த ஆள் நீங்களாக இருக்க முடியாது. அவர்களுள் ஒருவன் புகைத்திருக்கிறான், மற்றவனோ விலைமிகுந்த முத்துப்

பதிக்கப்பெற்ற சட்டைக்கைப் பொத்தான் ஒன்றை இழந்திருக்கிறான்.''

''பெரும்பாலும் அவர்கள் குதிரைப் பந்தயத்திலாவது, காஸினோ சூதாட்டத்திலாவது பணத்தை இழந்துவிட்ட இளம் சமூகநுடுக்குத்தலமானவர்களாக இருக்கலாம், ஓர் அரிய வாய்ப்பை அவர்கள் எதிர் பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஃபான்டென்ப்ளோ காட்டின் வழியே தன்னுடைய சட்டைப்பையில் ஆயிரம் ப்ராங்க் நோட்டுக்களைப் பிதுங்கத் திணித்தவாறு ஒருவன் வருவானா?''

இரண்டாவது விசாரணையின் போது ஷெல்கா பெர்லினிலிருந்த ஹ்லினோவுக்கு அனுப்பிய தந்தியைக் குறித்து புலனாய்வாளன் வினவினான். கார்மெலீட் கன்னி அவனுக்கு அதைக் கொடுத்திருந்தாள்.

''அது குழூஉக்குறியில் இருக்கிறது. ருஷ்யாவிலிருந்து தப்பியோடிய ஓர் அபாயகரமான குற்றவாளியைக் கைதுசெய்வது பற்றியது.''

''நீங்கள் என்னிடம் இன்னும் சற்று வெளிப்படையாக இருக்க முடியுமா?''

''முடியாது, அது என்னுடைய ரகசியமல்ல.''

எல்லா வினாக்களுக்கும் துல்லியமாகவும் தெளிவாகவும், புலனாய்வாளனுடைய கண்களை நேரே பார்த்துக்கொண்டு நேர்மையாகவும் சற்று முட்டாள்தனமாகவும் ஷெல்கா பதிலளித்தான். அவனது நேர்மையை நம்புவதன்றி புலனாய்வாளன் வேறு ஒன்றும் செய்வதற்கில்லை.

இருந்தபோதிலும் அபாயம் நீங்கவில்லை. 'வில் தவ்ரேவில் இரவில் நடந்த பயங்கரக் கொலைக் குற்றத்தைப்' பற்றி விவரம் நிறைந்திருந்த பத்திரிகைப் பத்திகளில் அபாயம் இருந்தது. கதவுக்குப் பின்னும் அபாயம் இருந்தது. மென்காற்றில் அசைந்தாடிய வெள்ளைத் திரைகளுக்குப் பின்புறத்திலும் அபாயம் இருந்தது. கார்மெலீட் கன்னியின் கொழுத்த கையினால் அவன் உதட்டருகில் கொணரப்படும் கிண்ணத்திலும் அபாயம் இருந்தது.

தப்ப ஓரே வழிதான் இருந்தது: பிளாஸ்டரை

யும் கட்டுக்களையும் கூடிய விரைவில் அகற்றி எறிய வேண்டும். அரைத் தூக்கத்தில் அசையாது கிடந்தான் ஷெல்கா.

47

...அரைத் தூக்க நிலையில், அவன் நினைவு கூர்ந்தான்.

முன்விளக்குகள் அணைக்கப்பட்டன. கார் வேகம் குறைந்தது... காரின் முன்னே குனிந்து கார் சன்னல் வழியாக உரக்கக் கிசுகிசுத்தான்:

''ஷெல்கா, இங்கே திரும்புங்க. ஒரு காட்டு வெளி உள்ளது. அதோ அதுதான்...''

சாலையோரப் பள்ளத்தின் குறுக்கே மிகவும் அழுத்தமாக கார் தொல்லைப்பட்டுச் சென்று மரங்களுக்கிடையே போய்த்திரும்பி நின்றுவிட்டது.

விண்மீன் ஒளியில் வளைந்த காட்டுவெளி கிடந்தது. மரங்களின் நிழலில் பாறைகள் மங்கலாகக் காணப்பட்டன.

என்ஜின் நிறுத்தப்பட்டது. புல்லின் சுள்ளென்ற நெடி அடித்தது. தூக்கமயக்கத்துடன் ஓடை சலசலத்து. அதன் மீது பரவியிருந்த மூடுபனி தெளிவில்ாத துணி போன்று வெளியின் தொலைவில் சென்று ›றைந்திருந்தது.

வண்டியினின்றும் வெளியே குதித்து ஈரப் புல்லின்மேல் நின்றுகொண்டு காரின் ஸோயாவுக்குக் கை கொடுத்தான். தொப்பியைக் கண்களுக்குமேல் நன்றாக இழுத்துவிட்டுக் கொண்டு அவள் காரினின்றும் வெளிப்பட்டாள். மேலே விண்மீன்களைத் தலை நிமிர்ந்து பார்த்தாள். தோள்களைக் குலுக்கிக் கொண்டாள்.

''வெளியே வருகிறீர்களா?'' என்று கடுமையாகச் சொன்னான் காரின்.

அப்போது ரோல்லிங் காரினின்றும் தலையை முதலில் நீட்டி நகர்ந்து வெளியே வந்தான். அவனது பௌலர்த் தொப்பியின் நிழலடியில் அவனது தங்கப் பற்கள் தெளிவாக மிளிர்ந்தன.

ஓடை நீர் சிதறியடிக்கவும் சலசலக்கவும் செய்தது. நெடுநேரமாக இறுக்கிப்பிடிக்கப்பட்டது போலத் தோன்றிய கையை ரோல்லிங் பையினின்றும் வெளியே எடுத்தான்.

''நீங்க இங்கே என்னோட கொலைக்கு ஏற்பாடு செய்து கொண்டிருந்தால்,'' கம்மிய குரலில் தொடங்கினான், ''நான் ஆட்சேபிக்கிறேன். நீதியின் பேரால். மனிதாபிமானத்தின் பேரால். அமெரிக்கன் என்ற முறையில்... கிறிஸ்துவன் என்ற முறையில்... என்னோட உயிருக்கு விலையாக நீங்க விரும்புகிற எந்த மீட்புத்தொகையையும் நான் தருவேன்.''

ஸோயா அவன்புறம் முதுகைத் திருப்பிக்கொண்டு நின்றாள். காரின் அருவருப்புடன் பேசினான்:

''நான் விரும்பியிருந்தால், உங்களை அங்கேயே கொன்றிருக்க முடியும்.''

''மீட்புத்தொகையா?'' என்று சட்டென வினவினான் ரோல்லிங்.

''இல்லை.''

''உங்களுடைய...'' ரோல்லிங் கன்னங்கள் நடுங்கத் தலையசைத்தான், ''உங்களுடைய விசித்திரமான முயற்சிகளில் பங்குகொள்ளுதலா?'' என்றான்.

''ஆம். நீங்க நினைவில் வைத்திருக்க வேண்டும்... மால்ஸேர்ப் சாலையில் நான் உங்களிடம் சொன்னேனல்லவா?''

''ஓ.கே.'' என்று ரோல்லிங் பதிலளித்தான்,''நாளை உங்களைக் கண்டு பேசுவேன்... நீங்க சொல்ற ஏற்பாடு பற்றி மீண்டும் சிந்திக்க வேண்டும்.''

ஸோயா தாழ்ந்த குரலில் சொன்னாள்:

''ரோல்லிங், முட்டாள்தனமாகப் பேசாதீங்க.''

''சீமாட்டி!'' எனக் கூறி ரோல்லிங் குதித்தான். அவனது பௌலர்த் தொப்பி முன்புறம் சரிந்து அவன் மூக்கின்மேல் விழுந்தது. ''சீமாட்டி... உங்க நடத்தை இதற்கு முன் கேள்விப்படாதது... நீங்க என்னை ஏமாத்திட்டீங்க... கொலைக்கு நீங்க உடந்தையா...''

அதே தாழ்ந்த குரலில் ஸோயா அவனுக்கு விடையளித்தாள்:

''நீங்க நாசமாப் போக! காரினிடமே பேசிக் கொள்ளுங்க.''

ரோல்லிங்கும் காரினும் இரட்டை ஓக்கின் புற மாக நகர்ந்து ஒதுங்கிச்சென்றனர். அங்கே ஒரு மின் சாரக் கைவிளக்கு பொருத்தப்பட்டது. இருவரது தலைகளும் மிக நெருக்கமாக இணைந்து கவிழ்ந் திருந்தன. சில கணங்கள் வரை கற்களினிடையே நீர் சிதறியடிப்பது தவிர வேறொன்றையும் கேட்க முடியவில்லை.

''...ஆனால் நாம் மூவர் மட்டும் இல்லையே... இங்கே நான்காவது ஆளும் இருக்கிறானே... ஒரு சாட்சி இருக்கிறானே.'' இவ்வாறு கூறிய ரோல்லிங் கின் கூர்மையான குரல் ஷெல்காவின் காதுக்கு எட் டியது.

''...யார் அங்கே? யார் அங்கே?'' என்று நடுங்கிக் கொண்டே முணுமுணுத்த ஷெல்கா, இன்னும் அரைத் தூக்கத்திலேயே இருந்தான். திடுக்கிட்டு அவன் விழிமணிகள் விலகின.

அவனுக்கு முன்னிலையில் வெண்ணிற நாற்காலி யில் தனது தொப்பியை முழந்தாளின்மேல் வைத்துக் கொண்டு ஹ்லினோவ் அமர்ந்திருந்தான்.

48

''அவர்களுடைய அடுத்த நடவடிக்கையைப் பற்றி எண்ணிப்பார்க்க எனக்கு நேரமில்லை,'' என்று ஷெல்கா அவனிடம் கூறினான். ''நான் ஒரு முட்டா ளைப் போல நடந்துக்கிட்டேன், அவ்வளவுதான்.''

''காரில் ரோல்லிங்கைக் கூட்டிச்சென்றது தவறு,'' என விடையளித்தான் ஹ்லினோவ்.

''பாழாய்ப்போக, நானா அவனைக் கூட்டி வந் தேன்! சுடுதலும் கொல்லுதலும் ஓட்டலில் தொடங் கியபோது வளையில் உள்ள எலியைப் போன்று ரோல்லிங் தன் காருக்குள் சுருண்டுகிடந்தான். சுடு வதற்குத் தயாராக இரண்டு 'கோல்ட்' கைத்துப்

பாக்கிகள் வைத்திருந்தான்... என்னிடத்தில் ஆயுதம் ஒன்னும் இல்லை. நான் மேலே ஏறி வெளிமாடத்தை அடைந்து காரின் எவ்வாறு குண்டர்களைத் தொலைத்தான் என்று பார்த்தேன். ரோல்லிங்கிற்கு அதைப் பற்றிச் சொன்னேன்... அவன் வெருண்டு போய் என்னிடம் முணுமுணுத்து ஏதோ கூறினானே ஒழிய, காரை விட்டு வெளியே வர மறுத்துட்டான்... பிறகு ஸோயா மான்ரோஸைச் சுட முயன்றான். காரினும் நானும் அவனது கைகளை முதுகுப்புறமாகத் திருகிவிட்டோம்... தாமதிக்க நேரமில்லை. எனவே ஓட்டுநர் இருக்கையில் குதித்து அமர்ந்து காரை விரைவாகச் செலுத்தினேன்...''

''ஓக் மரத்தினருகே அவர்கள் கூடிச்சென்ற போதே என்ன நடந்துகொண்டிருந்தது என்பதை நீங்க கட்டாயம் உணர்ந்திருக்க வேண்டுமே?''

''என்னை முடித்துவிட எண்ணினார்கள் என்றறிந்தேன். ஆனால் நான் என்ன செய்யக் கூடும்? ஓடிவிடுவதா? பாருங்க, நான் ஓர் ஆட்டக்காரன்... இது த்விர நான் ஒரு திட்டம் உருவாக்கி வச்சிருந்தேன்... போலி பாஸ்போர்ட் ஒன்றை காரினுக்காக வச்சிருந்தேன், அதோட பத்து நாட்டு விசாவும் இருந்துச்சு. அவனது கருவி கைக்கு எட்டும் தொலைவில்—காரில்... இத்தகைய சூழ்நிலைகளில் என்னுடைய உயிரைப் பற்றி நான் எப்படி நினைக்க முடியும்?''

''உங்களால் முடியாதென்றே நினைக்கிறேன்... ஆக, அவர்கள் ஓர் உடன்பாட்டுக்கு வந்துட்டாங்க...''

''அங்கே மரத்தடியில், ரோல்லிங் ஏதோ தாளில் கையெழுத்திட்டான். நான் அதை மிகத் தெளிவாகப் பார்த்தேன். அதன் பிறகு நாலாவது சாட்சியை, அதாவது என்னைப் பற்றி என்ன சொன்னான் என்பது எனக்குக் கேட்டது. நான் கிசுகிசுத்தவாறு ஸோயாவிடம் சொன்னேன்: 'கேளுங்க, கொஞ்சம் முன்னே ஒரு போலீஸ்காரனைக் கடந்து வந்தோம். அவன் காரின் எண்ணைக் குறித்துக் கொண்டான். நான் இறந்து காணப்பட்டா நாளைக்கு

நீங்க மூனு பேரும் கைவிலங்கோட இருப்பீங்க.' எனக்கு என்ன பதில் சொன்னாள் என்பது தெரியுமா? என்ன பெண்ணப்பா!.. அவள் திரும்பிக்கூடப் பார்க்கலே, ஆனா தோளுக்கு மேலாகச் சொன்னாள்: 'சரி, நான் அதை மனத்தில் வைத்துக்கொள்வேன்'. ஆனால் அதைப் பற்றித் தேவையில்லை. காரினும் ரோல்லிங்கும் காருக்குத் திரும்பினாங்க. எதுவுமே நடக்காதது போல நான் நடந்துகொண்டேன்... ஸோயா முதலில் உள்ளே போனாள், பிறகு வெளியே குனிந்து ஏதோ ஆங்கிலத்தில் சொன்னாள். 'தோழர் ஷெல்கா, இப்பப் புறப்படுங்க. மேற்கு நோக்கி முழு வேகத்தில்,' என்று காரின் என்னிடம் சொன்னான். கார் முன்பக்கம் நான் குனிந்தேன்... அங்குதான் நான் தவறு செய்திட்டேன்... அவர்கள் பெற்றிருந்த ஒரே வாய்ப்பு அதுதான். கார் நல்ல வேகத்தில் ஓடிக்கொண்டிருந்தால் அவர்கள் ஏதேனும் செய்ய அஞ்சியிருப்பாங்க... ஆகவே நான் கார் என்ஜினைக் கிளப்பினேன்... திடீரென்று என் தலையின் மீது, என்னுடைய மூளையில்... ஒரு வீடு என்மீது விழுவது போன்றிருந்தது, எலும்புகள் முறிந்தன, ஏதோ ஒன்னு என்னைத் தாக்கியது, வெளிச்சம் என் கண்ணை உறுத்தியது, நான் உணர்ச்சியிழந்தேன்... ரோல்லிங்கினுடைய விகாரமாகக் கோணிய முகத்தை மட்டும்தான் நான் பார்க்க முடிந்தது. அந்த வேசி மகன்! அவன் என்னுள் நான்கு குண்டுகளைச் செலுத்தினான்... நான் கண்ணைத்திறந்தப்ப இந்த அறையில் இருந்தேன்.''

பேசியதனால் ஷெல்கா சோர்வடைந்தான். நெடுநேரம் வாய்பேசாது கிடந்தான்.

''இப்ப ரோல்லிங் எங்கிருக்கக் கூடும்?'' என வினவினான் ஹ்லீனோவ்.

''எங்கே? ஏன், பாரிசில்தான் இருக்க வேண்டும். பத்திரிகைகளைச் சாதகமாகக் கையாள்கிறான். வேதியல் தொழில் முனையில் அவன் பெரும் தாக்குதல் நடத்துகிறான். பணத்தை வாரிக் குவிக்கிறான். குறிப்பாக நோக்க வேண்டியது என்னவெனில்; எக்கணத்திலும் சன்னல்வழியாக ஒரு குண்டையாவது,

எனக்கு உணவூட்டுகிறார்களே அந்தக் கிண்ணம், அதில் நஞ்சினையாவது நான் எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறேன். ஆமாம்... நிச்சயமாக, அவன் என்னை முடித்துவிடுவான்...''

''பிறகு ஏன் பேசாது அமைதியாய் இருக்கீங்க?.. உடனே போலீஸ் தலைவருக்கு அறிவிக்க வேண்டும்.''

''என் அருமைத் தோழரே, மூளை கெட்டுப் பேசுறீங்க! நான் மௌனமாயிருப்பதால்தான் உயிரோடு இருக்கிறேன்.''

49

''ஆகவே, ஷெல்கா, நீங்க உண்மையில் அந்தக் கருவி வேலை செய்ததைக் கண்டீங்களா?''

''பார்த்தேன். இப்ப எனக்குத் தெரியும்: பீரங்கிகள், புகையாவி, விமானங்கள் முதலிய அவையெல்லாம் சிறு குழந்தைகளின் விளையாட்டுப் பொருள்கள். காரின் மட்டும் தனித்து இல்லை என்பதை மறந்துறாதீங்க... காரினும் ரோல்லிங்கும் கூட்டு. சாவை விளைக்கும் எந்திரம், அதனுடன் ரோல்லிங்கினது கோடிக் கணக்கான பணம். இந்தச் சேர்க்கையிலிருந்து நாம் எதனையும் எதிர்பார்க்கலாம்.''

சன்னலின் மறைப்பைத் தூக்கிவிட்டு அதனருகில் நெடுநேரம் ஹ்லீனோவ் நின்றான். பச்சைக்கல் போன்ற பசும் புல்வெளியையும், தோட்டத்தின் நிழற்பகுதிக்கு நீர்பாய்ச்சும் குழாய்களை இழுத்துக் கொணரக் கஷ்டப்படும் முதிய தோட்டக்காரனையும், வெர்பினா புதருக்கடியில் மண்புழுக்களை வேட்டையாடுவதில் சுறுசுறுப்புடன் இருந்த கரும் பறவைகளையும் நோக்கிக் கொண்டிருந்தான். வசீகரமான நீலவண்ண வானம் தோட்டத்திற்கு நிலைபேருடைய அமைதியின் சாயலைத் தந்தது.

''அவர்கள் போக்கிலேயே அவர்களை விட்டோமானால், ரோல்லிங்கும் காரினும் தங்களது திட்டத்தைப் பிரம்மாண்டமாக விரித்துச் செய்யட்டுமே,'' எனத் தொடங்கினான் ஹ்லீனோவ், ''விரைவில்

அது முடிந்து விடும். இவ்வுலகம் தவிர்க்க முடியாத வாறு அழிய வேண்டும்... இங்கு கரும்பறவைகள் மட்டுமே அறிவோட வாழ்கின்றன.'' சன்னலினின் றும் ஹ்ஸீனோவ் திரும்பிப் பார்த்தான். ''ஐயமின் றிக் கற்கால மனிதன் பெரியவன். அவன் தனது குகைகளின் உட்புறங்களில் ஓவியங்கள் தீட்டினான், ஏனெனில் கலையுணர்வின் உந்துதலை உணர்ந் தான், கூலிக்கு அன்று; நெருப்புக்கருகில் அமர்ந்து கொண்டு கம்பளியானைகளைப் பற்றியும், இடிப் புயல்களைப் பற்றியும், விந்தையான பிறப்பு இறப்பு சுழலைப் பற்றியும், தன்னைப் பற்றியும் எண்ணி னான். அது உண்மையிலேயே பெருமைக்குரியதாக இருந்தது! அவனுடைய மூளை இன்னும் சிறிதாயி ருந்தது, மண்டையோடு தடித்திருந்தது. ஆனால் ஆன்மீக ஆற்றல் அவன் தலையிலிருந்து மின்களைப் பரப்பியது... ஆனால் இன்றைய மக்களுக்குப் பறக் கும் எந்திரங்கள் என்ன இழவுக்காக வேண்டும்? நகர வீதிகளில் செல்லுகின்ற பிலுக்கன் ஒருத்த னைக் கொண்டுபோய் குகையில் இருக்கும் பழங்கற் கால மனிதன் ஒருவன் முன் நிறுத்த விரும்புறேன். மயிர் அடர்ந்த அந்த நன்மகன் பிலுக்கனைப் பின் வருமாறு வினவுவான்: 'சொல்லு, இந்த நூறாயிரம் ஆண்டுகளாக உன்னுடைய மூளை என்ன செய்து கொண்டிருந்தது?' அந்தப் பிலுக்கன் திருகித் திரும்பு வான்: 'அப்படியா நான் அவ்வளவாகச் சிந்திப்ப தில்லை, முன்னோராகிய பெரியவரே, நாகரிகத்தின் பயன்களை துய்க்கவே விரும்புகின்றேன்... பொது மக்கள் புரட்சி செய்யும் அபாயம் மட்டும் இல்லை யாயின், எங்கள் உலகம் உண்மையிலேயே அழகு டையதாக இருக்கும். ஆனால் உண்மையான தொல் லை என்னவெனில், நிரந்தரமான இந்த நெருக்கடி களும் புரட்சிகளும் தாம்—அது அவ்வளவு களைப் பாக இருக்கிறது...' அந்த மூதாதைத் தனது கனல் விழிகளால் பிலுக்கனை எரித்துநோக்கிச் சொல்லு வான்: 'என்னைப் பொருத்தவரை, சிந்திக்கவே விரும்புகிறேன், நான் இங்கமர்ந்து எனது சாதுர்யம் வாய்ந்த மூளையைப் போற்றுகிறேன்... அதைக்

கொண்டு பேரண்டத்திற்குள்ளாக புகுந்துநோக்க நான் விழைகின்றேன்...'''

ஹ்ரலினோர் பேசுவதை நிறுத்தினான். மாலைக் கருக்கலில் பழங்கற்கால குகையொன்றின் தோற்றம் அவன் மனத்தின் முன்பு நின்றது. அதை விழித்து நோக்கி முறுவலித்தான். அவன் தலையசைத்தான்:

''காரினும் ரோல்லிங்கும் என்ன விரும்புறாங்க? பொழுதுபோக்காக மகிழ விரும்புறாங்க. இவ்வுலகம் முழுதும் ஆட்சி செய்யும் அதிகாரம் என்று அதைக் கூறிக்கொள்ளட்டும். இது வெறும் பொழுது போக்கு மகிழ்ச்சியைத் தவிர வேறொன்றும் இல்லை. கடந்த போரில் மூன்று கோடி மக்கள் அழிந்தனர். இம்முறை அவர்கள் முப்பது கோடி மக்களைக் கொல்ல விரும்புறாங்க. ஆன்மீக சக்தி ஆழ்ந்த மயக்க நிலையில் இருக்கு. பேராசிரியர் ரேய்ஹர் ஞாயிற்றுக்கிழமைகளில் தான் நல்லுணவு கொள்கின்றார். செயற்கை வெண்ணெயும் ஜாமும் தடவப்பெற்ற இரண்டு துண்டு ரொட்டி காலை உணவாகவும், உப்புப்போட்ட வெந்த உருளைக்கிழங்கைப் பகலுணவாகவும் வாரமுழுதும் சாப்பிடுகிறார். மூளைப் பணிக்குக் கிடைக்கும் பரிசு அத்தகையது... நீங்க சொல்றது சரி. நாம் சண்டை செய்ய வேண்டும். நான் தயார்...''

கண்களை மூடிக்கொண்டே, ''அந்தக் கருவியை நாம் கட்டாயம் அடைவோம்,'' என்றான் ஷெல்கா.

''எங்கிருந்து நாம் தொடங்குவது?''

''புலனாய்வு வேலை செய்யுமிடத்திலிருந்து.''

''எப்பக்கத்தில்?''

''அநேகமாக காரின் இப்போது வெகு துரிதமாகக் கருவிகளை அமைத்துக் கொண்டிருப்பான். வில் தவ்ரேவில் அவன் வைத்திருந்தது வெறும் மாதிரி தான். முழு அளவுக் கருவியை அவன் செய்து முடித்துவிட்டானானால், அதனை அவனிடமிருந்து பறித்து எடுப்பது சிரமமாக இருக்கும். முதலில் நாம் தெரிந்துகொள்ள வேண்டியது—அவன் எந்திரங்களை எங்கே செய்கிறான் என்பதே.''

''அதற்குப் பணம் பிடிக்கும்.''

''இன்றே க்ரெனேல் தெருவிற்குப் போய் நமது தூதருடன் இது பற்றிப் பேசுங்க. முன்பே சற்று அவரிடம் கூறியுள்ளேன். அவர் உங்களுக்குப் பணம் தருவார். இரண்டாவது விஷயம்: நாம் ஸோயா மான்ரோஸைக் கண்டுபிடிக்கணும். அது மிக முக்கிய மானது. அவள் புத்திசாலிப் பெண், கொடூரமான வள், அபாரமான கற்பனையுள்ளவள். அவள் காரி னையும் ரோல்லிங்கையும் சாவுக்கு ஒன்று சேர்த் திருக்கிறாள். அவள் தான் அவர்களது மொத்த இயக்க ஏற்பாட்டிற்கும் விசைக்கம்பிச் சுருள்.''

''என்னை மன்னிக்கணும், ஆனால் நான் ஒரு பெண்ணிடம் சண்டையிடப் போவதில்லை.''

''அலெக்சேய் ஸெமியோனவிச், அவள் உங்களை யும் என்னையும் சேர்த்தாலும் அதைவிடப் பலம் மிகுந்தவள்... அவள் இன்னும் நிறைய இரத்தம் சிந்தப்போறாள்.''

50

வெள்ளைப் பாவாடையும், தங்கப் பொத்தான்கள் கூடிய மாலுமியின் உடுப்பு போன்ற வெள்ளைக் கோட்டும் அணிந்த ஸோயா, மேல்தளத்தில் நிழல் குதியில் ஒரு பிரம்பு மேசையின்மேல் காலை உணவு வைக்கப்பட்டிருந்த இடத்திற்குச் சென்றாள்.

ஸோயா மேசை முன்னர் அமர்ந்தாள். ஒரு துண்டு ரொட்டியைத் தனது விரல்களால் எந்திரக தியில் முரித்துச் சுற்றிலும் நோக்கினாள். உல்லாசப் படகின் வெண்ணிறமுடைய குறுகலான உடற்பகுதி, கண்ணாடி போன்றிருந்த நீர்ப்பரப்பின்மீது வழுக்கி யது; கடல் தெளிவான நீல வண்ணத்துடன் இருந் தது, மேகமற்ற வானத்தைவிடச் சற்றே இருண்டி ருந்தது. புதியனவாகக் கழுவப்பட்டிருந்தபடியால் ஏற்பட்ட மேல்தளத்தின் மணம் காற்றுடன் கலந் திருந்தது. வெதுவெதுப்பான மென்காற்று அவளது முகத்தைத் தழுவியது.

குறுகலான மஞ்சள் நிறப் பலகைகள் பரப்பப் பட்டு இலேசாக வளைந்திருந்த மேல்தளத்தின்

இரு பகுதிகளிலும் கைகள் உள்ள பிரம்பு நாற்காலிகள் இருந்தன. நடுவிலே கிடந்த வெள்ளி நிற அனதோலியன் தரைவிரிப்பில் சரிகைப் பூக்கள் பின்னப் பெற்ற திண்டுகள் சிதறிக்கிடந்தன. காப்டன் மேடையிலிருந்து படகின் பின்பகுதி வரை நீலவண்ணப் பட்டுவிதானம் அமைக்கப்பட்டு ஓரத்தில் குஞ்சங்களும், நூற்கோவைகளும் தொங்கின.

ஸோயா பெருமூச்சு விட்டு, சிற்றுண்டியைத் தொடங்கினாள்.

மெல்ல அடி எடுத்து வைத்து நார்வே நாட்டினனான காப்டன் யான்ஸன் புன்னகையுடன் அவளை நோக்கி வந்தான். மழித்த முகமும் சிவப்புநிறக் கன்னங்களுமாக வளர்ந்த பையனைப் போன்றிருந்தான். ஒரு காதின் பக்கமாகச் சாய்த்து அணிந்திருந்த தொப்பியினருகில் மெதுவாக இரண்டு விரல்களை உயர்த்தினான்.

''காலை வணக்கம், லாமோல் சீமாட்டி.'' (இந்தப் பெயருடனும் பிரெஞ்சுக் கொடியுடனும் ஸோயா கடற்பயணம் செய்தாள்.)

காப்டன் முற்றாக வெண்ணிற உடையில், கட்சிதமாகத் தலைவாரி, பாங்கற்ற மாலுமிப் பாணியில் ஒயிலுடன் திகழ்ந்தான். அவனது தொப்பி முகட்டில் தைத்திருந்த தங்க ஓக் இலைகளிலிருந்து, கயிற்றாலாகிய அடித்தோலையுடைய வெண்ணிற மூடுசெருப்பு வரை, அவனை ஏற இறங்க நோக்கிய ஸோயா மன நிறைவுற்றாள்.

''காலை வணக்கம், யான்ஸன்.''

''அறிக்கை செய்ய அநுமதியுங்கள். படகின் போக்கு வடமேற்கு-மேற்கு, தீர்க்கரேகையும் அட்சரேகையும் (இன்னது), தொடுவானத்தில் வெஸூவியஸ் தெரிகிறது. அரைமணி நேரத்திற்குள் நாம் நேப்பிள்ஸைக் காணலாம்.''

''உட்காருங்க, யான்ஸன்.''

காலை உணவில் பங்குகொள்ளுமாறு கையசைப் பால் அவனை அழைத்தாள். ஒரு பிரம்பு நாற்காலியில் யான்ஸன் அமர அவனது வலிய உடலின் சுமையால் அது கிரீச்சிட்டது. காலையுணவை ஏற்க மறுத்

தான், ஏனெனில் ஒன்பது மணிக்கே அவன் உணவு கொண்டான். மரியாதைக்காக ஒரு குவளை காப் பியை மட்டும் எடுத்துக்கொண்டான்.

பொன்னிறப் புருவங்களுடைய அவனது வெயி லில் பழுப்பேறிய முகத்தை ஸோயா ஆராய்ந்தாள் —படிப்படியாக அம்முகத்தில் வண்ணம் கலந்து படர்ந்தது. காப்பியைச் சுவைக்காமற்கூட குவளை யை மேசைமேல் வைத்துவிட்டான்.

''நன்னீரும் என்ஜின்களுக்கு எண்ணெயும் எடுக்க வேண்டும்,'' எனத் தன் கண்களை நிமிர்த்தாமலே சொன்னான்.

''என்ன? நேப்பிள்ஸுக்குள் செல்லவா? ஒரே சலிப்பு! நீரும் எண்ணெயும் கட்டாயம் உங்களுக்கு வேண்டுமானால் நாம் துறைமுகத்துக்கு வெளியிலே யே நிறுத்தலாம்.''

''ஆகட்டும், சீமாட்டி,'' என மெதுவாக காப் டன் பதிலளித்தான்.

''யான்ஸன், உங்களுடைய முன்னோர் கடற் கொள்ளைக்காரர்கள், அல்லவா?''

''ஆம், சீமாட்டி.''

''எவ்வளவு பரபரப்பாக இருந்திருக்கும்! துணி கரம், ஆபத்து, களியாட்டம், அழகிய பெண்களைக் கவர்ந்து போதல்... ஒரு கடற்கொள்ளைக்காரராக இல்லாதது குறித்து நீங்க வருந்தவில்லையா?''

யான்ஸன் பதிலளிக்கவில்லை. அவனது பொன் னிறக் கண் இமைகள் படபடத்தன. அவன் நெற்றி யில் சுருக்கங்கள் இருந்தன.

''சரியா?''

''நன்முறையில் வளர்க்கப்பட்டவன் நான், சீமாட்டி.''

''நான் அதைச் சந்தேகிக்கலே.''

''சட்டவிரோதமான, நம்பிக்கைத் துரோகமான செயல்களைச் செய்யக்கூடியவன் நான் என்று எண் ணுமாறு தங்களைத் தூண்டக்கூடியது ஏதேனும் இருக்கிறதா?''

''சீச்சீ,'' என்றாள் ஸோயா, ''ஒரு பெரிய பல சாலி, தைரியமுள்ள மனிதன், கடற்கொள்ளைக்

காரர்களின் வழிவந்தவன், அப்படிப்பட்டவன் செய்யக்கூடியதெல்லாம் ஒரு வெப்பமான அலுப்புத்தட்டும் சூட்டையில் ஓர் அசட்டுப் பெண்ணை ஏற்றிச் செல்வதுதானோ? சீ!''

''ஆனால், சீமாட்டி...''

''ஏதாவது முட்டாள்தனம் செய்யுங்க, யான்ஸன், எனக்கு சலிச்சுப்போச்சு...''

''ஆகட்டும், சீமாட்டியே, செய்வேன்.''

''பெரும்புயல் அடிக்கிற போது படகைப் பாறைகளில் மோதவிடுங்க.''

''ஆகட்டும், சீமாட்டி, படகைப் பாறைகளில் மோதவிடுவேன்...''

''உண்மையாகவே அப்படிச் செய்ய நினைக்கிறீங்களா?''

''நீங்க உத்தரவு போட்டா...''

அவன் ஸோயாவை நோக்கினான். அவன் கண்களில் மனத்தாங்கலும் உள்ளடங்கிய பாராட்டும் இருந்தன. ஸோயா அவனை நெருங்கி, அவனது வெள்ளைச் சட்டைக்கையில் தன் கையை வைத்தாள்:

''நான் வேடிக்கை பேசலே, யான்ஸன். உங்களை மூன்று வாரமாகத்தான் எனக்குத் தெரியும், ஆனால் நீங்க விசுவாசத்திற்குரியவர்களில் ஒருவர் என எனக்குத் தோன்றியது (அவனது தாடை இறுகியது). விசுவாசத்தின் எல்லையை மீறிய செயல்களைச் செய்யும் திறம்படைத்தவர் நீங்க என்றும் எனக்குத் தோன்றியது, அதாவது... அதாவது...''

அப்போது காப்டன் மேடையினின்றும் செல்லும், அரக்கும் வெண்கலமும் பிரகாசிக்கும் வழியில் ஓடிவரும் கால்கள் தென்பட்டன.

''நேரமாகிறது, சீமாட்டி...'' என்று இடைமறித்தான் யான்ஸன்.

உதவிக் காப்டன் படிகளில் இறங்கி வந்து வணக்கம் செய்தான்:

''லாமோல் சீமாட்டி, இப்போது பன்னிரண்டு ஆக மூன்று நிமிடங்கள் இருக்கின்றன. தற்போது நீங்க வானொலியால் அழைக்கப்படுவீங்க...''

51

மேற்தளத்திலிருந்த வானொலி அறைப் பக்கமாக ஸோயா செல்கையில், மென்காற்று அவளது வெள்ளைப் பாவாடையை ஊதிக் கப்பற்பாய் போன்று உப்பச் செய்தது. கண்களைச் சுருக்கிக்கொண்டு உப்பங்காற்றை ஆழமாக உள்ளுக்கிழுத்தாள். காப்டன் மேடையிலிருந்து, அந்த உயரத்தில் நின்று நோக்கும் போது, புள்ளிகளிட்ட கண்ணாடி போன்ற கடலில் வெயில்படும் பரப்பு எல்லையற்றது போலத் தோன்றிற்று.

சாரக் கம்பியைப் பிடித்துக்கொண்டு சுற்றிலும் நோக்கிய ஸோயா வியப்பில் மெய்மறந்து நின்றாள். ஏற்றத்திலிருந்த முன்பாய்மரத்துடன் உல்லாசப்படகின் குறுகிய உடல் இளங்காற்று வீச்சுக்களினிடையே ஒளிர்கின்ற கடலில் பறந்துசென்றது.

ஸோயாவின் துன்புறுத்தும் இருண்ட பழைய வாழ்க்கை முழுவதும் ஒருபுறம் ஒதுக்கித் தள்ளப்பட்டு, அந்தப் பிரகாசமான வெயிலில் கரைந்து விட்டது...

''நான் இளமையானவள்... நான் இளமையானவள்...'' சூரியனை நோக்கி உயர்த்தப்பெற்றிருந்த முன்பாய்மரமுடைய கப்பல் மேல்தட்டில் நிற்கும் போது அவளுக்குத் தோன்றியது. ''நான் அழகி... நான் நல்லவள்...''

அவளது கழுத்தையும் முகத்தையும் மென்காற்று கொஞ்சலாக வருடியது. ஸோயா தான் இன்புற வேண்டுமென்று மகிழ்ச்சிப் பெருக்குடன் விழைந்தாள். வெளிச்சம், வானம், கடல் ஆகியவற்றினின்றும் தனித்துப் பிரியச் சற்றும் இயலாதவளாய் மிக இடர்ப்பட்டுப் பிறகு சில்லென்றிருந்த கதவுப் பிடியைத் திருப்பி, வெயில்படும் பக்கம் திரை போடப்பட்டிருந்த கண்ணாடி அறையினுள் நுழைந்தாள். செவிக் குழாய்களை எடுத்தாள். மேசையின் மேல் முழங்கைகளை ஊன்றி விரல்களால் தன் கண்களை மூடிக்கொண்டாள்.

காலமானியின் இரட்டை அடிகள் கப்பலின் மணி

போன்று பன்னிரண்டு மணியை அறிவித்தன. ஸோயா முறுவலித்தாள். விதானத்துக்கு அடியில் இருந்த நாற்காலியினின்றும் எழுந்திருந்து மூன்று நிமிடங்களே ஆகியிருந்தன.

இடப்புறம் ஸ்விட்சைத் தள்ளி முப்பத்தேழு புள்ளி ஐந்து மீட்டர் ஒலியலை நீளத்திற்குக் கருவியில் ஒலி இழுக்குமாறு திருப்பி இயக்கினாள். ஒலிவாங்கியின் இருண்ட வெறுமையிலிருந்து ரோல்லிங்கின் கரகரத்த குரல் மெல்ல வந்தது:

''...லாமோல் சீமாட்டி, லாமோல் சீமாட்டி, லாமோல் சீமாட்டி... கேட்கிறீர்களா, கேட்கிறீர்களா...''

''ஹலோ, ஆமா, கேட்கிறேன். அமைதியடையும்...'' என்று ஸோயா கிசுகிசுத்தாள்.

''எல்லாம் சரியா? உங்களுக்கு ஏதேனும் தொல்லை உண்டா? ஏதேனும் உதவி வேண்டுமா? இன்று வழக்கப்படி அதே நேரத்தில் உங்க குரலைக் கேட்டு மகிழ்வேன்... வழக்கப்படி அதே ஒலியலை நீளத்தைப் பயன்படுத்துங்க... லாமோல் சீமாட்டி, கிழக்குத் தீர்க்கரேகை பதினொன்று டிகிரியும் வடக்கு அட்சரேகை நாற்பது டிகிரியும் ஆகிய இடத்தினின்றும் நெடுந்தொலைவு போக வேண்டாம். நாம் விரைவில் சந்திக்கக் கூடும். இங்கு எல்லாம் சரியா இருக்கு. எல்லாம் அருமையாக உள்ளது. வாய் மூடி இருக்க வேண்டியவன் அப்படியே செய்கிறான். கவலை வேண்டாம், அதிருஷ்டம் உண்டாகட்டும், கடற் பயணம் இன்பம் தரட்டும்...''

ஒலிவாங்கியை ஸோயா நீக்கினாள். அவளுடைய நெற்றியில் சுருக்கம் விழுந்தது. காலமானியின் முட்களைப் பார்த்து முணுமுணுத்தாள்: ''எனக்குச் சலித்துவிட்டது!'' வானொலி வாயிலாக நாள்தோறும் இவ்வாறு காதல் உறுதி மொழிகள் கூறுவது, அவளுக்குக் கடுங்கோபம் ஊட்டியது. ரோல்லிங் அவளை அமைதியாக இருக்க விட மாட்டான், அவனால் விட முடியாது... நாள்தோறும் ஒலிபெருக்கியில் கரகரத்த குரலில், ''கவலை வேண்டாம், அதிருஷ்டம் உண்டாகட்டும், கடற்பயணம் இன்பம்

தரட்டும்,'' என்று கத்த அவனை அவள் அனுமதிக்கின்ற வரை, எந்தக் குற்றத்தையும் செய்யத் தயாராக இருந்தான் ரோல்லிங்.

52

வில் தவ்ரேவிலும், ஃபான்டென்ப்ளோவிலும் நடந்த கொலைகளுக்கும், ஹாவ்ருக்குச் செல்லும் வெறுமையான நிலவொளி நிறைந்த சாலையில் காரினுடன் செய்த பயங்கர கார் பயணத்துக்கும் பிறகு ஸோயாவும் ரோல்லிங்கும் சந்திக்கவே இல்லை. அன்று மாலை அவனை நோக்கிச் சுட்டான், அவமதிக்க முயன்றான், பிறகு அமைதியுற்றான். காருக்குள்ளாகக் குனிந்து அமர்ந்திருந்தபோது ஓசையின்றி அவன் அழுது கொண்டிருப்பதாக ஸோயாவுக்குத் தோன்றிற்று.

ஹாவ்ரில் ரோல்லிங்கினுடைய 'அரிஸோனா' என்ற உல்லாசப்படகில் ஏறி வைகறையில் பிஸ்கே விரிகுடாவில் புறப்பட்டாள். லிஸ்பனில் லாமோல் சீமாட்டி என்ற பெயரில் அவளுக்கு ஆவணங்கள் வழங்கப்பட்டு, மேலைநாடுகளில் மிகச் சிறந்த செல்வச் செழிப்புடைய உல்லாசப்படகு ஒன்றின் சொந்தக்காரியானாள். லிஸ்பனை நீங்கி, 'அரிஸோனா' மத்தியதரைக் கடலினுள் நுழைந்து, அங்கிருந்து 11° கிழக்குத் தீர்க்கரேகைக்கும் 40° வடக்கு அட்சரேகைக்கும் அருகிலுள்ள பகுதியில் இத்தாலியக் கரையோரமாகப் பயணம் செய்தது.

பாரிசுக்கு அருகிலுள்ள மெடான் என்ற இடத்தில் இருந்த தன்னுடைய தனிப்பட்ட வானொலி நிலையத்தின் வழி உல்லாசப்படகினுடன் ரோல்லிங் உடனே தொடர்பு ஏற்படுத்த, காப்டன் யான்ஸன் பயணத்தின் விவரங்களை ரோல்லிங்கிற்கு அறிவித்தான். ஒவ்வொரு நாளும் ரோல்லிங் ஸோயாவை அழைப்பான். ஒவ்வொரு மாலையும் தனது 'மன நிலை' பற்றி ஸோயா அவனுக்கு அறிக்கை தந்தாள். இந்தச் சலிப்பான நிலையில் பத்து நாள்கள் கடந்த போது, 'அரிஸோனா'வில் வானொலி இயக்குநன் ஒரு நாள், குறுகிய ஒலியலை நீளத்தில், புரியாத

மொழியில் குறியீடுகள் சிலவற்றைக் கேட்டான். ஸோயாவுக்குத் தகவல் தரப்பட்டது. அவளது நெஞ்சுத் துடிப்பு நின்றுபோகும் நிலையை ஏற்படுத்திய ஒரு குரலை அவள் கேட்டாள்:

''ஸோயா, ஸோயா, ஸோயா...''

கண்ணாடியில் மோதும் பெரும் ஈயைப் போல காரினின் குரல் ஒலிவாங்கியின் வழியாகச் செவிக் கெட்டியது. அவளது பெயரை அவன் திரும்பத் திரும்பக் கூறினான், சிறு நிறுத்தத்திற்குப் பிறகு சொன்னான்:

''...இன்றிரவு ஒன்றிலிருந்து மூன்று மணிக்கிடையில் பதில் கொடு...''

பிறகு மீண்டும்:

''...ஸோயா, ஸோயா, ஸோயா... எச்சரிக்கையாயிரு, எச்சரிக்கையாயிரு...''

அதே இரவு, இருண்ட கடலுக்கு மேலே, உறங்கும் ஐரோப்பாவுக்கு மேலே, ஆசியா மைனரின் பழங்கால அழிவுக்குவைகளுக்கு மேலே, முட்களாலும் காய்ந்துபோன தாவரங்களின் தூசியாலும் நிறைந்த ஆப்பிரிக்கச் சமவெளிகளுக்கு மேலே மின்னியக்க அலைகள் ஒரு பெண்ணின் குரலைத் தாங்கிச் சென்றன:

''...ஒன்றிலிருந்து மூன்று மணிக்கிடையில் விடை கேட்டவனுக்கு அறிவிக்கின்றேன்...''

இச்சொற்களை ஸோயா பலமுறை திருப்பிச் சொல்லிய பிறகு சொன்னாள்:

''...நான் உன்னைப் பார்க்க விரும்புறேன். நீ விரும்பினா பைத்தியக்காரத்தனம் என அழைக்கலாம். இத்தாலியில் எந்தத் துறைமுகத்தையாவது குறிப்பிடு... பெயர் சொல்லி என்னை அழைக்க வேண்டாம், உன் குரலை நான் புரிந்துகொள்வேன்.''

ஐரோப்பாவிலோ, ஆசியாவிலோ அன்றி ஆப்பிரிக்காவிலோ காரின் எங்கிருப்பினும் 'அரிஸோனா' விலிருந்து வெளிப்பட்ட மின்காந்த ஒலியலைகளைக் கேட்பான் என்று நம்பி ஸோயா தனது செய்தியை மீண்டும் மீண்டும் பிடிவாதமாக உரைத்தாள். அந் நேரத்தில் ஆயிரம் மைல்களுக்கும் அப்பால் பாரிசில்

இரட்டைப் படுக்கையொன்றின் அருகிலிருந்த சிறு மேசை மேல் தொலைபேசியின் மணியடித்தது. போர்வையால் மூக்கையும் மூடிக்கொண்டு அப்படுக்கையில் தனியனாய் ரோல்லிங் உறங்கினான்.

ரோல்லிங் குதித்தெழுந்து ஒலிவாங்கியை எடுத்தான். பரபரப்புடன் ஸெமியோனவின் குரல் கேட்டது:

''ரோல்லிங், அவள் பேசிக் கொண்டிருக்கிறாள்.''

''யாருடன்?''

''என்னால் கேட்க முடியலே. அவனைப் பெயர் சொல்லி அவள் குறிப்பிடவில்லை.''

''ஓ.கே. தொடர்ந்து கேளுங்க. நாளை அறிவிங்க.''

ஒலிவாங்கியை ரோல்லிங் கீழே வைத்துவிட்டு மீண்டும் படுத்துக்கொண்டான். ஆனால் ஏற்கெனவேயே உறக்கம் அவனைவிட்டு நீங்கிவிட்டது.

ஸெமியோனவின் வேலை எளிதாக இல்லை: நடன இசை, விளம்பரங்கள், சர்ச் கூட்டிசை, சர்வதேச விவகாரங்கள் பற்றிய அதிகாரபூர்வமான அறிக்கைகள், இசை நாடகங்கள், பல்வகை ஓசைக் கலப்புக்கள், பங்கு நிலவர அறிக்கைகள், புகழ் பெற்ற சிரிப்புக்கலைஞரின் கேலிப் பேச்சுக்கள் ஆகியவற்றின் ஓசைகள் எல்லாம் ஐரோப்பாவுக்கு மேலே புயல் போன்று விரைந்து சென்று கொண்டிருந்ததால் இவற்றிற்கிடையே ஸோயாவின் பலவீனமான குரலை இனங்கண்டு அவன் கேட்க வேண்டியதாயிற்று.

மெடானிலிருந்த வானொலி நிலையத்தில் இரவு பகலாக ஸெமியோனவ் அமர்ந்திருந்தான். ஸோயாவினுடைய குரலிலிருந்து சில சொற்றொடர்களை மட்டும் அவனால் கேட்க முடிந்தது. ரோல்லிங்கின் பொறாமையைக் கிளப்ப அவை போதுமானதாக இருந்தன.

ஃபான்டென்ப்ளோவில் அந்த இரவுக்குப் பின்னர் ரோல்லிங் மிக மோசமாக உணர்ந்தான். ஷெல்கா உயிருடன் இருக்கும் வரை ரோல்லிங்கின் உயிருக்கு அச்சுறுத்தும் அபாயம் இருந்தது. ஒரு நீக்ரோவைப்

போல எவனை மனநிறைவுடன் மரத்தில் தூக்குப் போட்டுக் கொன்றிருப்பானோ அதே காரினோடு ஓர் உடன்படிக்கையில் கையெழுத்திடுமாறு கட்டாயப்படுத்தப்பட்டான். ஒருவேளை அப்போதும் ரோல்லிங் விட்டுக் கொடுக்காது இருந்திருப்பான். இந்தக் கூட்டுறவை விடச் சாவோ, தூக்கோ மேலானது என்று எண்ணியிருப்பான். ஆனால் அவன் மனவுறுதியை ஸோயா குலைத்துவிட்டாள். காரினோடு உடன்பாடு செய்துகொண்டதன் மூலம் அவனுக்குக் கொஞ்சம் நேரம் கிடைத்தது: இதற்கிடையில் இந்தப் பைத்தியக்காரியின் புத்தி திருந்தலாம், அவள் தன் தவற்றினுக்கு வருந்தி அவனிடம் மீளக்கூடும்... உடன்படிக்கையின் நிபந்தனைகள் ஒன்றின்படி அவனது உல்லாசப்படகில் ஸோயா நெடும் பயணம் செய்ய வேண்டும்.(எல்லாத் தடயங்களையும் மறைப்பதற்கு இது இன்றியமையாததாயிற்று.) வானொலி வழியாக நாள்தோறும் அவளுடன் பேசி, அவளைத் தூண்டவும், அவளது மனச்சாட்சிக்கு வேண்டுகோள் விட்டு அவளைத் தன் பக்கம் இழுக்கவும் அவன் எண்ணினான். ரோல்லிங்குடைய வாழ்க்கையில் எதைக் காட்டிலும் இந்த நம்பிக்கை மிக முட்டாள்தனமாக இருந்தது.

காரினுடன் தான் செய்துகொண்ட உடன்படிக்கையின்படி 'வேதியல் தொழில் முனையில் பொதுத் தாக்குதலை' உடனே ரோல்லிங் தொடங்கினான். ஹாவ்ரில் 'அரிஸோனா'வில் ஸோயா கப்பலேறிய அன்றைக்கே ரோல்லிங் பாரிசுக்கு ரயில் வழியாகத் திரும்பினான். தான் ஹாவ்ருக்குச் சென்றிருந்ததாகவும் திரும்பும் வழியில் இரவில் கொள்ளைக்காரர்களால் தாக்கப்பட்டதாகவும் போலீசுக்கு அறிவித்தான். (அந்தக் கொள்ளைக்காரர்கள் மூவரென்றும் அவர்களது முகங்கள் கைக்குட்டைகளால் மூடப்பட்டிருந்தன என்றும் அறிவித்தான்.) தன்னுடைய காரையும் பணத்தையும் பறித்துவிட்டார்கள் என்றும் கூறினான். (காரின் இதற்கிடையில் ரோல்லிங்கினுடைய காரை மேற்கிலிருந்து கிழக்கில் பிரான்சின் குறுக்கே ஓட்டிச்சென்று லக்ஸம்பர்க் எல்லை

யைத் தாண்டி முதன்முதலாக எதிர்ப்பட்ட கால் வாயில் அதை மூழ்கடித்துவிட்டான்.)

'வேதியல் தொழில் முனையில் தாக்குதல்' தொடங்கியது. பாரிஸ் பத்திரிகைகள் மிகப்பெரும் குழப்பக் கூச்சலைக் கிளப்பிவிட்டன. ''வில் தவ்ரே கொலைகளின் புதிர்'', ''ஃபான்டென்ப்ளோவில் ருஷ்யன் மீது மர்மத் தாக்குதல்'', ''வேதியல் மன்னரிடமிருந்து அபாரக் கொள்ளை'', ''ஐரோப்பாவில் கோடிக்கணக்கில் அமெரிக்கப் பணம்'', ''ஜெர்மன் தேசியத் தொழிலின் அழிவு'', ''ரோல்லிங்கா மாஸ்கோவா''—இவ்வாறான தலைப்புக்கள் பத்திரிகைகளில் வந்தன. இதெல்லாம் பங்குப்பத்திரங்களை வைத்திருந்த சாதாரண மனிதனது தொண்டைக் குழிக்குள் அடைத்துக்கொண்டது என்பதைச் சொல்லவே வேண்டியதில்லை. ஸ்டாக் எக்சேஞ்சு அடித்தளம் வரை ஆட்டங்கண்டது. அதன் சாம்பல் நிறத் தூண்களுக்கு இடையே, சன்னி நடுக்கம் கொண்ட கைகள் விலைசரியும் பங்குகளின் புள்ளி விவரங்களைச் சாக்குக் கட்டியால் எழுதுவதும் அழிப்பதும் மறுபடி எழுதுவதுமாயிருந்த கரும் பல கைகளின் அருகே, தெறித்துச் சிதறிவிடுவது போன்ற கண்களும் பழுப்பு நுரை படிந்த உதடுகளும் கொண்ட மூளைபுரண்ட மனிதர்கள் கைகளை ஆட்டினார்கள், வீரிட்டார்கள்.

ஆயினும், இவ்வாறு அழிந்தவர்கள் சில்லறைப் பேர்வழிகள்தாம். இதெல்லாம் அற்ப விஷயம். பெருந்தொழிலதிபர்களும் வங்கிகளும் பற்களைக் கடித்துக்கொண்டு பங்குகளை விடாது பிடித்துக் கொண்டிருந்தனர். ரோல்லிங்கின் எருமைக் கொம்பு களுக்குக் கூட அவர்களைத் தூக்கி எறிவது சுலப மாயில்லை.

அனைத்திலும் கடுமையான இந்தச் செயலுக் காகத்தான் காரின் ஏற்பாடுகளைச் செய்து கொண் டிருந்தான்.

காரின் ஜெர்மனியில் தன்னுடைய மாதிரிக் கரு வியிலிருந்து ஒரு முழு அளவு எந்திரத்தை, ஷெல்கா ஊகித்தது போல, ஜுர வேகத்தில் கட்டிக் கொண்

டிருந்தான். அக்கருவியின் வெவ்வேறு பகுதிகளைச் செய்யுமாறு வெவ்வேறு தொழிற்சாலைகளுக்கு ஆர்டர் கொடுத்துக்கொண்டு, நகரத்திற்கு நகரம் பயணம் செய்து கொண்டிருந்தான். கோலோன் பத்திரிகை ஒன்றின் விளம்பரப் பத்திகளின் வழியாகப் பாரிசுடன் தொடர்பு வைத்துக்கொண்டான். பின்வருவன போன்ற அறிவிப்புக்களை பாரிஸ் நகரத்து எளிய செய்தித்தாள் ஒன்றில் ரோல்லிங் புகுத்திக் கொண்டிருந்தான்: ''அனிலைன் மீது கவனத்தை எல்லாம் ஒருமுகப்படுத்தவும்...'', ''ஒவ்வொரு நாளும் விலை மதிப்பற்றது, பணத்தைச் சிக்கனம் செய்ய வேண்டாம்...'', முதலியன.

காரின் மறுமொழி தந்தான்: ''எதிர்பார்த்ததற்கு முன்னேயே இறுதிக்கட்டம்...'', ''இடம் கண்டுபிடிக்கப்பட்டது...'', ''தொடக்கம்...'', ''எதிர்பாராத தாமதம்...''

ரோல்லிங்: ''கவலைப்படுகிறேன். நாள் குறிப்பிடுக...''

காரின்: ''உடன்படிக்கை கையெழுத்தானதிலிருந்து முப்பத்தைந்து நாள்களை எண்ணுக...''

இறுதிச் செய்தியும், ரோல்லிங்கை தொலைபேசியில் ஸெமியோனவ் கூப்பிட்டதும் ஒரே பொழுதில் நேர்ந்தன. ரோல்லிங் சீறினான்—அவன் முட்டாளாக்கப்பட்டுக் கொண்டிருந்தான். மற்ற எல்லாவற்றையும் தவிர, 'அரிஸோனா'வுடன் மறைவான பேச்சுத்தொடர்பு அபாயகரமானது. எனினும் மறுநாள் லாமோல் சிமாட்டியுடன் ரோல்லிங் பேசியபோது ஒரு சொல்லாற்கூடத் தன் மனநிலையை அம்பலப்படுத்திக் கொள்ளவில்லை.

ஜென்மப் பகைவனுடன் தனது 'போட்டியாட்டத்தை'ப் பற்றித் தூக்கம் இல்லாத அந்நேரத்தில் ரோல்லிங் நினைத்துபார்த்தான். தவறுகளைக்கண்டுபிடித்தான். காரினின் தற்காப்பு, முன்பு தோன்றியது போல அவ்வளவு வலிமையுடையதாக இல்லை. 'அரிஸோனா'வில் ஸோயா கடற்பயணம் செய்வதற்கு அவன் ஒப்புக்கொண்டதில் பெரிய தவறு செய்துள்ளான். ஆட்டத்தின் முடிவு முன்னேயே தீர்மா

னிக்கப்பட்டுள்ளது. காரினின் தோல்வி 'அரிஸோனா'ப் படகில் அறிவிக்கப்படும்.

53

இருப்பினும், 'அரிஸோனா'ப் படகில், ரோல்லிங் கற்பனை செய்தது போன்று விஷயங்கள் நடக்கவில்லை. மதிநுட்பமும், அமைதியாகச் சீர்தூக்கும் பண்பும், நிதானமும், விசுவாசமும் உள்ள பெண்ணாகத்தான் ஸோயாவை ரோல்லிங் நினைவுகூர்ந்தான். அவள் பெண்களின் இயல்பான பலவீனங்களை இகழ்பவள் என்பதும் அவனுக்குத் தெரியும். ஒரு பஞ்சையும் காசுமில்லாத நாடோடியும் கொள்ளைக்காரனுமாகிய காரினிடம் அவள் கொண்டிருந்த மோகக்கவர்ச்சி நெடுங்காலம் நிலைத்திருக்குமென்பதை அவனால் நம்ப முடியவில்லை. மத்தியதரைக் கடலில் ஒரு முறை நன்கு பயணம் செய்தால், அவள் அறிவு தெளிந்துவிடும்.

ஹாவ்ரில் உல்லாசப்படகில் ஏறும்போது ஸோயா உண்மையிலேயே ஜன்னி நிலையிலேயே இருந்தாள். கடலில் சில நாள்கள் த்னிமையாக இருந்தது அவளை அமைதிப்படுத்தியது. நீரின் நீலவண்ணத்துக்கும் ஒளிர்வுக்கும் நடுவே, அலைகளின் அனந்தம் போன்ற அமைதியான ஓசைக்கு இடையே அவள் விழித்தாள், வாழ்ந்தாள், துயின்றாள். அழுக்குப் படிந்த அறை, இளித்த பற்களும் கண்ணாடி போன்ற கண்களுமாக இருந்த லெனுவாரின் பிணம், வாத்து மூக்கனுடைய மார்பின் குறுக்கே கொப்பளித்துக் கொண்டு சென்ற புகையின் நெடுங்கீறல், ஃபான்டென்ப்ளோ காட்டு நடுவே இருந்த ஈர வெளி, ஒரு வெறிநாயைச் சுடுவது போல ரோல்லிங் திடீரென்று சுட்ட வெடிகள் ஆகியவற்றையெல்லாம் எண்ணிப் பார்த்து, வெறுப்பினால் நடுங்கினாள்...

எனினும், ரோல்லிங் எண்ணிய முறையில் அவளது மூளை தெளிவடையவில்லை. உறங்கும் போதும், விழித்திருக்கும் நேரத்திலும் களிப்புத்தரும் தீவுகளைப் பற்றியும், கடல் வரையும் செல்லும்

மாடிப்படிகள் கொண்ட சலவைக்கல் பெரு மாளிகைகளைப் பற்றியும் கனவு கண்டாள்... அழகிய மக்களின் கூட்டங்கள், இசை, கொடிகளின் ஆட்டம்... அவள்—இத்தகைய மாயக் கற்பனையுலகின் தலைவி...

நீல விதானத்துக்கடியிலிருந்த நாற்காலியில் அமர்ந்திருக்கும் போது தோன்றிய அவளது கனவுகளும், மனக்காட்சிகளும் வில் தவ்ரேவில் அவள் காரினுடன் (கொலைகளுக்கு ஒரு மணி நேரத்திற்கு முன்) நடத்திய பேச்சின் தொடர்ச்சியாகவே விளங்கின. அக்கணத்தில் இவ்வுலகில் ஒரே ஒரு மனிதன், காரின் மட்டும்தான் அவளைப் புரிந்து கொண்டிருப்பான். ஆயினும் அவனுடன் லெனுவாரின் கண்ணாடி போன்ற கண்களும், வாத்து மூக்கனின் பயங்கரமாகப் பிளந்த வாயும் தொடர்பு கொண்டிருந்தன.

ஒலிவாங்கியில் திடீரென்று காரினின் குரல் முனகியபோது அவள் நெஞ்சத் துடிப்பு நின்றது இதனால்தான்... அதிலிருந்தும் நாள்தோறும் அவனைக் கூப்பிட்டுக்கொண்டும் மன்றாடிக்கொண்டும் அச்சுறுத்திக்கொண்டும் இருந்தாள். அவனைக் காண விரும்பினாள், ஆனால் சந்திப்புக்கு அஞ்சினாள். களங்கமில்லாத நீல வானத்திலும் கடலிலும் உள்ள ஒரு கரும்புள்ளியாக அவளது கற்பனையில் தோன்றினான்... தனது பகற் கனவுகளை அவனிடம் சொல்ல அவள் ஏங்கினாள். அந்த ஆலிவீன் பட்டை எங்குள்ளது என்று அவனை வினவ விரும்பினாள். படகில் ஓய்வின்றி ஸோயா அலைந்ததால் காப்டன் யான்ஸனுக்கும் அவனது துணைப்பணியாளனுக்கும் மன அமைதி குன்றியது.

''பொறு,'' என காரினுடைய பதில் வந்தது. ''உன் விருப்பம் போல ஒவ்வொன்றும் இருக்கும். நீ மட்டும் போதுமான அளவு வலியுறுத்தி விரும்ப வேண்டும். ஆசைப்படு, பைத்தியங்கொள்—அதுவே நல்லது. அத்தகையவளாகத்தான் நீ எனக்குத் தேவை. நீ இல்லாவிட்டால் என் பெருமுயற்சி ஒன்று மற்றதாகத் தோன்றுகிறது.''

அதுதான் அவனது கடைசி வானொலிச் செய்தி. அதனை ரோல்லிங்கும் ஒட்டுக் கேட்டறிந்தான். உல்லாசப்படகில் சரியாக எந்த நாளில் அவனை எதிர்பார்க்கலாம் என்ற தன் வினாவின் விடைக்காக ஸோயா காத்திருந்தாள். மேல் தளத்திற்குச் சென்று சாரக்கம்பியில் சாய்ந்தாள். படகு அரிதாகவே நகர்ந்தது. காற்று ஓய்ந்திட்டது. இன்னும் புலப்படாத தரைப்பகுதியின் பனிமூட்டம் கிழக்கே எழுந்தது. வெஸூவியஸ் எரிமலைக்கு மேலே சாம்பல் கலந்த புகைப்படலம் தெரிந்தது.

மேடைமீது நின்ற காப்டன் யான்ஸன் தொலை நோக்கியைப் பிடித்திருந்த தன் கையைத் தாழ்த்திய போது, பரவசமுற்றுத் தன்னை அவன் நோக்குவதாக ஸோயா உணர்ந்தாள். சாரக்கம்பியின் அருகே, பால் நீல ஆழிக்கு மேலே நிற்கும் லாமோல் சீமாட்டியால் வியந்து நோக்கப்படுவதற்காகவே வானிலும் நீரிலும் அற்புதங்கள் படைக்கப்பெற்றிருக்கும் போது அவளைக் கூர்ந்து பாராது அவனால் வேறு என்ன செய்யக் கூடும்?

''இங்கே வாங்க, யான்ஸன்.''

அவன் வெப்பமான மேல் தளத்தில் மிருதுவாக, அகல அடிவைத்து நடந்தான்.

''யான்ஸன், நீங்க என்னைப் பைத்தியம் என்று எண்ணலே?''

''நான் அப்படிக் கருதலே. நீங்க என்ன செய்ய உத்தரவிட்டாலும் நான் அவ்வாறு எண்ண மாட்டேன்.''

''நன்றி. தெய்வீக ஸோயாவின் பக்தர்கள் வரிசையின் பெருந் தலைவராக உங்களை நியமிக்கிறேன்.''

யான்ஸனின் இளம்பொன் நிறக் கண்ணிமைகள் இமைத்தன. பிறகு கையுயர்த்தி வணக்கம் செலுத்தி பின் தாழ்த்தி மீண்டும் இமைத்தான். ஸோயா சிரித்தாள், அவனது உதடுகளிலும் சிறு முறுவல் தவழ்ந்தது.

''யான்ஸன், மிக அசாத்தியமான கனவுகளும் உண்மையாகும் வாய்ப்பு ஒன்று இருக்கு... இது

போன்ற வெப்பமான பிற்பகலில் ஒரு பெண் எண்ணக்கூடிய ஒவ்வொன்றும் உண்மையாகலாம். ஆனா அதன் பொருள் போராட்டம்...''

''ஆமாம்,'' என்று சுருக்கமான விடைதந்தான் யான்ஸன்.

'' 'அரிஸோனா' ஒரு மணிக்கு எத்தனை கடல் மைல்கள் செல்லக்கூடும்?''

''நாற்பது வரை.''

''நடுக்கடலில் எத்தகைய கலங்கள் இதனை முந்தக்கூடும்?''

''மிகச் சிலதான்.''

''நெடுந்தொலைவுக்கு நாம் துரத்தப்படுவதைச் சமாளிக்க வேண்டியிருக்கும்.''

''எரிபொருள் இருப்பு முழுவதையும் நான் கொண்டுவந்து படகில் சேர்த்துவைக்க நீங்க விரும்புறீங்களா?''

''ஆமாம். அத்துடன் டப்பியிட்ட உணவுப்பொருள், நன்னீர், ஷாம்பேயின்... காப்டன் யான்ஸன், நாம் மிக ஆபத்தான முயற்சியில் போய்க் கொண்டிருக்கிறோம்.''

''ஆமாம், சீமாட்டி.''

''ஆனா வெற்றி பற்றி நான் உறுதியா இருக்கிறேன், கேட்கிறீங்களா?''

கப்பலின் மணி ஒரு முறை அடித்தது. வானொலி அறைக்கு ஸோயா சென்றாள். மேசைக்கருகில் அமர்ந்து ஒலிவாங்கியின் ஸ்விட்சைத் திருப்பினாள். முதலில் எங்கிருந்தோ 'பாக்ஸ்-ட்ராட்' நடன சுரங்கள் சில கேட்டன.

புருவங்களை நெரித்துக்கொண்டு காலமானியை நோக்கினாள். காரினின் குரல் கேட்கவில்லை. விரல்களில் நடுக்கத்தை மட்டுப்படுத்த முயன்றுகொண்டே மீண்டும் ஸ்விட்சைத் திருப்பினாள்.

...இனந்தெரியாத, தணிந்த குரலொன்று அவளது காதினுள் ருஷ்ய மொழியில் பேசிற்று:

''...யின் உயிரை நீங்கள் மதித்தால் வெள்ளிக்கிழமை நேப்பிள்ஸில் இறங்கவும்... 'ஸ்ப்ளெண்டிட்'

ஓட்டலில் சனி நண்பகல் வரைச் செய்தியை எதிர் பார்க்கவும்...''

நானூற்று இருபத்தொரு மீட்டர் ஒலியலையில் வந்த செய்தியின் முடிவு அது தான். அதே அலை நீளத்தைத்தான் காரின் எல்லா நேரமும் பயன் படுத்தி வந்தான்.

54

தொடர்ந்து மூன்றாவது இரவிலும் ஷெல்காவினது அறை சன்னலை மூட கார்மெலீட் கன்னி மறந்துவிட் டாள். ஒவ்வொரு மாலையிலும் இம்மறதியை அவ ளுக்கு அவன் சுட்டிக்காட்டினான். சன்னலின் இரு பகுதிகளையும் இணைக்கும் தாழ்ப்பாள் சரியான இடத்தில் பொருத்தப்படுகிறதா எனக் கவனமாக நோக்கினான்.

எழுந்து சன்னலுக்கு அருகில் அமர்ந்து வெளியே பார்ப்பதற்குத் தேவையான பலத்தைப் பெறுமளவு இந்த மூன்று வாரங்களில் ஷெல்கா தேறியிருந்தான். பிளேன் மரங்களின் இலையடர்ந்த கிளைகளையும் புல்தரையின் நடுவில் நீர்த் தூவானத்திற்கு மேல் வானவில்லையும் கரும்பறவைகளையும் பார்க்க முடிந் தது.

அந்த இடத்திலிருந்து நோக்கினால் திறப்பற்ற செங்கற் சுவரால் சூழப்பெற்ற மருத்துவமனையின் தோட்டம் விரிந்து தோன்றும். பதினெட்டாம் நூற் றாண்டிலே அக்கட்டடம், புரட்சியின் போது அழிக் கப்பட்ட கிறிஸ்துவத் துறவிமடத்துக்குச் சொந்த மாக இருந்தது. கிறிஸ்துவத் துறவிகள் பிறர் தம்மை ஆவலோடு நோக்குவதை விரும்புவதில்லையாத லால், சுவர் உயர்ந்ததாக இருந்தது. உடைந்த கண் ணாடித் துண்டுகள் அதன் உச்சியில் வரிசையாகப் பதிக்கப்பெற்றிருந்தன.

வெளிப்புறத்தில் ஏணி வைத்தால் மட்டுமே அதன் மீது ஏறுவது சாத்தியமாக இருந்தது. மருத் துவமனையைச் சுற்றி இருந்த குறுகிய தெருக்கள் அமைதியாகவும் வெறுமையாகவும் இருந்தன.

ஆனால் தெருவிளக்குகள் தெளிவான ஒளியுடன் எரிந்ததாலும் போலீஸார் அடிக்கடி சுற்றுவதால் அவர்களது காலடி ஓசை அமைதியைக் குலைத்ததாலும் ஏணியைப் பயன்படுத்துவது என்ற கேள்விக்கே இடமில்லை.

உடைந்த கண்ணாடித் துண்டுகள் இல்லையாயின், சுறுசுறுப்புள்ள ஒருவன் ஏணியில்லாமலே அச்சுவரைத் தாண்டிவிடக் கூடும் என்பது தெளிவு. ஒவ்வொரு நாள் காலையிலும் ஷெல்கா திரையின் பின் இருந்துகொண்டே ஒரு செங்கல் விடாமல் சுவர் முழுவதையும் ஆராய்ந்தான். அந்தப் பக்கத்திலிருந்து மட்டும்தான் ஆபத்து அச்சுறுத்தியது; ரோல்லிங்கின் ஆள் மருத்துவமனையின் வழியாக நுழைந்து வருவதால் உண்டாகக்கூடிய தொல்லையை மேற்கொள்வது அரிது தான். எனினும் அண்மையிலோ அன்றி பிறகோ, ஏதேனும் ஒரு வழியில் கொலைகாரன் வருவான் என்பதில் ஷெல்காவுக்கு ஐயமே இல்லை.

மருத்துவமனையிலிருந்து வெளியேறத் தேவையான ஒரு பரிசோதனைக்காக அவன் காத்திருந்தான். வாரத்தில் ஐந்து முறை வழக்கமாக மருத்துவர் வந்தார். ஆனால் இப்போது அவர் நோயுற்றிருந்தார் என்று தோன்றியது. தலைமை மருத்துவரின் ஒப்புதலின்றி அவன் வெளியேற அநுமதிக்கப்படமாட்டான் என ஷெல்காவுக்கு அறிவிக்கப்பட்டது. எதிர்க்கக் கூட அவன் முயலவில்லை. தனக்கு உணவு அனுப்புமாறு வேண்டி சோவியத் தூதுவராலயத்திற்குத் தகவல் அனுப்பினான்; மருத்துவமனை சூப்பை அலம்பு தொட்டியில் ஊற்றவும் ரொட்டியைக் கரும்பறவைகளுக்கு ஊட்டவும் செய்தான்.

ஒரே ஒரு சாட்சியான தன்னைக் கட்டாயம் ரோல்லிங் தொலைத்தாக வேண்டும் என்பதை ஷெல்கா உணர்ந்தான். அவன் சிறிதுகூடத் தூங்கவில்லை எனச் சொல்லுமளவுக்கு விழிப்புணர்ச்சியுடன் இருந்தான். கார்மெவிட் கன்னி அவனுக்குக் கொடுத்த பத்திரிகைகளினின்றும் பல துண்டுகள்

கத்தரித்து எடுத்து நாள் முழுதும் அவற்றின் கருத்துக்களை ஆழ்ந்து கற்று வந்தான். மருத்துவ மனைக்கு ஹ்றலீனோவ் வருதலைத் தடுத்திட்டான். (ஜெர்மனியில், ரைன் பகுதியில் இருந்த வோல்ஃப் ஜெர்மானிய அனிலைன் கம்பெனியுடன் ரோல்லிங் செய்யும் போராட்டம் பற்றிய விபரங்களைச் சேர்த்து வந்தான்.)

மறுநாள் காலை வழக்கம்போல சன்னலருகே சென்ற ஷெல்கா தோட்டத்தைச் சுற்றிப் பார்த்த போது உடனே திரைக்குப்பின்னே நகர்ந்தான். தான் கண்டதைப் பற்றி மகிழவும் செய்தான். கடைசியில்! தோட்டத்தின் வலப்பக்கத்தில் லிண்டன் மரத்தின் பின்னே பாதி மறைந்த நிலையில் தோட்டக்காரனின் ஏணி சுவரின் மீது வைக்கப்பட்டிருந்தது. உடைந்த கண்ணாடிகளின் வரிசைக்கு மேல் ஏறத்தாழ ஒரு கஜத்திற்கு ஏணியின் மேல் நுனி நீட்டிக் கொண்டிருந்தது.

''பன்றிப்பயல்கள், தந்திரசாலிகள்!'' என்றான் ஷெல்கா.

காத்திருப்பதைத் தவிர வேறு செய்வதற்கு ஒன்றும் இல்லை. எல்லாவற்றையும் எண்ணிப்பார்த்தான். அவனது வலக்கை கட்டவிழ்க்கப்பட்டிருந்தாலும் இன்னும் பலவீனமாகவே இருந்தது. அவனது இடக்கை இன்னும் பிளாஸ்டர் கட்டில் இருந்தது. நர்ஸ் அவனது உடலுடன் சேர்த்து அதனை இறுகப் பிணித்திருந்தாள். பிளாஸ்டர் கட்டுடன் இருந்த இடக்கையின் எடை சுமார் பதினைந்து ராத்தல்கள் இருந்தது, அதுவே அவனுக்கு ஒரே தற்காப்புக் கருவியாக இருந்தது.

நான்காவது இரவு மீண்டும் கார்மெலீட் கன்னி சன்னலை மூட மறந்துவிட்டாள். இத்தடவை ஷெல்கா எதிர்க்கவில்லை. ஒன்பது மணிக்குத் தூங்குவது போலப் பாசாங்கு செய்தான். மருத்துவமனையின் இரண்டு மாடிகளிலும் சன்னல் கதவுகள் மூடப்படுவது கேட்டது. ஆனால் அவனது சன்னல் அகலத் திறந்து இருந்தது. விளக்கு அணைக்கப்பட்டவுடன் படுக்கைக்கு வெளியே குதித்து, தனது பற்களின்

உதவியாலும் பலவீனமான வலக்கையின் உதவியாலும் தனது இடக்கையைப் பிடித்திருக்கும் கட்டை அவிழ்க்கத் தொடங்கினான்.

அசையாது நின்று மூச்சை இழுத்துப் பிடித்து உற்றுக் கேட்டான். கடைசியில் கை விடுபட்டுத் தொங்கியது. அதனைப் பாதி நிமிர்த்த முடியும். வெளியே தோட்டத்திற்குள் பார்த்தபோது லிண்டன் மரத்திற்குப் பின்னே சுவரின்மீது சாய்த்து இன்னும் நிறுத்தப்பட்டிருந்த ஏணியைத் தெருவிளக்கின் வெளிச்சத்தில் கண்டான். போர்வையைச் சுருட்டி விரிப்புக்கு அடியில் தள்ளி, பாதி வெளிச்சத்தில் பார்த்தால் ஒரு மனிதன் அங்கே படுத்திருப்பது போலத் தோன்றும்படி செய்தான்.

வெளியே அமைதியாயிருந்தது. இலைகளினின்றும் நீர் சொட்டும் ஓசைதான் கேட்டது. பாரிசுக்குமேல் இருந்த மேகங்களில் மங்கலான ஊதா வெளிச்சம் பாய்ந்து ஒளிர்ந்தது. சாலைகளின் ஓசை அங்கே வரவில்லை. பிளேன் மரங்களின் கரிய கிளைகள் அசையாது தொங்கின.

அருகே ஒரு கார் என்ஜின் உறுமியது. ஷெல்கா தனது செவிகளைத் தீட்டிக்கொண்டு கேட்டான். பிளேன் மரக்கிளையில் உறங்கும் பறவையின் நெஞ்சுத்துடிப்பைக்கூடத் தன்னால் கேட்கக்கூடும் என அவனுக்குத் தோன்றிற்று. நெடுநேரம் ஆகியிருக்க வேண்டும். சுண்ணாம்பு மீது மரத்தால் தேய்ப்பது போன்று சுரண்டலும் சரசரப்புமான ஒலி தோட்டத்தினின்றும் வந்தது.

திரைக்குப் பின்னே சுவரோடு ஒட்டி ஷெல்கா நின்றான். பிளாஸ்டர் கட்டில் இருந்த கையைத் தாழ்த்தினான். ''யார்? அது யார்? ரோல்லிங் தானே வந்திருக்க முடியாதா?'' என வியந்தான்.

இலைகள் சரசரத்தன, கரும்பறவை பயந்து கீச்சிட்டது. நுழைபவனின் நிழல் விழக்கூடிய நிலவு வெளிச்சம் படும் பலகைத் தரையைக் கூர்ந்து நோக்கினான் ஷெல்கா.

''நிச்சயம் அவன் சுட மாட்டான்,'' என்று நினைத்தான் ஷெல்கா. ''பாஸ்ஜீன் நச்சுப்புகை

போன்ற ஏதோ ஓர் அருவருப்பானதைத்தான் நான் எதிர்பார்க்க வேண்டும்...'' நன்றாக அழுத்தி இழுத்துவிடப்பெற்ற தொப்பியுடைய ஒரு தலையின் நிழல் நிலவுபடும் தரையின் குறுக்கே நகரத் தொடங்கிற்று. தான் கொடுக்கும் அடிக்குக் கடுமையைத் தருவதற்காக ஷெல்கா கையைப் பின்னிழுத்தான். நிழல் தோள்புறம் வரை நீண்டது. அகல விரித்த விரல்கள் உயர்த்தியது.

''ஷெல்கா, தோழர் ஷெல்கா,'' ருஷ்யனில் நிழல் கிசுகிசுத்தது, ''நான் தான், பயப்பட வேண்டாம்...''

அச்சொற்களையும், அக்குரலையும் தவிர்த்து ஏறத்தாழ எதையும் ஷெல்கா எதிர்நோக்கியிருந்தான். தன்னையும் அறியாமல் கூச்சலிட்டான். தன்னைத்தானே கண்டுபிடிக்க இடமளித்துவிட்டான். சன்னல் தட்டினை ஒரே தாவில் தாண்டி அம்மனிதன் உடனே அறையினுள் குதித்தான். தன்னைத் தற்காத்துக்கொள்வதற்காகத் தன் முன்னே இரு கைகளையும் நீட்டினான். அதுதான் காரின்.

''நீங்க ஒரு தாக்குதலை எதிர்பார்த்துக் கொண்டிருந்தீங்க. நான் அப்படித்தான் நினைத்தேன்,'' என்று அவசரமாகச் சொன்னான். ''இன்றிரவு அவர்கள் உங்களைக் கொல்லத் திட்டமிட்டுக் கொண்டிருந்தார்கள். அது எனக்குப் பொருத்தமாகப்படலே. நான் எத்தனை தொல்லையில் இருக்கிறேன் என்பது சாத்தானுக்குத் தெரியும். ஆனாலும் நான் உங்களைக் காப்பற்றணும். வாங்க, என்னிடம் கார் இருக்கு.''

சுவரினின்றும் ஷெல்கா அப்பால் நகர்ந்தான்.

ஷெல்காவினுடைய உயர்த்தப்பட்ட பிளாஸ்டர் கட்டில் இருந்த கை தாக்கத் தயாரானதைக் கண்டதும் காரினின் பற்கள் முறுவலுடன் பளிச்சிட்டன.

''கேளுங்க, ஷெல்கா, கடவுள் சத்தியமாக நான் குற்றம் சொல்லப்பட்டவன் அன்று. லெனின்கிராடில் செய்துகொண்ட நமது ஒப்பந்தம் உங்களுக்கு நினைவிருக்கா? நான் நேர்மையா விளையாடு

கிறேன். ஃபான்டென்ப்ளோவில் நடந்த விரும்பத்தகாத நிகழ்ச்சி முழுவதும் அந்தப் பன்றி ரோல்லிங்கினால் வந்தது. என்னை நீங்க நம்பலாம்—கூட வாங்க, ஒவ்வொரு விநாடியும் பெரு மதிப்புள்ளது...''

கடைசியாக ஷெல்கா பேசினான்:

''அது சரி, நீங்க என்னை வெளியே கூட்டிப் போவீங்க. அதன் பிறகு என்ன?''

''உங்களை ஒளித்துவைப்பேன்... சிறிது காலத்திற்குத் தான், கவலைப்படாதீங்க. ரோல்லிங்கிடமிருந்து நான் பாதியைப் பெறுகிற வரை... பத்திரிகைகளைப் படிக்கிறீங்களா? ரோல்லிங்கிற்கு நல்ல காலம்தான், ஆனால் அவனால் நேர்மையாக விளையாட முடியாது. எவ்வளவு வேண்டும் உங்களுக்கு, ஷெல்கா? நீங்க விரும்புற எத்தொகையையும் சொல்லுங்க, பத்து, இருபது, ஐம்பது மில்லியன்? நான் என் கைப்பட எழுதித் தருகிறேன்...''

காரின் மெல்லத்தான் பேசினான், ஆனால் ஜன்னி வேகத்தில் பேசுவது போன்று பரபரப்பு இருந்தது; முழுநேரம் அவன் முகம் சுளித்துக்கொண்டே இருந்தது.

''முட்டாளாக இருக்க வேண்டாம், ஷெல்கா. கொள்கைப்பற்றுள்ளவராக நடக்க முயற்சிக்கிறீர்களா, அல்லது வேறென்ன?.. ரோல்லிங்குக்கு எதிராக என்னுடன் சேர்ந்து வேலைசெய்ய உங்களுக்கு ஒரு வாய்ப்பைத் தருகிறேன். சரியா? கூட வாங்க...''

ஷெல்கா உறுதியுடன் தலையசைத்தான்:

''நான் உங்களோட போக விரும்பவில்லே.''

''நீங்க வராவிட்டால் அவர்கள் உங்களைக் கொன்னுறுவாங்க.''

''அதையும்தான் பார்ப்போம்.''

''மருத்துவப் பெண்கள், இரவுக்காவல்காரர்கள், நிர்வாகம் முழுதும் ரோல்லிங்கினால் விலைக்கு வாங்கப்பட்டுள்ளது. அவர்கள் உங்க கழுத்தை நெறிச்சுறுவாங்க. எனக்குத் தெரியும்... காலைவரை நீங்க உயிரோட இருக்க மாட்டீங்க... உங்க தூதுவராலயத்திற்கு எச்சரித்து விட்டீர்கள், இல்லை

யா? நன்று, மிக நன்று... தூதுவர் விளக்கம் கோருவார். அதிகமாய்ப் போனால் பிரெஞ்சு அரசு மன்னிப்புக் கோரும்... ஆனால் அது உங்களுக்கு எந்த நன்மையும் செய்யாது. ரோல்லிங் சாட்சியை ஒழித்துக்கட்டணும்... சோவியத் தூதுவராலயத்தின் முன் வாயிலைக்கூட நீங்க தாண்டக்கூட விட மாட்டான் ரோல்லிங்...''

''நான் போக மாட்டேன் என்று உங்களிடம் சொல்லிவிட்டேன். நான் விரும்பலே...''

காரின் பெருமூச்சு விட்டு சன்னலின் பக்கம் நோக்கினான்.

''நல்லது. அப்படியானால் உங்க விருப்பமின்றியே நான் உங்களை எடுத்துப்போவேன்...''

அவன் பின்னே அடியெடுத்துவைத்து மேற்கோட்டின் பையினுள் தன் கையை நுழைத்தான்.

''எப்படி—என் விருப்பமின்றியே?''

''ஆமாம், இப்படித்தான்...''

காரின் தனது பையினின்றும் புகையாவித் தடுப்பு முகமூடி ஒன்றை வெளியிழுத்துப் பரபரப்புடன் தன் முகத்தை அதனால் மூடிக்கொண்டான். ஷெல்கா கத்துவதற்கு முன்னேயே ஏதோ எண்ணெய் போன்ற பொருள் அவன் முகத்தில் அடித்தது... ஷெல்கா பார்த்ததெல்லாம் ஒரு ரப்பர் உருண்டையைக் காரின் கசக்கிக் கொண்டிருந்ததைத்தான்... மூச்சுத் திணறவைக்கும் ஓர் இனிப்பான மருந்தை ஷெல்கா விழுங்கினான்...

55

''ஏதேனும் செய்தியுண்டோ?''

''ஆமாம். வணக்கம், வோல்ஃப்.''

''1918இல் இருந்தது போன்று அவ்வளவு பசியுடன் ரயில் நிலையத்திலிருந்து நேரடியாக வந்துள்ளேன்.''

''நீங்க மகிழ்ச்சியோட காணப்படுறீங்க, வோல்ஃப். ஏதேனும் கண்டுபிடித்தீர்களா?''

''ஒரு சிலவற்றைக் கண்டுபிடித்திருக்கிறேன்... நாம் இங்கே பேசப் போகிறோமா?''

''நீங்க விரும்பினா, விரைவா முடிக்கணும்.''

குதிரைமீது அமர்ந்துள்ள நான்காம் ஹென்ரி சிலையின் பீடத்தருகே ஒரு கல்லிருக்கையின் மேல் ஹ்ஸீனோவ் அருகில் வோல்ஃப் அமர்ந்தான். அவர்களது முதுகுகள் 'கொன்ஸ்யேர்ஜெரீ'யின்* கருங் கோபுரங்கள் பக்கம் இருந்தன. அவர்களுக்குக் கீழே, ஸீத்தே திவு ஒரு கூரிய முனையாக முடியும் இடத்தில், அழுகுணி வில்லோ மரம் நீரை நோக்கி வளைந்திருந்தது. இங்குத்தான் பல நூற்றாண்டுகளுக்கு முன் டெம்ப்ளார் அமைப்பைச்** சேர்ந்த கிறிஸ்துவப் போர்வீரர்கள் நெருப்பில் துடித்து நெளிந்தனர். தொலைவில், ஆற்றில் தெரிந்த டஜன் கணக்கான பாலங்களின் நிழல்களுக்கு அப்பால், செம்மஞ்சள் வண்ணப் புழுதி மேகத்தில் சூரியன் மறைந்தது. கரைநெடுகிலும் மணல் நிரப்பிய படகுகளிலும் மீன்பிடிக்கும் தூண்டிற்கம்புகளை வைத்துக்கொண்டு பிரெஞ்சுக்காரர்கள், பணவீக்கத்தாலும், ரோல்லிங்கினாலும், உலகப் போரினாலும் பாழாக்கப்பட்ட நல்ல பூர்ஷ்வாக்கள் அமர்ந்திருந்தனர். இடக் கரையில், கருங்கல்லாலான கைப்பிடிச்சுவரின் மேல் அயல் விவகார அமைச்சகம் வரையிலும், பழைய புத்தக வியாபாரிகள் இந்நகரில் ஒருவருக்கும் இனி தேவையற்ற புத்தகங்களின் அருகே, மாலை வெயிலில் வெட்டிப் பொழுதுபோக்கிக் கொண்டிருந்தார்கள்.

இதுதான் இறுதியை விரைவாக அடைந்துகொண்டுவந்த பழைய பாரிஸ் நகரம். கரையிலேயே, புத்தகங்களைச் சுற்றியும், பறவைக் கூண்டுகளைச்

---

* கொன்ஸ்யேர்ஜெரீ—பாரிஸ் நகரிலுள்ள மிகப் பெரிய சிறைச்சாலைகளில் ஒன்று. (ப-ர்.)

** டெம்ப்ளார் அமைப்பு—சிலுவைப் போர்களின் காலத்தில் 1119இல் ஏற்படுத்தப்பட்ட மத வீரர் அமைப்பு. 1307ஆம் ஆண்டில் பிரான்சிலிருந்த டெம்ப்ளார்கள் அனைவரும் எரிக்கப்பட்டார்கள். (ப-ர்.)

சுற்றியும், சோர்ந்த மீன்பிடிப்போரைச் சுற்றியும் இமைதடித்த கண்களும் வாய்களை மூடிய மீசைகளும் கொண்ட முதிய மனிதர்கள் நீண்ட மேலங்கிகளும், பழைய வைக்கோல் தொப்பிகளும் அணிந்த வாறு வளைய வந்தனர்... ஒருகாலத்தில் இது அவர்களுடைய நகரமாக இருந்தது... அதோ அங்கே, 'கொன்ஸ்யேர்ஜெரீ'யிலே வெட்டுமிடத்திற்கு இழுத்துச்செல்லப்படும் எருதைப் போன்று டான்டன்* பேரொலி செய்துள்ளார். அதோ, வலப்புறத்தில், லூவரின் ஸ்லேட்டுக் கூரைகளுக்கு அப்பால், அந்தி நேரத்தில் அங்கே ஜெனரல் காலிபேயின்** தெறிகுண்டுகள் ரிவோலி வீதி வழியே சீழ்க்கையொலியுடன் பாய்ந்த போது கொடும் செயல்கள் நடைபெற்றுள்ளன. பிரான்சில்தான் எவ்வளவு தங்கம் இருந்தது! இங்குள்ள ஒவ்வொரு கல்லும், கேட்கும் திறமை உள்ளவனுக்கு பண்டைய பெருமையின் கதையைச் சொல்லும். ஆனால் இப்போதோ—எப்படி என்று சைத்தானுக்குக்கூடத் தெரியாது—ரோல்லிங் எனும் பெயருடைய அயல் நாட்டு பூதம் நகரத்தின் தலைவனாகி விட்டான். ஆற்றில் தூண்டிலைப் போட்டுவிட்டுத் தலை கவிழ்ந்து அமர்ந்திருப்பதைத் தவிர வேறு செய்வதற்கு நல்ல பூர்ஷ்வாவுக்கு ஒன்றும் இல்லை... ஆகா...கா...கா!

காரமான புகையிலை திணிக்கப்பட்ட சுங்கானை வோல்ஃப் பற்றவைத்தான்.

---

* டான்டன் (1759-1794)—18ஆம் நூற்றாண்டின் இறுதியில் நடந்த பிரெஞ்சு பூர்ஷ்வாப் புரட்சியின் பிரபல தலைவர்களில் ஒருவர். புரட்சி முடிவின் போது டான்டன் பிற்போக்காளர் தரப்பில் சாய்ந்தார். புரட்சி நீதிமன்றத்தின் தீர்ப்புப்படி 1794இல் மரணதண்டனை விதிக்கப்பெற்றார். (ப-ர்.)

** காலிபே (1830-1905)—பிரெஞ்சு ஜெனரல், 1871ஆம் ஆண்டில் பாரிசில் ஏற்பட்ட முதலாவது பாட்டாளி வர்க்க அரசாங்கமாகிய பாரிஸ் கம்யூனை கொடூரமான அடக்கியதில் நன்கு அறிமுகமானவர். (ப-ர்.)

''நிலவரம் இதுதான்,'' என்று தொடங்கினான். ''ஜெர்மானிய அனிலைன் கம்பெனி ஒன்றுதான் அமெரிக்கரோடு எந்த உடன்பாட்டிற்கும் வராமலிருக்கிறது. இருபத்தெட்டு மில்லியன் மார்க்கு அக் கம்பெனிக்கு உதவித்தொகையாக அரசு கொடுத்திருக்கிறது. தற்போது ரோல்லிங்கின் எல்லா முயற்சிகளும் ஜெர்மானிய அனிலைன் கம்பெனியைக் கவிழ்ப்பதற்கே ஒருமுகப்படுத்தப்பட்டுள்ளன.''

''விலைகளின் இறக்கத்தைக் கொண்டு சூதாடிக் கொண்டிருக்கிறானா?'' என வினவினான் ஹ்லீனோவ்.

''இம்மாதம் இருபத்தெட்டாம் நாள் அனிலைன் ஸ்டாக்குகளைப் பெரும் தொகைக்கு விற்கிறான்.''

''அது மிக முக்கியமான செய்தி, வோல்ஃப்.''

''ஆம், நாம் சரியான தடத்தில் செல்வதாக நினைக்கிறேன். தன்னுடைய ஆட்டத்தைப் பற்றி ரோல்லிங் உறுதியுடன் இருப்பது போலத் தோன்றுகிறது. இருப்பினும் இதுவரை பங்குகளின் விலை ஒரு காசுக்கூடக் குறையவில்லை, இன்று இருபதாம் தேதி ஆகிவிட்டது... அவன் எதன் மீது நம்பிக்கை வைத்திருக்கிறான் என்று உங்களுக்குப் புரியுதா?''

'' ஆகவே, அவர்களிடம் எல்லாம் தயாராக இருக்கணும்?''

''அந்தக் கருவி இதற்குள் நிறுவப்பட்டிருக்கணும் என நினைக்கிறேன்.''

''அனிலைன் கம்பெனியின் தொழிற்சாலைகள் எங்குள்ளன?''

''ரைன் பிரதேசத்தில், 'க'வுக்கு அருகில். அக் கம்பெனியை ரோல்லிங் சீர்குலைத்து விட்டால், ஐரோப்பா முழுமைக்கும் வேதியல் தொழிலில் அவன் எசமானனாக இருப்பான். அத்தகைய விபத்து வருவதற்கு நாம் அநுமதிக்கக் கூடாது. ஜெர்மானிய அனிலைன் கம்பெனியை நாம் காப்பாற்ற வேண்டும். (ஹ்லீனோவ் தோள்களைக் குலுக்கிக்கொண்டான், ஆனால் ஒன்றும் கூறவில்லை.) எது நிகழ வேண்டுமோ அது நிகழ்ந்தே

தீரும் என்பது எனக்குப் புரியுது. அமெரிக்காவின் தாக்குதலை நீங்களும் நானும் மட்டிலுமே தடுக்க முடியாது. இருந்தபோதிலும், சில நேரங்களில் வரலாறு எதிர்பாராத தந்திரங்களைச் செய்கிறது.''

''உதாரணமாக, புரட்சியைப் போன்றா?''

''இருக்கலாம்.''

வியப்பினைப் போன்ற ஏதோ ஓர் உணர்ச்சியுடன் ஹ்லீனோவ் அவனை நோக்கினான். வோல்ஃபின் கண்கள் வட்டமாகவும் மஞ்சளாகவும் வெறுப்பு நிறைந்தவையாகவும் இருந்தன.

''வோல்ஃப், ஐரோப்பாவைக் காக்க பூர்ஷ்வாக்கள் ஒரு விரலைக்கூட அசைக்க மாட்டார்கள்.''

''எனக்குத் தெரியும்.''

''உங்களுக்கா?''

''இந்தப் பயணத்தின் போது நல்லாச் சுற்றிப் பார்த்திருக்கேன்... பூர்ஷ்வாக்கள்—பிரெஞ்சுக்காரர்கள், ஜெர்மானியர்கள், ஆங்கிலேயர்கள் அல்லது இத்தாலியர்கள் யாராக இருப்பினும்—குற்ற முறையில் குருட்டுத்தனமாக, நெஞ்சீரமின்றி பழைய உலகத்தை விற்றுக்கொண்டிருக்கிறார்கள். அங்கே தான் நமது பண்பாடு முடியுது, ஏலத்தில், சுத்தியலுக்குக் கீழே!''

வோல்ஃபின் முகம் சிவந்தது:

''அதிகாரிகளிடம் விண்ணப்பித்தேன். வரும் ஆபத்தைக் குறித்துக் காட்டினேன். காரினைத் தேடுறதுக்கு உதவி செய்யுமாறு வேண்டினேன்... பயங்கரமான சொற்களை அவர்களிடம் பேசினேன்... என்னை நேருக்கு நேராக அவர்கள் கேலி செய்தார்கள். அவர்கள் பாழாய்ப் போக! நான் எதையும் கைவிட்டு விடும் மாதிரி அன்று.''

''வோல்ஃப், ரைன் பகுதியில் என்ன அறிந்து வந்தீர்கள்?''

''நான் அறிந்தது... ஜெர்மானிய அரசினால் மிகப் பெரிய அளவில் இராணுவ ஆர்டர்கள் அனிலைன் கம்பெனிக்குக் கொடுக்கப்பட்டுள்ளன.

அனிலைன் தொழிற்சாலைகளில் உற்பத்தி மிகவும் அபாயக் கட்டத்தை அடைந்திருக்கிறது. இக்கணத்தில் கிட்டத்தட்ட ஐந்நூறு டன் டெட்ரில் பண்படுத்தப்பட்டிருக்கிறது.''

ஹ்லீனோவ் தன் இருக்கையினின்றும் குதித்தெழுந்தான். அவன் சாய்ந்திருந்த கைத்தடி அவனது கனத்தால் வளைந்தது. மீண்டும் அமர்ந்தான்.

''அந்த நாசமாய்ப்போன தொழிற்சாலைகளிலிருந்தும் மிகத் தொலைவில் தொழிலாளர் இல்லங்கள் அமைப்பதன் தேவையைப் பற்றி ஒரு பத்திரிகையில் கட்டுரை ஒன்று வந்திருக்கு. அனிலைன் தொழிற்சாலையில் ஐம்பதனாயிரம் தொழிலாளர்களுக்கு மேல் அமர்த்தப்பட்டு இருக்காங்க... அக்கட்டுரையை வெளியிட்ட பத்திரிகை அபராதம் விதிக்கப்பட்டது... எல்லாம் ரோல்லிங்கின் கை வேலை.''

''வோல்ஃப், நாம் ஒரு நாளைக்கூட வீணாக்கக் கூடாது.''

''இன்னைக்கு பதினொரு மணி ரயிலுக்கு பயணச் சீட்டு பதிவு செய்திருக்கேன்.''

''நாம் 'க'வுக்குப் போறோமா?''

''காரினின் தடங்களைப் பின்பற்ற அந்த ஓரிடம்தான் இருக்குன்னு நினைக்கிறேன்.''

''நான் கண்டுபிடித்தவை என்னவென்று சற்றுப் பாருங்க.'' தன் சட்டைப் பையிலிருந்து வெளியே பத்திரிகை நறுக்குகளை ஹ்லீனோவ் எடுத்தான். ''இரண்டு நாளைக்கு முன்னாலே ஷெல்காவைப் பார்க்கப் போனேன்... தனது அனுமானம் பூராவையும் என்னிடம் சொன்னான்: ரோல்லிங்கும் காரினும் ஒருத்தருக்கொருத்தன் தொடர்பு வச்சிருக்கணும்...''

''அது சொல்லாமலே தெரியும்—ஒவ்வொரு நாளும்.''

''அஞ்சல் மூலமாகவா? தந்தி மூலமாகவா? என்ன நினைக்கிறீங்க?''

''அம்மாதிரி இல்லை. எழுத்தில் ஒன்னுமே இல்லை.''

''பிறகு வானொலியா?''

''ஐரோப்பா பூராக் கேட்கவா?.. இல்லை.''

''மூன்றாவது நபர் மூலமா?''

''இல்லை... நீங்க நினைக்கிறது எனக்குப் புரியுது. உங்களோட ஷெல்கா சுறுசுறுப்பானவன். அந்த நறுக்குகளைப் பார்க்கலாம்...''

தன் முழந்தாள்களின்மீது அவற்றை விரித்துப் போட்டு, சிவப்பில் அடிக்கோடு போடப்பட்டவற்றைப் படிக்கத் தொடங்கினான்:

''அனிலைன் மீது கவனத்தை எல்லாம் ஒருமுகப்படுத்தவும்.'' ''தொடக்கம்.'' ''இடம் கண்டு பிடிக்கப்பட்டது.''

''இடம் கண்டுபிடிக்கப்பட்டது,'' வோல்ஃப் கிசுகிசுத்தான். ''அது 'இ'லிருந்து வரும் பத்திரிகை. 'க'வுக்கு அருகிலுள்ள ஒரு சிறு நகரம்... 'கவலைப்படுகிறேன். நாள் குறிப்பிடுக.' 'உடன்படிக்கைக் கையெழுத்தானதிலிருந்து முப்பத்தைந்து நாள்கள் எண்ணுக...' இது அவர்களாகத்தான் இருக்கக்கூடும். ஃபான்டென்ப்ளோவில் கையெழுத்தான இரவு கடந்த மாதம் இருபத்து மூன்றாம் நாள். அதனுடன் முப்பத்தைந்து நாள்களைக் கூட்டுங்க. அது இருபத்தெட்டாகும். அனிலைன் பங்குகளின் விற்பனைக்கான நாள்...''

''இன்னும், வோல்ஃப், இன்னும் படிங்க. 'என்ன ஏற்பாடுகள் செய்துள்ளீர்கள்?' அது 'க'விலிருந்து காரின் வினா விடுக்கிறான். மறுநாள் பாரிஸ் பத்திரிகையில் ரோல்லிங்கின் விடையைக் காண்கிறோம்: 'உல்லாசப்படகு தயார். நாளைக்கு மறுநாள் வரும். வானொலி வழியாகத் தகவல்'. பிறகு நான்கு நாள்களுக்கு முன்பு ரோல்லிங் வினவுகிறான்: 'பார்க்கக் கூடிய வெளிச்சம் இருக்குமா?' காரின் விடை தருகிறான்: 'சுற்றுவட்டத்தில் ஒருவரும் இல்லை. தொலைவு மூன்று மைல்கள்.'''

''வேறு சொற்களில் கூறினால், குன்றின்மீது கருவி அமைக்கப்பட்டுள்ளது என்பதாகும்: மூன்று மைல் தொலைவிலிருந்து ஒளிக்கதிரை அனுப்புவது உயர்ந்த இடத்திலிருந்தே முடியும். கேளுங்க, ஹ்லீ

னோவ், நமக்குச் சிறிதுதான் நேரம் இருக்கு. தொழிற்சாலைகளை மையமாகக்கொண்டு சுற்றிலும் மூன்று மைல் தொலைவரையுள்ள பரப்பைத் தேடினால் ஏறத்தாழ இருபது மைல் சுற்றளவு ஆகும். இன்னும் ஏதேனும் குறிப்புகள் உண்டா?''

''இல்லை. ஷெல்காவுடன் தொலைபேசியில் பேச இப்போது தான் போய்க் கொண்டிருந்தேன். நேற்றைய, இன்றையப் பத்திரிகைகளின் நறுக்குகள் அவன் கட்டாயம் வைத்திருப்பான்.''

வோல்ஃப் எழுந்தான். அவனது சட்டைக்குள் தசைகள் விம்முவது வெளியே தெரிந்தது. இடக் கரையில் மிக அணித்தே இருந்த காப்பிக் கடையிலிருந்து தொலைபேசியில் பேசலாம் என ஹ்லினோவ் ஆலோசனை கூறினான். போரில் பறிகொடுத்தவர்களை நினைந்து தனிமையில் வடித்த கண்ணீரால் ஊறியிருந்தது போன்ற கறைபட்ட கோட்டும் தூசிபடித்த தொப்பியும் அணிந்த, கோழிக் குஞ்சுக் கழுத்தினனான ஒரு கிழவன், வோல்ஃப் பாலத்தின் வழியாகப் பாய்ந்த வேகத்தைக் கண்டு தலையை ஆட்டியவாறு, ஓடிச்செல்லும் அந்நியர்களை நீண்ட நேரம் நோக்கினான்:

''ஓ, இந்த அந்நியர்கள்... அவர்கள் பைகளில் பணம் இருக்கும்போது தங்கள் வீட்டிலிருப்பது போல எண்ணித் தள்ளுவதும் நெக்குவதும் ஓடுவதும் செய்யுறாங்க. ஆ, காட்டுமிராண்டிகள்!..''

காப்பிக்கடையில் துத்தநாக பார் அருகே வோல்ஃப் ஒரு குவளை சோடா குடித்தான். தொலைபேசியறையின் கண்ணாடிக் கதவினூடே ஹ்லினோவின் முதுகைப் பார்க்க முடிந்தது: தொலைபேசி மீது அவன் தாழ்ந்து சாய்ந்திருந்து, பிறகு நிமிர்ந்து, பேசுமிடத்தினின்றும் அகன்றான். அவனது முகம் அமைதியாக ஆனால் முகமூடி அணிந்தது போல வெளிறி இருந்தது.

''இரவில் ஷெல்கா மறைந்து விட்டதாக மருத்துவமனையிலில் என்னிடம் சொன்னாங்க. அவனைக் கண்டுபிடிக்கச் சகலமும் செய்யப்படுகிறது... அவன் கொல்லப்பட்டிருப்பான் என்று ஊகிக்கிறேன்.''

56

இரு நூற்றாண்டுகளாக எரிந்த கரியின் புகைபடிந்த ஒரு கணப்பில் சுள்ளிகள் சடசடத்தன; அதற்குமேல் கறிவடைக்கான பன்றித் தொடைக்கறியைத் தொங்க விடத் துருப்பிடித்த பெரிய கொக்கிகளும் அதன் பக்கங்களில் இரு கிறிஸ்தவ கற்துறவிகளும் இருந்தன; ஒரு சிலையின்மீது காரினின் வெள்ளைத் தொப்பியும், மற்றொன்றின் மீது இராணுவ அதிகாரியின் சிக்குப்பிடித்த குல்லாவும் தொங்கின. கணப்பு நெருப்பின் ஒளிமட்டும் பட்ட மேசையருகில் நால்வர் அமர்ந்து கொண்டிருந்தனர். அவர்களுக்கு முன் வைக்கோல் சுற்றிய போத்தல் ஒன்றும் ஒயின் நிறைந்த கிளாசுகள் சிலவும் இருந்தன.

அவர்களில் இருவர் நகரத்து உடைகளில் இருந்தனர்—அவர்களுள் ஒருவன் மேடிட்ட கன்ன எலும்புகளும், முள்ளம் பன்றி முட்கள் போன்ற தாழ்ந்த முடியும் கொண்டிருந்தான்; மற்றவனது நீண்ட முகத்தில் தீமைக்களை தாண்டவமாடியது. மூன்றாமவன், இந்தக் கூட்டம் யாருடைய சமையலறையில் நடந்துகொண்டிருந்ததோ அந்தப் பண்ணை வீட்டின் சொந்தக்காரனான ஜெனரல் ஸுபோத்தின்; அவன் அழுக்கேறிய சணல்நார்த் துணிச் சட்டையணிந்து அதன் கைகளை மேலே சுருட்டிவிட்டிருந்தான். அவனது ஒட்டமழித்த மண்டைத் தோல் அசைந்தது, கலைந்த மீசையுடனிருந்த அவனது கொழுத்த முகம் அவன் குடித்திருந்த ஒயினால் சிவந்திருந்தது.

நான்காமவனாகிய காரின் சுற்றுப் பயணி போல உடை அணிந்திருந்தான்; கிளாசின் விளிம்பை விரலால் அலட்சியமாக நெருடியவாறே பேசினான்:

''அதெல்லாம் முற்றிலும் நல்லாயிருக்கு... எனினும், என்னுடைய கைதி போல்ஷெவிக்காக இருந்தாலும், அவனுக்கு எந்த ஊறும் செய்யக் கூடாது என்பதை வற்புறுத்துறேன். நாள்தோறும் மூன்று வேளை உணவு, ஒயின், காய்கறிகள், பழங்கள்...

இன்னும் ஒரு வாரத்தில் அவனைக் கொண்டு போய் விடுவேன். இங்கிருந்து பெல்ஜிய எல்லை எவ்வளவு தொலைவு?''

''காரில் சென்றால் முக்கால் மணி நேரம்,'' என்று நீண்ட முகங்கொண்டவன் முன்னே குனிந்து சொன்னான்.

''இந்த விஷயம் பூராவற்றையும் ஓசைகாட்டாது வைத்திருக்கணும்... ஜெனரல் அவர்களே, சீமான்களே, சித்திரவதை செய்து கொல்லப்பட்ட சக்கரவர்த்தியின் நினைவுக்கு தன்னலமில்லாது, விசுவாசம் உள்ள அதிகாரிகளும் பிரபுவமிசத்தினருமான நீங்கள் (காரின் பல் இளித்தான்), உயர்ந்த, தூய சித்தாந்தக் கோட்பாடுகளின் பேரிலேயே செயலாற்றி வருகிறீர்கள் என்று எனக்குத் தெரியும். இல்லையெனில் உதவிபெற உங்களிடம் வந்திருக்க மாட்டேன்...''

''நாமெல்லாருமே சீமான்கள், இன்னும் மிகுதியாகச் சொல்ல என்ன இருக்கிறது?'' என்று தனது கரகரத்த குரலில் ஜெனரல் கூறினான். அவனது மண்டைத் தோல் அசைந்தது.

''நான் சொன்ன நிபந்தனைகளின் படி கைதி தங்குவதற்கும் சாப்பிடுவதற்கும் சேர்த்து நாளொன்றிற்கு ஆயிரம் ப்ராங்கு உங்களுக்குக் கொடுக்கிறேன். ஒப்புக்கொள்கிறீர்களா?''

ஜெனரல் தனது குருதிபாய்ந்த கண்களைக் கூட்டாளிகளின் பக்கம் திருப்பினான். துருத்திய கன்ன எலும்பன் தன் வெண் பற்களைக் காட்டினான், நீள் முகத்தன் கண்பார்வையைத் தாழ்த்தினான்.

''ஓ, சரி,'' என்றான் காரின், ''என்னை மன்னிக்கணும், மறந்தே போய்விட்டேன்... முன்பணம்...''

தனது கைத்துப்பாக்கி வைக்கும் கார்சட்டைப் பையிலிருந்து ஆயிரம் ப்ராங்கு நோட்டுக்களின் கற்றையை வெளியிழுத்து மேசைமீது ஒயின் குட்டையில் எறிந்தான்.

''தயவு செய்து, எடுத்துக்கொள்ளுங்கள்...''

ஜெனரல் திருப்தியுடன் செருமிவிட்டு, கற்றை

யைத் தன் பக்கம் இழுத்து, அதை மேலும் கீழும் பார்த்து, தனது தொந்தியின்மீது துடைத்துக் கொண்டு மயிரடர்ந்த மூக்குத் துளைகளால் செருமியவாறு எண்ணத் தொடங்கினான். அவனது கூட்டாளிகள் அவனருகே நகர்ந்துவந்தனர், அவர்களது கண்களை மிளிர்ந்துகொண்டே.

காரின் எழுந்து நின்று சொன்னான்:

''கைதியை உள்ளே கொண்டுவாருங்க.''

57

கைக்குட்டையால் ஷெல்காவின் கண்கள் மறைத்துக் கட்டப்பட்டிருந்தன. கார் ஓட்டுநரின் தோல் மேற்கோட்டு அவனது தோள்களின் மீது போடப்பட்டிருந்தது. கணப்பிலிருந்து வந்த வெப்பத்தை அவன் உணர்ந்தான்,—அவனது கால்கள் நடுங்கின. அவன் பக்கமாக ஒரு மணையை காரின் உடனடியாக நகர்த்த, ஷெல்கா அமர்ந்து பிளாஸ்டர் கட்டுடைய தனது கையை முழந்தாள்கள்மீது போட்டான்.

ஜெனரலும் இரு அதிகாரிகளும் அத்தனை வெறுப்புடன் அவனை விழித்து நோக்கி, ஒரு சிறு குறிப்பு காட்டினால் அல்லது ஒரு முறை இமைத்தால் கூடப் போதும், அவர்கள் உடனே அவன் மீது பாய்ந்து அவனைத் துண்டுகளாகப் பிய்த்திருப்பார்கள் என்பது தெளிவாகத் தெரிந்தது. எனினும் காரின் ஒரு குறிப்பும் காட்டவில்லை. ஷெல்காவின் முழந்தாளின் மீது தட்டி மகிழ்ச்சிமிக்க குரலில் சொன்னான்:

''இங்கு உங்களுக்கு ஒரு குறையும் இருக்காது. கண்ணியமான ஆட்களிடம் இருக்கிறீர்கள், அவர்களுக்குத் தேவைக்கு மேலே பணம் கொடுத்துள்ளேன். சில நாள்களில் உங்களை விடுவிப்பேன். தோழர் ஷெல்கா, தப்பவோ, தொல்லை விளைக்கவோ, போலீஸ் கவனத்தை ஈர்க்கவோ முயல மாட்டீர்கள் என்ற வாக்குறுதியை எனக்குத் தாங்க.''

மறுக்கும் முறையில் தனது குனிந்த தலையை ஷெல்கா ஆட்டினான். அவனருகே காரின் குனிந்தான்:

''தராவிட்டால், இங்கு வசதியாக நீங்க தங்க முடியும் என்று உறுதி தருவது எனக்குச் சிரமமாக இருக்கும். அந்த உறுதியை எனக்குத் தருவீங் களா?''

தாழ்ந்த குரலில் மெதுவாகப் பேசினான் ஷெல் கா:

''கம்யூனிஸ்ட் என்ற முறையில் உங்களுக்கு உறுதி தருகிறேன்... (இதைக் கேட்டதும் ஜெனர லின் மழிக்கப்பட்ட மண்டைத் தோல் அலைபோன்று காதுகள் பக்கமாகப் படர்ந்து சென்றது. அதிகாரி கள் ஒருவருக்கொருவர் பார்த்துக்கொண்டு குறும்பு டன் முறுவலித்தனர்.) எனக்குக் கிடைத்த முதல் வாய்ப்பிலேயே, உங்களைக் கொல்வேனென கம்யூ னிஸ்ட் என்ற முறையில் உறுதி தருகிறேன், காரின். அந்தக் கருவியை உங்களிடமிருந்து பிடுங்கி, மாஸ் கோவுக்குக் கொண்டுபோவேன் என உறுதி தரு கிறேன். இருபத்தெட்டாம் தேதியன்று உறுதி தரு கிறேன்...''

காரின் அவனை முடிக்க விடாது, குரல்வளை யைப் பிடித்தான்: ''நிறுத்து! முட்டாள்... பைத்தி யம்...''

சுற்றித் திரும்பி அதிகாரத் தோரணையில் அவன் சொன்னான்:

''கனவான்களே, இவன் ஆபத்தானவன் என்று உங்களை எச்சரிக்கிறேன். இவன் மனநோய் கொண் டவன்...''

''இவனை வைத்திருப்பதற்குச் சிறந்த இடம் ஒயின் வைத்திருக்கும் நிலவறைதான் என்று நான் சொன்னேனே,'' என்றது ஜெனரலினுடைய அடிக் குரல். ''கைதியை அப்பால் கூட்டிப் போங்க...''

காரின் தாடியை அசைத்து ஒரு குறிப்புச் செய்ய, அதிகாரிகளும் ஷெல்காவை வலிந்துபற்றி பக்கக் கதவு வழியாக ஒயின் வைக்கும் நிலவறைக்கு இழுத்துச் சென்றனர். ஓட்டுநரின் கையுறைகளை காரின் மாட்டிக்கொண்டான்.

''இருபத்தெட்டாம் தேதி நள்ளிரவு நான் இங் கிருப்பேன். முப்பதாம் தேதி, மேன்மை சான்றீர்,

தாங்கள் முயல் வளர்ப்புச் சோதனைகளுக்கு முடிவு கட்டிவிட்டு, அட்லாண்டிக் மாகடலைத் தாண்டிச் செல்லும் கப்பலில் ஒரு முதல் வகுப்புப் பயணச் சிட்டு வாங்கி, விரும்பினால் நியூயார்க் ஐந்தாவது அவென்யூவில் ஆடம்பரமான வாழ்க்கை வாழ லாம்.''

''இந்த வேசி மகனை அடையாளம்காட்ட ஏதே னும் ஒருவித ஆவணத்தை நீங்கள் விட்டுச்செல்ல னும்,'' என்றான் ஜெனரல்.

''இதோ, நீங்க விரும்புகின்ற ஏதாவது ஒரு பாஸ்போர்ட்டைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்க.''

நூலினால் ஒன்றாகச் சேர்த்துக் கட்டப்பட்ட ஆவணக் கட்டு ஒன்றை—ஃபான்டென்ப்ளோவில் ஷெல்காவிடமிருந்து அவன் எடுத்தவை—காரின் கோட்டுப் பையிலிருந்து வெளியே இழுத்தான். அவற்றை ஆராய்வதற்கு இதுவரை அவனுக்கு நேர மே கிடைக்கவில்லை.

''இவை எனக்காகத் தயாரித்த பாஸ்போர்ட்டு கள் போலத் தோன்றுகின்றன. என்ன நேர்த்தியான தீர்க்கதரிசனம்... மேன்மை சான்றீர், இதை எடுத்துக் கொள்ளுங்க.''

மேசையின்மேல் ஒரு பாஸ்போர்ட்டுக் கட்டை ாரின் எறிந்து, ஷெல்காவின் கைப்பையில் இருந்த ்றை ஆராயத் தொடங்கினான்—ஏதோ ஒன்று அவன் கவனத்தை ஈர்க்கவே விளக்கின் அருகில் நகர்ந்தான், புருவங்களை நெறித்தான்.

''சனியனே!'' ஷெல்கா இழுத்துச் செல்லப்பட்ட பக்கக் கதவுக்கு காரின் விரைந்து பாய்ந்தான்.

58

கல்தரையின்மீது ஷெல்கா ஒரு மெத்தையில் கிடந் தான். ஒரு சிறு எண்ணெய் விளக்கு நூலாம்படை யால் பின்னப்பட்ட வளைவுக்கூரையுடைய நில வறைக்கும் காலிப் பீப்பாய்களுக்கும் ஒளி தந்தது. ஷெல்காவைத் தேடி காரினின் கண்கள் சுற்றிப் பார்த்

தன; பிறகு அவனருகே சென்று உதட்டைக் கடித்துக் கொண்டு நின்றான்.

''நான் பொறுமை இழந்துவிட்டேன், ஷெல்கா. என்மீது கோபப்பட வேணாம். நாம் ஒத்துப்போக முடியும் என்று நான் இன்னமும் நினைக்கிறேன். நாம் உடன்பாடு செய்துகொள்ள முடியும். நீங்க விரும்பினா, இதுதான்.''

''முயன்று பாருங்க.''

பத்து நிமிடங்களுக்குமுன்பு பேசியதற்கு முற்றிலும் மாறான முறையில் காரின் உவப்பாகப் பேசினான், இப்பேச்சு ஷெல்காவை விழிப்படையச் செய்தது. ஆனால் அந்த இரவில் அவன் அநுபவித்த பரபரப்பு, அவன் தேகம் முழுவதிலும் இன்னும் கணகணத்துக் கொண்டிருந்த புகையாவியின் பின்விளைவுகள், புண்பட்ட கையின் நோவு ஆகியன அவன் விழிப்பைக் குறைத்தன. காரின் மெத்தை மீது அமர்ந்து ஒரு சிகரெட்டைப் பற்றவைத்தான். அவன் முகம் சிந்தனைமிக்க தோற்றத்தைக் காட்டியது, அவனது தோற்றம் முழுதுமே பரிவும் பெருந்தன்மையுமாகத் திகழ்ந்தது.

''இந்தக் கயவன் எதற்கு அடிபோடுகிறான்? என்ன விரும்புகிறான்?'' என்று எண்ணிய ஷெல்கா தலைநோவினால் முகம் சுளித்தான்.

தன் முழந்தாளைப் பற்றிக்கொண்டு புகைப் படலங்களை ஊதியவாறு காரின் மேலே வளைந்த உட்கூரையை நோக்கினான்.

''ஷெல்கா, இது இப்படித்தான், நான் ஒருபோதும் பொய் பேசுறதில்லை என்பதை நீங்க முதலாவதாக நம்பியாகணும்... நான் மக்களை வெறுக்கிறேன் என்பது இதற்குக் காரணமா இருக்கலாம், ஆனா அது முக்கியமில்லை. ரோல்லிங்கும் அவனது கோடிக்கணக்கான செல்வமும் ஒரு குறுகிய காலத்திற்கு மட்டும்தான் எனக்குத் தேவை. அதே அளவுக்குத்தான் அவனுக்கும் நான் தேவைப்படுகிறேன். முட்டாள்தனம் இருப்பினும் அவன் இதை உணருகிறான் என்று நான் நம்புறேன். ஐரோப்பாவைக் காலனி ஆக்குவதற்காக ரோல்லிங் இங்கு வந்தான்.

அதில் அவன் வெற்றி பெறாவிட்டால், அமெரிக்காவில் அவனது பில்லியங்களுடன் நொடித்துப் போவான். ரோல்லிங் ஒரு முரட்டு விலங்கு—முன்னே பாய்றதும் முட்டித் தள்ளுறதும் மிதித்துத் துவைக்கிறதும்தான் அவன் நோக்கம். சிறிதளவுக்கூடக் கற்பனை இல்லை. அவன் எதிர்த்து மோதித் தன்னோட மண்டையோட்டை உடைத்துக்கொள்ளக் கூடிய ஒரே ஒரு சுவர் சோவியத் ருஷ்யாதான். இது அவனுக்குத் தெரியும், அதோட அவனோட சீற்றம் முழுதுமே உங்களோட நேசத்திற்குரிய நாட்டிற்கு எதிராத் திரும்பியிருக்கு... என்னை ருஷ்யனாக நான் கருதலே (விரைந்து சேர்த்துக் கூறினான்), நான் ஒரு சர்வதேசவாசி, எனது போக்குகள் விசாலமானவை.''

''அது சொல்லாமலே விளங்குது,'' என்று வெறுப்பு முறுவலுடன் ஷெல்கா கூறினான்.

''எங்களோட தற்போதைய உறவு—ஏதோ குறிப்பிட்ட விஷயத்தில் ஒத்துழைக்கிறோம் என்பதே...''

''இருபத்தெட்டாம் தேதி வரை...''

நகை மிளிரும் கண்களுடன் காரின் விரைந்து ஷெல்காவைப் பார்த்தான்.

''ஆக, நீங்க கணக்குப் போட்டுட்டீங்க, இல்லையா? பத்திரிகையிலிருந்துதானே?''

''இருக்கலாம்.''

''அது சரி... இருபத்தெட்டாம் தேதி வரையிலே என வைத்துக்கொள்வோம். அதன் பிறகு ஒருவர் குரல்வளையை ஒருவர் பற்றும் நிலைக்கு நாங்க வருவோம். ரோல்லிங் வென்றால், சோவியத் ருஷ்யாவிற்கு இருமடங்கு அபாயம் விளையும்: அவன் என்னோட கருவியை வைத்திருப்பான், அவனை எதிர்த்துப் போரிடுறது உங்களுக்கு மிகமிகச் சிரமமாக இருக்கும்... இந்தச் சிலந்திகளுடன் இங்கே ஒரு வாரத்துக்கு உங்களை விட்டு வைப்பது வெற்றி பெறுவதற்கு எனக்கு நல்ல வாய்ப்பை ஏற்படுத்தும்.''

ஷெல்கா கண்களை மூடினான். அவனது கால்

பக்கம் அமர்ந்த காரின் சிகரெட்டை மூர்க்கமாக இழுத்துப் புகை ஊதினான்.

''என்னோட ஒப்புதல் என்ன இழவிற்காக உங்களுக்குத் தேவை?'' என வினவினான் ஷெல்கா. ''அது இல்லாமலேயே நீங்க விரும்பும் வரையிலே என்னை இங்கே வைத்திருக்கலாம். உங்களுக்கு என்ன வேணும் என்பதை நேரடியாச் சொல்லுங்க...''

''வெகுநேரத்திற்கு முன்னமேயே நீங்க சொல்லியிருக்க வேண்டியது அதுதான். நீங்களும், 'கம்யூனிஸ்ட் என்ற முறையில்' தந்த உறுதிமொழியும்... அட கடவுளே, கொஞ்ச நேரத்துக்கு முன்னே நீங்க என்னை எப்படி நோகடிச்சீங்க... இருந்தாலும், கடைசியா நீங்க என்னைப் புரிஞ்சுக்கத் தொடங்கியிருக்கீங்க என்று எனக்குத் தோணுது. நாம் எதிரிகள் என்பது உண்மைதான். ஆயினும் நாம் ஒன்னு சேர்ந்து வேலை செய்ய வேண்டியிருக்கு... உங்களோட பார்வையில் நான் மிகத் தாழ்ந்தவனாக இருக்கலாம், நான் முதல்தரமான தன்னலமி... பியோத்தர் பெத்ரோவிச் காரின் ஆகிய நான் இப்ப இருக்கும் நிலையில் என்னைப் படைத்த ஆற்றல்களின் அருளால், எனது மேதைவாய்ந்த மூளையுடன்—சிரிக்க வேணாம், ஷெல்கா,—என்னை வதைக்கவும் கலக்கவும் செய்கிற அடக்க முடியாத வேட்கைகளுடனும் என்னுடைய பேராசையுடனும் கொள்கையற்ற தன்மையுடனும் உண்மையிலேயே எல்லா மனித இனத்திற்கும் எதிராக நான் நிற்கிறேன்.''

''அட, கடைகெட்ட பதரே,'' என்றான் ஷெல்கா.

''முற்றிலும் சரி: 'அட கடைகெட்ட பதரே!' இப்ப என்னைப் புரிஞ்சுக்கிட்டீங்க. இயல்பிலேயே நான் சிற்றின்பப் பிரியன், என் வாழ்வின் ஒவ்வொரு நொடியையும் மகிழ்ச்சிக்கு அர்ப்பணிக்கவே விரும்புறேன். ரோல்லிங்கிடமிருந்து விடுபடுவதற்காக வெறிபிடித்து விரைகிறேன், ஏன்னா நான் மதிப்புள்ள நொடிகளை வீணாக்குறேன். அங்கே ருஷ்யாவிலுள்ள மக்களாகிய நீங்கள் போர்த்தன்மை

யுள்ள, பருவடிவாக்கப்பட்டுள்ள கருத்தாக விளங்குறீங்க. எனக்கு எந்தக் குறிப்பிட்ட சித்தாந்தமும் கிடையாது. எல்லாவிதக் கருத்தையும் உணர்வுபூர்வமாகவும் சமய உணர்ச்சியுடனும் வெறுக்கிறேன். ஒரு குறிக்கோளை நானே வகுத்துக் கொண்டிருக்கிறேன்: அத்தகைய நிலைகளை உண்டாக்கக் கருதுறேன் (விவரங்களை உங்களுக்கு நான் தர மாட்டேன், அவை உங்களைக் களைப்படைய வைக்கும்), என்னைச் சுற்றிலும் எல்லைமீறிய செல்வப் பெருக்கை அமைப்பேன்,—ஸெமிராமிஸ் தொங்கு தோட்டங்களும் மற்ற கீழ்த்திசை அபத்தங்களும் எனது சொர்க்கத்துடன் ஒப்பிட்டுப்பார்க்கும் போது வெறும் அற்பக் கனவே. எல்லா விஞ்ஞானத்தையும், தொழில்பெருக்கத்தையும், கலைகளையும் எனக்குப் பணிபுரிய ஒன்று திரட்டிக்கொள்வேன். ஷெல்கா, உங்களுக்குத்தான் தெரியுமே, ருஷ்யாவுக்கு நான் தொலைவிலுள்ள கற்பனையான அபாயம், ஆனா ரோல்லிங்கோ அருகிலுள்ள, உருக்கொண்ட, அச்சுறுத்துகின்ற அபாயம். இக்காரணத்திற்காக ஒரு குறிப்பிட்ட நிலைவரையும், ரோல்லிங் நசுக்கப் பெறும் காலம் வரையும், நீங்களும் நானும் ஒன்றாகச் செல்லணும். அதுதான் நான் உங்களைக் கேட்பது.''

''என்னோட உதவி என்ன வடிவத்தில் இருக்கணும்னு எதிர்பார்க்கிறீங்க?'' என்று பல்லைக் கடித்துக்கொண்டே வினவினான் ஷெல்கா.

''நீங்க ஒரு சிறு கடற்பயணம் செய்யணும்னு விரும்புறேன்.''

''வேறுவிதமாகச் சொன்னால், என்னைக் கைதியாக வைத்திருக்க விரும்புறீங்க.''

''ஆமா.''

''என்னைக் கடற்கரைக்கு நீங்க கூட்டிப்போற போது முதலில் எதிர்ப்படும் போலீஸ்காரனின் உதவியை நான் நாடாமல் இருப்பதற்காக நீங்க என்ன கொடுப்பீங்க?''

''நீங்க விரும்புற எந்தத் தொகையும்.''

''நான் பணத்தை விருப்பலே.''

''கெட்டிக்காரர்,'' என்றான் காரின், மெத்தை மீது அமைதியின்றி நெளிந்தான். ''எனது கருவியோட மாதிரிக்காக அதைச் செய்வீங்களா? (ஷெல்கா செருமினான்.) நீங்க என்னை நம்பலே? நான் உங்களை ஏமாத்துவேன், உங்களுக்குத் தர மாட்டேன் என்று நினைக்கிறீங்களா? நான் உங்களை ஏமாற்றக் கூடுமா இல்லையா என்பதை முழுதும் எண்ணிப்பாருங்க. (ஷெல்கா தோள்களைக் குலுக்கினான்.) நான் உண்மையிலேயே கருதுறேன். அநேகமா கேலி செய்யக்கூடிய அளவுக்கு அந்தக் கருவியோட கருத்து மிக எளிது... அதனை மறைவாக நெடுங்காலம் என்னால் வைத்திருக்க முடியாது. எல்லாப் பெரிய கண்டுபிடிப்புகளின் தலைவிதி அம்மாதிரிதான். இருபத்தெட்டாம் தேதிக்குப் பிறகு எல்லாப் பத்திரிகைகளும் அப்பால் சிவப்புக் கதிர்களின் செய்கையைப் பற்றி விவரமாக வெளியிடும். ஜெர்மானியர்கள், மிக உறுதியாக ஜெர்மானியர்கள் தான், ஆறு மாதங்களுக்குள் அதே போன்ற ஒரு கருவியைக் கட்டுவார்கள். நான் எதையும் இழக்கவில்லை. மாதிரியை உங்களோட ருஷ்யாவுக்கு எடுத்துப்போங்க. தற்செயலாகவே, உங்களோட பாஸ்போர்ட்டுகளும் வேறு காகிதங்களும் என்னிடம் இருக்கு... எடுத்துக்கொள்ளுங்க, இவை இனி எனக்குத் தேவையில்லை. இவற்றைக் குடைந்து பார்த்ததற்காக என்னை மன்னிச்சிருங்க, நான் தீவிர ஆர்வங்கொண்டவன்... நீங்க வைத்திருக்கும் பச்சைகுத்தியுள்ள பையனின் நிழற்படம் என்ன?''

''நாங்கள் பொறுக்கிய ஓர் அநாதை,'' என விடை பகர்ந்தான் ஷெல்கா. ஓயின் வைக்கும் நிலவறைக்கு வந்ததின் முதன்மையான நோக்கத்திற்கு காரின் இப்போதுதான் வருகிறான் என்பதைத் தலைநோவிற்கிடையே ஷெல்கா புரிந்து கொண்டான்.

''நிழற்படத்தின் பின்புறத்தில் தேதி இருக்கு, சென்ற மாதம் பன்னிரண்டாம் தேதி; அதன் பொருள் புறப்படும் தருவாயில் அந்தப் பையனைப் படமெடுத்து இருக்கீங்க, இல்லையா? எனக்குக் காட்டு

றதுக்காக அப்படத்தை உங்களோட எடுத்து வந்தீங்களா? லெனின்கிராடில் எவரிடமாவது காட்டினீங்களா?''

''இல்லை,'' என்று பல்லைக் கடித்துக்கொண்டே ஷெல்கா முணுமுணுத்தான்.

''அப்பையனை என்ன செய்திங்க? ஆகா, நான் இதை முன்பே பார்க்கலியே, இங்கே பெயர்கூட இருக்கே—இவான் கூசெவ். படகோட்டும் கழகத்தின் தாழ்வாரத்தில் இந்நிழற்படம் எடுத்தீர்கள், இல்லையா? அந்தளவுக்கு எனக்குப் புரியுது, அந்த இடங்கள் எனக்குத் தெரியும்... அந்தப் பையன் உங்ககிட்ட என்ன சொன்னான்? மாந்த்ஸெவ் உயிருடன் இருக்காரா?''

''ஆமா.''

''அவர் தேடிக்கொண்டிருந்ததைக் கண்டுபிடிச்சுட்டாரா?''

''அப்படித்தான் நினைக்கிறேன்.''

''அப்படிச் சொல்லுங்க. எனக்கு எப்போதும் மாந்த்ஸெவிடத்தில் நம்பிக்கையுண்டு.''

காரினின் கணக்கீடுகள் சரியாக இருந்தன. பொய் சொல்லக்கூடாத நிலையில் ஷெல்காவின் மனம் ஆக்கப்பட்டிருந்தது, ஏனெனில் முதலாவதாகப், பொய் சொல்வதில் வெறுப்பைத் தவிர வேறொன்றும் அவன் கொள்ளவில்லை; இரண்டாவதாக, விளையாட்டிலும் போராட்டத்திலும் பொய் சொல்வதை மிக இழிந்தது எனக் கருதினான். இவான் படகோட்டும் கழகத்திற்கு வந்தது பற்றிய முழுக் கதையையும் மாந்த்ஸெவின் வேலையைப் பற்றி அவன் சொன்ன அனைத்தையும் காரின் ஒரு நிமிடத்திற்குள் அறிந்தான்.

''அது சரி,'' எனக் கூறி மகிழ்வுடன் கைகளைத் தேய்த்துக்கொண்டு காரின் எழுந்தான். ''இருபத்தொன்பதாம் தேதி இரவு நம்முடைய கார்ப் பயணத்தின் போது அக்கருவியின் மாதிரி நம்மிடம் இருக்கும். நீங்க விரும்புற வரையில் நீங்க சுட்டிக் காட்டுகிற எந்த இடத்திலும் நாம் அதை ஒளித்து வைக்கிறோம்... அது உங்களுக்குப் போதுமான உத்

தரவாதமாக இருக்குமா? ஒத்துக்கொள்றீங்களா?''

''ஆமா, ஒத்துக்கொள்றேன்.''

''என்னைக் கொல்ல முயல மாட்டீங்களே?''

''அண்மையில்— இல்லை.''

''உங்களை மாடிக்குக் கொண்டு போக அவர்களுக்கு உத்தரவிடுவேன், இங்கே ஒரே புழுக்கமா இருக்கு: நல்லாத் தேறிக்கங்க, நீங்க விரும்புறதைச் சாப்பிடுங்க, குடிங்க.''

ஷெல்காவை நோக்கிக் கண் சிமிட்டிவிட்டு காரின் வெளியே சென்றான்.

59

''உங்களோட முழுப் பெயர் என்ன?''

''குல்நேவ்ஸ்கி படைப்பகுதியைச் சேர்ந்த காப்டன் அலெக்சாந்தர் இவானவிச் வோல்ஷின்,'' என்று காரினின் முன் நிமிர்ந்து நின்றுகொண்டு துருத்திய கன்ன எலும்புடைய அதிகாரி பதிலளித்தான்.

''என்ன வருவாயைக் கொண்டு வாழ்றீங்க?''

''நாள்தோறும் இருபது ஸூ நாணயங்களுக்காகவும் உணவுக்காகவும் முயல் வளர்க்கும் தொழிலில் ஜெனரல் ஸுபோத்தினுக்கு உதவி செய்றேன். நான் டாக்ஸி டிரைவராக இருந்து கைநிறையச் சம்பாதித்தேன், ஆனா என்னோட சக அதிகாரிகள் அரசர் கட்சிக் காங்கிரசுக்கும் பிரதிநிதியாகச் செல்லுமாறு என்னைத் தூண்டினாங்க. முதல் கூட்டத் தொடரில் கர்னல் ஷெர்ஸ்தபீத்தோவின் முகத்தில் குத்து விட்டேன். எனது நற்சான்றிதழ்களையும் வேலையையும் இழந்தேன்.''

''நான் உங்களுக்கு அருமையான சம்பளத்துடன் ஆபத்தான வேலை தருகிறேன். ஒத்துக்கொள்றீங்களா?''

''ஒத்துக்கொள்றேன்.''

''பாரிசுக்குப் போகணும். உங்களுக்கு ஒரு சிபாரிசைப் பெற்று, வேலையில் அமர்த்துவாங்க. ஆவணங்களுடனும், நற்சான்றிதழ்களுடனும் லெனின்

ரோடுக்குச் செல்லீங்க... இந்த நிழற்படத்தின் உத வியால் அங்கே ஒரு பையனைத் தேடணும்...''

60

ஐந்து நாள்கள் கழிந்தன. ரைன் பிரதேசத்தில், அனிலைன் கம்பெனியின் பெயர்பெற்ற தொழிற் சாலைகளின் மருங்கே பசிய ஈரமான பள்ளத்தாக் கில் மறைந்திருந்த 'க' என்ற சிறு நகரத்தின் அமைதி யை எதுவும் குலைக்கவில்லை.

அவ்வூரின் குறுகிய நடைபாதையுடைய வளைந்த தெருக்களில், காலையிலிருந்தே பள்ளிப் பிள்ளை களின் கட்டை மிதியடிகளின் தட்டொலியும், தொழி லாளர்களின் கனத்த நடையொலியும் எதிரொலித் தன; ஆற்றுக்குச் செல்லும் பாதையிலுள்ள லிண்டன் மரங்களின் நிழலில் பெண்கள் தங்கள் குழந்தைத் 'தள்ளுவண்டிகளை தள்ளிச்சென்றனர்... கித்தான் கோட்டு அணிந்திருந்த முடிதிருத்தும் ஒருவன் தன் கடையினின்றும் வெளியே வந்து நடைபாதை மேல் ஓர் ஏணியை வைத்தான். முன்னேயே பளபளக்கும் வர்த்தகச் சின்னத்தை—பித்தளைக் கிண்ணமும், ஒரு வெள்ளைக் குதிரைவாலும்—மெருகேற்றுவதற்காக அவனது உதவிப் பணியாளப் பையன் ஏணி மேல் ஏறினான். காப்பிக் கடையின் சன்னல் கண்ணாடிகள் துடைக்கப்பட்டிருந்தன. வெறும் பீர்ப் பீப்பாய்கள் ஏற்றப்பட்டிருந்த பெரிய சக்கரங்களுடைய கட்டை வண்டி கடகடவெனச் சென்றது.

நன்றாகப் பெருக்கப்பட்டுத் துப்புரவாயிருந்த பழைய நகரம் அது, குமிழ்க் கற்கள் பாவிய அதன் தெருக்கள் சூரியன் வெதுவெதுப்பாக்கிய போது அமைதியாக இருந்தது. மாலையில் சூரியன் மறைகை யில் தொழிற்சாலைகளிலிருந்து திரும்பிய ஆண், பெண் தொழிலாளர்கள் நீட்டிப்பேசி குரல் எழுப் பியபோது, காப்பிக் கடைகளில் விளக்கேற்றப்பட்ட போது, குட்டையான மழைக்கோட்டு—அது எவ் வளவு பழையது என்பது கடவுளுக்குத்தான் தெரி

யும்—அணிந்த தெருவிளக்கேற்றும் கிழவன் கட்டை மிதியடிகளை இழுத்துக்கொண்டு நடந்த போது உயிர்த்தெழும்.

தொழிலாளர், நகரத்தினர் ஆகியவரின் மனைவிகள் தூக்குக் கூடைகளுடன் சந்தை வாயில்களிலிருந்து வெளியே வந்தார்கள். முன்னாள்களில் அக்கூடைகளில் கோழிகளும், காய்கறிகளும், பழங்களும் இருந்தன, ஓவியர் பிரான்ஸ் ஸ்னைதர்ஸ் தீட்டிய சிறந்த படங்கள் போன்று அவ்வளவு அழகாகக் காணப்பட்டன. இன்றோ அக்கூடைகளில் சில உருளைக்கிழங்குகளும், வெங்காயக் கொத்து ஒன்றும், சிவப்பு முள்ளங்கிகள் சிலவும், பழுப்புநிற ரொட்டியும் இருந்தன.

எத்தனை விநோதம்! நான்கு நூற்றாண்டுகளாக ஜெர்மனி எப்படிச் செல்வம் பெற்றது என்பது சாத்தானுக்கு மட்டுமே தெரியும். அதன் புதல்வர்கள் எத்தகைய புகழ்பெற்றிருந்தனர். ஜெர்மானிய நீலக்கண்களில் எவ்வளவு நம்பிக்கைகள் ஒளிவீசின! மேல் துருத்திய வெண்பழுப்புத் தாடிகள் வழியே எவ்வளவு பீர் சொட்டி வடிந்திருக்கும்! எத்தனை கோடிக்கணக்கான கிலோவாட் மனித ஆற்றல் வெளிப்பட்டிருக்கும்...

அவையெல்லாம் வீண். சமையலறைகளில்—மேசைமீது இளவேனிற் காலத்து வெங்காயக்கொத்து ஒன்றும், பெண்களின் பசியுடைய கண்களில் நெடுங்காலமாக நிலைத்திருக்கும் ஏக்கமும் தான் இன்று உள்ளன.

வோல்ஃபும் ஹ்றலீனோவும் புழுதிபடிந்த மூடு செருப்புகளுடனும், கைகளின் மேல் தொங்கவிட்ட கோட்டுகளுடனும், வியர்த்த நெற்றிகளுடனும் வில்வடிவான நடை பாலத்தைக் கடந்து 'க'வில் உள்ள லிண்டன் மரங்களின் நிழல் நிறைந்த நெடுஞ்சாலை வழியாக மேலே சென்றனர்.

தாழ்ந்த குன்றுகளுக்குப் பின்னே சூரியன் அமிழ்ந்துகொண்டிந்தது. மாலைநேரப் பொன்னொளியில் அனிலைன் தொழிற்சாலை புகைப்போக்கிகள் இன்னும் புகைந்து கொண்டிருந்தன. தொழிற்

சாலைக் கட்டடங்கள், புகைப்போக்கிகள், ரயில் பாதைகள், பண்டசாலைகளின் ஓட்டுக்கூரைகள் ஆகியவையெல்லாம் குன்றின் பக்கமாக நகரத்தின் கோடி வரையிலும் வரிசையாக இருந்தன.

''அதோ, அந்த இடமாகத்தான் இருக்கணும்னு உறுதியாக நம்புறேன்,'' என்று சூரியன் மறையும் நேரத்தில் செவ்வொளி படர்ந்த செங்குத்துப் பாறைகளைச் சுட்டிக்காட்டினான் வோல்ஃப். ''தொழிற்சாலைமீது பீரங்கி வெடி தீர்க்க மிக நல்ல இடத்தை நான் தேடும்படி ஏற்பட்டா இந்த இடத்தை மட்டுமே தெரிந்தெடுப்பேன்.''

''அது போதுமானது, வோல்ஃப், ஆனா இன்னும் மூன்று நாள்கள் தானே எஞ்சியிருக்கு...''

''நல்லது, அதனால் என்ன? தென்புறமிருந்து அபாயம் வர முடியாது, அது மிகத் தொலைவு இருக்கு. வடக்கு, கிழக்கு ஆகிய பகுதிகளில் ஒவ்வொரு கல்லையும் நாம் தெரிந்துகொள்ளும் வரை சுற்றித் துருவித் தேடுவோம். மூன்று நாள் போதும்.''

ஆழ்ந்த நிழல் படிந்திருந்த நீல நிறக் காடர்ந்த மலைகளை நோக்கி ஹ்லீனோவ் திரும்பினான். கடந்த ஐந்து நாள்களிலும் பகலிலும் இரவிலும் வோல்ஃபும் ஹ்லீனோவும் தொழிற்சாலைப் பக்கம் சன்னல்கள் கொண்ட கட்டடம் ஏதேனும்—வேனில்வீடோ, குடிசையோ—உண்டா என மறைந்திருக்கக் கூடிய ஒவ்வொரு மலைப் பள்ளத்தையும் துருவி ஆராய்ந்து விட்டார்கள்.

தொடர்ந்து ஐந்தாவது நாளும் அவர்கள் உடை மாற்றிக்கொள்ளாது இரவின் மிக இருட்டான நேரத்தில் எங்கே இருப்பினும் அங்கேயே கீழே கிடந்து உறங்கினர். அவர்கள் கால்கள் வலிகூடத் தெரியாதபடி மரத்துப்போயின. கல் நிறைந்த வழிகளிலும் பாதைகளிலும், மலைச்சந்துகளின் குறுக்கேயும், வேலிகளைத் தாண்டியும் நகரத்தைச் சுற்றி நூறு கிலோமீட்டர் தொலைவை நடந்து முடித்துள்ளனர். இருப்பினும், எங்கும் காரினுடைய சுவடு சிறிதும் தெரியவில்லை. உழவர்கள், குடியானவர்கள்,

நகர்ப்புற மாளிகையில் உள்ள வேலையாட்கள், காடுகாவலர்கள், காவல்காரர்கள் ஆகிய அனைவரும் இவர்களது வினாக்களுக்கு விடையாகத் தோள்களையே குலுக்கினர்:

''இந்த மாவட்டத்தில் புதியவர்கள் யாரும் இல்லை, இங்கு வாழும் ஒவ்வொருவரையும் எங்களுக்குத் தெரியும்.''

61

கடினமான மேற்குப் பகுதி மட்டுமே எஞ்சி நின்றது. நிலப்படத்தின்படி பாறை நிறைந்த பீடபூமிக்கு ஒரு நடைபாதை இருந்தது. அப்பீடபூமியில் 'சங்கிலியால் பிணிக்கப்பட்ட எலும்புக்கூட்'டின் கோட்டையின் பெயர்பெற்ற இடிபாடுகள் இருந்தன. கோட்டையின் அருகில் இத்தகைய நிலைக்கு ஏற்றவாறு 'சங்கிலியால் பிணிக்கப்பட்ட எலும்புக் கூட்டின் அருகில்' என்ற பெயருடைய பீர்க் கடை இருந்தது.

பாழடைந்த கோட்டைக்கு வரும் பார்வையாளர்களுக்கு உண்மையிலேயே ஓர் இருட்டறையும் அழிக் கம்பிகளுக்குப் பின்னே ஒரு ராட்சத எலும்புக்கூடு துருப்பிடித்த சங்கிலிப் பிணிப்பில் அமர்ந்திருப்பதும் காட்டப்பட்டன. அந்த எலும்புக்கூட்டின் படம் அஞ்சலட்டைகளிலும் காகித அறுவைக் கத்திகளிலும் பீர் குவளைகளிலும் சித்திரிக்கப்பட்டது. இருபது காசு கொடுத்தால், அந்த எலும்புக் கூட்டிற்கு அருகில் நின்று படம் பிடித்துக் கொள்ளவும் உறவினர்களுக்கோ பெண் சிநேகிதிக்கோ அப் படத்தைப் பார்வையாளர்கள் அனுப்பிவைக்கவும் முடிந்தது. ஞாயிற்றுக் கிழமைகளில் ஓய்வுநாள் பொழுது போக்குபவர் பெரும்பாலோர் கோட்டையின் இடிபாடுகளைப் பார்க்க வந்த போது பீர்க் கடையில் நல்ல விற்பனை நடந்தது. சில நேரங்களில் வெளிநாட்டுப் பார்வையாளர்களும் இருந்தனர்.

எனினும், போருக்குப்பின் புகழ்பெற்ற அந்த எலும்புக்கூட்டிலிருந்த ஆர்வம் குறைந்துவிட்டது. நகர மக்கள், ஊட்டச்சத்துக் குறைவு காரணமாக விடுமுறை நாள்களில் அந்தச் செங்குத்தான குன்றின் மீது ஏற ஆர்வமில்லாது இருந்தனர்—வரலாற்றை நினைவூட்டக்கூடிய இடங்களினின்றும் மிகத் தொலைவில் ஆற்றங்கரையிலுள்ள லிண்டன் மரங்களினடியில் அமர்ந்து ஸாண்ட்விச்களை உண்டு அரைப் போத்தல் பீர் குடிக்கவே விரும்பினர்.

'சங்கிலியால் பிணிக்கப்பட்ட எலும்புக்கூட்டின் அருகில்' பீர்க் கடையின் சொந்தக்காரன் அந்தப் பாழ்பட்ட இடத்தை நன்னிலையில் வைத்திருக்க இயலாதவனாகி விட்டான். இப்போது பல வாரங்களாக அந்த இடைக்காலத்து எலும்புக்கூடு, எவருடைய வருகையாலும் கலைக்கப்படாது, கோட்டைச் சொந்தக்காரன் விதிமுடிந்த நாளில் தன்னைத் தாக்கிச் சேணத்திலிருந்து எங்கே கீழே தள்ளிவிட்டானோ அந்தப் பசுமையான பள்ளத்தாக்கைத் தனது வெறுமையான கண்குழிகளால் கூர்ந்து நோக்கியது; கூம்புகோபுரங்களும், காற்றுநிலை காட்டும் சேவலுருவும் உடைய சர்ச்சுகளையும், வரலாற்றை நினைபடுத்தும் எலும்புக்கூடு பொறித்த அஞ்சலட்டைகளிலும், ஒருவேளை வாழ்க்கையிலும் என்று கூடச் சொல்லலாம், அப்பகுதி மக்கள் ஆர்வத்தை இழக்குமாறு செய்யும் நச்சுப்புகை, டெட்ரில் இன்னும் பல நரகப் பொருள்கள் ஆகியவற்றை உலக முழுதும் பரந்த அளவில் உண்டாக்கும் தொழிற் சாலைகளின் புகைப்போக்கிகளையும் கூர்ந்து நோக்கியது.

இந்தத் திசையில் இப்போது வோல்ஃபும் ஹ்லீனோவும் புறப்பட்டனர். முதலில் நகரச் சதுக்கத்திலிருந்த காப்பிக் கடையொன்றில் நுழைந்து உணவு கொண்டு, அங்கிருந்த அப்பகுதி நிலப்படமொன்றை நீண்ட நேரம் ஆய்ந்து பார்த்து, வெயிட்டரிடம் வினவினார்கள்.

பள்ளத்தாக்கின் மேற்குப் பகுதியில் பார்க்கத் தகுந்த இடங்களுள் இடிபாடுகளையும் பீர்க் கடை

யையும் தவிர, தட்டச்சு தொழிற்சாலை உரிமையாள னாக இருந்து அணிமையில் நாசமான ஒருவனின் பங்களாவும் ஒன்று எனத் தெரிந்தது. அது குன்றின் மேற்குச் சரிவில் இருந்ததால் நகரத்திலிருந்து காண முடியவில்லை. தொழிற்சாலை உரிமையாளன் அவ் விடத்தை விட்டு நீங்காது தனித்து வாழ்ந்து வந் தான்.

62

வைகறைக்குச் சற்று முன்னே முழுமதி கிளம்பியது. கற்களும் பாறைகளுங்கொண்ட தெளிவில்லாத குவி யல் போன்று தோன்றியது இப்போது நிலவில் துலக் கமாகப் புலனாயிற்று; வளைவுகளின் எஞ்சிய பகுதி கள் வெல்வெட் நிழலை உண்டாக்கின; கரளை தட்டிய கோணல் மரங்களும் முட்புதர்களும் மண் டிக் கிடந்த கோட்டைச் சுவர்கள் மலைப்பிளவு வரை நீண்டிருந்தன; நார்மன்களால் கட்டப்பட்ட இக்கோட்டையின் மிகப் பழைய பகுதியாகிய சதுர கோபுரம்—அஞ்சலட்டைகளில் இது 'சித்திரவதைக் கோபுரம்' எனக் குறிக்கப்பட்டது—நிலவொளியி னால் உயிர்பெற்றது.

கோட்டையில் வசிக்கின்ற பகுதியுடன் பண்டைய கோபுரம் இணைக்கப்பட்ட நுழைமாடத்தோடு சேர்ந்திருந்தது போலத் தோன்றிய கிழக்குப்புறச் சுவருடன் செங்கல் வளைவுகள் பொருந்தியிருந்தன. இப்போது எஞ்சியவையெல்லாம் அடித்தளமும், உடைந்த செங்கற் குவியல்களும், மணல் கல் தூண் களின் தலைப்பகுதிகளும்தாம். கோபுரத்தின் அடி யில் இருந்த சங்குவடிவான குறுக்கு வளைவில் 'சங் கிலியால் பிணிக்கப்பட்ட எலும்புக்கூடு' அமர்ந்திருந் தது.

அழிக்கம்பி மீது முழங்கைகளை ஊன்றிக் கொண்டு, அந்த எலும்புக்கூட்டை வோல்ஃப் நெடு நேரம் நோக்கிய பிறகு ஹ்லீவோன் பக்கம் திரும்பிச் சொன்னான்:

''இப்ப அங்கே பாருங்க.''

அவர்களுக்குக் கீழே மிக்க ஆழத்தில் புகை படர்ந்த பள்ளத்தாக்கு நிலவொளியில் தெரிந்தது. மரச் செறிவுகளின் கீழே தென்பட்ட இடங்களிலெல்லாம் ஆற்றில் வெள்ளிச் செதிள்கள் மினுமினுத்தன. பொம்மை வீடுகளின் தொகுதி போன்று நகரம் தோன்றியது. ஒரு சன்னலிலிருந்தும் வெளிச்சம் தெரியவில்லை. அப்பால் இடப்புறம், நகரத்தின் பின்புறம் அனிலைன் தொழிற்சாலைகளின் நூற்றுக்கணக்கான விளக்குகள் ஒளிவீசின. புகைப் போக்கிகள் செந்நிறத் தீக்கொழுந்துகளைக் கக்கிய இடத்தில் வெண்புகைப் பிழம்புகள் எழுந்தன. புகைவண்டிகளின் சீழ்க்கையொலியும், இரைச்சல் ஒலியும் பள்ளத்தாக்கின் ஊடாக மிதந்து வந்தன.

''நான் எண்ணியதுதான் சரி,'' என்றான் வோல்ஃப், ''இந்தப் பீடபூமியிலிருந்துதான் கதிர் பயன்படுத்தப்படக் கூடும். பாருங்க, அதோ அங்கே—கச்சாப்பொருள் கிடங்குகள், அங்கே—அந்த மண் சுவருக்குப் பின்னாலே, பாதி முடிக்கப்பட்ட பொருள்களின் கிடங்குகள். அவை முழுவதும் திறந்து கிடக்குது. அதோ—அந்தக் கட்டடங்களில் தான் இருப்புக் கந்தகக்கலவையிலிருந்து ருஷ்ய முறைப்படி கந்தக அமிலம் தயாரிக்கப்படுகிறது. அதோ, அங்கே மறுபுறத்தில், அவ்வட்டக் கூரைகளுக்கு அடியில் தான் அனிலைனும் சிலநேரத்தில் அவற்றினுடைய முரண்டுகாரணமாக வெடித்து விடும் பல பேய்ப் பொருள்களும் தயாரிக்கப்படுகின்றன.''

''அது சரி, வோல்ஃப். இருபத்தெட்டாம் தேதி இரவு வரையிலும் தனது கருவியை காரின் நிறுவமாட்டான் என்று நாம் வைத்துக்கொண்டாலும் அதற்கு முன்னே அவன் சில ஏற்பாடுகளைச் செய்ய வேண்டியிருக்கும். அவற்றின் அறிகுறிகள் இருக்கத் தான் வேணும்.''

''இந்த இடிபாடுகளை நாம் ஆராயணும். நான் கோபுரத்தை எடுத்துக்கொள்றேன். நீங்க சுவர்களையும் வளைவுகளையும்... அந்த எலும்புக்கூடு அமர்ந்திருக்கிற இடத்தை விடச் சிறந்தது கண்டு

பிடிக்க முடியாது என்று இன்னமும் நினைக்கிறேன்.''

''ஏழு மணிக்கு பீர்க் கடையில் நாம் சந்திக்கிறோம்.''

''அது சரி.''

63

காலை ஏழு மணிக்குச் சற்று பின்பு 'சங்கிலியால் பிணிக்கப்பட்ட எலும்புக்கூட்டின் அருகில்' என்ற பீர்க் கடையின் தாழ்வாரத்தில் வோல்ஃபும் ஹ்ஸீனோவும் பால் குடித்துக் கொண்டிருந்தனர். அவர்கள் இரவில் தேடியது பயன்தரவில்லை. ஒன்றும் பேசாது, கைகளிலே மோவாயைத் தாங்கியவாறு அமர்ந்திருந்தனர். ஒருவனது எண்ணங்களை அறிந்து சொல்லுமளவு சில நாள்களுள் ஒருவரையொருவர் புரிந்துகொண்டிருந்தனர். கருத்து சுலபத்தில் பதியக் கூடிய தன்மையுடையவனும் தன்னைத் தானே குறைவாக நம்புபவனுமான ஹ்ஸீனோவ், தீங்கற்றது போன்று தோன்றிய இந்த இடத்துக்குப் பாரிசிலிருந்து தன்னையும் வோல்ஃபையும் கொண்டு வந்த தர்க்கத்தின் முழுப்போக்கையும் மீண்டும் மீண்டும் எண்ணிப்பார்த்தான். இந்த முடிவுகள் எதை அடிப்படையாகக் கொண்டவை? பத்திரிகைகளில் வந்த இரண்டு மூன்று வரிகளைத்தானே.

''வோல்ஃப், நாம் நம்மையே முட்டாளாக்கிக் கொள்றோம் என்று நீங்க நினைக்கலியா?''

''மனித அறிவு குறைகளுடையது,'' எனப் பதிலளித்தான் வோல்ஃப். ''எனினும் அதனைச் சந்தேகப்படுறதைக் காட்டிலும், அதன்மீது நம்பிக்கை கொள்றது எப்போதும் மிக நல்லது. அதோடு மட்டுமன்றி, நாம் எதுவுமே கண்டுபிடிக்க முடியாவிட்டாலும், காரினுடைய கொடூரமான திட்டம் நமது கற்பனைகளின் புனைசுருட்டு என்பது நிரூபிக்கப்படும் என்பதற்காக நாம் கடவுளுக்கு நன்றி மட்டுமே கூற முடியும். நமது கடமையை முடித்திடுவோம்.''

ஒரு வெயிட்டர் அவர்களுக்கு ஆம்லெட்டுகளும் இரு குவளை பீரும் கொண்டுவந்தான். சிவந்த கன்ன முடையவனும் கொழுத்தவனுமான உரிமையாளன் தோன்றினான்.

''காலை வணக்கம், கனவான்களே!'' மூச்சு இரைத்ததனால் விருந்தினர் அவர்களது உணவை முடிக்கும் வரை கவலை தோன்றியவாறு காத்திருந் தான். பிறகு இன்னும் நீலவண்ணத்துடன் பனித்துளி கள் ஒளி திகழ்ந்த பள்ளத்தாக்கின் பக்கமாகக் கை யை அலைத்தான். ''நான் இதை இருபது ஆண்டு களாகக் கவனித்து வருகிறேன்... விஷயங்கள் ஒரு முடிவுக்கு வந்து கொண்டிருக்கு, அதுதான் நான் சொல்றது, அருமைக் கனவான்களே... படை திரட் டப்படுவதைப் பார்த்தேன். அங்கே அந்தத் தெரு வழியாகப் படை அணிவகுத்துச் சென்றது. அவை சிறந்த ஜெர்மன் படைப்பிரிவினர். (சுருள் கம்பி திறப்பது போன்று உரிமையாளன் தலைக்கு மேல் தன் கொழுத்த சுட்டுவிரலை நுழைத்துக் கொண் டான்.) அவர்கள் ஸிக்ப்ரீட்கள்*, அவர்களைப் பற்றி டாஸிடஸ்** எழுதினார்: சிறகுடைய இரும்புத் தலைக் கவசங்களுடன் இருக்கும் ஆற்றல்மிக்க, அச் சத்தை விதைக்கின்றவர்கள். பணியாளே, இந்தக் கனவான்களுக்கு இன்னும் இரண்டு குவளை பீர்... 1914இல் அந்த ஸிக்ப்ரீடுகள் உலகை வெல்ல அணி வகுத்து நடந்தனர். கேடயங்கள் மட்டும் காண வில்லை—வீரர்களுடைய குரல்களை மிகவும் அச்ச மூட்டுவதற்கு போர் முழக்கம் செய்யும் போது

---

* ஸிக்ப்ரீட்—ஜெர்மானியப் புராணத்தின் கதா நாயகன், நாட்டையும் அதனது கடவுளர்களையும் காப்பாற்றியவன். பாசிசக் கருத்துமுதல்வாதிகள் ஸிக்ப்ரீட்டையும் பிற காப்பியக் கதாநாயகர்களை யும் ஜெர்மானிய இனத்தின் தனிப்பட்ட பிரச்சா ரத்திற்காகவும், பிற இனங்கள் பால் வெறுப்பை ஏற் படுத்துவதற்காகவும் பயன்படுத்தினார்கள். (ப-ர்.)

** டாஸிடஸ் (கி.பி. 55-117)—ரோமானிய வர லாற்றாசிரியர், உலக இலக்கியத்தில் குறிப்பிடத் தக்க நபர். (ப-ர்.)

வாய்க்கு அருகில் கேடயத்தை வைத்துக்கொள்ளும் பழைய ஜெர்மானிய வழக்கம் உங்களுக்கு நினைவு இருக்கிறதா? ஆமாம், குதிரைவீரர்களின் பின்புறங்கள் குதிரைச் சேணங்களில் உறுதியாக இறுகப் படியவைக்கப்பட்டதை நான் பார்த்தேன்... என்ன நடந்தது என்று நான் அறிய விரும்புகிறேன். போர்க்களத்தில் எப்படிச் சாவது என்பதை நாம் மறந்து விட்டோமா? படைகள் திரும்ப வருவதைப் பார்த்தேன். குதிரைவீரர்கள், நாசமாய்ப்போக, இன்னும் சேணத்தில் இறுக்கமாகவே அமர்ந்திருந்தனர்... ஜெர்மானியர் போர்க்களத்தில் முறியடிக்கப்படவில்லை. அவர்களது படுக்கைகளிலே, அவர்கள் அடுப் படியிலே வாளினால் கோரமாகக் குத்தப்பட்டிருந்தனர்...''

தனது பிதுங்கிய கண்களால் உரிமையாளன் விருந்தினரை நன்கு ஆழ்ந்து பார்த்து விட்டு, இடிபாடுகள் பக்கம் திரும்பினான். அவனது முகம் செங் கல்லைப் போன்று சிவந்தது. பையினின்றும் அஞ்சலட்டைக் கட்டு ஒன்றை மெல்ல வெளியே எடுத்து மறு கையில் அவற்றால் தட்டினான்.

''நீங்க நகரத்திலே இருக்கீங்க; நான் உங்களைக் கேட்கிறேன்: ஐந்தடி ஆறு அங்குலத்திற்குமேல் உயரமுள்ள ஒரு ஜெர்மானியனையாவது நீங்க பார்த்தீங்களா? அந்தப் பாட்டாளிகள் தொழிற்சாலைகளிலிருந்து வீடு திரும்பும்போது அவர்களில் ஒருவனாவது உரத்த குரலில் 'டோய்ச்லாண்ட்'* என்ற சொல்லைத் துணிச்சலோட கூறுவதைக் கேட்டீர்களா? இந்தப் பாட்டாளிகள் ஒரு குவளை பீர் குடித்துவிட்டு சோஷலிஸம் பற்றிக் கத்தமட்டுமே செய்வார்கள்.''

அவன் அஞ்சலட்டைக் கட்டை விசிறி போன்று பரந்து விழுமாறு லாவகமாக மேசைமேல் எறிந்தான். அவை அந்த எலும்புக்கூட்டின் படங்கள்—சிறகு வைத்த இரும்புத் தலைக்கவசமணிந்த ஜெர்மானியனுடன் ஓர் எலும்புக்கூடும், முழு இராணுவ

---

* டோய்ச்லாண்ட்—ஜெர்மனி. (மொ-ர்.)

முஸ்தீப்புக்களுடனும் உள்ள 1914ஆம் ஆண்டுப் போர்வீரனுடன் ஓர் எலும்புக்கூடும்.

''ஒவ்வொன்றும் இருபத்தைந்து காசு, அல்லது ஒரு டஜன்—இரண்டரை மார்க்கு ஆகும்,'' என்று உரிமையாளன் வெறுப்புக் கலந்த செருக்குடன் கூறினான். ''அவற்றைக் குறைந்த விலைக்கு விற்க முடியாது. அவை போருக்கு முன்னைய வேலைப்பாடுடையவை, கண்களில் தகர ஒப்பனையுடன் கூடிய வண்ணப் புகைப்படங்கள் என்றும் அழிக்க முடியாத மனப்பதிவைத் தருகின்றன... இந்தக் கோழை பூர்ஷ்வாக்களோ ஐந்தரை அடி உயரப் பாட்டாளிகளோ எனது அஞ்சலட்டைகளை வாங்குவார்கள் என்று நீங்க நினைக்கிறீங்களா? தூ!.. அந்த எலும்புக்கூட்டுடன் கார்ல் லீப்க்னெஹ்டைப் படம் பிடிக்குமாறு என்னை வேண்டுறாங்க...''

அவனது முகத்தில் மீண்டும் குருதி பாய்ந்தது. திடீரென்று வெடிச் சிரிப்புச் சிரித்தான்.

''அவர்கள் காத்திருக்க வேண்டியதுதான்! பணியாளே, இந்தக் கனவான்களுக்காக ஒவ்வொரு டஜன் அஞ்சலட்டைகளை நமது சொந்த அசல் உறைகளில் போடு... ஆமா, நான் பிழைப்பு நடத்த வேண்டுமே... என்னோட அதிகாரவுரிமைப் பத்ரத்தை உங்களுக்குக் காட்டுறேன்... நான் நூற்றுக்கணக்கில் அவற்றை விற்பேன். இங்கு காலத்திற்கேற்ற மாதிரி நடக்கிறேன், எனது கொள்கைகளிலிருந்து விலகுவதில்லை.''

உரிமையாளன் வீட்டிற்குள் சென்று சுருட்டுப் பெட்டி போன்றிருந்த ஒரு சிறு பொருளுடன் மீண்டான். அதன் மூடிமீது அதே எலும்புக்கூடு நெருப்பு எரிப்பினால் பொறிக்கப்பட்டிருந்தது.

''பயன்படுத்த விரும்புறீங்களா? வால்வுகளையுடைய சாதாரண வானொலிப் பெட்டியைப் போல இது வேலை செய்யுது.'' விரைவில் அவன் கம்பியையும் செவிக்குழாயையும் சரிப்படுத்தி மேசைக்குக் கீழே அமைந்த தொளையினுள் மின் முனையை அழுத்தினான். ''இதன் விலை மூன்று மார்க்கு எழுபத்தைந்து காசு. உண்மையில், செவிக்குழாய்கள்

இல்லாமலே.'' ஹ்லீனோவிடம் செவிக்குழாய்களைக் கொடுத்தான். ''நீங்க விரும்பினா பெர்லின், ஹாம்பர்க், பாரிஸ் ஆகிய இடங்களிலிருந்து செய்தி கேட்கலாம். கோலோன் மாதாக்கோவிலுக்கு டியூன் பண்ணுறேன், இப்ப அங்கு வழிபாடு நடக்குது. ஆர்கன் வாத்திய இசையை நீங்க கேட்கலாம். அது பிரமாதம்!.. அந்த ஸ்விட்சை இடப்புறம் திருப் புங்க... என்ன செய்தி? மீண்டும் அந்தப் பாழான ஷ்டுபெர் தலையிடுகின்றானா? இல்லையே?''

''தலையிடுவது யார்?'' என வினவிய வோல்ஃப் வானொலிப் பெட்டிக்கு மேலாகக் குனிந்தான்.

''தட்டச்சுப் பொறித் தொழிற்சாலைக்காரன். நொடித்துப் போனான். ஷ்டுபெர் என்று பெயர். குடியன், பைத்தியம்... இரண்டாண்டுக்கு முன்பு தனது பங்களாவில் வானொலி நிலையம் ஒன்று கட்டினான். பிறகு தன் பணம் எல்லாத்தையும் இழந்துட்டான். மீண்டும் அணிமையில் அந்நிலையம் வேலை செய்யத் தொடங்கியிருக்கு.''

ஹ்லீனோவ் பரபரப்படைந்து கண்கள் ஒளிர செவிக்குழாயைக் கீழே வைத்தான்.

''வோல்ஃப், பணத்தைக் கொடுங்க, நாம போக லாம்.''

தொணதொணப் பேச்சுக்காரனான உரிமையாள னை விட்டு அவர்கள் நீங்கிய சில நிமிடங்கள் கழித்து பீர்க் கடையின் வாயிலைத் தாண்டியபோது, வோல்ஃபினுடைய கையை ஹ்லீனோவ் முழு வலி மையுடன் நசுக்கினான்.

''காரினின் குரலைக் கேட்டேன். அதனை நான் அறிந்துகொள்ள முடிந்தது...''

64

அதே காலையில், ஒரு மணி நேரத்திற்கு முன், அக் குன்றுகளின் மேலைச் சரிவில் இருந்த பங்களாவில் பாதி இருட்டாயிருந்த தனது உணவறையில், கண் ணுக்குப் புலனாகாத ஒரு கூட்டாளியுடன் பேசிக்

கொண்டு தனது மேசையருகில் ஷ்டுபெர் அமர்ந்திருந்தான். அப்பேச்சில் பெரும்பாலும் தொடர்பற்ற தனிச்சொற்றொடர்களும் வசவுகளுமே அடங்கியிருந்தன. சுருட்டுச் சாம்பல் சிந்தியிருந்த மேசை மீது வெற்றுப் போத்தல்களும், சுருட்டின் அடித்துண்டுகளும், ஷ்டுபெரின் கழுத்துப்பட்டியும் டையும் ஒழுங்கின்றி கிடந்தன. உள்ளாடைகள் மட்டும் அணிந்து தனது தொளதொளத்த மார்பைச் சொறிந்து கொண்டு, இரும்பினாலாகிய பெரிய செடி விளக்குத் தாங்கியொன்றில் எரிந்த ஒரே ஒரு மின் விளக்கை வெறித்து நோக்கியவாறு, ஏப்பத்தை அடக்கிக் கொண்டு, குடியினால் குழப்பமடைந்த மூளையினூடே பளிச்சிட்டுத் தோன்றிய மக்களையெல்லாம் மிக இழிந்த சொற்களால் ஏசினான்.

உணவறையில் இருந்த கடிகாரம் கம்பீரமான ஒலியில் ஏழு அடித்தது. கிட்டத்தட்ட அதே நேரத்தில் ஒரு கார் வெளியே நின்றது. காலை மென் காற்றினால் புத்துணர்ச்சி கொண்ட காரின், தலையின் பின்புறம் தோல் குல்லாயை வைத்தவாறு ஏளனச் சிரிப்புடன் பற்களைக் காட்டிக்கொண்டு உணவறையினுள் நுழைந்தான்.

''மீண்டும் இரவு முழுக்கக் குடித்துக் கொண்டிருந்தீர்களா?''

ஷ்டுபெர் குருதிச் சிவப்பான தனது கண்களை காரின் பக்கம் திருப்பினான். அவன் காரினை விரும்பினான். காரின் ஒவ்வொன்றுக்கும் தாராளமாகப் பணம் கொடுத்தான். கோடைக்காலத்திற்காக அந்த பங்களாவை, ஒயின் வைக்கும் நிலவறை உட்பட, பேரம் எதுவும் பேசாது வாடகைக்குப் பிடித்திருந்தான், ஆனால் பழைய ரைன் ஒயினையும் பிரெஞ்சு ஷாம்பெயினையும் விருப்பப்படி பயன்படுத்த ஷ்டுபெருக்கு உரிமை கொடுத்தான். அவன் என்ன வேலை தான் செய்தானோ, சைத்தானுக்கே தெரியும். வர்த்தகச் சூதாட்டம் செய்தான் போலும். ஆனால் ஈராண்டுகளுக்கு முன்பு ஷ்டுபெரை நொடிக்கச் செய்த அமெரிக்கர் எல்லாரையும் ஏசினான், அரசாங்கத்தை வெறுத்தான், பொதுவாக எல்லா மக்

களையும் பன்றிகள் என்று அழைத்தான்—இதுவும் ஷ்டுபெருக்குப் பிடித்தது.

''நீங்க என்ன செய்து கொண்டிருந்தீங்க? இரவு முழுதும் இறைவணக்கம் கூறிக் கொண்டிருந்தீங் களா?'' எனத் தனது கரகரத்த குரலில் ஷ்டுபெர் கேட்டான்.

காரின் கொக்கரித்து விட்டு ஷ்டுபெரின் கொழுத்த முதுகின் மீது மெதுவாகத் தட்டினான்.

''எங்களுக்கே உரிய சொந்த முறையில் எல்லா வகையான வேடிக்கைகளும் செய்து கொண்டோம். அதிருக்கட்டும், யாராவது என்னைக் கேட்டார் களா?''

''இல்லை...''

''அவ்வளவுக்கு மிகவும் நல்லது. கொட்டத் திற்குச் சாவியைக் கொடுங்க...''

சாவிச் சங்கிலியைச் சுழற்றிக்கொண்டே காரின் வெளியே தோட்டத்திற்குள் சென்றான். அங்கே ஏரியல் கம்பங்கள் நாட்டிய, கண்ணாடிச் சுவர்கள் கொண்ட கூடார மண்டபம் இருந்தது. இங்குமங் கும், பேணப்பெறாத பூப்படுக்கைகளில் பீங்கான் உள்ள உருவங்கள் பறவைகளால் எச்சமிடப்பட்டு நின்றன. காரின் கண்ணாடிக் கதவைத் திறந்து நுழைந்து சன்னல்களை முழுமையாகத் திறந்துவிட் டான். சன்னல் குறட்டின்மேல் சாய்ந்து நின்று சிறிது நேரம் காலைக் காற்றைப் புத்துணர்வோடு சுவா சித்துக் கொண்டிருந்தான். வங்கிகளிலும் தொழிற் சாலைகளிலும் தனது அலுவல்களை முடித்துக் கொண்டு ஏறத்தாழ இருபது மணி நேரத்தைக் காரி லேயே கழித்துள்ளான். இருபத்தெட்டாம் தேதிக்கு இப்போது ஒவ்வொன்றும் தயாராக இருந்தது.

சன்னலருகில் எவ்வளவு நேரம் நின்றான் என் பது அவனுக்கு நினைவில்லை. நிமிர்ந்து ஒரு சுருட் டைப் பற்ற வைத்துக்கொண்டு டைனமோவை முடுக்கி, வானொலிச் செய்திப் பொறியை ஆய்ந்து பார்த்து இயக்கினான். பிறகு ஒலிபெருக்கியின் முன் நின்றுகொண்டு உரக்கவும் தெளிவாகவும் பேசி னான்:

''ஸோயா, ஸோயா, ஸோயா, ஸோயா... என் குரல் கேட்குதா? என் குரலைக் கேட்க முடியுதா? நீ விரும்பிய படியே எல்லாம் இருக்கும். நீ அதிகளவு விரும்ப வேண்டியது மட்டுந்தான். நீ எனக்குத் தேவை. நீ இல்லாமல் என்னோட பெருமுயற்சி ஏது மில்லாததாக எனக்குத் தோனுது. இன்னும் ஓரிரு நாளில் நேப்பிள்ஸில் இருப்பேன். சரியாக எப்போது என்று நாளைக்குச் சொல்றேன். எதைப் பற்றியும் கவலைப்படாதே. எல்லாமே நல்லபடியாகப் போய்க் கொண்டிருக்கு...''

கணம் நிறுத்தித் தனது சுருட்டை ஊதிப் புகை இழுத்துவிட்டு மீண்டும் தொடங்கினான்: ''ஸோயா, ஸோயா...'' டைனமோ உம்மென்று ஒலித்தது. ஏரியலிருந்து கட்புலனாகா காந்த அலைகள் ஒன்றன்பின் ஒன்றாகச் சென்றன.

ஒரு பீரங்கிப் படையணி முழுதும் நடந்து சென்றிருந்தாலும் அந்நேரத்தில் காரின் அதைக் கேட்டிருப்பான் என்பது சந்தேகமே. புல்வெளியின் முடிவில் சரிவின் கீழே கற்கள் உருண்டதையும் அவன் கேட்கவில்லை. கூடார மண்டபத்திலிருந்து ஐந்து தாவடித் தொலைவில் புதர்கள் விலகி ஒரு மனிதனின் கண்ணளவு உயரத்தில் 'கோல்ட்' கைத்துப்பாக்கியின் வாய்முகப்பு தோன்றியது.

65

டெலிபோன் ரிசீவரை ரோல்லிங் எடுத்தான்.

''ஆமா.''

''ஸெமியோனவ் பேசுறேன். காரினிடமிருந்து சென்ற வானொலிச் செய்தியை சற்று முன்னர் குறுக்கிட்டுக் கேட்டேன். உங்களுக்கு அதைப் படித்துக் காட்டட்டுமா?''

''சரி.''

''நீ விரும்பிய படியே எல்லாம் இருக்கும், நீ அதிகளவு விரும்ப வேண்டியது மட்டுந்தான்...'' என ருஷ்யனிலிருந்து பிரெஞ்சுக்கு எப்படியோ ஒரு

விதமாக மொழிபெயர்க்கத் தொடங்கினான் ஸெமி யோனவ். ரோல்லிங் ஓசை செய்யாது கேட்டான்.

''அவ்வளவுதானா?''

''ஆம், ஐயா.''

''இதைக் குறித்துக்கொள்ளுங்க,'' ரோல்லிங் சொல்லத் தொடங்கினான்: ''டிரான்ஸ்மீட்டரை உடனே 421 மீட்டர் ஒலியலை நீளத்திற்குச் சரி செய்து கொள்ளுங்க. இன்றையச் செய்தியை இடை மறித்து நீங்க கேட்ட பத்து நிமிடங்களுக்கு முன் னால் நாளை இந்தத் தகவலை அனுப்பத் தொடங் கிருங்க: 'ஸோயா, ஸோயா, ஸோயா... எதிர்பா ராத துரதிர்ஷ்டம் நேர்ந்துவிட்டது. நாம் செயல்பட் டாக வேண்டும். உங்களுடைய நண்பனின் உயிரை நீங்க மதித்தால் வெள்ளியன்று நேப்பிள்ஸில் இறங்க வும். 'ஸ்ப்ளெண்டிட்' ஓட்டலில் தங்கி சனி நண் பகல் வரைச் செய்தியை எதிர்பார்க்கவும்'. இதைத் தொடர்ச்சியாகத் திரும்பச் சொல்லுங்க. நான் சொல்றது கேட்குதா? உரத்த, நம்பிக்கையூட்டும் குரலில் தொடர்ந்து சொல்லுங்க. அவ்வளவுதான்.''

ரோல்லிங் மணியடித்தான்.

''திக்லீன்ஸ்கியைக் கண்டுபிடித்து உடனே அவ னை என்னிடம் கூட்டி வாங்க,'' என்று கதவுக்கரு கில் தோன்றிய செயலாளனிடம் சொன்னான். ''நே ரே விமான நிலையத்திற்குப் போய் மூடிய பயண விமானமொன்றைக் கூலிக்கோ விலைக்கோ வாங் குங்க. எதுவானாலும் வித்தியாசமில்லை. விமானியை யும் மெக்கானிக்கையும் கூலிக்குப் பிடிங்க. இருபத் தெட்டாம் தேதி புறப்படுறதுக்கு எல்லாத்தையும் தயாராக வைத்திருங்க...''

66

வோல்ஃபும் ஹ்லினோவும் அந்நாளின் எஞ்சிய பகு தியை 'க' நகரில் செலவிட்டனர். தெருக்களில் சுற்றித் திரிந்தனர், சுற்றுலாப் பயணிகள் போல உள்ளூர் வாசிகளிடம் சோம்பேறித்தனமாகப் பேசி

னர். நகர் அடங்கியவுடன் வோல்ஃபும் ஹ்லீனோவும் குன்றுகளுக்குப் புறப்பட்டனர். ஷ்டுபெருடைய பங்களாவுக்குச் செல்லும் சரிவில் நள்ளிரவின் போது ஏறிக்கொண்டிருந்தனர். போலீஸார் அவர்களைக் கவனிக்கத் தொடங்கினால், வழியைத் தவறவிட்ட சுற்றுலாப் பயணிகளாகத் தங்களைக் காட்டிக் கொள்ள முடிவு செய்தனர். போலீஸாரால் நிறுத்தப் பட்டால் அவர்களின் கைது மேற்கொண்டு எந்தத் தொல்லை விளைக்காது, நகரமுழுதுமே அங்கே அவர்கள் சுற்றித்திரிந்ததை உறுதிப்படுத்தக் கூடும். புதரினின்றும் சுட்ட பிறகு காரினுடைய மண்டையோட்டினின்றும் சில்லுகள் பறப்பதைத் தெளிவாகக் கண்டவுடன் வோல்ஃபும் ஹ்லீனோவும் அங்கிருந்து புறப்பட்டு நாற்பது நிமிடங்களுக்குள் மீண்டும் நகரத்தில் இருந்தனர்.

இப்போது அவர்கள் குட்டையாயிருந்த வேலியை ஏறித்தாண்டியும், திறந்த புல்வெளியைச் சுற்றி எச்சரிக்கையுடன் நகர்ந்தும், புதர்களில் மறைந்துகொண்டே வீட்டை நெருங்கினர். நின்று, ஒன்றும் புரியாமல் ஒருவரையொருவர் வியப்புடன் நோக்கினர். வீட்டிலும் தோட்டத்திலும் எல்லாம் அமைதியாகவும் ஓசையின்றியும் இருந்தன. சில சன்னல்களில் வெளிச்சம் தெரிந்தது. தோட்டத்திற்குச் செல்லும் பெரும் வாயிற்கதவு விரியத் திறந்து கிடந்தது. கற்படிகள் மீதும் செறிந்த புல்லினுள் இருந்த குள்ளப்பதுமைகள் மீதும் அமைதியாக ஒளி படிந்தது. வாயிலின் மேற்படியில் புல்லாங்குழலை மெதுவாக ஊதிக்கொண்டு ஒரு கொழுத்த மனிதன் அமர்ந்திருந்தான். அவனருகில் வைக்கோலால் மூடப்பெற்ற போத்தல் ஒன்று இருந்தது. கொட்டத்துக்குச் செல்லும் தோட்டப் பாதையில் இதே மனிதன் தான் காலையில் காணப்பட்டவன். துப்பாக்கி வெடிப்பதைக் கேட்டவுடன் பின் திரும்பி, தள்ளாடிக்கொண்டே பாய்ச்சலில் வீட்டிற்கு ஓடினான். அசம்பாவிதமாக ஒன்றும் நடைபெறாதது போன்று இப்போது அவன் சாந்தமாக இருந்தான்.

''வாங்க,'' என்றான் ஹ்றலீனோவ். ''நாம கண்டு பிடித்தாகணும்.''

''நான் தவற விட்டிருக்க முடியாது,'' என்று முணுமுணுத்தான் வோல்ஃப்.

வாயிலை அவர்கள் அணுகினர். பாதையின் பாதி வழியில் ஹ்றலீனோவ் மெல்லச் சொன்னான்:

''உங்களுக்குத் தொந்தரவு தருவதற்காக மன்னிக்கணும்... இங்கு ஏதேனும் நாய்கள் இருக்கா?''

ஷ்டுபெர் தனது புல்லாங்குழலைக் கீழே வைத்து, தான் இருந்த படிகளின் பக்கம் சுற்றித் திரும்பி தெளிவின்றித் தெரிந்த இரு உருவங்களைத் துருவி நோக்குவதற்காகத் தன் கழுத்தை நீட்டினான்.

''ஆமாம்,'' என்று மெதுவாகச் சொன்னான், ''முரட்டு நாய்கள் இங்கே இருக்கு.''

ஹ்றலீனோவ் நிலைமையை விளக்கினான்:

''நாம் பாதையைத் தவற விட்டுட்டோம். கோட்டையின் இடிபாடுகளைப் பார்க்க விரும்பினோம்... இங்கே நாங்க ஓய்வு எடுத்துக்கொள்ளலாமா?''

ஷ்டுபெர் உறுதியில்லாத உறுமலுடன் விடையளித்தான். வோல்ஃபும் ஹ்றலீனோவும் குனிந்து அவனுக்கு வணக்கம் செய்து கீழ்ப்படியில் அமர்ந்தனர். இருவரும் தற்காப்புடன் எச்சரிக்கையாக இருந்தனர், பரபரப்பும் கொண்டிருந்தனர். தன் இருக்கையில் அமர்ந்தபடியே அவர்களை ஷ்டுபெர் நோக்கினான்.

''அதாவது,'' என்று அவன் தொடங்கினான், ''நான் பணக்காரனாக இருந்தபோது தோட்டத்தில் நாய்களை அவிழ்த்து விடுறது வழக்கம். துடுக்கர்களையும் நள்ளிரவில் வரும் அழையா விருந்தினரையும் நான் விரும்புறதில்லை. (வோல்ஃபின் கையை விரைவாக அழுத்திப்பிடித்து அமைதியுடன் இருக்குமாறு ஹ்றலீனோவ் குறிப்பு செய்தான்). அமெரிக்கர்கள் என்னைப் பாழாக்கிட்டாங்க, மீறி நுழையிறவங்களுக்கு ஆயிரம் மார்க் அபராதம் விதிக்கப்படும் என்று அறிவிப்புப் பலகைகள் எல்லா இடங்

களிலும் இருந்தாலும், எனது தோட்டம் வீணர்களுக்கெல்லாம் திறந்த வழியாக மாறிவிட்டது. ஜெர்மனியர்கள் சட்டத்திற்கோ சொத்துக்கோ இப்போதெல்லாம் எந்த மரியாதையும் காட்டுறதில்லே. இந்த இடத்தைச் சுத்தி முள் கம்பி போட்டு இரவுக் காவலனை அமர்த்தும்படி பங்களாவை வாடகைக்கு எடுத்தவனிடம் சொன்னேன். என் பேச்சை அவன் கேட்கலே, அவனேதான் பொறுப்பாளி...''

வோல்ஃப் சிறு கல் ஒன்றை பொறுக்கி இருட்டிற்குள் எறிந்தான்.

''ஏன், இந்தப் பார்வையாளர்களால் ஏதேனும் விரும்பத்தகாதது நடக்குதா?'' என வினவினான்.

'' 'விரும்பத்தகாதது' என்பது மிகக் கடுமையான சொல். 'வேடிக்கையானது' என்பது அதற்கு ஏற்றது. ரொம்பக் காலத்துக்கு முன்னே இல்லை, இன்னைக்குக் காலையில் தான். எந்தவகையிலும் எனது பொருளாதார நலன்கள் பாதிக்கப்படலே. என்னோட தனிப்பட்ட கேளிக்கைகளுக்கு என்னை நான் ஈடுபடுத்துவேன்.''

தன் உதடுகளில் புல்லாங்குழலை வைத்துக் கொண்டு காதைத் துளைக்கும் சில ஒலிகளை எழுப்பினான்.

''எப்படியும், அவன் இங்கே வாழ்ந்தாலோ கோலோனில் பெண்களுடன் சுற்றித்திரிந்தாலோ எனக்கு என்ன? இறுதிக் காசு வரையிலும் என் கணக்கைத் தீர்த்துட்டான்... அம்முறையில் அவனை எவரும் குறை சொல்ல முடியாது. ஆனா அந்தக் கனவான் சற்று பதற்றக்காரன் போலத் தோனுது. போரின் போது கைத்துப்பாக்கி வெடிகளுக்குப் பழக்கப்பட்டிருக்கணும். சாமான்களை எல்லாம் மூட்டை கட்டிக்கிட்டு விடைபெற்றுக் கொண்டான்... நல்லது, போய்ச் சேரட்டும்.''

''ஒரேயடியா போய்ட்டானா?'' என்று ஹ்லீனோவ் திடீரென்று உரத்த குரலில் வினவினான்.

ஷ்டுபெர் எழுந்து நின்று மீண்டும் உடனே அமர்ந்தான். அறையின் வெளிச்சம் பட்ட அவனுடைய எண்ணெய்ப் பசையுள்ள சிரித்த கன்னம்

சிவப்பேறியது. அவனது கொழுத்த தொந்தி குலுங்கியது.

''உண்மை இதுதான். அவன் புறப்பட்டதைப் பற்றி இரண்டு கனவான்கள் என்னிடம் கட்டாயம் கேட்பாங்க என்று எனக்குச் சொன்னான். அன் பார்ந்த கனவான்களே, அவன் போய்ட்டான். நீங்க நம்பாட்டா—உள்ளே வாங்க, அவனோட அறைகளை உங்களுக்குக் காட்டுறேன். நீங்க அவனோட நண்பர்களாயின், உள்ளே வந்து, உறுதிப்படுத்திக் கங்க... அது உங்க உரிமை—அறைகளுக்கு வாடகை கொடுக்கப்பட்டு விட்டது. நீங்க அதுபற்றி எதுவும் பொருட்படுத்த வேண்டியதில்லை...''

ஷ்டுபெர் மீண்டும் எழுந்து நிற்க முயன்றான், ஆனால் அவன் கால்கள் அவனைத் தாங்கிப் பிடிக்கவில்லை. பயனுடைய வேறு எதையும் அவனிடமிருந்து பெறுவதற்கில்லை. வோல்ஃபும், ஹ்றலீனோவும் நகரத்திற்குத் திரும்பினர். திரும்பும் வழி முழுதும் அவர்களிடமிருந்து ஒரு சொல்லும் வெளிவரவில்லை. கருநிற நீருக்கு மேலிருந்த பாலத்தின்மேல் தெருவிளக்கொன்று பிரதிபலித்த இடத்தில் வோல்ஃப் திடீரென்று நின்று தன் கை முட்டிகளை இறுக்கிக்கொண்டு கூறினான்:

''என்ன சனியன்! அவனது மண்டையோட்டிலிருந்து சில்லுகள் வெளிப் பறந்ததை நானே பார்த்தேனே...''

67

நன்கு வகிர்ந்து சீவப்பட்ட நரையோடிய முடியும் நீல மூக்குக்கண்ணாடியால் மூடப்பட்ட நோவுற்ற கண்களும் கொண்ட ஒரு குட்டையான கட்டுடலுடைய மனிதன் தளவரிசையிட்ட கணப்புக்கருகில் தலையைக் குனிந்தவாறு ஹ்றலீனோவின் கதையைக் கேட்டுக்கொண்டு நின்றான்.

சோவியத் தூதரகத்தின் வரவேற்பு அறையில் முதலில் சோபாவில் அமர்ந்த ஹ்றலீனோவ், பிறகு

சன்னல் குறட்டிற்கு நகர்ந்து, இறுதியாக இங்குமங்கும் நடக்கத் தொடங்கினான்.

காரினையும் ரோல்லிங்கையும் பற்றித் தான் அறிந்ததை ஹ்றலீனோவ் கூறினான். அவனது கதை சரியாகவும் பொருத்தமாகவும் இருந்தது. ஆனால் அந்நிகழ்ச்சிகளின் நடக்க முடியாத தன்மையை ஹ்றலீனோவும் உணர்ந்தான்.

''வோல்ஃபும் நானும் தவறியதாக வைத்துக் கொள்வோம்... அவ்வளவுக்கும் நல்லதுதான். தவறான முடிவுகளுக்கு வந்துவிட்டோம் என்றாலும், ரொம்ப மகிழ்ச்சியடைவோம். இருந்தாலும் பெரு விபத்து நேரும் என்பதற்கு ஐம்பது விழுக்காடு வாய்ப்பு இருக்கு. அடுத்த ஐம்பது விழுக்காட்டை மட்டிலுமே நாம் கருதணும். தூதுவர் ஆகிய நீங்க மக்களை நம்ப வைக்க முடியும், அவர்களிடம் செல்வாக்குச் செலுத்த முடியும், அவர்களோ!— கண்களைத் திறக்க முடியும்... இந்த விஷயம் முழுதும் மிக ஆபத்தானது. அந்தக் கருவி உண்மையாவே இருக்கு. ஷெல்கா உண்மையாகவே அதைத் தொட்டிருக்கிறான். இந்த நிமிடமே நடவடிக்கை எடுக்கப் படணும். இன்னும் இருபத்து நான்கு மணிக்கு மேல் நாம் காலங் கடத்த முடியாது. நாளைக்கு ராத்திரி விஷயங்கள் நடக்கப்போகுது. வோல்ஃப் 'க' நகரிலேயே தங்கிட்டான். தொழிலாளர்கள், தொழிற் சங்கங்கள், நகரக்குடிமக்கள், தொழிற்சாலை நிர்வாகம் ஆகியவற்றை எச்சரிக்க அவனால் இயன்றதைச் செய்து கொண்டிருக்கிறான். அவனை ஒருத்தரும் நம்ப மாட்டாங்க என்பதைச் சொல்லவே தேவையில்லை... ஏன், நீங்க கூட...''

தூதுவர் பேசவோ கண்களை உயர்த்தவோ இல்லை.

''உள்ளூர் பத்திரிகை அலுவலகத்தில் கண்களில் நீர் வரும்வரை சிரிச்சாங்க... மேற்கொண்டு நாங்க பைத்தியமா கருதப்பட்டோம்...''

ஹ்றலீனோவ் தலையைப் பிடித்துக்கொண்டான்—வாரப்படாத மயிரின் கற்றைகள் அழுக்குள்ள அவன் விரல்களுக்கிடையே வெளி நீட்டின. அவன்

முகம் சுண்டியும் தூசுபடிந்தும் இருந்தது. ஏதோ கொடூரம் ஒன்றைக் கூர்ந்து பார்ப்பது போல அவனது கண்கள் நிலைத்து விழித்திருந்தன. தூதுவர் கண்ணாடிகளுக்கு மேலாக அவனை எச்சரிக்கையுடன் நோக்கினார்.

''முன்னமேயே நீங்க ஏன் எங்கிட்ட வரலே?''

''எங்களிடத்தில் ஆதாரங்கள் இல்லை... அனுமானங்களும் முடிவுகளும் எல்லாம் கற்பனையின், மன மருட்சியின் எல்லையில் இருந்தன, அது பைத்தியக்காரத்தனம்... இப்பக் கூடச் சில நேரங்களில் விழித்தெழுந்து நிம்மதிப் பெருமூச்சு விடுறேன் என்று எனக்குத் தோணுது... நான் சரியான மன நிலையில் இருப்பதாக உங்களுக்கு உறுதி கூறுறேன். வோல்ஃபும் நானும் எட்டு நாள்களாக உடை மாற்றவுமில்லை, படுத்துத் தூங்கவும் இல்லை.''

சிறிது நேர அமைதிக்குப் பிறகு, ஆழ்ந்த குரலில் தூதுவர் பேசினார்:

''தோழர் ஹ்றலீனோவ், இது ஏமாற்று அல்ல என்பது உறுதி. பெரும்பாலும் நீங்க உள்ளத்தை அலைக்கும் ஒரு கருத்துக்கு ஆட்பட்டிருக்கீங்க.'' அவர் ஹ்றலீனோவின் பதற்றக் குறிகளைத் தடுப்பதற்காகக் கையை உயர்த்தினார். ''ஆனா நீங்க சொல்ற ஐம்பது விழுக்காடு என்னை நம்பவைக்கிது. நான் போய் என்னால் முடிந்ததெல்லாம் செய்றேன்...''

68

இருபத்தெட்டாம் தேதி அதிகாலையிலிருந்தே கூட்டம் கூட்டமாக நகர மக்கள் 'க' நகரச் சதுக்கத்தில் ஒன்றுகூடினர். மூலைவீடுகளின் சுவர்களில், மெல்லப் பட்ட ரொட்டிப் பசை கொண்டு ஒட்டப்பட்ட அறிக்கைகள் பற்றிச் சிலர் குழப்பத்துடனும் பிறர் ஓரளவு அச்சத்துடனும் விவாதம் செய்து கொண்டிருந்தனர்.

''அதிகாரிகளோ, அல்லது தொழிற்சாலை நிர்வாகமோ, அல்லது தொழிற்சங்கத்தினரோ, எவ

ருமே எங்களது விடாப்பிடியான வேண்டுகோளைக் கேட்க விரும்பவில்லை. இன்று தொழிற்சாலைகள், நகரம், முழு மக்கள்தொகை ஆகிய அனைத்தும் அழிக்கப்படும் அபாயம் உள்ளதென நாங்கள் முற்றி லும் நம்புகிறோம். அதைத் தடுப்பதற்கு முயன் றோம், ஆனால் அமெரிக்க பாங்கர்களிடம் கூலி பெறும் கயவர்களைப் பிடிக்க இயலவில்லை. நகரை நீங்கிச் சமவெளிக்குச் சென்று உங்களைக் காத்துக் கொள்ளுங்கள். கடவுளின் பெயரால் நாங்கள் கூறு கிறோம். உங்கள் உயிரின் பொருட்டும், உங்கள் குழந்தைகளுக்காகவும் எங்களை நம்புங்கள்.''

இந்த அறிக்கைகளை எழுதிவிட்டது யார் என்று ஊகித்து போலீஸார் வோல்ஃபைத் தேட முயன்ற னர். ஆனால் வோல்ஃப் மறைந்துவிட்டான். பகல் பொழுதில் நகர அதிகாரிகள் சுவரொட்டிகள் மூலம் மக்களுக்கு எச்சரிக்கை விடுத்தனர்: எந்தச் சந்தர்ப் பத்திலும் நகரை விட்டு மக்கள் வெளியேறிப் பீதி உண்டாக்கக் கூடாது என்றும், அன்றிரவு ஆளில்லாத வீடுகளில் தம் மனம் போலக் கொள்ளைக்காரர்கள் நாசமாக்க எண்ணியிருக்கின்றனர் என்றும் அறிவித் தனர்.

'' 'க' நகர மக்களே! நீங்கள் ஏமாற்றப்பட் டிருக்கிறீர்கள். உங்கள் பொது அறிவைக் காட்டுங் கள். குற்றவாளிகள் இன்று கண்டுபிடிக்கப்பட்டு கைது செய்யப்படுவார்கள், சட்டப்படி நடவடிக் கை எடுக்கப்படும்.''

மக்கள் மனத்தில் நன்கு பதியுமாறு அதிகாரி கள் தெரிவித்தனர்: அவர்களுடைய விளக்கம் முற்றி லும் எளிமையானதாக இருக்கவே, நகர மக்கள் அமைதியுற்று தாங்களாகவே நகைத்துக்கொண் டார்கள்: ''அது சாமர்த்தியமான தந்திரம். இரவு முழுதும் வீடுகளையும் கடைகளையும் சூறையாடி யிருப்பார்கள். இரவு முழுவதும் நாம் அச்சத் தால் நடுங்கிக் கொண்டு சமவெளியில் கிடந்திருப் போம்.''

மற்றைய ஆயிரக்கணக்கான மாலைப் பொழுது

களைப் போலவே, மறையும் சூரியனின் ஒளி வீடு களின் சன்னல்களில் எதிரொளிக்குமாறு மாலை வந் தது. மரங்களில் இருந்த பறவைகளின் ஓசை அடங் கியது. ஆற்றுக்கரைகளின் நைப்பில் தவளைகள் கத்தின. செங்கலால் கட்டப்பட்டிருந்த சர்ச்சின் கடிகாரம் எட்டு அடித்தது. வாடிக்கையாளர்கள் நுரை பொங்கும் பீர் தங்கள் மீசைகளை நனைக்கு மாறு நிதானமாகக் குடித்த மதுக்கடைகளின் சன் னல்களிலிருந்து வெளிச்சம் அமைதியாகப் புறப் பட்டது. நகர்ப்புறத்திலிருந்த 'சங்கிலியால் பிணிக் கப்பட்ட எலும்புக்கூட்டின் அருகில்' என்ற பீர்க் கடையின் உரிமையாளன் கூட அமைதியாகி விட் டான்; வெறுமையான தனது நிலையத்தின் வெளிக் கூடத்தில் இங்குமங்கும் சிறிது நேரம் நடந்த அவன் அரசாங்கத்தையும் சோஷலிஸ்டுகளையும் யூதர்களை யும் திட்டினான். சன்னல் மேல் கதவுகளை மூடும் படிக் கட்டளையிட்ட பிறகு நகரிலுள்ள தனது காதலியைக் காண்பதற்காக சைக்கிளில் புறப்பட் டான்.

இந்நேரத்தில்தான் ஒரு கார் விளக்குகளின்றி, கிட்டத்தட்ட ஓசையுமின்றி மேலைச் சரிவில் குறை வாகப் பயன்படுத்தப்பட்ட ஒரு தெரு வழியாக விரைந்து சென்றது. சூரியன் மறைந்து விட்டாலும் விண்மீன்கள் இன்னும் போதிய வெளிச்சம் தர வில்லை, நிலவு எழுந்து கொண்டிருந்த குன்று களுக்கு அப்பாலிருந்து குளிர்ந்த நீல ஒளி வந்தது. பள்ளத்தாக்கில் விளக்குகள் இங்குமங்கும் ஒளிர்ந் தன. தொழிற்சாலைகளில் மட்டும்தான் வழக்கம் போல வாழ்க்கை நடைபெற்றது.

கோட்டையின் இடிபாடுகளால் சுற்றிச் சூழப் பட்ட மலைமுகட்டின் ஓரத்தில் வோல்ஃபும் ஹ்லீ னோவும் அமர்ந்திருந்தனர். மீண்டும் அவர்கள் அப் பாழ்ப்பகுதியின் ஒவ்வொரு மூலை முடுக்கிலும் ஆராய்ந்தனர், சதுர கோபுரம் முழுதும் ஏறிப்பார்த் தனர். ஆனால் காரினின் ஏற்பாடுகளின் ஒரு சுவட் டைக்கூடக் காணவில்லை. தொலைவில் ஒரு கார் வரும் ஓசையைக் கேட்டது போன்று ஒரு கணம்

எண்ணினர். உற்றுக்கேட்டு இருளில் ஊடுருவி நோக்கினர். பூமியின் பழங்கால அமைதியை நினை வூட்டும் வண்ணம் மாலை வேளை அமைதி நிறைந் திருந்தது. இடையிடையே தோன்றிய காற்றுச் சுழற்சியினால் கீழிருந்து ஈரம் படிந்து பூக்களின் மணம் வந்தது.

''நிலப்படத்தைப் பார்த்தேன்,'' என்றான் ஷ்லீனோவ், ''மேலைச் சரிவினின்றும் இறங்கினால் ரயில்பாதையைக் குறுக்கிடுவோம். அங்கே உள்ள ஒரு சிறு நிலையத்தில் ஐந்தரை மணிக்கு அஞ்சல் ரயில் நிற்கிறது. அங்கே போலீஸார் பார்த்துக்கொண் டிருப்பர் என்று நான் நினைக்கவில்லை.''

''முடிவு முட்டாள்தனமானது, நகைப்பிற்குரி யது,'' எனப் பதிலளித்தான் வோல்ஃப். ''நான்கு கால் நிலையில் திரிந்து விட்டு, நேராக நிமிர்ந்து நிற்கும் நிலையை மனிதன் ஏற்றுக்கொண்டது மிகச் சமீபத்தில் தானே. பல கோடி ஆண்டுகளாகப் பெற் றிருந்த அறிவு விளக்கமில்லாத விலங்குத்தன்மை இன்னும் அவனிடத்தில் பெருஞ்சுமையாக இருக்கு. ஒரு பெரிய கருத்தினால் வழிப்படுத்தப்படாத மக் கள்திரள் பயங்கரமானது ஆகும். தலைவர்களில்லாத படி மக்களை விடக் கூடாது. திரும்பவும் நான்கு கால் நிலைக்குப் போகணும் என்ற உந்துதல் அவர் களுக்கு மிக வலிமையா இருக்கு.''

''ஏன் அவர்கள்மீது அவ்வளவு கடுமை, வோல் ஃப்?''

''அலுத்துப் போனேன்,'' என்றான் வோல்ஃப். கற்குவியல் ஒன்றின்மேல் அமர்ந்து, இறுக மூடிய முன்கைகளின் மேல் தனது வலிய முகவாயை அழுத் திக்கொண்டான். ''இருபத்தெட்டாம் தேதி ஒரு ஜோடி திருடர்களையும் சுயவர்களையும் போல நாம் துரத்தப்படுவோம்னு நீங்க ஒரு கணமாவது கற்பனை செய்ததுண்டா? நான் வற்புறுத்திப் பேசிய போது அந்த அதிகாரப் பிரதிநிதிகளின் கண்ணோட் டப் பரிமாற்றத்தை நீங்க பார்த்திருக்கக் கூடுமா னா... எத்தகைய முட்டாள் நான்! அவர்கள் சொன் னது சரிதான். அதுதானே தொல்லை. தங்களை

அச்சுறுத்திய அபாயத்தை அவர்கள் ஒருபோதும் அறிந்துகொள்ள மாட்டார்கள்...''

''நீங்க மட்டும் சுடாமல் இருந்திருப்பீர்களே யானால், வோல்ஃப்...''

''சனியன்!.. நான் தவறவிடாது இருந்திருந்தால்? அந்த அறிவிலிகளுக்கு நிரூபிக்க மட்டும் முடிந்திருந் தால் பத்தாண்டுச் சிறையினை மனமுவந்து ஏற்றுக் கொள்வேன்...''

இடிபாடுகளால் வோல்ஃபின் குரல் மந்தமாக எதிரொலித்தது. இந்த இருவருக்கும் அப்பால் முப்பது தாவடித் தொலைவில் பாதியழிந்திட்ட சுவரின் நிழலில், வேடன் தன் வேட்டை இரையின் பால் பதுங்கிச் செல்வது போல, காரின் ஊர்ந்து கொண்டிருந்தான். குன்று முகட்டோரத்தில் அமர்ந் திருந்த அவ்விருவரின் இருட்டுருவங்களின் தோற் றம் அவனுக்குத் தெளிவாகத் தெரிந்தது, அவர் கள் கூறிய ஒவ்வொரு சொல்லையும் அவன் கேட்க முடிந்தது. சுவரின் முடிவுக்கும் கோபுரத்துக்கும் இடையிலிருந்த திறந்த வெளியைத் தவழ்ந்தபடி கடந்தான். சங்கிலியால் பிணிக்கப்பட்ட எலும்புக் கூடு அமைந்திருந்த வளைவுக்கூரையுள்ள குகை, கோபுரத்தின் அடிப்பகுதி ஒட்டிச்சேரும் இடத்தில் ஒரு மணல் கல் தூணின் துண்டு கிடந்தது. அதன் பின்புறத்தே காரின் பதுங்கிக்கொண்டான். கல் நொறுங்கும் ஓசையும் இரும்பு உராயும் ஒலியும் கேட்டு வோல்ஃப் எழுந்து நின்றான்.

''அதைக் கேட்டீங்களா?''

காரின் தரைக்குள் புகுந்து மறைந்து விட்ட கற்களின் குவியல் பக்கம் ஹ்லீனோவ் பார்த்தான். அவர்கள் அங்கே ஓடிப்போய் பிறகு கோபுரத்தைச் சுற்றிலும் நடந்தனர்.

''இங்கே நரிகள் இருக்கு,'' என்று சொன்னான் வோல்ஃப்.

''இல்லை. ஏதாவது ராப்பறவையின் கூக்குரலாக பெரும்பாலும் இருக்கலாம்.''

''நாம் இங்கிருந்து போயிருவோம். நீங்களும்

நானும் பேய்க்காட்சிகளைக் காணத் தொடங்கு றோம்.''

இடிபாடுகளிலிருந்து பெருஞ்சாலைக்குச் செல் லும் செங்குத்தான பாதையை அவர்கள் நெருங்கின போது ஏதோ வீழ்ந்து தரை மீது உருண்டு போவது போல இரண்டாவது ஓசையைக் கேட்டனர். வோல்ஃப் உடல் பறினான். நெடுநேரம் வரை மூச்சுக்கூட விடாது உற்றுக்கேட்டனர். அவர்களது செவிகளில் ஓசையின்மையே ஒலிப்பது போன்றிருந்தது. தலை உயரத்தில் தாழப் பறந்த கண் காணாத இரவுப் பறவை ஒன்று 'விப்-விப்-விப்' எனக் குரலிட்டது.

''போவோம்.''

''ஆமா. இங்குத் தங்குறது அறியாமை.''

இத்தடவை ஒரு முறைகூடத் திரும்பிப் பாராது உறுதியுடன் இறங்கும் வழியில் நடந்தனர். இது அவர்களில் ஒருவனின் உயிரைக் காத்தது.

69

காரினின் மண்டையோட்டிலிருந்து சில்லுகள் பறந்ததைத் தான் பார்த்ததாக வோல்ஃப் கூறியதில் ற்றிலும் தவறில்லை. ஒலிபெருக்கியின் முன்னே ணநேரம் காரின் தயங்கி நின்ற போது, மேசை யிலிருந்து எரிந்து கொண்டிருந்த ஒரு . சுருட்டை எடுப்பதற்காகக் குனிந்தான். தன்னுடைய குரலை ஒழுங்குபடுத்துவதற்காக காதில் அழுத்திமாட்டியிருந்த எபனைட் செவிக் கிண்ணம் திடீரென்று பல துண்டுகளாகப் பறந்தது. அதே நேரத்தில் கைத் துப்பாக்கி வெடியோசையைக் கேட்டதுடன் தனது மண்டையோட்டின் இடப் புறம் அடிபட்டதையும் உணர்ந்தான். ஒரு பக்கமாகச் சாய்ந்து விழுந்து, உருண்டு, முகங்குப்புற, அசையாது கிடந்தான். ஷ்டுபெர் கீச்சிடுவதையும், அதன்பிறகு சிலர் ஓடும் காலடியோசையையும் கேட்டான்.

''யார் அது, ரோல்லிங்கா ஷெல்காவா?'' இதைப் பற்றித்தான் தன் மூளையைக் குழப்பிக்கொண்டே

இரண்டு மணி நேரத்திற்குப் பிறகு கோலோன் நகரை நோக்கித் தன் காரில் விரைந்து சென்றான். குன்றின் முகட்டிலிருந்த இருவருடைய உரையாடலைக் கேட்ட போதுதான் விடை கண்டான். புத்திசாலிப் பயல், அந்த ஷெல்கா... எனினும், அவன் நேர்மையாக விளையாடவில்லை...

ஆள் நுழையும் துருப்பிடித்த தொளையை அடைத்துக் கிடந்த மணல்கல் துண்டு ஒன்றை ஒரு புறமாகத் தள்ளிவிட்டு, தரைக்கடியில் குதித்தான். நொறுங்கிக் கொண்டிருந்த மாடிப்படிகளில் கையிலிருந்த மின்விளக்கு வெளிச்சத்தில் நார்மன் கோபுரத்தின் தடித்த சுவரில் தனித்து இருந்த பொந்தாகிய 'கல் பெட்டி'க்கு ஏறினான். இரண்டரைத் தாவடிச் சதுரப் பரப்புடைய அப்பொந்தில் சன்னலே இல்லை. பித்தளை வளையங்களும் சங்கிலிகளும் சுவரில் இன்னும் இருந்தன. செப்பமின்றி அமைக்கப்பட்ட கட்டுமேடை ஒன்றின்மேல் ஒரு புறத்தில் காரினின் கருவி இருந்தது. அதற்கு அடியில் வெடிமருந்து நிறைந்த நான்கு தகரடப்பாக்கள் இருந்தன. கருவியின் வாய்முகப்புக்கு எதிரே சுவரில் ஒரு தொளை வெட்டப்பட்டு, சங்கிலியால் பிணிக்கப்பட்ட எலும்புக்கூட்டால் வெளிப்புறம் மறைக்கப்பட்டிருந்தது.

காரின் மின்விளக்கை அணைத்து, கருவியின் வாய்முகப்பை ஒரு புறம் தள்ளிவிட்டு, சுவரின் ஓட்டை வழியாகக் கையை விட்டு எட்டு எலும்புகளை அப்பால் எறிந்தான். கூட்டினின்றும் மண்டையோடு விழுந்து தரையில் உருண்டது. திறவை வழியாக தொழிற்சாலைகளின் விளக்குகளைக் காண முடிந்தது. கூரிய கண்பார்வையை காரின் பெற்றிருந்ததால், கட்டடங்களுக்கு இடையே இயங்கும் சிறு மனித உருவங்களைக்கூட வேறு பிரித்தறிய அவனால் இயலும். தலைமுதல் கால்வரையும் நடுங்கினான். பற்களை நெறித்தான். நேரம் வந்தவுடன் அவ்வளவு கடுமையாக இருக்கும் என்று ஒருபோதும் அவன் நினைக்கவேயில்லை. மீண்டும் கருவியின் வாய்முகப்பைப் பிளவினூடே திருப்பிச் சரிசெய்தான். பின்புறத்தே

மூடியைத் திறந்து கோபுரவத்திகளை ஆய்ந்து பார்த்தான். இதெல்லாம் ஒரு வாரத்திற்கு முன்பே தயார் செய்யப்பட்டிருந்தது. இரண்டாவது கருவி ஒன்றும், பழைய மாதிரிக் கருவியும் கீழே காரில் பத்திரமாக இருந்தன.

மூடியை அடைத்து எந்திரத்திலிருந்து கோபுர வத்திகளுக்குத் தானே தீ மூட்டக்கூடிய மின்பொறியின் பிடியின்மேல் கையை வைத்தான். நடுக்கம் தொடர்ந்தது. அவனது உடலின் வெம்மையை மிகுத்து குலுக்கல்களை ஏற்படுத்தியது மனச்சாட்சி பற்றிய விஷயமன்று (உலகப் போருக்குப் பின் எங்கேனும் மனச்சாட்சி எஞ்சியிருந்தால்தானே!), அச்சமும்அன்று (அவன் ஆழ்ந்து சிந்திப்பவனுமன்று), அழியப்போகிறவர்பால் இரக்கத்தாலுமன்று (அவர்கள் மிகமிக அப்பாற்பட்டவர்கள்). அந்தப் பிடியை ஒரு முறை திருப்புவது மனிதகுலம் முழுமைக்கும் அவனை எதிரியாக்கி விடும் என்பதை அச்சமூட்டும் தெளிவுடன் அவன் உணர்ந்துகொண்டான். அந்தக் கணத்தின் முக்கியத்துவத்தினால் ஏற்பட்ட சுத்தமான அழகியல் உணர்வே இது.

பையிலிருந்த சிகரெட்டை எடுப்பதற்காக மின்பொறிப் பிடியினின்றும் கையைக்கூட எடுத்தான், ஆனால் பரபரப்படைந்த அவனது மூளை அந்த நகர்த்தலைத் தடுத்தது: ''ஏன் தயங்குகிறாய்? இக்கணத்தை அநுபவித்தபடி ஏன் நேரத்தைப் போக்குகிறாய்? இது பைத்தியக்காரத்தனம்...''

காரின் கைப்பிடியைத் திருப்பினான். கருவியின் உட்புறத்தில் தீக்கொழுந்துகள் வெடித்துக் கிளம்பி ஹிஸ்ஸென்று ஓசை வந்தது. நுண்மையளவித் திருகாணியை மெல்லத் திருப்பத் தொடங்கினான்.

70

வானத்தில் புதுமையான ஓர் ஒளிப்பந்து தோன்றுவதை முதலில் கவனித்தவன் ஹ்றலீனோவ் தான்.

''அதோ இன்னொன்று,'' என்றான் மெல்ல.

குன்றின் முகட்டின் சாலையில் பாதி வழியில்

நின்றுகொண்டு இருவரும் வானத்தைப் பார்ப்பதற்காகத் தலையைப் பின்புறம் சாய்த்தனர். முதல் தீப்பந்தைக் காட்டிலும் கீழாக இரண்டாவது, மரங்களுக்கு மேலே தோன்றி அவிந்திடும் ராக்கெட்டைப் போன்று நெருப்புப் பொறிகளைச் சிதறிக்கொண்டு கீழே விழத் தொடங்கியது...

''எரியும் பறவைகள்தான் அவை. பாருங்க,'' என்று கிசுகிசுத்தான் வோல்ஃப்.

வானத்தில் ஒளிநிறைந்த ஒரு பகுதியின் குறுக்கே, காட்டிற்குமேலே, ஒரு பறவை தயங்கிப் பறந்துகொண்டிருந்தது. பெரும்பாலும் 'விப்-விப்-விப்' எனக் கத்திய அதே பறவையாக இருக்கலாம். அது தீப்பிடித்து எரிந்து மல்லாந்து கீழே விழுந்தது.

''ஏதோ கம்பியில் அவை பிடிபட்டிருக்கு.''

''என்ன கம்பி?''

''உங்களால் அதைப் பார்க்க முடியலியா, வோல்ஃப்?''

இடிபாடுகளிலிருந்து மேலே அனிலைன் கம்பெனியின் தொழிற்சாலைகளை நோக்கிச் சென்ற ஓர் ஊசி போன்று நேராக இருந்த மெல்லிய ஒளி வீசும் நூல் ஒன்றைச் சுட்டிக்காட்டினான் ஹ்ஸீனோவ். அதனுடைய வழியைக் கொழுந்துவிட்டெரியும் இலைகளும், எரியும் பறவைகளின் பந்துகளும் குறித்துக் காட்டின. இப்போது பிரகாசமாகப் பளிச்சிட்டது, பைன் மரங்களின் கருஞ்சுவரை அதன் பெரும்பகுதி ஊடறுத்துக் கொண்டிருந்தது.

''அது கீழே இறங்குது...'' எனக் கூவிய வோல்ஃப் அதை முடிக்கக்கூடவில்லை.

அவர்கள் இருவரும் அந்த நூல் என்ன என்பதை உணர்ந்தனர். மலைப்பினால் செயலிழந்து போனபடியால் அந்தக் கதிரின் போக்கைத் தொடர்ந்து பார்க்க மட்டுமே அவர்ளுக்கு முடிந்தது. அதன் முதல் தாக்கு தொழிற்சாலையின் புகைப் போக்கியை அடித்தது,—அது ஆடியது, இடையில் முறிந்து கீழே விழுந்தது. அவர்கள் மிகத் தொலைவில் இருந்ததால் அது விழுந்த ஓசையைக் கேட்க முடியவில்லை.

அதே நேரத்தில் உடனே புகைப்போக்கியின் இடப்புறம் ஒரு நீண்ட கட்டடத்தின் கூரையின்மேல் நீராவித் திரட்சி ஒன்று தோன்றி, சிவப்பாக மாறி, கரிய புகையுடன் கலந்தது. இன்னும் தள்ளி இடப் புறம் ஓர் ஐந்தடுக்குக் கட்டடம் இருந்தது. திடீ ரென்று அதன் விளக்குகள் அணைந்தன. உச்சியிலி ருந்து அடிவரை நெருப்புக் கோடு ஒன்று நெளிந்து நெளிந்து கட்டடத்தின் உருவத்தினூடே சென்றது. பிறகு மீண்டும், மீண்டும்...

புண்பட்ட முயல் போன்று ஹ்றலீனோவ் புலம்பி னான். கட்டடம் சுருங்குவது போலத் தோன்றிச் சாய்ந்து விழ, அதைக் கரிய புகைப்படலம் சூழ்ந்து கொண்டது.

அப்போதுதான் ஹ்றலீனோவும், வோல்ஃப்பும் குன் றின்மேலே கோட்டையின் இடிபாடுகளுக்குப் பாய்ந்து ஓடினர். சுற்றிச் சென்ற சாலையின் வளைவுகளின் குறுக்கே ஓடி, குன்றின் மேல் நேரே ஏறத் தொடங் கினர். ஹேஸல் புதர்களினூடும், இளம் மரங்களி னூடும் பிளந்து புகுந்து சென்றனர். சில நேரங்களில் விழுந்துகொண்டும், குன்றினின்றும் கீழே சரிந்து கொண்டும், ஓடினர், முனகினர், ஒருவன் ருஷ்யனிலும், மற்றவன் ஜெர்மனிலும் திட்டினர். பிறகு மந்த மான உருமல் ஒன்று கேட்டது. பூமியே ஆழ்ந்த பெருமூச்சு விட்டது போலத் தோன்றியது.

பின்னே பார்க்கத் திரும்பினர். அவர்கள் நின்ற இடத்திலிருந்து பல ஏக்கர் பரப்புள்ள தொழிற் சாலைக் கட்டடங்களின் முழுத்தொகுதியையும் பார்க்கக் கூடும். பாதிக் கட்டடங்கள் காகித வீடு கள் போன்று எரிந்து கொண்டிருந்தன. கீழே, நகரத்துக்கருகிலே பழுப்பு மஞ்சள் நிறப் புகை காளான் போலக் கிளம்பியது. அழிவுக்கதிர் வெறி கொண்டு தாண்டவமாடி அந்த நாசக் குவைகளின் ஊடே முக்கியமான இடத்தை, அதாவது, பாதி தயாரான வெடிக்கும் பொருள்களின் கிடங்கு களைத் தேடியலைந்தது. ஒளிர்வு பாதி வானத்தை நிரம்பியது. புகைப்படலங்களும் மஞ்சள், பழுப்பு, வெள்ளி வெண்மை ஆகிய நிறங்களையுடைய பொறி

களும் குன்றுகளைவிட உயரமாக எழும்பிப் பொழிந்தன.

''நாம் ரொம்பச் சுணங்கிட்டோம்!'' எனக் கூச்சலிட்டான் வோல்ஃப்.

சுண்ணவெண் நாடாக்களைப் போன்ற சாலைகள் வழியே உயிர்ப்புள்ள கூழ் ஒன்று நகருக்கு வெளியே விரைவதை அவர்கள் காண முடிந்தது. இந்த நெருப்பு ஒளியலைகளால் நன்கு தெளிவாக வெளிச்சமூட்டப்பட்ட நதி கரும் புள்ளிகளால் மூடப்பட்டிருந்தது. சமவெளி நோக்கி பாதுகாப்பைத் தேடி மக்கள் விரைந்து கொண்டிருந்தனர்.

''ரொம்பச் சுணங்கிருச்சு, ரொம்பச் சுணங்கிருச்சு!'' என்று வோல்ஃப் கீச்சிட்டான். அவன் மோவாய் வழியாகக் குருதியும் நுரையும் பெருகிக்கொண்டிருந்தன.

நகர மக்கள் வெளியேற இயலாத வகையில் ஏற்கெனவே காலங்கடந்திருந்தது. நகருக்கும் தொழிற்சாலைகளுக்குமிடையுள்ள, வரிசைகளாக இருந்த ஓடுவேய்ந்த சிறுவீடுகள் அமைந்த புல்வெளி திடீரென்று மேலெழும்பியது. தரை உப்பியது. அது தான் கண்ணுக்கு முதலில் தெரிந்தது. அக்கணமே தரையிலிருந்த வெடிப்புக்கள் வழியாகக் கொடிய நெருப்புக் கொழுந்துகள், நாக்குகள் போல வெளிக் கிளம்பின; அதே நொடியில், இதற்கு முன் மனிதன் கண்டறியாத மினுமினுப்புடன் வெண்ணிற நெருப்பும் பழுக்கக் காய்ச்சிய புகையாவியும் கொண்ட கண்ணைக் குருடாக்கும் தூண் அத்தீக் கொழுந்துகளிலிருந்து எழுந்தது. புல்வெளி முழுவதுக்கும் மேலே வானம் மிக உயரே பறந்து சென்றுவிட்டது. முழுப்பரப்பிலும் பசுமையும் சிவப்பும் கலந்த ஒளி நிறைந்தது. சூரிய கிரகண காலத்தைப் போல ஒவ்வொரு கிளையும், ஒவ்வொரு புல் தொகுதியும், ஒவ்வொரு கல்லும், அச்சத்தால் வெளுத்துக் கல்லாய்ச் சமைந்திட்ட இரு மனித முகங்களும் விளக்கமாகத் தெரிந்தன.

பிறகு வெடிப்பு ஒலி வந்தது. பிளக்கும் பேரொலியால் தரை சிதறியது. குன்றுகள் நடுங்கின.

ஒரு புயல் மரங்களைக் குலுக்கித் தரையில் படுமாறு அவற்றை வளைத்தது. கற்களும், எரியும் கொள்ளி களும் காற்றினூடே பறந்தன. பள்ளத்தாக்கு முழு வதையும் புகை மேகங்கள் கவிந்துகொண்டன.

இருண்டு கொண்டுவந்தது, அந்த இருட்டில் முன் னிலும் பயங்கரமான இரண்டாவது வெடி அதிர்ந் தது. புகைமண்டிய காற்று முழுதும், மங்கலான செம்பழுப்பு நிறமுடைய சீழ்கட்டியது போன்று வெளிச்சம் கலந்து நிறைந்திருந்தது.

வெடித்தலால் ஹ்லீனோவும், வோல்ஃபும் கீழே விழுந்து மரக் கிளைகளோடும் கற்களோடும் ஒன் றாகக் குன்றின் பக்கம் கீழே உருட்டித் தள்ளப்பட் டனர்.

71

''காப்டன் யான்ஸன், நான் கரைக்குப் போக விரும்புறேன்.''

''ஆகட்டும், சீமாட்டியே.''

''நீங்க என்னுடன் வரவேணும்னு விரும்புறேன்.''

களிப்பினால் யான்ஸன் முகம் சிவந்தது. ஒரு நிமிடத்திற்குப் பிறகு 'அரிஸோனா'வின் பக்கத்தில் வார்னிஷ் பூசப்பெற்ற ஒரு படகு தெளிந்த நீரில் மெத்தென்று விழுந்தது. செம்பழுப்பு நிற மேனி யுடைய மூன்று மாலுமிகள் கயிறு வழியாகச் சறுக்கி இறங்கித் தங்களுக்குரிய இடங்களில் அமர்ந்து துடுப்புக்களைப் பிடித்தவாறு காத்துக் கொண்டிருந் தனர்.

இறங்குவழியில் யான்ஸன் காத்திருந்தான். ஸோயா அவசரப்படவில்லை. கடலிலிருந்து படிப் படியாக மேலே சென்ற, வெக்கையில் நிலையற்ற தாகத் தோற்றமளித்த நேப்பிள்ஸ் நகரத்தையும் நகருக்கு மேலேயிருந்த பழங்காலக் கோட்டையின் செம்பழுப்புச் சுவர்களையும் கோபுரங்களையும், சோம்பலுடன் புகைந்துகொண்டிருந்த வெஸூவியஸ் மலையுச்சியையும் கவனக்குறைவான முறையில்

பார்த்தவாறு நின்றாள். காற்று ஒரு மூச்சுக் கூட இல்லை. கடற்பரப்பு கண்ணாடி போன்று வழுவழுப் பாய் இருந்தது.

விரிகுடாவின் குறுக்கே பெரும் எண்ணிக்கையில் படகுகள் மெதுவாக நகர்ந்தன. அவற்றுள் ஒன்றில், மைக்கல் ஏஞ்சலோவின் ஓவியம் போல் இருந்த ஒரு முதியவன் நின்றபடி ஒற்றைத் துடுப்பினால் வலித் துக் கொண்டிருந்தான். அவனது நரைத்த தாடி கரிய துணியாலான, கிழிந்த, ஒட்டுப்போட்ட மழைக்கோட் டின் மீது விழுந்து கொண்டிருந்தது. பறட்டையான நரைத்த சுருட்டை மயிர் அவனது தலைக்கு மகுடம் போன்றிருந்தது. அவனது தோளின் குறுக்கே ஒரு கித்தான் பை தொங்கியது.

இதுதான் பெப்பொ, உலக முழுமைக்கும் தெ ரிந்த பிச்சைக்காரன்.

பிச்சை கேட்பதற்காகத் தனது சொந்தப் படகி லேயே சுற்றிக் கொண்டிருந்தான். நேற்றுத்தான் ஒரு நூறு டாலர் நோட்டைத் தனது உல்லாசப்படகிலி ருந்து ஸோயா அவனுக்கு எறிந்திருக்கிறாள். இன்று மீண்டும் 'அரிஸோனா'வை நோக்கித் தனது படகை வலித்துக் கொண்டிருந்தான். தெய்வங்களாலும் கலைத் தேவதைகளாலும் விரும்பப்பட்ட பழைய இத்தாலியின் இறுதிக் கற்பனையாளன் பெப்பொ. புனைவியல் எல்லாம் மீள முடியாதவாறு போய்விட் டது. அந்தப் பழைய கற்களை மகிழ்நிறை கண்களு டன் நோக்கி ஒருவரும் இன்று அழவில்லை. பாம்பி யில் உள்ள செஸிலியஸ் ஜுக்குந்தஸ் வீட்டின் பாழ்ப் பகுதியின் நடுவில் பெப்பொவைப் படம் வரையும் உரிமை பெறுவதற்காக ஒரு தங்க நாணயம் தரும் வழக்கமுடைய கலைஞர்கள் இன்று போர்க்களங் களில் மக்கிக் கொண்டிருந்தனர். உலகம் சலிப்பூட்டு வதாகி விட்டது.

துடுப்பை மெதுவாக வலித்துக்கொண்டே தண் ணீரின் எதிரொளி வீச்சினால் பச்சைநிறம் காட்டிய 'அரிஸோனா'வின் ஒரு புறத்தில் பெப்பொ மிதந்து வந்தான்; உருச் செதுக்கியது போன்று பெருமிதத் தோற்றமுள்ள, புருவங்கள் அடர்ந்து சுருக்கம்

விழுந்த முகத்தை நிமிர்த்தி, கையை நீட்டினான். தியாகம் கோரிய கடவுள் அவன். கைப்பிடியில் குனிந்து ஸோயா அவனிடத்தில் இந்தாலியனில் கேட்டாள்:

''ஊகித்துச்சொல், பெப்போ, ஒத்தையா, இரட்டையா?''

''இரட்டை, பெருமாட்டி.''

ஸோயா அவனுடைய படகுக்குள் ஒரு கட்டுப் புது நோட்டுக்களை எறிந்தாள்.

''அழகுப் பெருமாட்டியே, நன்றி,'' என்று பெருமிதத்துடன் பெப்பொ கூறினான்.

காத்திருக்க வேறொன்றும் இல்லை. தனது ஐயங்களைத் தீர்த்துக்கொள்ள ஸோயா பெப்பொவைப் பயன்படுத்திக் கொண்டாள்: அம்முதியவன், தன் படகில் வந்து, இரட்டை என்று ஊகித்தால் எல்லாம் சரியாக இருக்கும் என்று எண்ணியிருந்தாள்.

எனினும், கெட்ட முன்னெண்ணங்களால் அவள் மன உளைவு கொண்டாள்: 'ஸ்ப்ளெண்டிட்'டில் தனக்காகப் போலீசார் காத்துக் கொண்டிருப்பார்களானால்? ஆனால் கட்டாயப்படுத்தும் அக்குரல் இன்னும் அவளது செவிகளில் ஒலித்தது: ''உங்களுடைய நண்பனின் உயிரை நீங்க மதித்தால்...'' அவளுக்கு வேறு வாய்ப்பு இல்லை.

ஸோயா படகில் இறங்கினாள். சுக்கானுக்கருகில் யான்ஸன் அமர தண்ணீரில் துடுப்புக்கள் பளிச்சிட்டன. புறத்தே மாடிப்படிக் கட்டுக்களும் கொடிகளில் உலர்ந்துகொண்டிருந்த உள்ளாடைகளும் கந்தல் துணிகளும் கொண்ட வீடுகள், குன்றின் பக்கமாகச் சென்ற படிகளையுடைய குறுகிய தெருக்கள், பாதி வெற்றுடம்புடைய குழந்தைகள், கதவுக்கருகில் நின்று கொண்டிருந்த பெண்கள், முரட்டுச் செந்நிற ஆடுகள், தண்ணீரின் ஓரத்தில் சிப்பிக் கடைகள், கரையோரக் கருங்கல் மீது பரப்பப்பட்டிருந்த மீன் வலைகள் இவையெல்லாம் கொண்ட ஸாந்தா லுச்சியா இறங்குதுறை அவர்களை எதிர்கொள்ள விரைந்தது.

இறங்குதுறையின் பாசிபிடித்த மேடையைப் படகு தொடுவதற்கு முன்பே, கந்தையணிந்த ஏழைகளும், பவளம், பூ ஊசிகள் முதலியன விற்பவர்களும், ஓட்டல் முகவர்களும் நிறைந்த கும்பல் மேலிருந்து படிகளின் வழியாகப் படகை நோக்கிப் பாய்ந்துவந்தது. இரட்டைக் குதிரை வண்டிகளை யோட்டுபவர் தமது சாட்டைகளைச் சொடுக்கி, உரக்கக் கத்தினர். அரை வெற்றுடம்புடைய பையன்கள் அவர்கள் காலுக்குள்ளேயே பலவகைக் கர்ணங்களடித்து அந்த அழகிய வெளிநாட்டாளிடம் காசுக்காக ஊளையிட்டு வேண்டினர்.

'' 'ஸ்ப்ளெண்டிட்','' என்ற ஸோயா யான்ஸனுடன் ஒரு குதிரை வண்டியில் அமர்ந்தாள்.

72

லாமோல் சீமாட்டியின் பெயருக்கு ஏதேனும் கடிதம் வந்துள்ளதா என்று ஓட்டலில் ஸோயா விசாரித்தாள். அவளிடத்தில் கையொப்பமிடப்படாத வானொலித் தொலைபேசிச் செய்தியொன்று தரப்பட்டது: ''சனிக்கிழமை மாலை வரை காத்திருக்கவும்''. ஸோயா தோள்களைக் குலுக்கினாள். அறைகள் ஏற்பாடு செய்ய உத்தரவு கொடுத்துவிட்டு நகரைச் சுற்றிப்பார்ப்பதற்காக யான்ஸனுடன் வெளியே சென்றாள். ஒரு கடையிலிருந்து மறு கடையாக அவர்கள் சென்றனர். வம்பளக்கின்ற விற்பனையாளர்களால் தரப்பட்ட எல்லாவற்றையும் ஸோயா வாங்கினாள். இறுதியில் பொருள் வாங்குவதில் களைப்படைந்தாள்.

''நாம் போம்பிக்குப் போகலாம்,'' என்றான்.

அவர்கள் வெஸுவியசுக்குச் சென்று சாம்பல்களினின்றும் மீட்கப்பட்ட பண்டைய நகரத்தின் தெருக்களைச் சுற்றிலும் நீண்ட நேரத்திற்கு அலைந்து திரிந்தார்கள்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் ஆள் அரவமற்றுப்போன வீடுகளின் கதவு வாயில்களில்

அரைத் தூக்கம் போட்டுக் கொண்டிருந்த பச்சை நிறப் பல்லிகளைத் தனது குடையின் நுனியால் துரத்தினாள் ஸோயா.

''எனக்கு அலுத்துப் போச்சு. நாம் திரும்பிப் போகலாம்,'' என்றாள். ''என்ன இருந்தது என்பதைப் பார்க்க நான் விரும்பலே. கடந்த காலத்தைத் திரும்பக்கொண்டு வரவும் நான் விரும்பலே...''

கடலோர ரெஸ்டாரன்டு ஒன்றில் அவர்கள் உணவு கொண்டனர். உண்டிவகைகளின் இடையிடையே தனது அழகிய மூடாத கையை யான்ஸனின் தோள்களின் மேல் போட்டுக்கொண்டு அவனுடன் ஸோயா நடனமாடினாள், அவளது கண்கள் பாதி மூடியிருந்தன, அவளது முகம் உணர்ச்சியற்று இருந்தது. ஆண்கள் அவளை வேட்கையோடு வெறித்துப் பார்த்தார்கள். நடனங்கள் பசியை ஏற்படுத்தி தாகத்தைக் கிளப்பின.

அவர்கள் ரெஸ்டாரன்டை விட்டுப் புறப்பட்ட போது யான்ஸன் வினவினான்:

'' இன்னைக்கு ராத்திரி நான் எங்கே தங்கணும்னு விரும்புகிறீங்க?.. படகிலா ஓட்டலிலா?''

விரைவும் புதுமையும் கலந்த பார்வையை அவன் பால் செலுத்திய ஸோயா உடனே தன் தலையைத் திருப்பிக் கொண்டு பதில் பேசவில்லை. ஓட்டலில் அவர்கள் நுழைகையில் கருங்கல் போன்றிருந்த யான்ஸனின் கையில் அவள் சாய்ந்திருந்தாள். எழுத்தன் சாவியை அவளிடம் கொடுத்த போது, அவனது இருண்ட முகத்தில் அசட்டுச் சிரிப்பு பிறந்தது. உடனே ஸோயா விழிப்புற்றாள்:

''ஏதேனும் செய்தி?''

''ஒன்னும் இல்லை, பெருமாட்டி.''

யான்ஸனிடம் ஸோயா கூறினாள்:

''புகைபிடிக்கும் அறைக்குள் போய், ஒரு சிகரெட்டைப் புகைங்க, என்னுடைய அரட்டையால் நீங்க அலுக்காதிருந்தா — நான் தொலைபேசியில் அழைக்கிறேன்...''

சிவப்புத் தரை விரிப்பையுடைய படிகளில் மெல்ல மேலே நடந்தாள். யான்ஸன் கீழே நின்

றான். படி முடியும் இடத்தில் பின்திரும்பிச் சற்றே முறுவலித்தாள். புகைபிடிக்கும் அறைக்குள் சென்று தொலைபேசிக்கு அருகில் அமர்ந்தான் யான்ஸன். அவள் கட்டளையிட்டது போலவே ஒரு சிகரெட்டைப் பற்றவைத்தான். பின்னே சாய்ந்துகொண்டு, தனக்குள் அவளைப் படமாக்கிப் பார்க்கத் தொடங்கினான்...

எனினும், தொலைபேசி மணி அடிக்கவில்லை. அந்தப் பாழாய்ப்போன கருவியைப் பாராதிருக்கும் பொருட்டு யான்ஸன் கண்களை மூடிக்கொண்டான்... சீ, அசட்டுப் பிள்ளை போன்று காதலிப்பது கூடாது... யாரோ அவனது முதுகுக்குப் பின்னே நின்றான். யான்ஸன் கண்களைத் திறந்து குதித்தெழுந்தான். அவன்முன் ரோல்லிங் நின்றான். காப்டன் தலைக்குக் குருதி விரைந்து பாய அவனது முகம் சிவந்தது.

''காப்டன் யான்ஸன்,'' கரகரத்த குரலில் ரோல்லிங் பேசினான். ''லாமோல் சீமாட்டியைக் கவனித்துக்கொண்டதற்கு நன்றி, இன்றைக்கு உங்களுடைய பணி அவளுக்குத் தேவையில்லை. உங்களோட வேலைக்கு நீங்க திரும்பலாம் எனக் கருதுகிறேன்...''

''ஆகட்டும், ஐயா,'' என்று உதடுகளால் மட்டும் முணுமுணுத்தான் யான்ஸன்.

கடந்த திங்களுள் ரோல்லிங் பெரிதும் மாறிவிட்டான்—அவன் முகம் மிகக் கறுத்திருந்தது, கண்கள் குழிவிழுந்திருந்தன, கருஞ்சிவப்புக் குச்சிமயிர்த் தாடி கன்னங்களில் படர்ந்திருந்தது. அணிந்துகொண்டிருந்த கம்பளிக் கோட்டின் மார்புப் பைகளில் வங்கி நோட்டுக்களும், செக் புத்தகங்களும் திணிக்கப்பட்டிருந்தன... ''நேரே இடக்கையினால் நெற்றிமுட்டியில் ஒரு குத்து, வலக்கையினால் நேரே தாடையில் ஒரு குத்து, அவ்வளவுதான். இப்பன்றியின் மூச்சு ஒடுங்கிவிடும்...'' காப்டன் யான்ஸனுடைய இரும்புக் கைமுட்டிகள் பகையுணர்வுடன் தினவெடுத்தன. அக்கணத்தில் அங்கு ஸோயா இருந்து, கண்ணால் ஒரு குறிப்புக் காட்டியிருந்தால் போதும், ஒரு

மூட்டை எலும்புகள் தவிர ரோல்லிங்கிடம் ஒன்றும் மிஞ்சியிராது.

''இன்னும் ஒரு மணி நேரத்திற்குள் 'அரிஸோனா'வில் இருப்பேன்,'' என்று அழுத்தமான முறைப்புடன் அதிகார தோரணையில் பேசினான் ரோல்லிங்.

மேசைமேல் இருந்து தனது குல்லாவை எடுத்துக் கண்களுக்கு மேலாகத் தலையில் அழுத்தி வைத்துக்கொண்டு யான்ஸன் வெளியே நடந்தான். படகுத் துறைக்குக் குறுக்கே ஓடிப் படகினுள் குதித்தான்: ''வேசி மகன்களே, வலிங்கடா!'' என இரைந்தான்.

'அரிஸோனா'வின் நடைவழியில் ஓடி மேல்தட்டை அடைந்தான். உதவிக் காப்டனை நோக்கி, ''என்ன மேல்தட்டு பன்றிக்கிடை போல இருக்கு!'' எனக் கத்தினான். பிறகு தன் அறைக்குள் சென்று கதவைத் தாளிட்டுக்கொண்டு குல்லாவைக் கூட கழற்றாது படுக்கையில் தொப்பென்று விழுந்தான். மெல்ல உறுமினான்.

சரியாக ஒரு மணிக்குப்பின் வெளியே காவலிருக்கும் மாலுமியின் குரலும், கடலிலிருந்து அதற்கு விடைதரும் தெளிவில்லாத குரலும் கேட்டன. நடைவழி கிறீச்சிட்டது. உதவி காப்டன், ''மேல் தட்டிற்கு எல்லாரும் வாங்க!'' என்று மகிழ்வுடன் உரக்க ஆணையிட்டான்.

சொந்தக்காரன் வந்துவிட்டான். எஞ்சியுள்ள தன்மானத்தைக் காக்க வேண்டுமாயின், கரையில் ஒன்றும் நடக்காதது போல ரோல்லிங்கை அவன் வரவேற்க வேண்டும். அமைதியான பெருமிதத்துடன் யான்ஸன் மேடைக்குச் சென்றான். ரோல்லிங் மேடைமீது ஏறி படகின் நேர்த்தியான நிலைமை பற்றிய அறிக்கையைக் கேட்டான். பிறகு யான்ஸனுடன் கை குலுக்கினான். அதிகாரபூர்வமான சடங்கு முடிந்தது. ரோல்லிங் ஒரு சுருட்டைப் பற்றவைத்தான். 'அரிஸோனா'வின் உயர்வையும் நேப்பிள்ஸின் வானத்தையும் கேவலப்படுத்துவது போன்ற இருண்ட கம்பளி உடையில் பொருந்த

மற்றும், சிறியவனாகவும் ரோல்லிங் காணப்பட்டான்.

ஏற்கெனவே நடு நிசியாகி விட்டது. பாய்மரங்களுக்கும் குறுக்குச் சட்டங்களுக்கும் இடையே விண்மீன்கள் சிமிட்டின. நகரத்து விளக்குகளும் விரிகுடாவிலிருந்த கப்பல்களின் விளக்குகளும் பஸால்ட் பாறை போலக் கரிய நீரில் உருக்காட்டின. இழுக்கும் படகு ஒன்றின் சங்கு ஊளையிட்டு அடங்கியது.

ரோல்லிங் தனது சுருட்டில் முழுவதும் ஈடுபட்டதுபோலத் தோன்றினான். அதனை மோந்து பார்ப்பதும், காப்டன் பக்கம் புகைப் படலத்தைக் கக்குவதுமாக இருந்தான். கைகளை மருங்கில் வைத்துக் கொண்டு அதிகார முறையில் அவனுக்கு முன்புறம் யான்ஸன் நின்றான்.

''லாமோல் சீமாட்டி கரையில் தங்க விரும்புகின்றாள்,'' என்றான் ரோல்லிங். தனது இடக் கையை உதடுகள் வரை உயர்த்தி பின் பக்கத்தின் மேல் தோலை உறிஞ்சினான். ''காலைவரை நான் படகில் தங்கி இருப்பேன், பெரும்பாலும் நாளை முழுதும்... நான் கப்பலில் தங்கியிருப்பது தவறாகக் கருதப் படாமல் இருக்கும் பொருட்டு... (தான் உறிஞ்சிக் கொண்டிருந்த கையை மேலுயர்த்தி, திறந்திருந்த அறைக் கதவின் வெளிச்சத்தில் ஆய்ந்து பார்த்தான்.) நான் சொல்லிக் கொண்டிருந்தது—தவறாகக் கருதப்படாமல்... (யான்ஸன் அக்கையை நோக்கி அதன் மேல் நகங்களின் குறி இருப்பதைக் கண்டான்.) இந்த உல்லாசப்படகிற்கு ஒருவன் வருவான் என்று எதிர்பார்க்கிறேன், ஆனா இங்கே அவன் என்னைக் காணலாம் என்று எதிர் பார்க்கமாட்டான் என்று கூறி உங்க ஆவலைத் தணிக்கிறேன். இப்ப எந்நேரத்திலும் அவன் வரலாம். அவன் படகினுள் வந்ததும் உடனே எனக்கு அறிவிக்குமாறு உத்தரவிடுங்க. இரவு வணக்கம்.''

யான்ஸனுடைய மூளை கொதித்தது. நடந்து கொண்டிருப்பதைப் புரிந்துகொள்ளப் பெரு முயற்சி செய்து கொண்டிருந்தான். லாமோல் சீமாட்டி கரையில் தங்கிவிட்டாள். ஏன்? காரணம் இல்லாத போக்

கா? அல்லது அவனுக்காகக் காத்திருக்கிறாளா? இல்லை—ஆனால் ரோல்லிங்கின் கையிலிருக்கும் புதுக் கீறல்கள்... என்ன நிகழ்ந்திட்டது? ஒருவேளை அவளது குரல்வளை வெட்டப்பட்டு படுக்கையில் கிடந்தாளானால்? அல்லது விரிகுடாவின் அடியிலே ஒரு மூட்டைக்குள்ளிருப்பாளோ? கோடீஸ்வரர்கள் எதற்கும் கூசமாட்டார்களே.

இரவு உணவின்போது உண்டியறையில் யான்ஸன் தனது மூளையில் தெளிவுண்டாக்குவதற்காக சோடா கலக்காத விஸ்கி ஒரு கிளாஸ் வேண்டினான். பத்திரிகையில் இறுதியாக வந்திருந்த பரபரப்பூட்டும் செய்தியை உதவி காப்டன் சொல்லிக்கொண்டிருந்தான்—அனிலைன் கம்பெனியின் ஜெர்மன் தொழிற்சாலைகளில் பயங்கர வெடி விபத்து என்றும், அதனால் அருகிலிருந்த நகர் அழிந்து ஈராயிரம் மக்களுக்கு மேல் இறந்து விட்டனர் என்றும்.

''நமது எஜமானுக்குப் பெருத்த அதிர்ஷ்டம் அடிக்கிறது,'' என்றான் உதவி காப்டன். ''அனிலைன் கம்பெனித் தொழில்கள் அழிந்தமை அவருக்கு வேண்டுமளவு லாபத்தைக் கொண்டுவரும். அதைக் கொண்டு ஜெர்மனி முழுவதையும் ஹோஹென்ஸோல்லேர்ன் அரச குடும்பம், சோஷல்-டெமாக்ராட்டுகள் சேர்ந்து விலைக்கு வாங்கலாம். எஜமானின் நலத்திற்காக நான் குடிக்கிறேன்.''

தனது அறைக்குப் பத்திரிகைகளை யான்ஸன் எடுத்துச்சென்றான். வெடிவிபத்து பற்றிய விவரங்களை மிக்க அக்கறையுடன் படித்தான், அதற்குரிய காரணம் பற்றிய வெவ்வேறு விளக்கங்கள் ஒவ்வொன்றும் மற்றவற்றை விட அசாத்தியமானவையாக இருந்தன. எல்லாப் பத்திரிகை பத்திகளிலும் ரோல்லிங்கின் பெயர் மீண்டும் மீண்டும் காணப்பட்டது. தாடியுள்ள கன்னங்களும், மென்மையான 'பெல்ட்' தொப்பிகளுக்குப் பதில் உயரமான 'பௌலர்' த் தொப்பிகளும் அடுத்த பருவத்தில் புதுபாணியாக வரும் என்று பத்திரிகைகளின் புதுபாணி பகுதியில் எழுதப்பட்டது. 'எக்ஸெல்ஸி

யோர்' பத்திரிகையின் முதல் பக்கத்தில் 'அரிஸோனா'வின் படம் இருந்தது. அதில் முட்டை வடிவமான உட்படம் ஒன்றில் லாமோல் சிமாட்டியின் அழகிய தலையின் உருவம் இருந்தது. அதைப் பார்த்தவுடன் யான்ஸன் தன் மனத்துணிவை இழந்தான். அவனது அச்சம் பெரிதாக வளர்ந்தது.

காலை இரண்டு மணிக்குத் தன் அறையினின்றும் வெளிவந்த அவன் மேல்தட்டில் சாய்வு நாற்காலி ஒன்றில் ரோல்லிங் அமர்ந்திருப்பதைக் கண்டான். யான்ஸன் தன் அறைக்கு மீண்டான். தன் உடைகளைக் களைந்தான். உயர்ந்த கம்பளித் துணியாலாகிய மெல்லிய உடை ஒன்றை வெற்றுடலில் அணிந்துகொண்டான். ஒரு ரப்பர் பையில் தனது குல்லாவையும் காலணிகளையும் பர்சையும் திணித்துக் கட்டினான். மூன்று மணியைக் குறிக்க ஆறு மணிகள் ஒலித்தன. ரோல்லிங் இன்னமும் தனது நாற்காலியில் அமர்ந்து கொண்டிருந்தான். நான்கு மணியானபோது இன்னமும் அங்கேயே அமர்ந்து கொண்டிருந்தான், ஆனால் தோள்களின் மீது தலை அழுந்தியிருந்த அவனது உருவத்தில் இயக்கம் காணவில்லை. அவன் உறங்கினான். ஒரு நிமிடத்தில் யான்ஸன் ஓசைபடாது நழுவி நங்கூரச் சங்கிலியின் வழியாகக் கீழிறங்கிப் படகுத்துறை நோக்கி நீந்தத் தொடங்கினான்.

73

''ஸோயா சிமாட்டி, தேவையில்லாது உங்களை வருத்திக் கொள்ள வேண்டாம்: தொலைபேசியும், மணியடிக்கும் கம்பிகளும் அறுக்கப்பட்டுவிட்டன.''

தனது படுக்கையின் ஓரத்தில் மீண்டும் அமர்ந்தாள் ஸோயா. சிறு முறுவல் அவளது உதடுகளைக் கலைத்தது. அறையின் நடுவே ஒரு சாய்வு நாற்காலியில் ஸ்டாஸ் திக்லீன்ஸ்கி சோம்பிக் கிடந்தான்; மீசையை முறுக்கிவிட்டு, உயர்தரத் தோலாலான தன் காலணிகளை நோக்கினான். புகை பிடிக்க

அவன் துணியவில்லை, ஏனெனில் மிக்க உறுதியுடன் ஸோயா அதைத் தடுத்துவிட்டாள். சீமாட்டியிடம் நயமாக நடக்க வேண்டும் என்று ரோல்லிங் கண்டிப்பாகக் கட்டளையிட்டிருந்தான்.

காலை ஐந்து மணி நெருங்கியது. தன்னை விடுவித்துக்கொள்ள ஸோயா செய்த முயற்சிகளும் அவனை ஏமாற்றவோ அன்றி மயக்கவோ முயன்றதும் எப்பயனும் தரவில்லை.

''எப்படியிருந்தாலும், ஏதாவது ஒருவழியில் போலீசுக்குச் செய்தி அனுப்புவேன்.''

''ஒட்டல் ஊழியர் விலைக்கு வாங்கப்பட்டு, பெருந்தொகை கொடுக்கப்பட்டிருக்கிறது.''

''தெருவில் நிறைய மக்கள் செல்லும்போது ஒரு சன்னலை உடைத்துக் கூச்சலிட்டுக் கத்துவேன்.''

''அதற்கும் முன்னேற்பாடு செய்யப்பட்டிருக்கு. நீங்க நரம்புத்தளர்ச்சியால் கலக்கமடையும் இயல்புடையவர் எனச் சான்று பகர ஒரு மருத்துவர் அமர்த்தப்பட்டிருக்கார். உங்களுக்கு ஒருத்தரும் உதவமாட்டாங்க, ஒருத்தரும் உங்களை நம்பமாட்டாங்க. ஆகவே அப்படியே உட்கார்ந்து அமைதியா இருங்க.''

விரல்களைச் சுடக்கெடுத்துக்கொண்டு ருஷ்யனில் அவனிடம் சொன்னாள்:

''நீ ஒரு பன்றி. அண்டிப் பிழைக்கிறவன். கீழ் மகன்.''

திக்லீன்ஸ்கி சிறியெழுந்தான், அவனது மீசைகள் சிலிர்த்து நிமிர்ந்தன. எனினும் அவளுடன் போட்டியிட்டுக் கொச்சை மொழிகளைப் பேசக் கூடாது எனக் கட்டளையிடப்பட்டிருந்தான்.

''பெண்கள் எப்படித் திட்டுவாங்க என்பது எங்களுக்குத் தெரியும்,'' என முனகினான் அவன். ''நான் உங்களுக்காக இரக்கப்படுறேன், சீமாட்டி. இன்னும் ஓரிரு நாளைக்கு நீங்க என்னோட இப்படித்தான் தனிமையில் மறைவாக அமர்ந்திருக்கணும். படுத்து நரம்புகளுக்கு ஓய்வு கொடுப்பது நல்லது... இரவு வணக்கம், சீமாட்டி.''

அவன் வியப்புறுமாறு இம்முறை அவன் சொல்லுக்குப் பணிந்தாள் ஸோயா. தனது செருப்புக்களைக் கழற்றி எறிந்து படுத்தாள். தலையணைகளை ஒழுங்கு படுத்தினாள், கண்களை மூடிக் கொண்டாள்.

கண் இமைகளினூடே திக்லின்ஸ்கியின் கொழுத்த தீய இயல்புடைய முகம் தன்னைக் கூர்ந்து நோக்குவதைக் கண்டாள். ஒன்றிரண்டு முறை கொட்டாவி விட்டாள். தனது கன்னத்தின் கீழ் கையை வைத்துக்கொண்டாள்.

''நான் களைப்பா இருக்கிறேன், என்ன நடந்தாலும் எனக்கு அக்கறை இல்லை,'' என்று முணுமுணுத்துக்கொண்டே மீண்டும் கொட்டாவி விட்டாள்.

திக்லின்ஸ்கி தன்னுடைய நாற்காலியில் இன்னும் மிக்க வாய்ப்பாக அமர்ந்தான். ஸோயா ஒரே சீராக மூச்சுவிட்டாள். கொஞ்ச நேரத்தில் திக்லின்ஸ்கி தன் கண்களைத் தேய்க்கத் தொடங்கினான். எழுந்து அறையில் இங்குமங்கும் நடந்தான், பிறகு கதவுச் சட்டத்தில் சாய்ந்தான். நின்றுகொண்டே விழித்திருக்க மனத்தில் உறுதிகொண்டுவிட்டவன் போலத் தோன்றியது.

திக்லின்ஸ்கி ஒரு முட்டாள். அவனிடமிருந்து ஸோயா என்னென்ன தெரிய விரும்பினாளோ அனைத்தையும் பெற்றுக்கொண்டு, இப்போது அவன் தூங்கி விழுவதற்காகக் காத்திருந்தாள். கதவிற்கு அருகில் நின்று கொண்டிருப்பது அவனுக்கு எளிதாக இல்லை. பூட்டைப் பார்த்துவிட்டுத் தனது இருக்கைக்கு மீண்டான்.

ஒரு நிமிடத்திற்குப் பின்னர் அவனது பருத்த தாடை கீழே சாய்ந்தது. ஸோயா உடனே படுக்கையினின்றும் நழுவினாள். அவனது அரைக்கோட்டுப் பையினின்றும் சாவியைச் சடுதியில் எடுத்தாள். தனது செருப்புக்களை எடுத்துக்கொண்டு கதவில் சாவியைப் பொருத்தினாள். சிக்கியிருந்த பூட்டு திடீரென்று கீச்சிட்டது.

இரவில் பேய் கண்டவன் போல திக்லின்ஸ்கி

''யாரது? என்ன?'' என்று கத்தினான். தனது நாற்காலியிலிருந்து குதித்தான். ஸோயா கதவைத் திறந்தாள். அவனோ அவளது தோள்களைப் பற்றி அவளைக் கீழே தள்ளினான். அறையினுள் திரும்ப விழுமாறு அவளை உதைந்து கதவைப் பூட்ட முயன்றான். அவ்வாறு செய்வதினின்றும் ஏதோ அவனைத் தடுத்தது. அழுத்தப் பெறுவதால் அவனது கழுத்து சிவப்பாவதை ஸோயா கண்டாள்.

''யார் அங்கே?'' கதவில் தோளை வைத்து அழுத்திக் கொண்டே கம்மலான குரலில் வினவினான்.

ஆனால் அவனது அடிகள் பிளாச்சுகள் பதித்த தரையில் தொடர்ந்து நழுவின—கதவு மெல்லத் திறந்தது. இடுப்புப் பையிலிருந்த கைத்துப்பாக்கியை அவன் அவசரமாக எடுத்தான். ஆனால் அதைப் பயன்படுத்துவதற்கு முன்னமேயே அறையின் குறுக்காக வீசப்பட்டான்.

காப்டன் யான்ஸன் கதவருகில் நின்றான். அவனது தசைநார் செறிந்த உடம்பில் நனைந்த உடை தொங்கியது. திக்லீன்ஸ்கியின் கண்களுள் நேரே ஒரு கணம் உற்று நோக்கினான். திடீரென்று அவன் முன்னே விழுவது போலப் பாய்ந்தான். ரோல்லிங்கிற்குத் தரவேண்டுமென்று அவன் விரும்பிய அடி போலந்துக்காரன் மீது விழுந்தது: இருவழித் தாக்கு—உடல் எடை முழுதும் சேர்த்து மேலே இடக்கையால் திக்லீன்ஸ்கியின் மூக்குத் தண்டின் மேலும், தோளின் முழு வீச்சுடன் வலக்கையால் அவனது தாடையிலும். திக்லீன்ஸ்கி கூச்சல் போடாமல் தரைவிரிப்பின் மீது சுருண்டு விழுந்தான். அவனது முகம் உருக்குலைந்து குருதி மண்டியிருந்தது.

மூன்றாவது அசைவில் யான்ஸன் லாமோல் சீமாட்டியை நோக்கித் திரும்பினான். அவனது எல்லாத் தசைநார்களும் முறுக்குண்டு இயங்கின.

''ஆகட்டும், லாமோல் சீமாட்டி..''

''யான்ஸன், உல்லாசப்படகிற்கு எவ்வளவு முடியுமோ அவ்வளவு விரைவில்.''

''ஆகட்டும், சீமாட்டி..''

அன்று முன்னேரத்தில் ரெஸ்டாரன்டில் அவள் செய்திட்டது போலத் தனது கையை அவனது கழுத்தைச் சுற்றிப் போட்டு அவனுக்கு மிக நெருக்கமாக நகர்ந்தாள்.

''இது சண்டையின் தொடக்கம் மட்டுமே, யான் ஸன். மிகப் பெரிய அபாயம் இன்னும் முன்னேயே இருக்கிறது.''

''ஆகட்டும், சீமாட்டி.''

74

''வண்டிக்காரரே, பேய் வேகத்தில் ஓட்டு, படகுத் துறைக்கு... நான் கேட்டுக் கொண்டிருக்கிறேன், லாமோல் சீமாட்டி. புகைபிடிக்கும் அறையில் நான் காத்துக் கொண்டிருந்தபோது...''

''என் அறைக்குப் போனேன். என் தொப்பியையும் மழைக் கோட்டையும் கழற்றினேன்... அடுத்திருந்த அறைக்குச் செல்லும் கதவுக்கு முன்னே இருந்த அலமாரி நகர்த்தப்பட்டிருந்ததை நான் கவனிக்கலே. கண்ணாடி வரையில் செல்வதற்குக்கூட எனக்கு நேரமில்லை. அதற்குள் கதவு திறந்தது. ரோல்லிங் என் முன்னே நின்றான்... ஆனால் நேற்றுவரை அவன் பாரிசில் இருந்தான் என்பது எனக்குத் தெரியும். விமானப் பயணத்திற்கு அவன் மிகவும் அஞ்சுவான் என்பதும் எனக்குத் தெரியும்... அவன் இங்கே இருந்தானென்றால் அதன் அருத்தம் இது உண்மையாகவே அவனுக்கு வாழ்வா சாவா என்ற பிரச்சினைதான்... அவனது மனசிலே என்ன இருக்கு என்பது இப்ப எனக்குத் தெரியும். ஆனா அப்ப நான் வெறிபிடித்துப் போனேன். என்னை வஞ்சகமா பொறியில் மாட்ட வச்சிட்டான்... என்னால என்னவெல்லாம் சொல்ல முடியுமோ அதைச் சொல்லித் தீர்த்தேன்... தன் விரல்களைக் காதிற்குள் நுழைத்து அடைத்துக்கொண்டு வெளியே ஓடிவிட்டான்...''

''புகைபிடிக்கும் அறைக்கு வந்து என்னைப் படகிற்குத் திரும்ப அனுப்பிட்டான்...''

''அது அப்படித்தான்... என்ன முட்டாள் நான்! அந்த நடனங்கள், ஒயின் மற்றைய முட்டாள்தனங்கள் காரணமாகத்தான்... ஆமாம், என் நண்பனே, போராட விரும்பினா எல்லா அசட்டுத்தனத்தையும் ஒருபுறம் தள்ள வேணும்... இரண்டு மூன்று நிமிடங்களுக்குப் பிறகு அவன் திரும்பிவந்தான். முழுதும் பேசி முடிக்கணும் என்றேன். பிறகு, இதற்கு முன் என்னிடத்தில் அவன் எப்பவுமே பேசத் துணியாத துடுக்குக் குரலில் பேசினான். விளக்குவதற்கு ஒன்னும் இல்லை என்றும், அவன் என்னை விடுவிக்கிறவரை நான் அந்த அறையிலேயே தங்கி இருக்கணும் என்றும் உரத்துச் சொன்னான். உடனே அவன் முகத்தில் அறைந்தேன்...''

''உங்களுக்குத் துணிச்சல் இருக்கு,'' என்று வியந்து சொன்னான் யான்ஸன்.

''என் இனிய நண்பரே, அது என்னோட இரண்டாவது தவறு. ஆனால் என்ன கோழை அவன்! செவிடுகளில் நான்கு அறை விழுந்தும் வாங்கிக்கிட்டே நின்றான்... ஒன்னும் செய்யாது தனது உதடுகள் துடிக்க அங்கேயே நின்றான். எனது கையைப் பற்ற முயன்றான். ஆனா அதற்கும் நல்ல கூலி கிடைச்சுது. பிறகு என்னோட மூனாவது தப்பைச் செய்தேன்: நான் அழுது விட்டேன்...''

''ஓ, போக்கிப்பயல்!..''

''ஒரு நிமிடம் பொறுங்க, யான்ஸன். கண்ணீரப் பொருத்தவரையில் ரோல்லிங் ஒரு முட்டாள். கண்ணீரால் அவன் மனம் உடைவான். அதைவிட ஒரு டஜன்தரம் முகத்தில் அறை படுவதை விரும்புவான்... பிறகு கதவுக்குப் பின்னே நின்ற போலந்துக்காரனை உள்ளே கூப்பிட்டான், எல்லாமே முன்னேற்பாடானது என்பதைப் புரிந்துகொண்டேன். போலந்துக்காரன் சாய்வு நாற்காலியில் அமர்ந்தான். 'கடைசி வழியா அவனுக்குச் சுட உத்தரவிடப்பட்டிருக்கு' என்று என்னிடம் சொல்லி விட்டு ரோல்லிங் போய்விட்டான். நான் போலந்துக்காரனிடம் பேச்சுக்கொடுத்தேன். ஒரு மணி நேரத்திற்குள் ரோல்லிங்கின் வஞ்சகமான திட்டத்தின்

எல்லா விவரங்களையும் பெற்றேன். யான்ஸன், என் இனிய நண்பரே, என்னோட மகிழ்ச்சி பற்றிய விஷயம் அது. நீங்க எனக்கு உதவி செய்யாட்டா எல்லாமே போயிரும்... வண்டிக்காரனே, சீக்கிரம், சீக்கிரம்...''

வைகறைக்கு முந்திய அந்தப் பொழுதில் வெறுமையாயிருந்த கரை ஓரமாக வண்டி சடுதியில் ஓடிக் கல் படிக்கட்டுக்கு அருகில் நின்றது. அதன் அடியில் கட்டப்பட்டிருந்த சில படகுகள் விரிகுடாவின் எண்ணெய்க் கறுத்திருந்த நீர் மேல் மிதந்து கொண்டிருந்தன.

சிறிது நேரத்திற்குப் பின் அருமை மிக்க லாமோல் சீமாட்டியைக் கைகளில் பற்றிக்கொண்டு 'அரிஸோனா'வின் பின்பகுதியிலிருந்து வெளியே தொங்கவிடப்பட்ட ஒரு கயிற்று ஏணியின் மேல் யான்ஸன் ஓசையின்றி ஏறினான்.

75

காலை வேளையின் குளிரினால் ரோல்லிங் எழுப்பப் பெற்றான். மேல்தட்டு நனைந்திருந்தது, பாய்மர விளக்குகள் வெளுத்துப் போயிருந்தன; விரிகுடாவும் நகரமும் இன்னும் நிழலில் தான் இருந்தன, ஆனால் வெஸூவியசிற்குமேல் தோன்றிய புகை இதற்கு முன்பே செந்நிறச் சாயல் பெற்றிருந்தது.

கப்பல்களின் விளக்குகளுக்கு மேலும், கப்பல்களின் உருவரைகளுக்கு மேலும் ரோல்லிங் பார்வையைச் செலுத்தினான். காவலிருக்கும் மாலுமியுடன் சென்று அவனுக்கு அருகே நின்றான். ஒரு முறை கனைத்துவிட்டு காப்டன் மேடைக்குச் சென்றான். உடனே யான்ஸன் தன் அறையினின்று புத்துணர்ச்சியுடனும், தூய்மையுடனும், நல்ல உடையுடனும் வெளியே வந்தான். ரோல்லிங்கிற்கு அவன் காலை வணக்கம் செய்தான். பதிலுக்கு ரோல்லிங், காவலிருக்கும் மாலுமியிடத்தில் முன்னர் கனைத்ததை விடச் சற்று நயமுடன் கனைத்தான்.

நீண்ட நேரத்திற்கு மௌனமாக நின்றான், தனது சட்டைப் பொத்தானைத் திருகிக் கொண்டிருந்தான். "இந்தக் கெட்ட பழக்கத்தை அவனிடமிருந்து போக்குவதற்கு ஒரு காலத்தில் ஸோயா முயன்றாள். இப்போது அது ஒரு பொருட்டல்ல. அதைத் தவிர்த்து, பொத்தான்களைத் திருகுதல் அநேகமாக பாரிசில் அடுத்த ஆண்டில் புதுபாணியாகலாம். திருகுவதற்கேற்ற விசேஷமான பொத்தான்களைத் தையற்காரர்கள் புதிதாகக் கண்டுபிடிக்கலாம்.

திடீரென்று அவன் கேட்டான்:

''நீரில் மூழ்கியவர்கள் மட்டத்திற்கு எழும்புவார்கள், இல்லையா?''

''அவர்களோட ஒரு சுமையைக் கட்டாமல் விட்டால்,'' என யான்ஸன் அமைதியாக விடையளித்தான்.

''நான் அதைக் கேட்கலே: ஒருவன் கடலுக்குள் மூழ்கினால் அதுதான் முடிவா?''

''ஆமாம், ஒரு மனிதன் தளத்திலிருந்து விழுகிறதினாலோ, அலை அடித்துச் செல்றதினாலோ, அல்லது வேறு ஏதேனும் விபத்தினாலோ—அதெல்லாம் 'நீருள் மூழ்கியதாலான எதிர்பாராச் சாவு' என்று வகைப்படுத்தப்படுது. வழக்கமா அதிகாரிகள் தலையிடுவதில்லை.''

ரோல்லிங் தோள்களைக் குலுக்கிக்கொண்டான்.

''மூழ்குதலைப் பற்றி நான் அறிய விரும்பியது அவ்வளவுதான். நான் என் அறைக்குப் போறேன். திரும்பவும் சொல்றேன், ஒரு படகு இங்கே வந்ததா நான் இங்கு இருப்பதாகச் சொல்ல வேணாம். வந்தவனைக் கப்பலில் ஏற்றிக்கொண்டு எனக்கு அறிவியுங்க.''

அவன் போய்விட்டான். யான்ஸன் தனது அறைக்கு மீண்டான். அங்கே இழுத்து விடப்பட்ட நீலத் திரைக்குப் பின்னே காப்டனின் படுக்கையின் மேல் ஸோயா உறங்கினாள்.

76

எட்டு மணிக்குச் சற்று பிறகு 'அரிஸோனா' விற்கு அருகில் ஒரு படகு வந்து நின்றது. அதனை வலித்து வந்த கந்தையணிந்த ஒருவன் துடுப்புக்களை நிறுத்தி விட்டுக் கூப்பிட்டான்:

''இந்தா, யார் அங்கே?.. 'அரிஸோனா' இது தானா?''

''இதுதான் என்று வைத்துக் கொள்வோம்.'' என்று டென்மார்க் மாலுமி ஒருவன் பக்கப் பலகையில் சாய்ந்துகொண்டு விடையளித்தான்.

''ரோல்லிங் என்ற பெயரிலே யாரேனும் மேலே இருக்காரா?''

''இருப்பதாக வைத்துக்கொள்வோம்.''

கந்தையுடைக்காரன் முறுவலித்துத் தனது நேர்த்தியான பற்களை வெளிக்காட்டினான்:

''இதைப் பிடி.''

திறமையுடன் ஒரு கடிதத்தை மேல்தட்டிற்கு எறிந்தான். மாலுமி அதனைப் பிடித்தான். கந்தையுடையன் தன் நாவினால் சூள் கொட்டினான்:

''ஏய், மாலுமி, உப்புக் கண்ணா—எங்களுக்கு ஒரு சுருட்டுத் தா.''

கந்தையுடைக்காரனுக்கு ஏதாவது எப்படி எறிவது என்று அந்த டென்மார்க்காரன் சிந்தித்துக் கொண்டிருக்கும் போதே அவன் போய்விட்டான். படகில் கூத்தாடிக்கொண்டும், முகத்தைப் பலவாறு கோணவலித்துக் கொண்டும், வெப்பமான வெயிலொளி நிறைந்த அந்தக் காலை வேளையில் வாழ்க்கையில் ஏற்பட்ட மகிழ்வினால் வாய்விட்டுப் பாடினான்.

மாலுமி கடிதத்தை எடுத்துக்கொண்டு காப்டனிடம் சென்றான். (அப்படிச் செய்ய உத்தரவு இருந்தது.) யான்ஸன் திரையைப் பின்னிழுத்து விட்டுத் தூங்கும் ஸோயாவிற்கு மேல் சாய்ந்தான். உறக்கத்தினால் இன்னும் தடித்திருந்த தனது கண்களைத் திறந்தாள் அவள்.

''அவன் இங்கு வந்துவிட்டானா?''

யான்ஸன் அவளிடம் கடிதத்தைக் கொடுத்தான். அவள் அதனைப் படித்தாள்:

''கடுமையாகக் காயமுற்றிருக்கிறேன். என்மீது இரக்கம் காட்டுங்கள். உங்களுடைய நலன்களுக்காக நான் சிங்கம் போலச் சண்டையிட்டேன். ஆனால் இயலாதது நடந்துவிட்டது. ஸோயா சிமாட்டி விடுபட்டு விட்டாள். நான் விழுகிறேன் உங்களுடைய...''

அதனை முடிக்காமலேயே ஸோயா கடிதத்தைக் கிழித்தாள்.

''இப்போது நாம் அமைதியுடன் அவனுக்காகக் காத்திருக்க முடியும். (யான்ஸனை நோக்கி, அவனிடத்தில் தன் கையை நீட்டினாள்.) யான்ஸன், அன்பரே, நாம் ஓர் உடன்பாட்டிற்கு வர வேண்டும்: ஒன்று நான் மடிவேன், இல்லாவிட்டால் உலகின் மீது ஆட்சி செலுத்துவேன். (யான்ஸன் தன் உதடுகளைச் சேர்த்து அழுத்தினான். இச்செயலை ஸோயா விரும்பினாள்.) என் விருப்பத்தின் கருவியாக நீங்க இருப்பீங்க. நான் பெண் என்பதையே இப்ப மறந்துறுங்க. கற்பனையே நான்தான். துணிகரச் செயல்களையே புரிய விரும்புறேன், உங்களுக்குப் புரியுதா? எல்லாமே என்னுடையதாக இருக்கவே நான் விரும்புறேன். (கைகளால் ஒரு வட்டம் போடுகிறாள்.) அம்மனிதன், அந்த ஒரே மனிதன், எல்லாவற்றையும் எனக்குத் தரக்கூடியவன், விரைவில் 'அரிஸோனா'வில் வந்து சேருவான். அவனை நான் எதிர்பார்த்து இருக்கிறேன். அவ்வாறு ரோல்லிங்கும்...''

யான்ஸன் ஒரு விரலை உயர்த்திச் சுற்றிலும் பார்வையைச் செலுத்தினான். ஸோயா திரைகளை இழுத்து மூடினாள். யான்ஸன் மேடைக்குச் சென்றான். அங்கே கைப்பிடிக் கம்பியை இறுகப்பிடித்துக் கொண்டு ரோல்லிங் நின்றான். சுளித்த, இறுக மூடிய வாயுடைய அவனது முகம் சீற்றத்தால் உருமாறியிருந்தது. விரிகுடாவின் இயக்கமற்ற மங்கலான பரப்பை வெறித்து நோக்கிக் கொண்டிருந்தான்.

''அதோ அவன்,'' என்று சிரமத்துடன் முணுமுணுத்தான்; கை நீட்ட, அவனது விரல் நீலக் கட

லுக்குமேல் வளைந்து தொங்கியது. ''அதோ, அந்தப் படகில்.''

மாலுமிகள் நடுக்குறும்படி அவ்வளவு விரைந்து அறைக்குச் செல்லும் வழியில் ஓடும் போது கோணற் காலையுடைய ரோல்லிங் நண்டு போலத் தோற்ற மளித்தான். தன்னுடைய தனி அறைக்குள் மறைந்து கொண்டு, அங்கிருந்தே மீண்டும் தொலைபேசி வழியாகத் தன் கட்டளையை உறுதிப்படுத்தினான். ஆறு துடுப்புடைய படகு ஒன்றில் வரும் மனிதனை ஏற்றிக்கொள்ளுமாறு யான்ஸனுக்குக் கூறினான்.

77

ரோல்லிங் தனது கோட்டிலிருந்து பொத்தானைப் பிய்த்து எடுத்தது இதற்குமுன் எப்போதும் நிகழ்ந்ததில்லை. இன்று மூன்று பொத்தான்களையும் பிய்த்தெடுத்துவிட்டான். விலைமதிப்புள்ள பலகைச் சுவர்கள் அமைந்து ஷீராஸ் கம்பளங்கள் விரிக்கப்பட்டிருந்த ஆடம்பரமான அறை நடுவில் நின்று சுவரிலிருந்த கடிகாரத்தை நோக்கினான்.

எல்லாப் பொத்தான்களையும் திருகி எறிந்து விட்டபடியால் இப்பொழுது நகங்களைக் கடிக்கத் தொடங்கினான். எவ்வளவு விரைவில் பழங்கால நிலைக்கு மாறிவிட்டான் என்பது வியப்பாய் இருந்தது. காவலிருக்கும் மாலுமியின் கூப்பாடும் அதற்குப் படகிலிருந்து காரின் விடைதந்ததும் அவன் காதில் விழுந்தது. அந்தக் குரலின் ஒலி கேட்டவுடன் அவன் கைகள் வியர்க்கத் தொடங்கின.

உல்லாசப்படகின் ஒரு பக்கத்தில் அந்தக் கனத்த படகு மோத மாலுமிகள் மனமாறத் திட்டினர். பிறகு படிக்கட்டு கீழே இறக்கப்படுவதால் ஏற்படும் கிறீச் ஒலியும் காலடிகளின் ஓசையும் கேட்டன. 'இதைப் பிடித்துக்கொள்... எச்சரிக்கை... சரி... எங்கே?..'' ஹைபர்பாலாயிடுகள் அடங்கிய பெட்டிகளைப் படகிற்குள் எடுத்துவந்தனர். பிறகு எல்லாம் அமைதியாய் இருந்தது.

காரின் அவனுடைய பொறியில் விழுந்துவிட்டான். கடைசியாக! குளிர்ந்த ஈரமான விரல்களால் ரோல்லிங் தனது மூக்கைப் பிடித்துக்கொண்டு, உஸ் ஸென்ற இருமல் ஒலியைச் செய்தான். அவனைத் தெரிந்தவர்கள் தன்னுடைய வாழ்வில் அவன் ஒரு போதும் நகைத்ததில்லை என்று உறுதியாகக் கூறினர். அது உண்மையன்று! ரோல்லிங் சிரிக்க விரும்பினான், தனிமையில், சாட்சிகள் இன்றி, ஏதோ வெற்றிக்குப் பின்னர், இப்போது செய்தது போன்று, அநேகமாக ஓசையில்லாதவாறு.

பிறகு தொலைபேசியின் ஒலிவாங்கியை எடுத்துக் கொண்டு யான்ஸனை அழைத்தான்:

''அவன் படகில் இருக்கிறானா?''

''ஆம்.''

''அவனைக் கீழே இருக்கும் அறைக்குக் கூட்டிச் சென்று அதனுள் பூட்டுங்க. எவரும் காணாதபடி, ஓசையெதுவும் இல்லாமல் செய்ய முயலுங்க.''

''ஆகட்டும், ஐயா,'' என யான்ஸன் மிடுக்குடன் விடை கூறினான். ரோல்லிங் ஐயப்படும் அளவு அவனது விடை மிடுக்குற்றிருந்தது.

''ஹலோ, யான்ஸன்.''

''ஐயா.''

''இன்னும் ஒரு மணி நேரத்தில் உல்லாசப்படகு டுக்கடலில் இருக்க வேண்டும்.''

''ஆகட்டும், ஐயா.''

மாலுமிகள் கப்பல் மேல்தட்டில் விரைந்தோடத் தொடங்கினர். நங்கூரச் சங்கிலி ஒலித்தது. கப்பலின் என்ஜின்கள் இயங்கத் தொடங்கின. ஒளிச் சாளரங்களுக்கு வெளியே பச்சைநிற நீர் சிற்றாறு போலப் பெருகி ஓடியது. கரை திரும்பத் தொடங்கியது. நைப்புக்காற்று அறைக்குள் புகுந்து அடித்தது. 'அரிஸோனா'வின் வடிவான உடல் முழுதும் விரைதலினால் ஏற்படும் மகிழ்வு பரவியது.

உண்மையில், ரோல்லிங் தான் முட்டாள் போன்று நடந்துகொள்வதை உணர்ந்தான். ஆனால் அவன் முன்னைய ரோல்லிங் ஆக இல்லை—அமைதியுடன் சூதாடுகின்றவன், வெல்லமுடியாத எருமை,

ஞாயிற்றுக்கிழமைதோறும் சர்ச்சில் அறவுரை முடியும் வரை அமர்ந்திருக்கும் பக்திமிக்கவன் அல்லன். அவனது இப்போதைய செயல்கள் லாபத்தின் ஆணைக்குட்பட்டு நிகழவில்லை—உறக்கமின்றி இரவுகளில் தொல்லைப்பட்டதும், காரின் பால் கொண்ட வெறுப்பும், அவனது பொறாமையும் காரின் அழிக்கப்பட வேண்டும், ஸோயா மீட்கப்பட வேண்டும் என வற்புறுத்தின.

அனிலைன் கம்பெனித் தொழிற்சாலைகள் அழிக்கப்பட்டதாகிய, நம்பமுடியாத வெற்றிகூட ஒரு கனவு போன்றிருந்தது. இருபத்தொன்பதாம் தேதி காலையில் உலகம் முழுவதும் உள்ள ஸ்டாக் எக்சேஞ்சுகள் தனக்கு எத்தனை கோடி கொடுத்துள்ளன என்று காணக்கூட ரோல்லிங் கவலைப்படவில்லை.

அன்று, தங்கள் உடன்பாட்டின்படி, பாரிசில் காரினை எதிர்நோக்கிக் காத்திருந்தான், ஆனால் காரின் வரவில்லை. ரோல்லிங் முன்னேயே எதிர்பார்த்ததுதான் இது. முப்பதாம் தேதி அவன் நேப்பிள்ஸுக்கு விமானம் மூலம் விரைந்தான்.

இப்போது ஸோயா ஆட்டத்திலிருந்து அகற்றப்பட்டுவிட்டாள், அவனுக்கும் காரினுக்கும் இடையே யாரும் நிற்கவில்லை. பழிதீர்ப்பது முழுதும் விபரமாக எண்ணிப் பார்க்கப்பட்டிருந்தது. ரோல்லிங் ஒரு சுருட்டுப் பற்றவைத்தான். வேண்டுமென்றே சில கணங்களைக் காலங்கடத்தினான், பிறகு தன் அறையினின்றும் வெளியே நடைக்கூடத்திற்குச் சென்றான். கீழ்த்தளத்துக் கதவைத் திறந்தான். அங்கே கருவிகள் அடங்கிய பெட்டிகள் இருந்தன. அவற்றின் மீது அமர்ந்துகொண்டிருந்த இரு மாலுமிகள் அவன் நுழைந்ததும், குதித்தெழுந்தனர். மாலுமிகளின் அறைக்கு அவர்களை அனுப்பினான்.

கீழ்த்தளத்தின் கதவை மூடிக்கொண்டு அதற்கு எதிரிலிருந்த அறையின் கதவை நோக்கி மெதுவாக நடந்தான். அக்கதவின் பிடியை அவன் பற்றிய போது, தனது சுருட்டின் சாம்பல் விழுவதைக் கண்டான். மனநிறைவுடன் ரோல்லிங் முறுவலித்தான்.

அவன் மனம் தெளிவாக இருந்தது. அவன் இவ்வாறு தனக்குத்தானே திருப்தி கொண்டு நெடுங் காலமாயிற்று.

கதவைப் பரக்கத் திறந்தான். அறையினுள்ளே அவன் நுழைந்த போது, தகட்டுக் கண்ணாடிவழி வந்த வான ஒளிக்கடியில் ஸோயா, காரின், ஷெல்கா ஆகிய மூவரும் அவனை நோக்கிக்கொண்டு அமர்ந்திருந்தனர். ரோல்லிங் பின்னடி வைத்து நடைக்கூடத்தில் நின்றான். அவனுக்குத் தொண்டை அடைத்தது. யாரோ அவனது மூளையை ஒரு கரண்டி கொண்டு கிண்டிக்கலக்குவது போன்று அவனுக்குத் தோன்றியது. அவனது மூக்கின்மேல் வியர்வை முத்துக்கள் துளித்தன. எல்லாவற்றையும் விட மிக விசித்திரம் அவன் முறுவலித்தது. நிறுவனத்தின் கணக்குப் புத்தகத்தில் பொய்யாக விவரங்களை மாற்றி எழுதும் போது பிடிக்கப்பெறுகிற எழுத்தனைப் போன்று முட்டாள்தனமும் அருவருப்பும் வெளிப்படுகிற முறுவலைச் செய்தான்(இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு அவனே இத்தகைய குற்றம் புரிந்து பிடிபட்டிருந்தான்).

''வணக்கம், ரோல்லிங்,'' என்ற காரின் எழுந்து நின்றான். ''இதோ இருக்கிறேன், நண்பரே.''

78

கொடுமையிலும் கொடுமை! ரோல்லிங் தன்னை நகைப்பிற்குரியவனாக்கிக் கொண்டான்.

அவன் என்ன செய்யக்கூடும்? பற்களைக் கடிப்பதா, கத்திமோதுவதா, சுடுவதா? இன்னும் மோசமாகும், இன்னும் மிக முட்டாள்தனமாகும்... காப்டன் யான்ஸன் அவனுக்குத் துரோகம் செய்துவிட்டான் என்பது தெளிவாயிற்று. மாலுமிகள் நம்புவதற்குரியரல்லர்... நடுக்கடலில் உல்லாசப் படகு சென்று கொண்டிருந்தது. தனது மனவுறுதியினால் (அவனுள்ளத்திலே ஏதோ ஒன்று நொறுங்கியது)

ரோல்லிங் அந்த இழிவான முறுவலிப்பை ஒட்டி விரட்டினான்.

''ஆ!'' என்று அவன் தனது கையை உயர்த்தி, உவந்து வரவேற்கும் முறையில் அலைத்தான். ''ஹலோ, காரின்... ஆக, கடற்பயணத்தை விரும்புகிறீங்க போலும்? எனக்கு மகிழ்ச்சியே... நல்லா பொழுது போக்குவோம்...''

ஸோயா கடுப்புடன் கூறினாள்:

''நீங்க ஒரு மட்டமான நடிகர், ரோல்லிங். பொது மக்களுக்கு வேடிக்கை காட்ட முயல்வதை நிறுத்துங்க. உள்ளே வந்து உட்காருங்க. இங்கே அந்நியர்கள் யாரும் இல்லை—பயங்கரமான எதிரிகள் மட்டுமே இருக்காங்க. மத்தியதரைக் கடலில் செல்லும் கப்பலில் இத்தகைய இன்பக் குழுவைக் கூட்டியதற்கு உங்களைத்தான் குறை சொல்லிக்கொள்ளணும்.''

அவளை வெள்ளீயம் போன்ற தனது கண்களால் ரோல்லிங் நோக்கினான்.

''பெரிய விவகாரங்களில், லாமோல் சீமாட்டி, தனிப்பட்ட நட்போ அன்றிப் பகையோ ஒன்றும் இல்லை.''

மேசைக்கருகில் காரினுக்கும் ஸோயாவுக்கும் இடையே அரியணையின் மேல் அமர்வது போன்று அவன் அமர்ந்தான். மேசை மேல் கைகளை வைத்தான். அதனையொட்டி ஒரு நிமிடம் வரை அமைதி நிலவியது.

''மிகவும் நல்லது,'' என்றான். ''நான் தோற்றுப் போயிட்டேன். எவ்வளவு நான் கொடுக்கணும்?''

எக்கணத்திலும் பெரிய உளமார்ந்த சிரிப்பில் ஈடுபடத் தயாராக இருப்பது போலத் தோன்றிய காரின் விடை அளித்தான், அவனது கண்கள் மின்னின, அவனது முகத்தில் முறுவல் தவழ்ந்தது:

''சரியாக ஒரு பாதி, நண்பரே, ஃபான்டேன்ப்ளோவில் நாம் உடன்பட்டது போன்று ஒரு பாதி. இங்கே சாட்சிகூட இருக்கிறான்.'' எதையோ எண்ணிக்கொண்டு, மேசை மேல் விரல்களால் தாளம் போட்டுக் கொண்டிருந்த ஷெல்காவின் பக்கம் தன்

தாடியை ஆட்டிக் காட்டினான். ''நான் உங்களோட கணக்குப் புத்தகங்களை ஆராயப் போவதில்லை. குத்து மதிப்பில் முடிவான கணக்குத் தீர்க்கும் நிலையில், ஆயிரம் மில்லியன் டாலர் இருக்கும். உங்களைப் பொருத்தவரையில் இதைக் கொடுப்பது வேதனை இல்லாததாகவே இருக்கும். பெரும் பணத்தை ஐரோப்பாவிலிருந்து சுரண்டியிருக்கீங்க.''

''உடனே ஆயிரம் மில்லியனைக் கொடுப்பது இக்கட்டாயிருக்கும்,'' என மறுமொழி கூறினான் ரோல்லிங். ''நான் அதனை மீண்டும் நினைத்துப் பார்க்கிறேன். ஓ.கே. இன்னைக்கு பாரிஸ் போறேன். வெள்ளிக் கிழமையன்று, மார்செயில்ஸில் என்று வைத்துக் கொள்ளும், அத்தொகையின் பெரும் பகுதியைத் தர முடியும் என்று எதிர்பார்க்கிறேன்.''

''சே-சே-சே,'' கூவினான் காரின், ''ஆனா இதில் விஷயம் என்னவென்றால், இத்தொகை கொடுபட்ட பிறகுதான் நீங்க விடுவிக்கப்படுவீங்க.''

சட்டென்று ஷெல்கா அவன்மேல் பார்வையைச் செலுத்தினான், ஆனால் பேசவில்லை. முட்டாள்தனமான சாமர்த்தியமற்ற குறிப்பைக் கேட்பது போல ரோல்லிங் முகஞ் சுளித்தான்:

''இக்கப்பலிலேயே என்னைப் பிடித்துவைக்க விரும்புகிறீங்க என நான் தெரிந்துகொள்ள வேணுமோ?''

''ஆமாம்.''

''நான் அமெரிக்கக் குடிமகன் என்பதை உங்களுக்கு நினைவுபடுத்தியாகணும், அதனால் இந்த நாட்டின் சட்டத்தின் பாதுகாப்பிலுள்ளவன். அமெரிக்க ஐக்கிய நாடுகளின் கப்பற்படை முழுதும் என்னுடைய சுதந்திரத்தையும் நலன்களையும் காப்பாற்றும்.''

''அவ்வளவுக்கு மிக நல்லது!'' என்று மேலோங்கிய எரிச்சலுடன் இரைந்தாள் ஸோயா. ''எவ்வளவு சீக்கிரமோ அவ்வளவு நல்லது!..''

அவள் எழுந்து நின்று கைகளை நீட்டினாள்.

விரல்கள் வெளுக்கும் அளவிற்கு இறுக்கமாக உள்ளங்கைகளை மூடினாள்.

''உங்களோட கப்பற்படையெல்லாம் எங்களை எதிர்த்து விரட்டட்டும். இந்த உலகம் முழுதுமே எங்களுக்கு எதிராகக் கிளம்பட்டும். அவ்வளவுக்கு மிகவும் நல்லது!''

விரைவாக அவள் இயங்கியதால் அவளது குட்டைப் பாவாடை மேலே பறந்தது. அவளது தங்கப் பொத்தான்களுள்ள மாலுமிச் சட்டை, பையனைப் போன்று மயிர்வெட்டியிருந்த அவளது சிறு தலை, இந்த முழு உலகத்தின் விதியையும் பிழிந்து விட எண்ணிய அவளது முடக்கிய முன்கைகள், படபடப்பு காரணமாகக் கறுத்திருந்த அவளது சாம்பல் நிறக் கண்கள், அவளது கிளர்ச்சியுற்ற முகம் ஆகிய அனைத்தும் ஒரே காலத்தில் வேடிக்கையாகவும், அச்சுறுத்துபவையாகவும் இருந்தன.

''நான் உங்களைத் தவறாகப் புரிந்து கொண்டிருக்கணும், சீமாட்டி,'' எனக் கூறித் தன் உடல் முழுவதையும் அவள் பக்கம் திருப்பினான் ரோல்லிங். ''அமெரிக்க ஐக்கிய நாடுகளின் கப்பற்படைக்கு எதிராகப் போரிட எண்ணுறீங்களா? அதுதானே நீங்க சொல்ல விரும்பியது?''

மேசைமேல் தாளம் போடுவதை ஷெல்கா நிறுத்தினான். இந்த ஒரு மாத காலத்தில் முதல் முறையாக மகிழ்வுணர்ச்சியுடன் இருந்தான். கால்களை நீட்டிவிட்டு, நாடகமன்றத்தில் அமர்வது போலப் பின்னே சாய்ந்துகொண்டான்.

ஸோயா காரினை உற்றுப்பார்த்தாள், அவளது பார்வை கறுத்தது.

''நான் சொல்லிட்டேன், பியோத்தர் பெத்ரோவிச்... இப்ப உங்களோட முறை...''

காரின் காற்சட்டைப் பைகளுக்குள் கைகளை விட்டு எழுந்து குதிகாலூன்றி நின்று அப்படியும் இப்படியும் அலைந்தான். பிரகாசமான சிவந்த உதடுகள் முறுவலாக மலர்ந்தன. அவனது தோற்றம் முழுவதும் வீண்பகட்டாகவும் ஆழ்ந்த தன்மை அற்றதாகவும் காணப்பட்டது. அத்தோற்றத்திற்குள் குற்

றத்தன்மையுள்ள இரும்புச் சித்தம், உள்ளம், ஆற்றலால் வெடிக்கும் நிலையிலிருந்தது என்பதை ஸோயா மட்டும் ஊகித்தறிந்தாள்.

''முதலாவதாக,'' என்ற காரின் கட்டை விரலை ஊன்றி முன்னே சாய்ந்துகொண்டான், ''அமெரிக்காவுக்கு எதிராக எங்களுக்குக் குறிப்பிட்ட பகைமை கிடையாது. எங்களுக்கு எதிராகத் தாக்குதல் புரிய முயலும் எந்தக் கப்பற்படையையும் நாங்க நசுக்க முயல்வோம். இரண்டாவதாக,'' பின்னே சாய்ந்து குதிகாலில் நின்றான், ''நாங்கள் சண்டையை வற்புறுத்தலே. ஐரோப்பிய மற்றும் அமெரிக்கப் படைகள் எங்களுக்குத் தேவைப்படுகிற எந்தப் பகுதியையும் கைப்பற்றிக்கொள்ளும் புனித உரிமையையும், எங்களது பூரண அரசுரிமை போன்றவற்றையும் அங்கீகரித்தால் நாங்க அவற்றை அமைதியாயிருக்க விடுவோம்—குறைந்தபட்சம் ராணுவ ரீதியில். இதற்கு மாறான வழியை அவை தேர்ந்தெடுத்தால், நாங்க அமெரிக்க, ஐரோப்பிய தரைப்படை, கப்பற்படைகளையெல்லாம் கொஞ்சமும் இரக்கமின்றி நடத்துவோம். அவற்றின் கோட்டைகள், தளங்கள், இராணுவப் பண்டசாலைகள், அவற்றின் இராணுவத் தலைமை அலுவலகங்கள் ஆகிய அனைத்தும் அழிவுறும். அனிலைன் தொழிற்சாலைகளின் விதி, நான் வெறும் காற்று வீச்சில் உளறுபவன் அல்லன் என்பதை உங்களுக்கு அறிவுறுத்தும் என்று நம்புறேன்.''

ரோல்லிங்கின் தோளில் தட்டினான் காரின்.

''என்னோட முயற்சியில் ஒரு கூட்டாளியாக இருக்குமாறு உங்களை நான் கேட்ட காலம் ஒன்றிருந்தது... போதுமான அளவு நீங்க கற்பனை இல்லாதவனாக இருந்தீங்க, ஏன்னா நீங்க பண்பட்ட மனிதன் அன்று. பங்குதாரர்களை நொடிக்கவைக்கிறதும், தொழிற்சாலைகளை வாங்குறதும்—இதெல்லாம் என்ன? காலங்கடந்தவை... உண்மையான ஒருத்தனை, உங்களது முட்டாள்தனமான கோடிகளைப் பயன் படுத்தக்கூடிய உண்மையான அமைப்பாளனை நழுவவிட்டுட்டீங்க.''

அழுகும் பிணத்தைப் போலத் தோற்றமளிக்கத்

தொடங்கினான் ரோல்லிங். கஷ்டப்பட்டுச் சொற்களை வெளிப்படுத்தி அவன் குசுகுசுத்தான்:

''நீங்க அராஜகவாதி...''

இதைக் கேட்டதும் ஷெல்கா வலிவான தனது கையினால் தலையைப் பிடித்துக்கொண்டு, வெடிச் சிரிப்பு சிரிக்கத் தொடங்கினான். அந்தளவு பெருங் கூச்சலிடுவதைக் கேட்ட காப்டன் யான்ஸன் திடுக்குற்ற முகத்துடன் மேலே இருந்த சன்னல் வழியாகப் பார்த்தான். குதிகாலை ஊன்றித் திரும்பி காரின் மீண்டும் ரோல்லிங்கிடம் பேசினான்:

''இல்லை, நண்பரே, உங்களோட மூளையிலே ஒரு மறை கழன்று இருக்கு. நான் அராஜகவாதியல்ல... நிறைய நேரம் போவதற்கு முன்பே பகல் நேரத்தில் விளக்குடன் நீங்க தேடப்போகும் பெரும் அமைப்பாளன் நான் தான்... நமக்கு நிறையப் பொழுது கிடைக்கும் போது இதுபத்தி விவாதிப் போம். இப்ப செக் ஒன்னு எழுதுங்க... மார்ஸெயில்ஸ் நோக்கி முழு விரைவில் கப்பல் செல்லட்டும்.''

79

இதையடுத்துச் சில நாள்களில் கீழ்க்கண்டவாறு நிகழ்ந்தது: மார்ஸெயில்ஸ் துறைமுகத்திற்கருகில் 'அரிஸோனா' நங்கூரம் பாய்ச்சியது. இருபது மில்லியன் பவுண்டு ஸ்டெர்லிங்கிற்கு ரோல்லிங் அளித்த செக்கை காரின் 'க்ரெடிட் லியோனேஸ்' வங்கியில் கொடுத்தான். அந்த வங்கியின் இயக்குநர் கலவரமடைந்து உடனே பாரிசுக்குச் சென்றான்.

'அரிஸோனா'வில் ரோல்லிங் நோயுற்றதாக அறிவிக்கப்பட்டது. அவனுடைய அறையிலேயே பூட்டி வைக்கப்பட்டான். அவன் தனித்திருப்பதை உறுதிப் படுத்தும் முன்னேற்பாடுகளை ஸோயா இடைவிடாது செய்தாள். மூன்று நாள்களாகத் திரவ எரி பொருள், நன்னீர், டப்பியிலடைத்த பண்டங்கள், ஒயின், இன்னும் இவைபோன்றவையெல்லாம் 'அரி

ஸோனா'வில் நிறைக்கப்பட்டன. அடித்தட்டையான மூட்டையேற்றும் படகொன்று மணல் மூட்டைகள் நிறைத்துக் கொண்டு உல்லாசப் படகை நோக்கிப் புறப்பட்டபோது, படகுத்துறையிலிருந்த மாலுமிகளும் சோம்பேறிகளும் மிக வியப்புற்றனர். 'அரிஸோனா' ஆள் தின்னிகள் நிறைந்த சாலமோன் தீவுகளுக்குச் செல்வதாகச் சொல்லப்பட்டது. காப்டன் யான்ஸன் போர்க் கருவிகள் வாங்கினான்—இருபது குட்டைத் துப்பாக்கிகள், ரிவால்வர்கள், புகையாவித் தடை முகமூடிகள்.

குறிப்பிட்ட நாளன்று காரினும் யான்ஸனும் மீண்டும் வங்கிக்கு வந்தனர். பாரிசிலிருந்து இதற்காகத் தனிப்பட்ட முறையில் புறப்பட்டு வந்திருந்த உதவி நிதிமந்திரி அவர்களை வரவேற்றார். அவர் மிகவும் பண்பாடோடு நடந்துகொண்டார், காசோலை சரியானதுதானா என்பதைப் பற்றியும் ஐயுறவில்லை. இருப்பினும் ரோல்லிங்கையே காண அவர் விரும்பினார். 'அரிஸோனா'வுக்குக் கூட்டிச் செல்லப்பட்டார்.

அவரை ரோல்லிங் வரவேற்றான். ஆழ்ந்து குழி விழுந்த கண்களுடன் மிக நோய்வாய்ப்பட்டவனாக இருந்தான். நாற்காலியினின்றும் எழுவதே அவனுக்குக் கஷ்டமாய் இருந்தது. அந்தக் காசோலை தன்னால் கொடுக்கப்பெற்றதென்பதை உறுதிப்படுத்தி, தான் நெடுந்தொலைவு கடற்பயணத்திற்குப் புறப்பட்டுக் கொண்டிருப்பதால், பணங்கொடுப்பதில் உள்ள நடைமுறைகளை இயலும் வரை விரைவில் முடிக்குமாறு வேண்டிக்கொண்டான்.

உதவி நிதிமந்திரி ஒரு நாற்காலியின் பின்புறத்தைப் பிடித்துக் கொண்டு, கமீல் டெமுலேன்* போன்று கைகளை அசைத்துக்கொண்டு, மக்களினத்தவரின் சோதரத்துவம் பற்றியும் பிரான்ஸ் நாட்

---

* கமீல் டெமுலேன்(1760-1794)—பிரெஞ்சு பூர்ஷ்வாப் புரட்சியின் தலைவர்களில் ஒருவர். பத்திரிகையாளர், பிரசுர ஆசிரியர். பிற்காலத்தில் பிற்போக்கின் தரப்பில் சாய்ந்தார், 1794 ஆம் ஆண்டில் மரண தண்டனை விதிக்கப்பட்டார். (ப-ர்.)

டின் பண்பாட்டுச் செல்வம் பற்றியும் சொற்பொழிவாற்றிவிட்டு, பணம் தருவதற்குக் காலநீட்டிப்பு வேண்டினார்.

ரோல்லிங் தனது சோர்ந்த கண்களை மூடிக் கொண்டு தலையை ஆட்டினான். மூன்றில் ஒரு பகுதியை ஸ்டெர்லிங்காகத் தருவதென்றும் எஞ்சியவற்றை பிராங்குகளாக அப்போதைய நாணயமாற்று விகிதத்தில் தருவதென்றும் உடன்பாடு செய்து முடிக்கப்பட்டது.

அன்று மாலை கடற்படைப் படகு பணத்தைக் கொண்டுவந்தது. வெளியார் அனைவரும் போன பிறகு காரினும் யான்ஸனும் மேடை மீதேறினர்.

''மேல்தளத்திற்கு எல்லாரும் வாங்க!''

கப்பற் பணியாளர்கள் தளத்தின் பின்னணியத்தில் கூடியவுடன் யான்ஸன் உறுதியான, கண்டிப்பான குரலில் அவர்களிடம் பேசினான்:

''மாலுமிகளே, எல்லைமீறிய அபாயமும் ஆபத்துக்களும் நிறைந்த பயணத்திற்காக 'அரிஸோனா' புறப்பட்டுக் கொண்டிருக்கிறது. எவருடைய உயிருக்கேனும், கப்பல் சொந்தக்காரர்களின் உயிருக்கேனும், அல்லது கப்பலின் நலத்திற்கேனும் நான் பொறுப்பு ஏற்றுக்கொண்டால், நான் நாசமாய்ப் போகக்கடவேன். உங்களுக்கு என்னைத் தெரியும், சிங்கக் குட்டிகளே... உங்களுடைய ஊதியத்தை இரட்டிப்பேன், வழக்கமான போனசுகளும் இரட்டிப்பாகும். நலத்துடன் வீடு திரும்புற அனைவருக்கும் வாழ்நாள் முழுவதும் உதவிப்பணம் கிடைக்கும். இந்த விஷயங்களைப் பற்றிச் சிந்திக்கிறதுக்கு சூரியன் மறையும் வரை நேரம் தருகிறேன். ஆபத்துக்களை மேற்கொள்ள விரும்பாதவர்கள் கரையில் தங்கிவிடலாம்.''

அன்று மாலை கப்பற் பணியாளரில் எட்டுப் பேர் கரை சென்றனர். அதே இரவில் மார்ஸெயில்ஸ் துறைமுகத்துக் குடிக் கடைகளிலிருந்து யான்ஸன் பொறுக்கியெடுத்த, எதற்கும் துணிந்த எட்டு கயவர்கள் மாலுமிகளின் எண்ணிக்கையை இட்டு நிரப்பினார்கள்.

ஐந்து நாள்களுக்குப் பிறகு சௌத்ஹாம்டனில் கப்பல் நின்றது. காரினும் யான்ஸனும் 'இங்கிலாந்து வங்கியில்' இருபது மில்லியன் பவுண்டுகளுக்கு ஒரு செக் கொடுத்தனர். (இதைத் தொடர்ந்து பொது மக்கள் சபையில் தொழிற்கட்சித் தலைவரால் முதலமைச்சருக்கு ஒரு மென்மையான வினா விடுக்கப் பட்டது.) பணம் கொடுக்கப்பட்டது. பத்திரிகைகள் கூப்பாடு கிளப்பின. பல நகரங்களில் தொழிலாளரது ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. பத்திரிகையாளர்கள் சௌத்ஹாம்டனுக்கு விரைந்தனர். பார்வையாளர்கள் எவரையும் ரோல்லிங் சந்திக்கவில்லை. 'அரிஸோனா' எண்ணெய் எடுத்துக்கொண்டு மாகடலின் குறுக்கே மிதந்து சென்றது.

பன்னிரண்டு நாள்களுக்குப் பிறகு 'அரிஸோனா' பனாமாக் கால்வாயில் நங்கூரம் பாய்ச்சியது. 'ரோல்லிங் அனிலைன்' கம்பெனியின் பொது இயக்குநரான மாக்லின்னேய் என்பவன் வானொலித் தொலைபேசிக்கு அழைக்கப்பட்டான். குறிப்பிட்ட நேரத்தில் ரோல்லிங் வானொலி அறையில் அமர்ந்து கொண்டிருந்தான். அவன் தலைக்கு நேராக ஒரு கைத்துப்பாக்கி இருக்க தனது காசோலையைக் கொண்டுவரும் திரு. காரினுக்கு நூறு மில்லியன் டாலரைக் கொடுக்கும்படி தனது இயக்குநருக்கு கட்டளையிட்டான். காரின் நியூயார்க் சென்று பணத்துடனும், திரு. மாக்லின்னேயுடனும் மீண்டான். அது ஒரு தவறு. தனது இயக்குநருடன் சரியாக ஐந்து நிமிடங்கள் மட்டும் ஸோயா, காரின், யான்ஸன் முன்னிலையில் ரோல்லிங் பேசினான். எங்கேயோ ஏதோ கோளாறு இருக்கிறது என்று உறுதியாக முடிவு கட்டிய எண்ணத்துடன் மாக்லின்னேய் சென்றான்.

இந்தக் காரியங்கள் எல்லாம் முடிந்த பிறகு போக்குவரத்தில்லாத கரீபியன் கடலில் 'அரிஸோனா' சுற்றுலா புறப்பட்டது. காரின் அமெரிக்கா முழுவதும் குறுக்கும் நெடுக்கும் பயணம் செய்தான். தொழிற்சாலைகளுக்குச் சென்றான், கப்பல்களை வாடகைக்குப் பிடித்தான், எந்திரங்கள், பொறிகள்,

கருவிகள், எஃகு, சிமெண்ட், கண்ணாடி முதலிய வற்றை விலைக்கு வாங்கினான். அவன் வாங்கிய பொருள்கள் சான்பிரான்சிஸ்கோவில் கப்பல்களில் ஏற்றப்பட்டன. என்ஜினியர்களுடனும், தொழில் நுட்ப ஊழியர்களுடனும், தொழிலாளர்களுடனும் காரினினுடைய சட்ட ஆலோசகர் ஒப்பந்தங்களைச் செய்து கையெழுத்திட்டான். அவனுடைய மற்றொரு முகவர் ஐரோப்பாவுக்குச் சென்று ருஷ்ய வெள்ளைப் படையின் எஞ்சியிருந்தோர்களில் ஐநூறு பேரை போலீஸ் தொழிலுக்குத் தேர்ந்தெடுத்தான்.

இவ்வாறாக ஒரு மாதம் கடந்தது. நாள்தோறும் வானொலி வழியாக நியூயார்க், பாரிஸ், பெர்லின் முதலிய இடங்களுக்கு ரோல்லிங் பேசினான். அவனுடைய கட்டளைகள் கடுமையாகவும், மாற்றமுடியாதவையாகவும் இருந்தன. அனிலைன் கம்பெனித் தொழிற்சாலைகளின் அழிவுக்குப் பிறகு ஐரோப்பிய வேதியல் தொழில் 'ரோல்லிங் அனிலைனை' எதிர்ப்பதை நிறுத்தியது. அக்கம்பெனியின் புது வணிகக் குறியீடு, அவை உண்டாக்கிய பொருள்கள் அனைத்திலும் காணப்பட்டது. மூன்று கருங்கோடுகளுடைய ஒரு மஞ்சள் வட்டம், அதற்கு மேலே 'உலகைத் தழுவுவோம்' என்றும், அதன் அடியில் 'ரோல்லிங் அனிலைன் கம்பெனி' என்றும் பொறித்திருந்தது. ஒவ்வொரு ஐரோப்பியன் மேலும் இந்த மஞ்சள் வட்ட முத்திரை குத்தப்பட வேண்டும் என்பது போலத் தோன்றியது. ஜெர்மனியிலிருந்த அனிலைன் கம்பெனித் தொழிற்சாலைகளின் புகைநிரம்பிய இடிபாடுகளூடாக முன்னேறி, 'ரோல்லிங் அனிலைன்' தாக்குதலைத் தொடங்கியது.

ஐரோப்பா முழுவதும் ஒரு பயங்கர காலனி ஆதிக்க மணம் பரவியது; நம்பிக்கைகள் மங்கி மறைந்தன; களிப்பும் மகிழ்வும் ஒரேயடியாகப் போய் விட்டதாகத் தோன்றின. எண்ணற்ற ஆன்மீகச் செல்வங்கள் தூசிபடிந்த நூலகங்களில் மக்கின. பெரு நகரங்கள், தொழிற்சாலைப் புகைப்போக்கிகள், புகைப்படலங்கள் ஆகிய இவற்றின் மீதெல்லாம் மூன்று கருங்கோடுகளுடைய மஞ்சள் சூரியன் மெல்

லொளி பரப்பியது—விளம்பரங்கள், விளம்பரங்கள், இழிவான வகையில் தம்பட்டம் அடித்துப் பரப்பப் பட்ட விளம்பரங்கள் மக்களின் குருதியை உறிஞ் சின. அதே வேளை செங்கல் அடுக்கிய தெருக்களி லும், குறுகிய சந்துகளிலும், கடை சன்னல்களுக்கும் விளம்பரங்களுக்கும் இடையில், பெரியதும் சிறியது மான மஞ்சள் வட்டங்களுக்கு இடையில் மக்கள் முகங்கள் பசியாலும், அலுப்பாலும், நம்பிக்கையின் மையாலும் நலிந்துபோய் எட்டிப்பார்த்தன.

நாடுகளின் நாணய மதிப்பில் வீழ்ச்சி ஏற்பட்டது. வரிகள் வானை எட்டின. கடன்கள் அதிகரித்தன. கடமையும் உரிமையும் மதிக்கப்பட வேண்டும் எனக் கட்டளையிடும் புனிதச் சட்டம் நெற்றியில் மஞ்சள் முத்திரை அடித்தது. கொடுத்துத் தீர வேண்டும்!

'ரோல்லிங் அனிலைன்' செயலகப் பணப்பேழைக் குள்ளாகப் பணம் ஓடையாகவும், சிற்றாறாகவும், ஆறாகவும் ஓடியது. அதனது இயக்குநர்கள் நாடு களின் உள்விவகாரங்களிலும் சர்வதேச அரசியலி லும் தலையிட்டனர். இரகசிய ஆட்சிக்குழு போன்ற ஒன்றை உருவாக்கினர்.

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஒரு கோடியிலி ருந்து மற்றொரு கோடிக்கு தன்னுடன் இரு செய லாளர்கள், பல என்ஜினியர்கள், தட்டச்சுக்காரிகள், எண்ணற்ற ஏவலாட்கள் உடன்வர காரின் விரைந்து போய்க் கொண்டிருந்தான். அவன் நாளொன்றுக்கு இருபது மணி நேரம் வேலை செய்தான், விலை களை வினவுவதும் இல்லை, பேரம் பேசுவதும் இல் லை.

அவனுடைய நடவடிக்கைகளைக் கலவரத்துட னும் வியப்புடனும் மாக்லின்னேய் தொடர்ந்து கவ னித்து வந்தான். இப்படிப் பண்டங்களை வாங்குவ தெல்லாம் எதைக் குறிக்கின்றன, ரோல்லிங்கின் மில்லியன் கணக்கான பணம் இவ்வளவு அறிவுக் குறைவான முறையில் ஏன் இறைக்கப்படுகிறது என் பதை அவனால் புரிந்துகொள்ள இயலவில்லை. காரி னின் செயலாளன், அவனது தட்டச்சுக்காரிகளில் ஒருத்தி, மற்றும் இரண்டு ஏவலாளர்கள் மாக்லின்

னேயிடம் சம்பளம் பெற்றுவந்தனர். ஒவ்வொரு நாளும் நியூயார்க்கிலிருந்த அவனுக்கு விபரமான அறிக்கை அனுப்பினர். இருப்பினும், அப்படிச் சுழல் காற்றுப் போன்று பண்டங்கள் வாங்குவதும், பண்டங்களுக்கு ஆர்டர் செய்வதும், உடன்படிக்கைகள் செய்துகொள்வதும் என்னவென்று தெரிந்துகொள்ள முடியவில்லை.

செப்டம்பர் தொடக்கத்தில் 'அரிஸோனா' மீண்டும் பனாமாக் கால்வாயில் தோன்றி, காரினை ஏற்றிக்கொண்டு பசிபிக் மாகடலுக்குள் புகுந்து தென் மேற்கில் மறைந்தது.

பதினைந்து நாள்களுக்குப் பிறகு பத்து நீராவிக் கப்பல்கள், சுமை நிறைய ஏற்றப்பட்டு, சீல் வைத்த கட்டளைகளுடன் அதே திசை நோக்கி மிதந்து சென்றன.

80

மாகடல் கொந்தளித்தது. 'அரிஸோனா' அநேகமாக எல்லாப் பாய்களையும் விரித்தவாறு சென்றது. காற்றினால் உப்பிய பாய்களும், முரல்பவையும் இசைப்பவையுமான பாய்க்கயிறுகளும் கொண்ட ஓடு போன்றிருந்த உல்லாசப்படகின் குறுகிய உடல், ஒரு சமயம் அலைகளுக்கிடையில் பாய்மரங்களின் உச்சி வரை மறைந்துவிடும், மறுசமயம் இயக்கி மட்டும் நீருள் இருக்குமாறு, நுரை சிதறியவண்ணம் மேலெழும்.

விதானம் அகற்றப்பட்டது, மேல்தளத் திறப்புகள் எல்லாம் இறுக்கமாக மூடப்பட்டன. உயிர் காப்புப் படகுகள் மேல்தளத்தில் நன்கு பொருத்தி வைக்கப்பட்டன. இரண்டு பக்கங்களின் ஓரமாக வைக்கப்பட்டிருந்த மணல் மூட்டைகள் மேல்தட்டுடன் கம்பிகளால் பிணிக்கப்பட்டன. கப்பலின் முன் பகுதியிலும், பின்பகுதியிலும் கிராதிகள் வைத்த இரண்டு கோபுரங்கள் கட்டப்பட்டன. கொதிகலங்கள் போன்று வட்ட வடிவான அறைகள் அவற்றின்

மேல் அமைக்கப்பட்டன. கித்தான் போர்த்த இந்தக் கோபுரங்கள் அரைப் போர்க்கப்பல் போன்ற விந்தையான தோற்றத்தை 'அரிஸோனா'வுக்கு தந்தன.

காரினும் ஷெல்காவும் அலைகளின் நீர்த்திவலைகள் மட்டுமே தெறித்த காப்டன் மேடை மீது நின்றனர். இருவரும் தோல் கோட்டுகளும் தொப்பிகளும் அணிந்திருந்தனர். ஷெல்காவின் கை இப்போது பிளாஸ்டர் கட்டினின்றும் வெளியே எடுக்கப்பட்டிருந்தது, ஆனால் தீப்பெட்டியை எடுக்கவோ சாப்பிடும் போது முள்கரண்டியை எடுக்கவோ மட்டும்தான் வலிவு இருந்தது.

''மாகடலும்,'' என்றான் காரின், ''சிறிய, வலுவற்ற கலமும்... பருவடிவாக்கப்பட்ட மனித கூர்மதியும், சித்தமும்... நாம் பறந்து போகிறோம்,தோழர் ஷெல்கா,நம்மை எதுவும் தடுக்க முடியாது. நாம் போராடுகிறோம்... என்ன அலைகள்... அவற்றைப் பாருங்க, மலைகள் போல.''

கப்பலின் வலப்புறத்திலிருந்து பெரிய ராட்சத அலை ஒன்று நெருங்கி வந்தது. கொந்தளித்து நுரைத்த அதன் உச்சி வரவர உயர்ந்து வளர்ந்தது. அதன் கீழ், பளிங்குப் பச்சை நிறமான உட்கவிந்த மேல்பரப்பு நுரைப் பின்னல்களில் மேலும் மேலும் வளைந்து, கடைசியில் கடலுக்குள்ளேயே மடிந்து வீழ்ந்தது. 'அரிஸோனா' இடப்பக்கம் சாய்ந்தது. வெறிக் காற்று நீரின் அடித்தளத்திலிருந்து உல்லாசப்படகைத் தூக்கியவாறு, பாய்களுக்கிடையே புகுந்து இசைத்தது. கப்பல் மேலே வர, அதன் செந்நிற உடற்பகுதி அடித்தட்டு வரை வெளித்தெரிய, அலையின் வளைந்த மட்டத்தில் ஏறி அதன் உச்சியை அடைய, இரைச்சல் கொண்ட நுரை சொரிய அதனுள் மறைந்தது. மேல்தட்டும் தோணிகளும் முழுமையாக நீருக்கு அடியில் மறைந்தன. முன்புறக் கிராதி கோபுரம் அதன் கும்மட்டம் வரை நீருள் அழுந்தியது. காப்டன் மேடையைச் சுற்றி நீர் கொந்தளித்தது.

''அற்புதம்!'' எனக் கத்தினான் காரின்.

'அரிஸோனா' மீண்டும் சமநிலைக்கு வந்தது;

மேல்தட்டிலிருந்து நீர் விரைந்தோடிற்று; காற்றை இழந்தமையால் முன்பகுதிப் பாய்கள் அசைந்தன; உல்லாசப்படகு மீண்டும் அலையிடைப் பள்ளங்களில் அழுந்தியது.

''மனிதன் இப்படியே, தோழர் ஷெல்கா, மனிதப் பெருங்கடலில் மனிதன் இப்படியே...இச்சிறு படகில் எனக்குப் பெரும் பற்று உண்டு... அது என்னைப் போன்று இருக்கவில்லையா? நாம் இருவரும் காற்றைத் தாங்கிக் கொள்ளக் கூடியவர்கள்... இல்லையா?..''

ஷெல்கா தன் தோள்களைக் குலுக்கிக் கொண்டான், ஆனால் பதில் பேசவில்லை. தற்பெருமை ஆனந்தப் பரவச நிலையை அடைந்துவிட்ட இந்த மனிதனுடன் விவாதிப்பதில் எந்தப் பயனும் இல்லை... அதிதமனிதன் என்ற போதையில் அவன் மகிழ்ந்து மயங்கட்டும்! இந்த பூமியில் அவனும் ரோல்லிங்கும் ஒருவரையொருவர் கண்டுகொள்ளக் கடமைப்பட்டிருந்தார்கள்: அவர்கள் ஜென்ம விரோதிகள், ஆனால் ஒருவன் இல்லாமல் மற்றொருவனால் வாழ முடியாது. வேதியல் மன்னனின் கருவிலிருந்து அமைதியற்ற, குற்றமுள்ள எண்ணங்கள் நிறைந்த இந்தச் சிறுமனிதன் உண்டானான், தனது முறைக்கு இவனோ ரோல்லிங்காகிய பாலைவனத்தை இயல்மீறிய கற்பனையால் செழிக்கவைக்கிறான். இருவரும் ஒரே மரக்கிளையில் தூக்கிடப்பட வேண்டும்!

நெடுங்காலத்திற்கு முன்பே ரோல்லிங் ஏன் சுறா மீன்களுக்கு இரையாக்கப்படவில்லை என்பதைப் புரிந்துகொள்வது சிரமமாக இருந்தது. அவனிடமிருந்து தேவைப்பட்டதை அவன் செய்து விட்டான்; தான் வேண்டிய ஆயிரம் மில்லியனை காரின் பெறவில்லையென்றால், முந்நூறு மில்லியன் டாலர் பெற்றுவிட்டான். இப்போது சுமையை நீரில் எறிந்து தொலைத்துக் கட்ட வேண்டியதுதானே. ஆனால் இல்லை, இன்னும் எதுவோ இவ்விரு மனிதர்களையும் ஒன்றாகப் பிணைத்திருந்தது.

பசிபிக் மாகடலில் கப்பலினின்றும் தான் ஏன் தள்ளப்படவில்லை என்பதும் ஷெல்காவுக்குப் புரியவில்லை. நேப்பிள்ஸில் காரினுக்கு ஷெல்கா மூன்றாவது மனிதனாகவும், சாட்சியாகவும் தேவைப்பட்டான். 'அரிஸோனா'வில் காரின் தனியே தோன்றியிருந்திருப்பானேயானால் எதிர்பாராத இடுக்கண்கள் நேர்ந்திருக்கலாம். ஒரே நேரத்தில் இரண்டு பேர்களையும் ஒழிப்பது ரோல்லிங்கிற்கு மிகவும் சிரமமாக இருக்கும். அதெல்லாம் தெரிந்ததுதான். காரின் ஆட்டத்தில் வெற்றி பெற்றுவிட்டான்.

இப்போது அவன் ஷெல்காவிடமிருந்து என்ன விரும்பினான்? கரீபியன் கடலில் கப்பல் செலுத்தும் போது சில கட்டுப்பாடுகள் இருந்தன. ஆனால் இப்போது, வெளியே நடுக்கடலில், ஷெல்காவைப் பற்றி ஒருவரும் கருத்துச் செலுத்தவில்லை. அவன் விரும்பியதைச் செய்தான். கூர்ந்து நோக்கினான், கூர்ந்து கேட்டான். இந்த இழிநிலையிலிருந்து வெளியேறுவதற்குச் சாத்தியமான சில வழிகளைப் பற்றிய தெளிவில்லாத கருத்துப் பெறத் தொடங்கினான்.

மாகடலில் ஓட்டம் உல்லாசப்பயணம் போன்றிருந்தது. காலையுணவு, பகலுணவு, இரவு விருந்து ஆகியவை ஆடம்பரமாகப் பரிமாறப்பட்டன. மேசையைச் சுற்றி இருந்தவர்கள்: காரின், லாமோல் சீமாட்டி, ரோல்லிங், காப்டன் யான்ஸன், உதவி காப்டன், ஷெல்கா, சிற்றுருவமும் வெளுத்த நிலைக்குத்திட்ட கண்களும் அருகிய தாடியுமுடைய நோய்க் காட்டு மனிதனாகிய சேர்மாக் என்ற செக் நாட்டு என்ஜினியர் (காரினின் முதல் துணையாள்), காரினின் இரண்டாவது துணையாள் ஷெபெர் என்ற ஜெர்மானிய வேதியலாளன், எலும்பன், நாணிக் கோணும் இளைஞன், அண்மையில் சான்பிரான்சிஸ் கோவில் பசியால் செத்துக்கொண்டிருந்தவன்.

ஜன்மப் பகைவர்கள், கொலைகாரர்கள், கொள்ளைக்காரர்கள், துணிச்சல் பேர்வழிகள், வறுமைப் பட்ட விஞ்ஞானிகள் ஆகிய எல்லாரும் மாலையுடையில் நன்கு ஒப்பனை செய்துகொண்டு வந்த இந்த வேடிக்கையான குழுவில் ஷெல்காவும் மாலையுடை

யில் களிப்புடன் தின்னவும் குடிக்கவும் செய்து அமை தியுடன் இருந்தான்.

ஷெல்காவின் வலப்புறம் அமர்ந்திருந்தவன் ஒரு காலத்தில் அவனில் நான்கு குண்டுகளைப் பாய்ச்சிய வன், இடப்புறம் இருந்தவன் மூவாயிரம் பேரைப் படுகொலை செய்தவன்: எதிரே வீற்றிருந்தவள் அழகி, உலகம் இதுவரை கண்டிராத பெண்பேய்.

இரவு விருந்துக்குப் பின் ஷெபெர் பியானோ இசைக்க யான்ஸனுடன் ஸோயா நடனமாடினாள். ரோல்லிங் வழக்கமாக மேசை அருகில் அமர்ந்து நட னமாடுபவர்களைக் கவனித்தான். மற்றவர்கள் புகை பிடிக்கும் அறைக்குச் சென்றனர். ஷெல்கா மேல்த ளத்தில் புகைபிடித்தான். ஒருவரும் அவனைத் தடை செய்யவில்லை, உண்மையில் ஒருவரும் அவனைக் கவனிக்கவில்லை. நாள்கள் ஒன்று போலவே கடந்து சென்றன. அச்சந்தருகின்ற மாகடலுக்கு ஓர் எல்லை யே இல்லை. பல மில்லியன் ஆண்டுகளாகச் செய்து வந்தது போலவே அலைகள் இப்போதும் உருண் டன.

தனது வழக்கத்திற்கு மாறாக, இன்று காரின் ஷெல்காவின் பின்னே மேடைக்குச் சென்று லெனின் கிராடின் தொழிற்சங்கச் சாலையில் இருவரும் கூடி அமர்ந்திருந்த நாளுக்குப் பிறகு ஏதுமாறான எது வும் நிகழாதது போன்று அவனுடன் பேசினான். இது ஷெல்காவை உடனடியாக விழிப்படையச் செய் தது. உல்லாசப்படகையும் தன்னையும் கடலை யும் வியந்து ஆனந்த பரவசமடைந்த போதிலும், காரின் ஏதோ உள்நோக்கம் கொண்டிருந்தது புலப் பட்டது.

தாடியில் பட்டிருந்த நீர்த்திவலைகளை உதறிக் கொண்டு ஒரு சிரிப்புடன் அவன் கூறினான்:

''நான் ஒரு திட்டம் வைத்திருக்கிறேன், ஷெல் கா.''

''ஊம்?''

''நாம் நேர்மையாக ஆட்டம் நடத்த ஒப்புக் கொண்டது நினைவிருக்கா?''

''ஆமா.''

''அதோடு... சே-சே... புதர்களுக்குள்ளிலிருந்து என்னைச் சுட்டவன் உங்களோட ஆளா? என் மண்டையோட்டுக்கு மயிரிழைதான் பாக்கி.''

''அதைப் பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது.''

ஷ்டுபெருடைய பங்களாவில் என்ன நடந்தது என்பதை அவனிடம் காரின் கூறினான். ஷெல்கா தலையாட்டினான்.

''அதனோடு எனக்கு எந்தச் சம்பந்தமும் இல்லை. ஆனா, பரிதாபம் அவனுக்குக் குறிதவறிப் போச்சு.''

''அது விதியாகத்தான் இருக்கணும், இல்லையா?''

''ஆமாம், விதிதான்.''

''ஷெல்கா, உங்களுக்குரிய வாய்ப்பை உங்களுக்குத் தருகிறேன்,'' என்று அவன் சொன்னபோது காரினின் ஈவிரக்கமற்ற, கொடிய கண்கள் ஷெல்காவை நெருங்கின. அவனுடைய முகத்தில் திமை தோன்றியது. ''நீங்க கொள்கையுள்ளவர் எனப் பாவனை செய்வதை நிறுத்தணும், அல்லது கடலுக்குள் உங்களைத் தூக்கி எறியணும். நான் சொல்றது புரியுதா?''

''எல்லாமே புரியுது.''

''எனக்கு நீங்க தேவை. எனக்கு நீங்க பெரிய காரியத்துக்காகத் தேவை... நாம் ஓர் உடன்பாட்டுக்கு வர முடியும். நான் நம்புகிற ஒரே ஆள் நீங்கதான்.''

அவன் முடிப்பதற்கு முன்னேயே ஒரு பெரிய அலை, அதற்கு முந்தியவைகளையெல்லாம் விடப் பெரியது, உல்லாசப்படகின் மீது மோதியது. மேடையைச் சுற்றிச் சீறும் நுரை சுழன்று பரந்தது. சாரக் கம்பியின் பக்கமாக ஷெல்கா தூக்கி எறியப்பட்டான். பரக்க விரிந்து கொண்டிருந்த விழிகள், அகலத் திறந்த வாய், விரல்கள் பரத்தியிருந்த கை ஆகியவற்றுடன் ஷெல்காவின் உருவம் நீருக்கு அடியில் மறைந்தது... காரின் நீர்ச் சுழலுக்குள் முக்குளித்தான்.

81

பின்னைய நாள்களில் அடிக்கடி ஷெல்கா அந்நிகழ்ச்சியை நினைவு கூர்ந்தான்.

தன் உயிரையும் பொருட்படுத்தாது காரின் ஷெல்காவின் கோட்டு நுனியைப் பிடித்துக் கொண்டு அலைகள் கப்பலின் மீதிருந்து வடிந்து செல்லும் வரை போராடினான். மேடையின் சாரக்கம்பியில் ஷெல்கா தொங்கிக் கொண்டிருந்தான். அவனது நுரையீரல் முழுதும் நீர் நிறைந்து, மேல்தளத்தில் சுமை போன்று விழுந்தான். மாலுமிகள் பெரும் சிரமத்துடன் நீரை அவன் உடலிலிருந்து வெளியேற்ற அவனது அறைக்குத் தூக்கிச் சென்றனர்.

விரைவில் காரின் அங்கு வந்தான். அவன் தன்னுடைய உடைகளை மாற்றிக்கொண்டு இருந்தான். குரோக் ஒயின் கொண்டுவருமாறு கட்டளையிட்டான். சுங்கானைப் பற்றவைத்துக்கொண்டு, தடைப்பட்ட உரையாடலை மீண்டும் தொடர்ந்தான்.

அவனுடைய கேலி செய்யும் முகத்தையும், தோல்தைத்த சாய்வு நாற்காலி ஒன்றில் தாறுமாறாகப் பரப்பிக் கிடந்த அவனது லாகவமான உடலையும் ஷெல்கா கூர்ந்து நோக்கினான். விநோதமான, முரண்பட்ட தன்மை. கொள்ளைக்காரன், கயவன், தீய துணிச்சல்பேர்வழி... இத்தனைக்கும் மாறாக, குரோக் பருகியதாலோ அன்றி நீரால் அலைத்துக் குலுக்கப்பட்டதாலோ ஷெல்கா தனக்குமுன் காரின் கால்மேல் கால் போட்டு அமர்ந்திருப்பதை மகிழ்வூட்டுவதாகக் கருதினான். அலைகளின் உரத்த மோதுதல்களால் 'அரிஸோனா'வின் பக்கங்கள் கிறீச்சிடாதது போன்றும், கொந்தளிக்கும் நீர் ஒளிச்சாளரங்களின் கண்ணாடிக்கு வெளியே பெருகாதது போன்றும், படுக்கையில் கிடந்த ஷெல்காவும் நாற்காலியிலிருந்த காரினும் மேலுங்கீழுமாக ஊஞ்சல் போல ஆடாதது போன்றும், எதற்கும் கலவரப்படாது புகைத்துக் கொண்டே பல விஷயங்களைப் பற்றி காரின் பேசிக்கொண்டே இருந்தான்.

லெனின்கிராடில் வசித்த நாள்களில் இருந்ததை விடப் பெரிதும் மாறுபட்டிருந்தான் காரின்—தன்னம் பிக்கையுடையவனாகவும், மகிழ்வுடையவனாகவும், நட்புடையவனாகவும் மாறியிருந்தான், அதாவது மதித்திறனுள்ள, உறுதியான தற்பெருமைக்காரன் தான் இவ்வாறு இருக்கக்கூடும்.

''இத்தகைய அருமையான வாய்ப்பை ஏன் விட்டுட்டீங்க?'' என ஷெல்கா அவனை வினவினான். ''அல்லது என்னுடைய உயிர் உங்களுக்கு அவ்வளவு முக்கியமாகத் தேவைப்படுதா? என்னால உங்களைப் புரிஞ்சுக்க முடியலே.''

காரின் தலையைப் பின்புறமாகத் தள்ளிக் களிப்புடன் சிரித்தான்:

''வேடிக்கையாப் பேசுறீங்க, ஷெல்கா... நான் ஏன் தர்க்கரீதியா நடக்கணும்? நான் கணக்கு ஆசிரியர் அல்லன்... நிலைமைதான் எப்படி மாறுகிறது? மனிதாபிமானமுள்ள ஒரு சிறு செயல்—அது புரிந்து கொள்ள முடியாததாய் இருக்கு. மூழ்கிக் கொண்டிருக்கிற ஒரு மனிதனை தலைமயிரைப் பிடித்து நீருக்கு வெளியே இழுப்பதனால் எனக்கு என்ன பயன் கிடைக்கும்? எதுவுமே இல்லை. உங்களிடமுள்ள நட்பு உணர்வு காரணமாகத்தான்... மனிதாபிமானம்...''

''அனிலைன் தொழிற்சாலைகளைத் தகர்த்த போது, நீங்க மனிதாபிமானம் பற்றி எண்ணிக் கொண்டிருக்கவில்லை, இல்லையா?''

''இல்லை, நான் எண்ணலே!'' எனக் கத்தினான் காரின். ''ஒழுக்கநெறியின் அழிபாடுகளின் அடியில் இன்னமும் நீங்க புதையுண்டு இருக்கீங்க, அதை விட்டு வெளியேற உங்களால் முடியவே முடியாது. ஷெல்கா, ஷெல்கா... இவை என்ன தனித்தனி அறைகள்—இந்த அறை நல்லது, அந்த அறை கெட்டது... ஒயின் சுவைப்பவனை நான் புரிந்துகொள்ள முடியும்: ஒயினைச் சுவைக்கிறான், வெளியே துப்புகிறான், ஒரு துண்டு ரொட்டியைத் தின்கிறான்—இந்த ஒயின் நல்லது, அது தீயது. இந்தச் சுவை உணர்வாலேயும், அவனது எண்ணத்திலுள்ள நுண்ணிய நரம்பு

களாலும் வழி நடத்தப்படுகிறான். அது எதார்த்தம். ஒழுக்கநெறிகளின் உங்களோட சுவையுணர்வாளன் எங்கே? அவற்றைச் சோதிக்க அவன் எந்த நரம்புகளைப் பயன்படுத்துகிறான்?''

''சோவியத்துகளுக்கு உதவுகிற எல்லாமே நல்லது தான்,'' என்றான் ஷெல்கா. ''தடை செய்கிற எல்லாமே கெடுதல்தான்.''

''அபாரம், அற்புதம், எனக்குத் தெரியும்... ஆனா அதெல்லாம் உங்களுக்கு என்ன? சோவியத் குடியரசுடன் உங்களுக்கு என்ன தொடர்பு? பொருளாதார ரீதியில் சார்ந்திருக்கிறீர்களா? முட்டாள் தனம்... ஆண்டிற்கு ஐம்பதாயிரம் டாலர் நான் உங்களுக்கு ஊதியம் தருகிறேன். நான் முற்றிலும் பொறுப்போடப் பேசுறேன். ஒப்புக்கொள்றீங்களா?''

''மாட்டேன்,'' என அமைதியுடன் விடைதந்தான் ஷெல்கா.

''மாட்டேன் என்றால் போகிறது... ஆகவே நீங்க கொண்டிருப்பது பொருளாதார ரீதியில் அன்று, ஆனா சித்தாந்த ரீதியில், நேர்மையின் தொடர்பு, சுருங்கச் சொன்னா, உயர்வான விஷயம். நீங்க அசைக்க முடியாத ஒழுக்கநெறியாளர், நான் அதைத் தான் உங்களுக்கு நிரூபிக்க விரும்புறேன்... நீங்க உலகத்தைத் தலைகீழா மாற்ற விரும்புறீங்க. பொருளாதார விதிகளின் பல்லாயிரம் ஆண்டுக் குப்பையை அகற்றிச் சுத்தம் செய்றீங்க, ஏகாதிபத்தியக் கோட்டைகளை வெடிவைத்துத் தகர்க்கிறீங்க. சரி, சரி. நானும் உலகைத் தலைகீழாக மாற்ற விரும்புறேன். ஆனா என்னோட சொந்த வழியில். எனக்கேயுரிய மேதையின் ஆற்றலினால் நான் அதனைத் தலைகீழாக மாற்றுவேன்.''

''ஓகோ!''

''எல்லாவற்றுக்கும் மாறாக, மனத்தில் வச்சுக்கங்க, ஷெல்கா. நான் கூறுவதைக் கேளுங்க: பார்க்கப்போனா மனிதன் என்பது என்ன? சாவுபற்றிய விவரிக்க முடியாத பீதியுடன் பூமி என்னும் களிமண் உருண்டையில் ஒட்டிக்கொண்டு, அதோடு கூடவே அடர்பனி இருளில் பறந்த வண்ணமாயிருக்கும் அற்

பத்திலும் அற்பமான நுண்ணுயிரியா? அல்லது சிந்தனை என்னும் சிறப்பான, இரகசியமான பொருளை—எதன் ஒரு நுண்துகள் பிரமாண்டம் அனைத்தையும் தனக்குள் அடக்கிக் கொண்டிருக்கிறதோ அந்தப் பொருளை—தயாரிப்பதற்குரிய தெய்விகக் கருவியாகிய மூளையா? ஆக, என்ன சொல்றீங்க?''

காரின் தனது நாற்காலியில் இன்னும் சாய்ந்து ஆழமாக அமர்ந்து, கால்களை நாற்காலிக்கடியில் இழுத்துக்கொண்டான். இயல்பாக வெளுத்திருக்கும் அவன் கன்னங்கள் சிவப்பேறியிருந்தன.

''நான் வேறுவகையான ஒன்றை முன்மொழிகிறேன். என் இனிய பகைவரே, கேளுங்க... பூமியில் நான் முழுமையான சர்வாதிகாரத்தைப் பெறுவேன். நான் உத்தரவிடாதவரை ஒரு புகைப்போக்கி புகையாது, ஒரு கப்பலும் துறையை விட்டு நீங்காது, ஒரு சம்மட்டியும் அடிக்காது. எல்லாம்—மூச்சு விடும் உரிமை உட்பட—மையத்திற்குக் கீழ்ப்பட்டிருக்கும். மையத்தில் நான் இருப்பேன். எல்லாம் என்னைச் சேர்ந்தது. சிறு தங்க வட்டத்தகடுகளின் ஒரு பக்கம் என் பக்கத் தோற்றத்தை சிறு தாடியுடனும் முடியுடனும் பொறிப்பேன்—மறுபுறம் லாமோல் சிமாட்டியின் பக்கத் தோற்றம் பொறிக்ப்படும். பிறகு 'முதல் ஆயிரம்' பேரைத் தேர்ந்தடுப்பேன். இரண்டு அல்லது மூன்று மில்லியன் ஜாடிகள் இருந்த போதிலும் சரி. அவர்கள் உயர்தடியுரிமையாளர்களாக இருப்பர். உயர்ந்த இன்பங்கள் துய்ப்பதிலும், ஆக்கச் செயலிலும் தம்மை முழுதும் ஈடுபடுத்துவார்கள். பிறகு கலாசாரத்திற்கு முழு உழைப்பையும் தருவதற்குத் தேவைப்படுவர்களின் துல்லியமான எண்ணிக்கையை நாங்கள் தீர்மானிப்போம். இந்த வகையிலும் கூட தேர்வு முறையையே பின்பற்றுவோம். நாகரிகத்திற்காக நாங்கள் இவர்களை உழைப்பாளிகள் என்று அழைப்போம்.''

''அது சொல்லாமலே புரிகிறது.''

''நீங்கள் சிரிக்கக்கூடும், என் நண்பரே, இந்த உரையாடலின் முடிவுக்கு நாம் வருகின்ற போது... அவர்கள் கிளர்ச்சி செய்யமாட்டார்கள், இல்லை,

என் அருமைத் தோழரே. புரட்சியின் சாத்தியப்பாடு வேரிலே அழிக்கப்படும். ஒவ்வொரு உழைப்பாளியும் ஏதேனும் ஒரு தொழிலில் தன்னைத் தகுதிப்படுத்திக் கொண்ட பிறகு, அவனுக்கு உழைப்புப் புத்தகம் கொடுப்பதற்கு முன்பு சிறு அறுவை மருத்துவம் செய்யப்படும். எளிய மயக்க மருந்து கொடுத்துச் செய்யப்படும் முற்றிலும் சாதாரண அறுவை மருத்துவம்... ஒன்றும் பெரிதல்ல. மண்டையோட்டில் சிறிய துளையிடுதல். சற்றே மயக்கமடைவான், —விழித்தெழுகிற போது ஓர் அடிமையாக இருப்பான். இறுதியில், ஒரு விஷேடமான குழு இருக்கும். அதனை ஒரழகிய தீவில் இனப்பெருக்கத்திற்காகப் பிரித்து வைப்போம். எஞ்சியவர்களையெல்லாம் பயனற்றவர்களாகக் கருதி நாங்கள் கழிக்க வேண்டியிருக்கும். அங்கே பியோத்தர் காரினின் கருத்துப்படி எதிர்கால மக்களினத்தின் அமைப்பை நீங்க காணலாம். உழைப்பாளிகள் குறைபட்டுக்கொள்ளாமல், குதிரைகளைப் போல, தங்கள் உணவுக்காக உழைத்துப் பணிபுரிவார்கள். அதன் பின்னர் அவர்கள் மக்களாகவே இருக்கமாட்டார்கள், பசியைத் தவிர எந்தக் கவலையும் அவர்களுக்கு இருக்காது. தங்கள் உணவு செறிமானத்தில் மகிழ்ச்சியைக் காண்பார்கள். பொறுக்கியெடுக்கப்பட்ட உயர்குடியுரிமையாளர்கள் அரைத் தெய்வங்களாக இருப்பர். ஒட்டுமொத்தமாக மக்களை நான் வெறுத்தாலும், நல்லவருடன் கூடியிருப்பது எப்போதுமே மகிழ்ச்சியானது. என் நண்பரே, கவிஞர்கள் கனவு காணும் பொற்காலத்தை நாம் அநுபவிப்போம் என்று உறுதி கூறுகிறேன். பூமியிலிருந்து அதனது உபரி மக்கள் தொகையை நீக்கியதால் ஏற்பட்ட அச்சத்தின் மனப்பதிவு சீக்கிரமே மறந்து போய்விடும்.''

''பாசிஸ்டு கற்பனாவாதம், ஒருவகையில் அறிவார்வமிக்கது,'' என்றான் ஷெல்கா. ''இதுபற்றி ரோல்லிங்கிடம் ஏதேனும் சொல்லி இருக்கீங்களா?''

''அது கற்பனாவாதம் அன்று என்பதுதான் அதனது வேடிக்கையான அம்சம். நான் தர்க்கரீதியில் மட்டுமே செல்கிறேன்... ரோல்லிங்கிடம் நான் எதை

யும் சொல்லவில்லை என்பதைக் கூறத் தேவையில்லை, ஏனெனில் அவன் வெறும் முரட்டு மிருகந்தான். எனினும், எதை நான் துல்லியமாகவும் வரையறுக்கப்பட்ட திட்டமாகவும் ஒன்றுசேர்ப்பேனோ அதையே ரோல்லிங்கும் உலகிலுள்ள எல்லா ரோல்லிங்குகளும் கண் மூடித்தனமாகச் செய்துவருகிறார்கள். அதைக் காட்டுமிராண்டித்தனமாகவும், பாங்கின்றியும், மெதுவாகவும் செய்துவருகிறார்கள். நாளை நாம் தீவை அடைவோம் என்று நம்புகிறேன்... பிறகு நீங்களே பாருங்க, நான் வேடிக்கைக்குச் சொல்லவில்லை என்பதை...''

''என்ன வேலையை முதலில் தொடங்கப் போகிறீங்க? உங்களோட தாடி முகத்துடன் நாணயங்கள் அடிக்கப் போறீங்களா?''

''அட, ஏன்தான் அந்தத் தாடி உங்க கண்ணை உறுத்துதோ! இல்லை. முதலில் பாதுகாப்புடன் தொடங்குவேன். தீவை அரண் செய்வேன், அதே நேரத்தில், ஆலிவீன் பட்டையினூடே அசுர வேகத்தில் சுரங்கம் தொளைக்கத் தொடங்குவேன். தங்கத்தின் நிலைமதிப்பை நான் கவிழ்க்கிற போதுதான், என்னுடைய முதல் அச்சுறுத்தல் உலகத்துக்குத் தெரியும். நான் விரும்புகிற அளவு தங்கத்தை வெட்டி எடுக்க என்னால முடியும். பிறகுதான் என்னுடைய தாக்குதலைத் தொடங்குவேன். 1914இல் நடந்ததைவிட மிகவும் கொடூரமான போர் நடைபெறும். என்னுடைய வெற்றி உறுதியானது. போருக்குப் பின்னர் மடியாதிருக்கும் மக்கள் தொகையில் வேண்டியவரை மட்டும் தேர்ந்தெடுத்துக்கொண்டு தேவையற்றவர்களை அழித்துவிடும் செயல் நடைபெறும்; நான் தேர்ந்தெடுக்கும் உயர் மனிதர் கடவுளர் போன்று வாழத் தொடங்குவாங்க, உழைப்பாளிகள் மனச்சான்றுக்கு ஏற்ப வேலை செய்யத் தொடங்கி, தேவலோகத்தில் இருக்கும் முதல் மனிதர் போன்று மகிழ்ச்சியோட இருப்பாங்க. புத்திசாலி, இல்லையா? இது உங்களுக்குப் பிடிக்கவில்லையா?''

காரின் மீண்டும் வெடிச் சிரிப்பு சிரித்தான். அவ

னைப் பாராமல் இருப்பதற்காக ஷெல்கா தன் கண்களை மூடிக்கொண்டான். தொழிற்சங்கச் சாலையில் தொடங்கிய விளையாட்டு கடுமையான போட்டி ஆட்டமாக வளர்ந்து வந்தது. அவன் மல்லாந்து படுத்துக்கொண்டு சிந்தித்தான். வெற்றியை நோக்கிச் செல்ல அபாயகரமான ஒரே ஒரு முயற்சிதான் எஞ்சியிருந்தது. எவ்விதத்திலும், இக்கணத்தில் அப்பட்டமாக காரினிடம் மறுப்பது தவறு என்பது தெளிவானது.

ஒரு சிகரெட்டைக் கைநீட்டி எடுத்தான் ஷெல்கா. எள்ளல் நோக்குடன் காரின் அவனைக் கூர்ந்து பார்த்தான்.

''தீர்மானித்துவிட்டீர்களா?''

''ஆமாம், தீர்மானித்துவிட்டேன்.''

''அருமை. எனது சீட்டுக்களைத் திறந்து காட்டுகிறேன்: சக்கிமுக்கிக்கல்லுக்குக் காய்ந்த கந்தை எவ்வளவு தேவையோ அதேபோல நீங்க எனக்குத் தேவை. ஷெல்கா, மூளை மழுங்கிய முரடர்களால் நான் சூழப்பட்டிருக்கிறேன். எந்தக் கற்பனையும் இல்லாத மக்களால். நீங்களும் நானும் நிறையச் சச்சரவிடப் போறோம், ஆனா உங்களை என்னோட உழைக்குமாறு செய்யப்போறேன். ஆட்டத்தின் முதல் பகுதி வரையிலுமாவது, ரோல்லிங் கூட்டத்தினரை நாம் தோற்கடித்துக் கொண்டிருக்கும் கால அளவாவது, நீங்க உழைக்கணும். இதற்கிடையில், ரோல்லிங்கைப் பற்றி நீங்க எச்சரிக்கையோட இருக்கணும் என்று உங்களுக்குச் சொல்லிக்கொள்றேன். அவன் உங்களைக் கொல்லத் தீர்மானித்தால், —அதைச் செய்து விடுவான்.''

''அவனைச் சுறா மீன்களுக்கு இரையாக்காது நீங்க ஏன் வச்சிருக்கீங்க என்பதற்காக நெடுங்காலமா அதிசயித்துக் கொண்டிருக்கிறேன்.''

''ஒரு பிணையாள் எனக்குத் தேவை... எவ்வகையிலும், அந்த 'முதல் ஆயிரத்தில்' அவன் நிச்சயமாக இருக்கமாட்டான். வாங்க, உடை மாற்றிக் கொள்ளுங்க, நாம் சாப்பிடச் செல்வோம்.''

82

புயல் மேகங்கள் வடகிழக்குப் பக்கம் எங்கோ போய் மறைந்தன. மகிழ்வுடன் கொஞ்சுவது போன்று நீலக் கடல் மாறியிருந்தது. மெல்லலைகளின் மகுடங்கள் கண்ணாடி போன்று மின்னின. உல்லாசப்படகு சென்ற தடங்களில் டால்பின் இனங்கள் ஒன்றையொன்று துரத்திக்கொண்டும், எண்ணெய்ப் பசையுடனும், மகிழ்வுடனும் நீருக்கு வெளியே குதித்துக்கொண்டும் நீந்தின. உல்லாசப்படகின் பாய்களுக்கு மேலே பறந்துகொண்டு, கடற்பறவைகள் அடித்தொண்டை யால் கிறீச்சிட்டன. நெடுந்தொலைவில் பாறை நிறைந்த தீவு ஒன்றின் விளிம்புகள் கடலுக்கு மேலே, மங்கிய நில ஒளியினூடே, பேய்த்தேர் போல எழுந் தன.

மேலே, பார்வையிடத்திலிருந்து கண்காணிப்பு மாலுமி, ''தரை தெரிகிறது!'' என்று கத்தினான். மேல்தளத்தில் நின்று கொண்டிருந்தவர்களினூடே ஒரு நடுக்கம் ஏற்பட்டது. புரியாத வருங்காலத்தின் இந்தத் தரை தொடுவானத்திலுள்ள ஒரு நீண்ட மேகத்தை ஒத்திருந்தது. அதனை நோக்கி 'அரிஸோ னா'வின் காற்று நிறைந்த பாய்கள் உச்ச வேகத்தில் அவர்களைத் தாங்கிச் சென்றன.

வெறுங்கால்களுடன் மாலுமிகள் மேல்தளத்தைத் தேய்த்து அலம்பிக் கொண்டிருந்தனர். வானமும் கடலும் கலந்து ஒன்றாயிருந்த ஆழங்காண இயலாத பரப்பிலே சுடர்விடும் சூரியன் கனன்று கொண் டிருந்தது. காரின் தன் தாடியை உருவிக்கொண்டே அந்தத் தீவை மூடியிருந்த, வருங்காலப் போர்வைக் குள் ஊடுருவி நோக்க முயன்று கொண்டிருந்தான். ஓ, அவன் மட்டும் அறிந்து கொண்டிருக்கக் கூடுமா னால்!..

83

வஸீலியெவ்ஸ்கி தீவின் நெடுந்தொலைவு பெருஞ் சாலைக்குள் இலையுதிர் கால அந்திவானம் தீப்பட்

டெரிந்தது. பிறகு ஏற்றப்பட்ட தோணிகள், இழுவைப் படகுகள், மீன் பிடிக்கும் படகுகள், கப்பல் செப்பனிடும் துறைகளிலே கிராதி வைத்த கிரேன்களுக்கிடையே சுழன்று கொண்டிருந்த புகை ஆகிய இவையெல்லாம் மங்கிய செவ்வொளி பெற்றுத் திகழ்ந்தன. ஆளற்ற அரண்மனைகளின் சன்னல்கள் நெருப்புற்றெரிவது போன்று ஒளிர்ந்தன.

மேற்கில் இருந்த புகைக்குள்ளிருந்து வெளியே நேவா ஆற்றின் ஊதாக்கரு நீரினூடே நீராவிக் கப்பல் ஒன்று நெருங்கிவந்தது. சங்கொலி லெனின்கிராடுக்கு வாழ்த்துக் கூறியது போன்றும், கடற்பயண முடிவை அறிவிப்பது போன்றும் இருந்தது. அக்கப்பலின் ஒளிச்சாளரங்கள் வழியாக வந்த வெளிச்சம் சுரங்க இன்ஸ்டிடியூட் கட்டடம், கப்பற்படைப் பள்ளி ஆகியவற்றின் தூண்கள் மீதும், கரையில் நிரிந்த மக்களின் முகங்கள் மீதும் ஒளி வீசியது; சுங்கத் துறையின் வெண்ணிறத் தூண்களையுடைய சிவப்பு நிற மிதவைக் கட்டடத்தின் அருகே கப்பல் தளையூட்டப்பட்டது. அங்கு சோதனையின் வழக்கமான பரபரப்புத் தொடங்கியது.

சாமள நிறமும் உயர்ந்த கன்ன எலும்புகளும் கொண்ட, பிரான்ஸ் புவியியல் கழக உதவி விஞ்ஞானி என்று பாஸ்போர்ட்டில் குறிக்கப்பட்ட, முதல்வகுப்புப் பயணி ஒருவன் கப்பல் மேல்தளத்தின் சாரக்கம்பி அருகே நின்று, மாலை மூடுபனி போர்த்திய நகர்மீது பார்வை செலுத்தினான். புனித ஐசாக் மாதாகோயில் கும்மட்டத்தின் மீதும், கடற்படைத் தலைமைச் செயலகக் கட்டடம், பீட்டர்-போல் மாதாகோயில் ஆகியவற்றின் தங்கக் கூர்ங்கோபுரங்கள் மீதும் மறைகின்ற சூரியனின் கதிர்கள் இன்னமும் விழுந்து கொண்டிருந்தன. வானத்தைக் குத்திக் கொண்டிருந்த இந்தக் கூர்ங்கோபுரம், ருஷ்யாவின் கடல் எல்லையில் அச்சுறுத்தும் வாள்போன்று பீட்டர் சக்கரவர்த்தியால் கற்பனை செய்யப்பட்டது போலத் தோன்றியது.

உயர்ந்த கன்ன எலும்பு கொண்ட அம்மனிதன், மாதாகோயிலின் கூர்ங்கோபுரத்தை நோக்குவதற்

காகக் கழுத்தை நிமிர்த்தினான். பல ஆண்டுகள் பிரிந்திருந்த பிறகு தான் பிறந்த வீட்டின் கூரையைக் காணும் பயணி போன்று, உணர்ச்சிப் பெருக்கினால் அவன் நடுங்குவது போலக் காணப்பட்டது. கோட்டையிலிருந்து நேவாவின் இருண்ட நீரினூடே மணிகளின் கம்பீரமான நாதம் வந்தது: பீட்டர்-பால் ஆலயத்தின் பொன்னிறக் கூர்ங் கோபுரத்தின் மீது மறைகின்ற சூரிய ஒளி விளையாடியது. அதனது மணிகள் எழுப்பிய சர்வதேசகீதம் ருஷ்யப் பண்டைப் பேரரசர்களின் கல்லறைகளுக்கு மேலாகச் சென்றது.

அம்மனிதன் சாரக்கம்பியை இறுகப்பற்றினான், ஏதோ உருமல்போன்ற ஒலி அவன் தொண்டையினின்றும் வந்தது. கோட்டையின் பக்கம் தன் முதுகைத் திருப்பிக்கொண்டான்.

சுங்கத் துறையில் ஆர்த்தூர் லெவீ என்னும் பெயரில் பாஸ்போர்ட்டைக் காட்டினான், தனது சாமான்கள் சோதிக்கப்படும் போது தன் கண்களிலிருந்த தீய ஒளியை வெளிப்படுத்தாதபடித் தலை குனிந்து நின்றான்.

கட்டம்போட்ட கம்பளிப் போர்வையொன்றைத் தோள் மீது போட்டுக்கொண்டு, ஒரு சிறு சூட்கேசைக் கையில் எடுத்துக்கொண்டு, அவன் வஸீலியவ்ஸ்கி தீவின் கரையையடைந்தான். இலையுதிர் ்ால நட்சத்திரங்கள் வானை நிறைத்திருந்தன. ்ரதுகை நிமிர்த்தி, நெடுநேரமாகத் தடுத்துவைத்திருந்த பெருமூச்சை மனமாரவிட்டான். உறங்கிக் கொண்டிருந்த வீடுகளையும் பாய்மரத்தின் உச்சியில் இரு விளக்குகள் எரிய, டைனமோ மெத்தென ஒலித்துக்கொண்டிருக்க நின்ற நீராவிக்கப்பலையும் நோட்டமிட்டுவிட்டு, திரும்பிப் பாலத்தின் பக்கம் நடக்கலானான்.

கித்தான் சட்டையணிந்த உயரமான ஒருவன் அவனை நோக்கி மெதுவாக நடந்து வந்துகொண்டிருந்தான். அவர்கள் ஒருவரையொருவர் கடந்த போது அம்மனிதன் அவனது முகத்தைக் கூர்ந்து நோக்கி ''கடவுளே,'' என்று கிசுகிசுத்து, திடீரென்று அவனை நோக்கி அழைத்தான்:

''அலெக்சாந்தர் இவானவிச் வோல்ஷினா?''

சுங்கத் துறையில் தன்னை ஆர்த்தூர் லெவீ எனக் கூறிக்கொண்டவன் தடுமாறினான், ஆனால் தலையைத் திருப்பாமல் பாலத்தை நோக்கி இன்னும் வேகமாக விரைந்தான்.

84

இவான் கூசேவ் தராஷ்கினுடன் அவனுக்கு மகன் அல்லது தம்பி போல வாழ்ந்தான். தராஷ்கின் இவானுக்குப் படிக்கவும், எழுதவும் கற்பித்தான். வேறு வழிகளிலும் அவனுடைய அறிவை வளர்த்தான்.

தனது ஆசிரியரது மனத்தை மகிழ்விக்கும் அளவு பையன் திறமையும் உழைப்பும் படைத்திருந்தான். தேநீரும், ரொட்டியும், ஸாஸேஜுமாகிய இரவு உணவை அவர்கள் முடித்தவுடன் வழக்கமாகத் தராஷ்கின் சட்டைப்பைகளில் சிகரெட்டுகளுக்காகத் தடவுவான், உடனே கழகத் தோழர்களுக்குத் தான் புகைபிடிப்பதில்லை என வாக்குறுதி கொடுத்ததை நினைவு கூர்வான். தலைமயிரினூடே விரல்களை ஓட்டிக்கொண்டு பின்வரும் பாணியில் ஏதேனும் ஒரு பொருள்பற்றிப் பேசத் தொடங்குவான்:

''முதலாளித்துவம் என்பது என்னவென்று உனக்குத் தெரியுமா?''

''தெரியாது, வஸீலி இவானவிச், எனக்குத் தெரியாது.''

''எவ்வளவு முடியுமோ அவ்வளவு எளிமையாக உனக்குச் சொல்றேன். ஒன்பது பேர் உழைக்கிறாங்க, அவர்கள் உண்டாக்கின்ற எல்லாத்தையும் பத்தாவது ஆள் எடுத்துக்கொள்றான். அவர்களோ பசியோட இருக்காங்க, இவனோ வெடித்துப் போற அளவுக்கு தின்று கொழுக்கிறான். அதுதான் முதலாளித்துவம். புரியுதா?''

''இல்லை, வஸீலி இவானவிச், புரியலே.''

''என்ன உனக்குப் புரியலே?''

''அவர்கள் உண்டாக்குறதை ஏன் அவனுக்குக் கொடுக்குறாங்க?''

''அவர்களைக் கொடுக்க வைக்கிறான், அவன் சுரண்டற்காரன்...''

''எப்படிக் கொடுக்க வைக்க முடியும்? அவனோ ஒருத்தன்தான், மற்றவர்களோ ஒன்பது பேர்.''

''அவனோ படைக்கலம் பூண்டவன், அவர்களோ படைக்கலம் பூணாதவர்கள்.''

''ஒருவனிடமிருந்து படைக்கலங்களை எடுத்துக் கொண்டு விடலாமே, வஸீலி இவானவிச். உங்க ஒன்பது ஆட்களும் முட்டாள்களாகத் தான் இருக்கணும்.''

இவானை வியந்து வாய்பிளந்து விழித்துப்பார்த்தான் தராஷ்கின்.

''நீ சொல்றது சரி, தம்பி. நீ போல்ஷெவிக் போலவே சிந்திக்கிறே. இதையேதான் நாம் சோவியத் ருஷ்யாவில் செய்தோம்—படைக்கலங்களைப் பிடுங்கினோம், சுரண்டற்காரர்களை வெளியே துரத்தினோம், இப்ப அந்தப் பத்துப் பேரும் உழைக்கிறாங்க, எல்லாரும் சாப்பிடுறாங்க...''

''நாமெல்லாரும் வெடிக்குமளவு கொழுத்துப் போயிருவோம்.''

''இல்லை, தம்பி, நாம் கொழுத்துப் போயிறக் கூடாது. நாம் பன்றிகள் அல்லர், நாம் மக்கள். நமது கொழுப்பு மூளை ஆற்றலாக மாறணும்.''

''என்ன அருத்தம்?''

''அருத்தமாவது, கூடிய அளவு மிகக் குறுகிய காலத்திற்குள் இந்த உலகத்தில் மிக நிரம்ப மதி படைத்தவராகவும், மிக நிரம்பப் படித்தவர்களாகவும் நாம் ஆகணும்... உனக்கு அது புரியுதா? நல்லது, இப்ப நாம் சில கணக்குப் போடுவோம்.''

''சரி,'' என விடையளித்த இவான் ஒரு குறிப்புப் புத்தகத்தையும் பென்சிலையும் எடுத்தான்.

''நிறம் அழியாத பென்சிலை உறிஞ்சக் கூடாது. அது சரியில்லே... புரியுதா?''

ஒவ்வொரு மாலையும் அவர்கள் படிப்பில் கடுமையாக முனைந்து நள்ளிரவு கடந்து நெடுநேரமாக

ஆசிரியர், மாணவன் ஆகிய இருவரது கண்களும் இனித்திறந்திருக்க இயலாதென மறுக்கும்வரை விழித்திருந்தனர்.

85

நன்கு அணிந்திருந்த உயர்ந்த கன்ன எலும்பு கொண்ட ஒருவன் படகோட்டும் கழகக் கட்டடத்தின் வாயிலருகே நின்று, தனது கைத்தடியால் தரையைக் கிளறிக் கொண்டிருந்தான். தராஷ்கினும் இவானும் அவனை நோக்கி வந்தபோது அவன் தலை நிமிர்த்து, அவர்களை விந்தையாக பார்த்தான். அப்பார்வை தராஷ்கினை விழிப்படையச் செய்தது. இவான் அவனைப் பற்றி நின்றான்.

''இங்கே காலையிலிருந்து காத்துக் கொண்டிருக்கேன். இந்தப் பையன் தானே இவான் கூசேவ்?'' என்று அந்நியன் வினவினான்.

''அதைப் பற்றி உங்களுக்கு என்ன வேலை?'' என்று சீறினான் தராஷ்கின்.

''என்னை மன்னிக்கணும். நாம் இன்னும் சற்று பக்குவமாப் பேசுவோம், தோழரே. என் பெயர் ஆர்த்தூர் லெவீ.''

ஓர் அட்டையை வெளியெடுத்து, தராஷ்கின் முகத்தின்முன் விளக்கமாக நீட்டித்தொடர்ந்து பேசினான்:

''பாரிசிலுள்ள சோவியத் தூதரகத்திலிருந்து வருகிறேன். உங்களுக்கு இது போதுமா?''

தராஷ்கின் ஏதோ தெளிவின்றி முனகினான். ஷெல்காவிடமிருந்து காரின் எடுத்திருந்த புகைப்படத்தைத் தனது பணப்பையிலிருந்து எடுத்துக்காட்டினான் லெவீ.

''இந்தப் பையனை வைத்து எடுக்கப்பட்டது இந்தப் புகைப்படம் என்பதை நீங்க உறுதிப்படுத்த முடியுமா?''

அந்த அளவு தராஷ்கின் ஒப்ப வேண்டியிருந்தது. இவான் நழுவியோடியிருப்பான், ஆனால் ஆர்த்

தூர் லெவீ அவன் தோளைப் பற்றிக்கொண்டான்.

''இந்தப் புகைப்படத்தை ஷெல்கா எனக்குக் கொடுத்தார். ஒரு குறிப்பிட்ட முகவரிக்கு இப்பையனைக் கூட்டிப் போகுமாறு என்னிடம் ரகசிய உத்தரவு உள்ளது. ஏதேனும் தடை ஏற்படும் நிலையில், அவனைக் கைதுசெய்யவும் உரிமை எனக்கு இருக்கு. நீங்க பணியப் போறீங்களா?''

''என்ன அத்தாட்சி இருக்கு?'' என வினவினான் தராஷ்கின்.

பாரிசிலுள்ள சோவியத் தூதரகக் காகிதத்தில், முறையாகக் கையெழுத்தும், இலச்சினையும் பெற்ற அத்தாட்சிப் பத்திரத்தை ஆர்த்தூர் லெவீ காட்டினான். தராஷ்கின் அத்தாளை நீண்ட நேரத்திற்குப் படித்திட்டு, பெருமூச்சு விட்டு, பிறகு அதனை நான்காக மடித்தான்.

''இதெல்லாம் என்னவென்று சைத்தானுக்குத் தான் வெளிச்சம், ஆனால் முறையாக இருப்பது போலத் தோனுது. இவனுக்குப் பதிலா வேறு யாரும் போகக்கூடாதா? பையன் பள்ளிக்குச் செல்லணும்.''

ஆர்த்தூர் லெவீயின் பற்கள் முறுவலித்துப் பளிச்சிட்டன.

''கவலைப்படாதீர்கள். பையன் என்னுடனிருப்பதால் கஷ்டம் ஒன்றும் நேராது...''

86

பயணத்தின் போது, தன்னுடன் தொடர்பு வைத்திருக்கும்படி இவானுக்கு தராஷ்கின் அறிவுறுத்தியிருந்தான். செலியாபின்ஸ்கிலிருந்து ஓர் அஞ்சலட்டை பெற்றபோதுதான் ஓரளவு நிம்மதி அடைந்தான்:

''அன்புள்ள தோழர் தராஷ்கின்,

''நாங்கள் நல்ல முறையில் பயணம் செய்து கொண்டிருக்கிறோம், முதல் வகுப்பில். உணவு நன்றாக இருக்கிறது. நான் சரியாக நடத்தப்படுகிறேன். மாஸ்கோவில் ஆர்த்தூர் லெவீ எனக்கு ஒரு குல்லாயும், உட்பஞ்சு தைத்த மேற்கோட்டும், முழங்கால் வரை

மறைக்கும் காலணிகளும் வாங்கித்தந்தார். ஒரே ஒரு தொல்லை நான் தனியாக இருக்கிறேன். நாள் முழுதும் லெவீ ஒரு சொல்கூடப் பேசுவதில்லை. இதற்கிடையில், சமாராவில் நான் முன்பு அறிந்திருந்த ஒரு பையனைச் சந்தித்தேன். அவனும் திக்கற்றவன். அவனுக்கு உங்கள் முகவரியைக் கொடுத்தேன். பொருட்படுத்த மாட்டீர்கள் என்று நம்புகிறேன். அவன் வருவான் எனக் கருதுகிறேன், ஆகவே அவனை நீங்கள் எதிர்பார்க்கலாம்.''

87

அலெக்சாந்தர் இவானவிச் வோல்ஷின் சோவியத் யூனியனுக்கு ஆர்த்தூர் லெவீ என பெயரில் பாஸ்போர்ட்டுடனும் பிரான்ஸ் புவியியல் கழகத்து ஆவணங்களுடனும் வந்தான். அவை உண்மையானவை (அது காரினுக்கு மிகுந்த தொல்லையை ஏற்படுத்திவிட்டிருந்தது). தூதரகத்திலிருந்து பெற்ற அத்தாட்சிப் பத்திரமும், அடையாளச் சான்றிதழும் பொய்க் கையெழுத்திட்டு ஆக்கப்பட்டவை தான். எனினும், பின்னைய ஆவணங்களை தராஷ்கின் தவிர வேறு எவருக்கும் வோல்ஷின் காட்டவில்லை. அதிகாரபூர்வமாக ஆர்த்தூர் லெவீயின் பணி காம்ச்சாத்காவில் உள்ள பிரமாண்டமான எரிமலைகளின் இயக்கத்தை ஆராய்தலாகும்.

தன்னுடன் இவானை அழைத்துக்கொண்டு ஆர்த்தூர் லெவீ செப்டம்பர் நடுவில் விளாதிவஸ்தோக்கிற்குப் புறப்பட்டான். ஆராய்ச்சிப் பயணத்திற்கு வேண்டிய கருவிகளும் சாதனங்களும் அடங்கிய பெட்டிகள் இதற்கு முன்பே ஸான்பிரான்சிஸ்கோவிலிருந்து கப்பலில் அங்கு வந்துவிட்டன. ஆர்த்தூர் லெவீ பரபரப்புற்றான். சில நாள்களில் ஒரு குழுவைச் சேர்த்து செப்டம்பர் இருபத்தெட்டாம் தேதி விளாதிவஸ்தோக்கை விட்டுப் புறப்பட்டு, பெத்ரொப்பாவ்லொவ்ஸ்க்கிற்குச் செல்லும் சோவியத் நீராவிக்கப்பலில் பயணம் செய்தான். கடல் பயணம் தொல்லையாயிருந்தது. ஒகோத்ஸ்க் கடலின் காரீயம் போன்ற நீரின்மேல் கூடிய பனிமணலைப் பரக்

கத்தெளித்த கருமேகங்களை வாடைக் காற்று துரத்தியது. உம்மென்றிருந்த பெரு நீர்ப்பரப்பில் ஆழ்ந்தவாறு அக்கப்பல் ஏக்கத்துடன் கிரீச்சிட்டது. பெத்ரொப்பாவ்லொவ்ஸ்க்கை அடையப் பதினோரு நாள்கள் பிடித்தன. குதிரைகளும் பெட்டிகளும் கப்பலிலிருந்து இறக்கப்பட்டன, மறுநாள் ஆராய்ச்சிப் பயணம் தொடங்கியது. காடுகள், மலைகள், ஒற்றையடிப் பாதைகள், ஆற்றுப்படுகைகள் ஆகியவற்றின் வழியாகச் சதுப்பு நிலத்தையும், அடர்ந்த காட்டையும் 'கடந்து சென்றனர்.

ஆராய்ச்சிக் குழுவை இவான் வழிநடத்திச் சென்றான்,—சிறுவன் நேர்த்தியான நினைவாற்றலும், வேட்டை நாயின் இயல்புணர்வும் பெற்றிருந்தான். ஆர்த்தூர் லெவீ பரபரப்புடனிருந்தான்: அதிகாலையில் புறப்பட்டு எங்கும் தங்காது சூரியன் மறையும் வரையும் நடந்தனர். குதிரைகள் களைத்துப்போயின, மனிதர்கள் முணுமுணுத்தார்கள். ஆனால் ஆர்த்தூர் லெவீ விட்டுக்கொடுக்காதவனாக, இரக்கமின்றி எல்லாரையும் வேலை வாங்கினான், ஆனால் நன்றாகக் கூலி கொடுத்தான்.

பருவநிலை மிகவும் மோசமாயிற்று. தேவதாரு மரங்களின் உச்சிகள் சோகத்துடன் உராய்ந்து ஒலித்தன. சில நேரங்களில் நூற்றாண்டு முதிர்ந்த ராட்சத மரம் முறிவதையோ, கற்பாறைகள் பிடிப்பு நழுவிப் பள்ளங்களில் சாயும் ஒலியையோ அவர்கள் கேட்டார்கள். மேலே விழுந்த பெரும் முரட்டுக் கற்களால் இரண்டு குதிரைகள் கொல்லப்பட்டன, இன்னும் இரண்டு சுமைகளுடன் புதைமணலில் அழுந்தி மறைந்தன.

வழக்கமாக இந்தக் கூட்டத்தினருக்கு முன்னே இவான் சென்றான், தனக்கு மட்டும் தெரிந்திருந்த அடையாளங்களைப் பார்ப்பதற்காகக் குன்றுகள் மேல் தொற்றியும், மரங்களின் மேல் ஏறியும் அவன் சென்றான். ஒரு நாள் ஒரு தேவதாரு மரத்தின் கிளையொன்றில் அமர்ந்து ஊசலாடிக்கொண்டு உரக்கக் கத்தினான்:

''அதோ இருக்கிறது! அதோ இருக்கிறது!''

ஆற்றின்மேல் கவிந்து கொண்டிருந்த ஒரு செங்குத்தான பாறையின் பக்கத்தில் காலத்தால் ஓரளவு சிதைந்துபோன பழமையானதொரு செதுக்கப்பட்ட ஓவியத்தை அவர்களால் பார்க்க முடிந்தது. கூம்பிய குல்லாயணிந்த ஒரு வீரன் கையில் வில்லும் அம்பும் பிடித்திருப்பது போன்று இருந்தது ஓவியம்...

''இங்கிருந்து நேர் கிழக்கே அம்பு பாய்வது போல இப்போது நாம் போகிறோம், சைத்தான் பாறைக்கு வருவோம். அங்கிருந்து முகாம் தொலைவில் இல்லை,'' எனக் கத்தினான் இவான்.

இவ்விடத்தில் அவர்கள் இரவைக் கழித்தனர். ஒரு பெரும் நெகிடி மூட்டப்பட்டு மூட்டைகள் எல்லாம் மீண்டும் சரி செய்யப்பட்டன. களைத்துப் போன ஆட்கள் தூங்குவதற்காகக் கீழே சாய்ந்தனர். இருளிற்கும், அசைகின்ற தேவதாரு மரங்களின் ஓசைக்கும் ஊடே, தொலைவில் மந்தமான வெடியோசைகள் காதுக்கு எட்டின, நிலம் நடுங்கியது. நெகிடி நெருப்பு அவிந்தவுடன், கிழக்கே மேகங்களுக்கு அடியில் ஒரு பளபளப்புத் தோன்றியது. மலைகளுக்கு இடையே இருந்த ஓர் உலைக்களத்தில் ஒரு ராட்சசக் கொல்லன் நிலக்கரியை ஊதி எரிப்பது போன்றும், அதன் மங்கல் ஒளி மேகங்களுக்கு அடியில் அசைவது போன்றும் தோற்றமளித்தது...

பொழுது புலர்ந்தபோது, தனது மௌஸேர் கைத்துப்பாக்கிப் பிடியின் மீது கை வைத்தபடியே ஆர்த்தூர் லெவீ தனது ஆட்களை எழுப்புவதற்காக உதைக்கத் தொடங்கினான். தீ மூட்டித் தேநீர் தயாரிப்பதற்குக்கூட அவன் அவர்களை விடவில்லை. ''முன்னேறுங்கள், முன்னேறுங்கள்!..'' களைத்துப் போன அந்த ஆட்கள், பெருங் கற்குவியல்களால் செம்மப்பட்டிருந்த புகுந்து செல்ல முடியாத அடவியினூடே சிரமப்பட்டு வழி செய்துகொண்டு போயினர். இங்கே மரங்கள் பயங்கர உயரமாயிருந்தன. ராட்சசப் பெரணிகள் குதிரைகளைப் பார்வையினின்றும் மறைத்தன; ஆட்களின் பாதங்கள் கிழிந்து குருதி கசிந்தது. இன்னும் இரு குதிரைகளை கைவிடும்படி நேர்ந்தது. தனது கைத்துப்பாக்கியின்

மீது கைவைத்தபடியே, இந்தக் கூட்டத்தின் இறுதியில் ஆர்த்தூர் லெவீ வந்தான். மேலும் சில தாவடிகளுக்குப் பிறகு, உடனே கொன்று விடுவதாக அச்சுறுத்தினாலும் சரி, ஒரு மனிதன்கூட நகரமாட்டான் என்பது போலத் தோன்றியது.

இவானது களிபொருந்திய குரல், பின்னே இருந்த அவர்களுக்குக் காற்றில் மிதந்து வந்தது:

''அதோ இருக்கிறது, தோழர்களே! அந்த சைத் தான் பாறை...''

அங்கே, மனிதத் தலை போன்ற வடிவுள்ள பிரமாண்டமான பாறை நீராவி மேகத்தால் சூழப்பட்டிருந்தது. அதனடியில் கொப்புளித்துக் கொண்டிருந்த வெந்நீர் ஊற்று தரைக்கு வெளியே குதித்துப் பாய்ந்தது. இழந்த வலிமையை மீட்டளிக்கும் இந்த ஊற்றில் நினைவுக்கு எட்டாத காலம் முதலே பாறைகளில் தங்கள் வழிக்குறிகளைப் பொறித்துச்சென்ற மக்கள் குளித்தனர். அண்டங்காக்கையால் கொண்டு வரப்பட்டதாகப் புராணக்கதைகளில் சொல்லப்படும், புகழ்மிக்க 'உயிர் நீர்'—கதிர் இயக்கமுடைய உப்புக்கள் நிறைந்த நீர்—இது தான்.

88

அந்நாள் முழுதும் வாடைக் காற்று வீச, மேகங்கள் காட்டிற்கு மேலாக மிகத் தாழ உருண்டு சென்றன. நெடிய பைன் மரங்கள் முனகின, தேவதாரு மரங்களின் இருண்ட உச்சிகள் வளைந்தன, லார்ச் மரங்களிலிருந்து ஊசி இலைகள் உதிர்ந்தன. தடித்த பனி, கடிப்பது போன்றும், பனிக்கட்டி போன்றும், குளிர்ந்த மழையுடன் அக்கருமேகங்களிலிருந்து விழுந்தது. தைகாக் காடு வெறுமையாயிருந்தது, ஆயிரக் கணக்கான மைல் தொலைவுக்குச் சதுப்பு நிலத்திலும் பாறைக் குன்றுகளிலும் ஊசியிலை மரங்கள் இரைந்தன. நாளுக்கு நாள் குளிர் மிக வளர்ந்தது. வடதிசையின் பனிக்கட்டி போன்ற மூச்சு இருண்ட வானத்திற்கடியில் சாவின் திகிலைக் கொணர்ந்தது.

இப்பாழ்வெளியில் காற்றின் ஊளையையும், மர உச்சிகளின் கம்பீரமான ஓசைகளையும் தவிர, வேறு எந்த ஒலியையும் கேட்க முடியாது போலத் தோன்றியது. பறவைகள் எங்கோ பறந்து போய் விட்டன, விலங்குகள் பிற இடங்களுக்குச் சென்று விட்டன, அல்லது பதுங்கி உறங்கிக் கொண்டிருந் தன. இத்தகைய இடத்திற்கு மனிதன் சாகத்தான் வர முடியும்.

எனினும், ஒரு மனிதன் தோன்றினான். கிழிந்த பழுப்பு நிற மென்மயிர்க் கோட்டு அணிந்து, மிகக் கீழே கயிற்றினால் இடுப்பைச் சுற்றிக் கட்டியிருந் தான். முழங்காலளவு நமுதா காலணிகள் அணிந்திருந் தான், அவை மழையினால் பருத்து எடை மிகுந்து இருந்தன. ஆண்டுக்கணக்காகச் சீவப்படாத சிக்க டைந்த மயிர்க்கற்றைகள் அவன் முகத்தில் அடர்ந் திருந்தன, நரைத்த மயிர் முடிச்சுக்கள் அவன் தோள்கள் மீது வீழ்ந்தன. தாங்குவதற்காகத் துப் பாக்கிமீது சாய்ந்துகொண்டு சிரமப்பட்டு ஒரு குன் றைச் சுற்றித் தத்தித்தத்தி நடந்தான். அடிக்கடி மரத்தடிகளுக்குப் பின்னே ஒளிந்துகொண்டான். நின்று, கீழே குனிந்து சீழ்க்கையடிக்கத் தொடங்கி னான்:

''வீ, வீ... மாஷ்கா, மாஷ்கா... வீ, வீ...''

அடர்ந்திருந்த கோரைப்புல்லுக்கு வெளியே, காட்டு ஆடு ஒன்றின் தலை தோன்றியது. அதன் மயிரற்ற கழுத்திலிருந்து தொடங்கியது கயிற்றுத் துண்டு. மனிதன் துப்பாக்கியை உயர்த்தினான், ஆனால் ஆடு மீண்டும் புதர்களுக்குள் மறைந்து ஒளிந் தது. அவன் முனகி ஒரு பெரும் பாறைமீது உட் கார்ந்தான். அவனது முழங்கால்களுக்கிடையில் துப் பாக்கி நடுங்கியது. அவன் தலை தொங்கி விழுந்தது. அசையாது நீண்ட நேரம் உட்கார்ந்திருந்த அவன், திரும்பவும் எழுந்து நின்று அழைக்கத் தொடங்கி னான்:

''மாஷ்கா, மாஷ்கா...''

அவனது மங்கிய கண்கள் புதர்களினூடே அவ னுடைய கடைசி நம்பிக்கையை, பழகிய ஆட்டைத்

துருவித்துருவித் தேடின. தன்னிடத்தில் இறுதியாக எஞ்சியிருந்த துப்பாக்கித் தோட்டாவினால் அதைச் சுட்டுக்கொன்று, அதன் இறைச்சியைக் காயவைத்து, இவ்வகையாக இன்னும் இரண்டு மூன்று மாதங் களுக்கு, ஒருவேளை இளவேனிற் பருவம் வரைக்கும் கூடத் தன்னை உயிருடன் வைத்துக்கொள்வான்.

ஏழு ஆண்டுகளுக்கு முன்பு தனது நுண்ணறிவைப் பயன்படுத்துவதற்கான ஒரு வழியைக் காண முயன் றான். அப்போது அவன் இளைஞன், வலியவன், ஆனால் ஏழை. பிறகு தான் அழிவார்ந்த அந்நாள் வந்து, காரினைக் கண்டான். அவனுடைய கண் களுக்கு முன்பு வியப்பூட்டும்படியான திட்டங்களை காரின் விரித்தான்; எல்லாவற்றையும் விட்டுவிட்டு, எரிமலையின் அடியில் உள்ள இவ்விடத்திற்கு வந் தான். ஏழு ஆண்டுகளுக்கு முன்பு இங்கே காடழித்து வெளியாக்கி, ஆய்வுக் கூடம், வானொலிச் செய்தி நிலையம், சிறு நீர்மின் நிலையம் ஆகியவற்றுடன் குளிர்காலத் தங்கிடமும் கட்டப்பட்டது. குடியிருப் புக் கட்டடங்களின் சரிந்தவையும் இடிந்து விழுந்த வையுமான மண் முகடுகள், எப்போதோ எரிமலை யால் எறியப்பட்ட மிகப் பெரும் பாறைகளுக்கு நடுவே, இரையும் உச்சிகள் கொண்ட நெடு மரக் காட்டுச் சுவரின் எல்லாப் பக்கங்களிலும் காணப்பட் டன.

அவனுடன் வந்தவர்களில் சிலர் இறந்து விட்ட னர், மற்றவர்கள் ஓடிப் போயினர். கட்டடங்கள் கவனிப்பாரற்றுப் போய்விட்டன, நீர்மின் நிலையத் திற்கான அணைக்கட்டு இளவேனிற் பருவ வெள்ளத் தில் அடித்துக்கொண்டு போகப்பட்டது. அவனது ஏழு ஆண்டுகளின் உழைப்பெல்லாம், திகைப்பூட்டக் கூடிய முடிவுகளெல்லாம், தரையின் ஆழத்தில் உள்ள படிவுகள்—ஆலிவின் பட்டை—பற்றிய ஆராய்ச்சிக ளெல்லாம், அந்த ஆடு மாஷ்கா, அவன் எவ்வளவு தான் அழைத்தும் துப்பாக்கிக் குறி எல்லைக்கு வர வில்லை என்ற அற்பக் காரணத்தினால், அவனோடு சேர்ந்து அழிந்துவிட வேண்டியதுதான்.

முன்னைய நாள்களில் மனிதக் குடியிருப்புக்குச் செல்வதற்காக இருநூறு மைல் நடப்பது விளையாட்டுப் போல இருந்தது. ஆனால் இப்போதோ முடக்குவாதத்தினால் அவனது கால்களும் கைகளும் விறைத்திருந்தன, ஈரரிப்பினால் பற்கள் விழுந்துவிட்டன. அவனது கடைசி நம்பிக்கை இந்தப் பழகிய ஆடு மாஷ்காதான்; அம்முதியவன் அதனைக் குளிர் காலத்திற்காக வைத்திருந்தான். ஆனால் அந்தப் பாழான விலங்கு தன்னைக் கட்டியிருந்த கயிற்றைத் தேய்த்து அறுத்துவிட்டு, தனது கூண்டிலிருந்து தப்பி விட்டது.

அக்கிழவன் துப்பாக்கியையும், கடைசித் தோட்டாவையும் எடுத்துக்கொண்டு ஆட்டைக் கூப்பிடுவதற்காக வெளியே சென்றான். மாலை நெருங்கி வந்தது, முகில் திரள்கள் கருண்டு வந்தன, பெரிய பைன் மரங்களை ஆட்டி அலைத்தவாறு காற்று சீறி இரைந்தது. குளிர் பருவம் நெருங்கிக் கொண்டிருந்தது, அத்துடன் சாவும் அணுகியது. அவனது இதயம் வலித்தது... மீண்டும் மனித முகத்தைப் பார்க்கவும், அடுப்புமுன் அமர்ந்து ரொட்டியின் மணத்தை, வாழ்வின் மணத்தை நுகரவும் அவனுக்கு ஒருபோதும் வாய்க்காமலே போய்விடுமோ? கிழவன் உட்கார்ந்து அமைதியாக அழுதான்.

நெடு நேரத்திற்குப் பின் மீண்டும் அவன் கூப்பிட்டான்:

''மாஷ்கா, மாஷ்கா...''

இல்லை, இன்று அதைக் கொல்லமாட்டான்... கிழவன் முனகிக்கொண்டே எழுந்து தங்குமிடத்திற்குத் திரும்பித் தள்ளாடிச் சென்றான். நின்று தன் தலையை நிமிர்த்தினான்——தடித்த பனி அவன் முகத்தில் அடித்தது, அவன் தாடியைக் காற்றுக் கலைத்தது. ஏதோ கேட்டதாக எண்ணினான்... இல்லை, இல்லை, மரத்தோடு மரத்தைத் தேய்க்கும் காற்றாக இருக்க வேண்டும் அது... எனினும் நெடு நேரம் அசையாது நின்றான்——வெறிகொண்டு துடிக்கும் தன் இதயத்தை அமைதியுறச் செய்ய முயன்றவாறு.

''ஏ-ஏ-ஏ-ஏய்...'' என்ற மனிதக் குரல் சைத்தான் பாறையின் பக்கத்திலிருந்து கேட்டது.

கிழவன் மூச்சுத் திணறினான். அவன் கண்களில் நீர் நிறைந்தது. விரிந்து பிளந்த அவன் வாயினுள் பனி அடித்தது. இருள் படிந்த அந்திப் பொழுதில் திறந்த புல்வெளியில் ஒன்றும் பார்க்க முடியவில்லை.

''ஏ-ஏ-ஏ-ஏய், மாந்த்ஸெவ்!'' ஒரு பையனது எதிரொலிக்கிற குரல் காற்று வாக்கில் அவனை நோக்கிப் பறந்துவந்தது. புதரின் வெளியே ஆட்டின் தலை தோன்றியது—மாஷ்கா கிழவனிடம் போய், தன் காதுகளை நிமிர்த்தி, அப்பாழ்வெளியைக் கலவரப்படுத்திக் கொண்டுவரும் எதிர்பாராத அந்தக் குரல்களைச் செவியேற்ற வண்ணம் நின்றது... ஆட்கள் வலப்புறமும், இடப்புறமும் அவனை நெருங்கி, கூவி அழைத்தார்கள்.

''ஏய், எங்கே இருக்கீங்க, மாந்த்ஸெவ்? இன்னும் உயிரோடா இருக்கீங்க?''

கிழவனின் தாடி நடுங்கியது, அவன் உதடுகள் துடித்தன, அவன் கைகளை விரித்து ஓசையின்றிப் பல முறை கூறினான்:

''ஆமாம், உயிருடன் இருக்கிறேன்... நான்தான் மாந்த்ஸெவ்...''

அக்குடிசையின் புகையால் கறுத்த கட்டைகள் அத்தகைய அற்புதத்தை இதற்கு முன் ஒருபோதும் பார்த்ததேயில்லை. எரிமலை கக்கிய கற்களைக் கொண்டு கட்டப்பட்ட கணப்பில் நெருப்பு எரிந்தது. பானைகளில் நீர் கொதித்துக் கொண்டிருந்தது. நெடு நாளாக மறந்திருந்த தேயிலை, ரொட்டி, பன்றிக் கொழுப்பு ஆகியவற்றின் மணத்தை மாந்த்ஸெவின் மூக்குத் துளைகள் உள்ளிழுத்தன.

உரத்தக் குரலுடைய மனிதர்கள் உள்ளே வருவதும், வெளியே போவதுமாக மூட்டைகளைக் கொணர்ந்தும், பிரித்துக் கொண்டும் இருந்தனர். உயர்ந்த கன்ன எலும்புகளுடைய ஒருவன் மாந்த்ஸெவிற்கு ஒரு குவளை நிறைய சூடான தேநீரும்

ஒரு துண்டு ரொட்டியும் கொடுத்தான். ரொட்டி! மாந்த்ஸெவ் நடுங்கிக்கொண்டே தன் பல்லில்லாத எயிறுகளால் அதனை அவசர அவசரமாக மென்றான். மாந்த்ஸெவ் ரொட்டியை ஒரு முறை கடிப்பான், பிறகு அதனைத் தன் அடர் தாடியுடன் வைத்து அழுத்துவான், பாதி பாழான அந்தத் தங்கிடத்தில் திடீரென்று ஏற்பட்ட இந்தக் கூச்சல் நிறைந்த வாழ்க்கை ஒரு கனவுபோன்று கரைந்து விடுமோ என்று அவன் அஞ்சியது போல. அதை அவனருகே மண்டியிட்டு அமர்ந்திருந்த பையன் ஒருவன் பரிவுடன் கவனித்துக் கொண்டிருந்தான்.

''என்னை அடையாளந் தெரியலியா, நிக்கலாய் க்ரிஸ்தபோரவிச்?''

''இல்லை, மக்களோடு பழகுவதை விட்டு எத்தனையோ காலமாச்சு,'' என முணுமுணுத்தான் மாந்த்ஸெவ், ''நெடுங்காலமாக நான் ரொட்டி தின்னலே.''

''ஆனா நான் தான் இவான் கூசேவ்... நிக்கலாய் க்ரிஸ்தபோரவிச், நீங்க செய்யச் சொன்ன எல்லாவற்றையும் நான் செய்திட்டேன். என் தலையை வாங்கி விடுவதாக என்னை எப்படி அச்சுறுத்தினீங்க என்பது நினைவிருக்கா?''

மாந்த்ஸெவிற்கு எதுவுமே நினைவு இல்லை, நெருப்பின் கொழுந்துகளால் வெளிச்சம் பெற்ற புதிய முகங்களை நோக்கி விழிக்க மட்டுமே செய்தான். தைகாக் காட்டினூடே பெத்ரொப்பாவ்லொவ்ஸ்க்குக்குக் கால்நடையாகவே தான் சென்றது எப்படி என்பதை இவான் அவனுக்கு சொல்லத் தொடங்கினான்: கரடிகளின் பார்வையில் படாது ஒளிந்தது எப்படி; ஒரு கன்றுக்குட்டி அளவான சிவப்புப் பூனை ஒன்றைக் கண்டு, அவன் ஒரேயடியாக மிரண்டது எப்படி; ஆனால் அந்தப் பூனையின் பின்னே இன்னும் மூன்று தொடர்ந்துவந்தும் இவனுக்கு எத்தகைய தீங்கும் செய்யாது கடந்து சென்றது எப்படி; அணிற்பொந்துகளில் அகப்பட்ட தேவதாருக்கொட்டைகளைத் தின்று தான் உயிர்வாழ்ந்தது எப்படி; பெத்ரொப்பாவ்லொவ்ஸ்க்கில் உரு

ளைக்கிழங்கு தோலுரிக்கும் வேலையை நீராவிக்கப்பலில் பெற்றது எப்படி; கப்பலில் பத்திரமாக விளாதிவஸ்தோக் சென்றடைந்து பிறகு ரயில் வண்டிப் பெட்டிகளுக்கு அடிப்புறத்தில் தொத்திக்கொண்டு ஐயாயிரம் மைல்கள் பயணம் செய்தது எப்படி.

''நான் என் சொல்லைக் காப்பாற்றி விட்டேன், நிக்கலாய் க்ரிஸ்தபோரவிச். நான் உங்களிடம் மக்களைக் கொண்டு வந்துள்ளேன். நிறம் அழியாத பென்சிலால் என் முதுகில் அக்கடிதத்தை நீங்க எழுதியிருக்க மட்டும் வேண்டியது இல்லை. நீங்க என்னிடம் கேட்டிருந்தால் நான் வாக்குறுதி கொடுத்திருப்பேன், அதுவே போதுமானதாக இருந்திருக்கும். ஆனா நீங்க என் முதுகில் எழுதியது, சோவியத் அரசிற்கு எதிர்ப்பானதாகத்தான் இருந்திருக்கும். நீங்க அதைச் செய்திருக்கக் கூடாது. இனிமேல் என்னை நீங்க எதிர்பார்க்காதீங்க, நான் இப்ப ஓர் இளம் பயோனீயர்.''

மாந்த்ஸெவ் அவன் பக்கமாகக் குனிந்து, உதடுகளைச் சுளித்துக் கொண்டு, அடித்தொண்டையில் முணுமுணுத்தான்:

''இவர்களெல்லாம் யார்?''

''விஞ்ஞானத் துறையில் ஆராய்ச்சி செய்யும் பிரெஞ்சுப் பயணக்குழுவினர். இங்கே, உங்களிடம் வருவதற்கு வழிகாட்ட என்னை லெனின்கிராடில் தேடிப்பிடிச்சாங்க.''

அவன் தோளை இறுகப்பற்றி அவனுக்கு நோவுண்டாகும் அளவு அழுத்தினான் மாந்த்ஸெவ்:

''நீ காரினைப் பார்த்தியா?''

''நிக்கலாய் க்ரிஸ்தபோரவிச், என்னை மிரட்ட முயலாதீங்க. இப்ப எனக்குப் பின்னாலே சோவியத் அரசாங்கம் இருக்கு... என் முதுகிலுள்ள உங்க கடிதத்தைச் சரியான ஆட்கள் பெற்றுக் கொண்டு விட்டார்கள்... காரினிடம் எனக்கு என்ன தேவை?''

''இவர்களெல்லாம் இங்கே ஏன் இருக்காங்க? என்னிடமிருந்து என்ன விரும்புறாங்க?.. இவர்களுக்கு எதுவுமே சொல்லமாட்டேன். எதையும் காட்ட மாட்டேன்.''

வெறித்துச் சுற்றிலும் நோக்கிய மாந்த்ஸெவின் முகம் சிவப்பேறியது. படுக்கையின் மீது அவன் பக்கத்தில் ஆர்த்தூர் லெவீ அமர்ந்தான்.

''அமைதியா இருங்க, நிக்கலாய் க்ரிஸ்தபோரவிச். உண்டு, ஒய்வு பெறுங்க... எங்களுக்கு நிறைய நேரம் இருக்கு. நவம்பர் மாதத்துக்கு *முன்னாலே உங்களை இங்கிருந்து கூட்டிப் போக மாட்டோம்.''

படுக்கையினின்றும் மாந்த்ஸெவ் இறங்கினான், அவனது கைகள் நடுங்கிக்கொண்டு இருந்தன.

''நான் உங்களிடம் தனியாப் பேச விரும்புறேன்.''

வெட்டப்படாத, பாதி மக்கிய முண்டுக் கட்டைகளால் ஆகிய கதவின் பக்கம் தள்ளாடிச் சென்றான். அதனைத் தள்ளித் திறந்தான். அவனது நரை மயிர்க் கற்றைகளை இரவின் காற்று அலைத்தது. நைப்பான வெண்பனி சுழன்றடித்த இருட்டில் ஆர்த்தூர் லெவீ அவனைப் பின்தொடர்ந்தான்.

''என்னோட துப்பாக்கியில் கடைசித் தோட்டா வச்சிருக்கேன்... உங்களைக் கொல்லப் போறேன்! என்னைக் கொள்ளையடிக்கிறதுக்காக இங்கே நீங்க வந்திருக்கீங்க!'' என்று கீச்சிட்டுக் கத்தி மாந்த்ஸெவ் சீற்றத்தால் நடுங்கினான்.

''வாங்க, இக்காற்றை விட்டு அப்பால் போவோம்.'' ஆர்த்தூர் லெவீ அவனை இழுத்து வந்து கட்டைச்சுவரின் மீது சாய்த்து வைத்தான். ''இவ்வளவு பைத்தியமா நடக்க வேணாம், உங்களிடம் என்னை பியோத்தர் பெத்ரோவிச் காரின் அனுப்பினார்.''

லெவீயின் கையைப் பரபரப்புடன் மாந்த்ஸெவ் பற்றினான். பொங்கிச் சிவந்திருந்த இமைகளுடன் கூடிய அவனது வீங்கிய முகம் நடுங்கியது, அவனது பல்லில்லாத வாய் சிணுங்கியது.

''ஆக, காரின் உயிரோடு இருக்கிறானா? என்னை அவன் மறந்துவிடவில்லையா? நாங்க இருவரும் பட்டினி கிடந்தோம், நாங்க இருவரும் சேர்ந்தே பெரும் திட்டங்கள் தீட்டினோம்... ஆனா அதெல்லாம் முட்டாள்தனம், மூளைக்கொதிப்பு. நான்

இங்கே என்ன கண்டுபிடிச்சிருக்கேன்? புவிப் புறணிக்குள் ஆராய்ச்சி செய்திருக்கேன். நான் கருதிய கருதுகோள்களை உறுதிப்படுத்தியிருக்கேன். இத்தகைய அபாரமான முடிவுகளை நான் எப்போதும் எதிர் பார்க்கலே. ஆலிவீன் இங்கு இருக்கு.'' த்ரையின் மேல் தனது ஈரக் காலணிகளால் மாந்த்ஸெவ் மிதித்தான். ''எல்லையில்லா அளவுகளில் பாதரசமும் தங்கமும் பெற முடியும்... கேளுங்க, தரையின் மையக்கருவை அடைய குறுகிய மின் அலைகளை நான் பயன்படுத்தினேன். அங்கே விநோதமான விஷயங்கள் நடந்துக்கிட்டு இருக்கு... உலகத்தின் விஞ்ஞானம் முழுமையுமே தலைகீழாக மாத்தியிருக்கேன்... நூறாயிரம் டாலர் காரின் பெறக்கூடுமானால் நாங்க செய்யக்கூடியவற்றிற்கு ஓர் எல்லையே இல்லை!..''

''தன் விருப்பத்தின்படி செலவு செய்ய காரின் பல கோடிக்கணக்கில் வைத்திருக்கிறார். உலகிலுள்ள எல்லாப் பத்திரிகைகளிலும் காரினைப் பற்றிய செய்திகளே நிறைந்து இருக்கு,'' என்றான் லெவீ. ''ஹைபர்பாலாயிடைக் கட்டுவதில் அவர் வெற்றி பெற்றுவிட்டார், பசிபிக் மாகடலில் ஒரு தீவைக் கைப்பற்றி, பெரும் செயல்களுக்கு ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார். புவிப் புறணி பற்றி நீங்க நடத்திய ஆராய்ச்சியின் முடிவுகளுக்காக மட்டுமே காத்திருக்கிறார். உங்களுக்காக அவர் ஒரு பலூன் விமானம் அனுப்புகிறார். பருவநிலை தடைப்படுத்தாது இருந்தால், இப்போதிருந்து இன்னும் ஒரு மாதத்தில் இறங்கு கம்பம் நாட்டிவிடலாம்,'' என்றான்.

தன் தலை தொங்கிக் கொண்டிருக்க, சுவரோடு சாய்ந்துகொண்டு மாந்த்ஸெவ் நெடுநேரம் பேசாதிருந்தான்.

''காரின், காரின்,'' என்று திரும்பத்திரும்பச் சொன்னான். குற்றம் சாட்டும் முறையில் அவன் கூறிய சொற்களில் நெடுநாள் அடக்கிவைத்திருந்த மனநோவு தெரிந்தது. ''ஹைபர்பாலாயிடைப் பற்றிய கருத்தை நான் அவனுக்குக் கொடுத்தேன். அவனது மூளையில் ஆலிவீன் பட்டையைப் பற்றிய கருத்

தையும் நான்தான் தினித்தேன். பசிபிக்கிலுள்ள ஒரு தீவைப்பற்றிய எண்ணமும் என்னுடையது தான். என் மூளையைத் திருடிவிட்டான், இந்தப் பாழான தைகாக் காட்டில் என் எலும்புகள் சிதைவுறுமாறு விட்டுவிட்டான். எனக்கு வாழ்க்கையில் என்ன எஞ்சியிருக்கு? ஒரு படுக்கை, ஒரு மருத்துவர், ரவைப் பொங்கல்... காரின், காரின்... மற்றமவரிடமிருந்து எண்ணங்களைத் திருடுகிற கள்ளன்!..''

மாந்த்ஸெவ் புயலை நோக்கி முகத்தை நிமிர்த்தினான்.

''ஈறரிப்பு நோய் என் பற்களைச் சாப்பிட்டுவிட்டது, சொறிப்படை என் தோலைத் தின்றுவிட்டது, கிட்டத்தட்ட குருடாய் இருக்கிறேன், என் மூளை மந்தமாய்ப் போச்சு... காலங் கடந்துருச்சு, காலம் கடந்தபிறகு என்னைப் பற்றி காரின் நினைச்சிருக்கான்...''

89

பழைய, புதிய உலகங்களிலுள்ள எல்லாப் பத்திரிகைகளுக்கும் காரின் ஒரு வானொலித் தந்தி அனுப்பினான். பியேர் ஹொர்ரி என்ற பெயருடைய தான் பசிபிக் மாகடலில் நூற்று முப்பதாவது மேற்குத் தீர்க்கரேகைக்கும், இருபத்து நான்காவது தெற்கு அட்சரேகைக்கும் இடைப்பட்ட, இருபத்தொன்று சதுர மைல் பரப்புள்ள ஒரு தீவைக் கைப்பற்றிவிட்டதாகவும்; அதனைச் சுற்றியுள்ள சிறு தீவுகளும் ஆழமற்ற இடங்களும் சேர்ந்த அந்தத் தீவு தன்னுடைய தனிப்பட்ட ஆட்சி இடமென தான் கருதுவதாகவும்; தன்னுடைய உடலில் கடைசிச் சொட்டு குருதி இருக்கும் வரை தனது தனி ஆட்சி உரிமைகளைத் தற்காத்துக்கொள்ளத் திட்டமிட்டிருப்பதாகவும் அத் தந்தியில் அறிவித்திருந்தான்.

இதன் பொது விளைவு சிரிப்பைத் தோற்றுவித்தது. தென் பசிபிக் மாகடலில் இருந்த அச்சிறு தீவு குடியிருக்கப்படாத ஒன்று, அதன் இயற்கைக் காட்சிகளைத் தவிர்த்து எந்தச் சிறப்பும் அதில்

கிடையாது. அதன் உரிமை பற்றி குழப்பம்கூட இருந்தது: அமெரிக்க ஐக்கிய நாடுகளும், ஹாலந்தும், ஸ்பெயினும் உரிமை கொண்டாடின. அமெரிக்கருடன் வாதாட இயலாது, ஆகையால் மற்றவர்கள் சற்றே முணுமுணுத்து இந்த வழக்கிலிருந்து பின்வாங்கி விட்டனர்.

அங்கு செல்வதற்குச் செலவாகும் நிலக்கரி விலைகூடப் பெறாது அந்தத் தீவு, ஆனால் கொள்கைகள் நிலைநிறுத்தப்பட வேண்டியிருந்தது. ஆகவே ஸான்பிரான்சிஸ்கோவிலிருந்து விரை போர்க்கப்பல் ஒன்று பியேர் ஹெர்ரியைச் சிறைசெய்து, அத்தீவில் ஓர் உயரமான இரும்புத் தூண் நட்டு, அதன் உச்சியில் நட்சத்திரங்கள் பொறித்த அமெரிக்க ஐக்கிய நாடுகளின் பெருங்கொடியொன்றைப் பொருத்தி வருவதற்காக அனுப்பப்பட்டது.

போர்க்கப்பல் புறப்பட்டது. இந்த அபத்தமான சம்பவத்தின் விளைவாக நடன இசை ஒன்று 'ஏழை ஹெர்ரி' என்ற பெயரில் இயற்றப்பட்டது. ஏழை பியேர் ஹெர்ரி ஒரு க்ரெவோல் பெண் மீது காதல் கொண்டு, அவளை அரசியாக்க விரும்பினான். மக்கள் இல்லாத ஒரு சிறு தீவிற்கு அவளைக் கூட்டிச் சென்று, அங்கே அவர்கள் மட்டும் தனித்து தீவின் அரசனும் அரசியுமாக வாழ்ந்தனர், இருவருமே நடனமாடினர். அரசி சொன்னாள்: ''ஏழை ஹெர்ரியே, நான் பசியாயிருக்கிறேன், தின்ன ஏதேனும் விரும்புகிறேன்.'' அதற்கு மறுமொழியாக ஹெர்ரி பெருமூச்சு மட்டும் விட்டு, நடனமாடிக்கொண்டே இருந்தான், — பாவம், பூக்களையும், கடல் கிளிஞ்சல்களையும் தவிர அரசிக்குக் கொடுக்க வேறொன்றும் அவனிடமில்லை. பிறகு ஒரு கப்பல் வந்தது. அக்கப்பலின் அழகிய காப்டன், அரசிக்குக் கைலாகு கொடுத்து அருமையான மதிய உணவுக்கு அவளை அழைத்துச் சென்றான். அரசி சிரித்து உண்டாள். ஆகவே ஏழை ஹெர்ரி தனித்து நடனமாட விடப்பட்டான்... இப்படியாக... வேறுவகையாகச் சொன்னால் இந்த விஷயம் வெறும் வேடிக்கையாக இருந்தது.

பத்து நாள்களுக்குப் பின்னர் போர்க்கப்பலிலிருந்து ஒரு வானொலிச் செய்தி பெறப்பட்டது:

''தீவு கண்ணுக்குத் தெரியும் தொலைவில் நங்கூரம் போடப்பட்டுள்ளது. தீவு அரண்செய்யப்பட்டிருப்பதாக எச்சரிக்கப்பட்டதால் கரையேற முயலவில்லை. தன்னைத் தீவின் சொந்தக்காரன் என்று சொல்லிக்கொள்ளும் பியேர் ஹெர்ரிக்கு இறுதியான எச்சரிக்கை அனுப்பப்பட்டது. நாளைக் காலை ஏழு மணி வரைக்குள் அவனுக்குக் காலக்கெடு கொடுக்கப்பட்டுள்ளது. அந்நேரம் கடந்தவுடன் கரையேறும் குழு ஒன்றை அனுப்புவோம்.''

அது மிகவும் வேடிக்கையாக இருந்தது—ஆறு அங்குல பீரங்கிகளை நோக்கி ஏழை ஹெர்ரி முட்டியை ஆட்டினான். ஆயினும், மறு நாளாவது அன்றி அதையடுத்த நாள்களிலாவது, அப்போர்க்கப்பலிலிருந்து ஒரு செய்தியும் வரவில்லை.

அனுப்பிய விசாரணைக்குப் பதில் வரவில்லை. கப்பற்படைத் துறையில் சிலர் கவலையுடன் புருவங்களைச் சுளித்தனர்.

அதன் பிறகு மாக்லின்னேய் பத்திரிகைகளுக்கு அளித்த பரபரப்பூட்டும் பேட்டி வெளியாயிற்று. பாரிஸ் அருகேயுள்ள வில் தவ்ரேவில் நடைபெற்ற மர்மக் கொலை உட்பட அநேகக் குற்றங்கள் பற்றிய வதந்திகளில் கெட்டபெயர் சம்பாதித்த ருஷ்ய துணிச்சல்காரன் என்ஜினியர் காரினே தான் இந்த பியேர் ஹெர்ரி என்பதை உறுதிப்படுத்தினான். காரினைத் தீவுக்கு ஏற்றிச்சென்ற கப்பலில் 'ரோல்லிங் அனிலைன்' தலைமை நிர்வாகியான ரோல்லிங் தாமே இருந்ததாகவும், தீவு கைப்பற்றப் பட்ட நிகழ்ச்சி இந்தக் காரணத்தால் தனக்கு விசேடமாக வியப்பூட்டியதாகவும் மாக்லின்னேய் கூறினான். ரோல்லிங்கின் பணத்தைக் கொண்டு அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் ஏராளமான சரக்குகள் வாங்கப்பட்டன என்றும், அவற்றைத் தீவுக்குக் கொண்டு செல்வதற்காகக் கப்பல்கள் வாடகைக்குப் பிடிக்கப்பட்டன என்றும் கூறப்பட்டது. எல்லாம் சட்ட ஒழுங்குக்கு உட்பட்டு நடந்தவரையில் மாக்

வின்னேய் பேசாதிருந்தான், ஆனால் சட்டத்துக்கு அசாதாரண மதிப்பு அளிப்பது வேதியல் மன்னன் ரோல்லிங்கின் சிறப்பு இயல்பு என்றும், எனவே தீவு துடுக்கான முறையில் கைப்பற்றப்பட்டது ரோல்லிங்கின் சித்தத்துக்குப் புறம்பாகச் செய்யப்பட்டிருக்கிறது என்பதில் ஐயமில்லை என்றும், ரோல்லிங் தீவில் சிறைவைக்கப் பட்டிருக்கிறான் என்பதையும் கேட்டறியாத விதத்தில் மிரட்டிக் காரியத்தைச் சாதித்துக் கொள்வதற்காக அந்தக் கோடீசுவரன் பயன்படுத்தப்படுகிறான் என்பதையுமே இது நிரூபிக்கிறது என்றும் மாக்லின்னேய் இப்போது அழுத்திக் கூறினான்.

வேடிக்கைகளுக்கெல்லாம் இது முடிவை ஏற்படுத்தியது. புனிதமானவற்றிலெல்லாம் புனிதமானது மீறப்பட்டுவிட்டது. ஆகஸ்ட் மாதத்தில் காரின் விலைக்கு வாங்கிய பொருள்களைப் பற்றிய தகவல்களையெல்லாம் போலீஸ் முகவர்கள் திரட்டினர். எண்ணிக்கைகள் மருட்சி ஏற்படுத்தின. அதே நேரத்தில், கப்பற்படைத் துறை போர்க்கப்பலை வீணாகத் தேடியது—அது மறைந்துவிட்டது. இவற்றிற்கெல்லாம் மகுடமிட்டது போன்று, ஜெர்மனியிலிருந்த அனிலைன் கம்பெனியின் தொழிற்சாலைகளில் ஏற்பட்ட வெடிவிபத்து பற்றிய வருணனையை எல்லாப் பத்திரிகைகளும், அந்நிகழ்ச்சிகளைத் தன் கண்களாலேயே கண்டிட்ட ஹ்லீனோவ் என்ற ருஷ்ய என்ஜினியர் சொன்னவற்றை வெளியிட்டன.

நிலைமை பழிப்புக்கிடமாயிற்று. அரசின் கண் முன்னேயே, எவனோ ஒரு துணிச்சல்காரப் பேர்வழி அளவுகடந்த போர்ப் பொருள்களை விலைக்கு வாங்கிவிட்டு, ஒரு தீவைக் கைப்பற்றி, அமெரிக்கக் குடிகள் அனைவரிலும் மிகப்பெரிய ஒருவரது சுதந்திரத்தையும் பறித்துவிட்டான். எல்லாவற்றுக்கும் மேல் இவன் ஒழுக்க நெறியற்ற கயவன், கூட்டமாகக் கொலை செய்தவன், கடை கெட்ட போக்கிரி.

இன்னும் ஒரு பெரு வியப்பூட்டும் செய்தியைத் தந்தி கொணர்ந்தது: மிகப் புதிய மாதிரி மர்ம பலூன் விமானம் ஒன்று, ஹாவாய்த் தீவுகளுக்கு

மேலே பறந்து ஹீலோ துறைமுகத்தில் இறங்கி, பெட்ரோலும் நீரும் எடுத்துக்கொண்டு, குரீல் தீவு களுக்குமேல் பறந்து, மீண்டும் ஸகாலீன் தீவில் அலெக்சாந்த்ரோவ்ஸ்க் துறைமுகத்தில் இறங்கி பெட்ரோலும் நீரும் எடுத்துக்கொண்ட பிறகு, வட மேற்குத் திசையில் மறைந்துவிட்டது. ஆகாயக் கப்ப லின் உலோகத்தாலான பக்கவாட்டில் 'பி.கா' என்ற இரு எழுத்துக்கள் காணப்பட்டன.

இது எல்லாவற்றையும் தெளிவாக்கியது: காரின் மாஸ்கோவின் ஒரு கையாள். 'ஏழை ஹெர்ரி' பழி வாங்குவது போன்ற ஒன்று? கடுமையான நடவடிக் கை எடுக்கக் காங்கிரஸ் முடிவு செய்தது. அமெரிக்கப் பத்திரிகைகள் இப்போது 'கயவர்களின் தீவு' என்று அழைத்த அத்தீவிற்கு எட்டு பெரிய போர்க்கப்பல் கள் கொண்ட கப்பற்படைப்பிரிவு ஒன்று அனுப்பப் பட்டது.

அதே நாளில் உலகிலுள்ள எல்லா வானொலி நிலையங்களும் சிற்றலையில் பரப்பப்பட்ட செய்தி ஒன்றை வாங்கின. அதில் தொனித்த துடுக்கும் அதன் கெட்ட நடையும் திடுக்கிடச் செய்பவையாக இருந்தன:

''ஹலோ! ஹலோ! இது பொன் தீவு. உண் மை தெரியாதவர்கள் தவறாகக் 'கயவர்களின் தீவு' என்கின்றனர். தனது உள் விவகாரங்களில் தலையிட வேண்டாமென்று எல்லா நாட்டு அரசுகளுக்கும் பியேர் ஹெர்ரி உளப்பூர்வமாக அறிவுறுத்துகிறார். பியேர் ஹெர்ரி தன்னைத் தற்காத்துக்கொள்வார். எந்தப் போர்க்கப்பலோ, அல்லது போர்க்கப்பல்கள் சேர்ந்த படையோ, பொன் தீவின் நீரெல்லைக்குள் நுழைந்தால் பதினைந்து விநாடிகளுக்குள்ளேயே கடலின் அடிக்குச் சென்ற அமெரிக்க விரைபோர்க் கப்பலுக்கு நேர்ந்த கதி, இவற்றுக்கும் நேரும். அர சியலை மறந்து, தன் பெயர்கொண்ட நடனத்தைக் கவலையற்ற முறையில் ஆடும்படி உலகத்து மக்க ளுக்கு பியேர் ஹெர்ரி உளப்பூர்வமாக அறிவுறுத்து கிறார்.''

குளிர்காலத் தங்கிடத்திற்கு அருகில் கணவாயில் அணை மீண்டும் கட்டப்பட்டு, மின் நிலையம் வேலை செய்யத் தொடங்கியது. ஒவ்வொரு நாளும் பொன் தீவிலிருந்து பலூன் விமான இறங்கு கம்பம் தயாரா யிற்றா என்று வினவிய பொறுமையிழந்த செய்தி களைப் பெற்றுக் கொண்டிருந்தான் ஆர்த்தூர் லெவீ.

பிரமாண்டத்தின் அமைதியிலிருந்து அவற்றை அழைத்தது எது என்பதைப் பற்றிக் கவலை கொள் ளாத மின்காந்த அலைகள் ஈதரில் விரைந்து சென்று, ஒலிவாங்கியின் உள்ளே நுழைந்து, செவிக் குழாயில், காரினின் குரலில் வெறி கரகரத்தன: ''இப்போ திருந்து இன்னும் ஒரு வாரத்தில் இறங்கு கம்பம் தயாராகாவிட்டால், உங்களைச் சுடும் உத்தரவு களுடன் பலூன் விமானத்தை அனுப்புவேன், நான் சொல்வதைக் கேட்கிறீர்களா, வோல்ஹின்?'' இவ் வாறு கரகரத்து விட்டு அந்த மின்காந்த அலைகள், தரைக்கம்பி வழியாக அவற்றினது தொடக்ககால அமைதிக்கு மீண்டன.

எரிமலையின் அடிவாரத்தில் இருந்த தங்கிடத் தில் அசுர வேகத்தில் வேலைகள் நடந்தன: மரஞ் செடிகளை வெட்டி எறிந்து, ஒரு பெரு வெளி அமைக்கப்பட்டது, நெடிய பைன் மரங்கள் வெட்டி வீழ்த்தப்பட்டன, தரையில் ஆழமாகத் தோண்டிப் புதைக்கப்பெற்ற மூன்று முட்டுக்கால்களுடன் எண் பது அடி உயரமுள்ள தூண் ஒன்று நிலைநிறுத்தப் பட்டது.

எல்லாரும் இடைவிடாது உழைத்தனர், ஆனால் மற்ற எவரையும்விட மாந்த்லெவ் மிக்க சுறுசுறுப்பு டனும் மனக் கிளர்ச்சியுடனும் இருந்தான். இப் பொழுது அவன் வயிறு நிறையத் தின்று சிறிது உரம் பெற்றிருந்தான். எனினும். அவனது அறிவு பிறழத் தொடங்கியிருந்தது புலப்பட்டது. சில நாள் களில் எல்லாவற்றையும் மறந்தவன் போலக் கை களால் பறட்டைத் தலையைப் பற்றிக்கொண்டு,

படுக்கைமீது அசைவின்றி அமர்ந்திருப்பான், அல்லது மாஷ்கா என்ற ஆட்டைக் கட்டவிழ்த்து இவானிடத்தில் பின்வருமாறு சொல்வான்:

''நீ விரும்பினா, எந்த மனிதனும் இதுவரை பார்த்திராத ஒன்றை உனக்குக் காட்டுவேன்.''

மாஷ்காவைப் பிணைத்திருந்த கயிற்றைப் பற்றிக்கொண்டு (பாறைகளின்மேல் ஏறுவதற்கு அக்கிழவனுக்கு அந்த ஆடு உதவியது), இவான் பின்பற்றி வர, மாந்த்ஸெவ் எரிமலைப் பாறைமேட்டில் ஏறத் தொடங்குவான்.

நெடிய பைன் மரங்கள் முடிவுற்றன; அதற்கு மேல் உயரத்தில் கற்பாளங்களுக்கிடையில் கோணல் மாணலான புதர் மட்டும் இருந்தது; இன்னும் உயரத்தில் பாசிக் காளான்களாலும் சில இடங்களில் வெண்பனியாலும் மூடப்பெற்ற கருங்கற்களைத் தவிர ஒன்றும் இல்லை.

எரிமலையின் வாய்விளிம்பு ஏதோ ஒரு ராட்சச சர்க்கசின் பாதிப்பாழான சுவரைப் போன்று, செங்குத்தான பல் வெட்டுக்களுடன் நின்றது. இங்கே, மாந்த்ஸெவ் ஒவ்வொரு மூலை முடுக்கையும் அறிவான்; முனகிக்கொண்டும், அடிக்கடி ஓய்வெடுத்துக் கொண்டும், ஒரு தட்டைப் பகுதியிலிருந்து மற்றொன்றுக்கு மேலே வளைந்து வளைந்து சென்ற வழியில் அவர்களை அழைத்துக்கொண்டு செல்வான். இருப்பினும் காற்று வீசாத வெயில் நாள் ஒன்றில், ஒரே தடவை மட்டுந்தான் உச்சியை அடைவதில் வெற்றி பெற்றனர். அதன் விசித்திரமான பல் வெட்டுக்கள், ஆறிய எரிமலைக் குழம்பாலான செப்புநிற ஏரியைச் சூழ்ந்திருந்தன. எரிமலைக் குழம்பின் உலோகத் தகடுகள் மீது பல்வெட்டுக்களின் கூரிய நிழல்களை விழ்த்தியது தாழ்ந்த சூரியன். எரிமலை வாயின் மேற்குப் புறத்திற்கு அருகில் எரிமலைக் குழம்பின் மேற்பரப்புக்கு மேலே துருத்திக் கொண்டிருந்தது ஒரு கூம்பு. அதன் உச்சி வெண்புகை உமிழ்ந்து கொண்டிருந்தது.

''அதோ அங்கே,'' என்று மாந்த்ஸெவ், புகைந்து கொண்டிருக்கும் கூம்பைத் தனது வளைந்த விரல்

களால் சுட்டிக்காட்டினான், ''அங்கே ஒரு புகைப் போக்கி, பூமியின் உள்பகுதிக்குள்ளாகக் கீழே படு பாதாளம் செல்லுது, அதை இதற்கு முன்னர் எந்த மனிதனுமே உற்றுப்பார்த்ததில்லே... வெடிபஞ்சு துண்டங்களை அதற்குள்ளே போட்டு, அடித்தளத்தில் வெடியதிர்ச்சி உண்டானதும் விநாடிமானியைத் தொடக்கி, அவ்வொலி என்னை வந்தடைவதற்கான கால எல்லையைக் கணக்கிட்டு, அதன் ஆழத்தைக் கணிச்சேன். அங்கிருந்து வந்த புகையாவிகளை ஆராய்ந்தேன். அவற்றைக் கண்ணாடிவாலைக்குப்பிகளில் பிடித்து, அவற்றினூடே மின் வெளிச்சத்தைச் செலுத்தி, வெளிவந்த கதிர்களை நிறமாலை காட்டியின் பட்டகத்தின்மீது சிதறச் செய்தேன். எரிமலைப் புகையாவியின் நிறமாலையிலே அஞ்சனம், பாதரசம், தங்கம், இன்னும் மற்ற பல எடைமிக்க உலோகங்களின் கோடுகளைக் கண்டுபிடிச்சேன்... இதெல்லாம் உனக்குப் புரியுதா, இவான்?''

''ஆமாம், நல்லா புரியுது, தெளிவா இருக்கு. மேலே சொல்லுங்க...''

''நல்லது, இந்த ஆடு, மாஷ்காவைவிட நீ அதிகம் புரிந்துகொள்கிறாய் என்று கருதுறேன். ஒரு நாள், எரிமலை மிகச் சுறுசுறுப்பாக இருந்த போது நிலடையச் செய்யும் ஆழத்திலிருந்து இருமிக்கொண்டும் வெடித்துக்கொண்டும் இருந்த போது ன் உயிரையும் பொருட்படுத்தாது, எப்படியோ, வாலைக்குப்பியில் சிறிதளவு புகையாவி பிடிச்சேன். தங்கிடத்திற்கு நான் திரும்பிய பின் எரிமலை சாம்பலையும் சிறு பீப்பாய் அளவான கற்களையும் மேக மண்டலம்வரை தூக்கி எறியத் தொடங்கியது. உறங்கிவிழிக்கும் ஒரு பெரிய பூதத்தின் முதுகு போன்று நிலம் நடுங்கியது. ஆனா இத்தகைய சிறிய விவரங்களில் கருத்தைச் செலுத்தவில்லை, ஆய்வுக்கூடத்திற்குப் பாய்ந்துசென்று நிறமாலை காட்டியைக் கொண்டு புகையாவியை ஆராய்ந்தேன்... இவான், நீயும் மாஷ்காவும் கேளுங்க... இனிதான் விருவிருப்பான தகவல் இருக்கு.''

மாந்த்ஸெவின் கண்கள் பளிச்சிட்டன, அவனது பொக்கைவாய் கோணியது.

''மெந்திலேயெவ் அட்டவணையில் இல்லாத எடை மிக்க உலோகம் ஒன்றின் தடங்களைக் கண்டு பிடிச்சேன். சில மணிகளுக்குப் பிறகு, வாலைக்குப் பியில் உலோக அணுச்சிதைவு ஏற்படத் தொடங்கி யது. வாலைக்குப்பி மஞ்சள் வெளிச்சத்துடன் ஒளிந் தது, பிறகு நிலமாகி, இறுதியில் பளிச்சென்று சிவந் தது... முன்விழிப்போட எட்ட நகர்ந்து போய்விட் டேன்—பயங்கரமாக வெடிச்சது, வாலைக்குப்பி யும் எனது ஆய்வுக்கூடத்தில் பாதியும் வெடித்தழிந் தன... இந்த மர்ம உலோகத்தை நான் 'M' என்ற ழைக்கிறேன். ஏன்னா என் பெயர் இந்த எழுத்தில் தொடங்குது, அதுமாதிரி இந்த ஆட்டின் பெயரும். இந்தக் கண்டுபிடிப்பின் பெருமை எங்க இருவரை யும் சேரும், அந்த ஆட்டுக்கும் எனக்கும்... நான் சொல்லிக் கொண்டிருப்பதில் ஏதேனும் உனக்குப் புரியுதா?''

''மேலே சொல்லுங்க, நிக்கலாய் க்ரிஸ்தபோர விச்...''

''ஆலிவீன் பட்டையின் மிக ஆழ்ந்த படிவுகளில் M என்னும் உலோகம் படிந்து கிடக்கிறது. அது சிதைந்து பயங்கரமான அளவு வெப்ப ஆற்றலை வெளிப்படுத்துகிறது. புவிக்கரு M என்ற உலோகத் தால் ஆனது என்பதை நான் மேலும் நிலைநிறுத்து கிறேன். ஆனா, புவிக்கருவின் சராசரி அடர்த்தி எட்டு அலகுகள் தான்—கிட்டத்தட்ட இரும்பின் அடர்த்தி போல, M என்ற உலோகமோ, அதைப் போன்று இரு மடங்கு அடர்த்தியுடையது. ஆகவே, நில உருண்டையின் நட்டநடுப் பகுதி வெற்றிடமாக இருக்கணும்.''

மாந்த்ஸெவ் தனது விரலை உயர்த்தி இவான் மீதும் ஆட்டின் மீதும் பார்வையைச் செலுத்திய வாறு, ஒரு வெறித்த சிரிப்பை வெளிவிடுத்தான்.

''வாங்க, ஒரு முறை பார்ப்போம்...''

மூவரும், எரிமலை வாயின் பாறைப் பல்வெட் டுக்களிலிருந்து இறங்கி உலோக ஏரியை அடைந்து,

உலோகத் தகடுகளுக்கு மேலே நழுவியும் சருக்கியும் வழிபிடித்துப் புகையும் கூம்பினுக்குச் சென்றனர். வெடிப்புக்களினூடே வெங்காற்று வெளிவந்தது. காலடியில் இங்குமங்கும் ஆழங்காண இயலாத சுரங்கங்களின் திறந்த கரிவாய்கள் பரந்து தோன்றின.

''ஃமே மாஷ்காவை நாம் விட்டுச் செல்லணும்,'' என்று ஆட்டின் மூக்கின் மேல் தனது விரல்களால் சுண்டினான் மாந்த்ஸெவ்; தங்கள் காலடியின் கீழ் நழுவிய சூடான கற்களைப் பற்றிக்கொண்டு இவான் பின்தொடரக் கூம்பின் சரிவிற்கு வழிபிடித்துச் சென்றான்.

''குப்புறப்படுத்துப் பார்.''

கூம்பின் விளிம்பில் புகைப் பிழம்பு வெளிவந்ததற்கு எதிர்ப்பக்கமாகப் படுத்துத் தலைகளைத் தொங்கவிட்டனர்.

கூம்பின் உள்புறத்தில் ஒரு குழிவு இருந்தது. அதன் நடுவில் இருபத்துமூன்று அடி குறுக்களவு உள்ள முட்டை வடிவான ஓட்டை. இந்த ஓட்டையிலிருந்து, பெருத்த மூச்சுப் போன்ற ஓசைகளும் எங்கேயோ—எத்தகைய ஆழத்தில் என்பது சைத்தானுக்கே வெளிச்சம்—கற்கள் உருளுவது போன்ற தொலைதூரக் கடகடப்பு ஒலியும் வெளிப்பட்டன.

சற்று நேரம் ஓட்டைக்குள்ளேயே இவான் உற்று நோக்கிக் கொண்டிருந்தான். பிறகு, கற்பனைக்கும் எட்டாத ஆழத்திலிருந்து, செவ்வொளியொன்று வருவதைத் தனித்துப் பார்க்க அவனால் முடிந்தது. சில பொழுது மங்கியும், பிறகு பளிச்சிட்டும், படிப்படியாக அவ்வொளி தெளிவுமிக்கதாகி, முடிவில் பளபளப்பான சிந்தூர வண்ணத்தை ஏற்றது... பெருமூச்சு போன்ற ஓசை தரையினின்றும் மிக்கு வந்தது. கற்கள் முன்னிலும் உக்கிரமாகக் கடகடக்கத் தொடங்கின.

''எரிமலை கக்கத் தொடங்கி விட்டது, நாம் இங்கிருந்து வெளியேறியாகணும்,'' என்றான் மாந்த்ஸெவ். ''இவ்வெளிச்சம் ஏழாயிரம் மீட்டர் ஆழத்திலிருந்து வருகிறது. அங்கே M என்னும் உலோகம்

சிதைந்து தங்கமும் பாதரசமும் கொதித்து ஆவி யாகிக் கொண்டிருக்கு.''

இவானின் இடைவாரைப் பற்றி, அவனைக் கீழே இழுத்தான் மாந்த்ஸெவ். கூம்பு நடுங்கியது, அதன் பக்கங்களில் கற்கள் கீழே உருண்டன, வெடிக் கின்ற கொதிகலத்திலிருந்து வரும் நீராவி போலத் தடித்த புகைப்படலங்கள் குப்பென்று வெளிவந்தன. பளபளப்பான செவ்வொளி ஒன்று ஆழத்திலிருந்து வெளியே நீரோட்டம் போன்று வந்து தனது செந் நிறத்தைத் தாழ்ந்திருந்த மேகங்களுக்கு ஊட்டியது.

ஆட்டின் கழுத்தில் கட்டியிருந்த கயிற்றைப் பிடித்துக் கொண்டான் மாந்த்ஸெவ்.

''ஓடுங்க, ஓடுங்க, பையன்களா!.. அது கற் களைத் துப்பப்போகுது!..''

பிறகு ஒரு பெருத்த உருமல் வர கற்கள் நிறைந்த அந்த வெளியரங்கு எங்கும் எதிரொலித்தது. எரி மலை பருத்த கல்பாளம் ஒன்றைக் காற்றில் தூக்கி எறிந்தது... கைகளால் தலைகளை மூடிக்கொண்டு மாந்த்ஸெவும் இவானும் கீழே ஓடினர்; அவர்களுக் கும் முந்தி தரையோடு தனது கயிற்றை இழுத்துக் கொண்டு அந்த ஆடு துள்ளியோடிற்று.

91

இறங்கு கம்பம் தயாராயிற்று. பொன் தீவினின்றும் வந்த செய்தியொன்று, காற்றழுத்தமானி அபாயகர மான குறிகள் காட்டியபோதிலும் பலூன் விமானம் புறப்பட்டுவிட்டது என்று அறிவித்தது.

கடைசியான சில நாள்களில், வியப்பிற்குரிய தனது கண்டுபிடிப்புக்களைப் பற்றி மறைவின்றி மாந்த்ஸெவ் பேசுமாறு செய்ய ஆர்த்தூர் லெவீ முயன்று கொண்டிருந்தான். வேலையாட்களிடமி ருந்து எவ்வளவு தொலைவில் இருக்கக் கூடுமோ, அங்கே, ஒரு படுக்கைமீது அவர்கள் அமர்ந்திருந்த னர். ஆர்த்தூர் லெவீ ஸ்பிரிட் குப்பியை வெளியில் எடுத்து மாந்த்ஸெவின் தேநீரில் ஊற்றினான்.

தரையின்மீது ஊசியிலைப் படுக்கைகளில் வேலை

யாட்கள் கிடந்தனர். அவ்வப்பொழுது அவர்களுள் ஒருவன் எழுந்து நெருப்பில் தேவதாரு மரத்தின் வேரைப் போட அந்நெருப்பின் கொழுந்துகள், புகையால் கறுப்பாக்கப்பட்ட மரக்கட்டைச் சுவர்களையும் தாடிவளர்ந்த சோர்ந்த முகங்களையும் ஒளிர்வித்தன. கூரைக்குமேல் காற்று ஊளையிட்டது.

மெல்லவும், கொஞ்சும் முறையிலும், ஆறுதல் தரும் வகையிலும் பேச முயன்றான் ஆர்த்தூர் லெவீ. எனினும் மாந்த்ஸெவ் முற்றிலும் மூளை புரண்டவன் போலத் தோன்றினான்.

''கேளுங்க, ஆர்த்தூர், அல்லது உங்களை எப்படி அழைத்தாலும் சரி... உங்களோட ஏமாற்றுப் பேச்சைக் கைவிடுங்க. எனது காகிதங்கள், எனது சூத்திரங்கள், ஆழ் துளையிடுவதற்கான எனது திட்டங்கள், என்னோட நாள்குறிப்புக்கள் ஆகிய எல்லாவற்றையும் ஒரு தகரப் பெட்டியில் போட்டு ஈயப்பற்று வைத்து, அவற்றை ஒருவரும் கண்டுபிடிக்க முடியாத இடத்தில் ஒளிச்சு வச்சிருக்கேன்... விமானத்தில் உங்களோட வருவேன், ஆவணங்கள் இங்கேயே தங்கிவிடும். அவற்றை ஒருத்தரும், காரின் கூட, பெற மாட்டான். நான் அவற்றைத் தரமாட்டேன் —சித்திரவதைச் செய்தாலும் சரி...''

''அமைதியாயிருங்க, நிக்கலாய் க்ரிஸ்தபோரவிச். நீங்க பண்பாடான ஆள்களுடன்தான் தொடர்பு கொண்டிருக்கீங்க.''

''நீங்க நினைக்கிறது மாதிரி நான் அந்தளவு முழு முட்டாள் அல்லன். காரினுக்கு எனது சூத்திரங்கள் தேவைப்படுது... எனக்கு எனது வாழ்வு தேவைப்படுது. நாள்தோறும் மணம் கமழ்ற நீரில் குளிக்கவும், விலைமிகுந்த புகையிலை புகைக்கவும், நல்ல ஒயின் குடிக்கவும் விரும்புறேன்... பொய்ப் பற்கள் கட்டிக்கொண்டு ட்ரபிள் காளான்களைச் சாப்பிடுவேன்... நானும் புகழை விரும்புறேன், நான் அதைச் சம்பாதித்து விட்டேன்!.. ஆகவே நீங்க எல்லாரும், காரினும் உள்பட்ட, நாசமாய்ப் போங்க.''

''நிக்கலாய் க்ரிஸ்தபோரவிச், பொன் தீவில் நீங்க ஓர் அரசனைப் போல வாழ்வீங்க.''

''நிறுத்துங்க நான் சொல்றேன். காரினை எனக்குத் தெரியும்... அவன் என்னை வெறுக்கிறான், ஏன்னா காரின் முழுதும் என்னோட கண்டுபிடிப்பு. நான் இல்லாட்டி அவன் ஓர் அற்பப் போக்கிரியா இருந்திருப்பான்... உங்களோட என்னுடைய ஜீவனுள்ள மூளையை நீங்க விமானத்தில் கொண்டு போங்க, ஆனா என்னோட சூத்திரங்கள் அடங்கிய குறிப்பேடுகள் அல்ல.''

இப்பேச்சுக்குச் செவி சாய்த்த இவான் கூசேவ் அதில் சில பகுதிகளைக் கேட்டான். இறங்கு கம்பம் தயாரான அன்றிரவு, மாந்த்ஸெவின் படுக்கையருகே மெல்ல நகர்ந்து சென்றான். மாந்த்ஸெவ் விழித்த கண்களுடன் கிடப்பதைக் கண்டு அவன் காதில் கிசுகிசுத்தான்:

''நிக்கலாய் க்ரிஸ்தபோரவிச், அவர்கள் எல்லாரையும் உதறித்தள்ளுங்க. என்னோட லெனின்கிராடுக்கு வருவது நல்லது... தராஷ்கினும் நானும் உங்களை ஒரு குழந்தையைப் போலப் பார்த்துக் கொள்வோம். உங்களுக்குப் புதுப்பற்கள் கட்டச் செய்வோம். நீங்க வாழ்வதற்கு ஒரு நல்ல இடத்தைக் காண்போம் — இந்தப் பூர்ஷ்வாக்களுடன் கலக்க எதற்காக விரும்புகிறீங்க?..''

''இல்லை, இவான், நான் உருப்படாமல் போனவன், முற்றிலும் கட்டுக் கடங்காத ஆசைகள் கொண்டவன்,'' என்று விடையளித்த மாந்த்ஸெவ் புகையால் கறுத்திருந்த உட்கூரையில் வெடிப்புகளிலிருந்து கீழே தொங்கிய பாசியின் குஞ்சங்களைப் பார்த்துக்கொண்டிருந்தான். ''இந்தப் பாழான கூரையின் அடியில் ஏழாண்டுகளாக என்னுடைய கற்பனை கொடூரமா ஓடியிருக்கு... நான் இன்னும் ஒருநாள் கூடக் காக்கப் போவதில்லை.''

இந்த 'பிரெஞ்சு ஆராய்ச்சிக் குழு' உண்மையில் என்ன என்பதை நெடுங்காலமாகவே இவான் கூசேவ் தெரிந்து கொண்டிருந்தான்: கருத்துடன் கேட்டு, எச்சரிக்கையாக இருந்து, தனது சொந்த முடிவுகளுக்கும் வந்திருந்தான்.

எப்போதும் நிழல்போன்று மாந்த்ஸெவைப் பின்

தொடர்ந்தான். இந்த இறுதி இரவில் அவன் தூங்கவே இல்லை: இமைகள் பொருந்தத் தொடங்கிய உடனேயே மூக்கை ஓர் இறகினால் சிலிர்த்துக்கொண்டான், அல்லது உடலில் எங்கே மிக நோவுமோ அங்கே கிள்ளிக்கொண்டான்.

வைகறையில் ஆர்த்துார் லெவ் கெட்ட கோபத்துடன் எழுந்தான்; ஆட்டுத்தோல் மேற்கோட்டை அணிந்துகொண்டு, கழுத்தைச் சுற்றி மப்ளர் ஒன்றைக் கட்டிக் கொண்டான். அருகே மண்குடிலில் அமைந்திருந்த வானொலி நிலையத்திற்குச் சென்றான். இவான் தனது கண்களை மாந்த்லெவை விட்டு அப்பால் ஒரு கணம் கூடத் திருப்பவில்லை. லெவீ வெளியே போய்விட்டவுடனே, எல்லாரும் உறக்கத்திலிருக்கிறார்கள் என்று உறுதிப்படுத்திக் கொள்வதற்காக மாந்த்லெவ் சுற்றிலும் நன்கு நோக்கினான். தனது படுக்கையினின்றும் ஓசைபடாது நழுவி, அந்த அறையின் இருண்ட மூலையொன்றினுக்கு நகர்ந்து போய் தலையை நிமிர்த்தினான். எதனையும் பார்க்கக் கூடாத அளவு அவனது கண்கள் வன்மையற்றனவாய் இருந்திருக்க வேண்டும். ஏனெனில் அவன் திரும்பிவந்து நெருப்பில் பைன் மரக் கிளைகளைப் போட்டான். அவை கொழுந்து விட்டு எரியத் தொடங்கியதும் திரும்பவும் மூலைக்குச் சென்றான்.

அவன் எதனைப் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்பதை இவான் ஊகித்தான்: அந்த மூலையின் மேற்பகுதியில், சுவர்களாக அமைந்த கட்டைகள் ஒன்றினுள் ஒன்றாகப் பொருத்தப்பட்டிருந்தன; அவ்விடத்தில் கூரையின் உட்புறம் இருந்த பிளவில் பாசி வெளியில் இழுக்கப் பட்டிருந்தது. மாந்த்லெவைத் தொல்லைப்படுத்திக் கொண்டிருந்தது இது தான். கட்டைவிரலில் நின்றுகொண்டு கூரையின் உட்புறம் இன்வொரு பகுதியில் இறுகிப்பிடித்திருந்த புகைப் பட்ட பாசியின் ஒருகையளவு பிடுங்கி இழுத்து முனகலுடன் பிளவினுள் வைத்துத் திணித்தான்.

தனது மூக்கைச் சிலிர்த்துக் கொண்டிருந்த இறகை இவான் தொலைவில் எறிந்துவிட்டு தலைக்கு

மேல் போர்வையை இழுத்துப் போர்த்திக்கொள்ள உடனே ஆழ்ந்து உறங்கிப்போனான்.

கொடிய பனிப்புயல் இன்னும் சீறியது. இரு நாள்களாக அந்தப் பெரிய பலூன் விமானம் வெட்ட வெளிக்கு மேலே தொங்கிக் கொண்டிருந்தது. அதனுடைய மூக்கு இறங்கு கம்பத்துடன் கட்டப்பட்டிருந்தது. அக்கம்பம் வளைந்து, கீச்சிட்டது, பலூன் விமானத்தின் சுருட்டுவடிவான உடல் முன்னும் பின்னும் ஆடுவதைத் தரையிலிருந்து நோக்கும் போது அதன் உருவ அமைப்பு ஓர் உலோகத் தோணியின் அடிக்கட்டை போன்றிருந்தது. அதன் மீது படியும் வெண்பனியை அகற்றுவதே விமானப்பணியாளருக்கு அரும்பாடாயிருந்தது.

விமானத்தின் தொங்கு கூண்டினின்றும் வெளியே குனிந்துகொண்டு காப்டன், கீழே நின்று கொண்டிருந்த ஆர்த்தூர் லெவீயை நோக்கிக் கத்தினான்:

''எந்த இழவிற்காக நாம் காத்துக் கொண்டிருக்கோம்? நாம் புறப்பட்டாகணும். ஆள்களுக்குச் சாவு வேலைசெய்து கொண்டிருக்கு!''

லெவீ பல்லைக் கடித்துக் கொண்டு பதிலளித்தான்:

''திரும்பவும் நீவோடு பேசினேன். எப்படியானாலும் பையனைக் கொண்டு வரும்படி கட்டளை வந்துள்ளது.''

''கம்பம் தாங்காது...''

லெவீ மட்டுமே தோள்களைக் குலுக்கிக்கொண்டான். உண்மையில், அந்தப் பையன் ஒரு பொருட்டாக இல்லை. இராப்பொழுதில் இவான் காணாமல் போய்விட்டான். ஒருவரும் அவனைப் பற்றி எண்ணவில்லை. விடியற்காலையிலேயே வந்து, திறப்புக்கு மேல் வெண்பனி மேகங்களிடையே வட்டமிட்ட பலூன் விமானத்தைக் கம்பத்துடன் பிணைப்பதில் அவர்கள் சுறுசுறுப்புடன் இருந்தனர். பிறகு உணவுப் பொருள்களை இறக்கினர். (ஆர்த்தூர் லெவீயின் ஆராய்ச்சிக் குழுவிலிருந்த ஆள்கள் போதுமான

அளவு பண்டங்களும் நல்ல ஊதியமும் தங்களுக்குத் தரப்படாவிட்டால் பலூன் விமானத்தை வெடிகுண்டால் தகர்த்துப் பிளந்துவிடுவதாக அறிவித்தனர்.) பையன் காணப்படவில்லை என்பதை லெவீ முதலாவதாகக் கேட்டபோது, கையை அலைத்து, பிரமாதமில்லை என்றான்.

எனினும், நிலைமை மிகவும் மோசமாக மாறியது.

பலூன் விமானத்தின் தொங்கு கூண்டில் முதலில் நுழைந்தவன் மாந்த்ஸெவ். ஒரு நிமிடத்திற்குப் பின்னர், எதுவோ அவனை வருத்துவதாகத் தோன்ற, அலுமினிய ஏணிவழியே திரும்பக் கீழே இறங்கி தங்கிடத்திற்கு நகர்ந்து சென்றான். அங்கிருந்து, நம்பிக்கையிழப்பை அறிவிக்கும் கூக்குரல் திடீரென்று வந்தது. பைத்தியக்காரனைப் போலக் கைகளை அலைத்துக்கொண்டு, வெண்பனிப்படலத்திற்குள்ளிருந்து மாந்த்ஸெவ் தோன்றினான்.

''என்னோட தகரப்பெட்டி எங்கே? என்னோட காகிதங்களை யார் திருடியது?... நீ, நீ அவற்றைத் திருடிட்டே, டேய் போக்கிரி!''

லெவீயின் கோட்டுக் கழுத்துப் பட்டையைப் பிடித்துக்கொண்டு, வன்மையோடு அவனைக் குலுக்க அவனது குல்லாய் கீழே விழுந்தது.

எந்த மதிப்பிட இயலாத காகிதங்களுக்காக பலூன் விமானம் வந்ததோ அவை அந்தக் கொட்ட பயனால் திருடப்பட்டன என்பது தெளிவாயிற்று.

''என்னோட காகிதங்கள்! என்னோட சூத்திரங்கள்!'' என வெறிகொண்டு கத்தினான் மாந்த்ஸெவ். 'அவற்றைத் திரும்பப் புனைய மனித மூளைக்குத் திறமையில்லை!.. காரினுக்குக் கொடுக்க என்னிடம் என்ன இருக்கு?.. நான் எல்லாத்தையும் மறந்துட்டேன்!..''

அப்பையனைத் தேடிப்பிடிக்க லெவீ உடனே ஒரு தேடு குழுவை அனுப்பினான். ஆள்கள் முணங்கினர், ஒரு சிலர்தான் போக ஒப்புக்கொண்டனர். சைத்தான் பாறைப்பக்கம் அவர்களை மாந்த்ஸெவ் கூட்டிச்சென்றான். நகங்களைக் கடித்துக்கொண்டு

விமானக் கூண்டினருகில் நின்றவாறு லெவீ தங்கி விட்டான். நீண்ட நேரம் கடந்து விட்டது. தேடு குழுவிலிருந்து இருவர் திரும்பினர்.

''நகர முடியாத அளவுக்கு அங்கே பனிப்புயல் வீசுது.''

''மாந்த்லெவை என்ன செய்தீங்க?''

''கடவுளுக்குத் தெரியும்... அவன் பின்னே தங்கி விட்டான்...''

''போய், மாந்த்லெவையும் பையனையும் கண்டு பிடிங்க. அவர்கள் ஒவ்வொருத்தருக்காகவும் பத்தா யிரம் தங்க நாணயங்கள்.''

மேகங்கள் இருண்டன, இரவும் நெருங்கியது. காற்றின் வலிமை அதிகரித்தது. விமானக் காப்டன், பிணைப்புக் கயிறுகளை அறுத்துக்கொண்டு பறந்து போய்விடுவதாக மீண்டும் அச்சுறுத்தினான்.

நெடுநேரம் கழிந்த பிறகு, வெண்பனியால் முழு தும் மூடப்பட்டிருந்த மென்மயிர்க் கோட்டு அணிந்த உயரமான ஒருவன், தனது கைகளில் பையனைத் தாங்கியவாறு சைத்தான் பாறைப் பக்கமிருந்து வந்தான். அவனைச் சந்திக்க லெவீ விரைந்து பாய்ந் தான். கையுறையைக் கழற்றிப் பையனின் கோட் டுக்கு அடியில் கையை நுழைத்தான். இவான் உறங்கு வது போன்று தோன்றியது. மார்புடன் ஒரு சிறு தகரப்பெட்டியை அவனது விறைத்த கைகள் அழுத் தியிருந்தன; மாந்த்லெவின் விலைமதிப்பிட இயலாத சூத்திரங்கள் அடங்கிய பெட்டி இதுதான்.

''சிறிது குளிர்ந்திருப்பினும் இவன் இன்னும் உயிரோடு இருக்கிறான்,'' என்று, வெண்பனியடர்ந்த தாடியை அகன்ற முறுவலால் விரித்தவாறு கூறினான் உயரமானவன். ''தேறி விடுவான். அவனை மேலே எடுத்துச்செல்லட்டுமா?''

விடைக்காகக் காத்திராது, விமானக் கூண்டுக்குள் இவானைத் தூக்கிச்சென்றான்.

''இப்ப என்ன?'' என்று மேலே இருந்துகொண்டு கத்தினான் காப்டன், ''நாம் புறப்படலாமா?''

லெவீ தீர்மானமின்றி அவனைப் பார்த்தான்:

''பறப்பதற்குத் தயாரா?''

''ஆகட்டும்,'' எனப் பதிலளித்தான் காப்டன்.

லெவீ இன்னொரு முறை சைத்தான் பாறைப் பக்கம் திரும்பினான். அங்கே, திரைபோலக் கருமேகங்களிலிருந்து பறந்து சுழன்றது வெண்பனி. எல்லாவற்றிற்கும் மேலாக முதன்மையானவை—சூத்திரங்கள்—விமானத்திலிருந்தன.

''போவோம்,'' எனச் சொல்லி, அலுமினிய ஏணியின்மேல் குதித்து ஏறினான். ''கயிறுகளை கழற்றுங்கள்.''

வளைந்த கதவைத் திறந்து, கூண்டின் உள்ளே நுழைந்தான்.

இறங்கு கம்பத்தின் உச்சியில் பணியாளன் விமானத்தைக் கட்டியிருந்த சணற்கயிறுகளைத் துண்டிக்கத் தொடங்கினான். என்ஜின்கள் தடதடவென்று அடித்துக்கொண்டன; சுழல் விசிறிகள் சுழலத் தொடங்கின.

இந்தக் கணத்தில், மாந்த்ஸெவ் வெண்பனிப் புயலால் முன்னே தள்ளப்பட்டு சுழலும் வெண்பனிச் சூறாவளியிலிருந்து வெளிப்பட்டான். காற்றினால் நிமிர்த்தப்பட்டு, அவனது மயிர்கள் குத்திட்டிருந்தன. பறந்து கொண்டிருந்த விமானத்தின் விளிம்பை அவனது நீட்டிய கைகள் பற்றின.

''நிறுத்து! நிறுத்து!'' என்று கம்மலான குரலில் கத்தினான். கூண்டின் அலுமினிய ஏணி தரையிலிருந்து ஒரு கெஜ உயரத்திலிருக்கும் போது, அதனை அவன் பற்றிக்கொண்டான். அருகில் நின்றவரில் பலர் அவனை அகற்றுவதற்காக அவனது மேல் கோட்டைப் பிடித்திழுத்தனர், ஆனால் அவர்களை அவன் உதைந்துத் தள்ளினான். விமானத்தின் உலோக அடிப்பாகம் காற்றில் அலைந்தது. என்ஜின்கள் அடித்துக்கொண்டன. விசிறிகள் உருமிப் பேரொலி செய்தன. சுழலுகின்ற வெண்பனி மேகங்களுக்கிடையே விமானம் மேலே எழும்பியது.

மாந்த்ஸெவ் அடிப்படியை அட்டைபோலப் பற்றிக்கொண்டு தொங்கினான். மிக விரைவில் அவன் மேலே தூக்கிச்செல்லப்பட்டான்... கீழே இருந்த மக்கள் அவனது பரப்பிய கால்களும், பறந்து அடித்துக்

கொண்டிருந்த மேல்கோட்டின் நுனிகளும், வானத்தில் தூக்கிச் செல்லப்படுவதைப் பார்த்தனர்.

எவ்வளவு தொலை அவன் தூக்கிச் செல்லப்பட்டான், எந்த உயரத்தில் தனது பிடியை விட்டுக் கீழே விழுந்தான் என்பதைக் கீழேயிருந்து கவனித்தவர்கள் பார்க்கவில்லை.

. 92

அலுமினியக் கூண்டின் சாளரத்தில் சாய்ந்துகொண்டு தன்னிடமிருந்த தொலைநோக்கி வழியாக ஸோயா நோக்கினாள். பலூன் விமானம் அரிதாக அசைந்தவாறு நீல வானத்தில் வட்டமிட்டது. மூவாயிரத்து முந்நூறு அடிக்குக் கீழே, மாகடலின் நீலப்பச்சை வண்ண நீர், எல்லையற்று விரிந்து கிடந்தது. அதன் நடுவில் ஒழுங்கற்ற வடிவுடைய ஒரு தீவு இருந்தது. மேலே இருந்து பார்க்கும்போது, மிகவும் சிறிய அளவில் செய்யப்பட்ட ஆப்பிரிக்கக் கண்டத்தின் மாதிரி போன்று தோன்றியது. தெற்கு, கிழக்கு, வடகிழக்குக் கரைகளுக்கு அப்பால், கடல் நுரையால் விளிம்பு கட்டப்பட்ட பாறைப்பாங்கான சிறு தீவுகளும் திடர்களும் சிதறு துளிகள் போன்று தோன்றின. மேற்கே கடல் தூய்மையாக இருந்தது.

தீவின் மேற்கில் இருந்த ஆழமான விரிகுடாவில், மணல் நிறைந்த கடற்கரைப் பகுதியின் அருகில், சரக்குக் கப்பல்கள் நங்கூரமிட்டு நின்றன. ஸோயா அவற்றை எண்ணிப்பார்த்தாள்—நீரின் மேற்பரப்பில் ஓய்வு கொண்டிருக்கும் இருபத்து நான்கு வண்டுகள் போன்றிருந்தன.

நாடாக்கள் போன்று, சாலைகள் அத்தீவை ஊடறுத்துக் கிடந்தன. கண்ணாடிக் கூரைகள் வெயிலில் மினுமினுத்த பாறைப் பாங்கான வடகிழக்குப் பகுதியில் அச்சாலைகள் கூடின. மணல் கரையுள்ள சிறு குடாவுக்கு இறங்குவதற்காக மூன்று கட்டுமானங்களுடன் கட்டப்பட்டுக் கொண்டிருந்த அரண்மனை அங்கு இருந்தது.

தீவின் தென் முனையில் ஒரு கட்டட வேலை நடந்து கொண்டிருந்ததை—தூலங்கள், பெரிய உத்

தரங்கள், விட்ட அமைப்புக்கள், கிராதி வைத்த கிரேன்கள், சுமைவண்டிகள் ஓடிக் கொண்டிருக்கும் இருப்புப் பாதைகள்—மேலே இருந்து நோக்கும் போது சிறுவர்களின் 'மெக்கானோ' விளையாட்டுப் பொருள்கள் போன்று ஒரே குழப்பமாய்க் கிடந்தன. காற்றால் இயங்கும் எந்திரங்கள் டஜன் கணக்கில் சுழன்று கொண்டிருந்தன. மின் நிலையம், நீர் இறைக்கும் நிலையம் ஆகியவற்றின் புகைபோக்கிகளிலிருந்து புகை வந்தது.

இந்த அமைப்புக்களின் மையத்தில் ஒரு சுரங்கத் துளையின் வட்டமான கரிய திறப்பு இருந்தது. உள்ளே இருந்து அகழ்ந்தெடுக்கப்பட்ட பாறையை கடலுக்கு ஏற்றிச்செல்லும் அகன்ற எஃகு கன்வேயர்கள் ஓடின; இன்னும் அப்பால், கடலினுள்ளே, அகழ்வாரிகள் கொண்ட செந்நிற மிதவைப் பாலங்கள், செம்புழுக்கள் போன்று காட்சியளித்தன. சுரங்கத் தொளையின் வாய்க்கு மேல் நீராவிப் படலம் இடைவிடாது வந்தவண்ணமாக இருந்தது.

சுரங்கத்தில் இரவும் பகலும் ஆறு முறைமாற்றங்களில் வேலை நடந்தது: காரின் புவிப் புறணியின் கரும்பாறைக் கவசத்தைத் துளைத்துக் கொண்டிருந்தான். இந்த மனிதனுடைய துணிச்சல் பைத்திய நிலையை எட்டியது. சுரங்கத் துளையின் மேலிருந்த மேகத்தை லாமோல் சீமாட்டி நோக்கியபோது, தொலைநோக்கி வெயிலினால் தங்க நிறமடைந்த அவள் கையில் நடுங்கிற்று.

விரிகுடாவையடுத்துத் தாழ்வாயிருந்த கரையோரமாகப் பண்டசாலைகளும், குடியிருப்பு வீடுகளும், நெடுகிலும் நீண்டு கிடந்தன. எறும்பு போன்ற சிறிய உருவமுடைய மக்கள், பொம்மைக் கார்கள், மோட்டார் சைக்கிள்கள் சாலைகளின் நெடுகிலும் இயங்கின. தீவின் நடுவில் ஓர் ஏரி நீல நிறத்தில் ஒளிர்ந்தது, அதிலிருந்து ஒரு சிற்றாறு தென்புறத்தில் நெளிந்து சென்றது. அதன் கரைகளில் வயல்களும் காய்கறித் தோட்டங்களும் இருந்தன. தீவின் கிழக்குச் சரிவு முழுவதும் மரகதப் பச்சையாயிருந்தது—அங்கே, கால்நடை மந்தைகள், வேலியிட்ட

புல்வெளிகளில் மேய்ந்து கொண்டிருந்தன. தீவின் வடகிழக்கு மூலையிலிருந்த அரண்மனைக்கு முன் புறம், பாறைகளுக்கு நடுவே, பூப்பாத்திகளின் பிர காசமான விரிப்புகளும் மரத் தோட்டங்களும் இருந் தன.

ஆறு மாதங்களுக்கு முன் அத்தீவு பொட்டல் வெளியாக, முரட்டுப் புல்லும், கடலுப்புடன் சாம்பல் நிறமுற்ற கற்களும், கரளைப் புதர்களும் கொண்டு இருந்தது. ஆயிரக்கணக்கான டன்கள் நிறையுள்ள வேதியல் உரங்களை அத்தீவிற்கு நீராவிக்கப்பல்கள் கொணர்ந்து கொட்டின. ஊற்றுக் கிணறுகள் தோண் டப்பட்டன, கடலுக்கு அப்பாலிருந்து செடிகளும் மரங்களும் கொணரப்பட்டன.

மாகடலின் நடுவில் பேணுவாரற்றுக் கிடந்த அந் தத் துண்டு நிலம், செழிப்பும் தளதளப்பும் கொண்டு அலைகளின் வெண் நுரையால் வருடப்படுவதை ஸோயா ஆகாயக்கப்பலின் கூண்டிலிருந்து நோக்கி, கையில் விலைமிக்க இரத்தினத்தை வைத்திருக்கும் பெண் போல அதை வியந்து மகிழ்ந்தாள்.

93

ஒருகாலத்தில் உலகில் ஏழு அற்புதங்கள் இருந்தன. நாள்தோறும் ஸோயா மீண்டும் மீண்டும் சொல்லும் பழக்கம் போன்று, பொன் தீவிலுள்ள சுரங்கம் எட் டாவது அற்புதமாகக் கருதப்பட வேண்டும். அரண் மனையில், அண்மையிலே கட்டி முடிக்கப்பட்ட, கடற்காற்று வருவதற்காகத் திறந்திருந்த பெரிய சன் னல்கள் கொண்ட கூடத்தில் பகலுணவு கொள்ளும் போது ஸோயா தன் மதுக் குவளையை உயர்த்தி னாள்:

''அற்புதம், மேதை, வீரசாகசம் ஆகியவற்றை வாழ்த்திக் குடிப்போம்!''

தீவிலிருந்த பொறுக்கியெடுத்த சமூகம் முழுதும் எழுந்து நின்று ஸோயாவையும், காரினையும் பாராட் டியது. அசுர வேகத்தில் நடைபெறும் வேலையா

லும், மிகக் கற்பனையான திட்டங்களாலும் அவர்களனைவரும் ஆட்கொள்ளப்பட்டிருந்தனர். உரிமைகள் மீறப்பட்டுவிட்டது பற்றிக் கண்டங்களிலுள்ளோர் ஊளையிடட்டும். அது பொருட்படுத்தக்கது அல்ல. இங்கே, தரைக்கடியில் பகலிலும் இரவிலும் உருமிக்கொண்டிருந்தது சுரங்கம். உயரத் தூக்கிகளோடு இணைக்கப்பட்டுள்ள அகழ்வாரிகள் என்றும் குறையாத தங்கத்தை நோக்கி மேன்மேலும் ஆழமாகக் குடைந்தவாறு முழங்கின. சைபீரியத் தங்க வயல்கள், காலிபோர்னியாவின் மலைப்பள்ளங்கள், க்ளாண்டைக்கின் வெண்பனிப் பாழ்பரப்புகள் ஆகியவை, அற்பக் குடிசைத் தொழில்களாகும். இங்கேயோ எவ்விடத்திலும், காலடிக்குக் கீழ், தங்கம் இருந்தது. கரும்பாறையினூடே குடைந்து தோண்டிக்கொதிக்கும் ஆலிவீன் பட்டையின் மேற்படிவுகளைக் கடந்துசெல்வது மட்டுந்தான் தேவையானது.

துரதிருஷ்டம்பிடித்த மாந்த்ஸெவின் நாள்குறிப்புக்களிலே பின்வரும் குறிப்பை காரின் கண்டான்:

''தற்போதைய சகாப்தத்தில், அதாவது நான்காவது பனிக்கட்டிக் காலம் முடிந்து, மயிரடர்ந்த தோல் இல்லாததும் பின்னங்கால்களால் நடக்க வல்லதும், பலவித ஒலிகளை உச்சரிப்பதற்கு ஏற்றவாய்க்குழி அமைப்பு பெற்றுள்ளதுமான விலங்கினம் ஒன்று அளவற்ற விரைவுடன் பல்கிப் பெருகத் தொடங்கியிருக்கும் சமயத்தில், பூமி உருண்டை கீழ்க்கண்டதோற்றத்தை நமக்குக் காட்டுகிறது.

''மூன்று முதல் பதினாறு மைல்கள் வரை தடிப்பு வேறுபாடுகளுடன் கல்லாக இறுகப்பட்ட கரும்பாறைகளும், டையோரைட் எனப்படும் படிகப் பரல்களும் சேர்ந்திருப்பது, தரையின் மேல் மூடியாகும். இந்த ஓட்டின் மேற்புறம், அழிந்து போன தாவரங்கள் (நிலக்கரி), விலங்கினங்கள் (எண்ணெய்) ஆகிய கடல் படிவுகளால் போர்த்தப்பட்டிருக்கிறது. இந்த ஓட்டிற்கும் அடியில் பூமி உருண்டையின் இரண்டாவது மூடி, உருகிய உலோகங்களாலானது, இருக்கிறது. ஆலிவீன் பட்டை என்பதுதான் அது.

''சில இடங்களில், எடுத்துக்காட்டாக, பசிபிக் மாகடலின் சில பகுதிகளில், தரையின் மேற்பரப்பிற்கு அருகில், கிட்டத்தட்ட மூன்று மைல் ஆழத்திலேயே ஆலிவீன் பட்டை கிடக்கிறது.

''இந்த இரண்டாவது உருக்குலோக மூடியின் திண்மை இக்காலத்தில் அறுபது மைல்களுக்கு மேலாகும். ஒவ்வொரு நூறாயிரம் ஆண்டுகளுக்கு அரை மைல் வீதம் இது அதிகரிக்கிறது.

''உருகிய ஆலிவீன் பட்டையின் மூன்று படிவுகள் வேறு பிரித்துக் காட்டப்பட வேண்டும்: மேற்படிவு, தரையின் மேற்புறணிக்கு மிகமிக நெருக்கமாக அமைந்துள்ளது, எரிமலையின் செயலால் தூக்கி எறியப்படும் சாம்பலும் குழம்பும் நிறைந்திருக்கிறது; இரண்டாவது படிவு ஆலிவீன், இரும்பு, நிக்கல் ஆகியவை கலந்தது, அதாவது இலையுதிர் கால இரவுகளில் வானின்று விழும் எரிகற்களில் கலந்துள்ள பொருள்களாம்; மூன்றாவதும் கடைசியும் ஆகிய படிவில் தங்கம், பிளாட்டினம், ஸிர்கோனியம், காரீயம், பாதரசம் ஆகியன அடங்கியிருக்கின்றன.

''ஆலிவீன் பட்டையின் இந்த மூன்று படிவுகளும், ஒரு மெத்தை போன்ற மென்பொருளின் மீது நன்கு தங்கியுள்ளன. அப்பொருள்தான் ஹீலியம் வாயு. அது இறுகி திரவ நிலையில் உள்ளது. அணுச் சிதைவினால் உண்டான பொருள் அது. இது உறுதிப்படுத்தப்பட்டு உள்ளது.

''இறுதியாக, நீர்த்த வாயுப் படலத்தின் அடியில், புவிக்கரு இருக்கிறது. அது திண்மையானது, உலோகம் கலந்ததாகவும் உள்ளது. அதன் வெப்பநிலை—273° செண்டிகிரேட், அதாவது, அண்டவெளியின் வெப்பநிலை ஆகும்.

''புவிக்குரு, எடைமிக்க, கதிரியக்க உலோகங்களைக் கொண்டிருக்கிறது. அவற்றுள் நமக்குத் தெரிந்த இரண்டு உலோகங்கள், மெந்திலேயெவின் அட்டவணையின் இறுதியில் உள்ள யுரேனியமும், தோரியமும் ஆகும். எனினும், அவைகளும் அடிப்படையான, ஓர் அமித எடையுள்ள உலோகத்தின்


அணுச்சிதைவால் விளைந்தவையாம். அவ்வுலோகம் இதுவரை மனிதனுக்குத் தெரியாதது.

''இந்த உலோகத்தின் தடங்களை எரிமலையி னின்றும் வெளிப்படும் ஆவிகளில் கண்டேன். அது தான் M என்ற உலோகம். பிளாட்டினத்தைவிடப் பதினோரு மடங்கு எடை மிகுந்தது. ராட்சசக் கதிரியக்க ஆற்றல் கொண்டது. இவ்வுலோகத்தில் ஒரு கிலோகிராம் அளவு தரையின் மேற்பரப்புக்குக் கொண்டுவரப்பட்டால், ஏழு மைல் சுற்றளவில் உள்ள எல்லா உயிரிகளும் கொல்லப்படும். அதன் கதிர்வீச்சுக்கு உள்படும் ஒவ்வொரு பொருளும் ஒளி ரும் தன்மையடையும்.

''புவிக்கருவின் ஒப்படர்த்தி, இரும்பின் ஒப்ப டர்த்தி போலவே, எட்டு அலகுகள் மட்டுமே கொண் டது என்பது புவிக்கரு இரும்பாலானது என்ற தவ றான எண்ணத்துக்கு எப்போதும் கொண்டுவந்திருக் கிறது ஆதலால், M என்னும் உலோகம் புவிக்கருவில் ஒரு மில்லியன் வாயுமண்டல அழுத்தத்தின் கீழ், புரையோடிய நிலையில் இருக்க முடியாது ஆதலால், ஒரே முடிவுக்கு வருவது அவசியமாகிறது:

''புவிக்கரு M என்ற உலோகத்தால் ஆன, உள்ளே வெற்றாயிருக்கும் உருண்டை அல்லது குண்டு. அளவு கடந்த அழுத்தம் காரணமாகப் படிக நிலையிலிருக் கும் ஹீலியம் அதற்குள் நிறைந்திருக்கிறது.

''இது பூமியினுடைய குறுக்கு வெட்டுத் தோற்றம்:



A— புவிப் புறணி, கடல் படிவுகள்
B— ஆலிவீன் பட்டை
C— திரவ ஹீலியம்
D— 'M' என்ற உலோகத்தாலான கரு
E— படிக ஹீலியம்

''புவிக்கருவாக அமைந்துள்ள M என்னும் உலோகம் இடைவிடாது அணுச்சிதைவுற்று வேறு எடை குறைந்த உலோகங்களாக மாறியவாறு அபரிமித அளவுகளில் வெப்ப ஆற்றலை விடுவித்துக் கொண்டிருக்கிறது. புவிக்கருவின் வெப்பம் வளர்ந்து கொண்டிருக்கிறது. ஆயிரம் மில்லியன் ஆண்டுகள் கழிந்த பின், பூமி உள்ளும் புறமும் வெப்புற்று, ஒரு வெடிகுண்டு போன்று வெடித்து, திங்களின் சுற்றுப்பாதை அளவு பரந்த வாயு உருண்டையாக மாறி, சிறு விண்மீன் போன்று ஒளிரும், மீண்டும் குளிரத் தொடங்கிச் சுருங்கி, நமது பூமி உருண்டையின் இன்றைய உருவ அளவைப் பெறும். மீண்டும் உலகில் உயிர் தோன்றும், ஆயிரம் மில்லியன் ஆண்டுகளுக்குப் பின் மீண்டும் மனிதன் தோன்றுவான், மனித இனத்தின் விரைந்த வளர்ச்சியும் உயர்ந்த சமூக அமைப்புக்கான போராட்டமும், மீண்டும் முழுவதும் தொடங்கி நடைபெறும்.

''இன்னும் ஒரு முறை, அணுச்சிதைவினால் பூமி இடைவிடாது சூடுற்று மீண்டும் வெடித்து சிறு விண்மீனாகும்.

''இது பூமியின் வாழ்க்கை வட்டம். முடிவற்ற எண்ணிக்கையுள்ள இத்தகைய வட்டங்கள் நிகழ்ந்திருக்கின்றன, இனியும் முடிவற்ற எண்ணிக்கையில் வரவிருக்கின்றன. சாவு இல்லை. என்றும் உள்ள புதுப்பித்தல் தான் உள்ளது...''

மாந்த்லெவினுடைய நாள்குறிப்பில் காரின் படித்தது இதுதான்.

94

சுரங்கத் தொளையின் மேல் விளிம்புகள் இரும்புத் தகடுகளால் மூடப்பட்டன. சுரங்கம் ஆழமாக நீண்டவுடன், உயர்ந்த எஃகினாலான தடித்த நீளுருளைகள், சுரங்கக் குடைவின் ஆழத்துக்குப் பொருந்த இறக்கப்பட்டன. வெப்பம் முந்நூறு டிகிரிக்கு உயர்ந்த இடம் வரை குடையப்பட்டது. வெப்ப உயர்வு, மேற்பரப்பிலிருந்து மூன்று மைல் ஆழத்தில்

திடீரென நிகழ்ந்தது. ஒரு முறைமாற்றில் வேலை செய்த அனைவரும், இரு ஹைபர்பாலாயிடுகளும் அழிந்து போயின.

இதுவரை ஏற்பட்ட முன்னேற்றத்தால் காரின் மன நிறைவு கொள்ளவில்லை. நீளுருளைகளைக் கீழிறக்கி முட்டுக் கொடுத்து வலுப்படுத்துவது வேலையைத் தடைப் படுத்தியது. இப்போது சுரங்கக் குடைவின் சுவர்கள் பழுக்கக் காய்ந்ததும் அழுத்தக் காற்றினால் குளிர்விக்கப் பட்டன. ஆறியதும் இச் சுவர்கள் விறல் மிக்க கவசம் ஆயின. இவை குறுக்கில் அமைத்த முட்டுத் தூண்களால் வலுவூட்டப்பட்டன.

சுரங்கம் மிக அகலமாக இல்லை, குறுக்களவு அறுபது அடி மட்டுமே இருந்தது. அதன் உள்பகுதி சிக்கல் நிறைந்திருந்தது. காற்றோட்டக் குழாய் அமைப்புக்கள், உத்தரங்கள், விட்டங்கள், கம்பிகள், கடின அலுமினியக் கிணறுகள்—அவற்றுக்குள் உயரத் தூக்கிகளின் தோண்டுகரண்டிகள்,—ஓர் உயரத்தூக்கியிலிருந்து மற்றொன்றுக்குச் செல்ல மட்டமேடைகள், திரவக்காற்றுப் பொறிகளும் ஹைபர்பாலாயிடுகளும் அமைந்த மட்டமேடைகள் ஆகியவை இயங்கின.

சுமைதூக்கி லிப்டுகளும், உயரத்தூக்கிகளும், பிற எந்திரங்களும், எல்லாம் மின்னாற்றலால் இயக்கப் பட்டன. சுரங்கத்தின் பக்கங்களிலே, பொறிகளை வைப்பதற்கும், தொழிலாளர்கள் ஓய்வு பெறுவதற்கும் குகைகள் குடையப்பட்டன. பிரதானச் சுரங்கத்தின் வேலைச் சுமையைக் குறைப்பதற்காக அதனுடன் ஒரு போக்காக பத்தொன்பது அடி விட்டமுள்ள இரண்டாவது சுரங்கம் வெட்டப்பட்டது. காற்றழுத்தத் துப்பாக்கிக் குண்டு வேகத்தில் செல்லும் லிப்டுகளால் அது குகைகளை இணைத்தது.

மிக முக்கியமானதான குடைதல் வேலை ஹைபர்பாலாயிட் கதிர்கள், திரவக்காற்றால் குளிர்விக்கும் அமைப்பு, பாறைகளை அப்புறப்படுத்திய உயரத் தூக்கிகள் ஆகியவற்றின் கூட்டுச் செயலால் நடத்தப் பட்டது. ஷாமோனீட் முனைகளையுடைய வளைந்த மின் விளக்குகளிலிருந்து வேண்டிய ஆற்றலைப்

பெற்றவையும், இவ்வேலைக்கென்றே தனிப்பட்ட முறையில் செய்யப்பட்ட பன்னிரண்டு ஹைபர்பாலாயிடுகள் பாறையினுள் ஊடறுத்து அதனை உருக்கின; திரவக்காற்றின் ஓட்டத்தால் உடனே அது குளிர்விக்கப்பட்டு, சிறு துண்டுகளாகச் சிதைந்து, உயரத்தூக்கிகளால் அள்ளி வெளியேற்றப்பட்டது. எரிவுக் கழிவுகளும் நீராவியும் காற்றுப் போக்கிகளால் அப்புறப்படுத்தப்பட்டன.

95

ஸோயாவின் கற்பனைத் திட்டங்களின்படி தீவின் வடகிழக்குக் கோடியில் அரண்மனை கட்டப்பட்டது.

எஃகு, கண்ணாடி, செந்நிறக்கல், சலவைக்கல் ஆகியவற்றால் கட்டப்பட்ட பெரிய நிலையம் அது. பெரியவையும் சிறியவையுமாக ஐந்நூறு அறைகள் அதில் இருந்தன. சலவைக்கற்களால் அமைக்கப் பட்ட, விரிந்த இரண்டு மாடிப்படி வரிசைகளையுடைய அரண்மனை முகப்பு, கடற்கரையிலிருந்தே நேரே எழும்பியது. கீழ்ப்படிகளில் அலைகள் மோதின. படிக்கட்டுப் பக்கச் சுவர்கள் மீது வழக்கமாக நிறுவப்படும் சிலைகள் அல்லது பூத்தொட்டிகளுக்குப் பதிலாக வெண்கலக் கிராதிகள் வைத்த நான்கு சிறு கோபுரங்கள் உச்சியில் பொன்முலாம் பூசிய கலசக் குண்டுகளுடன் நின்றன. கடற்புறத்திலிருந்து அணுகு வழிகளைக் காப்பதற்காக ஹைபர்பாலாயிடுகள் இக் கோபுரங்களில் ஆயத்தமாக வைக்கப்பட்டிருந்தன.

மாடிப்படிகள் திறந்த மேல்தளத்திற்குக் கொண்டு சென்றன. அங்கிருந்து மாளிகையின் உள்ளே செல்வதற்கு, சதுரத்தூண்கள் கொண்ட இரண்டு ஆழ்ந்த தோரணவாயில்கள் இருந்தன. முழுதும் கல்லாற்கட்டப்பட்ட, பழங்கால எகிப்தியக் கட்டட முகப்புக்கள் போன்று சற்றே சாய்ந்த அம் முகப்பு, எளிமையான புனைவுகளும், நெடிய குறுகிய சன்னல்களும், தட்டையான கூரையும் கொண்டு கடுகடுப்பான இருண்ட தோற்றத்தைத் தந்தது.

இதற்கு மாறாக, உள்முற்றத்தை நோக்கியிருந்த மற்றைய முகப்புக்கள் ஆடம்பரமாகவும், மயக்கும் வகையிலும் கூட, புனைவுகளைக் கொண்டிருந்தன. அம்முற்றத்தில் ரோஜாக்கள், வெர்பெனாக்கள், ஆர்க்கிடுகள் முதலிய பல்வகை மலர்ச்செடிகளும் வாதுமை போன்ற மரவகைகளும் நிறைந்த தோட்டம் இருந்தது.

இரு வெண்கல வாயில்கள் தீவின் நடுப்பகுதிக்கு இட்டுச்சென்றன. கோட்டை மாளிகை இது. அதன் பக்கத்தில் நெடிய பாறை மீது, ஐந்நூறு அடி உயரமுள்ள கிராதிவைத்த கோபுரம் ஒன்று நின்றது. காரின் படுக்கையறையிலிருந்து அக்கோபுரத்திற்குத் தரைக்கும் கீழே ஒரு வழி இருந்தது. அக்கோபுரத்தின் உச்சியில் ஒரு மேடையின்மேல் ஆற்றல் மிக்க ஹைபர்பாலாயிடுகள் நின்றன. இரும்பு மூடியுடைய லிப்டு ஒன்று தரையிலிருந்து அம்மேடைக்குச் சில நொடிகளில் காரினைத் தூக்கிச்செல்லும். எல்லாரும், ஸோயாவுங் கூட, அக்கோபுரத்தின் அடியை நெருங்கினால், உயிரிழப்பர் என்று தடுக்கப்பட்டிருந்தனர். பொன் தீவின் முதற் சட்டம் இது.

ஸோயாவினுடைய அறைகள் அரண்மனையின் இடப்புறத்தில் அமைக்கப்பட்டிருந்தன. வலப்புறத்தில் காரின், ரோல்லிங் ஆகியோரது அறைகள் இருந்தன. வேறு எவரும் அங்கு வசிக்கவில்லை. உலக முழுதும் ஆளும் நங்கையின் ஒளி விரிகின்ற முகத்தை நாக்குவதற்காகப் பொன் தீவிற்கு அழைக்கப்படும் பாரேனும் ஒரு மனிதனுக்கு, நல் வாய்ப்பாக அமைக்கூடிய அந்தப் பொழுதிற்காக, அந்த அரண்மனை ஒதுக்கிவைக்கப்பட்டிருந்தது.

இந்தப் பாத்திரத்தை வகிக்க ஸோயா தன்னைத் தயார்படுத்திக் கொண்டிருந்தாள். அவளுக்கு வேலை தலைக்குமேல் இருந்தது. காலையில் அவள் துயில் எழுவது, அரண்மனையில் காட்சி தருவது, சிறிய பெரிய வரவேற்புகள், பகல் உணவுகள், இரவில் பேருணவுகள், வேட ஆட்டங்கள், களியாட்டங்கள் ஆகிய இவற்றுக்கான சம்பிரதாயங்கள் ஏற்படுத்தப்பட்டன. அவளுடைய நடிகை மனப்பான்மை

விரிவாக வளர்ந்தது. உலக அரங்கிற்காகத் தான் பிறந்துள்ளதாகப் பல முறை சொல்ல அவள் ஆசைப் பட்டாள். சம்பிரதாய மேற்பார்வையாளனாக ருஷ்ய அகதியான புகழ்மிக்க பாலே நடனக் கூத்து அமைப்பாளன் ஒருவன் அமர்த்தப்பட்டான். ஐரோப் பாவில் அவனுடன் ஓர் உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது. 'தெய்வீக ஸோயா'வின் விருது (வெண்ணிற நாடாவில் பொன்னும் வைரங்களும் பதிக்கப்பட்டது) அவனுக்கு வழங்கப்பட்டது; அவ னுக்குப் 'பஸ்தேல்நிச்சி'(படுக்கையறைப் பெருமகன்) என்ற பழமையான ருஷ்யப் பட்டமும் வழங்கப்பட் டது.

இந்த உள், அரண்மனைச் சட்டங்களைத் தவிர, அவளும் காரினும் சேர்ந்து, வருங்கால மனித இனத் தின் சட்டங்களாகிய 'பொற்காலத்தின் கட்டளை கள்' என்பதை எழுதினர். சட்டவல்லுநர்களால் பிறகு சீரமைக்கப்பட வேண்டிய அடிப்படையான கருத்துக்களின் பொதுவான திட்டங்களே அவை. காரின் அசுர வேகத்தில் மும்முரமாக இருந்ததால் அவனுக்காக ஸோயா நேரத்தை ஒதுக்க வேண்டியிருந் தது. அவளது அலுவலறையில் பகலும் இரவும் எப் போதும் சுருக்கெழுத்துக்காரி இருவர் பணியாற்றி னார்கள்.

அலுத்துக் களைத்து, அழுக்கடைந்து, மண் வாடையும் எந்திர எண்ணெய் நாற்றமும் வீச காரின் சுரங்கத்திலிருந்து நேராக வருவான். விரைவாக உண்பான், காலணிகளைக் கழற்றாமலே ஸாடின் சோபாவில் படுத்துக்கொள்வான். விரைவில் சுங்கான் புகைப்படலத்தால் மூடப்பெறுவான் (எல்லாவகை யான சம்பிரதாயங்களுக்கும் மேற்பட்டவனாகக் கருதப்பட்டான், அவனது பழக்கவழக்கங்கள் தெய் விகமானவையும் மற்றவர் பின்பற்றத்தக்கவையும் அல்ல எனக் கருதப்பட்டன). தனது மெல்லிய விரல் களால் கழுத்துமாலையின் பெரிய முத்துக்களை நெ ருடிக்கொண்டே ஸோயா கம்பளத்தின்மேல் இங்கு மங்கும் நடந்தாள். காரினைப் பேசவைக்க முயன்று கொண்டிருந்தாள்.

அவன் கூறிய எண்ணங்களை, அந்தச் சுருக்கெழுத்துக்காரிகள் எழுதிக்கொண்டனர். இரவில் அவற்றை முழுதும் தட்டெழுத்தில் பதித்து மறுநாள் காலையில் லாமோல் சீமாட்டி படுக்கையிலிருக்கும் போது கொடுத்தனர்.

சில குறிப்பிட்ட விஷயங்களில் வல்லவன் என்ற முறையில் சில பொழுது ரோல்லிங் அழைக்கப்பட்டான். இன்னும் முழுதும் முடிக்கப்படாத ஆடம்பரமான அறைகளில் அவன் வாழ்ந்தான். உணவு நேரங்களில் மட்டும் தனது அறைகளை விட்டு நீங்கினான். அவனது நெஞ்சு உரமும் செருக்கும் உடைந்துபோயின. கடந்த ஆறு மாதங்களில் அவன் பெரிதும் மாறிவிட்டான். காரினிடம் அச்சம் கொண்டான். ஸோயாவுடன் தனித்திருப்பதைத் தவிர்க்க முயன்றான். நாள் முழுதும் அவன் என்ன செய்தான் என்பது ஒருவருக்கும் தெரியாது. (அது பற்றி எவரும் கவலையும் படவில்லை). அவன் தனது வாழ்க்கையில் ஒருபோதும் ஒரு புத்தகங்கூடப் படித்ததில்லை. குறிப்புக்கள் எழுதுவதும் கிடையாது. சுங்கான்களைச் சேகரிப்பதில் பேரார்வம் கொண்டிருந்தான் எனச் சொல்லப்பட்டது.

ஒரு நாள் மாலை ஸோயா சன்னலுக்கு வெளியே நோக்கியபோது, நீருக்கு அருகில், சலவைக்கல் படிக்கட்டில் கடைசிக்கு முந்திய படியில் ரோல்லிங் அமர்ந்து கொண்டிருப்பதைப் பார்த்தாள். பத்துக் கோடியாண்டுகளுக்கு முன், மனித உருவமுடைய பல்லி வடிவில், தனது முன்னோன் வெளி வந்திட்ட கடலை ஏக்கத்துடன் நோக்கிக் கொண்டிருந்தான். அந்தப் பெரிய வேதியல் மன்னனிடம் எஞ்சியிருந்தது இவ்வளவுதான்.

முப்பது கோடி டாலர் இழந்ததோ, பொன் தீவில் சிறைவைக்கப்பட்டதோ, ஸோயாவின் துரோகமோ கூட, அவன் உள்ளத்தை உடைத்திருக்காது. அதற்கு இருபத்தைந்து ஆண்டுகளுக்குமுன், ஷூ பாலீஷை அவன் தெருக்களில் விற்றிருக்கிறான். சண்டையை விரும்பினான், எப்படிச் சண்டையிடுவது என்பதை அறிந்திருந்தான். ரோல்லிங் ஆகிய

தனக்குத் தங்க வட்டுகளைக் கொடுக்குமாறு மக்களைக் கட்டாயப்படுத்த, எவ்வளவு முயற்சியும் திறனும் உள்ள உரமும் ஈடுபடுத்தப்பட்டன! ஐரோப்பியப் போரும், அதன்பின் வந்த ஐரோப்பாவின் சீர்குலைவுந்தான், 'ரோல்லிங் அனிலைன்' பணப்பெட்டிகளில் நீர் போன்று தங்கம் ஓடி வந்து நிறைவதற்காக எழுப்பப்பட்ட சக்திகளாம்.

இப்போது இந்தத் தங்கம், ஆற்றலுக்கும் மகிழ்ச்சிக்கும் ஈடான தங்கம், களிமண் அல்லது சேறு போல அகழ்வாரி எந்திரங்களால் கணக்கற்ற அளவுகளில் சுரங்கத்திற்கு வெளியே எடுக்கப்படும். இங்குதான் ரோல்லிங்கின் பாதங்களுக்கு அடியிலிருந்து தரை பெயர்ந்துவிட்டதை உணர்ந்தான், தான் இயற்கையை ஆள்பவன்—'ஹோமோ சாபியேன்ஸ்' என்று உணர்வதை அவன் நிறுத்திக்கொண்டான். எஞ்சியதெல்லாம் சுங்கான்கள் சேகரிப்பது மட்டுமே.

காரினின் வற்புறுத்தலின் பேரில் இன்னும் நாள்தோறும் 'ரோல்லிங் அனிலைன்' நிலைய இயக்குநர்களுக்குத் தன் சித்தத்தை வானொலி மூலம் தெரிவித்து வந்தான். அவர்களது மறுமொழிகள் தெளிவற்றிருந்தன. பொன் தீவில் ரோல்லிங் தானே விரும்பித் தவித்து இருப்பதை இயக்குநர்கள் நம்பவில்லை என்பது தெளிவாகிக் கொண்டிருந்தது.

''கண்டப் பகுதிக்கு நீங்க திரும்பி வருவதை உறுதிப்படுத்த நாங்கள் என்ன செய்ய வேண்டும்?'' என்று அவனை அவர்கள் வினவினார்கள்.

''எனது நரம்புகளுக்குச் செய்யப்படும் மருத்துவ முறை பயனளித்து வருகிறது,'' என்று விடையளித்தான் ரோல்லிங்.

அவனது கட்டளையினால், இன்னும் ஐந்து மில்லியன் பவுண்டு ஸ்டெர்லிங் பெறப்பட்டது. இதற்கு இரு வாரங்கள் கழித்து, அதே மாதிரியான ஒரு தொகை தருமாறு அவன் கட்டளையிட்ட போது, ரோல்லிங்கின் காசோலையைக் கொடுத்த காரினின் முகவர்கள் கைது செய்யப்பட்டார்கள். பொன் தீவிற்கு எதிராகக் கண்டத்தின் தாக்குதலுக்கு முதல்

அறிகுறி இது. 22° தென் அட்சரேகைக்கும் 130° மேற்குத் தீர்க்கரேகைக்கும் இடைப்பட்ட பகுதியில் இருந்த எட்டுக் கப்பல்கள் கொண்ட படை கயவர்களின் தீவைத் தாக்குதற்குக் கட்டளையை எதிர் நோக்கியிருந்தது.

96

பொன் தீவில் இருந்த ஆறாயிரம் வேலையாள்கள் உலகின் எல்லாப் பாகங்களிலிருந்தும் திரட்டப்பட்டவர்கள். காரினின் முதல் துணையாள், ஆளுநர் பட்டம் பெற்ற என்ஜினியர் சேர்மாக் வேலையாள்களைப் பதினைந்து முகாம்களில் அவரவர் தேசிய இனத்திற்கேற்பப் பிரித்துக் குடியிருக்கச் செய்து, ஒவ்வொரு முகாமைச் சுற்றிலும் முள்கம்பி வேலிகளிட்டான்.

ஒவ்வொரு முகாமிலும் இயன்ற வரை அந்தந்த தேசிய இனப் பண்புக்கேற்ப பாளையங்களும் சர்ச்சுகளும் கட்டப்பட்டன. புட்டியிலடைத்த பண்டங்கள், பிஸ்கட்டுகள், பழச்சாறு, முட்டைக்கோஸ் ஊறுகாய் நிறைந்த பீப்பாய்கள், அரிசி, சொறிமீன் ஊறுகாய், ஹெறிங் கருவாடு, இறைச்சிப் பணியாரங்கள் முதலியன பலவும், பொருத்தமான பல மொழிகளில் பெயர் எழுதி (அமெரிக்கத் தொழிற்சாலைகளிலிருந்து) ஒட்டப்பட்டிருந்தன.

அவரவர் தேசிய இன முறைப்படி தைக்கப்பட்ட தொழில் உடைகள் மாதத்துக்கு இரு முறையும், தேசியத் திருவிழா நாள் உடைகள் ஆறு மாதத்துக்கு ஒரு முறையும் வழங்கப்பட்டன— ஸ்லாவியர்களுக்காக மேல்கோட்டும் கால்சட்டையும், சீனர்களுக்காக பருத்திச் சட்டைகளும், ஜெர்மானியர்களுக்காக இடுப்பளவு கோட்டுகளும் உயரமான குல்லாய்களும், இத்தாலியர்களுக்காக பட்டுச்சட்டைகளும் தோல் காலணிகளும், ஆப்பிரிக்கர்களுக்காக முதலைப் பற்களும் மணிகளும் வைத்து அலங்கரிக்கப்பட்ட அரைத்துணிகளும்.

முள்கம்பி வேலியிட்டு, இடையில் மறைத்துத் தனித்துவைத்தது சரியென்று மக்கள் நம்புமாறு செய்ய, ஆத்திரமூட்டும் ஆரவாரக்காரர்களின் குழு சேர்மாக்கினால் அமைக்கப்பட்டது. அத்தகையோர் பதினைந்து பேர் இருந்தனர். ஒருவருக்கொருவர், தேசிய இனப் பகைமை உணர்ச்சிகளைக் கிளப்பிவிடுவதே அவர்களது வேலை: வேலை நாள்களில் குறைவாகவும், ஓய்வு நாள்களில் கைகலப்புகள் நிகழும் வரையிலும் அவர்கள் தூண்டிவிட்டனர்.

புரட்சி எதிர்ப்பு வெண்படை ஜெனரல் வ்ராங்கெலின் கீழ் பணியாற்றிய முன்னாள் அதிகாரிகளிலிருந்து தீவின் போலீஸார் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஸோயா வரிசையினருக்குரிய உடுப்புக்களை அணிந்தனர்: வெள்ளைத்துணியில் தங்க முகப்புத்தையல்கள் உடைய குட்டைக் கோட்டும், பழுப்பு மஞ்சள் நிறக் காற்சட்டையும் தான் அவ்வுடுப்பு. வெவ்வேறு தேசிய இனத்தவரும் ஒருவரையொருவர் அழிக்க விடாதவாறு போலீஸ் படையினர் ஒழுங்கை நிலை நாட்டினர்.

கண்டங்களில் தரப்பெறும் ஊதியத்துடன் ஒப்பிடும் போது மிக அதிகமான அளவில் தொழிலாளருக்குக் கூலி வழங்கப்பட்டது. முதல் நீராவிக்கப்பலிலேயே சிலர் தம் வீட்டிற்குப் பணத்தை அனுப்பினர். மற்றவர், தீவில் இருந்த வங்கியில் சேர்த்து வைத்தனர். விடுமுறை நாள்களில் மட்டும் தீவின் தென் கிழக்குப் பகுதியில் தனித்திருந்த பள்ளத்தாக்கில் குடிப்பொருள் கடைகளும், நிலவுப் பூங்காவும் திறக்கப்பட்டன. இவற்றைத் தவிர வேறு எங்கும் பணம் செலவழிக்க இடமில்லை.

பூமியின் நடுமையத்துக்குத் தாங்கள் தோண்டிக் கொண்டிருக்கும் சுரங்கத்தின் நோக்கத்தை வேலையாட்கள் அறிவர். அவர்கள் வேலை முடிவுற்றுக் கணக்குத் தீர்க்கும்போது, ஒவ்வொருவரும் முதுகில் சுமந்து போகக்கூடிய அளவு தங்கம் கொண்டுசெல்லதான் உரிமை தரப் போவதாக காரின் அறிவித்திருந்தான். பூமியின் வயிற்றினின்றும், பாறைகளைத் தூக்கிச்சென்று கடலுக்குள் எட்டி எறியும் எஃகு கன்வே

யர் நாடாக்களைக் கிளர்ச்சியின்றி நோக்காத ஒருவன், சுரங்கத்தின் வாயிலில் பரவிக் கொண்டிருந்த மஞ்சள் சாயலுள்ள புகையைக் கண்டு மதி மயக்கம் கொள்ளாதவன் எவனும் அத்தீவில் இல்லை.

97

''கனவான்களே, நமது வேலையில் எல்லாவற்றிற்கும் மேலான ஆபத்தான கணத்திற்கு வந்திருக்கிறோம். அதனை நான் எதிர்பார்த்து அதற்கான ஏற்பாடுகளும் செய்துவிட்டேன். ஆனால் அது அபாயத்தைக் குறைக்கவில்லை. நாம் முற்றுகையிடப் பட்டிருக்கிறோம். இப்போதுதான் ஒரு வானொலிச் செய்தி கிடைத்திருக்கிறது: இச்சுரங்கத்தை வலுவுறுத்துவதற்காக வாங்கிய பெரிய எஃகுத் தண்டவாளங்களும், புட்டிகளில் அடைத்த உணவுப் பொருள்களும், பனிப்பதனம் செய்யப்பட்ட இறைச்சியும் நிறைந்த நமது கப்பல்களுள் இரண்டு, அமெரிக்காின் ஒரு போர்க்கப்பலால் கைப்பற்றப்பட்டு, அவை போரில் பெற்ற பரிசுகளாக அறிவிக்கப்பட்டுள்ளன. போர் தொடங்கிவிட்டது என்பதே இதன் பொருள். அதிகாரபூர்வமான அறிவிப்பை நாம் மணிக்கு மணி எதிர்பார்க்க வேண்டும். உடனடியான என்னுடைய குறிக்கோள்களுள் ஒன்று போர் ஆகும். ஆயினும் நான் விரும்பியதற்கு முந்தியே அது தொடங்கிவிட்டது. கண்டப் பகுதியில் உள்ளோர் மிகவும் பதற்றம் கொண்டிருக்கின்றனர். அவர்கள் திட்டத்தை முன்கூட்டியே அறிகிறேன், நம்மைக் கண்டு அவர்கள் அஞ்சுகின்றனர், பட்டினி போட்டு, நம்மைப் பணியுமாறு நிர்ப்பந்திக்க எண்ணுகின்றனர். இத்தீவிலுள்ள உணவு, உயிருள்ள கால்நடைகளைக் கணக்கில் சேர்க்காமல், இன்னும் பதினான்கு நாள்களுக்குப் போதுமானதென்று உங்களது கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அந்தப் பதினான்கு நாள்கள் முடியும் முன்னர், நாம் முற்றுகையை உடைத்து உணவுப்பொருளைக் கொண்டுவர வேண்

டும். இது கஷ்டமானது, ஆனால் சாத்தியமான வேலைதான். இத்துடன், எனது முகவர்கள் ரோல்லிங்கின் காசோலைகளை மாற்றுவதற்குக் கொடுத்த போது கைது செய்யப்பட்டுள்ளனர். நம் கையில் பணம் இல்லை. முந்நூற்றி ஐம்பது மில்லியன் டாலர் கடைசி சென்ட் வரை செலவழிக்கப்பட்டு விட்டன. இப்போதிருந்து இன்னும் ஒரு வாரத்தில் நாம் கூலி கொடுக்க வேண்டும். காசோலையாக கூலி கொடுத்தால், தொழிலாளர்கள் கலவரம் செய்து, ஹைபர்பாலாயிடுகளின் வேலையை நிறுத்தி விடுவார்கள். இதிலிருந்து, இன்னும் ஏழு நாள்களுக்குள் நாம் கட்டாயமாகப் பணம் பெற வேண்டும் என்பது தெரிகிறது.''

இன்னும் கட்டி முடிக்கப்படாத காரினின் அலுவலக அறையில் அந்தி வேளையில் இந்தக் கூட்டம் நடத்தப்பட்டது. சேர்மாக், என்ஜினியர் ஷெபெர், ஸோயா, ஷெல்கா, ரோல்லிங் ஆகியோர் வந்திருந்தனர். ஆபத்தான சமயங்களிலும் அன்றிப் பெருத்த மன இறுக்கம் ஏற்படும் போதும் வழக்கம்போல காரின் தனது பைகளில் கைகளை வைத்துக்கொண்டு நின்று, குதிகாலூன்றி, முன்னும் பின்னும் அசைந்து எள்ளும் முறையில் பேசிக் கொண்டிருந்தான். ஒரு சிறு சுத்தியலைத் தன் கையில் வைத்துக்கொண்டு, ஸோயா கூட்டத்திற்குத் தலைமை தாங்கினாள். சிறுகூடான உடலும் பதற்றமும் அழற்சியுற்ற கண்களும் கொண்ட சேர்மாக் இருமிவிட்டுச் சொன்னான்:

''பொன் தீவின் இரண்டாவது சட்டமாவது: ஹைபர்பாலாயிடின் இரகசியத்தைக் கண்டுபிடிக்க ஒருவரும் முயலக்கூடாது. ஹைபர்பாலாயிட்டின் மூடியைக் கூட யாரேனும் தொட்டால் மரண தண்டனைக்குட்படுவர்.''

''அத்தகையது சட்டம்,'' என்று உறுதிப்படுத்தினான் காரின்.

''நீங்க குறிப்பிட்ட பெரு முயற்சிகள் வெற்றிகரமாகப் பலனளிப்பதை உறுதிப்படுத்துவதற்காகக் குறைந்தது மூன்று ஹைபர்பாலாயிடுகள் தேவைப்

படும்: ஒன்று பணம்பெற, இரண்டாவது முற்றுகையை உடைக்க, மூன்றாவது தீவின் தற்காப்புக்காக. உங்கள் துணைவருள் இருவருக்கு இவ்விதியினின்றும் நீங்க விலக்குத் தரணும்,'' என்றான் சேர்மாக்.

இந்தப் பேச்சைத் தொடர்ந்து அமைதி ஏற்பட்டது. ஆண்கள் தங்கள் சுருட்டுக்களின் புகையைப் பார்த்துக் கொண்டிருந்தனர். ரோல்லிங் ஒரே ஈடுபாட்டுடன் சுங்காலை மோந்தான். காரின் பக்கம் தலையைத் திருப்பினாள் ஸோயா.

''சரி,'' என்று அலட்சியமான சைகையுடன் கூறினான். ''ஆணை வெளியிடுக. இரண்டாவது சட்டத்தின் கட்டினின்றும் விலக்கப்பட்டவர் இத்தீவில் இருவர்: லாமோல் சீமாட்டியும்...''

மேசையின் குறுக்கே அவன் சாய்ந்து, மகிழ்ச்சி பொங்க ஷெல்காவின் தோளில் தட்டினான்.

''அக்கருவியோட இரகசியத்தை நான் நம்பியறிவிக்கும் இரண்டாவது ஆள் ஷெல்கா.''

''அங்கேதான் தவறு செய்றீங்க, தோழரே,'' என்ற ஷெல்கா தனது தோளினின்றும் காரினின் கையை அப்புறப்படுத்தினான். ''நான் அதை மறுக்கிறேன்.''

''எக்காரணங்களால்?''

''நான் விளக்கஞ்சொல்லக் கடமைப்பட்டிருக்கலே. நீங்களே எண்ணிப்பாருங்க, புரிஞ்சுக்குவீங்க.''

''அமெரிக்கக் கப்பற்படையை அழிக்கிற பொறுப்பை உங்ககிட்ட ஒப்படைக்கிறேன்.''

''அருமையான வேலை, தவறு இல்லை. என்னால முடியாது.''

''அட இழவே, ஏன் மாட்டீங்க?''

''ஏனா? ஏனென்றால் அது வழுக்குப் பாதை.''

''சிந்திச்சுப் பாருங்க, ஷெல்கா.''

''பார்த்துக் கொண்டுதானிருக்கேன்.''

காரினின் தாடி முன்னே துருத்தியது, அவனது பற்கள் பளிச்சிட்டன. தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு, மெல்ல வினவினான்:

''உங்க மனசிலே என்ன நினைத்துக் கொண்டிருக்கீங்க?''

''என் வழி, பியோத்தர் பெத்ரோவிச், முற்றிலும் தெரியுந்தானே. நான் எதையும் ஒளிக்கலே.''

இந்தக் குறுகிய பேச்சு ருஷ்ய மொழியிலே நடந்ததால் ஸோயாவைத் தவிர வேறு எவரும் அதைப் புரிந்துகொள்ளவில்லை. தனக்கு முன்னே இருந்த காகிதத்தின்மீது வரைய மீண்டும் தொடங்கினான் ஷெல்கா.

''மிகவும் நல்லது,'' என்றான் காரின். ''ஹைபர் பாலாயிட்டைப் பொருத்து எனக்குத் துணையாக ஒரே ஒருத்தரை—லாமோல் சிமாட்டியை—நியமிக்கிறேன். நீங்க ஒப்புக்கொண்டா, சிமாட்டியே, உங்க விருப்பப்படிச் செலுத்த 'அரிஸோனா' இருக்கு. நாளைக் காலையில் புறப்படுங்க...''

''கடலில் நான் என்ன செய்யணும்னு எதிர்பார்க்கிறீங்க?''

''பசிபிக் மாகடலின் பெருவழியில், உங்க பாதையில் எதிர்ப்படும் ஒவ்வொரு கப்பலையும் கொள்ளையடிங்க. இப்போதிருந்து இன்னும் ஒரு வாரத்தில் வேலையாள்களுக்கு ஊதியம் தந்தாகணும்.''

98

இரவு பதினொரு மணிக்கு, தென் வான்கோள விண்மீன் குழுவின் பின்னணியில் பறந்துகொண்டிருந்த இனந்தெரியாத ஒரு பொருள் வட அமெரிக்கக் கப்பற்படைப் பிரிவின் கொடிக்கப்பலிலிருந்து காணப்பட்டது.

தூமகேதுகளின் வால்கள் போன்ற தேடுவிளக்குகளின் நீலவண்ணக் கதிர்கள் விண்மீன்கள் நிறைந்த வானத்தின் குறுக்கே ஊசலாடி, இனந்தெரியாத அந்தப் பொருள் மீது இறுதியாக நிலைத்து நின்றன. அது பளிச்செனத் தெரிந்தது. நூற்றுக்கணக்கான தொலைநோக்குக் கண்ணாடிகள், அதனுடைய உலோகக் கூண்டையும், விசிறிகளின் ஒளிபுகும் வட்டங்களையும், பலூன் விமானத்தின் உடற்பகுதி மீது இருந்த 'பி.கா.' என்ற எழுத்துக்களையும் ஆராய்ந்தன.

ஒரு கப்பலிலிருந்து இன்னொரு கப்பலுக்கு விளக்குகள் மோர்ஸ் முறைப்படி சிமிட்டிச் செய்தியறிவித்தன. நான்கு கடல் விமானங்கள் கொடிக்கப்பலிலிருந்து கிளம்பி, மேலே விண்மீன்களை நோக்கி உருமிக்கொண்டு சென்றன. கப்பற்படைத் தொகுதி, தனது வேகத்தை அதிகரித்து, ஒரே வரிசையாக அணிவகுத்துச் சென்றது.

விமானங்களின் உருமல் மெலிந்து, தெளிவற்றுப் போயிற்று. அவை எந்த ஆகாயக்கப்பலை நோக்கி விரைந்து கொண்டிருந்தனவோ, அது திடீரென்று மறைந்தது. தொலைநோக்கிகளின் முன் கண்ணாடியைத் துடைக்க ஒவ்வோரிடத்திலும் கைக்குட்டைகள் வெளிவந்தன, ஆனால் ஆகாயக்கப்பலைக் காணத் தேடு விளக்குகள் எவ்வளவு முயன்றும் பயனில்லை. இருண்ட இரவு நேர வானில், ஓரிடத்திலும் அது காணப்படவில்லை.

கடைசியாக எந்திரத் துப்பாக்கிகளின் படபட ஒலியைக் கேட்க முடிந்தது: விமானங்கள் இலக்கைக் கண்டுவிட்டன. திடீரென்று எந்திரத் துப்பாக்கிகள் நின்றன. தீப்பற்றியெரியும் ஈ ஒன்று வானத்தில் வட்டமாகச் சுழன்று பிறகு, கீழே வீழ்ந்தது. தொலைநோக்கிகளின் வழியாகப் பார்த்துக் கொண்டிருந்தவர்கள் பெருமூச்சுவிட்டனர்—கடல் விமானம் ஒன்று விழுந்து, கருநீருள் அமுந்திவிட்டது. என்ன நேர்ந்துவிட்டது?

திரும்பவும் எந்திரத் துப்பாக்கிகள் படபடக்கும் ஒலி வந்தது. ஆனால் திடீரென்று ஒன்றன்பின் ஒன்றாக, எஞ்சியிருந்த மூன்று விமானங்களும், தேடு விளக்குக் கதிர்களின் ஊடே தலைகீழாக வீழ்ந்து, கடலுக்குள் குடைந்து முழுகி மறையவே ஒலி நின்று போனது. கொடிக்கப்பலின் மேல் மோர்ஸ் விளக்குகள் சிமிட்டி. தொடுவானம் வரை எட்டுமளவு விளக்குகள் பளிச்சிட்டன: என்ன நேர்ந்துவிட்டது?

ஒழுங்கற்ற வடிவுடைய கருமேகம் ஒன்று காற்றை எதிர்த்து இயங்கிக்கொண்டு, தங்களுக்கு முற்றிலும் அருகே கப்பல்களின் வரிசைக்கு நேர் கோணத்தில் வருவதை எல்லாரும் அடுத்துக் கண்டனர்.

புகைத்திரையினால் மறைக்கப்பட்டிருந்த பலூன் விமானம் தாழப் பறந்து கொண்டிருந்தது. ''எச்சரிக்கை, புகையாவி,'' என்ற உத்தரவு கொடிக்கப்பலிலிருந்து தரப் பட்டது. விமான எதிர்ப்புப் பீரங்கிகள் முழங்கின. கப்பல் மேல்தளத்திலும், மேடைகளிலும், கவசத்துளைப்புப் பீரங்கி மேடைகளிலும் புகையாவிக் குண்டுகள் ஒரே நேரத்தில் விழுந்தன.

முதல் பலி இருபத்தெட்டு வயது அழகிய இளம் கப்பற்படை அட்மிரல், அதிகச்செருக்குக் காரணமாகப் புகையாவி முகமூடி அணிந்துகொள்ளவில்லை: தொண்டையைப் பிடித்துக்கொண்டு, வீங்கிய, நீலம்பூத்த முகத்துடன், அவன் விழுந்தான். ஆனால், புகையாவி முகமூடிகளும் பயன் தரவில்லை; சில கணங்களில் மேல்தளத்திலிருந்த அனைவரும் இறந்தனர். கொடிக்கப்பல், ஏதோ இனந்தெரியாத புகையாவியினால் தாக்கப்பட்டிருந்தது.

வைஸ் அட்மிரல் தலைமையேற்றான். போர்க் கப்பல்களை வலப்புறம் திருப்பி விமான எதிர்ப்புப் பீரங்கிகளிலிருந்து வெடி கிளப்பினர். மூன்று வேட்டுக்கள் மாகடலை அதிரச் செய்தன. பீரங்கிகளிலிருந்து வெளிவந்த மூன்று நெருப்பு மின்னல்கள் கடல் நிறத்தைக் குருதிச் சிவப்பாக மாற்றின. எஃகுப் பேய்கள் மூன்று, குருட்டுத் தலைகளுடன் வீரிட்டவாறு ஒன்றாகப் பறந்து எங்கோ சென்று வெடித்து விண்மீன் நிறைந்த வானத்தில் ஒளிபரப்பின.

அந்த மூன்று வெடிகளைத் தொடர்ந்து, கடல் விமானங்கள் ஆறு, அவற்றைச் செலுத்தியோர் புகையாவி முகமூடிகள் அணிந்திருக்கப் படைப்பகுதியின் கப்பல்களிலிருந்து மேலே கிளம்பின. இதற்கு முன் சென்ற நான்கு விமானங்களும் ஆகாயக்கப்பலைச் சுற்றியிருந்த, நச்சுப் புகைத் திரையில் அழிந்தன என்பது இப்போது தெளிவாயிற்று. அமெரிக்கக் கப்பற் படையின் பெருமை ஆபத்தில் இருந்தது. கப்பல்களிலிருந்த விளக்குகள் அணைக்கப்பட்டன, விண்மீன்களிலிருந்து மட்டுமே வெளிச்சம் வந்தது. போர்க் கப்பல்களின் எஃகுத் தகட்டுப் பக்கங்களில் மோதிய அலைகளும், விமான என்ஜின்களின் ஒலி

பிசையுமே, அந்த இரவின் அமைதியைக் குலைத்தன.

கடைசியாக! ரட்-ஆ-டட்-டட் — எந்திரத் துப்பாக்கிகளின் இசை வானப் பால்வீதி மண்டலத்தின் வெள்ளி மூடுபனியை விட்டு வெளிவந்தது. பிறகு அவ்விடத்தில் போத்தல்கள் திறக்கப்படுவது போல ஒலித்தது—விமானங்கள் இலக்கைக் குண்டுகளால் தாக்கிக் கொண்டிருந்தன. பழுப்பும், கறுப்பும் கலந்த வண்ணமுடைய மேகம், வானத்தில் வரவர ஒலி பெற்றது: ஒரு பெரிய உலோகச் சுருட்டு, தன் தட்டை மூக்கு கீழ் நோக்கியிருக்க, அதற்கு வெளியே நழுவிற்று. உலோகத்தாலான அதனுடைய பின்புறம் நெடுக, நெருப்பு நாக்குகள் நடனமாடிக் கொண்டிருந்தன. பின்னுக்கு நெருப்பு வால் ஒன்றை விட்டவாறு கீழ்நோக்கிச் சரிந்து அடிவானத்திற்கு மேலாக கொழுந்துகளாக மறைந்து போயின.

அரைமணி நேரத்திற்குப் பிறகு எரியும் பலூன் விமானத்தின் அருகே நெருங்கி, அதனுள்ளும் அல்லது அருகிலும் இருந்த ஒவ்வோர் உயிரியையும் எந்திரத்துப்பாக்கிகளால் சுட்டதாக கடல் விமானங்களில் ஒன்று அறிவித்தது.

இந்த வெற்றி பெரு நஷ்டத்திற்குப் பின்பே அமெரிக்கக் கப்பற்படைக்குக் கிட்டியது: ஊழியர்களுடன் நான்கு கடல் விமானங்கள் அழிந்துபோயின, கப்பற்படை அட்மிரல் உள்பட இருபத்தெட்டு அதிகாரிகளும், நூற்று முப்பத்திரண்டு மாலுமிகளும் நச்சுப் புகையினால் கொல்லப்பட்டனர். இழப்புகள் மட்டும் ஒரு பொருட்டல்ல, ஆனால் கம்பீரமான பீரங்கிகள் கொண்ட சிறந்த போர்க்கப்பல்கள் சிறகிழந்த பெங்க்வின் பறவைகள் போன்றிருந்த அந்தத் தாழ்வு நிலைதான் புண்படுத்துவதாக விளங்கியது: ஏதோ நச்சுப் புகையால் அவற்றை மேலிருந்து தான் விரும்பிய போக்கில் எதிரி தாக்கியுள்ளான். அவர்களைக் கட்டாயம் பழிவாங்க வேண்டும், கடற்படைப் பீரங்கிகளின் உண்மையான ஆற்றலைக் கட்டாயம் காட்ட வேண்டும்.

கடற் போரின் விவரங்களை அன்று இரவு வாஷிங்டன் நகருக்கு வைஸ் அட்மிரல் இந்த தோரணை

யில்தான் அறிக்கையாக அனுப்பினான். கயவர்களின் தீவைக் குண்டுபோட்டு நொறுக்குவதை வற்புறுத்தினான்.

கடற்படை அமைச்சரின் மறுமொழி ஒரு நாள் கழித்து வந்தது: அத்தீவை நோக்கிச் சென்று அதனைக் கடல் மட்டமாகத் தாக்குக.

99

''சரியா?'' என்று அறைகூவும் குரலில் வினவிய காரின் ஒலிவாங்கியை மேசைமேல் வைத்தான். (ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள், லாமோல் சிமாட்டி நீங்கலாக முந்திய கூட்டத்தில் இருந்தவர்களே தாம்.) ''நல்லது, கனவான்களே, நான் உங்களைப் பாராட்டக் கூடும்... முற்றுகை எடுக்கப்பட்டிருக்கிறது. இத்தீவைக் குண்டு போட்டுச் சிதைக்குமாறு அமெரிக்கக் கப்பற்படைக்கு ஆணை வந்துள்ளது.''

ரோல்லிங்குக்கு உதறல் எடுத்து, நாற்காலியினின்றும் எழ அவன் வாயினின்றும் சுங்கான் விழுந்தது. ஏதோ அவன் சொல்ல விரும்பியது போலவும், ஆனால் முடியாதவன் போலவும், அவனது நீல உதடுகள் சுளித்தன.

''என்ன கேடு, முதியவரே?'' என வினவினான் காரின். ''உங்க நாட்டின் போர்க்கப்பல்கள் நெருங்குவது பற்றி ரொம்பக் கவலைப்படுறீங்களா? கப்பலின் பாய்மரத்தில் என்னைத் தூக்கிலிட அவசரப்படுறீங்களா? அல்லது உங்களை வெடி குண்டு வீச்சின் கிலி பிடிச்சிருக்கா?.. உண்மையில், அமெரிக்கப் பீரங்கிகளாலேயே சிறு துண்டுகளாகச் சிதறடிக்கப்படுவது உங்களுக்கு முட்டாள்தனமான முடிவுதான். ஒரு வேளை, உங்களோட மனச்சாட்சி உறுத்திக்கொண்டிருக்கோ? நீங்க எந்த வழியை விரும்பினாலும் சரி, உங்க பணத்தைத்தான் சண்டையில நாங்க பயன்படுத்துறோம்.''

காரின் சற்றே சிரித்து, அம்முதியவனிடமிருந்து அப்பால் திரும்பினான். இவ்வளவிற்குப் பின்னும்,

ஒரு சொல்கூடச் சொல்ல ரோல்லிங்கிற்கு இயல வில்லை; அவன் மீண்டும் தன் இருக்கையில் சாய்ந்து, நடுங்கும் கைகளால் மண் நிற முகத்தை மூடிக்கொண் டான்.

''இல்லை, கனவான்களே... ஆபத்தில் சிக்கா மல் ஒரு டாலருக்கு மூன்று சென்ட் ஈட்ட மட்டுமே உங்களுக்கு முடியும். இப்ப நாம் பிரம்மாண்டமான ஆபத்தைத் துணிந்து ஏற்கப் போகிறோம். கண் காணிக்கச் சென்ற நமது ஆகாயக்கப்பல் அற்புத மான பணியைச் செய்திருக்கிறது... அதன் தலை வனாகிய அலெக்சாந்தர் இவானவிச் வோல்ஷின் உள்பட, மரணம் எய்திய பன்னிரண்டு பேரின் நினைவைப் போற்ற நாம் எழுந்து நிற்போம். கப்பற் படையின் வலிமைபற்றிய விவரத்தை நமக்குத் தெரி விக்க ஆகாயக்கப்பல் முயன்றது: நவீன மாதிரியில் எட்டுப் பெரும் போர்க்கப்பல்கள் உள்ளன, ஒவ் வொரு கப்பலிலும் மூன்று பீரங்கிகள் வைத்த மேடைகள் நான்கு உள்ளன. அந்தச் சண்டைக்குப் பிறகு எஞ்சியன பன்னிரண்டு கடல் விமானங்களா வது குறைந்தது அவர்களிடம் இருக்கணும். இத்து டன் சிறு போர்க்கப்பல்கள், நாசகாரிகள், நீர்மூழ்கி கள் ஆகியனவும் உள்ளன. ஒவ்வொரு குண்டின் தாக்கும் நூற்றைம்பது மில்லியன் பவுண்டு மனித ஆற்றலுக்கு நிகர் என்று மதிப்பிட்டால், கடற் படைப் பிரிவு முழுவதும் தீவின்மீது ஒரு தடவை வீசும் தாக்கு, கிட்டத்தட்ட இரண்டாயிரம் மில்லி யன் பவுண்டு மனித ஆற்றலுக்குச் சமமாகும்.''

''அதுவரைக்கும் நல்லதே,'' என்று கடைசியில் ரோல்லிங் கிசுகிசுத்தான்.

''நிறுத்துங்க முனகலை, தாத்தா, உங்களைப் பற்றி நீங்களே வெட்கப்படணும்... நான் மறந்துட் டேன், கனவான்களே, நாம் திரு. ரோல்லிங்கிற்கு நன்றி தெரிவிக்கணும், ஏன்னா புதியதும் இன்னும் இரகசியமானதுமான கண்டுபிடிப்பு 'கருஞ்சிலுவை' எனப் பெயருள்ள ஒரு புகையாவியை நாம் பயன் படுத்திக்கிற அன்பு கூர்ந்து உதவியிருக்கிறார். இந்தப் புகையாவியைப் பயன்படுத்தி, நமது விமானிகள்

நான்கு கடல்விமானங்களை அழித்துக் கொடிக்கப் பலையும் செயலற்றுப்போகுமாறு செய்துட்டாங்க...''

''இல்லை, திரு. காரின், நீங்க பயன்படுத்தக் 'கருஞ்சிலுவை'யைத் தரக்கூடிய அளவுக்கு நான் அன்பானவன் இல்லை,'' எனக் கம்மிய குரலில் கத்தினான் ரோல்லிங். ''என் தலையில் ஒரு கைத்துப்பாக்கியை வைத்து, 'கருஞ்சிலுவை' அடங்கியுள்ள கலன்களை இந்தத் தீவிற்கு அனுப்புமாறு உத்தர விட என்னைக் கட்டாயப்படுத்தினீங்க.''

தொண்டை கம்மப் பேசி விட்டுத் தள்ளாடிக் கொண்டே, அறைக்கு வெளியே சென்றான். தீவின் தற்காப்புக்கான திட்டத்தை விவரித்துக் கூறத் தொடங்கினான் காரின். இன்னும் மூன்று நாள்களில் தாக்குதல் எதிர்பார்க்கப் பட்டது.

100

'அரிஸோனா' கொள்ளைக் கொடியை உயர்த்தியது.

பழங்காலக் கடற்கொள்ளையினர் வைத்திருந்தது போன்று, இரண்டு எலும்புகள் குறுக்கே இருக்க அவற்றிற்கு மேல் மண்டையோடு அமையப் பொறிக்கப்பட்ட கருங்கொடி என்று பொருளல்ல. அத்தகைய கோரங்கள், தற்காலத்தில் நஞ்சு நிறைந்த போத்தல்கள் மேல் தான் காணப்படும்.

உண்மையில் 'அரிஸோனா'வில் ஒரு கொடியும் பறக்கவில்லை. ஹைபர்பாலாயிடுகளைக் கொண்ட கிராதிகள் அமைந்த இரு கோபுரகள், உலகின் பிற கப்பல்களிலிருந்து அதன் உருவை வேறுபிரித்துக் காட்டின. லாமோல் சிமோட்டியின் ஆணைப்படி அப்படகு யான்ஸனால் செலுத்தப்பட்டது.

படுக்கையறை, குளிப்பு அறை, உடுப்பு அறை, வரவேற்பு அறை—ஆகியவை கொண்ட ஸோயாவினுடைய பெரிய இருப்பிடப் பகுதி பூட்டப்பட்டிருந்தது. காப்டனது மேல்தள அறையில் யான்ஸனுடன் சேர்ந்து ஸோயா தவது இருப்பிடத்தை

அமைத்துக்கொண்டாள். நீலப்பட்டு விதானம், கம்பளங்கள், திண்டுகள், சாய்வு நாற்காலிகள் ஆகிய முந்திய செல்வச் செருக்குப் பொருள்களெல்லாம் நீக்கப்பட்டன. மார்ஸெயில்ஸில் சேர்க்கப்பட்ட கப்பற்பணியாளரிடம், 'கோல்ட்' கைத்துப்பாக்கிகளும் குட்டைக் கார்பைன் துப்பாக்கிகளும் தரப்பட்டன. இப்பயணத்தின் நோக்கம் அவர்களுக்குச் சொல்லப்பட்டது. பிடிக்கப்படுகிற ஒவ்வொரு கப்பலிலிருந்தும் பரிசுப் பணம் தருவதாக உறுதியளிக்கப்பட்டனர்.

உல்லாசப்படகில் சாத்தியமான எல்லா இடத்திலும் பெட்ரோலும், நன்னீரும் நிறைந்த டப்பாக்கள் இடம்பெற்றன. நல்ல காற்றோடும் முழு விரைவுடனும் ஆற்றல்மிகு 'ரோல்ஸ் ராய்ஸ்' என்ஜின்களுடனும், மாகடலின் அலைகளின் ஒரு தலைப்பிலிருந்து மற்ற தலைப்புக்கு வெண்ணிற ஆல்பட்ராஸ் பறவை போல 'அரிஸோனா' விரைந்து சென்றது.

101

''காற்று புயல் தன்மையடைந்து கொண்டிருக்கு, காப்டன்.''

''மேல்பாய்களைச் சுருக்கிவிடு.''

''ஆகட்டும், காப்டன்.''

''மணிக்கு ஒரு தடவை முறைப் பணியாளை மாற்று. கண்காணிப்பாளனைப் பாய்மரக் கூண்டில் இருத்திவை.''

''ஆகட்டும், காப்டன்.''

''விளக்குகள் தென்பட்டால், உடனே என்னை எழுப்பு.''

முடிவில்லாத மாகடலின் வெறும் பரப்பினுள் துருவி நோக்கித் தன் கண்களை இடுக்கினான் யான்ஸென். திங்கள் இன்னும் கிளம்பவில்லை. விண்மீன்கள் மூட்டத்தில் மறைந்திருந்தன. வட மேற்குப் புறமாக மிதந்து சென்றுள்ள இந்த ஐந்து நாள்களிலும் கிளர்ச்சியுற்ற உணர்ச்சி அவனை விட்டு நீங்க

வில்லை. அவன் முன்னோர்கள் கடற்கொள்ளையி னால் வாழ்ந்திடவில்லையா? உதவி காப்டனுக்குத் தலையசைப்பினால் இரவு வணக்கம் செலுத்திவிட் டுத் தன் அறையினுள் நுழைந்தான்.

அரக்குப் பூச்சுள்ள மரத்தாலும் தோலினாலும் ஆக்கப்பட்ட, வசதிகள் நிறைந்த காப்டன் அறை, ஒற்றை மாலுமிக்காக அமைந்த ஆடம்பரமற்ற வாழ்விடம், ஓர் இளம் பெண்ணின் வரவால் நிறை வுற்றிருந்தது.

அனைத்திற்கும் மேல் இங்கே அத்தர் மணம் கமழ்ந்தது. ஆயிரம் பேய்கள்!.. ஒரு பிணத்தையும் கிளர்ச்சியுறச் செய்யக் கூடியவாறு வாசமூட்டிக் கொண்டிருந்தாள் கடற்கொள்ளைக் கூட்டத் தலைவி. அவளது பாவாடையும் தங்கமயமான ஸ்வெட்டரும் நாற்காலியின் பின்புறத்தின் மேல் அலட்சியமாகப் போடப்பட்டிருந்தன.

அவனது படுக்கையில் ஸோயா உறங்கினாள். (அந்த ஐந்து நாள்களும் யான்ஸன் உடை மாற்றாது, சோபாவின் மீதே உறங்கினான்.) அவள் ஒருக்களித் துப் படுத்திருந்தாள். அவள் உதடுகள் சற்றே விரிந் திருந்தன. கடற் காற்றால் பழுப்பேறிய அவளது முகம், அமைதியும், அப்பாவித்தனமும் உடையது போன்று தோன்றியது. அவள் தலைக்கு மேல் வெற் றாயிருந்த ஒரு கை கிடந்தது. கடற்கொள்ளைக் காரி!

அவனுடன் சேர்ந்து அவன் அறையில் வாழ் வதாக ஸோயா செய்த போர்த்தன்மை கொண்ட முடிவு யான்ஸனுக்கு ஒரு கடும் சோதனையாயிற்று. போர்முறைக் கண்ணோட்டத்தில் பார்த்தால் அது சரியான முடிவுதான். கொள்ளையிடும் பயணத்தை மேற்கொண்டிருந்தது, சாவிலே முடிந்தாலும் முடிய லாம். எவ்வகையிலும், அவர்கள் பிடிபட்டால், ஒரே பாய்மரத்தில் இருவரும் சேர்ந்து தூக்கிடப்படுவர்.

அத்தர் மணங்கமழும் அந்த அறையில் நின்ற போது, தனது காதலியின் இனிய முகத்தை நிராசை யும் பேருவகையும் பெருக்கெடுக்க நெடிது நோக்கி னான்.

ஒருவேளை, எல்லாவற்றுக்கும் காரணம் யான்ஸனின் கடற்கொள்ளைக்கார முன்னோர்களாகிய வைக்கிங்குகள் தாம் போலும். உயர்ந்த பின்பகுதியும், சேவல் கொண்டை வடிவுள்ள முகப்பும், பக்கங்களில் தொங்கிய கேடயங்களும், பாய்மரத்தில் விரிந்த சதுரப் பாய்களும் கொண்ட செந்நிறப் படகுகளில், தங்கள் சொந்த நாட்டை விட்டு நெடுந்தொலை சென்றவர்கள் அவர்கள். அம்மாதிரிப் பாய் மரத்தின் பக்கத்தில் நின்றுகொண்டு யான்ஸனின் முன்னோன், நீல அலைகளைப் பற்றியும், கரிய புயல் மேகங்களைப் பற்றியும், தொலைவிலுள்ள கடற்கரையில் அவனுக்காகக் காத்துக்கொண்டு நின்று கடலை நோக்கிக் கொண்டிருக்கும், பொன்முடி நங்கையைப் பற்றியும் பாடினான்—ஆண்டுகள் கழிகின்றன; நீலக் கடல்களைப் போன்றும் கரிய புயல் மேகங்கள் போன்றும் அவள் கண்கள் உள்ளன. இத்தகைய நெடுங்காலத்திற்கு முன்பிருந்தே பகற்கனவு காணும் பழக்கம், பாவம் யான்ஸனுக்கு மரபு வழியாக வந்திருந்தது.

அவள் விழித்திடுவாள் என்று அஞ்சினான். ஓசையின்றி சோபாவிற்குச் சென்று படுத்தான். கண்களை மூடினான். படகின் உடலின்மீது மோதுகின்ற அலைகளின் ஒலியும், மாகடலின் ஒலியும் அவனுக்குக் கேட்டன. அவனுள், அவனது முன்னோன் ஓர் அழகிய மங்கையைப் பற்றிய பழைய பாட்டை இசைத்தான். யான்ஸன் கைகளைத் தலைக்கடியில் வைத்துக்கொண்டான். உறக்கமும் இன்பமும் அவனைக் கைக்கொண்டன.

102

''காப்டன்!'' (கதவின் மீது தட்டல் ஒலி.) ''காப்டன்!''

''யான்ஸன்!'' ஸோயாவின் குரலில் இருந்த கலவரக்குறி ஊசியைப் போன்று அவனது மூளையினுள் நுழைந்தது. காப்டன் யான்ஸன் குதித்தெழுந்து, தனது கனவுகளினின்றும் தன்னை இழுத்துக்கொண்டு

மலங்க மலங்க விழித்தான். ஸோயா தனது ஸ்வெட்டரை அவசரமாக இழுத்தாள்.

''அபாய அறிவிப்பு,'' என்றாள் ஸோயா, ''நீங்க தூங்குறீங்க.''

கதவின் மேல் இன்னும் ஒரு முறை தட்டப்பட்டது, உதவி காப்டனது குரல் கூறியது:

''காப்டன்! இடப்புறம் விளக்குகள் தென்படுது.''

யான்ஸன் கதவைத் திறந்தான். ஈரநைப்புள்ள மென் காற்று அவனது நுரையீரல்களை நிறைத்தது. அவன் இருமிவிட்டு மேடைக்குச் சென்றான். கும்மிருட்டாயிருந்தது. இடப்புறம், மிகத் தொலைவில், இரு விளக்குகள் அலைகளுக்குமேல் அசைந்தாடுவது தெரிந்தது.

விளக்குகளினின்றும் தன் பார்வையை எடுக்காமலே, மார்புமேல் தடவி ஊதுகுழலை எடுத்தான். ஊதினான். தலைமை மாலுமிகள் பதில் அளித்தனர். யான்ஸன் கட்டளையிட்டான்:

''எல்லாரும் மேல்தளத்திற்கு வாங்க! எல்லாப் பாய்களையும் சுருக்குக!''

ஊதல்கள் ஒலித்தன, உத்தரவுகள் இடப்பட்டன. படகின் முன்பகுதியினின்றும் பின்பகுதியினின்றும் மாலுமிகள் தோன்றினர். குரங்குகள் போலப் பாய் மரங்களில் தொத்தி ஏறி, குறுக்குச் சட்டங்கள் மீது அசைந்தாடினர். கப்பிகள் கீச்சிட்டன. தலைமை மாலுமி தலையை உயர்த்திக்கொண்டு, உலகிலுள்ள எல்லாப் புனிதர்களையும் திட்டி நொறுக்கினான். பாய்கள் சுருக்கப்பட்டன.

யான்ஸன் கட்டளைகள் இட்டான்:

''கப்பல் இடப்புறம்! முழு விரைவுடன் முன்னே! விளக்குகளை அணை!''

இப்போது என்ஜின்களால் மட்டுமே செலுத்தப்பட்டு 'அரிஸோனா' இடப் புறமாகத் திடீரென்று திரும்புகையில் வலப் புறத்திலிருந்து ஒரு பெரிய அலை மோதி மேல்தளத்தின் குறுக்காக அடித்துச் சென்றது. எல்லா விளக்குகளும் அணைக்கப்பட்டன. முழு இருட்டிலே, முழு விரைவுடன் சென்றபோது, கப்பலின் உடற்பகுதி நடுங்கியது.

வெளிப்பார்வையாளன் பார்த்த விளக்குகள் விரைவில் தொடுவானத்திற்கும் அப்பாலிருந்துமே லெழும்பி, புகை கக்கும் இரண்டு புகைபோக்கிகள் உடைய பயணிக் கப்பலின் இருண்ட நிழலுருவம் பிறகு தெரிந்தது.

காப்டன் மேடைக்கு ஸோயா வந்தாள். குஞ்சம் வைத்த பின்லல் தொப்பி அணிந்துகொண்டு இருந்தாள். இழையெழும்பிய கழுத்துக்குட்டை அவள் கழுத்தைச் சுற்றிப் பின்புறம் தொங்கியது. தனது தொலைநோக்கியை யான்ஸன் அவளிடம் கொடுத்தான். அவள் அதைக் கண்களுக்கு உயர்த்தினாள், ஆனால் படகு மிக மோசமாகக் குலுங்கியபடியால் தொலைநோக்கியுடன் கையை யான்ஸனின் தோள் மீது வைக்க நேர்ந்தது. அவளது கதகதப்பான ஸ்வெட்டருக்கு உள்ளே அவளது நெஞ்சு துடிப்பதை அவனால் உணர முடிந்தது.

''நாம் தாக்குவோம்!'' என்று கூறிவிட்டு அருகே நெருங்கி அவனது கண்களுள் உறுதியுடன் நோக்கினாள்.

'அரிஸோனா' ஐந்நூறு கஜத்திற்கு அப்பால் இருந்தபோது பயணிக் கப்பல் அதைக் கவனித்தது. அதன் இயக்கு மேடையிலிருந்து விளக்கு அலைத்துக் காட்டப்பட்டது. பின்பு கப்பலின் சங்கு கீழ்க்குரலில் ஊளையிட்டது. விளக்குகளின்றிச் சென்ற 'அரிஸோனா', அடையாளக் குறிப்புக்களுக்கு விடை தராமல், பிளக்கொளி வீசிய அந்தக் கப்பலை நோக்கி நேராக பிரைந்தது. நீராவிக்கப்பல் தனது விரைவினைக் குறைத்துக்கொண்டு, மோதுதலைத் தவிர்ப்பதற்காகத் திரும்பத் தொடங்கிற்று...

ஒரு வாரத்திற்குப் பிறகு 'நியூயார்க் ஹெரால்ட்' பத்திரிகை நிருபரால் பின்வருமாறு அந்நிகழ்ச்சி விவரிக்கப்பட்டது:

''...நாலே முக்கால் மணிக்கு, சங்கின் அபாய அறிவிப்பு முழக்கத்தால் நாங்கள் எழுப்பப்பட்டோம். பயணிகள் மேல்தளத்திற்குத் தடுமாறிச் சென்றனர். வெளிச்சம் மிகுந்த அறைகளை விட்டு வந்த பிறகு,

மை போன்று கரியதாகத் தோன்றியது இரவு. காப்டன் மேடையின்மீது கலவரம் ஏற்பட்டிருந்ததைக் கண்டோம். தொலைநோக்கிகளால் இருண்ட கடலைத் துழாவினோம். உண்மையில் என்ன நிகழ்ந்ததென்று ஒருவருக்கும் தெரியவில்லை. எங்கள் நீராவிக்கப்பல் விரைவைக் குறைத்தது. திடீரென்று, அதனைப் பார்த்தோம்... இனந்தெரியாத வடிவையுடைய ஒரு கப்பல், முழு விரைவுடன் எங்களை நோக்கி வந்து கொண்டிருந்தது. நீண்ட, குறுகலான கப்பல், மூன்று நெடிய பாய்மரங்கள் கொண்டது, அதன் வடிவமைப்பு விரைந்து செல்லும் பாய்மரக் கப்பல் போன்றிருந்தது; அதன் முன் பின் புறங்களில் கிராதி வைத்த இரு விந்தையான கோபுரங்கள் இருந்தன. 'பறக்கும் டச்சுக்காரன்' அது என்று வேடிக்கையாக யாரோ ஒருவர் கூவினார். ஒருகணம் எல்லாரும் கிலியடித்துப் போயினர்.

நூறு கஜத்திற்கு அப்பால், மர்மக் கப்பல் நிற்க, ஒலிபெருக்கி வாயிலாக யாரோ ஆங்கிலத்தில் கத்தினான்:

'''என்ஜின்களை நிறுத்து. நெருப்புகளை அணை'.

''எங்கள் காப்டன் பதிலளித்தான்:

'''கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவதற்கு முன்பு, கட்டளையிடுவது யாரென்று அறிய விரும்புறேன்'.

'''பொன் தீவின் அரசி கட்டளை இடுகிறாள்,' என்று அக்கப்பலிலிருந்து விடை வந்தது.

''நாங்கள் வாயடைத்துப் போனோம்: இது ஒரு கேலியா? பியேர் ஹெர்ரியின் மற்றொரு துடுக்குத்தனமா?

'''அரசிக்குத் தனி அறையும் அவர் பசியுடனிருந்தால் வயிறு நிறைய காலை உணவும் தர முன்வருகிறேன்,' என்று எங்கள் காப்டன் விடையாகக் கூவினான்.

''இச்சொற்கள் 'ஏழை ஹெர்ரி' என்ற பாட்டிலிருந்து எடுக்கப்பட்டவை; அச்சொற்களைக் கேட்டதும் மேல்தளத்திலிருந்தோர் மனநிறைவுடன் சிரித்தனர். மர்மக் கப்பலின் முன்பகுதி கோபுரத்திலிருந்து உடனே ஓர் ஒளிக்கதிர் தோன்றியது. பின்னல்

ஊசியளவு மெல்லியதாய், கண்ணைப்பறிக்குமளவு வெண்மையாயிருந்த இக்கதிர், கோபுரத்தின் கும் மட்டத்திலிருந்து அகலமாகாமல் வந்தது. அந்த நேரத்தில் தங்கள் கண் முன்னே, மனித மூளையினால் இதற்குமுன் எப்போதுமே செய்யப்படாத அவ்வளவு மிகக் கொடிய கருவி இருந்தது என்று ஒருவர் கூட கற்பனைசெய்யவில்லை. நாங்கள் மகிழ்ச்சியான மன நிலையில் இருந்தோம்.

''அந்த ஒளிக்கதிர் காற்றிலே ஒரு சுருக்கு வரைந்துவிட்டு எங்கள் கப்பலின் முன்பகுதி மீது இறங்கியது. பயங்கரமான கீறல் கேட்டது, வெட்டப்பட்ட எஃகின் பச்சை நிறத் தீக்கொழுந்தைப் பார்த்தோம். மேல்தளத்தின் பின்பகுதியில் நின்று கொண்டிருந்த மாலுமி ஒருவன் முரட்டுத்தனமாக அலறினான். நீர் மட்டத்திற்கு மேலிருந்த கப்பலின் முன்பகுதி முழுதும் சரிந்து கடலுக்குள் விழுந்தது. மேலே தூக்கப்பட்ட ஒளிக்கதிர் ஒரு கணம் உயரத்தில் நடுங்கி பிறகு எங்களுக்குமேலே, ஒரு போக்காகக் கடந்து சென்றது. இரு பாய்மரங்களின் உச்சிகளும் முறிந்து மேல்தளத்தின்மீது பெருத்த ஓசையுடன் விழுந்தன. பயணிகள் கலவரப்பட்டு கீழே செல்வழிகளை நோக்கிப் பாய்ந்து ஓடினர். சிதைந்த கட்டைகளினால் அடிபட்டுக் காப்டன் காயமடைந்தான்.

''கதையின் எஞ்சிய பகுதி தெரிந்ததுதான். கடற்கொள்ளைக்காரர்கள் குட்டைத் துப்பாக்கிகளுடன் ஒரு படகில் நெருங்கி வந்து, எங்கள் கப்பல் மீதேறிப் பணம் தருமாறு கோரினர். அஞ்சல் பைகளிலிருந்தும் பயணிகளின் பைகளிலிருந்தும் பத்து மில்லியன் டாலர் திரட்டினர்.

''கொள்ளைப் பொருள் நிறைந்த படகு திரும்பியவுடன், கொள்ளைக் கப்பலின் மேல்தளத்தில் வெளிச்சம் வெள்ளம் போலப் பாய்ந்தது. பின்னிய குல்லாய் அணிந்த, நெடிய மெலிந்த பெண்ணொருத்தி, கிராதிவைத்த கோபுரத்தினின்றும் கீழிறங்கிக் காப்டன் மேடைக்கு விரைந்து சென்றதைக் கண்டோம். ஒலிபெருக்கியை எடுத்துப் பின்னே சாய்ந்து கொண்டு எங்களுக்குப் பின்வருமாறு அறிவித்தாள்:

'''இப்ப உங்கள் பாதையிலே அமைதியாச் செல்லலாம்.'

''கடற்கொள்ளைக் கப்பல் திரும்பி திடுக்கிடும் வேகத்தில் சென்று, அடிவானத்திற்கப்பால் மறைந்தது.''

103

'பி.கா.' என்ற பலூன் விமானத்தால் அமெரிக்கக் கப்பற்படை மீது செய்யப்பட்ட தாக்குதலும், தீவினைத் தகர்க்குமாறு அப்படைப்பகுதிக்குக் கட்டளை தரப்பட்டதுமாகிய கடந்த சில நாள்களின் நிகழ்ச்சிகள், பொன் தீவின் மக்கள் அனைவரையும் கிளர்ச்சியுறச் செய்தன.

வேலையினின்றும் விடுவிக்குமாறு விண்ணப்பங்கள் செயலகத்தில் பெருகிக் குவிந்தன. சேமிப்பு வங்கியில் செலுத்தப்பட்டிருந்த தொகைகள் திரும்பப் பெறப்பட்டன. முள்கம்பிகளுக்குப் பின்னே, தொழிலாளர் ஒருவருக்கொருவர் கலந்து பேசிக் கொண்டனர். மஞ்சளும், வெள்ளையுமான உடையணிந்த போலீஸார் இடையிலுள்ள சந்துகளில் கடுகடுப்பான உறுதிகொண்ட முகங்களுடன் நடைபோடுவதை அவர்கள் பொருட்படுத்தவில்லை. கலைக்கப்பட்ட தேனீக்கூடு போன்று அந்தக் குடியிருப்பு முழுதும் இருந்தது. கொம்புகள் ஊதியும் பறைகள் தட்டியும் பயனில்லை. மதிப் பூங்காவும் குடிவகைக் கடைகளும் வெறிறாயிருந்தன. தொழிலாளரின் தீய மனப்போக்கைத் தேசிய இனப் பூசல்களில் திருப்புவதற்காக ஆத்திரமூட்டும் பதினைந்து பேர்வழிகள் செய்த பெரு முயற்சிகள் வீணாயின. வேற்று முள் கம்பி வேலிக்குப் பின்புறம் வாழ்ந்தான் என்ற காரணத்திற்காக மட்டும், ஒருவனுடைய மண்டையைப் பிளக்க அந்நாள்களில் ஒருவரும் விரும்பவில்லை.

தீவு முழுதும் அரசு ஆணை அறிக்கைகளை ஒட்டி வைத்தான் என்ஜினியர் சேர்மாக். இராணுவச்

சட்டம் பிறப்பிக்கப்பட்டது. கூட்டங்களோ, ஒன்று கூடுதலோ நடைசெய்யப்பட்டன. மறு உத்தரவு கள் வரை தன்னை வேலையிலிருந்து விடுவிக்குமாறு கோர ஒருவரும் அநுமதிக்கப்படவில்லை. அரசை விமரிசிக்கக் கூடாது என்று மக்கள் எச்சரிக்கப்பட்டனர். சுரங்கத்து வேலை இரவும் பகலும் இடைவிடாது தொடர்ந்து நடைபெற வேண்டும். ''காரினை இந்நாள்களில் உளமார ஆதரிப்பவர்கள், கற்பனை செய்திராத அளவுக்குச் செல்வங்கள் வழங்கப் படுவார்கள். கோழைகளை நாங்களே தீவினின்றும் துரத்திடுவோம். செல்வத்திற்கு நமது பாதையைத் தடுப்பவரோடு நாம் போரிட்டுக் கொண்டிருக்கிறோம் என்பது நினைவில் இருக்கட்டும்.''

இந்த அறிக்கையின் உறுதியான தொனிக்கு மாறாக, கடற்படைத் தாக்குதல் எதிர்பார்க்கப்பட்ட நாளுக்கு முந்திய நாளன்று காலையில் சுரங்கத் தொழிலாளர்கள், அன்று நண்பகலுக்குள் சம்பளம் தரப்படாவிட்டாலும், (அது சம்பளப் பட்டுவாடா நாள்), அவர்களுடைய சமாதானப் பற்றுக் குறித்தும் எதிர்ப்பு நடவடிக்கைகளை நிறுத்துவது குறித்தும் அறிவித்து அமெரிக்க அரசிற்கு தகவல் அனுப்பப் படாவிட்டால் ஹைபர்பாலாயிடுகளையும், திரவக் காற்று எந்திரங்களையும் நிறுத்திவிடுவதாக அறிவித்தார்கள்.

திரவக்காற்று எந்திரங்கள் நிறுத்தப்பட்டால், சுரங்கம் வெடித்துப் பிளந்து, உருகிய மாக்மா மேலே பொங்கிப் பெருகவும் கூடும். இந்த அச்சுறுத்தல் கடுமையானதாக இருந்தது. என்ஜினியர் சேர்மாக் பரபரப்பில் தன்னையே மறந்து தொழிலாளரைச் சுடப்போவதாக அச்சுறுத்தினான். மஞ்சள் மற்றும் வெள்ளை உடை போலீஸார் சுரங்க வாயிலில் ஒன்றுகூடினர். அப்போது நூறு தொழிலாளர் சுரங்கத்தினுள் இறங்கிப் பக்கத்திலிருக்கும் முழைகளுக்குச் சென்று, அங்கிருந்து அலுவலகத்திற்கு தொலைபேசி வழியாகச் செய்தியனுப்பினர்:

''சாவைத் தவிர, வேறு எவ்வழியும் எங்களுக்குத் தெரியவில்லை, நான்கு மணிக்கு இத்தீவுடன்

சேர்த்து எங்களை வெடிவைத்து அழித்துக்கொள்ளப் போகிறோம்.''

குறைந்தது நான்கு மணி நேரக் கெடுவாவது இருந்தது. என்ஜினியர் சேர்மாக் சுரங்கத்திலிருந்து தனது படையினரை நீக்கிவிட்டு, ஒரு மோட்டார் சைக்கிளில் அரண்மனைக்கு விரைந்தான். அங்கே, காரினும் ஷெல்காவும் கிளர்ச்சியுற்று முகம் சிவந்து பேசிக் கொண்டிருப்பதைக் கண்டான். சேர்மாக்கைக் கண்டதும் காரின் பைத்தியக்காரன் போலக் குதித் தெழுந்தான்.

''யாரிடத்திலிருந்து இந்த ஆட்சி முறை முட் டாள்தனத்தைக் கற்றுக்கொண்டீங்க?''

''ஆனால்...''

''பேசாதிங்க!.. நீங்க நீக்கப்பட்டு விட்டீங்க. ஆய்வுக் கூடத்திற்கோ அல்லது நரகத்திற்கோ அல் லது நீங்க விரும்புற எங்கேயாவது போங்க... நீங்க ஒரு முட்டாள்!..''

கதவைத் திறந்த காரின், சேர்மாக்கை வெளியே தள்ளினான். பிறகு பற்களுக்கிடையில் சுருட்டை வைத்துக்கொண்டு ஷெல்கா மூலையில் அமர்ந்திருந்த ஒரு மேசைக்குத் திரும்பினான்.

''ஷெல்கா, நான் எதிர்பார்த்த தருணம் வந்து விட்டது. உங்களால் மட்டுந்தான் இவ்வியக்கத்தைக் கட்டுப்படுத்தி, நிலைமையைச் சமாளிக்க முடியும்... பத்து அமெரிக்கக் கப்பற்படைகளை விடத் தீவில் தொடங்கியுள்ளது மிகவும் அபாயகரமானது.''

''ஆகா,'' என்றான் ஷெல்கா, ''எப்போதோ புரிந்துகொண்டிருக்கணும்...''

''உங்களுடைய அரசியல் பாடங்களுடன் நாச மாப் போங்க... சிறப்பு அதிகாரங்கள் பெற்ற தீவின் ஆளுநராக உங்களை நியமிக்கிறேன்... மறுத்துப் பாருங்க,'' என காரின் கிளர்ச்சியுற்றுத் தனது குர லைப் பெரிதும் உயர்த்திக் கத்தினான். மேசையை நோக்கித் தாவிச் சென்று செருகறையைத் திறந்து, ஒரு கைத்துப்பாக்கியை எடுத்தான். ''சுருங்கமா, நீங்க மறுத்தால், உங்களைச் சுடுவேன். சரி அல்லது இல்லை?''

''இல்லை,'' துப்பாக்கியை ஒருக்கணித்து நோக்கிக்கொண்டே, என்றான் ஷெல்கா.

காரின் சுட்டான். சுருட்டைப் பிடித்திருந்த கையைத் தனது பொட்டுக்கு உயர்த்திக் கொண்டான் ஷெல்கா.

''நீங்க அழுக்குப்பிடித்த பன்றி!''

''ஆக, நீங்க ஒப்புக்கொள்றீங்க?''

''அதைக் கீழே வையுங்க.''

''ஓ. கே.,'' கைத்துப்பாக்கியை மீண்டும் மேசையறைக்குள்ளாக காரின் எறிந்தான்.

''நீங்க என்ன விரும்புகிறீங்க? தொழிலாளர்கள் சுரங்கத்தை வெடிவைத்துத் தகர்க்கக் கூடாது, அவ்வளவு தானே? சரி. தகர்க்க மாட்டார்கள். ஆனா சில நிபந்தனைகள் உள்ளன...''

''முன்னதாகவே நான் ஒப்புக்கொள்றேன்.''

''இத்தீவில் இதுவரை நான் இருந்து வந்தது போலவே இனியும் தனித்த ஆளாகவே இருப்பேன். உங்களுடைய வேலைக்காரனாகவோ கூலிக்காரனாகவோ அன்று. இது முதல் நிபந்தனை. எல்லா தேசிய எல்லைகளும் இன்றே அகற்றப்பட்டு, முள்கம்பிகளெல்லாம் அப்புறப்படுத்தப்பட வேணும். இது இரண்டாவது...''

''ஒப்புக்கொள்றேன்.''

''உங்க ஆத்திரமூட்டும் பேர்வழிகளின் கூட்டம்...''

''என்னிடம் ஆத்திரமூட்டுவோர் இல்லை,'' என்று உடனே கூறினான் காரின்.

''அது பொய்.''

''சரி, அது பொய். அவர்களை நான் என்ன செய்யணும்? மூழ்கடிக்கணுமா?''

''இன்றைக்கு இரவே.''

''சரி. செய்யப்பட்டதாகக் கருதுங்கள்.'' (தனது குறிப்பேட்டில் காரின் சில குறிப்புகளை விரைவாக எழுதினான்.)

''கடைசி நிபந்தனை: தொழிலாளருடன் எனக்குள்ள உறவுகளில் குறுக்கீடு கூடாது.''

''அப்படியா சேதி?'' (ஷெல்கா முகத்தைச் சுளித்

துக்கொண்டு மேசையிலிருந்து கீழிறங்கத் தொடங்கி னான். காரின் அவன் கையைப் பற்றினான்.) ''சரி. நான் ஒப்புக்கொள்றேன். காலம் வரும்போது நான் உங்க இடுப்பை முறிக்கத் தான் போகிறேன். இன் னும் என்ன?''

ஷெல்கா கண்ணைச் சுரித்துக்கொண்டு சுருட்டுப் பற்றவைத்தான். குட்டையாகக் கத்தரித்த பொன் னிற மீசையும் தூக்கிய மூக்கும் கொண்ட, காற்றி லடிபட்ட, தந்திரம் ததும்பும் அவன் முகம் புலப்ப டாதவாறு புகைப் படலம் மறைத்தது. அந்த நேரத் தில் தொலைபேசியின் மணி ஒலிக்கவே காரின் ஒலி வாங்கியைக் கையில் எடுத்துப் பேசினான்:

''ஆம், காரின் பேசுறேன். என்ன? வானொலிச் செய்தியா?''

தொலைபேசி ரிசீவரை வைத்து வானொலி வாங் கியை மாட்டிக்கொண்டான். கேட்கும் போதே நகங் களைக் கடித்தான். அவனது உதடுகள் முறுவலால் நெளிந்தன.

''நீங்க தொழிலாளரை அமைதிப்படுத்தலாம். நாளைக்கு நாம் சம்பளம் தருவோம். லாமோல் சீமாட்டி பத்து மில்லியன் டாலர் கைப்பற்றியுள் ளாள். உல்லாச ஆகாயக்கப்பலை உடனடியாக அனுப்பிவைக்கிறேன். 'அரிஸோனா' நானூறு மைல் தொலைவில்தான் வடமேற்குப் புறத்தில் இருக்கு.''

''இது விஷயங்களை எளிதாக்குது,'' என்றான் ஷெல்கா. காற்சட்டைப் பைகளுக்குள் கைகளை நுழைத்துக்கொண்டு அறையை விட்டு வெளியே சென்றான்.

104

தனது பாதங்கள் தரையில் படாதவாறு லிப்டின் எஃகுப் பெட்டியின் விட்டத்து வார்ப்பட்டைகளைப் பற்றித் தொங்கிக்கொண்டே, கண்களை மூடியவாறு ஒரு விநாடி நேரம் மூச்சைசயடக்கிக் கொண்டு ஷெல் கா, பறப்பது போன்று கீழிறங்கினான்.

இணையான பக்கச் சுரங்கத்தின் குளிர்ப்பதனம் ஒரு சீராயில்லை, எனவே முழைக்கு முழை அனல் பட்டையினூடே லிப்ட் பறக்க வேண்டியிருந்தது. கீழிறங்கிய வேகந்தான் அதை எரியாமல் காப்பாற்றியது.

இருபத்தைந்தாயிரம் அடி ஆழத்தில் மீட்டரின் சிவப்பு முள்ளைப் பார்த்து, ஷெல்கா மின்னோட்டத் தடுப்பு விசையைத் திருப்பி லிப்டை நிறுத்தினான். இது முப்பத்தேழாவது எண்ணுள்ள முழை. அதற்குக் கீழே ஆயிரம் அடி ஆழத்தில் ஹைபர்பாலாயிடுகள் வேலை செய்து கொண்டிருந்தன; பழுக்கக் காய்ந்த பாறைகள் அழுத்தக் காற்றால் குளிர்விக்கப்படுவதால் ஏற்படும் இடைவிடாத குறுகிய வெடிப்பொலிகள் கேட்டுக்கொண்டிருந்தன. தரையின் மேல் மட்டத்திற்குப் பாறைகளை எடுத்துச்செல்லும் உயரத் தூக்கிகளின் கரண்டிகள் உராய்ந்து, கடபடவென்றொலித்தன.

முப்பத்தேழாவது எண்ணுள்ள முழையின் உட்புறம், பிரதானச் சுரங்கத்தின் மற்றைய எல்லா முழைகளையும் போலவே ஆணிவைத்து இறுக்கப்பட்ட, எஃகாலான கனசதுர அறையாகும். அதனுடைய சுவர்களுக்கு வெளிப்பக்கத்தில், சுற்றிலுமுள்ள கருங்கற்களைக் குளிர்விக்கும் திரவக்காற்று நீராவியாக மாறியது. மாக்மாப் பட்டை வெகு ஆழத்தில் அன்று, மின்காந்த, நில நடுக்க ஆராய்ச்சிகளால் பெறப்பட்ட விவரங்கள் காட்டியதை விட, மிக அருகிலேயே இருந்தது புலப்பட்டது. கருங்கல் ஐந்நூறு டிகிரி சென்டிகிரேட் வரை சூடேறியிருந்தது. திரவக்காற்றினால் குளிர்விக்கும் பொறிகள் சில நிமிடங்கள் நிறுத்தப்பட்டால் கூட, உயிருள்ளவை எல்லாம் கணப்போதில் சாம்பலாகிவிடும்.

எஃகு அறையினுள்ளே படுக்கைகள், பெஞ்சுகள், நீர் நிறைவாளிகள், முதலியன இருந்தன. தொழிலாளர்கள் நான்கு மணி நேர வேலையில் முற்றிலும் களைத்துப் போய்விடுவார்கள். பாதி இறந்தவர் போன்ற நிலையிலிருக்கும் அவர்களைத் தரைமட்டத்திற்கு அனுப்பப்படுவதற்குமுன் படுக்

கைகளில் கிடத்தப்பட்டுக் களைப்பிலிருந்து தெளிவிக்கப்பட வேண்டியிருந்தது. காற்றை வெளியேற்றும் விசிறிகளும் நல்ல காற்றை உள்ளே செலுத்தும் குழாய்களும் பேரொலியுடன் இரைந்தன. இருபத்தைந்து மனிதர்களின் ஏங்கிய நலமற்ற, அசைத்த முகங்களின்மேல், ஆணிதைத்த விட்டத்திலிருந்து தொங்கிக் கொண்டிருந்த விளக்கு, பளிச்சென்று வெளிச்சத்தை வீசியது. மேலேயிருந்த முழைகளில் மற்ற எழுபத்தைந்து தொழிலாளர்கள் இருந்தனர். இந்த முழைகளுக்கிடையே தொலைபேசியின் வழி தொடர்பு ஏற்படுத்தப்பட்டிருந்தது.

லிப்டினின்றும் வெளிவந்தான் ஷெல்கா. சிலர் அவன் பக்கம் வணக்கம் தெரிவிக்காமல் மௌனமாகத் திரும்பினர். சுரங்கத்தை வெடிவைத்தழிப்பது என்ற தங்களது முடிவில் அவர்கள் உறுதியாக இருப்பது போலத் தோன்றியது.

''மொழிபெயர்ப்பாளர் ஒருவர் தேவை. நான் ருஷ்யனில் பேசப்போறேன்,'' என்ற ஷெல்கா, மேசைமுன் அமர்ந்து, எப்ஸம் உப்புக்களும் பழக்குழம்புகளும் நிறைந்த டப்பாக்களையும், பாதி குடிக்கப்பட்ட ஒயின் கிளாஸ்களையும் முழங்கையினால் ஒரு புறம் நகர்த்தினான். (தீவு நிர்வாகத்தினரால் தொழிலாளருக்கு இவை தாராளமாக வழங்கப்பட்டன.)

தாடிக் கட்டை ரோமங்களுக்கடியில் நீலமாக வெளிறிய முகமும், கூனலும், எலும்புந்தோலுமான மேனியும் கொண்ட ஒரு யூதன் மேசைக்கு வந்தான்.

''நான்தான் மொழிபெயர்ப்பாளன்.''

ஷெல்கா பேசத் தொடங்கினான்:

''காரினும் அவனுடைய செயல்பாடுகளும் முதலாளித்துவ உணர்வின் இறுதி எல்லை தவிர வேறில்லை. காரினுக்கு மேல் யாராலும் போக முடியாது—மனிதகுலத்தின் உழைக்கும் பகுதியினரை மூளையில் அறுவை செய்து விலங்குகளாகக் கட்டாயப்படுத்தி மாற்றுதலும், சிறந்தவராக, 'வாழ்வின் மன்னர்களாகச்' சிலரைத் தேர்ந்தெடுத்தலும், நாகரிகத்தின் வளர்ச்சிப்போக்கைத் தடுப்பதாகும். பூர்ஷ்

வாக்கள் இன்னும் காரினைப் புரிந்துகொள்ளவில்லை. அவர்கள் புரிந்துகொள்ள வேணுமின்னு அவனும் அவசரப்படவில்லை. அவனைக் கொள்ளைக்காரனாகவும் ஆக்கிரமிப்பாளனாகவும் அவர்கள் கருதுறாங்க. காரினுடைய திட்டம் ஏகாதிபத்தியத்தின் தர்க்கரீதியான முடிவு என்பதை இறுதியில் அவர்கள் கண்டுகொள்வார்கள்... தோழர்களே, எல்லாவற்றிலும் மிக அபாயகரமான நிகழ்ச்சியை, அதாவது அவர்களுடன் காரின் ஒப்பந்தத்துக்கு வருவதை, நாம் கட்டாயம் தவிர்க்கணும். அவன் ஒப்பந்தத்துக்கு வந்துவிட்டால் நீங்க மிகத் தொல்லைக்கு உட்படுவீர்கள், தோழர்களே. அமெரிக்க அரசுடன் காரின் சச்சரவிடக்கூடாது என்பதற்காக, இப்பெட்டியினுள்ளே நீங்க இறக்கத் தீர்மானித்திருக்கிறீர்களா? மீண்டும் அதனை எண்ணிப்பாருங்க. காரின் வென்றால் அது மோசமாகும், முதலாளிகள் வென்றால் அதைவிட நல்லதல்ல. காரின் அவர்களுடன் உடன்பாடு செய்துகொண்டால், எல்லாவற்றிலும் அது மிக மோசமாகும். உங்களுடைய மதிப்பை நீங்க இன்னும் உணரவில்லை, தோழர்களே—வலிமை நம் பக்கம் இருக்கிறது. இன்னும் ஒரு மாத காலத்தில், உயரத்தூக்கிகளின் கரண்டிகள் தரைமட்டத்திற்குத் தங்கத்தைத் தாங்கிக் கொண்டுவரத் தொடங்கும் பொழுது, அது காரினின் நலத்திற்காகாது, ஆனா உங்க நலத்திற்காகும், உலகமுழுவதிலும் நாம் சண்டையிட வேண்டிய லட்சியத்தின் நன்மைக்காகும். நீங்க என்னை நம்பினால், உண்மையாகவே என்னை நம்பினால், முடிவு வரை, தீவிரமாக நம்பினால், பிறகு நான் உங்கள் தலைவனாக இருப்பேன்... ஒருமனதாக என்னைத் தேர்ந்தெடுங்கள். நீங்க என்னை நம்பாவிட்டால்...''

ஷெல்கா நிறுத்தி, இமையாக் கண்களுடன் தன்னை விழித்து நோக்கிக் கொண்டிருந்த தொழிலாளர்களின் ஏங்கிய முகங்களைச் சுற்றிலும் நோக்கியவாறு பிடரியை அழுத்தமாகச் சொறிந்தான்.

''நீங்க என்னை நம்பாவிட்டால், இன்னும் பேசுறேன்.''

பரந்த தோளுடைய, இடுப்புவரை ஆடையின்றி புகைக்கரிபிடித்து மாசுண்டிருந்த இளைஞன் ஒருவன் மேசையருகே வந்தான். குனிந்து, நீலக் கண்களால் ஷெல்காவை உற்று நோக்கினான். காற்சட்டையை மேலே இழுத்துப்பிடித்துக் கொண்டு கூட்டாளிகள் பக்கம் திரும்பினான்.

''நான் இவரை நம்புறேன்.''

''நாங்களும் உங்களை நம்புறோம்,'' என்றனர் மற்றவர்கள். ஆயிரக்கணக்கான அடிகள் பருமை கொண்ட கருங்கல்லினூடே தொலைபேசியின் வழியாக அச்சொல் பலமுறை திருப்பிக் கூறப்பட்டது.

''நீங்க என்னை நம்பினால், சரி,'' என்றான் ஷெல்கா. ''இப்ப மற்ற விஷயங்களுக்கு: இன்னைக்கு சாயங்காலம் தேசிய எல்லைகள் அகற்றப்படும். உங்க கூலிகள் நாளைக்குத் தரப்படும். போலீஸார் அரண்மனையைப் பார்த்துக்கொள்ளட்டும்—அவர்கள் இல்லாமலேயே நாம் சமாளித்துக்கொள்ள முடியும். அடுத்த காரியம்—எவ்வளவு முடியுமோ, அவ்வளவு விரைவாகத் தங்கத்தை அடைவதுதான். சரிதானே, தோழர்களே?''

105

அன்றிரவு, தேடுவிளக்குகளின் அலைகின்ற ஒளிக் கற்றைகள் வடமேற்கில் காணப்பட்டன. கப்பல் துறையில் அபாய அறிவிப்புச் சங்கொலி முழங்கியது. வைகறையில், கடலில் இன்னும் இருட்டு இருந்த போது, நெருங்கிக் கொண்டிருக்கும் படையின் முதல் முன்னோடிகள் தோன்றின: வைகறையின் செவ்வொளியில் மிளிர்ந்துகொண்டு தீவிற்கு மேலே விமானங்கள் வட்டமிட்டன.

போலீஸார் தங்களது துப்பாக்கிகளினால் சுடத் தொடங்கி விரைவில் அதனைக் கைவிட்டனர். தீவில் வாழ்வோர் சிறு கூட்டங்களாகக் கூடினர். சுரங்கத்தின் மேலே புகை தொடர்ந்து சுழன்றது. கப்பலின் மணிகள் நேரத்தை ஒலித்தறிவித்தன. குறுக்குநெடுக்காகக் கட்டப்பட்ட சிப்பங்களை, ஒரு

கிரேன் ஒரு பெரும் சரக்குக் கப்பலிலிருந்து தூக்கிக் கரை சேர்த்தது.

மாகடல் மெல்லிய பனிப்படலத்தால் மூடப்பட்டு அமைதியாகக் கிடந்தது. விமானக் காற்றாடிகள் வானத்தில் இம்மென்று ஒலித்தன.

மூடுபனிப் பந்து போன்று சூரியன் எழும்பியது. அடிவானத்தில் புகைப் பிழம்புகளிருப்பதை அப்போதுதான் எல்லாரும் கண்டனர். ஒரு நீண்ட தட்டை மேகம் போன்று தென்கிழக்குப் புறமாக அவை பரந்தன. சாவு நெருங்கிக் கொண்டிருந்தது.

தீவில் எல்லாம் ஓசையடங்கிவிட்டன. கண்டத்திலிருந்து கொண்டுவரப்பட்ட பறவைகள் கூடப் பாடுவதை நிறுத்திவிட்டன. ஓரிடத்தில், மக்களின் ஒருசிறு கூட்டம் துறைமுகத்திலிருந்த படகுகளுக்கு ஓடி, அவற்றுள் நெருக்கி நின்றது; மேல் விளிம்புகள் வரை நிறைந்த படகுகள், விரிந்த கடலுள் விரைந்து செல்லத் தொடங்கின. ஆயினும், தீவில் சில படகுகளே இருந்தன. தீவு எல்லாப் பக்கங்களிலும் திறந்திருந்தது. மறைவிடம் எங்கும் இல்லை. மக்கள் பேயடித்தவர்கள் போன்று மௌனமாக நின்றனர். மணலில் முகத்தை வைத்தவாறு சிலர் கிடந்தனர்.

அரண்மனையில் எவ்வித இயக்கமும் காணப்படவில்லை. வெண்கல வாயிற்கதவுகள் பூட்டியிருந்தன. போலீஸார் அகன்ற விளிம்புள்ள நெடிய தொப்பிகளுடனும், வெண்ணிறமும் தங்கப்பட்டிகளும் உடைய உடுப்புக்களுடனும், முதுகுகளின் குறுக்கே தொங்கிய துப்பாக்கிகளுடனும் சாய்வான செந்நிறச் சுவர்களின் ஓரமாக இங்குமங்கும் நிமிர்ந்து நடந்தனர். ஒருபுறம் பெரிய ஹைபர்பாலாயிட் இருந்த ஒளிபுகும் கோபுரம் இருந்தது. மேலெழும்புகிற பனிப்படலமாகிய போர்வை, அதன் உச்சியைப் பார்வையினின்றும் மறைத்தது. எனினும், இந்தப் பாதுகாப்பின் மீது நம்பிக்கையுடையவர் சிலரே: அடிவானத்தில் தெரிந்த பழுப்பும் கருமையும் கலந்த மேகம், மிக எதார்த்தமானதாகவும் அச்சுறுத்துவதாகவும் இருந்தது.

பல தலைகள் சுரங்கத்தின் பக்கம் அச்சத்துடன் திருப்பப்பட்டன. சுரங்கத்தில் மூன்றாவது மாற்று வேலைக்காகச் சங்கு ஒலித்தது. வேலை செய்யத் தான் நேரம் பார்த்தார்களே! தங்கம் பாழாய்ப் போக! பிறகு அரண்மனை கோபுரத்துக் கடிகாரம் எட்டடித்தது. அந்தக் கணத்தில், மாகடலின் குறுக்கே பெரிய இடியின் உருமல் உருண்டுவந்தது. கப்பற்படை அதனுடைய முதல் வரிசைக் குண்டுகளை வெடித்து விட்டது. எதிர்பார்ப்பு விநாடிகள் நெருங்கிவரும் குண்டுகளின் விரிடும் ஒலிக்குள் சேர்ந்து வெட்ட வெளியில் பரவுவது போன்று தோன்றின.

106

கப்பற்படை குண்டு வரிசையை வெடித்த போது, கடலுக்குச் செல்லும் மாடிப்படியின் மேல் கட்டு மானத்தில் ரோல்லிங் நின்று கொண்டிருந்தான். வாயினின்றும் சுங்கானை அகற்றி விட்டு, நெருங்கிக் கொண்டிருக்கும் குண்டுகளின் கர்ஜனையை உற்றுக் கேட்டான்; மெலோனைட்டும், கொப்புளப் புகை யாவியும் நிறைக்கப்பட்ட, தொண்ணூறு எஃகுப் பேய்களுக்குக் குறையாமல், தீவின் பக்கம், நேரே ரோல்லிங்கின் மூளையை நோக்கிப் பறந்து கொண் டிருந்தன. அவை வெற்றி முழக்கம் செய்தன. அவ னது இதயம் இந்த ஒலிகளைத் தாங்காது போலத் தோன்றியது. கருங்கல் சுவரில் இருந்த ஒரு கதவின் பக்கமாக ரோல்லிங் விரைந்து, பின்வாங்கினான். (குண்டுத்தாக்குதல் நிகழ்ந்தால் தான் தப்பி மறைந் திருப்பதற்கான காப்பிடம் ஒன்றை நெடு நாளைக்கு முன்பே நிலவறையில் ஏற்பாடு செய்திருந்தான்.) குண்டுகள் பேரிரைச்சலுடன் கடலில் வெடித்து விழ, தண்ணீர் தூண்கள் போன்று மேலெழும்பியது. வீச்சு குறுகியதாக இருந்தது.

அப்போது, ஒளிபுகும் கோபுரத்தின் உச்சியை நோக்கி ரோல்லிங் உற்றுப்பார்த்தான். முன்னைய மாலையிலிருந்து அங்கு காரின் அமர்ந்து கொண்

டிருந்தான். மேலிருந்த உருண்டைக் கும்மட்டம் சுழன்று கொண்டிருந்தது, அதன் பிளவுகளின் இயக் கத்தினால் அது புலப்பட்டது. ரோல்லிங் தனது வில் மூக்குக் கண்ணாடியை அணிந்துகொண்டு தலை யை நிமிர்த்தினான். கும்மட்டம் வலமும் இடமும், மிகு விரைவில் திரும்பியது. வலப்புறம் அது இயங் கியபோது ஹைபர்பாலாயிடின் ஒளிரும் குழாய் பிள வின் மேலும் கீழும் இயங்குவதை அவனால் பார்க்க இயன்றது.

எல்லாவற்றிலும் மிக அச்சந்தது காரின் ஹைபர் பாலாயிடை இயக்கிய விரைவுதான். அத்துடன் ஓசை யின்மை—தீவில் ஒருசிறு ஓசை கூட இல்லை.

வானத்தில் ஒரு நீர்க்குமிழி வெடிப்பது போன்று மந்தமான, விரிகின்ற ஒலி கடலிலிருந்து வந்தது. தனது வியர்க்கும் மூக்கின்மேல் வில் மூக்குக் கண் ணாடியைச் சரிசெய்துகொண்டு, கப்பற்படையின் பக்கம் ரோல்லிங் நோக்கினான். வெளிர் மஞ்சள் புகைப் பிழம்புகள் மூன்று காளான்கள் போன்று மிதந்தன. அவற்றிற்கு இடப்புறம், சிதைந்த மேகங் கள் மேற்கிளம்பிக் குருதி போன்று சிவப்பாக மாறி, நான்காவது காளானாக வளர்ந்தன. நான்காவது இடியின் ஓசை தீவின் பக்கம் உருண்டது.

வில் மூக்குக் கண்ணாடி ரோல்லிங்கின் மூக்கி லிருந்து நழுவியது. எனினும், ஆண்மையுடன், அவன் அங்கே நின்று, அடிவானத்தில் வளர்ந்த காளான் களையும் அமெரிக்கப் போர்க்கப்பல்கள் எட்டும் ஒன்றன் பின்னொன்றாக வெடித்துக் காற்றில் பறந்த தையும் கூர்ந்து நோக்கினான்.

மீண்டும் தீவிலும் கடலிலும் காற்றிலும் அமைதி நிலவியது. ஒளிபுகும் கோபுரத்தின் உள்ளாக லிப்ட் மேலிருந்து இறங்கிற்று. வீட்டின் உட்புறத்தில் கத வுகள் படீரென்று மூடின. ஒரு கூத்துப்பாட்டை ராக மின்றி சீழ்க்கையடித்துக்கொண்டு காரின் வெளியே ஓடினான். அவன் முகம் அலுத்துப்போய்ச் சோர் வுற்றிருந்தது. அவனது தலைமயிர் குத்திட்டு நின் றது.

அவன் ரோல்லிங்கைக் கவனிக்காமல் ஆடை

களையத் தொடங்கினான். படிகளின் வழியாகக் கீழிறங்கிக் கடலின் விளிம்பையடைந்து, அங்கே தனது பட்டுச் சட்டையையும் இளஞ்சிவப்பு நிறமுடைய உள்காற்சட்டையையும் நீக்கினான். கப்பற்படை அழிக்கப்பட்ட இடத்தில் இன்னும் புகை நிலைத்திருந்த கடலைப் பார்த்துக்கொண்டே, காரின் தனது அக்குள்களினுள் சொறிந்துகொண்டான். அவனது உடல் பெண்ணினது போன்று வெளுத்தும் கொழுத்தும் இருந்தது. அவனது அம்மண நிலையில் நாணுவதற்கும் அவருவருப்பதற்கும் உரித ஏதோ ஒன்று இருந்தது.

அவன் காலினால் நீரைத் தொட்டுப் பார்த்தான். வருகின்ற அலையை எதிர்நோக்கி பெண்ணைப் போன்று கால்மடித்து அமர்ந்தான். சற்று நீந்தினான். உடனேயே வெளியேறிவிட்டான்; அப்போதுதான் அவன் ரோல்லிங்கைப் பார்த்தான்.

''ஹலோ,'' என்று இழுத்தாற்போல் விளித்தான். ''நீங்களும் முழுக விரும்புறீங்களா? பேய்க் குளிராயிருக்கு.''

திடீரென்று கடகடவெனச் சிரித்தான், உடைகளை எடுத்து கையில் அலையவிட்டவாறே வீட்டிற்குத் திரும்பினான்.

பெரிய வெண்கலக் கதவுகளைத் திறந்த காரின் சுற்றிலும் திரும்பினான்.

''மாமா, காலை உணவுக்கு வாங்க,'' என்றான், ''நாம் ஒரு ஷாம்பேயின் போத்தலைப் பங்கு போடுவோம்.''

107

அடிமேல் அடியெடுத்து வைத்துக் கீழ்ப்படிவுடன் காலையுணவுக்குச் சென்றது ரோல்லிங்கின் நடத்தையில் மிக விந்தையானதாகும். மேசை முன்னர் அவர்கள் இருவரைத் தவிர ஸோயா மட்டுமே இருந்தாள். அண்மையில் பெற்ற மனக்கலக்கம் தரும் அநுபவங்கள்ால் வெளுத்துப்போய்ப் பேசாதிருந்தாள். கிளா

சை உதடுகளுக்கு உயர்த்திய போது, கண்ணாடி, அவளது வரிசையான வெள்ளிய பற்களில் பட்டுக் கணகணத்தது.

தனது சமநிலையை இழந்துவிடக்கூடும் என்று அஞ்சியவன் போல ரோல்லிங் முழு நேரமும் ஒரு குறிப்பிட்ட இடத்தையே—ஷாம்பேயின் போத்தலின் தங்க நிற மூடியையே—குத்திட்டுப் பார்த்துக் கொண்டிருந்தான். இதற்கு முன்பெல்லாம் வன்மையானது, ஆற்றல் வாய்ந்தது என ரோல்லிங் கருதியனவற்றை எல்லாம் சில நிமிடங்களில் அழித்துவிட்ட அந்தப் பாழான கருவியின் வடிவத்தில் அமைக்கப் பட்டிருந்தது அது.

தனது நனைந்த முடியை வாரிவிடாமலும், கழுத்துப் பட்டையின்றிக் கசங்கிச் சுருங்கிய கோட்டு அணிந்துகொண்டும், காரின் அருத்தமில்லாது ஏதேதோ பிதற்றினான். சிப்பிகளை விழுங்கினான். ஒன்றன் பின் ஒன்றாக சில கிளாஸ் ஒயின் குடித்தான்.

''எவ்வளவு பசியுடன் இருந்தேன் என்பதை இப்பத்தான் நான் உணர்றேன்.''

''நீங்க கடினமாக வேலைசெய்திங்க, என் நண்பரே,'' என்றாள் ஸோயா மெதுவாக.

''ஆமாம். நான் மிக்க அச்சம் கொண்ட ஒரு கணம் இருந்தது என்பதை நான் ஒப்புக்கொள்றேன், பீரங்கி வெடிகளினால் உண்டான புகையில் அடிவானம் மறைந்த நேரந்தான் அது... அவர்கள் முந்திக்கொண்டார்கள்... பேய்கள்... குண்டு வீச்சின் எல்லையை இன்னும் அறுநூறு அடி அதிகப்படுத்தி இருந்திருப்பார்களோயானால், இந்த வீட்டிலோ அன்றித் தீவிலோ எதுவுமே எஞ்சியிருக்காது...''

இன்னொரு கிளாஸ் ஒயின் குடித்தான். பசித்திருப்பதாக அவன் சொன்னாலும், சரிகையுடையணிந்த வெயிட்டர் இன்னொரு தட்டு உணவு தர முற்பட்டபோது, அவனைத் தனது முழங்கையினால் அப்பால் தள்ளினான்.

''நல்லது, மாமா?'' திடீரென்று ரோல்லிங் பக்கம் திரும்பினான். இப்போது, சிறிது கூட முறுவலின்றி அவனை நேரே விழித்து நோக்கினான். ''நாம்

கண்டிப்பான பேச்சு நடத்துவதற்குரிய நேரம் இது அல்லது, இன்னும் கலக்கவைக்கும் விளைவுகளுக் காகக் காத்துக் கொண்டிருக்கப் போறீங்களா?''

எந்த ஓசையுமின்றி தனது முள்கரண்டியைத் தட்டின் மீது வைத்த ரோல்லிங் கண்களைத் தாழ்த் தினான்:

''சொல்லுங்க, நான் கேட்டுக் கொண்டிருக் கிறேன்.''

''வெகு காலத்திற்கு முன்பே இப்படிச் செய்தி ருக்கணும்... ஏற்கெனவே இரு முறை உங்களுக்குக் கூட்டுப்பங்குதாரர் உரிமை தர முன்வந்தேன். உங் களுக்கு நினைவிருக்கும் என்று நம்புறேன். எனினும், நான் உங்களைக் குறை சொல்லலே: நீங்க சிந்தனை யாளர் அன்று, நீங்க எருமை இனத்தைச் சார்ந்த வர். இப்பத் திரும்பவும் அதே யோசனையை முன் வைக்கிறேன். ஆச்சரியப்படுறீங்க, இல்லையா? நான் விளக்குறேன். நான் ஓர் அமைப்பாளன். கனத்துப் போன, மிகமிக முட்டாள்தனமான காழ்ப்புகள் நிறைந்த உங்கள் முதலாளித்துவ முறையை நான் மறுநிர்மாணம் செய்யப் போறேன். புரியுதா? நான் அதனைச் செய்யாட்டா கம்யூனிஸ்டுகள் உங்களை ஒரு துளி உப்புடன் சேர்த்து மென்று சந்தோஷமா துப்பிடுவாங்க. என் வாழ்க்கையிலே உண்மையாகவே நான் வெறுக்கக்கூடிய ஒரே விஷயம் கம்யூனிஸம் தான்... ஏன்? ஏன்னா, பியோத்தர் காரின் ஆகிய என்னையும் என் மூளையிலுள்ள திட்டங்களின் முழுப் பிரபஞ்சத்தையும் அது அழித்துவிடும்... எதுக் காக நீங்க! எனக்குத் தேவைப்படுறீங்க என்று நீங்க கேட்கலாம், ரோல்லிங், எடுக்க எடுக்கக் குறையாத தங்கம் என் காலடிகளின் கீழ் கிடக்கும் போது?''

''ஆமாம், நான் கேட்கத்தான் செய்றேன்,'' என்று கம்மிய குரலில் ரோல்லிங் முறுமுறுத்தான்.

''கையேன் மிளகுடன் ஒரு கிளாஸ் ஜின் குடி யுங்க, மாமா, அது உங்க கற்பனையைத் தெளிவு படுத்தும். தங்கத்தைச் சாணியாக்க நான் விரும்பு றேன் என்று ஒரு கணமேனும் நீங்க கற்பனை செய்ய முடியுமா? மனித இனம் முழுமைக்கும், மகிழ்ச்சி

மிக்க சில நாள்களை நான் கட்டாயம் ஏற்பாடு செய்வேன். இரண்டு சென்ட் விலை கொண்ட ஒரு பவுண்டு தங்கத்தை ஒவ்வொரு மனிதனும் கையில் வைத்துத் திரியுமளவு அச்சுறுத்தும் கொடும் பாறையின் உச்சிக்கே மக்களை இழுத்துச்செல்வேன்.''

திடீரென்று ரோல்லிங் தலையை நிமிர்த்தினான். அவனது மங்கிய கண்கள், இளமை மிளிர்வைக் காட்டின, அவனது வாய் நெளிந்து முறுவலித்தது.

''ஆகா,'' எனக் கத்தினான்.

''அதுதான்—ஆகா! புரிந்துகொண்டீங்க, கடைசியில்?.. முழுக் கலவரம் நிறைந்த அந்த நாள்களில், நாம், அதாவது நானும் நீங்களும், வேறு முந்நூறு எருமைகளும், அல்லது உலகக் கயவாளிகளும், அல்லது பணத்துறை மன்னர்களும்—விரும்புகிற எந்தப் பெயரையும் நீங்க பொறுக்கிக்கொள்ளுங்க—நாம் உலகத்தோட மென்னியைப் பிடிப்போம். எல்லாத் தொழிற்சாலைகளையும் எல்லா இருப்புப்பாதைகளையும் எல்லா விமான, கப்பற் படைகளையும் நாம் விலைக்கு வாங்குவோம்... நமக்குத் தேவைப்படக் கூடிய எல்லாமே அல்லது நமக்குப் பயன்படக்கூடிய எல்லாமே நம்முடையதாகும். பிறகு இத்தீவையும் சுரங்கத்தையும் பிற எல்லாத்தையும் வெடிவைத்துத் தகர்த்து விட்டு, உலகின் தங்க வளம் குறைவாக இருக்கிறது என்றும், தங்கம் நம் கைகளில் இருக்கிறதென்றும், அது முன்போன்று மதிப்பீடுகளின் அளவாக மட்டுமே செயல்படும் என்றும் நாம் அறிவிப்போம்.''

தனது நாற்காலியில் பின்னே சாய்ந்துகொண்டு செவிமடுத்த ரோல்லிங்கின் தங்கபீ பற்கள் நிறைந்த வாய் சுறா மீனின் வாய் போன்று பிளந்தது. அவன் முகம் சிவப்புற்றது.

இவ்வாறே அசையாது, சிறு கண்கள் ஒளிர அமர்ந்திருந்தான். அம்முதியவனுக்கு வலிப்பு ஏற்படுமோ என்று கூட ஸோயா ஒரு கணம் எண்ணினாள்.

''ஆகா,'' என்று மீண்டும் கத்தினான். ''அது துணிச்சலான கருத்து... வெற்றி வாய்ப்புக்கள் இருக்கு... ஆனா வேலை நிறுத்தம், கலகம் போன்ற

கஷ்டங்களை நீங்க கணக்கில் எடுத்துக் கொள்ள லே...''

''அதுதான் என்னோட முதலாவது கருத்து,'' என்றான் காரின் வெடுக்கென்று. ''மிகப்பெரிய தன் டனை முகாம்களைக் கட்டுவதன் மூலம் நாம் தொ டங்குவோம். நம்முடைய ஆட்சியில் திருப்தியடை யாதவுங்க எல்லாரும் முள்கம்பிக்குப் பின்னே போ வாங்க. பிறகு நாம் மூளையை அலியாக்குவது பற்றிய சட்டத்தைப் புகுத்துவோம்... ஆகவே, நண்பரே, உங்களோட தலைவனா என்னைத் தேர்ந்தெடுப்பீங் களா?.. ஹா!'' (திடீரென்று கண் சிமிட்டினான், அது அச்சுறுத்துவதாக இருந்தது.)

ரோல்லிங் தலை குனிந்து புருவங்களை நெரித் தான். அவன் வினவப்பட்டுவிட்டான், விடை தரு வதற்கு முன் எண்ணிப் பார்க்க வேண்டியிருந்தது.

''திரு. காரின், இந்த நடவடிக்கையை எடுக்க நீங்க என்னைக் கட்டாயப்படுத்துறீங்களா?''

''நீங்க என்ன நினைக்கிறீங்க, மாமா? நான் மண்டியிட்டு உங்களிடம் கெஞ்ச விரும்புறீங்களா? நீண்ட காலமாகவே நீங்க என்னை இரட்சகனாக எதிர்பார்த்துக் கொண்டிருக்கீங்க என்பதை நீங்க ளாகவே உணரவில்லை என்றால் நான் உங்களைக் கட்டாயப்படுத்துவேன்.''

''அருமை,'' என்று ரோல்லிங், பல்லைக்கடித்துக் கொண்டே கூறினான். மேசையின் குறுக்கே தனது கரடுமுரடான நீலம் பாரித்த கையை காரின் பக்கம் நீட்டினான்.

''அருமை,'' என்று திருப்பிக் கூறினான் காரின். ''நிகழ்ச்சிகள் பயங்கர வேகத்திலே போய்க்கொண் டிருக்கு. கண்டத்தில் முந்நூறு மன்னர்களின் கருத் துக்கள் தயார் செய்தாகணும். என்னுடைய தீவைத் தாக்கி அழிப்பதற்காகப் போர்க்கப்பல்கள் சேர்ந்த படையொன்றை அனுப்பிய அரசாங்கத்தின் அறி வீனத்தைப் பற்றி நீங்க அவர்களுக்குக் கடிதம் எழுதுங்க. 'தங்க பீதிக்கு' அவர்களை நீங்க தயார் செய்யணும். (அவன் விரல்களைச் சொடக்கினான்; சரிகையுடுத்திய வெயிட்டர் ஒருவன் அணுகினான்.)

இன்னும் சற்று ஷாம்பேயின் ஊற்று. ரோல்லிங், பெரிய வரலாற்றுப் பெருமை பெறும் கலகத்திற்காக நாம் குடிப்போம்... எண்ணிப்பாருங்க, நண்பரே, நம்முடன் ஒப்பிட்டுப் பார்க்கையில், முஸோலினி வெறும் நாய்க்குட்டி தான்...''

ஆகவே பியோத்தர் காரின் திரு.ரோல்லிங்குடன் ஓர் உடன்பாட்டிற்கு வந்தான்... வரலாறு முடுக்கி விடப்பட்டது, தங்க லாடமடித்த குளம்புகளால் முட்டாள்களின் மண்டையோடுகளின் மேல் கடகட வென்று ஒலித்தவாறு, வரலாறு பாய்ந்தோடியது.

108

அந்த பசிபிக் கடற்படைப் பிரிவு அழிக்கப்பட்டதை யொட்டி, அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் ஏற்பட்ட எதிரொலிகள் பயங்கரமானவையாகவும் இதற்கு முன்னர் அறியப்படாதனவாகவும் இருந்தன. அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்குத் தரப்பட்ட அடி உலகெங்கணும் திரும்ப எதிரொலித்தது. ஜெர்மனி, பிரான்ஸ், பிரிட்டன், இத்தாலி ஆகியவற்றின் அரசாங்கங்கள், எதிர்பாராதவகையில், ஆரோக்கியமற்ற பதற்றத்துடன் உளச்சோர்வு நீங்கி உற்சாகமடைந்தன: பிதுங்கப் பிதுங்கத் தங்கம் வைத்திருக்கும் அமெரிக்காவுக்கு ஒருவேளை இந்த ஆண்டு (ஒருவேளை வேறு ஆண்டில்) வட்டி செலுத்த வேண்டியிராது போலும் என்று அந்த அரசாங்கங்கள் வியந்தன. ''இந்த அரக்கனுக்குக் கால்கள் களிமண்ணாலானவை போலும்,'' என்றன பத்திரிகைகள், ''உலகத்தை வெல்வது அவ்வளவு எளிது அன்று...''

இதே நேரத்தில், 'அரிஸோனா' புரிந்த கொள்ளைகள் பற்றிய செய்திகளால் கடல் வணிகத்தில் தடை ஏற்பட்டது. நீராவிக்கப்பலுடையவர்கள் சுமைகளை ஏற்ற மறுத்தனர், நீராவிக்கப்பல் காப்டன்கள் மாகடலின் குறுக்கே செல்ல அஞ்சினர், இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகள் தவணைத் தொகையை உயர்த்தின, வங்கி உலகில் குழப்பம் நிலவியது, நாணய

மாற்றுச் சீட்டுகள் ஏற்கப்படவில்லை, சில வாணிப நிலையங்கள் நொடித்துப் போயின, அமெரிக்கக் காலனிச் சந்தைகளுக்கு ஜப்பான் தனது மலிவான சரக்குகளை விரைவில் கொண்டுபோய்க் குவிக்கத் தொடங்கியது.

வருந்தத்தக்க அந்தக் கடற்போரினால், அமெரிக்காவுக்குப் பெருந்தொகை இழப்பு ஏற்பட்டது. அதன் மதிப்பு, அல்லது வேறு பெயரால் சுட்டப் பட்டது போன்று அதன் 'தேசியப் பெருமை' மிகக் கடுமையாகத் தாக்குண்டு தாழ்ந்தது. கடற் படைகளையும் விமானப் படைகளையும் எல்லாவற்றையும் ஒன்று திரட்டி, என்ன செலவு நேரினும் வெற்றி முடிவு காணும்வரைப் போர் நடத்துமாறு எந்திரத் தொழில் முதலாளிகள் வற்புறுத்தினார்கள். பியேர் ஹொர்ரியைப் பிடித்து இரும்புக் கூண்டில் அடைத்து நியூயார்க்குக்குக் கொண்டுவந்து மின்சார நாற்காலியில் அமரச்செய்து கொல்லும்வரைத் துக்கம் கொண்டாடப்போவதாக அமெரிக்கப் பத்திரிகைகள் மிரட்டின. (இப் பத்திரிகைகளின் பெயர்கள் கறுப்புக் கட்டங்களுக்குள் அச்சிடப்பட்டன. இதற்கொன்றும் செலவு மிகுதியில்லை, என்றாலும் இது பல மக்களின் மனத்தில் கலக்கத்தை உண்டாக்கியது.) பையில் வைக்கக் கூடிய சிற்றுருவில் உள்ள 'இன்ஃபிரா-ரெட்' கதிர்க் கருவிகளையுடைய காரினின் முகவர்களைப் பற்றிய திடுக்கிடும் வதந்திகள் மக்களினிடையே பரவி வந்தன. பெயரறியா நபர்கள் அடிக்கப்பட்டதும், திரைப்பட அரங்குகளிலும், உண்டிச் சாலைகளிலும், தெருக்களிலும் கணப்பொழுதில் கலவரங்கள் நேர்ந்ததும் ஆன நிகழ்ச்சிகள் நடந்தன. வாஷிங்டன் அரசாங்கம் உரத்த சொற்களை முழங்கியது, ஆனால் உண்மையில் முற்றும் குழப்பமான நிலையிலிருந்தது. அந்தக் கப்பற்படைப் பிரிவு முழுதிலும் பொன் தீவின் அருகே அழிவிலிருந்து தப்பிய ஒரே ஒரு நாசகாரிக்கப்பல், போர் அமைச்சரகத்துக்கு அச்சண்டையைப் பற்றிக் கொண்டுவந்த செய்தியின் விவரங்கள் பயங்கரமாக இருந்ததால், அதனை வெளியிட அமைச்சகம் அஞ்சியது. கயவர்

களின் தீவின் ஒளிபுகும் கோபுரத்திற்கு எதிராகப் பதினேழு அங்குலப் பீரங்கிகள் ஆற்றலற்றவையாய் இருந்தன.

மனத்தைக் கலக்கும் இச்செய்திகள், அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசாங்கத்தை, வாஷிங்டன் நகரில் ஒரு மாநாடு கூட்டுமாறு கட்டாயப்படுத்தின.

மாநாட்டின் நாள் அறிவிக்கப்பட்டபோது, எல்லா நாடுகளிலும் உள்ள பத்திரிகை அலுவலகங்களும், வானொலி நிலையங்களும் மாநாட்டுத் தொடக்கத்தில் என்ஜினியர் காரின் நேரில் கலந்துகொள்வான் என்ற கருத்துடைய செய்தியைப் பெற்றன.

109

காரினும் சேர்மாக்கும் ஷெபெரும் முதன்மையான சுரங்கத்தின் ஆழப் பகுதிக்குள் லிப்டில் இறங்கினர். குழாய்கள், கம்பிகள், முட்டுத்தூண்கள், உயரத்தூக்கிக் கிணறுகள், மேடைகள், இருப்புக் கதவுகள் ஆகியவற்றின் வரிசைகள், முடிவற்றனவாய் மைக்கா சன்னல்களைத் தாண்டி, மின்னல் போல மறைந்தன.

புவிப் புறணியின் பதினெட்டு அடுக்குகளினூடே அவர்கள் கடந்து சென்றனர். மரத்தின் அடிப்பகுதியில் உள்ள வளையங்கள் அதன் அகவையினை அறிவிப்பது போன்று, இந்தப் படிவுகள் நிலக்கோளத்து வரலாற்றின் சகாப்தங்களை அறிவித்தன. 'நெருப்பிலிருந்து' நான்காவது படிவில் தான் கரிம வாழ்க்கை தொடங்கியது. தொல்லுயிர்ச் சகாப்த மாகடலால் ஆகியது அப்படுகை. இம்மாகடலின் தூய நீரில் கதிரியக்க உப்புக்களும், பேரளவுகளில் கரியமிலமும் கலந்திருந்தன. இதுதான் 'உயிர் நீர்'.

அடுத்த—இடையுயிர்—சகாப்தத்தின் தொடக்கத்தில் இம்மாகடலுக்குள்ளிருந்து பூதாகாரமான விந்தைப் பிராணிகள் வெளிவந்தன. பல மில்லியன் ஆண்டுகளுக்குத் தங்களுடைய பசி மற்றும் காம வேட்கையின் அலறல்களுடன் பூமியை நடுங்க வைத்

தன. இன்னும் மேலே, சுரங்கப் படிவுகளில் பறவைகளின் எஞ்சிய பகுதிகளும், இன்னும் மேலே பாலூட்டிகளின் எஞ்சிய பகுதிகளும் காணப்பட்டன. இந்தப் பின்னைய படுகை மனித இனத்தின் கடுமையான தோற்றக் காலமாகிய பனிக்கட்டிச் சகாப்தத்துக்கு நெருங்கியதாக இருந்தது.

எரிமலையின் இயக்கத்தால் உண்டாகும் தீக் கொழுந்துகளாலும் கலக்கத்தாலும் ஆக்கப்பட்டதும், இறுதியானதுமாகிய பத்தொன்பதாவது படிவினூடே லிப்ட் இறங்கிக் கொண்டிருந்தது. கெட்டியான கருஞ் செந்நிறம் கொண்ட, நுண்மணிச் செறிவுள்ள, கரும்பாறையால் ஆன தொடக்கச் சகாப்தப் பூமி இதுவே.

பொறுமையிழந்து நகங்களைக் கடித்தான் காரின். மூவருமே பேசவில்லை, மூச்சு விடுவது கடினமாக இருந்தது. ஒவ்வொருவனும் முதுகின் மேல் ஆக்ஸிஜென் கருவியைத் தாங்கியிருந்தான். ஹைபர் பாலாயிடுகளின் உறுமலையும் வெடிகளையும் அவர்களால் கேட்க முடிந்தது.

மின்விளக்குகளால் ஒளி நிறைந்த தெளிவான பட்டையினுள் லிப்ட் நுழைந்து, வாயுக்களைச் சேர்த்துக் கொண்டிருந்த ஒரு பெரிய புனலின் மேல் வந்து நின்றது. நீருள் மூழ்குவோர் அணிவது போன்ற, ரப்பராலான உருண்டைத் தலை மூடிகளை அணிந்து கொண்டு, காரினும் ஷெபெரும் புனலின் மடிப்புக் கதவுகளில் ஒன்றினூடே, ஐந்தடுக்கு வீடொன்றின் உயரத்தைப் போன்ற தொலைக்குக்கீழே செங்குத்தாகச் சென்ற ஓர் உலோக ஏணியை அடைந்தனர். ஒரு வட்டமேடையில் முடிவுற்ற இடத்தில் அவர்கள் இறங்கினர். அந்த மேடைமீது, பல தொழிலாளர்கள், இடுப்புவரைச் சட்டையை நீக்கி விட்டு, முகமூடியணிந்து கொண்டும், முதுகின்மீது ஆக்ஸிஜென் கருவிகளைத் தாங்கிக்கொண்டும், ஹைபர்பாலாயிடுகளுக்கு மேலே மண்டியிட்டும் உட்கார்ந்திருந்தார்கள். தொழிலாளர்கள் உறுமுகின்ற பள்ளத்துக்குள் நோக்கியவாறு, ஒளிக்கதிர்களைச் சரிசெய்து செலுத்திக்கொண்டிருந்தனர்.

இதே போன்ற உருண்டையான எஃகுப் படிகள் கொண்ட செங்குத்தான ஏணிகள், இம்மேடையைக் கீழ்மேடையுடன் இணைத்தன. அங்குதான் திரவக் காற்றினால் குளிர்விக்கும் கருவிகள் இருந்தன. இந்தக் கீழ்மேடையில் இருந்த தொழிலாளர்கள், ரப்பர் கலந்த நமுதாத் துணியால் ஆக்கப்பட்ட உடையணிந்து, ஆக்ஸிஜென் தலை மூடியணிந்து, குளிர்கலங்கள், உயரத்தூக்கிக் கரண்டிகள் ஆகியவற்றின் வேலையைக் கட்டுப்படுத்தினர். வேலை செய்யும் இடங்களுள் மிக்க அபாயம் உள்ள இடம் இதுதான். ஏதேனும் தாறுமாறான ஒரு நகர்வு இருப்பினும், ஹைபர்பாலாயிடின் ஊடறுக்கும் கதிரில் ஒருவன் அகப்பட்டுக் கொள்வான். கீழே, பழுக்கக் காய்ந்த பாறைகள் திரவக்காற்றோட்டத்தில் பிளந்து வெடித்தன. பாறைகளின் துண்டுகளும் வாயுக்களின் படலங்களும் கீழிருந்து வந்தன.

உயரத்தூக்கிகள் மணிக்கு ஐம்பது டன் பாறை வரை அப்புறப்படுத்தின. வேலை நன்றாக நடந்து கொண்டிருந்தது. உயரத்தூக்கிகளின் கரண்டிகள் ஆழமாகத் தோண்டத் தோண்ட, மாந்ஸெலின் அமைப்புப்படங்களின் படிக் கட்டப்பட்ட 'இரும்பு அகழெலி' எனப்பட்ட முழு அமைப்பும்—ஹைபர்பாலாயிடுகள் அமைந்த வட்டமேடைகளும் மேலே வாயுக்களைச் சேர்க்கும் புனலும் கொண்ட முழு அமைப்பும்—கீழே இறங்கியது. 'அகழெலி' அமைப்புக்கு மேலே, சுரங்கத்தைக் கெட்டிப்படுத்தும் வேலை தொடங்கியது.

தன்னைக் கடந்து பறப்பது போன்று சென்ற ரண்டிகளுள் ஒன்றிலிருந்து சாம்பல் நிறத் தூளில் ரு கைப்பிடியளவு ஷெபெர் எடுத்தான். காரின் அதனைத் தன் விரல்களுக்கிடையில் தேய்த்தான். ஒரு சிகரெட் பெட்டியின் மீது சில சொற்களை எழுதினான்: ''கனத்த உலோகக் கசடு. எரிமலைக் குழம்பு.''

வட்ட மூக்குக் கண்ணாடி இணைக்கப்பட்ட தலைக் கவசத்தை அசைத்தான் ஷெபெர். வட்ட மேடையின் விளிம்போரமாக எச்சரிக்கையாக

நகர்ந்துசென்று, ஒற்றைக் கற்பாளச் சுவர்களின் மீது இருப்புக் கயிறுகளில் தொங்கிக்கொண்டிருந்த கருவிகளுக்கு முன்னே அவர்கள் நின்றனர். 'இரும்பு அகழெலி' அமைப்பு முழுவதுடனும் ஒருசேரக் கீழே சென்றுகொண்டிருந்த இவற்றில் காற்றழுத்த அளவிகள், நிலநடுக்க வரைவிகள், திசையறி வட்டங்கள், குறிப்பிட்ட ஆழத்தில், புவி ஈர்ப்பு ஆற்றலின் தீவிரத்தை அளக்கும் ஊசலாட்டக் குண்டுகள், மின் காந்த அளவிகள் ஆகிய எல்லாம் இருந்தன.

ஷெபெர் ஊசலாட்டக் குண்டைச் சுட்டிக்காட்டி, காரினிடமிருந்து சிகரெட் பெட்டியை வாங்கித் தெளிவான, ஒழுங்கான ஜெர்மானியக் கையெழுத்தில் அதன் மீது மெதுவாக எழுதினான்:

''நேற்றுக் காலையிலிருந்து, புவி ஈர்ப்பு ஆற்றலின் தீவிரம், நூற்றில் ஒன்பது பங்கு மிகுந்துள்ளது. இந்த ஆழத்தில் விரைவு அலகு 0.98 வரை குறைய வேண்டும். மாறாக அது 1.07 ஆக ஏறியிருக்கிறது.''

''காந்தங்களா?'' என்று எழுதினான் காரின்.

ஷெபெர் விடை எழுதினான்:

''இன்று காலையிலிருந்து, எல்லாக் காந்தக் கருவிகளும் பூஜ்ஜியத்தில் நின்றிருக்கின்றன. நாம் காந்த மண்டலத்திற்கும் கீழ் இருக்கிறோம்.''

கைகளை முழங்காலின் மீது ஊன்றியபடி, கண்ணாற்பார்க்க முடியாத புள்ளி வரையும் குறுகிக் கொண்டே சென்ற அக்கருங் குழியினுள் நெடுநேரம் கீழ் நோக்கியவாறு காரின் நின்றான். அவ்விடத்தில் தரையினுள்ளே கடித்துக் கடித்து வழியுண்டாக்கிச் சென்ற அந்த 'இரும்பு அகழெலி' உறுமியது. அன்று காலை முதல் சுரங்கம் ஆலிவீன் பட்டைக்குள்ளாக நுழைக்கத் தொடங்கியது.

110

''எப்படி இருக்கிறாய், இவான்?''

ஷெல்கா பையனின் தலையை வருடினான். கடற்கரையோரமாக இருந்த சிறு வீட்டின் சன்னலருகே

அவனுடன் இவான் கடலை நோக்கிக் கொண்டு அமர்ந்திருந்தான். அவ்வீடு கரையோரப் பாறைக் கற்களால் கட்டப்பட்டு, வெளிர் மஞ்சள் நிறக் களிமண் மேலே பூசப்பட்டிருந்தது. வெளியே, நீல நிற மாகடலில் அலைகள் எழும்பி, வெண்மையாக நுரைத்துக்கொண்டு பவளப்பாறைத் தொடர்களிலும், ஷெல்கா வசித்துவந்த தனித்த விரிகுடாக் கரையோர மணல் மீதும் மோதிச் சிதறின.

இவான் அரை உயிருடன் ஆகாயக்கப்பலில் அத்தீவிற்குக் கொணரப்பட்டான். மிகமிக கஷ்டப்பட்டு முயன்று, ஷெல்கா அவனைக் குணப்படுத்தினான். அத்தீவில் ஒரு நண்பனைப் பெற்றிருந்திராவிடின், இவான் பிழைத்திருப்பது அரிதே. அவன் உடல் முழுதும் பனியால் விறைத்திருந்தது, கடுமையான தடிமனால் பாதிக்கப் பட்டிருந்தான். எல்லாவற்றையும் விடப் படுமோசமாக அவனது மனம் சோர்வுற்றிருந்தது: மக்களை நம்பினான், இயன்றவரை பாடுபட்டு முயன்றான், ஆயினும் விளைந்தது என்ன?

''மீண்டும் சோவியத் ருஷ்யாவுக்குச் செல்ல எனக்கு வகையில்லை, தோழர் ஷெல்கா! நான் கைது செய்யப்படுவேன்.''

''முட்டாளாக இராதே! அது உன்னுடைய தவறு இல்லை.''

இவான் கடற்கரையில் பாறை மீது அமர்ந்திருந்தாலும் சரி, நண்டுகள் பிடித்தாலும் சரி, அல்லது தீவின் அற்புதங்களுக்கிடையே, நெரியும் அயல் நாட்டினருக்கிடையே, மும்முரமான செயல்களுக்கு இடையே திரிந்தாலும் சரி, அவன் கண்கள், வீட்டு நினைப்பைத் தோற்றும் பார்வையுடன், எரிகின்ற பந்துபோல சூரியன் மறைந்த மேற்குப் பக்கம் அடிக்கடி திரும்பும், அங்குத்தான், சூரியனுக்கும் நெடுந்தொலைவுக்கப்பால், சோவியத் யூனியன் இருந்தது.

''இங்கே இப்போது இரவு,'' என்று மெதுவான குரலில் அவன் சொன்னான், ''ஆனா, லெனின்கிராடில் காலை. தோழர் தராஷ்கின், காலைச் சாப்பாட்டை முடிச்சுட்டு வேலைக்குப் போயிருப்பார். கழக மனையில், இப்ப படகுகளைப் பழுது பார்த்

துக் கொண்டிருப்பாங்க. இன்னும் இரண்டு வாரத்தில் கொடி ஏற்றப்படும்.''

இவான் நலமடைந்தவுடன், அவனுக்குத் தீவின் நிலைமையை எச்சரிக்கையோடு ஷெல்கா விளக்கத் தொடங்கினான். அந்தப் பையன் நிகழ்ச்சிகளின் தன்மையைப் புரிந்துகொள்வதில் விரைவுடையவன் என்றும், அவனது நோக்கம் மாற்ற முடியாத வகையில் சோவியத் சார்புடையதாக இருந்ததென்றும் தராஷ்கின் போலவே ஷெல்கா விரைவில் கண்டு கொண்டான். லெனின்கிராடைப் பற்றி அவ்வளவு மிகையாகச் சிணுங்காது இருந்திருப்பானேயாகில், அவன் தங்கமான பையனாயிருப்பான்.

''இவான்!'' என்றான் ஷெல்கா ஒருநாள் மகிழ்வுடன், ''சீக்கிரமே உன்னை விட்டுக்கு அனுப்பப் போறேன்.''

''நன்றி, வஸீலி வித்தாலியெவிச்.''

''ஆனா, நீ முதலில் செய்ய வேண்டிய சிறு வேலை ஒன்று இருக்கு.''

''அதைச் செய்வேன்.''

''மரமேறுவதில் நீ கெட்டிக்காரனா?''

''சைபீரியாவில், நூற்றைம்பது அடி உயரமுள்ள தேவதாரு மரங்களில், கூம்புக்கனி பறிப்பதற்காக ஏறியிருக்கேன், அந்த உயரத்திலிருந்து தரையைப் பார்க்க முடியாது.''

''நேரம் வருகிற போது என்ன செய்யணும்னு உனக்குச் சொல்வேன். ஆனால், தீவிலே அதிகமாச் சுத்த வேணாம். தூண்டிலை எடுத்துக்கிட்டு, கடல் முள்ளம்பன்றி பிடிக்கிறது மேல்.''

111

மாந்த்ஸெவின் குறிப்புக்களிலும், நாள்குறிப்புக்களிலும் காணப்பட்ட திட்டத்திற்கேற்பத் தன் வேலையில் நம்பிக்கையுடன் காரின் தற்போது முன்னேறினான்.

அகழ்கரண்டிகள் மாக்மாவின் விறல்மிக்க படிவினூடே சென்றன. தரைக்குக் கீழ் இருக்கும் கொந்

தளிக்கும் கடலின் முழக்கம் சுரங்கத்தின் அடியில் எந்நேரத்திலும் கேட்கக் கூடியதாயிருந்தது. நூறு அடி தடிப்புக்குக் குளிரால் விறைக்கச் செய்யப்பட்ட சுரங்கச் சுவர்கள், அழிக்க முடியாத நீளுருளையாக அமைந்தன; எனினும், சுரங்கம் அதிர்ச்சிகளுக்கும் ஊசலாட்டங்களுக்கும் உள்ளாகவே இன்னும் அதிகமாகக் குளிர் ஊட்டி விறைக்க வைப்பதில் அவர்கள் முழு கவனம் செலுத்த வேண்டியிருந்தது. உயரத் தூக்கிகள், படிக இரும்பையும் நிக்கலையும் ஆலிவினையும் இப்போது தரைமட்டத்திற்குக் கொணர்ந்து கொண்டிருந்தன.

புதுமையான அபூர்வத் தோற்றங்கள் காணப்பட்டன. வெளிக் கொணரப்பட்ட பாறைகளைப் பரிசல்களும், செலுத்தும் வார்களும் கடலில் கொண்டு கொட்டிய இடத்தில் வெளிர் நீல வண்ணமுடைய ஒளிவட்டம் தோன்றிற்று. சில நாள்களாக இந்த ஒளி அழுத்தமாக வளர்ந்தது. கடைசியில் கற்களும் மணலும் நீரும் கலந்த ஒரு பெரிய திரட்சி, மிதவைப் பாலங்களின் பகுதிகளுடன் சேர்ந்து வெடித்துக் காற்றில் பறந்தது. வெடியதிர்ச்சியின் பெருவலிமை காரணமாகப் புயலில் தொழிலாளர் கட்டுக்குடியிருப்புகள் தகர்க்கப்பட்டன. தீவின் மீது புரண்டு வந்த அலை சுரங்கங்களை வெள்ளத்தால் பெருக்காமல் சிறிதே தப்பியது.

பாறைப் படிவுகளை நேரே பெரிய படகுகளில் ஏற்றி, மாகடலினுள் நெடுந்தொலைவு கொண்டு செல்ல வேண்டியதாயிற்று. அங்கு, ஒளிவட்டமும் வெடித்தலும், அறவே நிற்க இல்லை. M என்ற உலோகத்தின் அணுச்சிதைவுடன் தொடர்புகொண்ட, இன்னும் இனம் புரியாத சில நிகழ்ச்சிகளினால் இது விளக்கப்பட்டது.

சுரங்கத்தின் அடியிலும் இதே போன்ற விந்தைகள் நிகழ்ந்து கொண்டிருந்தன. தொடக்கத்தில், சற்று முன்னர் பூஜ்ஜியத்தில் நின்றிருந்த காந்தக் கருவிகள், அளவுகடந்த இறுக்கமுள்ள காந்தமண்டலத்தைத் திடீரென்று வெளிப்படுத்தின. அவற்றின் முள்கள், கடைசிக் குறிவரையும் சென்றுவிட்டன.

நடுங்கும் ஊதா ஒளி சுரங்கத்தின் அடியில் தோன்றியது. காற்றே மாற்றம் அடைந்தது போலப் புலப்பட்டது. நைட்ரஜென், ஆக்ஸிஜென் ஆகியவற்றின் அணுக்கள், கணக்கில்லாத ஆல்ஃபா துகள்களால் தாக்கப்பட்டுச் சிதைந்து ஹீலியமாகவும் ஹைட்ரஜனாகவும் மாறின.

விடுபட்ட ஹைட்ரெஜனின் ஒரு பகுதி ஹைபர் பாலாயிடுகளின் கதிர்களில் பட்டு எரிந்தது.—சுரங்கத்தூடே தீநாக்குகள் தத்திப் பாய்ந்து கைத்துப்பாக்கி போன்ற வெடிகள் ஒலித்தன. தொழிலாளரின் உடைகள் தீப்பற்றின. மாக்மா மாகடலின் ஏற்ற வற்றங்களால் சுரங்கங்கள் ஆட்டப்பட்டன. எஃகுக் கரண்டிகளிலும் இரும்புப் பகுதிகளிலும், மண் சிவப்புப் போன்ற ஒரு பூச்சுபடிவது காணப்பட்டது. எந்திரங்களின் இரும்புப் பகுதிகளில் அணுச்சிதைவு தீவிரமாகத் தொடங்கிவிட்டது. கண்புலனாகாத கதிர்களால் தொழிலாளரில் பலர் சூடுண்டனர். இருந்தபோதிலும், 'இரும்பு அகமெழலி' ஆலிவீன் பட்டையினூடே தனது முன்னைய விடாப்பிடியுடன் தொடர்ந்து சென்றது.

காரின் சுரங்கத்தை விட்டு அநேகமாக நீங்கவே இல்லை. இப்போதுதான் தனது முயற்சியின் பைத்தியக்காரத்தனத்தை உணர்ந்தான். கொந்தளிக்கும் தரையடி மாகடல் எவ்வளவு ஆழமுடையது என்றோ, உருகிய ஆலிவீனின் ஊடே எத்தனை ஆயிரம் அடிகள் தொடர்ந்து செல்ல வேண்டும் என்றோ சரியாக ஒருவராலும் சொல்ல முடியாது. ஒன்று மட்டும் உறுதியாயிருந்தது—புவியின் மையத்தில் எல்லை மீறிய குறைந்த வெப்பமுடைய, கடினமான காந்தக் கரு இருப்பதைக் கருவிகள் காட்டின.

சுரங்கத்தின் உறைந்து போன நீளுருளை, அதனைச் சூழ்ந்திருந்த உருகிய பகுதியைவிடச் செறிவு மிக்கதாகையால், புவி ஈர்ப்பின் வன்மையினால் பிளவுண்டு, மையத்திற்கு இழுக்கப்படும் அபாயம் இருந்தது. சுரங்கங்களின் சுவர்களில் அபாயகரமான வெடிப்புக்கள் உண்மையாகவே தோன்றத் தொடங்கின. அவற்றினூடே வாயுக்கள் உஸ்ஸென்று ஒலித்

துக்கொண்டு வெளிப்பட்டன. சுரங்கத்தின் குறுக்கள வைப் பாதியாகக் குறைத்து, வன்மைமிக்க நிமிர்ந்த முட்டுத் தூண்கள் நாட்ட வேண்டியதாயிற்று.

முன்னிருந்ததில் பாதி குறுக்களவுடைய 'இரும்பு அகழெலி' அமைப்பதில் நெடுங்காலம் பிடித்தது. 'அரிஸோனா'விலிருந்து வந்த செய்திகள் மட்டுந் தாம் ஆறுதலளிப்பவையாக இருந்தன. அந்த உல்லாசக் கப்பல் மீண்டும் கொள்ளைக் கொடி கட்டிப் பயணம் செய்து கொண்டிருந்தது; இரவில், மேல் பொர்ன் துறைமுகத்துள் திடீரென்று புகுந்து, தான் வந்திருப்பதை அறிவிப்பதற்காகக் கொப்பரைகள் நிறைந்த பண்டசாலைகளுக்குத் தீவைத்து, ஐந்து மில்லியன் பவுண்டு தருமாறு கோரிக்கை விடுத்தது. (முன்னறிவிப்பாகக் கடற்கரைச் சாலை ஹைபர்பாலாயிட் கதிர்வீச்சால் தகர்க்கப்பட்டது.) சில மணிநேரத்திற்குள், அப்பெரு நகரம் காலியாயிற்று, வங்கிகளால் பணம் தரப்பட்டது. துறைமுகத்தினை விட்டு 'அரிஸோனா' நீங்கிய போது, ஒரு பிரிட்டிஷ் போர்க்கப்பலால் சுடப்பட்டு, நீர்மட்டத்திற்கு மேல், ஆறு அங்குலக் குண்டொன்றினால் தொளைக்கப்பட்டது; பிறகு 'அரிஸோனா' போர்க்கப்பலைத் தாக்கித் துண்டுகளாக வெட்டியது. ஹைபர்பாலாயிட் கோபுரத்திலிருந்து கொண்டு, லாமோல் சீமாட்டி இந்தச் சண்டைக்குத் தலைமை தாங்கி நடத்தினாள்.

இந்தத் தகவல் காரினை நல்ல மனநிலையில் வைத்தது. கடந்த சில நாள்களில் சோர்வுதரும் எண்ணங்களுக்கு இரையாகி இருந்தான். தன்னுடைய கணக்குகளில் மாந்த்ஸெவ் தவறி விட்டான் என்று வைத்துக் கொண்டால்? ஓராண்டிற்கு முன், பெத்ரோகிராடுப் புறத்திலுள்ள தனித்திருந்த வீட்டில் செய்தது போன்று, ஒருவேளை சுரங்கம் தோல்வி தருமேல் அதனைச் சரிக்கட்ட என்ன செய்வது என்று அவன் மூளை வழி தேடத் தொடங்கியது.

ஏப்ரல் மாதம் 25ஆம் நாள் 'அகழெலி' அமைப்பின் உள்ளே, வட்டமேடைமீது நின்றுகொண்டு,

காரின் அசாதாரணமான ஒரு நிகழ்ச்சியைக் கண்டான். அவனுக்கு மேலே இருந்த வாயுக்கள் சேர்ப்பியின் புனலிலிருந்து பாதரச மழை சொரிந்தது. ஹைபர்பாலாயிடுகள் நிறுத்தப்பட வேண்டியதாயிற்று. சுரங்கத்தின் அடிமட்டத்தில் நடைபெற்ற குளிர்விக்கும் வேலை குறைக்கப்பட்டது. அகழ்கரண்டிகள் ஆலிவீனைக் கடந்து தூய பாதரசத்தை இப்போது மேலே கொண்டு வந்தன. மெந்திலேயெவின் அட்டவணையில் பாதரசத்திற்குப் பிறகு தாலியம் (எண் 81) என்னும் உலோகம் இருந்தது. தங்கம் (அணு எடை 197.2, வரிசை எண் 79) அட்டவணைப்படி பாதரசத்திற்கும் மேலே இருந்தது.

பெரு விபத்து நிகழ்ந்துவிட்டது என்பதையும், ஒப்படர்த்திப்படி அமைந்த உலோகங்களின் படிவுகளில் தங்கம் இல்லை என்பதையும் காரினும், என்ஜினியர் ஷெபெரும் மட்டுமே புரிந்துகொண்டனர். பெரு விபத்துத்தான் இது! பாழாய்ப்போன மாந்த்ஸெவ் தவறு செய்துவிட்டான்!

காரினின் தலை கவிழ்ந்தது. எத்தனையோ வகை நிகழ்ச்சிகளை எதிர்பார்த்தான், ஆனால் இது போன்ற இரங்கத்தக்க முடிவை அல்ல... ஷெபெர் எங்கோ நினைவாகக் கையை முன்னே நீட்டி, மேலே இருந்து விழுந்த பாதரசச் சொட்டுக்களை ஏந்தினான். திடீரென்று அவன் காரினின் முழங்கையைப் பற்றிச் செங்குத்து ஏணியருகில் இழுத்துச்சென்றான். அவர்கள் உச்சியை அடைந்து, லிப்டில் நுழைந்து, தலைக் கவசங்களை நீக்கியவுடன், தனது கனத்த காலணிகளால் ஓங்கி மிதித்தான் ஷெபெர். அவனது எலும்பு தட்டிய முகம், சிறு பிள்ளையின் எளிமை முழுதும் கொண்டு, மகிழ்ச்சியினால் ஒளிர்ந்தது.

''இதுதான் தங்கம்!'' என்று கத்திக் கடகடவென்று சிரித்தான். ''நமக்கு வெறும் செம்மறியாட்டு மூளைதான்... தங்கமும் பாதரசமும் அருகருகே கொதிக்கின்றன. என்ன நடக்கும்? பாதரசத் தங்கம்—பாருங்க! '' பாதரசத்தின் சில சொட்டுக்கள் கிடந்த உள்ளங்கையைத் திறந்தான். ''இப்பாத

ரசத்தில் தங்கத்தின் வண்ணம் இருக்கிறது. நூற்றில் தொண்ணூறு பங்கு சொக்கத் தங்கம் ஆகும் இது!''

112

தரையினின்றும் வெளியே, தன் போக்கில் என்னைப் போன்று தங்கம் சொரிந்தது. சுரங்கத்தை ஆழப்படுத்தும் வேலை நிறுத்தப்பட்டது. 'இரும்பு அகழெலி' பிரிக்கப்பட்டு, வெளியில் எடுக்கப்பட்டது. அப்போதைக்கு அமைக்கப்பட்டிருந்த முட்டுத் தூண்கள் நீக்கப்பட்டு, பதிலாகப் பருத்த எஃகு நீள் உருளைகள் நிறுத்தப்பட்டன. அந்த நீள் உருளை சுவர்களின் தடிப்பின் உள்ளே, குளிர்விக்கும் குழாய்கள் பொருத்தப்பட்டன.

மிகப் பேரளவில் வெப்பூட்டப்பட்ட நீராவியினால் மேல் வருமாறு உந்தப்பட்ட பாதரசத் தங்கத்தைச் சுரங்கத்தின் எந்த மட்டத்திலாயினும் வருமாறு செய்ய வெப்பத்தைச் சரி செய்வது மட்டுந்தான் தேவைப்பட்டது. எஃகு நீள் உருளைகள் சுரங்கத்தின் அடிமட்டத்திற்கு இறக்கப்பட்டவுடன் சுரங்கத்தின் உச்சிக்குத் தங்கத்தை உந்த முடியுமென்றும் தரை மட்டத்திலேயே பிறகு கரண்டிகளால் அதனை அகழ முடியுமென்றும் காரின் கணக்கிட்டான்.

சுரங்கத்திலிருந்து வடகிழக்குப் பகுதிக்குப் பாதரசக் குழாய் வழியமைக்கப்பட்டது. அரண்மனையின் இடப்புறத்தில், ஹைபர்பாலாயிட் கோபுரத்தின் அடியில், பாதரசத்திலிருந்து தங்கத்தைப் பிரித்து வடித்தெடுப்பதற்காக, மழமழப்பாக்கப்பட்ட மண் மூசைகள் சேர்ந்த உலையடுப்புக்கள் அமைக்கப்பட்டன.

தொடக்கத்தில் நாள் ஒன்றுக்குப் பத்தாயிரம் பூட்* எடையுள்ள தங்கம், அதாவது நாள்தோறும் நூறு மில்லியன் டாலர் வரை மதிப்புள்ளது,

---

* பூட் என்பது 16.38 கிலோகிராம் கொண்ட பழைய ருஷ்ய எடை. (மொ-ர்.)

ஆக்க வேண்டும் என்று காரின் திட்டமிட்டான்.

தீவிற்குத் திரும்பிவருமாறு 'அரிஸோனா' விற்கு ஒரு கட்டளை அனுப்பப் பட்டது. அவர்களைப் பாராட்டி, லாமோல் சீமாட்டி விடையனுப்பினாள். தான், பசிபிக் மாகடலில் கொள்ளைத் தொழில் நடத்துவதை நிறுத்திவிட்டதாக, உலக முழுதுக்கும் வானொலி மூலம் அறிவித்தாள்.

113

வாஷிங்டன் மாநாடு தொடங்குவதற்குச் சிறிது காலத்திற்கு முன்பு, மாகடலில் செல்லத்தக்க நீராவிக் கப்பல்கள் ஐந்து ஸான்பிரான்சிஸ்கோ துறைமுகத்துள் நுழைந்தன. கோடை வெயிலில் ஒளிர்ந்த, புகை நிரம்பிய அகன்ற விரிகுடாவில், மற்றைய ஆயிரம் வணிகக் கப்பல்களுக்கு இடையில், ஹாலந்து கொடியை உயர்த்தி அமைதியாக நங்கூரம் பாய்ச்சின அக்கப்பல்கள்.

காப்டன்கள் கரை சென்றனர். எல்லாம் முறைப்படி இருந்தன. மாலுமிகளின் துவைத்த உள்ளாடைகள் காய்வதற்காகக் கப்பல்களில் தொங்கவிடப்பட்டன. மேல்தளங்கள் கழுவி விடப்பட்டன. ஹாலந்துக் கொடியுடன் மிதந்து வந்த அந்த ஐந்து கப்பல்களில் இருந்த பண்டந்தான், சுங்க அதிகாரிகளை மிகுதியாகத் திகைக்கவைத்தது. எனினும், ஒவ்வொன்றும் பத்து பவுண்டு எடையுள்ள அந்த மஞ்சள் உலோகக் கட்டிகள் உண்மையான தங்கம் என்றும் விற்பனைக்காக இங்குக் கொணரப்பட்டன என்றும் அவர்கள் அறிவிக்கப்பட்டனர்.

இது ஒரு நல்ல வேடிக்கை என்று சுங்க அலுவலர்கள் சிரித்தனர்.

''என்ன விலைக்குத் தங்கம் விற்கப்போகிறீர்கள், ஊம்?''

''அடக்கவிலைக்கு,'' என்று உதவிக் காப்டன்கள் விடையளித்தனர். (சொல்லுக்குச் சொல், இதே போன்ற பேச்சு அந்த ஐந்து கப்பல்களிலும் நிகழ்ந்தது.)

''அது எவ்வளவு?''

''ஒரு பவுண்டு ஒரு டாலர் இருபது சென்ட்!''

''உங்கள் தங்கத்தைப் பெரியதாக நீங்க மதிப்பதுபோலத் தோன்றலியே.''

''நாங்க மலிவாக விற்கிறோம், எங்களிடம் ஏராளமிருக்கு,'' என்று சுங்கான் புகைபிடித்தவாறே விடையளித்தனர் உதவிக் காப்டன்கள்.

ஆகவே, சுங்க அலுவலர்கள் தங்கள் ஏடுகளில், ''பண்டம்—தங்கம் என்று சொல்லப்படும் மஞ்சள் உலோகக் கட்டிகள்,'' என்று எழுதினார்கள். சிரித்துக்கொண்டு தங்கள் வழியே சென்றனர். எனினும், உண்மையிலோ சிரிப்பதற்கு ஒன்றுமே இல்லை.

இரு நாள்களுக்குப் பிறகு, ஸான்பிரான்சிஸ்கோவின் காலைப் பத்திரிகைகளின் விளம்பரப் பத்திகளிலும், விளம்பரத் தூண்கள்மீது ஒட்டப்பட்ட மஞ்சள் வெள்ளைச் சுவரொட்டிகளிலும் அல்லது நடைபாதைகளில் வெறும் சுண்ணாம்புக் கட்டியினால் எழுதப்பட்டும், கீழ்க்கண்ட அறிவிப்பு தோன்றியது:

''என்ஜினியர் பியோத்தர் காரின், பொன் தீவின் விடுதலைப் போர் முடிவுற்றதாகக் கருதிக்கொண்டும், தன்னுடைய எதிரிகள் அடைந்த இழப்புக்களுக்காகப் பெரிதும் வருந்திக்கொண்டும், அமைதியான வணிக முறைத் தொடர்புகளின் ஒரு தொடக்கமாக, அமெரிக்க ஐக்கிய நாடுகளின் மக்களுக்கு, மரியாதையுடன் ஐந்து கப்பல் நிறையச் சொக்கத் தங்கத்தைத் தர முன்வருகிறேன். பத்து பவுண்டு எடையுள்ள தங்கக் கட்டிகள், ஒரு பவுண்டு ஒரு டாலர் இருபது சென்ட் விலைக்குத் தரப்படும். ஆர்வமுள்ளவர்கள் புகையிலைக் கடைகள், பலசரக்குக் கடைகள், பால் கடைகள், பத்திரிகை விற்குமிடங்கள், காலணி மினுக்கும் இடங்கள் முதலியவற்றிலும் அவற்றைப் பெறலாம். நான் எல்லையில்லாத அளவு வைத்திருக்கும் தங்கம் உண்மையானதுதான் என்பதை ஆய்ந்துபார்த்து உறுதிப்படுத்திக்கொள்ளுமாறு வேண்டுகிறேன். எனது மரியாதைகளுடன், காரின்.''

இந்தக் கேலிக்கூத்தான விளம்பரத்தை ஒருவரும் நம்பவில்லை என்பது சொல்லாமலே தெரியும். விற்பனை முகவர்களில் பெரும்பாலோர் தங்கக் கட்டிகளை ஒளித்தனர். எனினும், பியோத்தர் காரினுடைய பெயர் ஒவ்வொருவருடைய நாவிலும் இருந்தது. அவன் கொள்ளைக்காரன், கதைகளில் வருவது போன்ற இழிமகன், அமைதியான பொதுமக்களை மீண்டும் கலவரப்படுத்துகிறான் என்று பேசினர். மாலைப் பத்திரிகைகள் காரின் கட்டிவைத்துக் கொளுத்தப்பட வேண்டும் என்று கோரின. மாலை, ஆறு மணியளவில், சோம்பேறிகளின் கும்பல்கள் துறைமுகத்திற்குச் சென்றன. அங்கே, திட்டமின்றிக் கூட்டப்பெற்ற கூட்டங்களில், காரினின் கப்பல்களைக் கடலுள் அழுத்தி, அவற்றிலுள்ளவர்களை விளக்குத் தூண்களில் தூக்கிட வேண்டும் என்று ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கும்பலைத் தடுத்து நிறுத்துவது போலீஸாருக்குப் பெரும்பாடாய்ப் போயிற்று.

இதற்கிடையில், துறைமுக அதிகாரிகள் புலனாய்வை நடத்திக் கொண்டிருந்தனர். அந்த ஐந்து நீராவிக்கப்பல்களின் ஆவணங்களும் ஒழுங்காக இருந்தன. அக்கப்பல்கள் நல்ல பெயர் பெற்ற ஹாலந்துக் கப்பல்போக்குவரத்து கம்பெனியைச் சார்ந்தவை, ஆதலால் அவற்றைப் பறிமுதல் செய்ய இயலாதிருந்தது. எனினும், பொதுமக்களிடையே இவ்வளவு பரபரப்பை உண்டாக்கிய தங்கக்கட்டிகளின் விற்பனை தடுக்கப்பட வேண்டும் என்று அதிகாரிகள் கோரினர். ஆனால் தனது காற்சட்டைப் பைகளினுள், இரண்டு தங்கக்கட்டிகள் புகுந்ததும் ஓர் அதிகாரியாவது வசீகரிக்கப்படுவதைத் தவிர்க்க முடியவில்லை. கடித்தும், நிறுத்தினாலும், எடையினாலும் சோதித்துப்பார்த்த பின்னும் அது உண்மைத் தங்கமாக இருந்தது. விற்பனை பற்றிய பிரச்சினை முடிவுகட்டப்படாமல் விடப்பட்டது, அப்போதைக்கு அமுக்கப்பட்டது.

பேசாவாயர்களான சில மாலுமிகள், அந்த மர்மத் தங்கக் கட்டிகளைச் சாக்குகளில் சுமந்து

கொண்டு முப்பத்திரண்டு பத்திரிகைகளின் ஆசிரியர் அலுவலகங்களுக்குச் சென்றனர். ''பரிசாக,'' என்று மட்டுமே அவர்கள் சொல்லினர். ஆசிரியர்கள் சீற்றங்கொண்டனர். அந்த முப்பத்திரண்டு அலுவலகங்கள் ஒவ்வொன்றிலும் பெரிய குழப்பம் நிகழ்ந்தது. நகைக்கடையினர் வருவிக்கப்பட்டனர். பியேர் ஹெரிரியின் துடுக்குத்தன்மையைப் பழிதீர்ப்பதற்காகக் குருதி சிந்தும் திட்டங்கள் வெளியிடப்பட்டன. ஆனால் அந்த முப்பத்திரண்டு பத்திரிகை அலுவலகங்களிலிருந்தும் தங்கக்கட்டிகள் எங்கோ மறைந்து விட்டன எப்படி என்று யாருக்கும் தெரியாது.

இரவில், நகர நடைபாதைகளில் தங்கக்கட்டிகள் இறைக்கப்பட்டன. ஒன்பது மணியளவில், எல்லா முடிதிருத்தகங்களிலும் புகையிலைக் கடைகளிலும் ''சொக்கத்தங்கம் இங்கு விற்கப்படும். ஒரு பவுண்டு $ 1.20'' என்ற அறிவிப்புக்கள் தொங்கவிடப்பட்டன.

நகர மக்கள் கீழ்ப்படிந்தனர்.

எல்லாவற்றையும்விட மிக மோசமானது என்னவெனில், தங்கம் ஒரு பவுண்டு ஒரு டாலர் இருபது சென்டுக்கு ஏன் விற்கப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை ஒருவரும் அறியவில்லை என்பது தான். எனினும் வாங்காமலிருப்பது முட்டாள்தனம். கூட்டங்கள் இடித்துப்புடைத்துக் கொண்டு, தெருக்களில் நிறைந்தன. ஒரே களேபரம் ஏற்பட்டது. துறைமுகத்தில் கப்பல்களுக்கு முன்னே ஆயிரக்கணக்கான மக்கள் கூடித் தங்கக்கட்டிகளுக்காக ஊளையிட்டனர். கப்பல்களின் படிக்கட்டு வழிகளிலிருந்தே நேரடியாகத் தங்கம் விற்கப்பட்டது. அன்று ட்ராம் வண்டிகளும், பாதாள ரயில்களும் வேலை செய்யவில்லை. தனிப்பட்டவர் பணிமனைகளிலும், அரசு அலுவலகங்களிலும் குழப்பம் நிலவியது. வேலை செய்வதற்கு மாறாக, எழுத்தர்கள் புகையிலைக் கடைகளைச் சுற்றி வந்து, தங்கக்கட்டிகளை விலைக்குத் தரும்படி கேட்டுக் கொண்டிருந்தனர். பண்டசாலைகளும் கடைகளும் மூடப்பட்டன. வேலையாட்

கள் ஓடிவிட்டனர். திருடர்களும் கடையுடைப்பவர்களும் நகரில் ஆட்சி செலுத்தினர்.

குறிப்பிட்ட அளவுகளில்தான் தங்கம் கொணரப்பட்டதென்றும், இனிமேல் தங்கக்கட்டிகள் ஏற்றிக் கொண்டு கப்பல்கள் வரமாட்டா என்றும் வதந்தி பரவியது.

மூன்றாம் நாளன்று, அமெரிக்கா முழுதும் தங்கத்திற்காகக் கெடுபிடி தொடங்கியது. மேற்கே சென்ற ரயில்களில் பரபரப்புற்றும், திகைத்தும், ஐயப்பட்டும், கலக்கமுற்றும் இருந்த செல்வ வேட்டைக்காரர்கள் நிறைந்திருந்தனர். ரயில்களில் ஏறுவதற்காக அடிதடி நடந்தது. மனித மூடத்தனத்தின் இந்த அலையிலே,கொடூரமான குழப்பம் இருந்தது.

வழக்கம் போல, காலங் கடந்து, வாஷிங்டனில் இருந்து அரசு உத்தரவு வந்தது: ''தங்கம் என்று சொல்லப்படுகிற பொருள் ஏற்றிய கப்பல்களைச் சுற்றி பெரிய போலீஸ் படையை நிறுத்துக. கப்பல் தலைவர்களையும் பணியாளரையும் கைது செய்து, கப்பல்களுக்கு முத்திரையிடுக''. இந்த உத்தரவு நிறைவேற்றப்பட்டது.

நாட்டின் மற்றப் பகுதிகளிலிருந்து, செல்வம் தேடுவதற்காகத் தங்கள் வணிகச் செயல்களையும், வேலைகளையும் விட்டு விட்டு வந்திருந்த மக்கள், சூரிய வெப்பம் நிறைந்த சான்பிரான்சிஸ்கோக் கடற்கரைச் சாலைகளில் மொய்த்தனர். தின்பதற்குரிய எல்லாவற்றையும் வெட்டுக்கிளிகள் போலத் தின்று தீர்த்துவிட்டனர். அதனால் சீற்றமுற்ற இந்த முரடர்களின் கூட்டம், போலீஸ் படை வேலியை முறித்து உட்புகுந்து,பைத்தியக்காரர்களைப் போலக் கைத்துப்பாக்கிகளாலும் கத்திகளாலும் பற்களாலுங் கூடச் சண்டையிட்டு, போலீசாரில் பலரை விரிகுடாவுக்குள் எறிந்து, காரினுடைய நீராவிக்கப்பல்களின் பணியாளரை விடுவித்து, தங்கம் பெறுவதற்காகப் படை தாங்கிய வரிசையொன்றை ஒழுங்குபடுத்தியது.

இன்னும் மூன்று நீராவிக்கப்பல்கள் பொன் தீவிலிருந்து வந்து சேர்ந்தன. தங்கக்கட்டிகளின் மூட்

டைகள் நேரே துறைமுகத்தில் சுமைதூக்கிக் கிரேன்களின் வாயிலாக இறக்கப்பட்டு, அங்கே பெரிய குவியல்களாக அடுக்கிவைக்கப்பட்டன. இதெல்லாவற்றிலும், பொறுக்க முடியாதபடி பயங்கரம் ஏதோ இருந்தது. வரிசைகளில் நின்றிருந்த மக்கள், சாலை வழியில் மினுமினுத்துக்கொண்டு கிடந்த செல்வத்தை நோக்கும்போது, நடுக்குற்றனர்.

இந்த நேரத்திற்குள், காரினின் முகவர்கள் எல்லாப் பெரு நகரங்களிலும் தெரு ஒலிபெருக்கிகள் நிறுவுவதைப் பூர்த்தி செய்துவிட்டனர். சனிக்கிழமையன்று, பணிமனைகளிலும் தொழிற்சாலைகளிலும் வேலை முடிந்தவுடன், நகர மக்கள் தெருக்களில் நிறைந்த போது, ஒரு பெருத்த குரல், படுமோசமான உச்சரிப்புடன், ஆனால் எல்லை மீறிய தன்னம்பிக்கையுடன், அமெரிக்கா முழுதும் ஒலித்தது:

''அமெரிக்கர்களே! என்ஜினியர் காரின் உங்களுடன் பேசிக் கொண்டிருக்கிறான். சட்டத்துக்குப் புறம்பாக்கப்பட்டவனும், குழந்தைகளை அச்சுறுத்தப் பயன்படுத்தப்பெறும் பெயரையுடையவனுமாகிய அதே காரின்தான். அமெரிக்கர்களே! நான் பல குற்றங்களைப் புரிந்துள்ளேன், ஆனால் அவை எல்லாம், மனித இனத்திற்கு மகிழ்ச்சி தருதலாகிய ஒரே குறிக்கோளுக்குத்தான் இட்டுச்சென்றன. ராட்சசத்தன்மையான, இதற்கு முன்பு யாரும் செய்யாத முயற்சியொன்றை வெற்றியான முடிவுக்குக் கொணர்வதற்காக ஏதோ முக்கியத்துவமில்லாத சிறு தீவான ஒரு சிறிய நிலத்துண்டில் குடியேறியிருக்கிறேன். தரையின் வயிற்றினுள் நுழைந்து சென்று எல்லையில்லாத தங்கத்தின் படுகையை அடையத் துணிந்தேன். இருபத்தைந்தாயிரம் அடி ஆழத்தில், சுரங்கம் உருகிய தங்கப்படிவை எட்டியது. அமெரிக்கர்களே, ஒவ்வொருவரும் தம்மிடமிருப்பதை விற்கின்றனர். நான் என்னுடைய பண்டமாகிய தங்கத்தை உங்களுக்கு விற்க முனைகிறேன். ஒரு பவுண்டு ஒரு டாலர் இருபது சென்ட் விலையில் நான் விற்கும் போது, ஒரு டாலருக்குப் பத்து சென்ட் மட்டுமே

நான் ஈட்டுகிறேன். இது நியாயமான ஆதாயம். எனது பண்டத்தை விற்க நான் ஏன் தடுக்கப்படுகிறேன்? எங்கே உங்களுடைய சுதந்திர வணிக முறை? விடுதலை, முன்னேற்றம் ஆகிய தூய அடிப்படைக் கருத்துக்களை, உங்களுடைய அரசு காலடியில் போட்டு நசுக்கிமிதித்துக் கொண்டிருக்கிறது. போர் நஷ்ட ஈடு தர நான் திட்டமாயிருக்கிறேன். கப்பல்களிலிருந்தும் வங்கிகளிலிருந்தும் 'அரிஸோனா'வால் போர்க்கால வழக்கங்களின்படி எடுத்துக் கொள்ளப்பட்ட எல்லாப் பணத்தையும், அரசுக்கும், கம்பெனிகளுக்கும், தனிப்பட்டவருக்கும் தரத் தயாராக இருக்கிறேன். நான் ஒன்றே ஒன்றுதான் வேண்டுகிறேன்—எனது தங்கத்தை விற்க உரிமை தருக. உங்கள் அரசு அதைத் தடுக்கிறது, என்னுடைய கப்பல்களைச் சிறைப்படுத்தியிருக்கிறது. அமெரிக்க ஐக்கிய நாடுகளின் மக்களின் பாதுகாவலுக்கு என்னை உட்படுத்துகிறேன்.''

அதே இரவு, போலீஸாரால் ஒலிபெருக்கிகள் தகர்க்கப்பட்டன. மக்களின் பகுத்தறிவுக்கு அரசு விண்ணப்பித்தது:

''...பழிகாரக் கொள்ளைக்காரனும், சோவியத் ருஷ்யாவிலிருந்து வந்திருப்பவனும் ஆகிய என்ஜினியர் காரின் சொல்வது உண்மை என்றே வைத்துக் கொள்வோம். அப்படியானால் பொன் தீவில் உள்ள சுரங்கம் மூடப்பட்டு, முடிவில்லாத தங்க வரவின் வாய்ப்பைத் தடுப்பது இன்னும் மிகுதியாகத் தேவைப்படுகிறது. களிமண்போன்று தங்கம் தோண்டியெடுக்கப்படக் கூடுமானால், உழைப்பு, இன்பம், வாழ்வு ஆகியவற்றின் ஈடு என்ன ஆகும்? மனிதகுலம் தனது பண்டைக்கால நிலைக்கு, பண்டமாற்று, விலங்குத்தனம், குழப்பம் ஆகியவற்றுக்குத் திரும்ப வேண்டியதுதான். பொருளாதார அமைப்பு முழுதும் குலைந்துவிடும், தொழிலும் வணிகமும் அழிந்துவிடும். என்ஜினியர் காரின்—மிகப் பெரிய ஆத்திரமூட்டுவோன், சைத்தானின் கையாள். டாலரின் மதிப்பீட்டைக் குறைப்பதுதான் அவன் நோக்கம். ஆனால் இதில் அவன் வெற்றிபெற மாட்டான்...''

தங்கத்தின் மதிப்புநிலை ஒழிக்கப்பட்டால், என்ன நிகழும் என்பதைப் பற்றிய இரங்கத்தக்க படத்தை அரசு வரைந்தது. எனினும் பகுத்தறிவுடைய மக்கள் காணப்படவில்லை. நாடு முழுதும் வெறி கொண்டது. சான்பிரான்சிஸ்கோவில் போலவே எல்லா நகரங்களிலும் வாழ்க்கை நின்றிட்டது. ரயில்களும் பல மில்லியன் கார்களும் போட்டியிட்டு மேற்கு நோக்கி விரைந்தன. பசிபிக் கரைக்கு அருகே எவ்வளவு நெருங்கினார்களோ உணவுப் பொருளின் விலை அவ்வளவு உயர்ந்தது. உணவு கொண்டு வருவதற்குத் தேவையான போக்குவரத்து வண்டிகள் அகப்படவில்லை. பசித்த செல்வவேட்டையாளர்கள் உண்டிக்கடைகளை உடைத்து உள்ளே நுழைந்தனர். ஒரு பவுண்ட் இறைச்சி, நூறு டாலர் விலை பெற்றது. சான்பிரான்சிஸ்கோவில் மக்கள் தெருக்களில் செத்தார்கள். மற்றவர்களுக்குப் பசியாலும், தாகத்தாலும், கடும் வெப்பத்தாலும் பைத்தியம் பிடித்தது.

இரயில்வே சந்திப்புக்களிலும், தண்டவாளங்கள் நெடுகிலும் இரயில்களில் ஏற்பட்ட பேராரவாரத்தால் கொல்லப்பட்டவர்களின் பிணங்கள் கிடந்தன. அதிர்ஷ்டக்காரக் குழுவினர் சாலைகள், சந்துகள் வழியாகவும், மலைகளின் குறுக்காகவும், காடுகளின் வழியாகவும் தங்களுடைய முதுகுகளில் தங்கக்கட்டி நிறைந்த சாக்குகளுடன் கிழக்கு நோக்கித் திரும்பிவந்தனர். பின்னுக்குத் தங்கிவிட்டவர்கள் உள்ளூர் வாசிகளாலும் கொள்ளைக்கூட்டத்தினராலும் கொல்லப்பட்டனர்.

'தங்கம் தாங்கியவர்'களுக்கான வேட்டை)தாடங்கியது—விமானங்களிலிருந்துகூட அவர்கள் ்ாக்கப்பட்டனர்.

கடைசியில் அரசு மிகத் தீவிரமான நடவடிக்கைகளை எடுத்தது. பதினேழிலிருந்து, நாற்பத்தைந்து வயதிற்குட்பட்ட எல்லா ஆண்களையும் படையில் சேர்க்கவும், இதற்கு உடன்படத் தவறியவர்களை ராணுவ நீதிமன்றத்தால் விசாரணை செய்யவும் காங்கிரஸ் ஒரு சட்டம் இயற்றியது. நியூயார்க்கின்

எளிய பகுதிகளில், சில நூற்றுவர் சுட்டுக் கொல் லப்பட்டனர். எல்லா இரயில் நிலையங்களிலும் ஆயுதந்தாங்கிய இராணுவத்தினர் தோன்றினர். சிலர் பிடிபட்டனர், சிலர் இரயில்களிலிருந்து வெளியே தள்ளப்பட்டனர், இராணுவத்தினர் காற் றிலும் மக்கள் மீதும் சுட்டனர். இருந்தும் ரயில் கள் நிறைந்து வழிந்த பயணிகளுடன் புறப்பட்டுச் சென்றன. தனிப்பட்ட கம்பெனிகள் நடத்திய ரயில் கள், அரசு உத்தரவைப் புறக்கணிப்பது அதிக லாபம் தருவதெனக் கண்டனர்.

காரினுடைய மேலும் ஐந்து நீராவிக்கப்பல்கள் சான்பிரான்சிஸ்கோ வந்தடைந்தன. திறந்த கடல் வழியில் விரிகுடா முழுதுக்கும் தெரிய, ''கடல் களின் பேரபாயம்'' எனப்பட்ட அழகிய 'அரிஸோ னா' நின்றது. அதனுடைய இரு ஹைபர்பாலாயிடு களின் காவலில் கப்பல்களிலிருந்து தங்கம் இறக்கப் பட்டது.

இத்தகைய நிலைமையில் வாஷிங்டன் மாநாட் டின் ஆரம்ப நாள் வந்தது. ஒரு மாதத்துக்கு முன்பு உலகத் தங்க இருப்பின் ஒரு பாதியை அமெரிக்கா வைத்திருந்தது. இப்போதோ, விகிதத்தில் இதற்கு முன் இருந்ததில் இருநூற்றைம்பதில் ஒரு கூறாக அதனது தங்க இருப்புக் குறைந்துவிட்டது. மனித சக்திக்கு அப்பாற்பட்டு, பயங்கரமான இழப்புக் களாலும், நிறைய குருதி சிந்துவதாலும் இதனை எப்படியாவது சமாளித்திருக்கக் கூடும். ஆனால், அந்த வெறிகொண்ட இழிமகன் காரின், தனது தங் கத்தை ஒரு பவுண்டு, ஐம்பது அல்லது பத்து சென் டுக்கோ விற்க முற்பட்டால்? மூத்த செனட் அவை யினரும், காங்கிரஸ்காரர்களும் அச்சத்துடன் முகங் கள் வெளிறி முகப்புக்கூடங்களில் மேலுங்கீழும் நடைபோட்டனர். தொழில்துறை, மற்றும் பணத் துறை மன்னர்கள் நம்பிக்கையிழந்து கைகளைப் பிசைந்தனர்:

''இது உலக விபத்து, வால் நட்சத்திரத்துடன் மோதுதலைக் காட்டிலும் மிக மோசமானது''.

''யார் இந்த என்ஜினியர் காரின்?'' என வின

வினர். ''அவன் உண்மையில் என்ன விரும்புகிறான்? நாட்டைப் பாழாக்கவா? முட்டாள்தனம். புரியவில்லையே... அவன் எதைச் சாதிக்க முயல்கிறான்? சர்வாதிகாரியாக விரும்புகிறானா? ஆகட்டுமே, தாராளமாக—இவ்வுலகிலேயே மிகப் பெரிய பணக்காரனாக இருந்தால். பார்க்கப்போனால், இந்த ஜனநாயக அமைப்பு நமக்கேதான் திகட்டிப் போய் விட்டது—போலி வெண்ணெய் போல... நாட்டில் குழப்பங்கள், கலகங்கள், சட்டத்திட்டங்களுக்கு உட்படாத நிலைமை இருக்கின்றன. ஒநாய்ப்பிடிப்புடைய ஒரு தலைவன், சர்வாதிகாரியாகி நாட்டையாண்டால், உண்மையில் மிகப் பெரிய நன்மையாகும்.''

காரினே மாநாட்டில் கலந்துகொள்வான் என்பது தெரிந்தவுடன் மன்றத்தில் மக்கள் அளவுமீறி மிகுதியாகத் திரண்டு, தூண்களைப் பற்றிக்கொண்டும், சன்னல்களிலும் நெருக்கினர். தலைவர் தோன்றினார். அவர்கள் மௌனமாகக் காத்திருந்தனர். கடைசியாகத் தலைவர் வாயைத் திறந்தார். மன்றத்திலிருந்தோர் அனைவரும் நிமிர்ந்து, வெள்ளையும் தங்க நிறமும் கலந்த கதவின் பக்கம் திரும்பினர். அது திறந்தது. நடுத்தர உயரம், அசாதாரணமான வெளிறிய தோற்றம், கூரிய கருந்தாடி, கரிய வட்டங்களிட்ட கருங்கண்கள் கொண்ட ஒருவன் நடந்து வந்தான். எளிய சாம்பல் நிற உடுப்பு, சிவப்பு வில்டை, தடித்த அடித்தோலுடைய பழுப்புவண்ண மூடுசெருப்புகள், இடது கையில் புதிய ஒரு ஜோடிக் கையுறைகள் அணிந்திருந்தான்.

அவன் நின்று ஆழ்ந்த மூச்சிழுத்தான். தலையச் சற்றே அசைத்துவிட்டுப் பேச்சுமேடையின் படிகளின்மேல் விரைந்து ஏறி நிமிர்ந்தான். அவனது தாடி முன்னே துருத்தியது. குடிநீர்க் கலத்தைப் பேச்சுமேடையின் ஓரத்தில் நகர்த்தி வைத்தான். (அந்நீரின் அலைப்பு கேட்குமளவு மன்றத்தில் அமைதி நிலவிற்று.) உரத்த குரலுடனும், பண்பற்ற உச்சரிப்புடனும், அவன் பின்வருமாறு சொன்னான்:

''கனவான்களே, நான்தான் காரின். உலகிற்குத் தங்கத்தைக் கொணர்ந்தவன்...''

மன்றத்தில் இடிமுழக்கம்போன்று கைதட்டல் ஒலி அதிர்ந்தது. வந்திருந்தோர் அனைவரும், ஒருவன்போல எழுந்து நின்று, ஒரே குரலில் பின்வருமாறு கத்தினர்:

''திரு. காரின் நீடூழி வாழ்க! சர்வாதிகாரி நீடூழி வாழ்க!''

மன்றத்திற்கு வெளியே, ஒரு மில்லியன் மக்கள் கூட்டமாக நின்று தங்கள் கால்களால் தாளம் போட்டுக்கொண்டு கத்தினர்:

''தங்கக்கட்டிகள்!... தங்கக்கட்டிகள்!.. தங்கக் கட்டிகள்!..''

114

பொன் தீவின் துறைமுகத்திற்கு 'அரிஸோனா' அப்போது தான் திரும்பியது. லாமோல் சீமாட்டியைக் கண்டு, கண்டத்தில் உள்ள நிலைமைபற்றி அவளுக்கு யான்ஸன் அறிவித்தான். பின்னல் தலையணைகளுக்கிடையே தனது படுக்கையிலிருந்தபடியே ஸோயா அவனை வரவேற்றாள் (சிறிய காலை வரவேற்பு). பாதியிருண்டிருந்த அந்தப் படுக்கையறையில், திறந்த சன்னல்களின் வழியாகத் தவழ்ந்து வந்த பூக்களின் வெறிக்கும் மணம் நிறைந்திருந்தது. அவளது வலக் கையை, கைவிரல் ஒப்பனைக்கலை தேர்ந்த ஒருத்தி சீர்படுத்திக் கொண்டிருந்தாள். இடக் கையில் அவள் ஒரு கண்ணாடி பிடித்துத் தன் உருவத்தை அதிருப்தியுடன் நோக்கியபடி பேசினாள்.

''ஆனால், எனது நண்பரே, காரினுக்கு மூளை பிசகிக் கொண்டு போகுது,'' என்றாள் யான்ஸனிடம். ''தங்கத்தின் மதிப்பைக் குறைக்கிறார். ஏழைகளின் சர்வாதிகாரியாக விரும்புறார்.''

அண்மையில்தான் ஒப்பனை செய்யப்பட்ட படுக்கையறையின் பெருமிதத்தைக் கடைக்கண்ணால்

யான்ஸன் நோக்கினான். தொப்பியை முழங்கால்கள் மேல் வைத்துக்கொண்டு பதிலளித்தான்:

''லாமோல் சீமாட்டி, நான் காரினை நேரில் சந்தித்த போது, நீங்க கவலைப்பட வேண்டியதில்லை என்றார். முன்பு போடப்பட்ட திட்டத்திலிருந்து ஓர் அடிகூட விலகிச் செல்லமாட்டார். தங்கத்தை நிலைகுலையச் செய்ததால் அவர் போராட்டத்தில் வெற்றி பெற்றுவிட்டார். அடுத்த வாரம் செனட் சபை அவரைச் சர்வாதிகாரியாக அறிவிக்கும். பிறகு, தங்கத்தின் மதிப்பை உயர்த்துவார்.''

''எப்படி? எனக்குப் புரியலே.''

''தங்கத்தின் இறக்குமதியையும் விற்பனையையும் தடைசெய்து ஓர் ஆணை வெளியிடுவார். ஒரு மாதத்தில் அது முன்னைய விலைக்கு உயரும். நாம் ஒன்னும் அவ்வளவு அதிகம் விற்றுவிடலே. வியாபாரத்தைவிட கூச்சல்தான் அதிகமிருந்தது.''

''சுரங்கம்?''

''சுரங்கம் அழிக்கப்படும்.''

ஸோயா முறைத்து, ஒரு சிகரெட் பற்றவைத்தாள்.

''எனக்கு எதுவுமே புரியலே.''

''தங்கத்தின் அளவை மட்டுப்படுத்துறது கட்டாயம் தேவை. இல்லாட்டா மனித உழைப்பின் மணத்தை அது இழந்துவிடும். சுரங்கத்தை அழிக்கிறதுக்கு முன்னே, உலகத் தங்க இருப்பில் பாதிக்குமேல் காரினிடம் இருப்பதை உறுதிப்படுத்துற அளவு தங்கம் எடுக்கப்படும் என்பதைச் சொல்லத் தேவையில்லை. ஆகவே மதிப்புக் குறைந்தாலுங்கூட, ஒரு டால ர்க்குச் சில சென்ட் தான் குறையக்கூடும்.''

''அருமை... ஆனா என்னுடைய அரண்மனை ஆடம்பரத்துக்கும் என்னோட கனவுகளை நனவாக்குறதுக்கும் எவ்வளவு அவர்கள் ஒதுக்குவாங்க? மிகப் பெரிய தொகை எனக்குத் தேவை.''

''ஒரு மதிப்பீடு செய்யுமாறு காரின் உங்களைக் கேட்கிறார். உங்களுக்கு எவ்வளவு தேவையோ, அவ்வளவு சட்டப்படி உங்களுக்கு ஒதுக்கப்படும்...''

''எனக்கு எவ்வளவு தேவையின்னு எப்படித்

தெரியும்? இதெல்லாம் எவ்வளவு முட்டாள்தனம்! முதலாவதா, தொழிலாளர் வீடுகள், பண்டசாலைகள், தொழிற் கூடங்கள் ஆகியவற்றின் இடத்தில் அரங்குகள், ஓட்டல்கள், சர்க்கசுகள் கட்டுவேன். இது அற்புத நகராக இருக்கும்... பழைய சீனப் படங்களில் உள்ளது போலப் பாலங்கள் சுற்றிலுமுள்ள திடர்களையும் பாறைத் தொடர்களையும் தீவோட இணைக்கும். அங்கே குளியல் மேடைகள், விளையாட்டு மண்டபங்கள் அமைத்து, களியாட்டப் படகுகளுக்கும் ஆகாயக்கப்பல்களுக்கும் துறைமுகங்கள் கட்டுவேன். பலமைல் தொலைவு தெரியக் கூடிய அளவு, பரத்த, பெரிய கட்டடம் ஒன்று தீவின் தென் கோடியில் இருக்கும்: 'மேதையின் ஓய்விடம்.' ஐரோப்பாவில் உள்ள எல்லா அருங்காட்சியகங்களையும் கொள்ளையடிப்பேன். மனிதகுலத்தின் படைப்புக்கள் அனைத்தையும் ஒன்னாத் திரட்டுவேன். அன்பரே! இந்தத் திட்டங்களினால் என் தலை நோகிறது. மேகங்களுக்கு எடுத்துச்செல்லும் சலவைக் கல் படிக்கட்டுகள், விழாக்கள், களியாட்டக்காட்சிகள் ஆகியவற்றைக் கனவிலே காண்கிறேன்...''

யான்ஸன் தங்கமிழைத்த நாற்காலியில் முன்னே சாய்ந்தான்:

''லாமோல் சீமாட்டி...''

''பொறுங்க,'' என்று பொறுமையற்று இடைமறித்தாள். ''மூன்று வாரக் காலத்தில், என்னோட பிரிவாரங்கள் வந்து சேரும். அந்த முழுக்கூட்டமும் உணவிடப்பட்டு, களிப்பூட்டப்பட்டு, ஒழுங்காக வைக்கப்படணும். ஐரோப்பாவிலிருந்து இரண்டு அல்லது மூன்னு உண்மையான அரசர்களையும், பன்னிரண்டு அரசவம்ச இளவரசர்களையும் நான் வரவழைக்க விரும்புறேன். ரோமிலிருந்து போப்பாண்டவரை ஆகாயக் கப்பலில் கொண்டு வருவோம். முறைப்படி நியமிக்கப்பட்டு நான் முடிசூட்டப்பட விரும்புறேன். அப்போதுதான், என்னைப் பற்றி இழிவான பாட்டுக்கள் இயற்றப்படுவது நிற்கும்...''

''லாமோல் சீமாட்டி,'' என்றான் யான்ஸன் மன்றாடுங்குரலில், ''இந்த மாதம் முழுக்க நான் உங்

களைப் பார்க்கலே. இதுவரைக்கும் நீங்க சுதந்திர மா இருக்கீங்க. நாம் கடலுக்குப் புறப்படலாம். 'அரிஸோனா' திருத்தி அமைக்கப்பட்டிருக்கு. மீண்டும் நட்சத்திரங்களுக்குக் கீழே, காப்டன் மேடை மீது உங்களுக்குப் பக்கத்தில் நிற்க விரும்புறேன்.''

''எனக்குத் தெரியாது, யான்ஸன், எனக்குத் தெரியாது,'' என்றாள், அவன் தலை மயிரைத் தன் கையினால் தொட்டுக்கொண்டே, ''இன்பத்திற்காக முயல்வதிலேயே, இன்பம் இருப்பதாகச் சில நேரங்களில் எனக்குத் தோணுது... நினைவுகளிலுங்கூட... ஆனா அது அலுத்துப்போன காலத்தில் தான்... ஒருவேலை நான் உங்ககிட்டத் திரும்பி வருவேன், யான்ஸன்... எனக்காகப் பொறுமையோட காத்திருப்பீங்கன்னு எனக்குத் தெரியும்... உங்களுக்கு நினைவிருக்கா?.. மத்தியதரைக் கடலில், புகழ் பெற்ற அந்த நாளிலே 'தெய்வீக ஸோயா' தொண்டர் வரிசையின் தளபதியாக உங்களை நியமித்ததை... (சிரித்தவாறு விரல்களால் அவனது பிடரியை அழுத்தினாள்.) நான் உங்ககிட்டத் திரும்பி வராட்டா, யான்ஸன், உங்களோட கனவுகளும் எனக்கான உங்களோட ஏக்கமும்—அவைகளுங்கூட இன்பமில்லையா? ஓ, என் நண்பரே, மத்தியதரைக் கடலில், நான் முன்பு கண்ட கனவுதான் பொன் தீவு என்று ஒருத்தருக்கும் தெரியாது; கப்பலின் மேல் தளத்தில் கண்ணயர்ந்தவாறு கடலைவிட்டு மேலே செல்கிற மாடிப்படிகளையும் அரண்மனைகளையும், ஒன்றைவிட மற்றது அதிக அழகாக இருப்பதாகக் கண்டேன்... அங்கே அழகிய மக்கள், என்னோட மக்கள், என் சொந்த மக்கள் இருந்தாங்க, புரியுதா உங்களுக்கு? இல்லை, என்னோட கனவு நகரத்தைக் கட்டுறவரை, நான் ஓய்வு எடுக்கமாட்டேன். எனக்குத் தெரியும், எனது நம்பிக்கையுள்ள நண்பரே, எனது வெறிப்பிதற்று நிலைக்கு மாறாக நீங்க, உங்களையும் காப்டன் மேடையையும் மாகடலின் பெரும்பரப்பையும் தர முன்வருகிறீர்கள். என் அருமை, அரிய யான்ஸன், என்னை நான் ஏன்ன செய்வதென்று சொல்லுங்க? என்னோட இதயம் துடிப்

பது நிற்கிற வரை கிறுகிறுக்கச் செய்யும் கற்பனை களுள்ளே நான் பறந்து செல்லணும்...''

115

பொன் தீவின் தொலைதூர சிறு குடாக் கரையில் அமைந்த சிறிய வெண்ணிற வீட்டில், இரவு முழு தும் காரசாரமான விவாதம் நிகழ்ந்தது. தான் பர பரப்புடன் எழுதிய பிரகடனத்தை ஷெல்கா படித் தான்:

''உலகத் தொழிலாளர்களே! காரினது தங்கக் கப்பல்கள் சான்பிரான்சிஸ்கோ துறைமுகத்துள் நுழைந்த போது, அமெரிக்க ஐக்கிய நாடுகளில் பர விய பீதியின் எல்லையையும் விளைவுகளையும் நீங் கள் அறிவீர்கள்.

''முதலாளித்துவம் நிலைகுலைந்தது: தங்கம் தனது மதிப்பை இழந்து கொண்டிருக்கிறது, நாண யங்களின் மதிப்பு வீழ்ந்து கொண்டிருக்கின்றன, போலீஸார், தண்டப் படையினர், ஆத்திரமூட்டு வோர், துரோகிகளாகிவிட்ட தொழிலாளி வர்க்கத் தலைவர்கள் ஆகிய தங்களது கூலிக்காரர்களுக்குக் கொடுக்க முதலாளிகளிடத்தில் ஒன்றும் இல்லை. பாட்டாளிவர்க்கப் புரட்சியின் பேயுரு பூரணமாக எழுச்சியுற்றுள்ளது.

''இந்தக் கொடூரமான அடியை முதலாளித்து வத்திற்குக் கொடுத்தவன் என்ஜினியர் காரினே ஆயி னும், இந்தப் புரட்சியை அவன் அறவே விரும்ப வில்லை.

''காரின் அதிகாரத்தை விரும்புகிறான். பாட் டாளிவர்க்கப் புரட்சிக்கு எதிரான போராட்டத்தில் புதிய ஆயுதம் காரின் என்பதை இன்னும் போதிய தெளிவுடன் புரிந்து கொள்ளாத முதலாளிகளின் எதிர்ப்பை காரின் தனது முன்னேற்றத்தின் போது தகர்த்துக்கொண்டிருக்கிறான்.

''மிகப் பெரிய முதலாளிகளுடன் காரின் வெகு விரைவில் உடன்பாட்டிற்கு வந்துவிடுவான்.

''அவனை அவர்கள் சர்வாதிகாரியாகவும், தங்

கள் தலைவனாகவும் ஏற்று அறிவிப்பார்கள். உலகத்தில் வழங்கும் தங்கத்தில் பாதியளவைத் தன்னுடைமையாக அவன் ஆக்கிக்கொள்வான். பிறகு தங்கத்தின் அளவு ஓர் எல்லைக்குள் இருக்கச் செய்வதற்காகப் பொன் தீவிலுள்ள சுரங்கத்தைத் தூர்த்து விடுமாறு ஆணையிடுவான்.

''மிகப் பெரிய முதலாளிகளின் கும்பலுடன் சேர்ந்து கொண்டு எல்லா மனித இனத்தையும் கொள்ளையடித்து, மக்களை அடிமைகளாக்குவான்.

''உலகத் தொழிலாளர்களே! தீர்மானிக்கிற போராட்டத்தின் நேரம் வந்துவிட்டது. இந்த அறிவிப்பு பொன் தீவின் புரட்சிக் குழுவினால் செய்யப்படுகிறது. பொன் தீவும் சுரங்கமும் எல்லா ஹைபர்பாலாயிடுகளும் உலக முழுதும் உள்ள புரட்சிகரமான எழுச்சியாளர்களின் வசமாகிவிட்டது என்று அக்குழு அறிவிக்கிறது. உழைப்பாளி மக்களது கைகளில் எல்லையில்லாத தங்கம் இப்போது இருக்கும்.

''காரினும் அவனது கும்பலும் தங்களைத் தற்காத்துக்கொள்ளக் கொடூரமாகப் போரிடுவர். எவ்வளவு விரைவாகத் தாக்குதலை நாம் மேற்கொள்ளுகிறோமோ, அவ்வளவு உறுதியாக வெற்றி நமக்கே கிடைக்கும்.''

புரட்சிக் குழுவின் எல்லா உறுப்பினர்களும் இந்தப் பிரகடனத்தை ஆதரிக்கவில்லை. அவர்களுள் சிலர் மனத்தில் அலைப்புண்டனர், அதனது துணிச்சலைக் கண்டு அஞ்சினர்: இவ்வளவு விரைவாகத் தொழிலாளரைக் கிளப்ப அவர்களால் இயலுமா? அவர்களால் ஆயுதங்கள் பெற முடியுமா? முதலாளிகளிடம் கப்பற்படைகளும், வலிமையான இராணுவமும், புகையாவிகளும் எந்திரத் துப்பாக்கிகளும் கொண்ட போலீசும் உண்டு... சிறிது பொறுத்துப் பார்ப்பது, அல்லது குறைந்தது பொது வேலைநிறுத்தத்துடன் தொடங்குவது நல்லதில்லையா?..

சீற்றத்தை அடக்கிக்கொண்டு ஷெல்கா தயங்குவோரிடம் பேசினான்:

''புரட்சிதான் மிக மேலான போர்த்தந்திரம். போர்த்தந்திரமோ, வெற்றி பெறும் விஞ்ஞானம்.

முன்முயற்சியைத் தன் கைகளுக்குள் எடுத்துக்கொள்பவனும் துணிவு உடையவனும் தான் வெற்றி பெறுகிறான். நமது வெற்றிக்குப் பிறகு, அந்த வெற்றியின் வரலாற்றை நமது வருங்காலத் தலைமுறையினருக்காக நீங்கள் எழுத எண்ணிக் கொண்டிருக்கிற போது, எல்லாவற்றையும் நிம்மதியாகச் சீர்தூக்கிப் பார்க்கலாம். நமது முழு ஆற்றலையும் செலுத்தினோமாயின், எழுச்சியைத் தூண்டி நடத்த நம்மால் இயலும். போராட்ட நிகழ்ச்சியின் இடையே நாம் ஆயுதங்களைப் பெறுவோம். வெற்றி நிச்சயம். ஏனெனில், உழைக்கும் மனிதகுலம் முழுவதும் வெற்றி பெற விரும்புகிறது, நாம் அதன் முன்னணிப் படைப் பிரிவாக விளங்குகிறோம். அப்படித்தான் போல்ஷெவிக்குகள் பேசுவர். போல்ஷெவிக்குகள் தோல்விகளை அறியார்.''

விவாதம் முழுவதிலும் ஒன்றும் பேசாதிருந்த, நீலக் கண்களும் நெடிய மேனியும் கொண்ட சுரங்கத் தொழிலாளி இளைஞன், இச்சொற்கள் சொல்லப் பட்டவுடன், வாயினின்றும் சுங்கானை எடுத்தான்.

''அது போதும்!'' என்று அழுத்தமான, கட்டைக்குரலில் கூறினான். ''அது போதுமான பேச்சு. செயலாற்றுவோம், நண்பர்களே!''

116

சின்னம் பொறித்த சட்டையும், காலுறைகளும் அணிந்த நெடிய நரைத்தலையுடைய வேலைக்காரன் ஒருவன் ஓசைப்படாது படுக்கையறையுள் நுழைந்து, படுக்கைக்கு அருகிலிருந்த மேசையின் மேல் ஒரு கிண்ணம் சாக்கலேட்டும், பிஸ்கட்டுக்களும் வைத்துவிட்டு, தணிவான சரசரப்புடன் சன்னல் திரைகளை விலக்கினான். காரின் கண்களைத் திறந்தான்.

''சிகரெட்!''

தனது ஒவ்வொரு செயலையும் சொல்லையும் அடிவைப்பையும் கவனித்துவந்த அமெரிக்க உயர்

சமூகத்தினர் வெறும் வயிற்றுடன் இருக்கும்போது புகைப்பிடித்தல் ஒழுக்க நெறியின்மையின் அடையாளம் என்று கருதுவதை அறிவானாயினும், காலையுணவுக்கு முன்பு புகைப்பிடிக்கின்ற ருஷ்யப் பழக்கத்திலின்றும் தன்னை விடுவித்துக்கொள்ள காரினுக்கு இயலவில்லை.

அமெரிக்கப் பத்திரிகைகளில் நாள்தோறும் வந்த அடிக்கட்டுரைகள் காரினின் பழைய வாழ்க்கையை வெள்ளையடித்து முற்றிலும் மறைத்து விட்டன. இதற்கு முன்பு அவன் கட்டாயப்படுத்தப் பட்ட போதுதான் ஒயின் குடித்தான், உண்மையில் குடிவகைகளுக்கு அவன் பகைவன்; அவனும் லாமோல் சீமாட்டியும் ஒன்று சேர்ந்து ஓய்வுகொள்ள நேரம் பெற்ற போது விவிலியத்தில் மிகவும் பிரியமான பகுதிகளை உரக்கப் படிப்பதே அவர்களது பிடித்தமான பொழுதுபோக்கு என்று கூடத் தெளிவாயிற்று; அவனது சில தீவிர நடவடிக்கைகள் (வில் தவ்ரே செயல்கள், வேதியல் தொழிற்சாலைகளைத் தகர்த்தது, அமெரிக்கக் கப்பற்படையை மூழ்கடித்தது, முதலியன) விதிவசமான தற்செயல் நிகழ்ச்சிகள் என்று சில பத்திரிகைகளும், ஹைபர்பாலாயிடைக் கவனக்குறைவாகக் கையாண்டதால் நிகழ்ந்தவை என்று வேறு சிலவும் விளக்கின; எவ்வாயினும் அந்நிகழ்ச்சிகளுக்காக அப்பெரிய மனிதன், உளமாரவும் ஆழ்ந்த முறையிலும் வருத்தம் தெரிவித்து தன்வசமின்றி நிகழ்ந்துவிட்ட பாவங்களை முடிவாகக் கழுவிக்கொள்வதற்காக சர்ச்சில் சேரவும் தயாராயிருந்தான் (காரினைத் தங்கள் பக்கம் சேர்த்துக் கொள்வதற்காகக் கத்தோலிக்கர்களுக்கும் புராடஸ்டெண்டுகளுக்கும் இடையே போராட்டம் தொடங்கிவிட்டது); இறுதியாகப் பிள்ளைப்பருவம் முதற்கொண்டு, பத்து வெவ்வேறான விளையாட்டுக்களில் ஈடுபாடு கொண்டிருந்ததாக அவன் பெருமைப்படுத்தப்பட்டான்.

சிகரெட்டைப் புகைத்த பிறகு காரின் சாக்கலேட்டைப் பார்த்து முகம் சுளித்தான். அவன் போக்கிரியாகவும் கொள்ளையனாகவும் கருதப்பட்ட

அந்த நாள்களிலோ, காலையில் ஊக்கமுறுவதற்காக பிராந்தியும், சோடாவும் கேட்டிருப்பான், ஆனால் உலகின் ஒருபாதியின் சர்வாதிகாரி பகலை பிராந்தியில் தொடங்குவதா? அத்தகைய தவறான வழக்கம், தனது அரியணையைச் சுற்றிலும் நெப்போலியனது காவலர்களைப் போல நெருங்கியிருக்கும் உறுதியான, நம்புவதற்குரிய பூர்ஷ்வாக்கள் அனைவரையும் மன முறிவு கொள்ளவைத்து விடும்.

சுளிப்புடன் சாக்கலேட்டை உறிஞ்சினான். மரியாதை நிறைந்த ஏக்கத் தோற்றத்துடன் கதவருகில் நின்று கொண்டிருந்த வேலைக்காரன் தணிந்த குரலில் கேட்டான்:

''மாட்சிமை சான்றீர் தங்களுடைய தனிச் செயலாளரை உள்ளே வர அநுமதிப்பாரா?''

சோம்பலுடன், காரின் படுக்கையில் நிமிர்ந்து அமர்ந்து, பட்டுப் பைஜாமாவை மாட்டிக் கொண்டான்.

''வரச் சொல்லுங்க.''

செயலாளன் உள்ளே நுழைந்தான். எலும்பு தட்டிய மேனியும் சுருக்கம் விழுந்த நெற்றியும் குழிந்த கன்னங்களும் கொண்ட நடுவயதினன் ஆகிய அவன், கறுப்புடைகளை அணிந்திருந்தான். அவனது கண் இமைகள் எப்போதும் பாதியளவு மூடியே இருந்தன. அமெரிக்காவிலேயே மிக நேர்த்தியான பழகுமுறை கொண்டவனாக அவன் கருதப்பட்டான். பெரிய நிதியதிபர்கள் அவனைத் தன்பால் வேவுபார்க்குமாறு அமர்த்தியிருப்பதாக காரின் எண்ணினான்.

''புதுசா என்ன? தங்கத்தின் விலையில் ஏதேனும் மாற்றம் உண்டா?'' என வினவினான் காரின்.

''ஏறிக்கொண்டிருக்கிறது.''

''ஆனா மெதுவாக, இல்லையா?''

செயலாளன் தனது இமைகளை உணர்ச்சியின்றி உயர்த்தினான்.

''ஆமாம், லேசாக, மிக லேசாக.''

''நாசமாப் போக!''

ஜரிகை வேலை செய்யப்பட்ட செருப்புக்களுள் வெறுங்கால்களை நுழைத்துக்கொண்டு ஓய்வறையி

லிருந்த வெள்ளைக் கம்பள விரிப்பின் மீது உலவத் தொடங்கினான் காரின்.

''நாசமாப் போக! இழி மகன்கள், முட்டாள்கள்!''

தானாகவே அவனது இடக்கை அவன் முதுகின் பின்புறம் நகர்ந்தது, வலக்கைக் கட்டைவிரலை பைஜாமா நாடாவுக்குள் நுழைத்துக்கொண்டு, நெற்றியில் மயிர்க்கற்றை புரள முன்னும் பின்னும் நடந்தான். செயலாளன் இதனை வரலாற்றுச் சிறப்புடைய கணமாக எண்ணினான் போலும்: நாற்காலியில் விறைப்பாக நிமிர்ந்து அமர்ந்தான், கஞ்சி போட்ட கழுத்துப்பாட்டைக்கு வெளியே கழுத்தை நீட்டினான், அவன் வரலாற்றின் நடையைக் கேட்டுக் கொண்டிருப்பது போலத் தோன்றியது.

''நாசமாப் போக!'' என்றான் காரின் கடைசி முறையாக. ''தங்கத்தின் விலையில் ஏற்றம் மெதுவாக இருப்பது என்னிடம் நம்பிக்கையின்மை என்று மதிக்கிறேன். என்னிடம்! உங்களுக்குப் புரியுதா? தங்கக்கட்டிகளைத் தடையின்றி விற்பதைத் தடுத்து, ஓர் ஆணை பிறப்பிக்கிறேன். விற்பவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்படும். இதை எழுதுங்க: 'செனட் சபையின் தீர்மானப்படி இந்த நாளிலிருந்து...'''

இந்த வேலை முடிந்த போது, இரண்டாவது சிகரெட்டைப் பற்றவைத்தான். பாதி குடிக்காது வைத்திருந்த சாக்கலேட் கோப்பையினுள் சிகரெட் துண்டை எறிந்தான்.

''இன்னும் வேறு என்ன? என்னைக் கொல்வதற்கான முயற்சிகள் பற்றி ஏதேனும் கண்டுபிடிக்கப்பட்டனவா?''

செயலாளனுடைய மழமழப்பாக்கப்பட்ட நீண்ட கங்களையுடைய நீண்ட விரல்கள் தோல்பையினின்றும் ஒரு தாளை எடுத்தன. தானே படித்துக்கொண்டு பின்புறம் திருப்பினான். பிறகு மறுபடியும் திருப்பினான்.

''உங்களைக் கொல்வதற்காகச் செய்யப்பட்ட இன்னும் இரு முயற்சிகளைப் போலீசார் வெளிப்படுத்தியிருக்காங்க, ஐயா. ஒன்று நேற்று மாலை,

மற்றொன்று இன்று காலை ஆறரை மணிக்கு.''

''ஆகா, மிகவும் நல்லது. பத்திரிகைகளில் அதை வெளியிடுக. யார் அவர்கள்? அந்தப் போக்கிரிகளை மக்கள் நல்லா நொறுக்கியிருப்பாங்க என்று நினைக்கிறேன்? என்ன?''

''நேற்று மாலை ஓர் இளைஞன், ஒருவேளை தொழிலாளி வர்க்கத்தைச் சேர்ந்தவனாக இருக்கலாம், அரண்மனைப் பூங்காவில் கண்டுபிடிக்கப்பட்டான். ஒவ்வொன்றும் ஒரு பவுண்ட் எடையுள்ள இரண்டு இரும்புத் திருகாணிகள், அவன் சட்டைப் பையில் இருந்தன. துரதிருஷ்டவசமாக அது காலங் கடந்த நேரம், பூங்காவில் கொஞ்சப் பேரே இருந்தாங்க. தங்களால் போற்றப்படுற சர்வாதிகாரியின் உயிரைக் கவர அக்கொடியன் விரும்பினான் என்பதைத் தெரிந்துகொண்ட சில வழிப்போக்கர்கள் மட்டுமே அவனை அடிப்பதில் வெற்றியடைந்தாங்க. அவன் காவலில் வைக்கப்பட்டிருக்கிறான்.''

''அவ்வழிப்போக்கர்கள் தனிப்பட்டவர்களா, அல்லது போலீஸ் கையாட்களா?''

செயலாளனின் கண் இமைகள் துடித்தன, தனது வாயின் ஓரங்களில் முறுவலித்தான். வட அமெரிக்காவிலேயே அப்படிப்பட்ட முறுவல் அது ஒன்றுதான்.

''சொல்லவே தேவையில்லை, ஐயா, அவர்கள் தனிப்பட்டவர்கள், உங்களிடம் பக்தி கொண்ட நேர்மையுள்ள வணிகர்கள்.''

''அவ்வணிகர்களது பெயர்களைக் கண்டுபிடித்து, அவர்களுக்கு என் ஆழ்ந்த நன்றியைப் பத்திரிகைகளின் வாயிலாகத் தெரியப்படுத்துங்க. கைது செய்யப்பட்டவன் சட்டத்தின் கடுமுனைப்புடன் விசாரிக்கப்படட்டும். அவனுக்குத் தண்டனை வழங்கப்பட்டபின், நான் அவனை மன்னிக்கிறேன்.''

''இரண்டாவது முயற்சியும் பூங்காவில் தான் செய்யப்பட்டது,'' எனத் தொடர்ந்தான் செயலாளன். ''உங்களுடைய ஒய்வறையின் சன்னல் பக்கமாக ஒரு பெண் நோக்கிக் கொண்டிருப்பது காணப்பட்டது, ஐயா. அப்பெண் ஒரு சிறு கைத்துப்பாக்கி வைத்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.''

''அவள் இளம் பெண்ணா?''

''ஐம்பத்து மூன்று.''

''மக்கள்கூட்டம் என்ன செய்தது?''

''அவளது தொப்பியைப் பிய்த்துக் குடையை ஒடித்துக் கைப்பையை மிதித்துத் துவைத்ததோடு, கூட்டத்தின் செயல்கள் நின்றன. சீற்றமுற்ற கூட்டத்தைக் கண்டதுமே அவள் மயக்கமுற்று விழுந்து விட்டாள். வைகறை நேரம், முதியவளின் இரங்கத்தக்க தோற்றம் ஆக இவ்விரண்டினாலும் தான் கூட்டம் லேசான நடவடிக்கைகளோடு விட்டு விட்டது.''

''இந்த முதிய காக்கைக்கு வெளிநாடு பாஸ் போர்ட் ஒன்னு கொடுத்து, உடனே அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கு வெளியே அனுப்புங்க. பத்திரிகைகளில் இந்நிகழ்ச்சியை வெளியிடுவது அறிவீனம். இன்னும் என்ன?''

ஒன்பதாக ஐந்து நிமிடங்களிருக்கும் போது காரின் 'ஷவா' குளியல் எடுத்துக் கொண்டு, முடிதிருத்துவோனும் அவனது நான்கு துணைவர்களும் செய்த வேலைகளுக்கு உட்பட்டான். பல் மருத்துவர் பயன்படுத்துவது போலத் தனிவகையான நாற்காலியில், மூன்று பகுதியாக இருந்த கண்ணாடியின் முன்பு, லினன் போர்வையால் மூடப்பட்டு அமர்ந்தான். அவனது முகத்திற்கு நீராவிக் குளிப்பு தரப்பட்டது. அதேபொழுது, சிற்றரங்களும் விசேடக் கத்திகளும் மெல்லிய மான்தோல்பட்டைகளும் இரண்டு பொன் முடி இளம் பெண்களால் கையாளப்பட்டு, அவனது இரண்டு கைகளின் விரல்களிலும் இங்குமங்கும் தாவின. அவனது கால்விரல்களின் நகங்கள், திறமை கொண்ட கறுப்பு வெள்ளைக் கலப்புப் பெண்கள் இருவரால் திருத்தப்பட்டன. பல மண நீர்களாலும், மணப்பொருள் வடிப்புக்களாலும் அவனது தலை கழுவப்பட்டு, தலைமயிர் சுருட்டும் கம்பிச் சுருள் இடுக்கிகளால் சற்றே வினை செய்யப்பட்டு, வழுக்கைத்திட்டு வெளித்தெரியாதவாறு வாரிவிடப்பட்டது. தனிச் சிறப்பு வாய்ந்த கலைத்திறமைக்காகப் பிரபுப்பட்டம் கொடுக்கப்பட்டிருந்த முடிதிருத்து

வோன் பியோத்தர் பெத்ரோவிச்சின் முகத்தை மழித்தான், வாசனைப்பொடி தூவினான். முகத்திற்கும் தலைக்கும் பல்வேறுவகையான நறுமணத் துளிகளால் மணம் ஊட்டினான். கழுத்திற்கு ரோஜாவும், காதுகளுக்குப் பின்னுள்ள பள்ளத்திற்கு லில்லியும், நெற்றி மேட்டிற்கு'புக்கே வர்நே'யும், உதடுகளைச் சுற்றி ஆப்பிள் மலரும், மணத்துளிகளுள் எல்லாம் மிக நுண்ணியதான 'அந்தியொளி' அவனது தாடிக்குமாகப் பூசினான்.

இவ்வாறான ஒப்பனைகளுக்குப் பிறகு, அந்தச் சர்வாதிகாரி பட்டுத்தாளினால் சுற்றப்பட்டு, ஒரு பெட்டியில் வைக்கப்பட்டுக் கண்காட்சிக்கு அனுப்பப் பட்டிருக்கக் கூடும். இந்த வேலை முடியும் வரை காரின் சிரமத்துடனேயே சகித்துக்கொண்டிருந்தான்; ஒவ்வொரு நாள் காலையிலும் இதற்கு உட்படுத்தப் பட்டான், அவனது ''குளிப்புக்குப் பிறகு கால் மணி'' பற்றிப் பத்திரிகைகள் எழுதின. ஆகவே, வேறொன்றும் செய்வதற்கில்லை.

பிறகு அவன் உடுத்தும் அறைக்குச் சென்றான். அங்கே இரண்டு குற்றேவலர்களும் வேலைக்காரனும், சட்டைகளையும் காலுறைகளையும் மூடு செருப்புக்களையும் இவைபோன்ற மற்றவற்றையும் பிடித்துக்கொண்டு, அவனுக்காகக் காத்திருந்தனர். இன்றைக்குப் புள்ளிகளுடைய பழுப்பு நிற உடுப்பைத் தேர்ந்தெடுத்தான். சர்வாதிகாரியின் மிக வியப்பூட்டும் திறமைகளுள் ஒன்று, டையைத் தேர்ந்தெடுக்கும் சாமர்த்தியமாகும் என்று பத்திரிகை நிருபப் பன்றிகள் எழுதியிருந்தனர். அவன் கீழ்ப்படிந்து, தன் நடவடிக்கையில் கருத்தூன்ற வேண்டியிருந்தது. பல்வண்ண டை ஒன்றை காரின் தேர்ந்தெடுத்தான். ருஷ்ய மொழியில் வாய்க்குள்ளே திட்டிக்கொண்டு தானே டை கட்டிக்கொண்டான்.

மத்திய காலத்திய ஒப்பனைகள் நிறைந்த விருந்தறைக்கு அவன் நடந்து சென்ற போது, தனக்குள் எண்ணினான்:

''நெடுங்காலத்திற்கு என்னால் இதைத் தாங்க முடியாது. நாசமாய்ப் போகிறவுங்க என்மீது கடு

மையான ஒழுங்குமுறையைச் சுமத்தியிருக்காங்க.''

காலையுணவின்போது (வெறியூட்டும் குடி ஒரு சொட்டு கூட இப்போதும் இல்லை) சர்வாதிகாரி தனது கடிதங்களைப் பார்க்க வேண்டியிருந்தது. முந்நூறு கடிதங்கள் அளவில், சேவ்ர் பீங்கான் தட்டில் கிடந்தன. புகையில் வாட்டிய மீனையும், சுவையற்ற பன்றியிறைச்சியையும், உப்பற்ற நீரில் வேக வைக்கப்பட்ட ஓட் பொங்கலையும் மென்றுகொண்டே (ஆட்டக்காரர்களும் உயர்ந்த ஒழுக்கமுடையவரும் கொள்ளும் காலையுணவு) காரின் முடமுடப்பான கடித உறைகளுள் ஒன்றை குறிப்பின்றி பொறுக்கினான். அழுக்கு முள்கரண்டியினால் அதனைத் திறந்து பரபரப்புடன் படித்தான்:

''என்னுடைய நெஞ்சு கடும் வேகத்தில் துடிக்கிறது. மனக்கிளர்ச்சி காரணமாக இவ்வரிகளை எழுதுவதே என் கைக்கு அரும்பாடாக இருக்கிறது. என்னைப் பற்றி நீங்கள் என்ன எண்ணுவீர்கள்? ஓ, கடவுளே! நான் உங்களைக் காதலிக்கிறேன்... பத்திரிகையில் உங்களுடைய நிழற்படத்தைப் பார்த்த கணத்திலிருந்தே, நான் உங்களைக் காதலித்து வருகிறேன். நான் இளம் பெண். மதிப்பிற்குரிய பெற்றோர்களின் மகள்...''

இத்தகைய காதல் கடிதங்கள் வழக்கமாக, ஒரு நிழற்படத்துடன் சேர்ந்தே வரும். இந்தப் படங்களில் (ஒரு மாதக் காலத்துள் பல பத்தாயிரங்களுக்கு மேல் சேர்ந்துவிட்டன) செழித்து அடர்ந்த தலைமயிருடனும், வஞ்சமற்ற கண்களுடனும், மூடத் தன்மை காட்டும் மூக்குகளுடனும் இருந்த முகங்கள் மட்டுமீறி அலுப்புதட்டுவனாக இருந்தன. க்ரெஸ்தோவ்ஸ்கி தீவிலிருந்து வாஷிங்டனுக்கும், பெத்ரோகிராடுப் புறத்தில் தனியாக இருந்த வீட்டின் வெப்பமூட்டப் பெறாத அறையிலிருந்து—அங்குதான் காரின் அநேகமாக இல்லை என்று தோன்றிய தப்பும் வழியை ('பிபிகோண்டா' படகில் ஓட்டம்) தேடியவண்ணம் கைகளைப் பிசைந்து கொண்டே மூலைக்கு மூலை நடந்தான்—இன்னும் இருபது நிமிடங்களுக்குப் பிறகு தான் போக வேண்டிய செனட்

சபையிலுள்ள குடியரசுத் தலைவரின் தங்கப் பூசப் பட்ட நாற்காலிக்கும், தலை கிறுக்கவைக்கும் பய ணம் செய்தது... உலக முழுவதையும் அச்சுறுத்தி யது, தரைக்கடியிலிருக்கும் தங்க மாகடலின் உடை மைக்காரனாகியது, பார்மீது ஆணை செலுத்தும் வன்மை பெற்றது ஆகிய இவையெல்லாம், மிகுதி யும் அலுப்புத்தட்டும் கிணற்றுத்தவளை வாழ்க்கைப் பொறியில் அகப்படத்தானா!

''நாசமாப் போக!''

காரின் நாப்கினைக் கீழே எறிந்துவிட்டு விரல் களால் மேசை மீது தாளம் போட்டான். வகையாக மாட்டிக்கொண்டான். உச்சியை அடைந்துவிட்டான், இனி அடைய முயல வேறொன்றும் இல்லை. சர் வாதிகாரி அவன். சக்கரவர்த்தி என்ற பட்டத்தைக் கோர வேண்டுமா? அதை அவன் செய்தால் அவர் கள் ஒரேயடியாக அவனைத் தீர்த்துக்கட்டி விடுவார் கள். தப்பி ஓடுவதா? எங்கே? எதற்காக? ஸோயா விடம்? ஆ, ஸோயா! வில் தவ்ரேவில், அந்தப் பழைய விடுதியில், வெப்பமும் ஈரநைப்பும் கொண்ட இர வில் இருந்தபோது வந்திட்ட அந்த முதன்மையான உறவு முறிந்துவிட்டது. துன்புறுத்தும் கொஞ்சல் களுக்கிடையில், சன்னலுக்கு வெளியே கேட்ட இலைகளின் சலசலப்புக்கு ஒத்தவாறு, அந்த இர வில், காரினின் துணிவுச் செயல்களின் கற்பனைகள் முழுதும் பிறந்திட்டன. வரப்போகும் போராட்டத் தைப் பற்றிய பேரானந்தத்தில் முழுமையாகத் திளைத்தான். ''உன் காலடியில் உலக முழுதையும் வைக்கிறேன்,'' என்று சொல்வது அப்போது எளி தாக இருந்தது. ஆனால் இப்போது காரின் வெற்றி யாளன். உலகம் அவன் காலடியில் இருக்கிறது. உலகை வென்ற காரின், உப்பில்லாத பொங்கலைத் தின்ன வேண்டியிருக்கிறது, நிழற்படங்களிலுள்ள மூடத்தனம் ததும்பும் முகங்களைக் கொட்டாவி விட்டுக் கொண்டே பார்க்கிறான். வில் தவ்ரேவில் கண்ட கற்பனைக் கனவு அவனிடமிருந்து அப்பால் நழுவிப்போய்விட்டது. ஆணைகள் விடுப்பது, பெரிய மனிதர் தோரணையில் நடப்பது, எல்லா நடத்தை

களிலும் மதிப்புக்குரிய முறையிலேயே இருப்பது... ஓ, நரகம்!.. துளியளவு பிராந்தி குடிப்பது கெடுதல் ஏதும் செய்யாது...

கதவுகளின் அருகில் மெழுகு பொம்மைக் கண் காட்சியிலுள்ள பாவைகள் போன்று நின்ற பணியா ளர் பக்கம் திரும்பினான். உடனே அவருள் இருவர் முன்னே வந்தனர், வினவுகின்ற பாணியில் ஒருவன் குனிந்தான். மற்றவன் சொன்னான்:

''மாட்சிமை சான்றீர், தங்கள் கார் தயாராயிருக் கிறது.''

மிடுக்காகக் குதிகளைத் தட்டிக் கொண்டு சர்வாதி காரி செனட் சபைக்குள் நுழைந்தான். பொன் பூசப் பட்ட நாற்காலியில் அமர்ந்து, கூட்டத் தொடக்க அறிவிப்புச் சொற்களை வெண்கலக் குரலில் கூறி னான். அவனது புருவங்கள் நெறித்திருந்தன, அவனது முகத்தில் ஆற்றலும் உறுதியும் தெரிந்தன. அந்த நேரத்தில், டஜன் கணக்கான புகைப்பட, திரைப் படக் காமிராக்கள் அவனைப் படம் பிடித்தன.

இந்த நாளில் அவனுக்குப் புதிய பட்டங்களைக் கொடுத்து செனட் சபை பெருமை பெற்றது: கீழ் வேல்ஸின் பிரபு, நேப்பிள்ஸின் கோமகன், கவுன்ட் ஷார்லெருவா, பாரன் மில்ஹாவுஸன், ருஷ்யா முழு திற்கும் இணைமன்னர். துரதிருஷ்டவசமாக அமெ ரிக்க ஐக்கிய நாடுகள் கொடுப்பதற்குப் பட்டங்கள் இல்லாத குடியரசு நாடானதால் 'கடவுளுடைய பெரு வணிகர்' என்ற சிறப்பை அவனுக்கு வழங்கியது.

காரின் தனது நன்றிகளைச் செலுத்தினான். இரண்டடுக்குச் சாளரங்கள் கொண்ட கூடத்தில் தனக்குமுன் அமர்ந்திருந்த கொழுத்த வழுக்கையர் கள், மதிப்புடைய சொட்டையர்களின் மேல் அவன் பெருமகிழ்வுடன் துப்பியிருப்பான். எனினும், அத்த கையது எதையும் செய்யாமல் எழுந்து நின்று அவர் களுக்கு நன்றி தெரிவிக்க வேண்டும் என்றும் உணர்ந் தான்.

''சற்று பொறுங்கள், வேசி மகன்களே,'' என்று தான் எழுந்து நின்ற போது, கைத்தட்டல் நிறைந்த வெளியரங்கின் முன்பு அவன் (வெளுத்த, சிறிய உருவமும், கூரிய தாடியுமாக) எண்ணினான்.''இனத் தூய்மை பற்றியும்,முதன்மையான ஆயிரவர்களைத் தேர்ந்தெடுப்பது பற்றியும் நான் நகல் ஆணை பிறப்பிக்கின்ற வரை...'' எனினும் தன் காலும் கையும் கட்டப்பட்டதாக உணர்ந்தான். பிரபு, கோமகன், கவுன்ட், கடவுளுடைய பெருவணிகர் போன்ற பட்டங்களைப் பெற்றதால், அவ்வளவு கடுமையான எதனையும் செய்யக்கூடாது என்றும் உணர்ந்தான்... இப்போது, செனட் சபையிலிருந்து அவன் ஒரு விருந்திற்குப் போக வேண்டும்...

தெருக்களில் சர்வாதிகாரியின் கார் வரவேற்பு முழங்களுடன் வாழ்த்தப்பட்டது. ஆனால் நெருங்கிப் பார்த்தால்—இந்தக் கூக்குரல்கள் எல்லாம், உடுப்பில்லாத போலீசார் போன்று தோன்றிய வாட்டசாட்டமான இளைஞரிடமிருந்தே வந்தன என்பதை ஒருவர் காணக் கூடும். காரின் தலை வணங்கி, எலுமிச்சை வண்ண உறை அணிந்த கையை அலைத்தான். ருஷ்யாவில் பிறந்திரா விட்டாலும், புரட்சியின் ஊடாக வாழ்ந்திரா விட்டாலும், நகரத்தினூடே அவ்வாறு செல்லுவதும், பாராட்டும் கூட்டத்தினர் ''வாழ்க, வாழ்க!'' என்று கத்தி அவன் மீது பூக்களை எறிந்து தங்கள் விசுவாச உணர்ச்சியைக் காட்டுவதும் அவனுக்குப் பெருமகிழ்வினைத் தந்திருக்கும். எனினும், காரின் நஞ்சூட்டப்பட்ட மனமுடையவன். கோபமாக இருந்தான்: ''உதவாக்கரைகளே, உதவாக்கரைகளே, வாய்களை மூடுங்க, எருதுகளே, கத்துவதற்கு எதுவும் இல்லை.'' நகரமன்ற வாயிலில் காரிலிருந்து வெளியேறிய போது டஜன் கணக்கான பெண்களின் (மண்ணெண்ணெய், ரயில் வழி, டப்பியிலடைத்த பொருள்கள், முதலிய பல தொழிற்துறை மன்னர்களின் புதல்விகள்) கைகள் அவன் மீது மலர்கள் சொரிந்தன.

படிகளின்மீது விரைவாக ஏறிச் சென்றவாறு வலமும் இடமுமாக முத்தமிடுவது போலச் செய்தான். கடவுளுடைய பெருவணிகரின் பெருமைக்காக விருந்து மன்றத்தில் இசை முழங்கியது. அவன் இருக் கையில் அமரவும் எல்லாரும் அமர்ந்தனர். வெண் பனி போன்று வெளுப்பாயிருந்த மேசைகள் 'ப' வடிவத்தில் அமைக்கப்பட்டிருந்தன. அவற்றின் மேல் மலர்கள் வண்ணக் கோலமிட்டன, பட்டை தீட் டிய கண்ணாடிகள் ஒளிர்ந்தன. ஒவ்வொரு தட்டின் அருகிலும் பதினோரு வெள்ளிக் கத்திகளும், வெவ் வேறு வடிவங்களும் அளவுகளும் உடைய பதினோரு முள்கரண்டிகளும் கிடந்தன (பெரிதும் சிறிதும் ஆன கரண்டிகளைப் பற்றி ஒன்றுமே சொல்ல வேண்டிய தில்லை). உண்பதற்குதவும் சரியான கத்தியையும் முள்கரண்டியையும் எடுப்பதில் தவறுபுரிய அவன் துணியவில்லை.

வெறுப்பினால் காரின் பற்களை நெறுநெறுத் தான்: மேற்குடியினர்! விருந்திற்கு வந்திருந்த இரு நூறு பேரில் முக்கால் பங்கினர் ஒருகாலத்தில் தெருக் களில் மீன் விற்றவர்கள். இப்போது, பதினோரு முள்கரண்டிகளுக்குக் குறைவாக வைத்துக்கொண்டு உண்பது கண்ணியக் குறைவு என்று எண்ணினர்! ஆனால் எல்லாக் கண்களும் சர்வாதிகாரியின் மேல் நிலைத்திருந்தன. ஆகவே, இப்போதும் அவன் பொதுமக்களின் கருத்தின் செல்வாக்கிற்குப் பணிந் தான். அவனது நடைமுறை மற்றவருக்கு ஒரு மாதி ரியாக அமைந்தது.

ஆமை சூப்பிற்குப் பிறகு பேச்சுக்கள் தொடங் கின. காரின் எழுந்து கையில் ஒரு கிளாஸ் ஷாம்பே யினுடன் நின்றுகொண்டு, அவர்கள் கூறுவதைக் கேட்டான். ''நான் குடிமயக்குறுவேன்,'' என்ற எண் ணம் அவனது மூளையினூடே நெளிந்து வளைந்து சென்றது. வீண் முயற்சி.

அருகிலிருந்த இரு வாயாடி அழகிகளுக்கு உண் மையாகவே ஒவ்வொரு மாலையிலும் தான் விவிலியம் படிப்பதாக உறுதி கூறினான்.

பழ உண்டிக்கும் காப்பிக்கும் இடையில் வாழ்த்துரைகளுக்கு விடையளித்தான்:

''சீமாட்டிகளே, சீமான்களே! நீங்கள் எனக்குத் தந்திருக்கும் இந்த ஆட்சி அதிகாரத்தைக் கடவுளின் திருவுளமாகக் கருதுகிறேன். இத்தகைய ஆட்சி அதிகாரம் உலக வரலாற்றிலே இதற்கு முன்பு இருந்ததேயில்லை. நமது பொருள்கள் விற்பனையாகும் சந்தைகளை விரிவுபடுத்துவதற்கும், நமது தொழிலும் வணிகமும் வளம்பெறுவதற்கும், இப்போது உள்ள அரசியல் மற்றும் சமுதாய அமைப்பைத் தலைகவிழ்க்க மக்கள்கூட்டம் செய்துவரும் இழிவான முயற்சிகளை ஒடுக்குவதற்கும் இந்த ஆட்சி அதிகாரத்தைச் செயற்படுத்துவது எனது மனச்சான்றின் தூய கடமையாகும்...'' இவ்வாறே இன்னும் சில கூறினான்.

இந்தப் பேச்சு மகிழ்ச்சி நிரம்பிய மனப்பதிவை ஏற்படுத்தியது. அதன் முடிவில் சர்வாதிகாரி தனக்கே சொல்லிக் கொள்வது போன்று, மூன்று மிக்க உரமுள்ள சொற்களைச் சேர்ந்தது உண்மைதான், ஆனால் புரியாத மொழியில் அவை சொல்லப்பட்டதை—ருஷ்ய மொழி என்று கருதிக் கொள்ளலாம்—அவற்றை ஒருவரும் கவனிக்கவில்லை. பிறகு, எல்லாப் பக்கங்களிலும் குனிந்து வணங்கி, மன்றத்தை விட்டு நீங்கினான். டிரம்பட்டுகளின் இசையும் டமார முழக்கமும் மகிழ்ச்சிக் கூக்குரல்களும் அப்போது கேட்டன. அவன் காரில் வீடு சென்றான்.

அரண்மனையின் முன்கூடத்தில் தனது தொப்பியையும் கைத்தடியையும் தரை மீது எறிந்தான் (அவற்றை எடுப்பதற்காக முன்னே பாய்ந்த பணியாளரிடையே குழப்பம்), காற்சட்டைப் பைகளுள் கைகளை ஆழமாகத் திணித்தான், சீற்றத்துடன் தாடியை முன்துருத்திக்கொண்டு படிக்கட்டுகளில் விரித்திருந்த தடித்த கம்பளங்களின்மீது நடந்து சென்றான். அவனது தனிச் செயலாளன் படிப்பறையில் அவனுக்காகக் காத்திருந்தான்.

'''பசிபிக் கழகத்தில்' சர்வாதிகாரியைப் பாராட்

டுவதற்காக ஏழு மணிக்கு ஒரு பெருவிருந்து நடைபெறும். இசை நிகழ்ச்சியும் இடம் பெறும்.''

''அப்படியா,'' என்றான் காரின். ''இன்னும் என்ன?''

''பதினோரு மணிக்கு, 'இந்தியானா' ஓட்டலின் வெள்ளை மன்றத்தில் நடன விருந்து நடை...''

''நான் நகரமன்றத்தில் நிறைய நண்டுகளைத் தின்றதால் நலமில்லாது இருப்பதை இரு இடங்களுக்கும் தொலைபேசி வழி சொல்லுங்க.''

''நான் துடுக்குடன் கூறுவதாகக் கருத வேணாம். நலமில்லை எனப் பாசாங்கு செய்வது பெரிய தொல்லைகளுக்கு இடந்தரும்: பரிவு தெரிவிப்பதற்காக நகர் முழுதும் உடனே இங்கு வந்துவிடும். அதற்கும் அப்பால் பத்திரிகை நிருபர்கள் இருக்காங்க—அவர்கள் புகைபோக்கிகளின் வழியாகக் கூட உள்ளே இறங்கிருவாங்க.''

''நீங்க சொல்றது சரி. நான் போவேன்.'' காரின் மணியடித்தான்.''குளிப்பு. பதவிச் சின்னங்கள், பதக்கங்கள் போன்ற எல்லாவற்றுடனும் மாலையுடை எடுத்துவை.''

காரின் தனது செயல் மேசை முன் அமர்ந்தான். (இடப்புறம் வானொலிவாங்கி ஒன்றும், வலப்புறம் தொலைபேசி ஒன்றும், முன்புறம் ஒலிப்பதிவுக் கருவியும் இருந்தன). சுத்தமான காகிதம் ஒன்றை எடுத்து, மைக்கூட்டிற்குள் பேனாவை நுழைத்தான். பிறகு எண்ணுவதற்காக நிறுத்தினான்...

''ஸோயா,'' என்று உறுதியான உருண்டை எழுத்தில் ருஷ்ய மொழியில் எழுதத் தொடங்கினான், ''என் நட்பே, நான் என்னை எத்தகைய முட்டாளாக்கிக் கொண்டிருக்கிறேன் என்பதை நீங்க மட்டுந்தான் புரிந்துகொள்ள இயலும்...''

எட்டாகக் கால் மணியிருக்கும்போது, தனது அலுவல் மேசைக்கு காரின் விரைந்தான். அவன் மாலையுடையுடன் எல்லாப் பதவிச்சின்னங்களும் பதக்கங்களும் அரைக்கோட்டின் குறுக்கே ஒரு துணிப்பட்டி

யும் பூண்டிருந்தான். பொன் தீவின் வானொலி நிலையத்தின் ஒலியலை நீளத்திற்கு எப்போதும் சரிசெய்து வைக்கப்பட்டிருந்த வானொலி வாங்கியிலிருந்து அழுத்தமான குறிகள் வந்து கொண்டிருந்தன. செவிக்குழாயை காரின் மாட்டிக்கொண்டான். ஸோயாவின் குரல், தெளிவாக ஆனால் உரப்பின்றி, மற்றொரு கோளத்திலிருந்து பேசுங்குரல் போன்று, ருஷ்ய மொழியில் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தது:

''காரின், நாம் ஒழிந்துவிட்டோம்... காரின், நாம் ஒழிந்துவிட்டோம்... தீவில் கலகம் நடக்கிறது. பெரிய ஹைபர்பாலாயிட் கைப்பற்றப்பட்டு விட்டது...யான்ஸன் என்னுடன் இருக்கிறான்.முடிந்தால் 'அரிஸோனா'வில் தப்புவோம்.''

குரல் நின்று போனது. காரின் மேசையருகில் நின்றான், ஆனால் செவிக்குழாயை நீக்கவில்லை.அவனது தனிச் செயலாளன் காரினின் பட்டுத் தொப்பியையும் கைத்தடியையும் வைத்துக்கொண்டு கதவருகில் அவனுக்காகக் காத்திருந்தான். ஒலிவாங்கி மீண்டும் குறிகளை வெளியிடத் தொடங்கியது. இப்போது, ஆண் குரலாக இருந்தது. துடுக்காக, தடிப்பாக ஆங்கிலத்தில் பேசியது:

''உலகத் தொழிலாளர்களே! அமெரிக்க ஐக்கிய நாடுகளில் பரவிய பீதியின் எல்லையையும் விளைவுகளையும் நீங்கள் அறிவீர்கள்...''

ஷெல்காவின் அறிக்கையை இறுதிவரைக் கேட்டு பிறகு காரின் செவிக்குழாயை நீக்கினான். எத்தகைய பரபரப்பும் இன்றி, ஒரு குறும்பு முறுவலுடன், சுருட்டொன்று பற்றவைத்தான். தனது மேசையின் செருகறையிலிருந்து நூறு டாலர் நோட்டுக் கட்டு ஒன்றையும், கைத்துப்பாக்கி வடிவில் நிக்கல் முலாம் பூசிய சிறு கருவியொன்றையும் எடுத்தான்: இதுதான் அவனது சமீபத்தியக் கண்டுபிடிப்பு—பையில் வைக்கும் ஹைபர்பாலாயிட். கண்புருவங்களின் அசைவினால் செயலாளனை அழைத்தான்.

''பயணக்கார் தயாராக உடனே கட்டளையிடுங்க.''

காரிலிடம் வேலை பார்க்கத் தொடங்கியதிலிருந்து முதல் முறையாகச் செயலாளன் தன் இமைகளை உயர்த்தினான், அவனது சிவப்பேறிய கண்கள் வியப்பைக் காட்டின.

''ஆனால், மேன்மை சான்றீர்...''

''வாயை மூடுங்க! இராணுவத் தளபதிக்கும், நகர ஆளுநருக்கும், சிவில் அதிகாரிகளுக்கும், ஏழு மணியிலிருந்து போர்க் காலச் சட்டம் அமுலுக்கு வருகிறது என்று உடனே உத்தரவிடுங்கள். நகரில் ஒழுங்கீனத்தைத் தடுக்க ஒரே வழி சுடுவதுதான்.''

செயலாளன் உடனடியாகக் கதவுக்கு அப்பால் மறைந்தான்.

மும்மடி கண்ணாடிக்கருகில் காரின் நடந்து சென்றான். அவன் முகம் வெளுத்திருந்தது. பதவிச்சின்னங்களும் பதக்கங்களுமாக அவன் ஒரு மெழுகுப்பாவை போன்று தோன்றினான். நெடுநேரம் தன்னையே பார்த்துக்கொண்டான். திடீரென்று அவன் கண்களுள் ஒன்று தன் போக்கில் ஏளனமாகச் சிமிட்டியது... ''ஓடிப்போ, பியேர் ஹெர்ரி, எவ்வளவு முடியுமோ அவ்வளவு விரைவில் ஓடிவிடு,'' என்று மென்குரலில் தனக்குள்ளே சொல்லிக்கொண்டான்.

117

பொன் தீவில் நிகழ்ச்சிகள் ஜூன் இருபத்து மூன்றாம் நாள் மாலை நெருங்கும்போது தொடங்கின. நாள் முழுதும் மாகடல் புயலில் கொந்தளித்தது. தென்மேற்கிலிருந்து பெரிய கரு மேகங்கள் மேலே பந்தன. தீப்போன்று நெளியும் மின்னல்கள் வானத்தைக் கிழித்தன. மெல்லிய தூறலால் மூடப்பட்டுத் தீவும் மங்கியிருந்தது.

மாலை நெருங்கும் போது புயல் மேகங்கள் அகன்று, மிகத் தொலைவில் தொடுவானத்துக்கு அப்பால் மின்னல் பளிச்சிட்டது. ஆனால், காற்று மட்டும் அடங்காச் சீற்றத்துடன் தொடர்ந்து அடித்துக் கொண்டிருந்தது, தரைவரைக்கும் மரங்களைச்

சாய்த்தது, நெடிய விளக்குத் தூண்களையும் வளைத்தது, மின்சாரக் கம்பிகளை அறுத்தது, தொழிலாளர் வீட்டுக் கூரைகளை உருவற்ற தாள்களாகப் பிய்த்தது. தீவின் ஒவ்வொரு மூலையிலும் சீழ்க்கையடித்து ஊளையிட்டது. காற்று, பேயின் சீற்றத்தைக் கொண்டமையால், ஒவ்வோர் உயிரியும் மறைவிடம் தேடிற்று. துறைமுகத்தில் கப்பல்கள் கம்பிக் கயிறுகளால் துறையுடன் இறுக்கப்பட்டன, பல படகுகள் கடலில் இழுத்துச் செல்லப்பட்டன. அரண்மனைக்கு எதிரிருந்த சிறு விரிகுடாவொன்றில் மீன் பிடிப்பவனின் மிதப்பினைப் போன்று 'அரிஸோனா' இங்கும் அங்கும் தள்ளாடியது.

தீவின் மக்கள்தொகை அணிமைக் காலங்களில் கணிசமாகக் குறைந்து விட்டது. சுரங்க வேலை நிறுத்தப்பட்டது. லாமோல் சிமாட்டியினுடைய மிகப் பெரிய கட்டட வேலைத் திட்டம் தொடங்கப்படவில்லை. ஆறாயிரத்தில் சுமார் ஐந்நூறு தொழிலாளர்கள் இன்னமும் தீவில் தங்கியிருந்தனர். மற்றவர்களே தங்கத்தைச் சுமந்துகொண்டு போய்விட்டனர். வெறுமையான வீட்டு வரிசைகள் கீழே இடித்துத் தள்ளப்பட்டு வருங்காலக் கட்டடங்களுக்காகத் தரை மட்டப்படுத்தப்பட்டது.

அமைதியாக இருந்த அந்த நிலத் துண்டில் காவல் போலீசாருக்கு முற்றிலும் எவ்வகை வேலையும் இல்லை. மஞ்சள் வெள்ளை உடையுடைய போலீஸ்காரர்கள் தங்கள் துப்பாக்கிகளுடன் காவல் நாய்களைப் போல பாறைகளில் நின்று அல்லது குறிப்பிடத்தக்கவாறு துப்பாக்கி அடிப்புறங்களைத் தட்டி ஒலியெழுப்பி முள்வேலிகளுக்கிடையே மேலுங் கீழும் அணிவகுத்த அந்தக் காலம் போய்விட்டது. போலீசார் குடிக்கத் தொடங்கினார்கள். பெரு நகரங்கள், ஆடம்பரமான ரெஸ்டாரன்டுகள் ஆகியவற்றிற்காக அவர்கள் ஏங்கினார்கள். விடுமுறை வேண்டினார்கள், கிளர்ச்சி செய்வதாக அச்சுறுத்தினார்கள். எனினும், ஒருவருக்கும் விடுமுறையோ வேலைநீக்கமோ தரக்கூடாது என்ற கண்டிப்பான கட்டளையொன்று காரினிடமிருந்து வந்திருந்தது.

போலீசார் இருப்பிடங்களுக்கு நேராக அச்சுறுத்தும் பெரிய ஹைபர்பாலாயிடின் வாய் திருப்பி வைக்கப்பட்டிருந்தது.

போலீசார் இருப்பிடங்களில் சூதாட்டம் பெருமளவில் நடைபெற்றது. சுற்றிலும் கட்டிகளின் குவியலாகக் கிடந்த தங்கம் கசப்பு முள்ளங்கி போல எல்லாருக்கும் அலுத்துவிட்டதால், தோற்றவர்கள் உறுதிமொழி முறி எழுதிக் கொடுத்தனர். தங்கள் ஆயுதங்களையும், நெடுநாளாக நன்கு புகைத்த சுங்கான்களையும், ஒரு போத்தல் பழைய பிராந்தியையும் பணயம் வைத்து ஆடினர். மாலை வரையும், போலீஸ் படையினர் அனைவரும் இறந்தவர்போலக் குடித்து மயங்கிக் கிடந்தனர். கட்டுப்பாடு ஒரேயடியாகக் குலைந்து போய்விட்டது. எனினும் வெறும் பண்புள்ள நடத்தையையேனும் நிலைநிறுத்த ஜெனரல் ஸுபோத்தின் மிகவும் இடர்ப்பட்டான்.

''ஆபீசர் கனவான்களே! உங்களைப்பற்றி நீங்களே வெட்கப்பட வேண்டும்,'' என்று கூறும் ஜெனரல் ஸுபோத்தினது குரல், ஒவ்வொரு மாலையும் அதிகாரிகளுடைய கழகத்தில் முழங்கியது. ''அடிமட்டத்தில் அமுந்திவிட்டீர்கள்.''

ஒரு நடவடிக்கையும் பலன் தரவில்லை. அதிலும் புயலடித்த ஜூன் இருபத்து மூன்றாம் தேதியன்று இருந்தது போலக் குடிவெறி முன்பு ஒருபோதும் இருந்ததில்லை. ஊளையிடும் காற்று தன்னுடன் கொடூரமான வீட்டு நினைவு நோயினைக் கொண்டு வந்தது. நெடுங்கால நினைவுகளை அது மேல் கொணர்ந்தது. பழைய மனப்புண்கள் திறந்தன. சன்னல் மீது சாரல் அடித்தது. வானம் புயல் குண்டுகளை வெடித்து, பீரங்கிகள் போன்று தடதடத்தது. சுவர்கள் நடுங்கின. மேசைகள் மீதிருந்த கண்ணாடிக் குவளைகள் கடகடத்தன. போலீஸ் பாதுகாவலர்கள் நீளமான மேசைகளின் மீது முழங்கைகளை ஊன்றி அமர்ந்து, கழுவாதும் வாரப்படாதும் இருந்த தங்களது தலைகளை உள்ளங்கைகளில் வைத்துத் தாங்கியவாறு எதிரிகளுடைய பாட்டொன்றைப் பாடிக்கொண்டிருந்தனர்: ''ஓ, எங்கே உருள்

கிறாய், சின்ன ஆப்பிளே...'' மாகடலின் பரப்பிலே மறைந்து கிடந்த ஒரு சிறு தீவிற்குக் கொண்டுவரப் பட்ட இப்பாட்டு, எந்தத் தொலை வாழ்வினின்றும் வந்தது என்பது சைத்தானுக்கே தெரியும். தொலைவில் இருந்த அவர்களது தாய்நாட்டிலிருந்து வரும் மூச்சுப்போன்று இருந்தது. குடிவெறி ஏறிய தலைகள் ஆடின. அவர்களது கன்னங்களின் கண்ணீர் வழிந்தோடியது. இந்த இழிசெயலைத் தடுப்பதற்காகச் செய்த முயற்சிகளில் ஜெனரல் ஸுபோத்தினது குரல் கம்மியது; முடிவில் அவர்களை எல்லாம் சைத்தான் வாரிக்கொண்டு செல்லுமாறு கைது விட்டு, அவனே குடித்து வெறிகொண்டான்.

போலீசாரின் இருப்பிடங்களில் இருந்த சங்கட நிலைமையைப் புரட்சிக் குழுவின் வேவுக்காரன் (இவான் கூசேவ்) அறிவித்தான். மாலையில் ஆறு மணிக்குச் சற்றுப் பிறகு, வாட்ட சாட்டமான ஐந்து சுரங்கத் தொழிலாளர் தன்னுடன் வர, ஷெல்கா போலீசார் இருப்பிடங்களுக்கு முன்னிருந்த காவல் கூடத்திற்குச் சென்று, ஆயுதக்கிடங்குக்கு அருகே பாராக்கொடுத்த குடிவெறியிலிருந்த இரு காவலரைத் திட்டத் தொடங்கினான். ருஷ்ய மொழிப் பேச்சுவழக்குப் பாங்கால் கவரப்பட்ட காவலர்கள், எச்சரிக்கையைத் தளரவிட்டு விட்டார்கள். திடீரென அவர்கள் கால்வாரி விடப்பட்டு, படைக்கலங்கள் நீக்கப்பட்டு, கையுங்காலுங் கட்டப்பட்டனர். நூறு துப்பாக்கிகளைப் பெற்றான் ஷெல்கா. விளக்குத் தூணுக்கு விளக்குத் தூண், மரத்துக்கு மரம் மறைந்து ஓடியும் வெளியிடத்தின் குறுக்கே தவழ்ந்து வந்த தொழிலாளருக்கு இத்துப்பாக்கிகள் தரப்பட்டன.

போலீசார் இருப்பிடங்களுள் நூறு பேர் திடீரென்று நுழைந்தார்கள். பயங்கரமான குழப்பச் சண்டை நடந்தது. தாக்குவோர்களைப் போலீசார் போத்தல்களாலும், மேசை நாற்காலிகளாலும் எதிர்த்துத் தாக்கினர். பிறகு, இடம் பார்த்து நின்று கொண்டு, தங்கள் கைத்துப்பாக்கிகளிலிருந்து வெடி கிளப்பினர். மாடிப்படிகளிலும் நடைகளிலும் தங்

கும் அறைகளிலும் சண்டை சீற்றத்துடன் நடந்தது. குடிவெறியுடையவரும் தெளிவானவரும் கைகலந்து சண்டையிட்டனர். உடைந்த சன்னல்களினூடே விலங்குத்தனமான ஊளைகள் வெளிப்பட்டன. தாக்குவோர் குறைந்த எண்ணிக்கையில் இருந்தனர், ஐவருக்கு ஒருவர்தான். ஆனால் அவர்கள் தங்களது காய்த்துப்போன கைகளை, ஊளைச்சதை பெற்ற மஞ்சள் வெள்ளைநிற போலீசார் மீது கதிரடிக்கும் தடி போன்று பயன்படுத்தினர். கூடுதல் படை வந்தது. சன்னல்களுக்கு வெளியே போலீசார் குதிக்கத் தொடங்கினர். சில இடங்களில் நெருப்புப் பற்றியது. போலீசார் இருப்பிடங்கள் புகைக்குள் மறைந்து போயின.

118

அரண்மனையில் வெளிச்சமற்ற வெற்று அறைகளினூடே யான்ஸன் ஓடினான். சுற்றுத் தாழ்வாரத்தில் கடல் கொந்தளித்து நுரைத்து, மோதியது. சன்னல் சட்டங்களைத் தடதடவென்று அசைத்துக்கொண்டு காற்று ஊளையிட்டது. யான்ஸன், ஸோயாவை அழைத்து அதிகரித்த திகிலுடன் உற்றுக்கேட்டான்.

கீழே மாடிப்படிகளில் ஓடி, காரினின் இருப்பிடத்திற்கு ராட்சசப் படிகளில் இறங்கி ஓடினான். கீழே இருந்து வரும் துப்பாக்கி வெடிகளையும் தனிக் கூச்சல்களையும் அவன் கேட்க முடிந்தது. உள்தோட்டத்திற்குள் நோக்கினான்—அது ஆள்அரவமற்று இருந்தது, ஒருவன்கூடக் காணப்படவில்லை. எதிர்ப் புறத்தில், ஐவிக் கொடி படர்ந்த வளைவுக்கடியில், வெளியிலுள்ள மக்கள் வாயில்களை உடைக்க முயன்றுகொண்டிருந்தனர். சன்னலை உடைத்த ஒரு துப்பாக்கிக் குண்டு மட்டுமே தன்னை எழுப்பும் அளவிற்கு அயர்ந்து எப்படி அவன் உறங்கியிருக்கக் கூடும்? லாமோல் சீமாட்டி தப்பிவிட்டாளா? அவள் கொல்லப்பட்டிருக்கக் கூடுமா?

ஏதோ ஒரு கதவைத் திறந்து உள்ளே சென்றான். நீலச்சாயை படிந்த நான்கு உருண்டைகளும்,

சுதைச் சித்திரவேலை செய்த விட்டத்திலிருந்து தொங்கிக் கொண்டிருந்த ஐந்தாவது உருண்டையும் அறைக்கு வெளிச்சம் ஊட்டின. எல்லாவகையான கருவிகள், அளப்புக் கருவிகளுடன் கூடிய சலவைக் கல் தட்டுகள், அரக்கு பூசிய பெட்டிகள், மின்னணு விளக்குகளுடைய அடுக்கறைப் பெட்டிகள், மின் னாக்கியின் கம்பிகள் முதலியவை நிறைந்த மேசை கள்மீதும் பல அமைப்புப்படங்கள் குப்பையாகக் கிடந்த எழுதும் மேசைமீதும் வெளிச்சம் படிந்தது. இது காரினின் தொழிலறை. தரைமீது கசங்கிய கைக்குட்டை ஒன்று கிடந்தது. யான்ஸன் அதனைப் பற்றி எடுக்க, அதில் லாமோல் சீமாட்டியினுடைய அத்தர் மணம் வீசியது. ஹைபர்பாலாயிடு கோபுரத் துக்குச் செல்லும் லிப்டுக்கு இவ்வறையிலிருந்து தரைகீழ் வழியிருந்ததை பிறகு நினைவுகூர்ந்தான். எங்கேனும் மறைகதவு கட்டாயம் இருக்க வேண் டும். ஆமாம், முதல் குண்டுகள் வெடிக்கப்பட்ட வுடனேயே, கோபுரத்திற்கு லாமோல் சீமாட்டி விரைந்திருப்பாள். அதை ஏன் அவன் முன்னமேயே ஊகிக்கவில்லை!

மறைகதவுக்காகத் தேடினான். பிறகு உடையும் கண்ணாடியின் ஒலியும், காலடிகளின் மிதிபடும் ஓசை யும், ஒருவரையொருவர் பரபரப்புடன் அழைக்கும் குரல்களும் சுவரின் மற்றப் புறத்திலிருந்து வந்தன. அவர்கள் அரண்மனைக்குள் உட்புகுந்துவிட்டனர். லா மோல் சீமாட்டி ஏன் நேரத்தாழ்த்துகிறாள்? செதுக்கு வேலைப்பாடு உடைய இரட்டைக் கதவுகள் பக்கம் துள்ளிச் சென்று அவற்றைப் பூட்டினான், தனது துப்பாக்கியை வெளியெடுத்தான். காலடிகளாலும் குரல்களாலும் கூச்சல்களாலும் அரண்மனை முழுதும் நிரம்பியது போலத் தோன்றிற்று.

''யான்ஸன்!''

அவன் முன்னே லாமோல் சீமாட்டி நின்றாள். அவளது வெளுத்த உதடுகள் அசைந்தன, ஆனால் அவள் என்ன சொன்னாள் என்பதை அவன் கேட்க வில்லை. ஆழமாக மூச்சுவிட்டு அவளை விழித்து நோக் கினான்.

''நாம் ஒழிந்துவிட்டோம், யான்ஸன், நாம் ஒழிந்துவிட்டோம்!'' என்று அவள் திரும்பத் திரும்பச் சொன்னாள்.

அவள் கறுப்புடையணிந்திருந்தாள், அவளது மெலிந்த, இறுக மூடிய கைகள் மார்பின் மேல் அழுத்தப்பட்டிருந்தன. நீலவானில் புயல் இருப்பது போன்று அவளது கண்கள் கலங்கியிருந்தன.

''பெரிய ஹைபர்பாலாயிடின் லிப்ட் வேலை செய்யலே,'' என்றாள் லாமோல் சீமாட்டி, ''அது உச்சிக்கு உயர்த்தப்பட்டிருக்கு. யாரோ கோபுரத்தில் உட்கார்ந்திருக்கிறான். கிராதியின் குறுக்குச் சட்டங்கள் வழியாக ஏறி மேலே போயிட்டான். இது அந்தப் பையன், கூசேவாகத்தான் இருக்கணும்னு உறுதியா நம்புறேன்.''

விரல்களை நெரித்துக்கொண்டு செதுக்கு வேலைப்பாடுடைய கதவுகள்பால் கண்ணோட்டினாள். புருவங்கள் சுளித்தன. கதவுகளுக்குப் பின்புறம், டஜன் கணக்கான காலடிகள் வெறியுடன் இடித்துக் கொண்டிருந்தன. வெளியிலிருந்து விலங்குத்தனமான கூக்குரல் கேட்டது, அதைத் தொடர்ந்து பரபரப் பொலியும், விரைவான வெடிப்பொலியும் கேட்டன. லாமோல் சீமாட்டி சட்டென மேசையருகில் அமர்ந்து ஸ்விச்சைப் போட்டாள்; டைனமோ ஹம் என்றொலித்து, பேரிக்காய் வடிவுடைய வால்வுகள் நீலவண்ணமாக ஒளிர்ந்தன. சாவி கடகடவென ஒலித்துக் குறிகள் அனுப்பியது.

''காரின், நாம் ஒழிந்துவிட்டோம்... காரின், நாம் ஒழிந்துவிட்டோம்...'' என்று ஒலிபெருக்கியின் மீது குனிந்துகொண்டு பேசத் தொடங்கினாள்.

ஒரு நிமிடத்திற்குப் பிறகு, செதுக்கு வேலைப்பாடுடைய கதவுகள் கால்களாலும் முட்டிகளாலும் அடிக்கப்பெற்று அதிர்ந்தன.

''கதவைத் திற! திற!..''

யான்ஸன் கையைப் பற்றிச் சுவர்ப்பக்கம் அவனை இழுத்தாள் லாமோல் சீமாட்டி. தரைக்கருகில் செதுக்கு வேலைப்பாடுடைய அலங்கார இலை வரிசையொன்றின்மேல் காலடியால் அழுத்தினாள்.

இரண்டு பாதித் தூண்களுக்கு இடையில் இருந்த துணி மூடிய தகடு ஒன்று, ஓசைப்படாது கீழே தாழ்ந்தது. ஸோயாவும் யான்ஸனும் அந்த மறைவான திறப்பினூடே தரைக்கடிவழிக்குள் நழுவினர். தகடு பழைய இடத்திற்கு மீண்டது.

புயலுக்குப் பின்னர் விண்மீன்கள், கொந்தளிக்கும் மாகடலுக்கு மேலே எப்போதையும்விட மிக்க ஒளியுடன் பிரகாசித்தன. அவர்களுடைய கால்களை வாரிவிடும் அளவுக்குக் காற்றுப் பலமாக இருந்தது. அலைகள் உயர எழும்பி பாறை நிறைந்த கரையின் மீது மோதி இடியொலி செய்தன. மாகடலின் ஓசையினூடே வெடிகளின் ஒலி கேட்க முடிந்தது. புதர்களுக்கும் பாறைகளுக்கும் பின்புறம் ஒளிந்துகொண்டே, ஸோயாவும் யான்ஸனும் வட விரிகுடாவிற்கு ஓடினர், அங்கே ஒரு மோட்டார்ப் படகு எப்போதும் வைக்கப்பட்டிருந்தது. வலப்புறத்தில், அரண்மனையின் கரியவிளிம்புகள் அவர்களுக்கு மேலே ஓங்கி நின்றன. இடப்புறம், வெண்முடி அலைகள் இருந்தன. இன்னும் தொலைவில் 'அரிஸோனா'வின் விளக்குகள் கூத்தாடிக் கொண்டிருந்தன. அவர்களுக்குப் பின்புறம், ஹைபர்பாலாயிட் கோபுரக் கிராதிகளின் நிழலுருவம் வான் உயர நிமிர்ந்து நின்றது; அதனுடைய உச்சியில் வெளிச்சம் இருந்தது.

''பாருங்க,'' எனக் கத்திய லாமோல் சிமாட்டி ஓடியவாறே பின்புறம் திரும்பிக்கொண்டும், கோபுரத்தின் பக்கம் கையை அலைத்துக்கொண்டும், ''அதோ, அங்கே வெளிச்சம். அதுதான் சாவு!'' என்றாள்.

அலைகளினின்றும் தடுத்துக் காக்கப்பட்ட ஒரு விரிகுடாவிற்குச் செங்குத்தான சரிவொன்றின் வழியே அவர்கள் சென்றனர். இங்கே, ஒரு சிறிய மோட்டார்ப் படகு மேலும் கீழும் அலைந்து கொண்டிருந்தது; அரண்மனைத் தாழ்வாரத்திற்குச் செல்லும் மாடிப்படிகளின் அடியில் இருந்த சிறு மிதவை மேடையொன்றில் இது கட்டப்பட்டிருந்தது. ஸோயா

படகினுள் குதித்து, பின்னுள்ள என்ஜினருகே ஓடி, நடுங்கும் கைகளுடன் இயக்கியை அழுத்தினாள்.

''விரைவா, யான்ஸன், விரைவா!''

மோட்டார்ப் படகு ஒரு சங்கிலியில் சேர்த்துப் பூட்டப் பட்டிருந்தது. கைத்துப்பாக்கிக் குழலைப் பூட்டுவளைவிற்குள் நுழைத்து யான்ஸன் அதை உடைக்க முயன்றான். தாழ்வாரத்தின் மேலிருந்த கதவுகள் உடைந்து திறந்தன. ஆயுதந்தாங்கிய மனிதர் தோன்றினர். யான்ஸன் கைத்துப்பாக்கியைக் கீழே போட்டுவிட்டுப் பொருத்துவாய்க்கருகில் சங்கிலியைப் பற்றினான். அவனது தசைநார்கள் நெறிந்தன, கழுத்து புடைத்தது, அவனது சட்டையின் கழுத்துப்பட்டியிலிருந்த கொக்கி உடைந்தது. திடீரென்று படகின் என்ஜின் படபடக்கத் தொடங்கிற்று. வெளித் தாழ்வாரத்திலிருந்த மனிதர்கள், துப்பாக்கிகளை அலைத்துக்கொண்டும், அவர்களை நிற்கச் சொல்லிக் கூவிக்கொண்டும் மாடிப்படிகள் வழியாக ஏற்கெனவே இறங்கி ஓடிவந்து கொண்டிருந்தனர்.

கடைசி முயற்சியில் யான்ஸன் சங்கிலியை ஆப்புடன் பிடுங்கி படபடக்கும் படகைக் கடலுக்கு மிகத் தொலைவில் தள்ளினான்; ஓரமாகத் தவழ்ந்து சுக்கானை நோக்கி நகர்ந்து சென்றான்.

மோட்டார்ப் படகு கரையிலிருந்து அரைவளைவாகத் திரும்பி விரிகுடாவின் குறுகிய வெளிவாயிலுக்கு பின்பற்றி வந்த துப்பாக்கி வெடிகளுடன் போட்டியிட்டு ஓடியது.

'புயல் ஏணியை இறக்குங்க, ஏ பேய்களா!'' என்று மோட்டார்ப் படகிலிருந்து கொண்டே யான்ஸன் கர்ஜித்தான். 'அரிஸோனா'வுக்குப் பக்கத்தில் அலைகளின் மேல் மோட்டார்ப் படகு கூத்தாடிக் கொண்டிருந்தது. ''உதவிக் காப்டன் எங்கே? தூங்குறானா? நான் அவனைத் தூக்கிலிடுவேன்!''

''இதோ இருக்கிறேன், காப்டன்.''

''நங்கூரச் சங்கிலிகளை எடுத்துவிடு, என்ஜின்

களை முடுக்கு! முழு வேகத்தோடு முன்னேறு! விளக்கு களை அணை!''

''ஆகட்டும், காப்டன்!''

ஏணிமேல் முதலில் ஏறினாள் லாமோல் சிமாட்டி. இரும்புச் சாரக்கம்பி மீது சாய்ந்துகொண்டு கீழே பார்த்தவள், யான்ஸன் நிற்க முயல்வதையும் விலாப் புறம் விழுவதையும் அவனுக்காக எறியப்பட்ட வடக் கயிற்றைப் பிடிக்க முயன்றும் முடியாதவனாயிருப் பதையும் கண்டாள். ஓரலை படகையும் அவனையும் மூடியது, பிறகு வலியினால் சுளித்துக்கொண்டும் உப்பு நீரைத் துப்பிக்கொண்டும் அவனது முகம் மீண்டும் தோன்றியது.

''என்ன விஷயம், யான்ஸன்?''

''நான் காயம் பட்டுவிட்டேன்.''

நான்கு மாலுமிகள் படகுக்குள் குதித்து யான்ஸ னைப் பற்றி கப்பலின் மேல்தளத்திற்குத் தூக்கிச் சென்றனர். மேல்தளத்தில், விலாவைக் கையால் அழுத்திக்கொண்டு மீண்டும் விழுந்து நினைவிழந் தான். அவனை அறைக்குள் தூக்கிச்சென்றார்கள்.

முழு விரைவில், அலைகளினூடே அறுத்துக் கொண்டும் நீர்ப் பள்ளங்களில் வீழ்ந்துகொண்டும் 'அரிஸோனா' தீவிலிருந்து தொலைவில் அகன்றது. உதவிக் காப்டன் தலைமையேற்றான். மேடையின் மேல் அவன் பக்கம் லாமோல் சிமாட்டி நின்றாள், சாரக்கம்பியை அவள் கைகள் பற்றிக் கொண்டிருந் தன. நீர் அவள் மேலே சொரிந்து வழிய, உடை அவ ளுடைய உடம்புடன் ஒட்டிற்று. தொலைவில் நெருப் பொளி சுடர்வதையும் (போலீசார் இருப் பிடங்கள் எரிந்து கொண்டிருந்தன) இடையிடை தீக்கொழுந்தின் கூரிய நாக்குகளால் தொளைக்கப் பட்ட புகை மேகங்கள் தீவை மூடுவதையும் கண் டாள். திடீரென்று எதையோ கவனித்தவள் போன்று, உதவிக் காப்டனின் சட்டைக்கையைப் பற்றி னாள்.

''தென்மேற்குத் திருப்பி ஓட்டுங்க...''

''அங்கே பாறைத்தொடர் இருக்கு, சிமாட்டி.''

''அது உங்க் வேலையில்லே. தீவு கப்பலுக்கு

இடப்புறம் இருக்குமாறு பாறைகளுக்கு இடையே செலுத்துங்க.''

ஹைபர்பாலாயிட் வைக்கப்பட்டிருந்த கிராதி வைத்த கோபுரத்திற்கு ஓடினாள். முன்பகுதியிலிருந்து மேல்தளத்திலெல்லாம் பரந்தடித்த அலை நீர் அவளது காலை வாரிவிட்டது. மாலுமி ஒருவன் அவளைத் தாங்கிக்கொண்டான். ஈரமாகவும் சினத்தால் வெறிகொண்டும் இருந்தாள். அவனிடமிருந்து திமிறிக்கொண்டு விடுபட்டு, கோபுரத்தின்மேல் ஏறினாள்.

தீவில், புகைப் பிழம்புக்கு மேலே உயரத்தில், ஒரு விண்மீன் கண்ணைப்பறிக்கும் ஒளியுடன் மிளிர்ந்தது,—அது 'அரிஸோனா'வைத் தேடிக் கொண்டு இயங்கிக் கொண்டிருந்த பெரிய ஹைபர் பாலாயிட்.

கோபுரத்தின் மேலிருந்து பல மைல் சுற்றுவட்டத்திற்கு வீசக்கூடிய, கொல்லும் கதிரினின்றும் வெளியேற எவ்வாய்ப்பும் இல்லாததால், ஸோயா சண்டை செய்யத் தீர்மானித்து விட்டாள். முதலில், அக்கதிர் விண்மீன்களுக்கு இடையில் தொடுவானத்தினோரமாகச் சில விநாடிகளுக்குள் இருநூற்று ஐம்பது மைல்கள் வட்டமொன்றைச் செய்து தாவியது. இப்போது இடைவிடாது மாகடலின்மேற்பகுதியைத் துழாவிக் கொண்டிருந்தது. அலைத்தலைகளை அது தீண்டியபோது நீராவிப் படலங்கள் அடர்ந்து எழும்பின.

கரையினின்றும் ஏழு மைலுக்கு அப்பால், 'அரிஸோனா' முழு விரைவுடன் இயங்கிக் கொண்டிருந்தது. அலைகளின் செறிவில், பாய்மர நுனிவரை நீருள் முழுகிப் பிறகு, அலைத்தலையின் மேல் மீண்டும் எழும்பியது. இத்தகைய கணங்களில்தான், பின்புறக் கோபுரத்திலிருந்து தன்னுடைய கருவியின் கதிரால் தீவை நோக்கி ஸோயா எதிர்த்துத் தாக்கினாள். இங்குமங்கும் மரக் கட்டடங்கள் தீப்பற்றின. பெரிய ராட்சசத் துருத்திகளால் ஊதப்பட்டவை போன்று தீப்பொறிகள் காற்றில் உயரே சொரிந்தன. கொந்தளிக்கும் கரிய மாகடல் முழுவதிலும்

செந்நிறவொளி உருக்காட்டிற்று. ஓர் அலைத்தலை மேல் 'அரிஸோனா' எழுந்து நிமிர்ந்த போது, தீவி லிருந்து அதன் நிழலுருவம் நோக்கப்பட்டது. எரி கின்ற வெள்ளை ஊசிபோன்றிருந்த கதிர் அதனைச் சுற்றிக் கூத்தாடிற்று. மேலிருந்து, அது நெளிந்து நெளிந்து, குதித்துக் கொண்டிருந்தது. அதற்கு மிக அணித்தே இருந்த அலைகளைத் தாக்கிக் கொண்டி ருந்தது. முதலில் முன்பகுதிக்கு முன்னும் பிறகு பின் பகுதிக்குப் பின்னும் தாக்கிற்று.

கண்ணைப்பறிக்கும் அவ்விண்மீன், நேரே தனது கண்ணில் பளிச்சிடுவது போன்று ஸோயாவுக்குத் தோன்றியது. தொலைவில் உள்ள கோபுரத்திலிருக் கும் விண்மினொளியைக் குறிபார்த்து அதற்கு நேரே தனது ஹைபர்பாலாயிடின் வாயைத் திருப்ப முயன் றாள். 'அரிஸோனா'வின் செலுத்தி அலகுகள் காற் றில் வெறியுடன் சுழன்றன, கப்பல் அலைகளில் வழுக் கியவாறு முன்புறம் சரிந்தது. அந்தக் கணத்தில் தான், தீவிலிருந்து வந்த கதிர் தனது குறியைக் கண்டு, மேலெழும்பி, நடுங்கி, பிறகு அக்கப்பலின் பக்க உருவத்தை நோக்கி நேரே இறங்கித் தாக் கியது. ஸோயா கண்களை மூடினாள். அந்த இரு மருங்குச் சண்டையைக் கூர்ந்து நோக்கிய கப்பலிலி ருந்தோர் அனைவரது நெஞ்சுத்துடிப்புக்களும் அசை வற்று நின்றிருக்க வேண்டும்.

ஸோயா தன் கண்களைத் திறந்தபோது, அவள் முன்பு நீர்ச்சுவர் ஒன்றிருந்தது—'அரிஸோனா' ஒரு நீர் இறக்கத்துள் முழுகிவிட்டது. ''இது இன்னும் சாவு இல்லை,'' என்று எண்ணினாள் ஸோயா. ஹைபர்பாலாயிடிலிருந்து கைகளை எடுத்தாள். அவை அவளது மருங்குகளில் செயலற்றுத் தொங் கின.

ஓர் அலையினால் மீண்டும் மேலெழுப்பப்பட்ட போது, ஏன் சாவு தங்களைத் தப்பவிட்டது என் பதை அவர்கள் கண்டனர். தீவையும் ஹைபர்பா லாயிடின் கோபுரத்தையும் மிகப் பெரிய புகைப்பட லங்கள் மூடின,—எண்ணெய்க் கிடங்குகள் வெடித் திருக்க வேண்டும். புகைத்திரைக்குப் பின்னே 'அரி

ஸோனா' இப்போது அமைதியாக வெளிச்செல்லக் கூடும்.

பெரிய ஹைபர்பாலாயிடை நொறுக்கிவிட்டா ளா, அல்லது அதன் விண்மீனொளி, புகையினால் மறைக்கப்பட்டுள்ளதா என்பதை ஸோயா அறியாள். இப்போது அதைப் பற்றியென்ன?.. கோபுரத்தி லிருந்து சிரமத்துடன் கீழ் இறங்கினாள். கைப்பிடி களைப் பிடித்துக்கொண்டு, நீலத்திரைகளுக்குப் பின் புறம் யான்ஸன் மூச்சுத்திணறிக் கொண்டு கிடந்த அறைக்கு வழிகண்டு சென்றாள். ஒரு சாய்வு நாற் காலியில் தொப்பென்று விழுந்து, மெழுகுத் தீக்குச்சி யொன்றைக் கொளுத்தி, ஒரு சிகரெட் பற்றவைத் தாள்.

'அரிஸோனா' வடமேற்கில் சென்றது. காற்று சற்றே தணிந்துவிட்டது, ஆனால் மாகடல் இன்னும் அமைதியுறவில்லை. காரினுடன் தொடர்புகொள்ள முயன்று கொண்டு, முன்னேயே அமைக்கப்பட்ட குறிகளை ஒரு நாளில் பலமுறை அவ்வுல்லாசப்படகு வெளியனுப்பியது. உலகம் எங்கும் இருந்த நூறு ஆயிரக்கணக்கான வானொலி வாங்கிகளில் ஸோயா வினுடைய குரல் கேட்டது: ''நாங்கள் என்ன செய்ய வேண்டும்? எங்கே போவது? நாங்கள் இன்ன அட்ச ரேகை, இன்ன தீர்க்கரேகையில் இருக்கிறோம். கட் டளைகளுக்குக் காத்திருக்கிறோம்.''

மாகடலில் சென்று கொண்டிருந்த நீராவிக்கப் பல்கள் இச்செய்தியைக் கேட்டவுடன், ''கடல்களின் பேரபாயம்'' ஆகிய 'அரிஸோனா' மீண்டும் தோன்றி விட்ட திகிலுறுத்தும் இடத்திலிருந்து விரைந்து அப் பால் நீங்கின.

119

எரிகின்ற எண்ணெயிலிருந்து கிளம்பிய புகையினால் பொன் தீவு மூடப்பட்டது. புயலுக்குப் பின்னர் அமைதி நிலவியது, கரும்புகைப் படலம் நேர் மே லே, தெளிவான வானத்திற்கு எழும்பியது. மாகட

வின் மீது பல மைல்களுக்கு அதன் பிரமாண்டமான நிழல் விழுந்தது.

தீவிலுள்ளோர் இறந்துவிட்டது போலத் தோன்றியது, சுரங்கத்திலிருந்த உயரத்தூக்கிக் கரண்டிகளின் கடகடவொலி ஒன்றுதான் அங்கு உயிர் இருப்பதின் ஒரே அடையாளமாக இருந்தது.

பிறகு அந்த அமைதியைக் குலைத்துக்கொண்டு ஆழ்ந்த, விறார்ந்த அணிநடை இசை எழுந்தது. புகை மூட்டத்தினூடே இருநூறு பேர் காணப்பட்டனர்: தலைகளை நிமிர்த்திக்கொண்டு, நிலைத்த உறுதிவாய்ந்த முகங்களுடன், அவர்கள் ஒத்து நடந்து கொண்டிருந்தனர். அணிவரிசையின் தலைப்பில், ஒரு செங்கொடியினால் சுற்றப்பட்ட ஏதோ ஒன்றை நான்கு பேர் தாங்கிச் சென்றனர். ஹைபர்பாலாயிட் கோபுரம் நின்ற பாறை மேட்டிற்குச் சென்றனர், அக்கோபுரத்தின் அடியில் நீண்ட சுமையை இறக்கினர்.

அது இவான் கூசேவின் சடலம். முந்திய நாள் 'அரிஸோனா'வுடன் நடத்திய சண்டையின் போது அவன் கொல்லப்பட்டான். அக்கோபுரத்தின் கிராதிகள் மேலாகப் பூனை போன்று ஏறி ஹைபர்பாலாயிடின் விசையை முடுக்கி, மலைபோன்ற அலைகளுக்கிடையே 'அரிஸோனா'வைத் தேடினான்.

'அரிஸோனா'விலிருந்து வந்த நெருப்பு வடம் கட்டடங்களுக்குத் தீமூட்டியும், விளக்குத் தூண்களையும் மரங்களையும் வெட்டிச் சாய்த்தும், தீவின் மீது கூத்தாடிற்று. ''பெண் நாய்,'' என்று இவான் முனகினான், தராஷ்கின் பாடங்கள் சொல்லித்தரும் போது செய்தது போன்றே, நாக்கை வெளியே துருத்தியவாறு கருவியின் வாயைத் திருப்பினான்.

'அரிஸோனா'வைக் கதிர்க் குவிமுனைக்கு உட்படுத்தி, அதன் முன்பகுதி, பின்பகுதியின் அருகே படிப்படியாகக் கோணத்தைக் குறுக்கிக் கொண்டே தாக்கினான். எண்ணெய்க் கிடங்குகள் எரிவதிலிருந்து வந்த புகை அவனைக் கலைத்தது. திடீரென்று 'அரிஸோனா'விலிருந்து வந்த கதிர், விண்மீன்போன்று மாறி நேரே இவானின் கண்ணிற்குள் தாக்கியது.

அக்கதிர்வடத்தினால் ஊடறுக்கப்பட்டு, ஹைபர்பாலாயிடின் மேல் சட்டத்தின் மீது விழுந்தான்...

''அமைதியுடன் உறங்கு, இவான், நீ வீரனாக இறந்தாய்,'' என்றான் ஷெல்கா. இவானின் உடம்புக்குப் பக்கத்தில் மண்டியிட்டு அமர்ந்து, செங்கொடியின் மூலையைப் புறந்திருப்பி, அப்பையனின் நெற்றியில் முத்தமிட்டான்.

டிரம்பட்டுகள் முழங்கின, இருநூறு பேரின் குரல்களும் சர்வதேசக் கீதத்தைப் பாடின.

இதற்குச் சற்றுப் பிறகு, வன்மைமிக்க இரு என்ஜின் விமானம் புகைப்படலத்தின் வெளியே மேலெழும்பியது. இன்னும் மேலே உயர்ந்து சென்றுகொண்டே மேற்குத் திரும்பியது...

120

''உங்கள் கட்டளைகளெல்லாம் நிறைவேற்றப்பட்டுவிட்டன, ஐயா.''

காரின் கதவைப் பூட்டி, ஒரு தட்டையான புத்தக அலமாரியருகே சென்றான். அதன் வலப் பக்கமாகக் கையால் துழாவினான்.

''இரகசியக் கதவின் விசைக்குமிழ் இடப்புறம் இருக்கிறது,'' என்று செயலாளன் ஏளன முறுவலுடன் சொன்னான்.

காரின் சட்டென்று அவன் பக்கம் விசித்திரமாகக் கண்ணோட்டினான். குமிழை அழுத்தினான். அலமாரி ஓசையின்றி அப்பால் நகர்ந்தது. அரண்மனையின் மறைவான அறைகளுக்குள் செல்லக் குறுகிய வழியொன்று வெளிப்பட்டது.

''நீங்க முதலில், தயவுசெய்து,'' என்ற காரின் செயலாளனுக்கு வழிவிட்டு நின்றான். செயலாளன் வெளிறிப்போனான், அதே வேளை காரின் இரக்கமற்ற ஒப்புரவு நோக்குடன் அவனது தலையின் மட்டத்திற்குக் கதிர்க் கைத்துப்பாக்கியின் வாயை உயர்த்தினான். ''கீழ்ப்படிவதே மிக அறிவுமிக்கது, திரு. செயலாளரே...''

121

காப்டனது அறைக்கதவு பரக்கத் திறந்திருந்தது. படுக்கை மீது யான்ஸன் கிடந்தான்.

உல்லாசப்படகு அரிதாகவே நகர்ந்து கொண்டிருந்தது. அமைதியில், அலைகள் கப்பலின் உடலின் மீது அடிப்பது கேட்க முடிந்தது.

யான்ஸனுடைய விருப்பம் உண்மையாகிவிட்டது,—மீண்டும் ஒரு முறை ல்ாமோல் சிமாட்டியுடன் தனியே கடலில் இருந்தான். தான் இறந்து கொண்டிருப்பதை அறிந்தான். பல நாள்களாகச் சாவினை எதிர்த்துப் போராடினான்,—வயிற்றில் ஓர் ஆழமான குண்டுக் காயம்—கடைசியில் முயற்சியை விட்டான். நிலைபேறுடைமையின் உயிர்ப்பு வந்த விரிகதவினூடே விண்மீன்களை ஏங்கி நோக்கினான்.

விண்மீன்களின் பின்னணியில் ஒரு நிழலாக லாமோல் சிமாட்டி அறைக்குள் வந்தாள். அவன்மேல் குனிந்து, உடம்பு எப்படியிருக்கிறது என்று மெல்ல வினவினாள். அவன் கண்ணிமைகளின் அசைப்பால் விடை தந்தான். ''நான் மகிழ்ச்சியா இருக்கிறேன், ஏன்னா நீங்க என்னோட இருக்கீங்க,'' என்று அவன் சொல்ல விரும்பியதாக அவள் புரிந்துகொண்டாள். மூச்சிற்காகத் திண்டாடி அவனது மார்பு வலிப்புறுதல் போன்று பலமுறை மேலெழும்பவே, ஸோயா சற்றும் அசைவின்றிப் படுக்கைக்குப் பக்கத்தே அமர்ந்தாள். வருத்தந் தரும் எண்ணங்கள் அவளது மனத்தில் நிறைந்திருக்க வேண்டும்.

''என் நண்பரே, என் ஒரே நண்பரே,'' என்றாள் அமைதியான அவலத்துடன், ''உலகத்தில் என்னைக் காதலித்த ஒரே ஆள் நீங்க மட்டுமே. உங்களுக்கு மட்டுந்தான் நான் இனியவளாயிருந்தேன். நீங்க இருக்கமாட்டீங்க... என்ன கொடுமை, என்ன கொடுமை...''

யான்ஸன் விடை தரவில்லை. அணுகும் கொடுமையை உறுதிப்படுத்துதல் போலத் தனது கண்ணிமைகளை மட்டும் அசைத்தான். அவனது மூக்கு

மிகக் கூரியதாகியிருப்பதையும் அவனது வாயில் நொய்தான முறுவல் தோன்றுவதனையும் கண்டாள். சற்று நேரத்திற்கு முன்புவரை அவனது கன்னங்கள் காய்ச்சலினால் சிவந்திருந்தன. இப்போதோ, அவை மெழுகாலானவை போன்றிருந்தன. இன்னும் பல நிமிடங்கள் காத்திருந்தாள். பிறகு அவன் கையில் தன் உதடுகளைப் பொருத்தினாள். அவன் இன்னும் உயிருடன் இருந்தான். மெல்லக் கண்களைத் திறந்தான், அவன் உதடுகள் பிரிந்தன. ''நல்லது,'' என்று அவன் சொல்ல முயன்றதாக லோயாவுக்குத் தோன்றியது.

பிறகு அவன் முகம் மாறியது. அவள் அப்பால் திரும்பி கவனத்துடன் நீலத் திரைகளை இழுத்து விட்டாள்.

122

அமெரிக்க ஐக்கிய நாடுகளிலேயே பழகுமுறையில் மிகச் சிறந்தவனாகிய அந்தச் செயலாளன், குளிர்ந்த விரல்கள் தரைவிரிப்பைப் பற்றிக் கொண்டிருக்க, முகங்கவிழ்ந்து கிடந்தான்: நொடிப்போதில் ஓரொலியுமின்றி அவன் இறந்துவிட்டான். காரின் தன் நடுங்கும் உதடுகளைக் கடித்தபடி சட்டைப்பையினுள் கதிர்க் கைத்துப்பாக்கியை மீண்டும் வைத்துக் கொண்டான். பிறகு தாழ்வாய் இருந்த ஓர் எஃகுக் கதவுக்கு அருகே சென்று அதன் மீது இருந்த பூட்டு வட்டத்தின் எண்களைத் தனக்கு மட்டும் தெரிந்திருந்த சேர்க்கைப்படி அமைத்தான்,—கதவு திறந்தது. சன்னல் இல்லாத இரும்புக் கான்க்ரீட் அறையுள் நுழைந்தான்.

இதுதான் சர்வாதிகாரியின் தனித்த இரும்புப் பெட்டகம். தங்கம் அல்லது பத்திரங்கள் இருக்க வேண்டிய இடத்தில், அவற்றைக் காட்டிலும் காரினுக்கு அளவிட முடியாத மிகப்பெரிய மதிப்புடைய ஒரு பொருள் அப்பெட்டகத்தில் இருந்தது: அது காரினுடைய மூன்றாவது இரட்டையன், பாரன் கோர்ப் என்ற ருஷ்ய அகதி. தன்னை ஒரு பெரிய

பணத்தொகைக்கு விற்றுக்கொண்டவன், ஐரோப்பாவிலிருந்து கொணரப்பட்டு, முதலில் பொன் தீவிலும், பிறகு அரண்மனையின் மறைவான அறைகளிலும், ஒருவருக்குந் தெரியாமல் வைக்கப்பட்டிருந்தான்.

அவன் மென்மையான தோல் சாய்வு நாற்காலியொன்றில் அமர்ந்திருந்தான். தங்கப்பூச்சுடைய சிறு மேசைமேல் கால்களை வைத்திருந்தான். அம்மேசைமேல் பழங்களும் இனிப்புக்களும் நிறைந்த தட்டுக்கள் இருந்தன (குடிக்கக் கூடாது என அவன் தடுக்கப்பட்டிருந்தான்). ஆங்கிலத் துப்பறியும் நாவல்கள் தரையின்மேல் கிடந்தன. அலுப்பின் மிகுதியினால் பாரன் கோர்ப் தனது நாற்காலியினின்றும் மூன்று கஜம் தொலைவில் இருந்த தொலைக்காட்சி வட்டத் திரைமீது, செர்ரிப் பழக் கொட்டைகளைத் துப்பிக் கொண்டிருந்தான்.

''கடைசியில்,'' என்ற அவன் உள்ளே வந்த காரின் பக்கம் சோம்பலுடன் திரும்பினான். ''எங்கே தொலைந்து போயிருந்தீங்க? நீங்க நாசமாய்ப் போக... கேளுங்க, இந்த நிலவறைக்குள் மிக நெடு காலம் என்னை வைத்திருக்க விரும்புகிறீங்களா? கடவுள் மேல் ஆணையாக, நான் பாரிசில் பட்டினியாயிருந்தாலும் இருப்பேன்...''

விடை தருவதற்குப் பதிலாக காரின் தன்னுடைய இடுப்புப் பட்டையை அகற்றி பதவிச் சின்னங்களும் பதக்கங்களும் கொண்ட உடுப்பைக் கீழே எறிந்தான்.

''உடை களைங்க.''

''எதற்காக?'' என்று வினவினான் பாரன் கோர்ப், வெளிப்படையான ஆவலுடன்.

''உங்க உடைகளை எனக்குக் கொடுங்க.''

''விஷயம் என்ன?''

''உங்களது பாஸ்போர்ட்டையும் மற்ற ஆவணங்களையும் கொடுங்க... உங்க ரேஸர் எங்கே?''

உடுத்தும் மேசையருகில் காரின் அமர்ந்து கன்னங்களுக்கு சோப் நுரையூட்டாது தாடியையும்

மீசையையும் மழித்து நீக்கியபோது, அவன் முகம் வலியினால் சுரிந்தது.

''ஒரு விஷயம், அடுத்த அறையில் ஒருத்தன் கிடக்கான். நினைவு இருக்கட்டும், அவன் உங்களோட தனிச் செயலாளன். அவன் எங்கே என்று கேட்டால், இரகசியமான ஒரு வேலைக்காக அவனை அனுப்பியிருப்பதாக சொல்லுங்க... புரியுதா?''

''இதெல்லாம் எதுக்கு, நான் உங்களைக் கேட்கிறேன்?'' என்று கூவினான் பாரன் கோர்ப், அறையினூடே பறந்த காரினின் காற்சட்டையைப் பற்றிய போது.

''பூங்காவிற்கும், எனது காருக்கும் செல்லும் இரகசிய வழியா நான் இங்கேயிருந்து போகிறேன். கணப்பில் செயலாளனை ஒளித்துவிட்டு, எனது படிப்பறைக்குள் செல்லுங்க. உடனே தொலைபேசி வழி ரோல்லிங்கைக் கூப்பிடுங்க. எனது சர்வாதிகாரத்தின் எல்லா அமைப்பையும் முற்றிலும் மனப்பாடம் செய்திருந்தீங்க என்று எண்ணுறேன். நான் முதல்வன். பிறகு எனது முதல் துணைவனாகிய இரகசியப் போலீஸ் தலைவன். பிறகு எனது இரண்டாவது துணைவனாகிய பிரசாரப் பகுதித் தலைவன். பிறகு எனது மூன்றாவது துணைவனாகிய தூண்டுதல் பகுதித் தலைவன். இவர்களுக்கு அடுத்து, முந்நூற்றுவர் கொண்ட அந்தரங்க ஆலோசனைக் கழகம். அதற்குத் தலைவன், ரோல்லிங். நீங்க முழு முட்டாளாக இன்னும் மாறிவிடவில்லை என்றால், இதெல்லாம் மனப்பாடமாக உங்களுக்குத் தெரிந்திருக்கணும்... காற்சட்டையைக் களைங்க, நாசமாய்ப் போக!.. நீங்க, அதாவது பியேர் காரின், இராணுவம், போலீஸ் ஆகியவற்றின் தலைமையை எடுத்துக்கொள்வதாக ரோல்லிங்கிடம் தொலைபேசிவழியாகச் சொல்லுங்க. நீங்க பலமான முறையில் போராட நேரிடும், நண்பரே.''

''ஒரு நிமிடம், பேசுறது நீங்க இல்லை, நான் என்பதை என்னுடைய குரலிலிருந்து ரோல்லிங் ஊகித்தான் என்று வைத்துக்கொள்வோம்...''

''இதனால் அவர்களுக்கு என்ன சனியன்?.. ஒரு சர்வாதிகாரி இருக்கிற வரை...''

''அப்படின்னா, இந்த நிமிடம் முதற்கொண்டு, நான் பியோத்தர் பெத்ரோவிச் காரினாக மாறிடணும் என்பது பொருளா?''

''நீங்க வெற்றி பெற வாழ்த்துறேன். ஆட்சியதிகாரம் முழுவதையும் துய்த்து மகிழ்வீராக. எல்லாக் கட்டளைக் குறிப்புகளும் எனது எழுது மேசை மீது இருக்கு. நான் கண்ணுக்குத் தெரியாமல் மறையப் போறேன்...''

அண்மையில் கண்ணாடியை நோக்கிச் செய்தது போன்று, தனது இரட்டையனை நோக்கிக் கண் சிமிட்டிவிட்டு கதவுக்குப்பின் மறைந்தான் காரின்.

123

மூடிய காரைத் தானே ஓட்டிக்கொண்டு நகரின் நடு தெருக்கள் வழியே காரின் செல்லத் தொடங்கியதுமே எல்லா ஐயங்களும் அவனை நீங்கின: சரியான நேரத்தில்தான் தப்பி வெளியேறினோம் என உணர்ந்தான். தொழிலாளர் பகுதிகளிலும் நகரப் புறங்களிலும் லட்சக்கணக்கான மக்கள் திரள்கள் கூச்சலுடன் தெருக்களில் கூடிக் கொண்டிருந்தனர். ஆங்காங்கு அவர்கள் தலைக்கு மேலே புரட்சிக் கொடிகள் பறந்தன. தெருக்களின் குறுக்கே பரபரப்புடன் தடைகள் நிறுத்தப்பட்டன; தலைகவிழ்க்கப் பட்ட பஸ்கள், சன்னல்களுக்கு வெளியே எறியப் பட்ட வீட்டுத் தவிசுகள், கதவுகள், விளக்குத் தூண்கள், இரும்புக் கிராதிவேலிகள் ஆகியவைகளால் அமைக்கப்பட்டிருந்தன அத்தடைகள்.

தொழிலாளர் நன்கு ஆயுதம் தரித்துள்ளதை அநுபவமுள்ள கண்களால் காரின் கண்டான். கூட்டங்களினூடே வழிசெய்துகொண்டு சென்ற லாரிகளில், எந்திரத்துப்பாக்கிகளும் எறி குண்டுகளும் துப்பாக்கிகளும் இவை போன்றனவும் இருந்தன. நிச்சயமாக இது ஷெல்காவின் வேலைதான்...

சில மணிகளுக்கு முன்பாக இக்குழப்பக்காரர்

களுக்கு எதிராகத் தனது படைகளை ஏவுவதில் காரின் சிறிதும் தயங்கியிருக்க மாட்டான். எனினும், இப்போதோ ''சர்வாதிகாரி வீழ்க! முந்நூற்றுவர் கழகம் வீழ்க!'' என்ற கூச்சல்களுக்கும் வசவுகளுக்கும் இடையே அக்சலரேட்டரில் காலை வைத்து அழுத்துவதை மட்டும் மிக நடுக்கத்துடன் காரின் செய்தான்.

ஹைபர்பாலாயிட் ஷெல்காவின் கைகளில் இருந்தது. கலவரக்காரர்கள் இதை அறிந்து, இதைப் பற்றிக் கூச்சல் போட்டனர். இசையரங்கு இயக்குநன் ஒரு வீரமிக்க கூட்டின்னிசையை எவ்வாறு நடத்துவானோ, அதே போல இப்புரட்சியை ஷெல்கா வெறிபெற நடத்துவான்.

காரினின் கட்டளைகளால் தங்க விற்பனையின் போது நிறுவப்பட்ட ஒலிபெருக்கிகள், இப்போது அவனுக்கு எதிராகப் பயன்படுத்தப்பட்டன—நெடுகிலும் பரவிய கலவரத்தைப் பற்றிய செய்திகளை அறிவித்தன.

காரின் இரட்டையன், அவன் எதிர்பார்த்ததற்கு மாறாக, உறுதிகொண்ட செயல்களுடன் தொடங்கிவிட்டான். சற்று வெற்றியும் கிடைக்காமல் இல்லை. அவனுடைய பொறுக்கியெடுத்த படைகள் தடைகளைத் தாக்கின. போலீஸ் படை விமானங்களிலிருந்து புகையாவிக் குண்டுகளை வீசியது. குதிரைப் படை முச்சந்திகளில் கூட்டங்களை வாள்களால் வெட்டித் தள்ளியது. சிறப்புப்படைப் பிரிவுகள் கதவுகளை உடைத்துத் திறந்து, தொழிலாளி வர்க்க வீடுகளில் நுழைந்து, உயிருள்ள ஒவ்வொன்றையும் அழித்தன.

எனினும், புரட்சிக்காரர்கள் விடாப்பிடியுடன் எதிர்த்து நின்றனர். மற்ற நகர்களிலும் பெரிய தொழில் மையங்களிலும் பெரிய துணிச்சலுடன் அவர்கள் தாக்குதலை மேற்கொண்டனர். நண்பகற்பொழுதிற்குள் நாடு முழுதும் கலவரத் தீயின் கொழுந்துகள் பரவிவிட்டன...

பதினாறு நெட்டுருளைப் பொறியுடைய தனது காரை எவ்வளவு விரைவாக ஓட்ட இயலுமோ,

அவ்வளவு விரைவாகச் செலுத்தினான் காரின். சிறு நகரங்களின் தெருக்களினூடே, தனது வழியில் திரிந்த நாய்களையும் பன்றிகளையும் மோதித் தாக்கிக்கொண்டும், கோழிகளைக் கொன்று கொண்டும் புயல்போல விரைந்து சென்றான். பெரியதும் கரியதும் தூசு நிறைந்ததுமான சர்வாதிகாரியின் காரைப் பாதசாரிகள் திரும்பி நோக்குவதற்கு முன்பு அது உறுமிக்கொண்டும், விரைவில் சிறுத்துக்கொண்டும், ஒரு சாலை வளைவினைச் சுற்றி மறைந்தது.

மறுபடி எண்ணெய் நிரப்பிக்கொள்ளவும் ரேடியேட்டரை நீரால் நிரப்புவதற்கும் மட்டுமே, சில கணங்கள் காரின் காரை நிறுத்தினான். இரவு முழுதும் இடைவிடாது ஓட்டிச் சென்றான்.

மறுநாள் காலையிலும் சர்வாதிகாரியின் அதிகாரம் தூக்கியெறியப்படவில்லை. எரிகுண்டுகளால் தாக்கப்பட்டுத் தலைநகர் எரிந்தது, தெருக்களில் ஐம்பதினாயிரம் பிணங்கள் கிடந்தன. ஒரு தெரு முனையில் இச்செய்தியை ஒலிபெருக்கி அறிவித்த போது, ''அருமை பாரன்!'' எனக் கூறி காரின் சிரித்தான்.

மறுநாள் ஐந்து மணிக்கு அவனது கார் துப்பாக்கியால் சுடப்பட்டது...

ஏழு மணிக்கு ஏதோ ஒரு நகரத்தினூடே ஓட்டிக்கொண்டு போகும்போது, புரட்சிக் கொடிகளையும் பாடிக்கொண்டுவரும் மக்கள் கூட்டங்களையும் கண்டான்...

இரண்டாவது இரவு முழுதும் மேற்கு நோக்கி, பசிபிக் மாகடல் பக்கமாக ஓட்டிச் சென்றான். கடைசியாக, மூன்றாம் நாள் வைகறையில் பெட்ரோல் நிரப்பிக் கொண்டிருந்தபோது, ஒலிபெருக்கியில் தனக்கு நன்கு தெரிந்த ஷெல்காவின் குரலைக் கேட்டான்:

''வெற்றி, வெற்றி... தோழர்களே! பயங்கர ஆயுதமான ஹைபர்பாலாயிட் என்னிடம் இருக்கிறது...''

காரின் இறுதிவரை கேட்காமல் பற்களை நெறுநெறுத்தவாறு விரைந்து மேலே சென்றான். காலை

பத்து மணிக்கு சாலைக்கருகில் முதலாவது விளம்பரத் தட்டியைக் கண்டான்; பலகை மீது பின்வருமாறு பெரிய எழுத்துக்களில் எழுதப்பட்டிருந்தது:

''தோழர்களே! சர்வாதிகாரி உயிருடன் பிடிபட்டான். ஆனால், அவனுக்குப் பதிலாக காரினுடைய இரட்டையன் இருப்பது தெரிகிறது. பியோத்தர் காரின் தப்பிவிட்டான். மேற்கு நோக்கி ஓடிக்கொண்டிருக்கிறான். தோழர்களே, விழிப்புடன் இருங்கள், சர்வாதிகாரியின் காரை நிறுத்துங்கள்... (இங்கே விளக்கம் கொடுக்கப்பட்டிருந்தது.) புரட்சி நீதிமன்றத் தீர்ப்பினின்றும் காரின் தப்பிவிடக்கூடாது...''

...ஒரு மோட்டார் சைக்கிள் தன்னைத் தொடர்வதை காரின் நண்பகலில் கவனித்தான். துப்பாக்கி வெடிகளை அவன் கேட்கவில்லை, ஆனால் அவன் தலையிலிருந்து சில அங்குலத்திற்கு அப்பால் காற்றுத் தடைக்கண்ணாடியில் தெறிப்புக்களால் சூழப்பட்டிருந்த துப்பாக்கிக் குண்டுத் துளை ஒன்று காணப்பட்டது. அவன் தலையின் பின்புறம் அச்சத்தால் குளிர்ந்தது. அந்த என்ஜினை எவ்வளவு வலிந்து ஓட்ட முடியுமோ அவ்வளவு விரைவாக ஒரு குன்றின் மீது ஓட்டி, காடு அடர்ந்த மலையின் பக்கமாகச் சென்றான். ஒரு மணி நேரத்திற்குப் பின் மலை இடுக்கினுள் நுழைந்தான். என்ஜின் வலிகுன்றத் தொடங்கி, பிறகு நின்றுவிட்டது. காரின் வெளியே குதித்து ஸ்டீரிங்கைத் திருப்பி, கார் மலை முகட்டினின்றும் கீழே சரிந்து விழுமாறு தள்ளிவிட்டான்; மரத்துப் போன கால்களை இடர்ப்பட்டு நீட்டிக்கொண்டு, ஒரு செங்குத்தான சரிவின் மேல் ஏறி பைன்மரக்காடு ஒன்றை அடைந்தான்.

நெடுஞ்சாலையில் மூன்று மோட்டார் சைக்கிள்கள் விரைந்து வருவதனை மேலிருந்து பார்த்தான். அம்மூன்றில் கடைசியில் வந்தது நின்றது. இடுப்புக்கு மேல் வெற்றுடம்புள்ள ஆயுதந்தாங்கிய ஒருவன் குதித்து, கலைமுகட்டினின்றும் குனிந்து, சர்வாதிகாரியின் கார் நொறுங்கிக் கிடந்த இடத்தைப் பார்த்தான்.

காற்சட்டையும் கையில்லா உள்சட்டையும்

தவிர, மற்றைய உடைகளை பியோத்தர் பெத்ரோவிச் காட்டில் எறிந்துவிட்டு, காலணிகளின் தோலை மேற்புறம் அறுத்துவிட்டு, ஒரு ரயில் நிலையத்திற்குக் கால்நடையாகப் புறப்பட்டான்.

நான்காவது நாளில் லாஸ் ஏஞ்சல்ஸ் அருகே கடற்கரையில் தனித்திருந்த ஒரு பண்ணையை அடைந்தான். அங்கே, அவனது பலூன் விமானம், எந்தக் கணமும் பறப்பதற்கு ஆயத்தமாகக் கட்டுத் தூணில் தொங்கிக் கொண்டிருந்தது.

124

மேகமற்ற வானத்தில் வைகறை புலர்ந்தது; மாகடலின் மேல் மங்கலான செந்நிறம் படர்ந்திருந்தது. பலூன் விமானக் கூண்டின் சாளரத்தின் வெளியே குனிந்த காரின், மிகத் தொலைவில் கீழே குறுகலாகத் தோன்றிய உல்லாசப்படகைத் தொலைநோக்கியின் உதவியால் சிரமத்துடன் கண்டுபிடித்தான். மெல்லிய மங்கலினூடே, மின்னிக் கொண்டிருந்த கண்ணாடி நீரில் அக்கப்பல் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தது.

ஆகாயக் கப்பல் தாழத் தொடங்கியது. காலைச் சூரிய ஒளியில் ஆதன் உடல்பகுதி முழுதும் ஒளிவீசியது. உல்லாசப்படகிலிருந்தவர்கள் அதைக் கண்டு கொண்டு கொடி உயர்த்தினர். பலூன் விமானத்தின் கூண்டு நீரைத் தொட்டதும் உல்லாசப்படகிலிருந்து ஒரு படகு புறப்பட்டது. ஸோயா சுக்கான் பிடித்திருந்தாள். காரின் அவளைச் சிரமத்துடனேயே அடையாளங்கண்டு கொண்டான்—அவளது முகம் அவ்வளவு வாடியிருந்தது. ஒன்றும் நிகழாதது போல ஒரு புன்முறுவலுடன் அவன் படகில் குதித்து, ஸோயாவின் அருகமர்ந்து, அவள் கையைத் தட்டிக் கொடுத்தான்.

''உன்னைப் பார்ப்பதில் அவ்வளவு மகிழ்ச்சி எனக்கு. கவலைப்படாதே, பாப்பா. அது வெற்றியடையலே, அதனால் என்ன? புதுசா எதையாவது

தொடங்குவோம்... எதற்காக இப்படி முகத்தைத் தொங்கப்போட்டுக் கொண்டிருக்கிறாய்?''

ஸோயா முறைத்து, அவன் முகத்தைப் பாராதவாறு அப்பால் திரும்பி கொண்டாள்.

''இப்பதான் யான்ஸனைப் புதைச்சேன். எனக்குக் களைப்பா இருக்கு. இப்ப எதுவும் பொருட்டில்லே.''

தொடுவானத்திற்கு அப்பாலிருந்து சூரியன் தோன்றியது, வெற்றான நீலப்பரப்புக்கு மேலே பெரிய பரிதிக் கோளம் எழுந்தது, பனிமூட்டம் பேய்போன்று உருகியது.

கடலினூடே, தெளிவான எண்ணெய்த் துளிகளுடன், சூரிய ஒளி படும் பரந்த வழி மிளிர்ந்து கிடந்தது. 'அரிஸோனா'வின் மூன்று சாய்வுப் பாய் மரங்களும், ஹைபர்பாலாயிட் கோபுரங்களும் கரிய நிழலுருவமாகத் தெரிந்தன.

''குளியல், காலையுணவு, உறக்கம்,'' என்றான் காரின்.

125

பொன் தீவை நோக்கி 'அரிஸோனா' திரும்பிற்று. கலவரத்தின் மூலத்தையே தாக்குவதற்கு காரின் முடிவு செய்துவிட்டான்—சுரங்கத்தையும் பெரிய ஹைபர்பாலாயிடையும் கைப்பற்றத் தீர்மானித்தான்.

கப்பலின் தோற்றத்தை மாற்றுவதற்கும், கவனத்தை ஈர்க்காமல் பொன் தீவை நெருங்குவதற்கும் இயலுமாறு செய்வதற்கும் உல்லாசப்படகின் பாய்மரங்கள் வெட்டப்பட்டு பலகைகளாலும் பாய்களாலும் ஹைபர்பாலாயிட் கோபுரங்கள் மறைக்கப்பட்டன.

காரின் தன்னம்பிக்கை கொண்டிருந்தான், உறுதியுடனும் களிப்புடனும் இருந்தான்—அவனது நல்ல மனநிலைமை திரும்பியிருந்தது.

யான்ஸன் இறந்த பிறகு கப்பல் தலைமை ஏற்ற உதவிக் காப்டன் மறு நாள் காலையில், சில மெல்லிய

பஞ்சு மேகங்களை அதிர்ச்சியுடன் சுட்டிக்காட்டினான். அவை தொடுவானத்திலிருந்து மேலே கிளம்பிப் பத்து முப்பதனாயிரம் அடி உயரத்தில் வானத்தை மூடத் தொடங்கின. புயல் அணுகிக் கொண்டிருந்தது. ஒருவேளை மிகக் கொடூரமான சூறாவளியாக இருக்கலாம்.

தன்னுடைய திட்டங்கள் பற்றிய சிந்தனையில் ஆழ்ந்திருந்த காரின் காப்டனை நரகத்திற்குச் செல்லுமாறு சொன்னான்.

''சூறாவளியா? வெட்டிப் பேச்சு வேணாம். முழு வேகத்தோடு போங்க!''

விரைந்து ஒன்று சேரும் மேகங்களை மேடை மீதிருந்து காப்டன் கடுகடுப்பாகப் பார்த்து, படகுகளையும், இன்னும் அடித்துக் கொண்டுபோகப்படக் கூடிய ஒவ்வொன்றையும் இறுகப் பிணிக்குமாறும், கப்பல் ஏணிவாயில், தளம் ஆகியவற்றை அசையாதபடி இறுக்குமாறும் மாலுமிகளுக்குக் கட்டளையிட்டான்.

கடல் இருளாயிற்று. காற்று ஊளையிட்டு வீசியது. தீக்குறிப்புடைய அதன் ஊளைகள், நேரக் கூடிய பெருங்கேட்டினைப் பற்றி மாலுமிகளை எச்சரித்துக் கொண்டிருந்தன. புயலின் முன்னறிவிப்புகளான மேலே இருந்த சிதறிய பஞ்சு மேகங்கள் போய், கடலின் மேலேயே குமைந்து நகர்ந்து வந்து கொண்டிருந்த கரிய தடித்த பெரிய தொகுதிகள் தோன்றின. காற்று கடலைக் கடையத் தொடங்கியது, பெரிய உருளும் அலைகளின் மேல் வெண் நுரை செறிந்தது.

கிழக்கிலிருந்து செறிந்த இருண்ட மேகம் ஒன்று, ஈயம் போன்ற தோற்றத்துடன் உல்லாசப்படகை நோக்கி உருண்டு வந்தது. காற்றின் மோதல்கள் உக்கிரமாக வளர்ந்தன. கப்பலின் தளங்களில் ராட்சச அலைகள் மோதி வீழ்ந்தன. விரைவில், நுரை சேர்ந்த அலைத்தலைகள் மறைந்தன, காற்றின் கடுமை அவற்றை அலைகளினின்றும் நீக்கிற்று. நுண்ணிய தூவலின் சால்வையாக நெடுகிலும் அவை பரந்தன.

''கீழே போங்க,'' என்று ஸோயாவிடமும் காரினிடமும் காப்டன் சொன்னான். ''இன்னும் கால் மணியில், நாம் சூறாவளியின் நடுவில் இருப்போம், என்ஜின்கள் நம்மைக் காப்பாற்றாது.''

சூறாவளிக்காற்று உக்கிரத்துடன் 'அரிஸோனா' வைத் தாக்கிற்று. உல்லாசப்படகு, இப்பக்கமும் அப்பக்கமுமாக மாறி மாறி, அடிப்புறம் நீருக்கு வெளியே தெரியும்படி சாய்ந்தாடியது. சுக்கானுக்கோ என்ஜின்களுக்கோ அது கட்டுப்படவில்லை. ஆனால், விரைவில் குறையும் வட்டங்களாகச் சுழன்று மாலுமிகளால் 'சாளரம்' எனப்படும் சூறாவளியின் நடு மையத்தை நோக்கி விரைந்தது.

சூறாவளிக்காற்றின் 'சாளரம்' அதன் சுழல்மையமாகும். அடிக்கடி அது மூன்று மைல்வரை குறுக்களவு கொண்டதாக இருக்கும். புயலின் வன்மையுள்ள காற்றுகள் இந்த நடுப்பகுதியிலிருந்து எல்லாப் பக்கங்களிலும், சுற்றுப்பகுதியிலுள்ள காற்றழுத்தத்தில் ஒப்பு நிலையினை மீட்பதற்காகப் பாய்ந்து செல்கின்றன.

அத்தகையதொரு குழப்பப் புயலுக்குள் தான் 'அரிஸோனா' வாகிய அந்த நொய்தான கொட்டாங்கச்சி காற்றுச் சுழலால் தள்ளிச் செல்லப்பட்டது.

கரு மேகங்கள் கப்பலின் மேற்தளத்தைத் தொட்டன. இரவு போன்று இருண்டிருந்தது. உல்லாசப்படகின் உடற்பகுதி கீச்சிட்டு முனகியது. மேல் தளத்திலிருந்தோர் தாங்கள் அடித்துச் செல்லப் படாது இருப்பதற்காக, இறுக்கப்பட்டிருக்கும் ஏதேனும் பொருளைப் பற்றிக் கொண்டு தொங்கினர். மேடையின் சாரக் கம்பியுடன் தன்னைப் பிணிக்குமாறு காப்டன் மாலுமிகளுக்கு உத்தரவிட்டான்.

மலை உயர அலை முடிமேல் 'அரிஸோனா' உயர்த்தப்பட்டது, பக்கத்தில் சாய்ந்து, ஆழ்த்திற்குள் கீழே நழுவியது. திடீரென்று தெளிவான சூரிய வொளிப்பட்டையொன்றிற்கு வந்தனர். அங்குக் காற்று இல்லை, ஒளிபுகும் உருகிய கண்ணாடி போன்ற தெளிநீர் பத்து அடுக்கு வீட்டளவு உயரமுள்ள அலைகளாக எழும்பியது. அவ்வலைகள்

ஒன்றுடன் ஒன்று மோதித் திடுக்கிடுமாறு, படார் என்று அறையும் ஓசையை உண்டாக்கின. கடல் களின் கடவுளான நெப்டியூன், சினத்தினால் நீரின் மீது தன் கைகளை அறைந்தது போன்று இருந்தது.

இதுதான் சூறாவளியின் 'சாளரம்', மிகவும் ஆபத்தான இடம். இங்குக் காற்றின் ஓட்டம் செங் குத்தாக மேலே சென்று முப்பதாயிரம் அடி உயரத் திற்கு மென்சாரலைத் தூக்கிச்சென்றது. அவ்வுயரத் தில் அச்சாரல் மெல்லிய பஞ்சு மேகங்கள் போலப் பரந்தது. சூறாவளியின் முன்னறிவிப்புகள் அவை தாம்.

படகுகள், ஹைபர்பாலாயிட் கோபுரங்கள், புகைப்போக்கி, காப்டனுடன் சேர்ந்த கப்பல் மேடை முதலிய எல்லாம் 'அரிஸோனா'வின் மேல்தளத்திலி ருந்து அடித்துக்கொண்டு போகப்பட்டன.

இருளாலும் சுழல்காற்றுக்களாலும் சூழப்பட்ட சூறாவளிச் 'சாளரம்', ராட்சச அலைகளின் உச்சி மீது 'அரிஸோனா'வை இழுத்துக்கொண்டு மாகட லின் குறுக்கே விரைந்து சென்றது.

என்ஜின்கள் எரியுண்டன, சுக்கான் பிய்த்தெறி யப்பட்டது.

''இதுக்கு மேலே என்னால பொறுக்க முடியாது,'' என்று ஸோயா முனகினாள்.

''எப்பவாவது இது நின்றுதானே ஆகணும், அட சனியன்!'' என்று கம்மிய குரலில் காரின் பதிலளித் தான்.

அறையின் சுவர்களின் மீதும், தவிசுகள் மீதும் வீசியெறியப்பட்டதினால், நையப் புடைபட்டு அவர் களது உடம்பினின்றும் குருதி கசிந்து கொண்டிருந் தது. காரினின் நெற்றியில் கீறல் ஏற்பட்டது. படுக் கையின் காலைப் பற்றிக்கொண்டு, தரைமீது ஸோயா கிடந்தாள். இவ்விருவருடன் சேர்ந்து, சூட்கேசுகள், அலமாரியிலிருந்து சிதறிய புத்தகங்கள், சோபாத் திண்டுகள், உயிர் காக்கும் வார்கள், ஆரஞ்சுகள், உடைந்த பீங்கான் கலங்கள் தரை மீது உருண்டன.

''காரின், என்னால பொறுக்க முடியாது. கடலில் என்னை எறிங்க...''

ஒரு கொடிய குலுக்கல் படுக்கையினின்றும் ஸோயாவைப் பிய்த்து உருளச் செய்தது. காரின் அவளுக்கு மேலாக, கதவினுடன் மோதித் தள்ளப்பட்டான்.

பிறகு நொறுங்குவதும் பிளப்பதுமாகிய ஓசைகள் வந்தன—மோதி விழுகின்ற நீரின் இடியொலியும், மக்களின் அழுகையொலியும். அறை சிதறி விழுந்தது. ராட்சசத்தன்மையுள்ள நீர்ச்சுழற்சி, இவ்விருவரையும் பற்றியிழுத்துப் பொங்கிச் சீறுகிற பச்சை நிறமுள்ள, ஆழமான, குளிர் கடலில் வீசியெறிந்தது...

காரின் தன் கண்களைத் திறந்த போது, அவனது மூக்கினின்றும் நான்கு அங்குலத் தொலைவில், ஒரு முத்துச்சிப்பியோட்டில் பாதி நகர்ந்திருந்த ஒரு சிறு துறவி இறால், அவனை விழித்துப் பார்த்து வியப்பினால் மீசைகளை ஆட்டியது. ''ஆமா, நான் உயிரோட இருக்கேன்...'' காரின் புரிந்துகொள்ளச் சிரமப்பட்டான். எனினும், நீண்ட நேரம் வரை எழுந்து நிற்க அவனுக்கு வலிமை வரவில்லை. காயமுற்ற வலது கையுடன் மணல்மீது ஒரு பக்கம் சாய்ந்து கிடந்தான். நோவினால் அவனது முகம் துடித்தது. கால்களை இழுத்துச்சேர்த்து உட்கார்ந்தான்.

அருகே, மெல்லிய அடிப்பகுதியை வளைத்தவாறு நின்ற பனைமரத்தின் ஓலைகள் காற்றில் சலசலத்துக் கொண்டிருந்தன. காரின் எழுந்து தள்ளாடி நடந்தான். சுற்றிலும், எங்கும் கண்ணுக்கெட்டிய வரை, தாழ இருந்த கடற்கரை மீது வந்து மோதிய சூரிய ஒலி நிறைந்த பசுநீலமான அலைகளே இருந்தன. சில டஜன் பனைகள் தமது அகன்ற விசிறி போன்ற மட்டைகளைக் காற்றில் விரித்தன. இங்கு மங்கும், மணல்வெளியிலே கட்டைத் துண்டுகளும் பெட்டிகளும் கந்தைகளும் கயிறுகளும் கிடந்தன... ஒரு பவளத்தீவின் வெளியிலிருந்த பாறைவரிசைக் கப்பால், கப்பற்பணியாளருடன் கவிழ்ந்து மூழ்கி விட்ட 'அரிஸோனா'வில் எஞ்சியவை இவையே.

நோவுடன் நொண்டிக்கொண்டு, தீவின் உட்பகு

திக்கு வழி கண்டு சென்ற காரின், ஒளியுடைய பசும் புல்லாலும், குறும்புதர்களாலும் மூடப்பட்ட மேடு ஒன்றைக் கண்டான். அங்கே ஸோயா பரந்திய கை களுடன் மல்லாந்து கிடந்தாள். அவள் மேல் குனிந்த காரின், சாவின் கொடுமையை உணரவேண்டிவரு மே என்று அவள் உடம்பைத் தீண்டுவதற்கு அஞ் சினான். எனினும், ஸோயா உயிரோடுதான் இருந் தாள்,—அவளது இமைகள் நடுங்கின, அவளது வறண்ட உதடுகள் திறந்திருந்தன.

மழைநீர் நிறைந்த சிறு ஏரியொன்று அந்தப் பவளத் தீவில் இருந்தது. நீர் கசப்பாக இருந்தது, ஆனால் குடிக்க ஏற்றதாயிருந்தது. கரையோரத்திலிருந்த ஆழமற்ற இடங்களில் பல வகையான சங்குகளும் நண்டுவகைகளும் பலகால் உயிரிகளும் இறால்களும் இருந்தன. இவையெல்லாம் வரலாற்றுக்கு முந்திய காலத்து மனிதனுக்கு உணவாக இருந்தன. பனை மடல்கள் உடைகளாகவும் நண்பகற் சூரியனின் வெம் மை தாக்காதவாறு காக்கவும் உதவும்.

அந்த வெற்றுத் தரைமீது ஒதுக்கப்பெற்ற உடையற்ற இருவர், எவ்வாறோ வாழ முடியும். பசிபிக் மாகடலின் நீர்ப்பரப்பிலே கண்காணாதிருந்த அந்தத் தீவில் அவர்கள் வாழத் தொடங்கினர். அரு காகக் கடந்து செல்லும் கப்பல் அவர்களைக் கவ னித்து ஏற்றிக் கொள்ளும் என்ற நம்பிக்கையும் இல்லை.

காரின் கிளிஞ்சில்கள் பொறுக்கிச் சேர்ப்பான், அல்லது நன்னீர் ஏரியில் சட்டையால் மீன் பிடித் தான். 'அரிஸோனா' உடைபட்டதால் எறியப்பட்ட பொருள்களில் ஒன்றான பெட்டியிலிருந்து செல்வச் செருக்குடன் அச்சடிக்கப்பட்ட புத்தகத்தின் ஐம்பது படிகளை ஸோயா கண்டெடுத்தாள். பொன் தீவில் கட்டப்பட வேண்டிய அரண்மனைகள், அரங்கமே டைகள் ஆகியன பற்றிய திட்டவரைவுகள் அப்புத் தகத்தில் இருந்தன. அதே புத்தகத்தில் உலக முழு

வதையும் ஆள்பவளான லாமோல் சீமாட்டியால் வரையறுக்கப்பட்ட அரண்மனைப் பழகு முறைகள் பற்றிய சட்டங்களும் விதிகளும் இருந்தன...

பல நாள்களாகத் தாம் கட்டிய பனையோலைக் குடிசையின் நிழலில் படுத்துக்கொண்டு, தனது நிறைவுறாத கற்பனையினால் ஆக்கப்பட்ட அந்தப் புத்தகத்தின் பக்கங்களை ஸோயா திருப்பிக் கொண்டிருப்பாள். பொன்னெழுத்துக்கள் மேடாக அச்சடிக்கப்பட்ட, மொராக்கோ தோற்கட்டு உடைய மற்றைய நாற்பத்தொன்பது படிகளையும் காற்று மறைப்பு கட்டுவதற்கு காரின் பயன்படுத்தினான்.

காரினும் ஸோயாவும் பேசிக் கொள்ளவில்லை. அவர்கள் ஏன் பேச வேண்டும்? பேசுவதற்கு என்ன இருந்தது? அவர்கள் வாழ்வு முழுவதும் தனித்துப் பிரிக்கப்பட்டவர்கள். இப்போது தான் முழுமையான, பூரணத் தனிமையைப் பெற்றனர்.

நாள்களின் எண்ணிக்கையை மறந்தனர், கடைசியில், அவற்றை எண்ண முயல்வதையே நிறுத்தினர். தீவில் புயல் முடுகியடித்தபோது அந்தச் சிறு ஏரியில் மழைநீர் நிறைந்தது. ஆனால் மேகமற்ற வானத்தில் சூரியன் கொடுமையாகக் காய்ந்த நெடிய மாதங்கள் பல இருந்தன. அப்போது அவர்கள் தேங்கிக் கிடக்கும் நீரைக் குடிக்கும் கட்டாயத்திற்கு உட்பட்டனர்...

அந்தச் சிறு தீவில், இன்னும் கிளிஞ்சில் சேர்த்துக்கொண்டு, இன்றுவரை காரினும் ஸோயாவும் இருக்கலாம். வயிறு நிறையத் தின்றுவிட்டு ஸோயா தெய்விக அரண்மனைகளின் திட்டவரைவுகள் நிறைந்த புத்தகத்தின் பக்கங்களைத் திருப்ப அமருகிறாள். அவ்வரண்மனைகளில், அவளது அழகிய சிலை, சலவைக்கல் தூண்கள், பெரிய மலர்ப் பரப்புக்களுக்கிடையே நிற்கும். இவள் புத்தகம் புரட்டும் நேரத்தில் காரின் மூக்கை மணலுள் புதைத்துக் கொண்டு, கசங்கிக் கிழிந்த கோட்டினால் முதுகை மூடியபடி குப்புறப் படுத்துக்கொண்டு குறட்டை விடுகிறான். அவனும் பல கவர்ச்சிகரமான நிகழ்ச்சிகளைக் கனவில் அநுபவிக்கிறான் போலும்.

வாசக நேயர்களுக்கு

இந்தப் புத்தகத்தைப் பற்றியும் இதன் தயாரிப்பைப் பற்றியும் தங்கள் கருத்தை அறியவும், அடுத்துவரும் வெளியீடுகள் சம்பந்தமாகத் தங்கள் ஆலோசனைகளை வரவேற்கவும் ராதுகா பதிப்பகம் மகிழ்வுடன் காத்திருக்கிறது. கடிதங்களைத் தயைசெய்து கீழ்வரும் முகவரிக்கு அனுப்புங்கள்:

Raduga Publishers, 17, Zubovsky Boulevard,
Moscow, 119859, USSR.

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்

தலைமை அலுவலகம்
14, பி. சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்,
சென்னை—600098
ஷோ-ரூம்
136, மவுண்ட் ரோடு, சென்னை—600002
கிளைகள்
80, மேலக் கோபுர வீதி, மதுரை—625001
87/89, ஒப்பணக்கார தெரு, கோயம்பத்தூர்—641001
சிங்காரத் தோப்பு, திருச்சிராப்பள்ளி—620008
செர்ரி ரோடு, சேலம்—636001
1, ஏ. திருவனந்தபுரம் சாலை,
வண்ணாரப்பேட்டை, திருநெல்வேலி—627003
விற்பனை நிலையம்
66, கீழராஜ வீதி, தஞ்சாவூர்

சோவியத் அமர எழுத்தாளராகிய அலெக்சேய் தல்ஸ்தோயின் (1883—1945), இந்த விஞ்ஞான நாவல், அழிவுக் கதிரைக் கண்டுபிடித்த என்ஜினியராகிய காரினைப் பற்றியது. காரின் உலகத்தில் மேலாண்மை பெற விழைவதோடு பெரும்பகுதி மக்களைப் பணிவுமிக்க அடிமைகளாக மாற்றக் கனவு காண்கிறான். இதில் அவனால் வெற்றி பெற முடிகிறதா?



ISBN [illegible]